ஸ்ரீ சொக்கநாதசுவாமி துணை.

# வன்னியர் புராணம்

மூலமும் - உரையும்

செப்பேடு சிலாசாஸனங்கள் அடங்கிய

[illegible]



[illegible]

[illegible]

அவர்களால் எழுதப்பெற்றது.

OF THE REGISTRAR OF ...
17 SEP 1931

சென்னை பொம்பூர் பாரகல்
"வன்னிகுல மித்திரன்" பத்திராதிபர்
அ. சுப்ரமணிய நாயகர் அவர்களால்
சென்னை-[illegible], ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
[illegible]
ரிஜிஸ்டர் செய்தது.] [விலை ரூ. 1-12-0

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி, வி. பி. மூலமாகவும் அல்லது நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

நெட்டால், தென்னாப்பிரிக்கா, மோரீஸ், பினங்கு, சிங்கப்பூர், சிலோன், முதலிய பிரதேசங்களில் உள்ளவர்கள், புத்தக கிரயம் ரூ. 1-12-0 ரிஜிஸ்ட்டர் ஸ்டாம்பு வகையரா 0-12-0 ஆக ரூ. 2-8-0 முன்பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. சுப்பிரமணிய நாயகர்,
"வன்னிகுல மித்திரன்" பத்திராதிபர்,
பெரம்பூர் பாரெக்ஸ், சென்னை.



இராயபுரம், M. P. T. கன்ருக்டர்

ஸ்ரீமான் மு. இராஜு நாயகர் அவர்கள்

அ.கா - அப்துல் ஹமீது

செப்பனிடுபவர் பெயர்

ஏப்ரல் 1993

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்

மே 1993

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும் முதல்வர் கையொப்பம்.

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்.

[illegible] 1993

கும்பகோணம், வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

திருப்புறம்பயம், ஸ்ரீமான்,

வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்

இயற்றிய

# சிறப்புப் பாயிரம்

திருவளர் கயிலைச் செஞ்சடை யண்ணல்
உரையெனப் பகரும் மறையொரு நான்கும்
பார்மிசை நிலவப் பண்புடன் வகுத்த
பேரரு ளாளன் ஆரண முனிவன்
பாரதம் பகர்ந்த சீர்கெழு மறையோன்

தாரதலம் போற்றும் பாராசரன் புதல்வன்
வியாதன் அருளிய வியத்தகு புராணம்
ஈரொன் பானென் றியம்புவர் புலவர்
அவற்றுள்,
ஆக்கி னேயமாம் அரும்பெரும் புராணம்
உருத்திர வன்னியன் திருத்தகு சரிதையைக்

கூறு மென்ப குவலயத் துள்ளோர்
அவ்வருஞ் சரிதையைச் செவ்விதி னோர்ந்தே
உவந்து நாளும் ஓதிடு மாறு
தீஞ்சுவை யொழுகும் செந்தமிழ்ப் பாக்களில்
வன்னியர் புராண மெனும்பெயர் மன்னுற

இயற்றித் தந்தனன் அன்னவன் யாரெனின்
சான்றோ ருடைத்தெனத் தண்டமி ழௌவையும்
பண்டையிற் புகழ்ந்த தொண்டைநன் னாட்டினன்

பரசுபுகழ் நிறீஇய புரசையம் பதியான்
வன்னி குலத்தினன் வண்டமிழ்ப் புலவன்

பிரசங்க பூடண மெனுஞ்சீ ரெய்தினோன்
இத்தலம் புகழும் ரத்தின சபாபதி
நாயக னென்னும் நாவல ரேறே
அப்பெருந் தொண்டிற் கரும்பொரு ளளித்துப்
பல்வகை யுதவியும் பாங்குடன் புரிந்தோன்

இராய புரத்தே இனிதுவாழ்ந் திடுவோன்
குலாபி மானக் குறிக்கோ ளுடையோன்
சென்னைத் துறைமுகத் தெண்ணைப் பந்த
வேலை யாற்றுவோன் வித்தகன் ராஜு
நாயகனென்னும் நற்றவத் தோனே

அவ்வரு நூலை யார்வமுட னேற்றுச்
சீருறு மச்சில் திறமுடன் பதிப்பித்
தெத்தலத் தினரும் எந்நிலை யினரும்
பெற்றிட வளித்தனன் பிரம்பூர் வாழ்வோன்
வன்னிகுல மித்திரன் மன்னுமா சிரியன்

வாணாள் முழுதும் வயங்குறத் தொண்டு
குலத்திற் குஞற்றிடு நலமிகு குரிசில்
ஒப்பிலா மணியாம் சுப்பிர மணிய
நாயக னென்னும் நாமத் தோனே.

4 172/93



பிரசங்கபூஷணம் - ஸ்ரீமான்

பு. பா. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள்

5

உ

# முகவுரை.

கடல்புடை யுடுத்த தண்தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து, நிலவுலகத்தை ஆட்சி புரிந்த மன்னவர் வரலாற்றை ஆயும் அறிவு, இளம்பருவத்திலேயே எனது உள்ளத்தெழுந்தது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனும், கன்றினுக்கு இரங்கும் ஆவினை நோக்கி, ஒருமைந்தன் தன் குலத்திற்கு உள்ளானென்பதும் ஓராது, கன்றினைக் கொன்ற தேர்க்காலின்கீழ் மைந்தனை யிட்ட மன்னவர்; மதிகுலத்தவர் இருபிரிவாய் மனங்கொதித்த பெருஞ்சமரில், இருதிறத்தும் பரிவுகொண்டு, அமர் நிறுத்தும் வரை அன்னவர்தம் படைஞர்க்கு உணவளித்துக் காத்த உதியன் சேரலாதன் எனும் செம்மைமிகு சேரர்; புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பூபதி; இன்னபல அரசர்கள், கலைக்கடலில் இருந்தவண்ணம் எனது அகக்கண்ணிற்குக் காட்சிவிருந்தளித்தனர். அப்பெருந்தகை மன்னர்களது வமிசத்தில் உதித்த லட்சக் கணக்கான மக்களை, இன்று எனது புறக்கண்களாற் காண்கின்றேன்; என்னே யான் பெற்ற இன்பம்.

இன்பமும் துன்பமும் விரவியிருப்பது எப்போதும் இயல்பு; அதற்கு ஏற்றவாறு, அந்தோ! காலவேற்றுமையால், கலியின் தொடர்பால், நெறிபிறழாது இவ்வுலகத்தைக் காத்துவந்த அறமன்னர் சந்ததியார், ஆண்மையிழந்து, அறிவுகுன்றி, ஒற்றுமையின்றி, ஒழுக்கம் இழந்து, மதிப்புக் குறைந்து, தமது பூர்விக நிலையும் மறந்து வாழ்வதை நோக்கினேன்; ஆ! துக்கம் மிகுகிறது; கண்ணீர்

பெருகுகிறது; எழுதுகோலும் நிற்கிறது; "முருகா! அன்றமலன் வன்னிவிழி அவதரித்த அண்ணால்! எனது குலமணிகளுக்கு, தமது முன்னோர் சென்ற நெறியை நினைவூட்டுக: இது நினது கடன்" என்று இவ்வண்ணம் இரவும் பகலும் பிரார்த்தனை செய்வது எனது நியமம்.

என்னால் இயன்றவரை எனது சகோதரர்கள் வசிக்கும் பல கிராமங்களுக்கும் சென்று, "நம் முன்னோர்களின் பிரபாவங்களையும், தூய ஒழுக்கங்களையும், தெய்வ சிந்தனையையும், கல்விப்பேற்றையும், அதனால் செப்பேடுகளில், சிலாசாஸனங்களில், காவியங்களில் அவர்கள் புகழ் இன்றும் நின்று நிலவுவதை உணர்மின்! வாய்ப்பறை யறைந்துகொண் டிருப்பதிற் பயனில்லை; காலச் சக்கரம் விரைந்தோடும் இக்காலத்தில், மன்னர் மரபினரான யாம்மட்டும் இன்னமும் ஒடுங்கி யிருப்பது தருமமன்று: விழிமின்! ஒழுக்கம் நிரம்பிய கல்விவிருத்தி, விவசாயப் பெருக்கம், தொழிற்கல்வி யாதிய துறையில் முன்னேற்றம் பெறுவதற்கு எழுமின்! இன்றே எழுமின்!! என்று பிரசாரம் செய்துவரும் திருப்பணியை மேற்கொண்டேன்; வன்னிகுலமித்திரன் எனும் பத்திரிகையை ஆரம்பித்து, என்னால் ஆனபணி யத்தனையும் செய்தேன்; வன்னிய மன்னரது புகழனைத்தும் கூறும் கம்பர் பாடிய சிலையெழுபது முதலிய நூற்களை உரையுடன் பதித்ததும், நமது குல அருங்கவிவாணர் பலரது வன்னிகுல க்ஷத்ரிய சங்க உபதேசம் எனும் பாநடை, உரைநடை யாதிய வற்றை வெளியாக்கியதும், முப்பது ஆண்டுகளாக யான் செய்து வைத்த தொண்டு.

யான் பிரசாரக் காரணமாகச் சென்ற கிராமங்கள் பலவற்றிலும் உள்ள எனது குலமணிகள், பல இடங்களில்

வன்னியர் புராணம் ஓலைச்சுவடியில் இருப்பதாகத் தமது முன்னோர் கூறியுளர் என்றும், முயன்று தேடி அதனை அச்சிட்டுக் கொடுக்கும்படியும் பலமுறை என்னைக் கேட்பதுண்டு. அதனால் அந்த எண்ணம், எனது மனத்தில் வேரூன்றியது. எண்ணம் தூயதாயின், அது ஒரு காலத்து நிறைவேறுவது திண்ணம் என்பது ஆன்றோர் அநுபவம்: அதற்கேற்ப, எனது பிரசார காலத்தில் ஒரு நாள், யான் எதிர்பாராமலேயே வன்னியர் புராணம் எனும் மகுடம் அமைந்த ஏட்டுப்பிரதியொன்று கிடைக்கப்பெற்றேன். ஆம்; அந்நேரத்தில், யான் பெற்ற இன்பம் அளவிடற்கு இயலுமோ ?

அங்ஙனம் கிடைத்த ஏட்டுப்பிரதி நாள்பட்டதாயிருந்தமையின், இடையிடையே கரையானால் அரிக்கப்பட்டு, சிதைந்து, பல இடங்களில் விஷயம் விளங்காமல் இடர்ப்படச் செய்தது. இதை எப்படியும் முயன்று திருத்தி அச்சுவாகனமேற்ற எண்ணினேன்; இடையில் 76 ஆண்டுகட்கு முன் நமது குலமணிகள் சிலரால் அச்சிடப்பட்டிருந்த வன்னிகுல சூரியோதயம் என்னும் நூலுக்கும், இந்த ஏட்டுப்பிரதிக்கும், விஷயங்களில் பெரிதும் ஒற்றுமையிருப்பது கருதி உவந்தேன்.

சென்னை இராயபுர வாசியும், பாவலர் நாவலர் பலரும் உவக்க அவர்களுக்குப் பரிசில்பல வழங்கும் புனிதரும், சிவத்திருப்பணி, சிவனடியார் திருப்பணி யாகிய வற்றில் சிந்தை செலுத்தும் செம்மலும், இராயபுரத்தில் பலநாளாகக் கிலமாக யிருந்த வரசித்தி விநாயகர் ஆலயத்தைப் புதுக்கி, மக்கள் பலரும் சென்று அப்பரமனை வழிபடச்செய்த தயாளரும், நமது குலமுன்னேற்றம் கருதி, தமது இளமை முதல் அரும்பாடுபட்டு உழைத்த

வருமான வள்ளல் ராஜவன்னிய ராஜஸ்ரீ மு. இராஜா நாயகர் அவர்களிடத்தில், ஒருநாள் யான் இவ் எட்டுப் பிரதி விஷயமாகக் கூறினேன். அவர்கள் எனக்குப் பெரிதும் ஊக்கம் அளித்து, ஒரு பெருந் தொகையையும் உதவி, இதனை அச்சிடுமாறு கூறினர். அவர்கள் அளித்த ஊக்கமும் உதவியுமே யான் இதை விரைந்து பதிக்க இடந்தந்தது. வான்வழங்கும் உதவிக்கு ஈடாக வையகம் என் செய்யும்; வன்னிய உலகம், இவ்வள்ளலுக்கு என்றும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையதாகும்.

எனது அரும்பெரும் நண்பரும் நம்குல வித்வ மணியுமாகிய பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தின சபாபதி நாயகரவர்களிடம் எட்டுப்பிரதியையும், சூரியோதயத்தையும் கொடுத்து ஒப்புநோக்கி புராணத்தை எழுதித் தருமாறு கூறினேன். பிரசங்க பூஷணம் அவர்களை, ராஜவன்னிய ராஜஸ்ரீ மு. இராஜா நாயகர் அவர்களது சமஸ்தானப் புலவர் என்று பலர் அழைப்பதுண்டு. அதற்கு ஏற்றவாறு அவர்கள், தாம் சந்திக்கும் பகிரங்கமான பல பெரிய சபைகளிலும், தனியே தம்மை சந்திப்பவரிடத்திலும், "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உண்மைக்கும், தூய உள்ளத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்கும், இயன்ற அளவு செய்துவரும் தரும சிந்தனைக்கும் திரு. மு. இராஜா நாயகர் அவர்களை உதாரணமாகக் குறிப்பிட்டுக் கூறிவருவதை பலர் அறிவர். ஷை நாயகர் அவர்கள் எனக்கு அளித்த ஊக்கத்தை என்னாலறிந்த அவர்கள், பெருமகிழ்வுடன் அப்பணி செய்ய உடன் பட்டனர். அன்று தொடங்கி அல்லும் பகலுமாக ஓயாது எட்டுப் பிரதியையும் சூரியோதயத்தையும் ஒத்திட்டு நோக்கி, இந்நூலை 5 மாதங்களுக்குள் எழுதி உதவிய நன்றி பாராட்டத்தக்கது. புராணம் வெளிவருவதற்கு ஊக்கம் அளித்த

ரீம், எழுதுதற்குப் பெயர் கேட்டவளவில், எழுதுபவ
ருக்கு ஊக்கம் விளைவதற்குக் காரணமாகவும் இருந்த
ராஜவன்னிய ராஜஸ்ரீ மு. இராஜூ நாயகர் அவர்களுக்கு,
நன்றியுணர் முறையில், இந்நூல் உரிமைசெய்யப்பெற்றது.

பலகாலமாக மஹாசங்க இன்ஸ்பெக்டராக இருந்த
ராஜவன்னிய ராஜஸ்ரீ கா. ஆறுமுக நாயகர் அவர்களும்
யானும் செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த
வன்னியர்கள் அரச சந்ததியார் என்பதற்கு ஆதாரமான
(வருணதருப்பணத்திலிருந்த) சில சாஸனங்களுடன், தற்
போது கிடைத்த பல சாஸனங்களையும் ஒன்று சேர்த்து,
வன்னிகுலாதிக்கம் எனப்பெயரிட்டு, இந்நூலின் இறுதி
யில் சேர்த்துளேன். நவீன நாகரீகத்தின் பயனாக ஒழுக்க
நிலையை அடியோடு மறந்தவரும், தங்கள் சுபாசுப காலங்
களில், நாம் சம்புமகாரிஷிகோத்திரம் என்பதை மட்டும்
சொல்லிக் கொள்கின்றாராகலின், அவர்களுக்கும்,
தமது குலமுதல் தாதையான மூலபுருடர் வரலாற்றை
அறிய ஏற்படும் ஆவலை, வன்னியர் புராணம் பூர்த்தி
செய்விக்கும் என்று நம்புகிறேன்.

திருமணச் சருக்கம் வரை விரிவுரை எழுதப் பெற்ற
தெனினும், பாரம் வளர்வது கருதி, பிற்பகுதி யனைத்திற்
கும் பொழிப்புரைமட்டும் வரைய நேர்ந்தது. நமது குல
தெய்வமான ஸ்ரீசொன்ன காமாட்சியார் திருவுருவப் பட
மும், இந்நூலின் உரிமையாளர், எழுதி உதவியவர் ஆதி
யோரின் படமும், புராணத்து இடையிடை அவ்வவ் அற்
புதப்படங்களையும் சேர்த்திருக்கின்றேன். 400 பக்கம்
வரைவந்த இந்நூல், அச்சேறுவதற்கு அதிக பொருட்
செலவாகி யிருந்தும், காலநிலை கருதி விலை குறைவாகவே
ஏற்பாடு செய்திருக்கின்றேன்.

குலமணிகள் ஆதரவு காட்டி இந்நூலைப் பெரிதும் பரவச் செய்வார்களாயின், அடுத்த பதிப்பில் இன்னம் பல திருத்தங்களுடன் இதனைப் பிரசுரிக்க எண்ணியிருக்கின்றேன். நூல் அச்சேறுங் காலத்து முன்பணம் உதவிய நண்பர்கள் பெயரையெலாம் அடுத்த பக்கத்தில் காண்க.

நமது குல பகவத்பக்தரான ஸ்ரீ குலசேகராழ்வார் பிரபந்தத்திற்கு பிரசங்க பூஷணம். பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் விருத்தியுரையெழுத, அல்லூர் வேங்கடாத்திரி மந்திர அமைச்சர் திருவாளர் அ. ப. எல்லப்ப நாயகர் காரணபூதராயிருந்ததுபோல, இப்புராணத்தை பிரசங்க பூஷணம் அவர்கள் பூர்த்தி செய்தற்குக் காரண பூதரான ராஜவன்னிய ராஜஸ்ரீ மூ. இராஜு நாயகர் அவர்களுக்கும், முன் பணம் கொடுத்த பல குலாபிமானிகளுக்கும், அற்புதப் படங்களை அழகுற எழுதிய திருவாளர் T. சம்பந்த நாயகர் அவர்களுக்கும், குறிப்பிட்ட காலத்தில் எமது கருத்தின்படி அச்சிட்டுக் கொடுத்த பாரதி பிரஸ் சொந்தக்காரர் அவர்களுக்கும் எனது வணக்கம் உரியதாகுக.

நமது குலதெய்வத் திருவருளால் இந்நூல் வன்னிய உலகில் நீடூழி நிலவ அன்பர்கள் பிரார்த்தனை செய்வார்களாக.

இங்ஙனம்:

குலாபிமானிகளுக்குத் தொண்டு பூண்டொழுகும்



"வன்னிகுல மித்திரன்" பத்திராதிபர்,

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை. (16-8-34)



“வன்னிகுலமித்திரன்” பத்திராதிபர் ஸ்ரீமான்

ஆ. சுப்பிரமணிய நாயகர்.

# உரிமையுரை.

"சென்னைநகர் தனைச்சார்ந்த வளங்கொழிக்கும்ராயபுரச்
செழியன், மேலாம்
வன்னியர்தங் குலத்துதித்த பெருஞ்செல்வன், மிகுகருணை
மனத்தன், மிக்க
பன்னரிய சிவதருமம் புரிநிலையன், அடியர்பணி
பலவுங் கண்டோன்,
மன்னினரை யுயப்புரியு முயர்குணங்கள் பலநிறைந்த
ராஜு மன்னன்'' என்றும்,

"ஒருமுகமு மிருகொம்பு மும்மதமு நால்வாயு
மூவர்த வைந்து
பெருகரமு முளவாறு முகன்றமைய னெனவருளைப்
மிளிர்ந்துங் கண்ணுளை
திருமாலின் மருகனெனும் வரசித்தி கணபதிக்குத்
திகழுங் கோயில்
உருவாக்கி ராயபுரத் தனிராஜு நாயகனார்
ஓங்கி வாழி'' என்றும்,

வித்துவ சிரேட்டர்களால் பாராட்டப் பெற்றவரும், வன்னியர்
குலத்து செல்வச் சீமான்களுள் ஒருவரும், சிவம் போற்றி,
விமா போற்றி, அடியார் போற்றி, அன்பும் தரும
சிந்தனையும் அமைந்து விளங்குபவருமாகிய
ராஜவன்னிய ராஜஸ்ரீ
மூ. இராஜு நாயகர் அவர்கள்
பெயர்
வன்னிய உலகில் என்றும் விளங்க
இந்நூல் அவர்களுக்கு உரிமையாக்கப்பெற்றது.

## வன்னியர் புராண சருக்க அட்டவணை.


| தொடர்ச்சி எண்] | சருக்கங்களின் பெயர். | [பக்க எண் |
|---|---|---|
| 1 | கடவுள் வாழ்த்து ... ... ... | 1 |
| 2 | பாயிரம் ... ... ... | 18 |
| 3 | திருத்தலச் சருக்கம் ... ... ... | 30 |
| 4 | சம்புமாமுனிவர் உற்பவச் சருக்கம் ... ... | 59 |
| 5 | தவநிலைச் சருக்கம் ... ... ... | 83 |
| 6 | அசயந்தி சருக்கம் ... ... ... | 112 |
| 7 | வாதாவி இனதாவி சருக்கம் ... ... | 131 |
| 8 | உருத்திரவன்னிய மகாராஜன் திருவவதாரச் சருக்கம் | 153 |
| 9 | உருத்திரவன்னிய மகாராஜன் திருமணச் சருக்கம்... | 169 |
| 10 | நகர்செய் சருக்கம் ... ... ... | 193 |
| 11 | புதல்வர் வந்த சருக்கம் ... ... ... | 199 |
| 12 | தேவர்கள் முறையிடு சருக்கம் ... ... | 203 |
| 13 | உருத்திரவன்னியமகாராஜன் படையெழுச்சிசருக்கம் | 209 |
| 14 | வாதாவி மந்திராலோசனை சருக்கம் ... ... | 218 |
| 15 | வன்னிமன்னர் அணிவகுப்புச் சருக்கம் ... | 230 |
| 16 | முதற்போர்ச் சருக்கம் ... ... ... | 239 |
| 17 | இரண்டாம்போர்ச் சருக்கம் ... ... | 250 |
| 18 | மூன்றாம்போர்ச் சருக்கம் ... ... | 256 |
| 19 | நான்காம்போர்ச் சருக்கம் ... ... | 261 |
| 20 | ஐந்தாம்போர்ச் சருக்கம் ... ... | 266 |
| 21 | ஆறாம்போர்ச் சருக்கம் ... ... ... | 269 |
| 22 | ஏழாம்போர்ச் சருக்கம் ... ... ... | 285 |
| 23 | எட்டாம்போர்ச் சருக்கம் ... ... | 291 |
| 24 | ஒன்பதாம்போர்ச் சருக்கம் ... ... | 293 |
| 25 | பத்தாம்போர்ச் சருக்கம் ... ... | 296 |
| 26 | பதினோராம்போர்ச் சருக்கம் ... ... | 299 |
| 27 | பன்னிரண்டாம்போர்ச் சருக்கம் ... ... | 304 |
| 28 | விருதுகள்பெற்று மீண்டசருக்கம் ... ... | 318 |
| 29 | வன்னிமன்னர் அரசாட்சி சருக்கம் ... ... | 322 |
| 30 | அருள்பெற்ற சருக்கம் ... ... ... | 329 |

# வன்னிகுலாதிக்க சிலாசாஸன அட்டவணை.

| | பக்கம். |
|---|---|
| காஞ்சி, கைலாஸநாதர் கோயில் சாஸனம் ... | 341 |
| மஹாபலிபுரம் சாஸனம் ... ... ... | 346 |
| கூரம்கிராம செப்பேடு ... ... ... | 347 |
| விரிஞ்சிபுரம் பொய்கை, பெருமாள் ஆலயசாஸனம் ... | 348 |
| திருமலை கல்வெட்டு ... ... ... | 349 |
| காஞ்சி சுரஹரீஸ்வரர் கோயில் கல்வெட்டு ... | 349 |
| ,, ஏகாம்பரர் கோயில் கல்வெட்டு ... ... | 350 |
| திருவாலங்காடு நடராஜர் ஆலய கல்வெட்டு ... | 353 |
| சிதம்பரம் நடராஜர் ஆலய சிலாசாஸனம்... ... | 354 |
| கும்பகோணம் நாகேஸ்வரர் கோயில் கல்வெட்டு ... | 356 |
| திருவல்லம் வில்வநாதீஸ்வரர் கோயில் கல்வெட்டு ... | 357 |
| திருவெண்ணை நல்லூர் கிருபாபுரியீஸ்வரர் ஆலயசாஸனம் | 358 |
| மணிமங்கலம் இராஜகோபாலப் பெருமாள் ஆலயசாஸனம் | 358 |
| திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் ஆலய சாஸனம் ... | 359 |
| திருமலை பாறைமேலிருக்கும் சாஸனம் ... ... | 360 |
| திருமாணிக்குழி வாமன புரீஸ்வரர் ஆலய சாஸனம் ... | 361 |
| காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயில் கல்வெட்டு ... | 362 |
| மஹாபலிபுரம் வராகசுவாமி கோயில் கல்வெட்டு ... | 362 |
| காஞ்சி வரதராஜப்பெருமாள் ஆலய சாஸனம் ... | 363 |
| காஞ்சி அத்தியூர் அருளாளப் பெருமாள் ஆலய சாஸனம் | 363 |
| வந்தவாசி தாலூகா வயலூர் பெருமாள்கோயில் சாஸனம் | 364 |
| சென்னை திருவொற்றியூர் சாத்தாங்காடு பட்டயம் ... | 366 |
| அவஞ்சி சிலாசாஸனம் ... ... ... | 367 |
| தென்காசி, வன்னியவம்ச ப்ரம்பரை பட்டயம் ... | 368 |
| வில்லவநல்லூர் வன்னியர் மடாலய பூர்வோத்திரம் ... | 370 |
| வைத்தீஸ்வரன் கோயில் வன்னியர் மடாலய பட்டயம்... | 375 |
| காஞ்சீபுர மடத்துச் செப்பேடு ... ... | 378 |
| படைவேட்டு ஆலய சாஸனம் ... ... | 379 |
| காஞ்சி வரதராஜர் கோயில் சாஸனம் ... ... | 380 |
| விருத்தாசலம் பெரியமடத்துத் தாம்பிர சாஸனம் ... | 381 |
| அரியலூர் கிருஷ்ணஸ்வாமி கோயில் சிலாசாஸனம் ... | 382 |
| உடையார் பாளையம் பெருமாள்கோயில் தாம்பர சாஸனம் | 382 |

## வன்னியர் புராணத்திலுள்ள படங்களின் விபரம்.


| | பக்கம். |
|---|---|
| குலதெய்வமான ஸ்ரீ சொர்ணகாமாட்சியம்மன் ... | 2 |
| ஸ்ரீ அசயக்திதேவியார் திருவவதரித்தல் ... ... | 112 |
| உருத்திரவன்னிய மகாராஜன் திருவவதாரம் ... | 160 |
| வாதாவி அசுரனை சம்ஹரித்தல் ... ... | 304 |
| 32-விருதுகளுடன் தம்நகரம் வந்தடைதல் ... | 320 |
| உருத்திரவன்னிய மகாராஜன்அரசாட்சிச் சிறப்பு ... | 328 |


## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 26 | புன்ளுயிக் | யுன்ளுயிக் |
| 8 | 27 | அறிவுஅடைய | அறிவுடைய |
| 24 | 10 | வாம்நம் | வாமநம் |
| 38 | 11 | மகரலாயம் | மகராலயம் |
| 40 | 29 | ஒலிர்தன | ஒலித்தன |
| 43 | 20 | ஆற்றிவாரித் | ஆற்றித் |
| 47 | 22 | சோச்செங்கட் | கோச்செங்கட் |
| 55 | 6 | நீரிட்டான் | நீதிட்டான் |
| 55 | 8 | வுத்தமா | வுத்தமமா |
| 66 | 22 | முருவேளினை | முருகவேளினை |
| 105 | 8 | குழிலில் | குழலில் |
| 132 | 15 | மேங்கள் | மேகங்கள் |
| 137 | 13 | மூர்த்தியான | மூர்த்தியான) |
| 137 | 19 | வரத்கை | வரத்தை |
| 185 | 22 | அமுத்தை | அமுதத்தை |
| 226 | 19 | நுறைமொழி | நுரைமொழி |
| 229 | 17 | சவிதா சூரியன் | சவிதா-சூரியன் |
| 303 | 12 | பின்வரு | பின்வருமாறு |
| 304 | 14 | வேகமாடு | வேகமோடு |
| 316 | 20 | (தமதுவசயிமே) | (தமதுவமிசமே) |

## இப்புத்தகம் அச்சிட முன்பணமாக உதவிசெய்த கனவான்கள்.

### இராயபுரம்.

மு. கன்னியப்ப நாயகர், (தர்மகர்த்தா திருவண்ணாமலை அருணா ஜல ஈஸ்வரர் தேவஸ்தானம், M. P. T. கன்றாக்டர்)

மு. இராஜூ நாயகர், (கன்றாக்டர், M. P. T.)

R. கோவிந்தராஜூ நாயகர், (கன்றாக்டா M. P. T. & ஜில்லா போர்டு மெம்பர்.)

P. மாணிக்கம் பிள்ளை.

S. தெய்வசிகாமணி நாயகர், B. A. B. L.

E. பொன்னரங்க நாயகர், B. A. B. L.

A. ஸ்ரீநிவாஸ நாயகர், (ஏஜெண்ட் S. V. C.)

ஆ. ஆடியபாத நாயகர்.

C. V. ஜெயராம நாயகர், (கன்றாக்டர்)

### முத்தியாலுப்பேட்டை.

A. இராஜூ நாயகர், B. A. (ரிடையர்ட் பாரஸ்ட் ஆபீஸர்.)

A. பார்த்தசாரதி நாயகர் (ஆனரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்.)

வெ. இராமசாமி நாயகர், (புரொப்ரைடர் ராமகோட்டி பிரஸ்.)

"ராவ்சாஹேப்" W. குப்புசாமி நாயகர்.

கூடலூர் இ. பச்சைப் பிள்ளை.

N. கருணாகர நாயகர், B. A. B. L.

வ. இராஜூ நாயகர், (டிரங் மெர்ச்செண்ட்)

C. ஞானசுந்தர நாயகர், (டிரங் மெர்ச்செண்ட்)

A. V. கோவிந்தசாமி நாயகர்.

P. ஜானகிராம் நாயகர்.

R. நல்லாண்டி நாயகர், (எங்கிரேவர்)

## வண்ணாரப்பேட்டை.

கோவனம். கிருஷ்ணசாமி நாயகர், (கன்ட்ராக்டர்)
C. பார்த்தசாரதி நாயகர், (சென்னை கார்பொரேஷன் கவுன்ஸிலர்.)
க. மு. பவழப்ப நாயகர், (ஜெனரல் கன்ட்ராக்டர்.)
அ. ப. எல்லப்ப நாயகர், (புரொப்ரைட்டர் குயின் & கோ.,)
டாக்டர். P. ஸ்ரீநிவாஸ நாயகர், L. M. P.
V. வடிவேல் நாயகர், (கன்ட்ராக்டர்.)
C. சங்கர நாயகர், (ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர்.)
ப. தங்கவேலு நாயகர்.
ஏழுகிணறு C. வடிவேல் நாயகர், (ரைஸ்மில் சொந்தக்காரர்.)

## பெத்துநாயகன்பேட்டை.

வன்னிகுலோத்தாரணர் கா. கோபால நாயகர் புத்திரர்.
ப. உலகநாத நாயகர், (புரொப்ரைடர் பேனின் பவுண்டரி.)
விஷ்ணுபாத சேகரர், வித்வான் ஜா. பசுபதி நாயகர்.
T. M. எதிராஜ நாயகர், (மரத்தொட்டி.)
V. கோபாலசாமி நாயகர், (புரொப்ரைடர் மாடல் பிரஸ்.)
S. சிவசங்கர நாயகர்.
உ. இராஜகோபால நாயகர், (புரொப்ரைடர் சரஸ்வதி பவுண்டரி.)
தி. ஆ. பொன்னுசாமி நாயகர், (பொன் வெள்ளி நகை வியாபாரம்.)
T. கோவிந்தராஜுலு நாயகர்.
மொ. அப்புகுட்டி நாயகர், (கமிஷன் எஜெண்ட்.)
M. பொன்னரங்க நாயகர், & உ. முருகேசநாயகர் (புரொப்ரைடர்ஸ் தனலட்சுமி பவுண்டரி)
C. P. கோபால நாயகர் (புரொப்ரைடர் சீதாராமா பிரஸ்)

## சிந்தாதிரிப்பேட்டை.

சி. ஆறுமுக நாயகர்.
டாக்டர். C. பார்த்தசாரதி நாயகர், I. M. D.

## சிந்தாதிரிப்பேட்டை.

A. இராஜாபாதர் நாயகர், B. A. (எடிடர் கமர்ஷியல் டிட்பிட்)
M. எதிராஜ நாயகர், B. A. L. T.
W. K. சுந்தரேச நாயகர், (புரொப்ரைடர் ஸ்டாண்டர்ட் எலக்டிரிக் ஒர்க்ஸ்.)
S. R. பக்தவற்சலு நாயகர், B. A.
V. R. நாகப்ப நாயகர், (கார்பொரேஷன் கன்ட்ராக்டர்.)
C. R. கணபதி நாயகர், B. A.
டாக்டர். C. கோவிந்த நாயகர், L. M. P. (கார்பொரேஷன் கவுன்சிலர்.)
டாக்டர். K. சாமிநாத நாயகர், L. M. P.
C. N. பாலகுரு நாயகர்.

## கோமளீஸ்வரன்பேட்டை.

V. S. அரங்கநாதம் பிள்ளை, B. A.
T. S. நடராஜம் பிள்ளை, B. A. B. L. (அட்வகேட் & சென்னை கார்போரேஷன் கவுன்சிலர்; பச்சையப்ப தர்மபரிபாலன சபை மெம்பர்)
T. K. கோவிந்த நாயகர், (புரொப்ரைடர் Fenn & Co.)
P. C. கோபாலசாமி நாயகர், (கவர்ன்மென்ட் பென்ஷனர்.)
S. கோபாலகிருஷ்ண நாயகர்.

## மவுண்ட்ரோட்.

M. S. நாகப்ப நாயகர், (உருவச்சிலை ஸ்தாபகர்.)
C. பார்த்தசாரதி நாயகர், B. A. B. L. (அட்வகேட்.)

## திருவல்லிக்கேணி.

A. C. பாலசுந்தர நாயகர், B. A. L. T.
T. R. கண்ணப்ப நாயகர், M. A. L. T.
டீ. ச. அரங்கசாமி நாயகர், (பொன் வெள்ளி நகை வியாபாரம்)
T. முருகேச நாயகர், (P. W. D. கன்ட்ராக்டர்.)
T. A. தங்கவேலு நாயகர்.
T. துரைசாமி நாயகர்.

## மயிலாப்பூர்.

சோ. மாணிக்க நாயகர் (கன்ட்ராக்டர்.)
ச. தர்மலிங்க நாயகர்.
M. இராஜரத்தின நாயகர்.

## வன்னிய தேனாம்பேட்டை.

K. திருவேங்கட நாயகர், (காட்டுப்பாக்கம் வன்னியசங்க கல்விச் சாலை மானேஜர்.)
தே. உலகநாத நாயகர், (சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்)
தா. இராமசாமி நாயகர்.
க. பரமசிவ நாயகர்.

## ஆழ்வார்பேட்டை.

T. ஏகாம்பர நாயகர். (புக்பைண்டர்)
A. பச்சையப்ப நாயகர், (கன்ட்ராக்டர்.)

## அடையார் கோட்டூர்.

E. நாராயணசாமி நாயகர்.

## நுங்கம்பாக்கம்.

A. பாலசுந்தர நாயகர், (ஆனரரி பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட்)
N. E. ஜம்புலிங்க நாயகர், (டிராபிட்ஸ்மேன்.)

## எழும்பூர்.

P. M. மார்தியப்ப நாயகர்.

## புரசைவாக்கம்.

M. நாராயணசாமி நாயகர், (தர்மகர்த்தா கெங்காதரீஸ்வரர் கோயில்.)
டாக்டர். E. M. துரைசாமி பிள்ளை. L. M. & S.
S. V. கண்ணபிரான் பிள்ளை.
A. பத்மநாப நாயகர்.

## புதுமார்க்கட்டு

S. P. இராஜரபாதர் நாயகர், B. A.
T. V. விஜயரங்க நாயகர், (கன்ட்ராக்டர்.)

## பெருமாள் பேட்டை.

P. நாராயணசாமி நாயகர், (கவர்ன்மென்ட் பென்ஷனர்.)

## ஆலை.

டாக்டர் P. முதலியாண்டா நாயகர் L. M. P.
R. சோமசுந்தரம் பிள்ளை (ஜகோர்ட் பெஞ்சு கிளார்க்.)
G. T. மாணிக்க நாயகர், (டிரக் மெர்ச்செண்ட்.)
கோ. சின்னசாமி நாயகர்.
M R. சொக்கலிங்க நாயகர், (மோட்டார் இன்ஸ்பெக்டர்.)
R. வடிவேலு நாயகர், (கன்ட்ரூக்டர்.)

## பட்டாளம்.

பூ. துரைசாமி நாயகர்.
M. குழந்தைவேலு நாயகர்.

## ஆயப்பேட்டை.

M. R. சிங்காரவேலு நாயகர். B. A.
வ. சேணியப்ப நாயகர், (தர்மகர்த்தா ஸ்ரீ குலசேகரப்பெருமாள் கோயில்.)
மா. ஷண்முக நாயகர், (சார்ஜ்மென் M. & S. M. Ry.)
ஆ. கு. வேலு நாயகர்.
M. நமசிவாய நாயகர்.
க. கோவிந்தசாமி நாயகர்.
ஓட்டேரி. N. புண்ணியகோட்டி நாயகர்
தி மு. குப்புசாமி நாயகர்.
M. நடேச நாயகர்.

## அயன்புரம்.

M. கிருஷ்ணசாமி நாயகர், (விநாயகம் கம்பெனியார்.)
செ. சோலையப்ப நாயகர்.
அ. நாராயணசாமி நாயகர்.
கோ. பாலகிருஷ்ண நாயகர்.
வைத்தியர். M. சின்னசாமி நாயகர், (கவர்ன்மென்ட் பென்ஷனர்.)

## சைதாப்பேட்டை.

க. ஆறுமுக நாயகர்.

## வியாசர்பாடி.

கி. கு. வடிவேலு நாயகர்.
வி. மு. வரதராஜு நாயகர்.

## மவுலிவாக்கம்.

"சம்புகுல மின்னல்" பா. ல. முருகேச நாயகர்.
காட்டுப்பாக்கம். பா. ல. பொன்னம்பல நாயகர்.
பா. ல. சுந்தரராகவ நாயகர்.
அய்யாவு நாயகர்.

## பூவிருந்தவல்லி.

M. V. இராஜகோபால வர்மா, (டிராயிங் டீச்சர்.)
பேட்டை. ஜீ. ஜெ. இராஜகோபால ரெட்டியார், (லைஸன்ஸில் சொந்தக்காரர்.)
பேட்டை. கூ. தா. இராஜு நாயகர், (லைஸன்ஸில் சொந்தக்காரர்.)
சி. கோவிந்தராஜுலு நாயகர்.

## காஞ்சீபுரம்.

சி. இராஜகோபால பூபதி.
S. மாரியப்ப நாயகர், B. A. L. T.
V. நாராயணசாமி நாயகர், (கன்ட்ராக்டர்.)
இ. தாணப்ப நாயகர்.
A. நைனு நாயகர், (புஷ்ப வியாபாரம்.)

## தக்கோலம்.

T. இரத்தினவேல் நாயகர்.

## வேலூர் தாலூகா கானா சமுத்திரம்.

கொ. தஞ்சி கவுண்டர்.

## பொன்னேரிதாலூகா.

T. முருகேச நாயகர், (ரிடையர்ட் அக்கவுண்டர்.)
பெரும்பேடு, ரா. திருவேங்கட ரெட்டியார், (ஜில்லா போர்டு மெம்பர்.)
ஆத்தப்பாக்கம், ஆரியப்ப ரெட்டியார், (கன்ட்ராக்டர்)
ஒப்பனாவரம், இ. மு. நல்லப்ப ரெட்டியார்.

## சகிந்திராபாத்.

T. ஸ்ரீநிவாஸ நாயகர், (பார்-அட்-லா.)

உ 14

சொர்ணகாமாட்சி துணை.

# வன்னியர் புராணம்

## மூலமும்-உரையும்.

காப்பு.

தருணை நீளுமத் தந்தி முகத்தவ
னருகிற் சென்றி னடிதொழு தாருள
முருகி னார்க்குயர் வுற்றமுச் செல்வமும்
பெருகு மென்றுநன் மாமறை பேசுமே.

பொழிப்புரை.

கற்பக விருட்சம்போல் நீண்ட திருக்கரங்களை யுடைய யானை முகத்துக் கணபதியின் அருகில் சென்று, நிறைந்த உள்ளம் உருகி (அப்பெருமானது) இனிய திருவடிகளை வணங்கினவர்களுக்கு, மேன்மையுற்ற இம்மை, மறுமை, வீடுபேறாகிய மூன்று செல்வங்களும் பெருக உண்டாகும் என்று, நல்லியல்பு வாய்ந்த சிறந்த வேதங்கள் கூறும், (எ-று).

அருகிற்சென்று ஆர் உளம் உருகித் தொழுதார்க்கு என்று அந்வயிக்க. (1)

### கடவுள் வாழ்த்து.

### விகடசக்கர விநாயகக் கடவுள்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நிலம்போற்றுங் கச்சியுறை யேகம்பன் சிணகரத்து
ணிமல மான
நலம்போற்றுங் கம்பையைச்சார் பல்லவகோ புரத்தடியி
னண்ணி யன்பர்

குலம்போற்று முயர்விகடச் சக்கரத்தெம் பெருமானைக்
குலவப் போற்றி
வலம்போற்று வன்னியர்பு ராணகதை யவனருளால்
வழுத்தல் செய்வாம்.

(பொ-ரை) உலகம் முழுதும் வணங்கும் காஞ்சி புரத்தில் எழுந்தருளிய ஏகம்பநாதர் திருக்கோயிலினுள், தூய்மையான நலத்தைக்கொண்ட கம்பாநதியைச் சார்ந் துள்ள பல்லவ கோபுரத்தின் கீழ், அன்பர் கூட்டம் வந்து வணங்கும் எமது மேலான விகடச்சக்கர விநாயகரைப் பொருந்தத் துதித்து, அப்பரமன் திருவருளின் துணை யால், (தெய்வ) வலிமையைக்கொண்ட வன்னியர் புராண வரலாற்றைச் சொல்லுகின்றோம், (எ-று).

தாம் எடுத்த கருமம் இனிது நிறைவேற, ஆன்றோர் மரபின்படி பொதுவுஞ் சிறப்புமாக இருபாக்களால் விநா யக வணக்கங் கூறினர்; இவையிரண்டும், பாடாண்டிணை யுள் கடவுள் வாழ்த்தென்னும் துறையிலடங்கும். "அம ரர்கண் முடியும் அறுவகை யானும், புரைதீர் காமம் புல்லிய வகையினும், ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப" தொல்காப்பியம்பொருளதிகாரம் புறத்திணையியல் 21.(2)

ஏகம்பநாதர்.

கலிவிருத்தம்.

பொன்னெ னுஞ்சடி லத்தொரு புண்ணியன்
கன்ன பூரங் கலந்தசெங் கண்ணியாம்
மின்னை யேற்றண லேகம்பன் மீயரு
டன்னை யேத்தியிக் காதையைச் சாற்றுவாம்.

(பொ-ரை) பொன்போலும் ஒளிவீசுகின்ற சடா மகுடத்தையுடைய ஒப்பற்ற புண்ணியனும், காதளவோ

15-



குலதேவதையாகிய

ஸ்ரீ சொர்ணகாமாக்ஷியம்மன்.

டைய செவ்வரி படர்ந்த கண்களையுடைய இறைவியை யிடப்பாகத்திற் கொண்டவனுமான, வளம் நிறைந்த காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய ஏகம்ப நாதரது மேலான திருவருளைத் துதித்து, இச் சரித்திரத்தைச் சொல்லத் துவக்குகின்றோம், (எ-று). (3)

## சொர்ண காமாட்சி.

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

முத்திதரு மெழுநகருண் முத்தமிழா னிறைகாஞ்சி
முதன்மை யாகப்
பத்திதரு மெட்டுழக்கி னீராழி னெற்கொண்டு
பாரோ ருய்யப்
புத்திதரு மெண்ணான்கி னறம்வளர்த்த சொர்ணகா
மாட்சிப் பூவை
சித்திதரு மலரடியை யிக்காதை நிறைவேறச்
சிந்தை வைப்பாம்.

(பொ-ரை) மோட்சம் அளிக்கும் ஏழு நகரங்களுள்ளும், (இயல் இசை நாடகம் என்னும்) மூன்று தமிழ் (உலவுதலால்) நிறைவு பெற்ற காஞ்சிமாநகரம், (அவ்வெழுதலங்களுள்) முதன்மையாகும்படி, எட்டுழக்கின் ஈராழி நெல்லைக்கொண்டு அன்போடு உலகத்தவர் உய்யுமாறு அறிவை வளர்க்கும் முப்பத்திரண்டு தருமங்களை வளர்த்தவரான குயிலொத்த சொர்ண காமாட்சித் தேவியாரது அஷ்ட சித்தியைக் கொடுக்கும் மலர்போலும் திருவடிகளை, இச்சரிதை நிறைவுபெறும்பொருட்டு மனத்தில் ஏற்போம், (எ-று).

முத்திதரும் எழுநகருள் ஆறுதலம் வடநாட்டிற் கழிய, காஞ்சிபுரம் ஒன்றுமட்டும் தென்னாட்டில் இருத்

தல் நோக்கிய இறைவி, வடநாட்டுத் தலங்களினும் இத் தென்னாட்டுக் காஞ்சி மேன்மையுறுமாறு, இப்பதியில் அறம் வளர்த்தாள் போலும். (4)

வையகமின் புறவருளின் வடிவார்கி யிறைபணியான்
வந்த கம்பை
கையருகி னெய்திடலுங் கண்ணுதலைக் கடிதணைத்துத்
தழும்பு கண்டு
மெய்யொளியும் பொன்னொளியாம் விதங்கண்டு
சுவர்ணவுரு மெத்தி யேத்து
முய்வகையார் வன்னியர்தங் குலதெய்வ மாமனையை
யுள்ளங் கொள்வாம்.

(பொ-ரை) உலகம் இன்பத்தை அடைய கருணையையே திருமேனியாகத் தாங்கி, (ஆற்று நடுவில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசிக்கும் போது, தன் அன்பை யாவர்க்குங் காட்ட) இறைவனது ஏவலால் (பெருகி) வந்த கம்பாநதி (தன்) சமீபத்தில் வருதலும், (ஆண்டவனுக்கு என்னுமோ என அஞ்சி, தான் பூசிக்கும் இலிங்கவுருவான) நெற்றிக்கண்ணுடைய இறைவனை விரைந்து தழுவி, வளைத்தழும்பும் முலைத்தழும்பும் (அப்பரமன் திருமேனியில்) உண்டாக்கி, திருமேனிப் பசுமை நிறம் (பொன்வண்ணப் பெருமானைத் தழுவியமுறையால்) பொன்னொளியான விதத்தைப் பார்த்து, (அத்தேவியை) சுவர்ண விக்ரகமாகப் பிரதிஷ்டை செய்து துதிக்கும் உய்யும் தன்மை பொருந்திய வன்னியர்களுடைய குலதெய்வமான அன்னையை மனத்திற்கொள்வோம், (எ-று).

தேவியின் பசுமைத் திருமேனி இறைவன் திருமேனியைத் தழுவிப் பொன்னொளியான தன்மை நோக்கி, வன்னியர்கள் பொன்னால் தேவியைப் பிரதிஷ்டைசெய்து

பூசித்த காரணத்தால், அம்மை சொர்ணகாமாட்சி எனுந் திருநாமமெய்திய இச்சரிதை மிகமிகப் பாராட்டத்தக்கது. இதனால், வன்னியர்தம் குலதெய்வம் சொர்ண காமாட்சி யென்பது நிலைபெறும் என்க. தேவி அருளுருவம் என்பதை, "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" எனும் சிவஞான சித்தியாரால் அறிக. இது, சுவர்ண விக்ரகப்பிரதிஷ்டை செய்து பூசித்ததற்கு ஏதுக் கூறிய அமைதியென்பர் அறிஞர். (5)

## குமரக்கடவுள்.

### கலிவிருத்தம்.

பூமகடன் மாமருக னாகிவரு பூமான்
மாமகளிர் மார்புறையு மாணிமலர் மாசில்
நாமகடன் மாபதியை னல்கருளி னாறு
மாமுகவன் றடிணை வழுத்திகதை சொல்வாம்.

(பொ-ரை) செந்தாமரை மலரின் வீற்றிருக்கும் திருமகளினுடைய மருகனும், அழகிய மான்மகளான வள்ளி நாச்சியார் தேவயானையார் ஆகிய மாதர்களின் மார்பகத்தில் தோயும் பிரமசாரியும், வெண்டாமரை மலரின் வீற்றிருக்கும் குற்றமில்லாத கலைமகளினது சிறந்த நாயகனை பிரமனைக் காக்கும் கருணையுமான இனிய பெருமை பொருந்திய ஆறுமுகப் பரமன் திருவடிகள் இரண்டினையும் துதித்து, இச்சரிதையைக் கூறுகிறோம், (எ-று).

பூமான் மகள், மாமகள் என்க; பூமான் மகள்—அழகிய மான்வயிற்று மகள். மா மகள்—யானை மகள்: தேவயானை வளர்த்த காரணத்தால் இப்பெய ரெய்தினள் என்க. அருளொடு தோயும் அறுமுகன் இயல்பை மகளிரொடு தோய்ந்ததாக உரைத்தமையின் அவன் மாணியே என்றார்; மாணி—பிரமசாரி: கிரியையும் ஞானமுமே

வள்ளியும்தெய்வயானையும் என்பர். காமக்கலக்கம் கந்தக் கடவுளுக்கு இல்லையென்பதை மாணியெனும் இப்பிரயோகத்தால் பெறலாம். நாமகள்தன் மாபதி—பிரமன். நல்கு அருள் இன் மா ஆறுமுகவன் என்க. 'நாமகள்தன் மாபதியை நல்கும் அருளினுறுமாமுகவன்' என்பதற்கு, கலைமகளின் கணவனான (உலகத்தைத் தோற்றுவிக்கும்) சிறந்தபிரமனையும் தோற்றுவிக்கும்மேலான இனிமையுள ஆறுமுகன் எனினும் பொருந்தும். தாள்துணை, துணைதாள்; துணை—இரண்டு. அருளொடு புணர்ந்து பிரமசாரியாய்ப் பிரமனைத் தோற்றுவிக்கும் பரமன் முருகனேயென்னின், அவனை வழுத்துந் துணையால் கதை ஒழுங்குபடச் சொல்வோம் என்பது குறிப்பு. (6)

வேறு.

அமரர் தங்க ளகத்துயர் பாறிடச்
சமரிற் சூரனைத் தன்வய மாக்கொளும்
நமர கத்திலெந் நாளு நணுகுமக்
குமர கோட்டக் குரவனை யுன்னுவாம்.

(பொ-ரை) தேவர்களின் மனத்துயர் நீங்க, போர்க்களத்தில் சூரபன்மனைத் தன்வசத்தில் ஆகும்படிச்செய்து, அடியவர்களின் உள்ளத்தின்கண் என்றைக்கும் எழுந்தருளும் அந்தக் குமரகோட்டத்தில் வீற்றிருக்கும் பரமாசாரியனாகிய முருகப் பரமனைத் தியானிப்போம், (எ-று).

சூரன் போர்க்களத்தில் மயிலும் சேவலுமாக வர, முருகவேள் ஒன்றன்மேல் அமர்ந்து ஒன்றனைக் கொடியாகக் கொண்டமையின், மீட்டும் வந்து சூரன் தொல்லை செய்வனோ எனும் அச்சம் அமரர்க்கு அகன்றது என்க.

பாற்றுதல் = நீக்குதல். நமர் = நம்மவர்; அடியரே நின்று நிலைக்கும் உறவினராகலின் அவரை நமர் என்

றார். ஒரு காலத்தில் முருகன் சிவபிரானுக்கும் ஆசாரியனாய்ப் பிரணவப்பொருள் விளக்கினனாதலின், 'குரவன்' என்றார். உன்னுதல் = நினைத்தல். (7)

வரதராஜர்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மூலமறை யோலிடவும் பின்னாகி மூலமெனுங்
 கரிமு னாகி
நீலமுகி றிருமேனி யுடனத்தி கிரிமேவி
 னிலைத்த பெம்மா
னோலமெனு மன்பருள முயவருட்கோ லோச்சுகுல
 வரத ராசன்
சீலநெறி யருட்கழலே யிக்காதை மிகவோங்கச்
 சிந்தை செய்வாம்.

(பொ-ரை) பழைமையான வேதங்கள் அனைத்தும் ஓலமிடவும் (அவைகளுக்குத் தரிசனமாகாது) பிற்பட்டும், மூலப்பொருளே என்று கூக்குரலிட்டு அழைத்த கஜேந்திரனுக்கு முன்வந்து (தரிசனமீந்தும்), நீல நிறத்தையுடைய மேகம்போலும் திருமேனியுடன் அத்திகிரியை விரும்பி எழுந்தருளிய பெருமானும், ஓலம் என்று கூக்குரலிடும் அன்பர்கள் உள்ளங்களாகிய குடிகள் உய்யத் திருவருட்கோல் செலுத்துகின்றவனுமான சிறந்த வரதராஜனின் அழகின் வழியதாகும் கருணைமயமான வீரக்கழலணிந்த திருவடிகளை, இப்புராணம் மேலோங்கத் தியானம் செய்வோம், (எ-று).

அத்திமுன் ஆனேன், இனம்பற்றி அத்திகிரியில் அமர்வான்போலும். அத்திகிரி — காஞ்சிபுரத்திலுள்ள ஒரு விஷ்ணுதலம். (8)

## பெருந்தேவித் தாயார்.

### கோச்சகம்.

பொருந்துநல வத்திகிரிப் பொருவில்பதி யுறைகின்ற
முருந்தினகை சிகிச்சாயல் முகிழ்குயிலா மெமதன்னை
திருந்தடியா ருளமேவித் திகழ்வரதன் மணிமார்பிற்
பெருந்தேவி யருட்புகழைப் பேசுவதே பெருவாழ்வாம்.

(போ-ரை) பொருந்திய நலத்தைச் செய்கின்ற அத்திகிரி என்னும் ஒப்பில்லாத தலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற மயில் இறகின் அடியை ஒத்த பல்வரிசைகளும் மயிலொத்த சாயலும் விளங்கும் குயில்போலுங் குரலுமுடைய எமது அன்னையும், திருந்திய அடியவர்களின் உள்ளத்தில் (தியானிக்கும் போதெல்லாம்) சென்று, விளங்கும் வரதராஜனது கௌத்துபமணிந்த மார்பகத்தின் (ஆர்ந்த) பெருந்தேவித் தாயாரின் அருட்புகழைப் பேசுவதுதான் பெரிய வாழ்வாகும், (எ-று).

அத்திகிரி யுறைந்து, அடியவர்தம் உளம்மேவி, வரதன் மணிமார்பிற் பொருந்துகின்ற பெருந்தேவி யருளுகின்ற புகழெல்லாம், பேசுவதுதான் பெரியவாழ்வு என்றபடி. (9)

## சரஸ்வதி.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வெள்ளைவெண் டோட தாரும் விரைநிறை கமலப் பூவிற்
றெள்ளமு தளிக்கு ஞானத் திரன்மதி போல வாழுங்
கள்ளவிழ் மலர்ப்பூங் கோதை கலைமகள் கருணைப்பேற்றை
புன்னுமிக் காதை யோங்க வுள்ளம்வைத் துவகை சொல்வாம்.

(போ-ரை) தெள்ளிய அமுதத்தை யளிக்கும் அறிவுடைய பூரணச் சந்திரன்போல், வெண்மையான அழகிய இதழ்கள் பொருந்திய மணம் நிறைந்த தாமரை மலரில் எழுந்தருளி யிருக்கும் தேன் சிந்தும் மலரணிந்த கூந்தலையுடைய சரஸ்வதியின் அருட்செல்வத்தை, (சொல்ல)

கினைந்த இக்கதை மேன்மையுற மனதிற்கொண்டு மகிழ்ச்சி கொள்வோம், (எ-று). (10)

### திருத்தொண்டர் துதி.

ஆட்சிதனை மகற்களித்தெ மரனடியிற் றலவெண்பா
வமைத்திட் டோறும்
சாட்சிகரி செய்வினையோர்க் தெறிபத்தர் துயருளாற்
சாடி னேனுங்
காட்சியுறு மிறைமலரை மோந்தமனை கரந்தன்னைக்
கழற்றி னேனு
மாட்சியுறு மாக்கோதை முதலான வடியாடி
மனனஞ் செய்வாம்.

(பொ-ரை) அரசியலை மைந்தனிடம் ஒப்படைத்து, எம்சிவபிரான் திருவடியில் தலவெண்பா (பாடிச்) சேர்த்தவரும், பிரத்தியட்சப் பிரமாண்மாக யானை செய்திருக்கும் (மலர் சிந்திய) செயலை அறிந்து, (அதனால் வருந்தும்) எறிபத்த நாயனார் துன்பத்தைத் திருவருள் துணையால் போக்கியவரும், அழகுபொருந்திய இறைவன் (சூடும்) மலரை (வாசனைக்காக) முகந்த இல்லாளின் கரத்தினை நீக்கியவரும், சிறப்பமைந்த மாக்கோதை (எனும் பெயரெய்திய சேரமான் பெருமாள்) முதலாகச் சொல்லப்படும் திருத்தொண்டர்களின் திருவடியைத் தியானம் செய்வோம், (எ-று).

முதலடியிற் கூறப்பெற்றவர், ஐயடிகள் காடவர்கோனயனார்; தொண்டை நாட்டில் பல்லவ அரச வம்சத்தின் அவதரித்து அரசியல் நடத்தியவர்: இவர், "ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்" எனும் குலசேகராழ்வாரைப் போலவே மைந்தனிடம் அரசபாரத்தை ஒப்படைத்து, சிவத்தொண்டையே மேற்கொண்டு தலங்

கள் தோறும் சென்று, தரிசனம் திருப்பணி முதலியன செய்துகொண்டிருந்து, க்ஷேத்திரக் கோவை வெண்பா எனும் நூலொன்றை யியற்றி, இறைவன் திருப்பதத்தில் வைத்தருளித்து அப்பரமன் அருளிய பேரின்பவாழ்வைப் பெற்றவர்.

இரண்டாவதடியிற் கூறப்பெற்றவர் புகழ்ச்சோழ நாயனார்; கொங்குநாட்டின்கண் உள்ள கருவூரில் செங்கோல் முறை வழுவாது அரசியற்றிய ஒரு அரசர் பெருமான்: இவர், சிவகாமியாண்டார் எனும் ஒரு அன்பர் இறைவன் அருச்சனைக்குக் கொண்டுசென்ற மலர்களைச் சிந்திய தம் பட்டத்து யானையையும், பாகரையுங் கொன்ற எறிபத்த நாயனாரை அடைந்து, இத்தீமைக்கு முதற் காரணமான என்னையும் கொல்க என்று தம் உடைவாளை அவர் கரத்தில் கொடுக்க, வாங்காதொழியின் அரசர் தாமே அக்காரியத்தைச் செய்து கொள்வர் எனும் அச்சத்தால் வாளை எறிபத்தர் வாங்கிக்கொண்டதை அறிந்து, அடியவர் கரத்தால் வீழும் பெரியதோர் பேறுபெற்றேன் என்று அரசர் மகிழ்வது நோக்கிய எறிபத்தர், மன்னர் மனத்தில் இவ்வெண்ணம் உண்டாகக் காரணமாயிருந்த யான் இருத்தல் அறமன்று என்று வாளைப் பூட்டித் தங்கழுத்தினைத் தாமே அறியலுற்றார். கண்டனர் மன்னர்; அந்தோ! யானொன்று நினைக்க இவரொன்று நினைத்தனரோ என்று அழுது, எறிபத்தர் கரத்தைப் பிடித்து வாளை யீர்க்க, பொறும்! பொறும்!! என்று அவர் தங்கழுத்தில் வாள்வைக்க, வேண்டாம்வேண்டாம், யான் முதலில் வீழ்கிறேன், வாள்கொடும் என்று அரசர் கதற, இவ்விரு அன்பர் நிலைகண்டு சகியாத உமாபதியின் அருளால், "உங்கள் இருவர் அன்பையும் உலகினுக்குணர்த்த நேர்ந்த நிலையிது, வாழ்மின் அன்பர்காள்" என

ஒரு அசரீரி வானில் எழுந்தது. எழுந்ததும் யானை பாகரோடு உயிர்பெற்றெழுந்தது. இது கண்டு எறிபத்தர், வாளினை விடுத்து அரசரைப் பணிந்தார்; அரசர் வாளை யெறிந்து எறிபத்தரை வணங்கினர். சிவகாமியாண்டார் கூடையில் மலர்கள் நிறைந்திருந்தன. யாவரும் நோக்கித் திருவருளை வழுத்தினர் என்பது வரலாறு.

மூன்றாவதடியிற் கூறப்பெற்றவர், காடவர் குலத்தில் அவதரித்து ஆசியயற்றிய கழற்சிங்க நாயனர்; இவர் ஒருநாள் தம் தேவியுடன் திருவாரூர்த் தியாகேசன் திருக்கோயிலை வலம் வரும்போது, இறைவன் அர்ச்சனைக்கு வைத்திருந்த மலரொன்றை இல்லாள் எடுத்து மோந்ததை யறிந்து அவள் கையை அறுத்துத் திருவருளால் பேறு பெற்றவர்.

நான்காவதடியிற் கூறப்பெற்றவர் சேரமான் பெருமாள் நாயனர். அக்கி குலத்தில் அவதரித்து, சேரநாட்டில் அரசுசெய்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் தோழமை கொண்டு திருக்கயிலைக்கேகி, தாம்பாடிய ஞானவுலா, பொன்வண்ணத்தந்தாதி, மும்மணிக்கோவை யாகிய மூன்று நூற்களையும் அரங்கேற்றியவர்; சகல உயிர்களும் பேசும் பாஷையை யறிந்து ஆட்சி நடத்திய இவர் சரிதம் நினைக்கத் தக்கது. 'முதலான அடியர்' என்றது, மற்ற நாயன்மார்களையும் உளப்படுத்தும் என்க. (11)

சம்புமகாரிஷி.

சிலம்பியுங் கயமும் வழிபடு நெறியான்
வீடுபே றளித்திடுஞ் செம்மை
நலம்பெறு மானைக் காவுறை மேலோ
னம்பஞ றிணைகழற் பேறே

வல்முற வுன்னு மருந்தவச் சம்பு
வன்னியர் குலமுதற் றந்தை
பொலனுறு கழலை யேத்துறுந் துணையா
லிக்கதை புகல்வதுஞ் செய்வாம்.

(பொ-ரை) சிலம்பியும் யானையும் வழிபாடு செய்த மார்க்கத்தால் (அவைகளுக்கு) மோட்ச செல்வத்தை அளித்த நலம்நிறைந்த திருவானைக்காவில் எழுந்தருளிய மேன்மையை யுடையவரும், இறைவனது திருவடிகள் (வழங்கும்) அருட்செல்வத்தை உரத்துடன் தியானிக்கும் அருமையான தவத்தையுடையவரும், வன்னியர் குலத்தின் முதல் தந்தையுமாகிய சம்புமகாரிஷியின் பொன்னொத்த திருவடிகளைத் துதிக்கும் ஆதரவால், இச்சரிதையைச் சொல்லத்தொடங்குகின்றோம், (எ-று). [சிலம்பியும் கயமும் வழிபட்ட வரலாற்றைப் பாயிரத்திற் காண்க.]

## அவையடக்கம்.

### கலிநிலைத்துறை.

புதிய நல்லுரை கிளியினைப் பூவையைப் புகட்டி
யதிச யத்தொடு கேட்டுளங் களிப்பரா மன்பால்
மதிசெ யுந்தமிழ் மதியிலே னுளுமிம் மாண்பால்
முதிய பாவல ரேற்பரென் புன்சொலு முறையால்.

(பொ-ரை) (தாம் வளர்த்த) கிளிக்கும் குயிலுக்கும் (அவைகள் இதற்குமுன் அறியாத) அழகிய புதிய சொற்களைக் கற்றுக்கொடுத்து, (அவைகள் திருப்பித் திருப்பிப் பேச) ஆச்சரியத்தோடு (அதைக்) கேட்டு அன்பால் மனம் மகிழ்வர்; (அதுபோலவே,) அறிவினை வளர்க்கும் தமிழ் மொழியை அறிவில்லாதவனாகிய யான் (இப்புராணம் பாடுதற்குக்) கையாளும் தன்மையில், (நேரும்) என் இழிமைச் சொற்களையும் (இனி) முறைமையின் தேர்ந்து வித்துவ சிரேட்டர்கள் ஏற்றுக்கொள்வார்கள், (எ-று).

# பாயிரம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காசிப் னாதி முனிவரர் திசையின் கிழவருங்
 கந்தரு வோர்க
டேசினி னிமிர்ந்த கதிரவர் வசுக்க ளுருத்திரர்
 தெய்வமாக் கலைகள்
பேசுறு மறையோன் சூதமா முனிவ னாதியர்
 பெட்புற நாடி
யேசலி லறத்தி னுருவதா யொளிரு மெழிறிருக்
 கயிலையை யடைந்தார்.

(பொ-ரை) காசிபன் முதலான முனிவர்கள், அட்டதிக்குப் பாலகர், கந்தருவர், ஒளியினில் உயர்ந்த சூரிய சந்திரர், அட்டவசுக்கள், உருத்திரர்கள், தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த கலைகளை (எப்போதும்) ஓதிக்கொண்டு இருக்கும் பிரமன், சூத புராணிகர் முதலாகக்கூறிய யாவரும், (தாம்தாம்) வாழ்வடைய (உன்னி, யாவராலும்) பழித்தலில்லாத தருமத்தின் வடிவமாக விளங்கும் அழகினையுடைய திருக்கயிலாயத்தை அடைந்தனர், (எ-று).

காசிபர்—மரீசி முனிவரின் குமாரர்; அமரர் அசுராதிய இருதிறத்தவர்க்கும் பிதா. திசையின் கிழவர்—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய எண்திசைகளுக்கு உரிய காப்பாளர்; கிழமை—உரிமை. கந்தருவர்—தேவசாதியில் ஓர் வகையினர். கதிரவர்—இரவினும் பகலினும் ஒளி வீசும் சந்திர சூரியர்; கதிர்—ஒளி; அதனையுடைய சூரிய சந்திரர்களுக்கு ஆகுபெயர். வசுக்கள்—ஒளி நிறம் படைத்த அனலன், அனிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூடன், பிரபாசன்

எனப்படும் அட்டவசுக்கள்; வசு—ஒளி. உருத்திரர் பலர் என்க. முநியெனும் வடசொல்லுக்குக் (கடவுளைத்) தியானம் செய்பவன் என்றும், (முக்காலத்து) ஞானமுடையவனென்றும் பொருள் கூறுவர்; முனியென்பதை தமிழ்ச் சொல்லெனக் கொண்டு, (எல்லாப் பற்றுக்களையும்) முனிந்தவன் (அதாவது வெறுத்து விட்டவன்) எனப் பொருள் கூறுவாருமுளர். (1)

வல்லைவந் தணைந்தா ரனைவருங் காவன்
மாதவ நந்தியெம் பெருமான்
பல்லவம் புரையு மலரடி பணிந்து
பான்மையி னவனரு ளையுயிரு
லெல்லைதீ ருவப்பா லன்புட னிறைவ
னினிதுறை சினகரம் புகுந்து
அல்லலாம் பிறவிப் பெருங்கடற் பாற்று
மமலன திருக்கைகளை யடைந்தார்.

(போ-ரை) விரைந்துவந்து சேர்ந்தவர் யாவரும், (முதற்கோபுர வாயிலில்) காவல் (செய்யும்) பெரிய தவத்தையுடைய எமது நந்திகேச்சுரரின் (மாந்) தளிரை ஒத்த மலரடி வணங்கி, (கைப்பிரம்பேந்தி ஒவ்வொருவராக அனுப்பும்) முறையாக, அவர் (செல்ல அனுப்பிய) கட்டளையின்படி, அளவுகடந்த களிப்பால் அன்போடு இறைவன் இனிதாக எழுந்தருளிய திருக்கோயிலின் உள் நுழைந்து, துன்பமாம் பிறவியென்னும் பெருங்கடலை வற்றச் செய்யும் பரமன் (தேவியுடன்) வீற்றிருந்த இடத்தை யடைந்தனர், (எ-று). (2)

இச்சையே கிரியை ஞானமே யாதிப்
பரையெனு மினியசத் திகளும்
விச்சையாற் றன்னி லுருவதா யொளிரும்
விமலையாம் பரிவைப் பிராட்டி

நச்சுவார் பண்டைக் கொடுவினை யரிய
னல்லருட் பொழிதரு விழியாள்
பச்சைமா மேனிப் பவளவாய் முத்தின்
னகையிடப் பாலதி னுறைய.

(பொ-ரை) இச்சை, கிரியை, ஞானம், ஆதி, பரை எனும் பெயர்களையுடைய இனிமை வாய்ந்த (ஐந்து) சத்திகளையும், அறிவின் திறத்தால் தன்னுடைய உருவமாகக் கொண்டு விளங்கும் பாசிவை (எனும் திருநாமத்தை யுடைய) இறைவி, (தம் திருவடியை) விரும்புகின்றவர்களது கொடிய மூலவினை தொலையச் சிறந்த கருணை பொழியும் கண்களை யுடையவள், மேலான பச்சை மேனியும், பவளம்போல் வாயும், முத்தென்னும் பற்களையும் உடைய தேவி இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்க, (எ-று).

அடுத்த செய்யுளில் இருந்திடக்கண்டார் என்று முடியும்.

இச்செய்யுள் குளகம் என்க. குளகமாவது, பல பாட்டு ஒருவினை கொள்ளும். முத்தகச் செய்யுள் தனி நின்று முடியும். இச்செய்யுளிற் குறித்த ஐந்து சத்திகளும் இறைவி திருமேனியின் பரிணாமம் என்க. வினை— செய்தவனையே சென்றடையும் ஊழ். பசுமை ஒளி, பவள ஒளி, முத்தினொளி ஆகிய மூன்றும் இறைவியின் திருமேனியைச் சார்ந்துள்ள தன்மைபற்றி, ஈற்றடியை விரோத அணியொடு புணர்த்திக் கூறுவாருமுளர். (3)

எள்ளினு ளெண்ணை போலவே யிறைவி
யியைந்திட விருந்திடு மிறைவ
னுள்ளுற வான்றோ ருவப்புறு மைந்தி
னுயர்திரு முகவொளி யுடையோன்

விள்ளரு மொளியார் முக்கணன் கங்கை
பிறையுறை சடைமுடி விமலன்
துள்ளுமான் மழுவை யேந்தியோ னரியின்
றொல்லணை யிருந்திடக் கண்டார்.

(பொ-ரை.) (எள்ளும்) எள்ளினுள் இருக்கும் எண்ணெயும் போல, இறைவி (தன்னுடன் இரண்டறக்) கலந்திட இருக்கின்ற இறைவனும், (அறிவிற் சிறந்த) பெரியோர்கள் மனமுற மகிழும் உயர்ந்த ஒளி வீசும் ஐந்து திருமுகங்களை யுடையவனும், (வாய்விட்டுச்) சொல்லுதற்கு அரிய பேரொளி நிறைந்த மூன்று கண்களை யுடையவனும், கங்கையும் (மூன்றும்) பிறைச்சந்திரனும் ஒளிரும் சடாமகுடத்தையுடைய மலரகிதனும், துள்ளும் (தன்மை வாய்ந்த) மானையும் மழுவையும் ஏந்தியவனுமான சிவபிரான், தொன்மை வாய்ந்த சிம்மத்தால் சுமக்கப்படும் ஆசனத்தின்மேல் எழுந்தருளி யிருக்கப் பார்த்தனர்.

ஆற்றொழுக்காய் வரும் இச் செய்யுள், ஓதுவோர் உளத்தை ஒருநிலைப்படுத்தி உமாபதியின் அருள் திறத்தில் உய்ப்பிக்கும், இது திண்ணம். இயைந்திட இருந்திடும் இறைவன் என்பதை, இறைவி யியைந்திட விருந்திடும் இறைவன் என நேரே கொள்வதூஉந் தகும்.

ஒளி வீசும் ஐந்து திருமுகங்கள், மிகமிகப் பேரொளி செய்யும் முக்கண்கள், கங்கை, அதனில் படகென அமைந்த மூன்றும் பிறை, அவ்விரண்டும் தங்கிய சடாமகுடம், துள்ளுகின்ற மான் ஒருகரத்தில், ஒருகரத்தில் மழு; இத்துணைச் சீர்த்தியுடன் எள்ளினுள் எண்ணெய் போல் நீக்கமின்றிய இறைவியோடு அரியணையின் மீது இருந்து காட்சி விருந்தளிக்கின்றான் கண்ணுதற் பரமன் என்க. எள்+நெய்=எண்ணெய். (4)

பவளமால் வரையி னிலவொளி மிளிரும்
பான்மைபோ னீறணி பரனை
குவளைநேர் விழியாட் கூறனை மறைகள்
குறிக்கொணு வுருவனை யன்னோர்
தவவலி யத்தனு ருமெதிர் கண்டு
தாண்மலர் பணிந்தெழுந் தேத்தி
யுவகையா லுள்ள முருகிடக் கண்ணீ
ருகுத்தன ரிம்மொழி யுரைப்பார்.

(போ-ரை.) பெரிய பவளமலையில் நிலவின் பிரகாசம் விளங்கும் தன்மைபோல் (பவளமொத்த திருமேனியில்) திருநீற்றை யணிந்த இறைவனும், குவளைமலர்போலும் கண்களை யுடைய உமாதேவியின் வலப்பாகத்தில் இருப்பவனும், வேதங்களால் அளவிட இயலாத திருவுருவத்தை யுடையவனுமான சிவபிரானை, அவர்கள், தவத்தின் வலிமையால் எதிரே தரிசித்து, (அப்பரமன்) திருவடித் தாமரைகளில் (வீழ்ந்து) வணங்கி எழுந்து துதித்து, மகிழ்ச்சியால் மனமுருக, (ஆனந்தக்) கண்ணீர் சிந்தி, (பின்வரும்) இவ்வார்த்தைகளைக் கூறுவார்கள், (எ-று).

தவ வலியதனுல், அது—பகுதிப் பொருள் விகுதி. தாமெதிர்கொண்டு, தாம்—அசை. உகுத்தனர்—முற்றெச்சம். "அகிலாசாரத் தபோதன ரின்புறு, வாசகாதீத மனோலய பஞ்சரன்" என்பதும், "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம், பிள்ளைபெறுப் பேதை யறிவாளோ, பேரானந்த முற்றவர்க்கே கண்ணீர் கம்பலையுண்டாகும், உறுதவரோ கன்னெஞ்சமுடையராவார்" என்ற தாயுமானர் அடிகளும் இங்கு நினைக்கத் தக்கது. (௫)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரணப் பொருளே போற்றி
யந்தணு போற்றி மூல
காரணப் பொருளே போற்றி
கண்கள்மூன் றுடையாய் போற்றி

பூரணப் பொருளே போற்றி
புண்ணிய புனித போற்றி
வாரணத் துரிவை போர்த்த
வள்ளலே போற்றி போற்றி.

(பொ-ரை.) வேதப்பொருளே (உமக்கு) நமஸ்காரம், அழகிய குளிர்ந்த அருளை யுடையவரே (உமக்கு) நமஸ்காரம், (எதற்கும்) மூல காரண வஸ்துவே (உமக்கு) நமஸ்காரம், (சோம சூரிய வன்னியெனும்) மூன்று திருக்கண்களையுடையவரே (உமக்கு) நமஸ்காரம், (எங்கும்) நிறைந்த செல்வமே (உமக்கு) நமஸ்காரம், புண்ணியத்தின் வடிவானவரே, தூயவரே (உமக்கு) நமஸ்காரம், யானைத்தோலை (உரித்து) ஆடையாகப்போர்த்த வன்மையரே (உமக்கு) நமஸ்காரம், (எ-று).

கயாசுரன் எனும் யானை வடிவுகொண்ட அரக்கன் ஒருவன், பிரமனிடம் பெற்ற வரபலத்தால் பன்னெடுங் காலம் அமரரை யிம்சித்து, பின் ஒருநாள் காசியையடைந்து இறைவனைத் துதித்துக்கொண்டு இருந்த தேவர்களை உபத்ரவிக்க, அதுகண்டு சகியாத அமலன் விரைந்து இடியேறென முழக்கஞ் காட்டி, அவ்வசுரனைக் கொன்று வீழ்த்தி, அடைந்தார்க்கு அருளும் அண்ணல் தாமே யென்பதை உயிர்த்தொகுதிகள் என்றும் உணருமாறு அவ் யானையின் தோலை உரித்துப் போர்த்தனன் எனும் வரலாறு, 'வாரணத்துரிவை போர்த்த வள்ளல்' என்பவற்றால் வெளியாம். கயாசுரனைக் கொன்று வரையிலா இன்பத்தை அமரர்க்கு வழங்கினுனகலின் 'வள்ளல்' என்றார். (6)

வானாகி வளியாகி வசுவாகி வனமாகி வளர்ந்த பாருந்
தானாகி மதியாகி இனனாகி யியமானன் றானு மாகிக்

கோனாகி யில்லாகி யுளனாகி யவரவரைக் கூத்தி னாட்டு
வானாகி நின்றனினை மறவாத பேரருளை வழங்கு கென்றார்.

(பொ-ரை.) ஆகாயமாகியும், காற்றாகியும், அக்கினியாகியும், நீராகியும், வளர்ச்சியுற்ற நிலமாகியும், சந்திரனாகியும், சூரியனாகியும், ஆன்மாவாகியும், (யாவர்க்கும்) தலைவனாகியும், இல்லாதவனாகியும், உள்ளவனாகியும், அவரவர்களை ஆனந்த தாண்டவத்தில் இயக்குபவனாகியும் இருக்கின்ற தேவரீரை, (என்றும்) மறக்காத பெரிய திருவருளை அநுக்ரகிப்பீராக என்று கூறினார்கள், (எ-று).

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க், கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே" எனும் தமிழ்மறையை அடியொற்றியது இப்பாசுரம் என்க. இதனால், அட்டமூர்த்த வடிவின் விவரம் கூறப்பெற்றது. வசு—அக்கினி; "அரிவசு தகனன் வங்கி அனல் அயவாகனன் தீ" என்பது நிகண்டு. வனம்—நீர்; "மாரி அம்புதமே அப்பு வருணம் சிவனம் வனம் வார்" என்பதும் நிகண்டு. இனன்—சூரியன்; "இனன்............உதயன் ஞாயிறு" என்றவற்றால் அறிக. இயமானன்—ஆன்மா; எஜமானன் என்பதன் திரிபு: "அரிய புற்கலனே கூத்தன் அணு இயமானன் ஆன்மா" என்பதூஉங் காண்க. சூத்திரப் பாவையாம் உலகினை அருட்கயிற்றால் ஆட்டுகின்றான் ஆகலின், 'அவரவரைக் கூத்தின் ஆட்டுவானாகி நின்றான்' என்றார்; "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்பது தமிழ்மறை. 'அவனருளாலே அவன்தாள் வணங்க'லன்றி, பிறிதொரு முயல்வால் இயலாதாகலின், நினை மறவாத பேரருளை வழங்குக என்றார். (7)

### எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இவ்வண மிறைஞ்சு மன்பர்க ளியல்பை
யிறைவனு மினிதுற நோக்கிச்
செவ்விய வுளத்தீர் நுங்கட மனம்போற்
சேருநல் வாழ்வெனச் செப்ப
அவ்விய மவித்தோ ரனைவரு மெம்மா
னருட்டிற மினிதென வுவந்து
நவ்வியம் விழியாள் பாகனை யிறைஞ்சி
நம்பனும் விடைதர நடந்தார்.

(பொ-ரை) இவ்வாறு வணங்கித் துதித்த அன்பர்களின் தன்மையை, இறைவன் மகிழ்வோடு பார்த்து, செம்மையான உள்ளத்தை யுடைய அன்பர்களே! உங்களுடைய (தூய) உள்ளத்தைப்போல் பேரின்ப வாழ்வு (உங்களுக்கு) வந்து சித்திக்கும் என்று அநுக்ரகிக்க, கெடுதல் இல்லாதவரான யாவரும், எம் இறைவன் திருவருள் திறம் (மிகமிக) இனிது என்று மகிழ்ந்து, மான் போலும் அழகிய கண்களை யுடையவரான உமாதேவியாரின் வலப்பாகத்தில் வீற்றிருக்கும் அண்ணலை வணங்கி, எம்பிரான் உத்தரவு கொடுக்க (அங்கிருந்து தத்தம் பதி நோக்கிச்) சென்றார்கள்.

இறைவன்—(எப்பொருளினும்) தங்கி யிருப்பவன்; இறுத்தல்—தங்குதல். இறைமை யெனும் பண்படியாப் பிறந்த பெயர் எனினுமாம்; இறைமை—(எவர்க்கும்) தலைமை. நம்பன்—(யாவரும்) நம்பிச் சரணம் அடையத் தக்கவன் என்பர் நச்சினார்க்கினியர். (8)

அவ்வகை நடந்தோ ரவரவர் பதியி
னடையவு மாரமிர் தன்ன
செவ்விய கருணை பொழிதரு விழியான்
சிவத்தினை யிருத்திய வுளத்தா

றெவ்விய பரனை வணங்கியே மீளு
முயர்குண சூதமா முனிவின்
கவ்விய சோலை நைமிசா ரணியங்
கண்டது முனிவரர் கண்டார்.

(பொ-ரை) அவ்வாறு சென்றவர்கள், அவரவர்களுக்குரிய இருப்பிடத்தை (ப்போய்ச்) சேர்தலும், நிறைந்த அமுதத்தை ஒத்த செம்மையான கருணை சொரியும் கண்ணை யுடையவரும், சிவத்தை (தியானம் செய்ய) நிறுத்திய மனத்தை யுடையவரும், (நிறுத்திய நிலைக்குத் தக்கவாறு) இணங்கிய இறைவனை (திருக்கயிலை சென்று) வணங்கித் திரும்பும் உயர்ந்த குணத்தை யுடையவருமான பெருமைபொருந்திய சூதமுனிவர், ஆகாயம் அளாவிய சோலைகள் சூழ்ந்த நைமிசாரண்யத்தை யடைந்ததும், அங்குள்ள சவுனகாதி முனிவர்கள் (அவரைப்) பார்த்தனர், (எ-று).

நைமிசாரணிய வரலாறு:—ஒருநாள் முனிவர்கள் பலர் ஒருங்குகூடிப் பிரமனையடைந்து, தவநிலை கைகூடும் புண்ணியத்தின் வடிவான ஒரு இடத்தைக் காட்டுமாறு வேண்ட, அவன், ஒரு தருப்பையை வட்டமாகச் செய்து கீழ்விட்டு உருட்டி, இது எங்கு போய் நிற்கின்றதோ அவ்விடம் தூயதாம் என நினைமின் என்று முனிவரைப் போக்கினான். உருண்டது நேமி; தொடர்ந்தனர் முனிவர். பல காததூரம் சென்று வளம்பல நிறைந்த வனமொன்றில் நின்றது அவ்வாழி. நேமி சென்று நின்ற காரணம்பற்றி நைமிசாரணியம் எனப் பெயர்வைத்து, புனிதத் தலமான அக்காட்டில் அன்று தொட்டுத் தவஞ்செய்து பேறுபெற்றனர் முனிவரர் என்று கூறுகின்றனர். நேமி—சக்கரம்: சம்—பூரணம். (ஓடிய தருப்பையாகிய)

சக்கரம் நிறைவுபெற்று நின்ற இடம் என்க. சூதமாமுனி வரின் சிவபக்தியை மிக நயமுடன் விளக்கியதை மீண்டு ஓர்க. கயிலைசென்று மீண்ட அவரை அவ்வனத்தில் தவம் செய்துகொண்டிருந்த சவுனகாதியர் கண்டனர் என்க. பொழிதரும்—ஒருசொல்; சொரியும் என்பது பொருள். மாசூதமுனிவன் என்க. கண்டதும் முனிவரர் கண்டார்-சூதமாமுனிவர் எதிரிலுள்ள அவ்வனத்தைப் பார்த்த தும்,முனிவர்கள் அவரைப்பார்த்தனர் என்னும் விரைவுப் பொருள் பயந்தது. முனிவரர், அர்—விகுதிமேல்விகுதி.

அன்னலை முனிவ ரனைவருஞ் சூத
னடியினின் வீழ்ந்துபி னெழுந்து
நன்னிய மத்தோ டாதனத் திருத்தி
நகைமலர் கொண்டருச் சித்து
மன்னிய சிவத்தை யகத்தினி லிருத்துய்
மாதவ வடியரே முய்யப்
பன்னிய வேத வாகம புராணப்
பலகலை யனைத்தையும் பகர்ந்தாய்.

(பொ-ரை.) முனிவர் யாவரும் (கண்ட) அப்போது, (வந்த) சூதபுராணிகரின் திருவடிகளில் வீழ்ந்து (நமஸ்கரித்து) எழுந்து, சிறந்த தூய்மையுடன் பீடத்தில் எழுந்தருளச் செய்வித்து, ஒளி(வீசும்) மலர்களைக் கொண்டு (அவர் திருவடிகளை) அருச்சித்து, (பயபக்தி விசுவாசத்துடன் எதிர்நின்று,) நிலைபெறுடைய சிவபிரானை மனத்தில் இருத்தித் தியானஞ்செய்யும் சிறந்த தவத்தையுடையவரே! அடியர்களாகிய யாங்கள் கடைத்தேறுமாறு, (யாவராலும் சிறப்பித்துச்) சொல்லப்பட்ட வேதங்களும் ஆகமங்களும் புராணங்களும் பலகலைகளுமாகிய யாவற்றையும் (முன்பு) திருவாய்மலர்ந்தருளினீர், (எ-று).

நகைமலர் என்பதற்கு—மலரும் பருவத்தில் உள்ள மலர் எனினும் ஆம்; நகுதல்—விளங்குதல், மலர்தல், ஒளிசெய்தல், எனப் பலபொருள் ஒருசொல். வேதம் என்ற வடசொல்—(நன்மை தீமைகளை) அறிவிப்பதென்று காரணப் பொருள்படும்; வித் என்ற தாதுவினின்று (வினைப்பகுதியினின்று) பிறந்த பெயர்; இது, இருக்குவேதம் யஜுர்வேதம் சாமவேதம் அதர்வணவேதம் என நான்கு வகைப்படும். இந்நான்கும் ஞானகாண்டம், கர்மகாண்டம் எனும் இருபிரிவில் அடங்கும். ஞானகாண்டம், பிரமத்தைப் பிரதிபாதிப்பது; அது, உபநிஷத்து எனப்படும். கர்மகாண்டம், வர்ணாசிரம தருமங்களையும் இந்த்ராதி தெய்வ வழிபாட்டுக்களையும் விஸ்தரித்துக் கூறுவது. அவ்வழிபாடு அனைத்தும் மூலப்பரம் பொருளுக்குப் பிரீதியாக ஒவ்வொரு மூர்த்தமூலமாகச் செய்யப்படுவன என்க. இவ்வேதம், காலவேறுபாட்டிற்கு இணங்க முனிவர்களால் வகுக்கப்படும். தற்போதுள்ள நான்கு வேதங்களும் துவாபர யுகத்தின் இறுதியில் விஷ்ணு அம்சமாக அவதரித்த வேதவியாசரால் வகுக்கப்பட்டன. இருக்குவேதம் இருபத்தொரு சாகைகளையும், யஜுர்வேதம் நூறு சாகைகளையும், சாமவேதம் ஆயிரம் சாகைகளையும், அதர்வணவேதம் ஒன்பது சாகைகளையும் உடையன என்க. மேலும் இவ்வேதங்கள் மந்திரம் என்றும் பிராமணம் என்றும் இரு பிரிவுகளையுடையன வெனவும் கூறுவர். மந்திரம்—தேவதைகளைத் தியானிக்கும் வாக்கியங்கள்; பிராமணம்—அம்மந்திரங்களைப் பிரயோகிக்கும் முறையைக் கூறுவது.

ஆகமம்:— காமிகம்முதல் வாதுளம் ஈறாகச் சிவாகமங்கள் இருபத்தெட்டாம்; அவை—ஞானபாதம், யோக

பாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனும் நான்கு பாதங்களைத் தனித்தனி யுடையன. இச் சைவாகமங்கள் சதாசிவ மூர்த்தியினுடைய ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றின. இவற்றைத் தியானித்தல், பிரதிட்டித்தல், பூசித்தல் முதலியவற்றின் முறைமைகள் அவ்வாகமங்களில் நன்கு வெளியாம்.

புராணங்கள்:— பிரஹ்மம், பாத்மம், வைணவம், சைவம், பாகவதம், நாரதியம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பவிஷ்யத், ப்ரஹ்ம கைவர்த்தகம், லிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமநம், கௌர்மம், மாத்ஸ்யம், காருடம், பிரம்மாண்டம் எனப் பதினெட்டாம்: புராணம் என்ற சொல்லுக்குப் பண்டை வரலாறு என்பது பொருள். உலகத்தின் தோற்றக் கேடுகளும், பாரம்பரியங்களும், மந்வந்தரங்களும், பரம்பரைக் கதைகளையும் ஆக ஐந்தினையும் கூறுதலால் புராணங்களைப் பஞ்ச லக்ஷணங்களைக் கூறுவது என்பர். அந்தப் புராணம் பதினெட்டனுள் சிவபுராணம் பத்து, விஷ்ணு புராணம் நான்கு, பிரம புராணம் இரண்டு, சூரிய புராணம் ஒன்று, அக்கினி புராணம் ஒன்று என்பது சம்பிரதாயம். புராணங்களே சாத்திரங்கள் எவற்றினும் தலைமையுடையன.

கிருதயுகத்தில் நூறுகோடி கிரந்தங்களாகப் பிரமனால் செய்யப்பெற்றமையின் பிராமம் எனும் பெயர் கொண்டு ஒன்றாயிருந்தது; திரேதாயுகத்தில் கோடிக் கிரந்தங்களால் நூற்றுப் பதினெட்டுச் சங்கிதைகளையுடைய பதினெட்டுப் பாகங்களாகச் சிறந்த முனிவர்களால் வகுக்கப்பட்டது. துவாபரயுகத்தில் நான்கு லக்ஷம் சுலோகங்களால் வேதவியாசர் பதினெட்டுப் புராணங்களாகச் செய்தனர். அப்புராணங்களை ரோமஹர்ஷணர்

முதலிய முனிவர் வியாசரிடம் கேட்டனர். பின் ரோமஹர்ஷணரிடம் அக்நிவத்ஸன் சுமதி முதலானோர் அப்புராணங்களைக் கேட்டனர். இவ்வண்ணம் குரு சிஷ்ய பரம்பரையாய் புராணங்கள் வெளிவந்து, காலங் கடந்த பல கற்பத்துச் செய்திகளை விரிவுற எடுத்துக் கூறலாலும், கழிந்த சிருட்டிகளும் ஒருவகையிலில்லாது வேறுபடுதலினாலும், கற்பந்தோறும் அநுக்ரக மூர்த்தங்களும் வேறாகி வருதலினாலும், அந்தந்தக் கற்பத்து அதிகார மூர்த்தியையே மிகமிக மேலாகத் துதிக்கப்படுதலினாலும், புராணங்கள் ஒன்றினொன்று முரணுவபோல் தோற்றினும் ஆய்ந்து நோக்குவோமெனின் அனைத்தும் ஒற்றுமையையே உடையன என்க.

கலைகள்:— அறுபத்து நான்காம்; விரிக்கிற் பெருகும். (10)

ஆதியிற் கலியின் றொடர்பினா லுலகி
    னாலய லோபமே யாகி
நீதியார் வருண தருமமு மாறி
    நீளற னிலையெலாங் குன்றித்
தீதுடை யசுரர் பெருகிநற் றேவர்க்
    கிடுக்கணே புரிவதை விலக்கச்
சோதியாம் பரையி னமிசமா வன்னி
    யவதரித் தானெனச் சொற்றாய்.

(பொ-ரை) முன் ஒரு காலத்தில் கலிபுருடனின் சம்பந்தத்தால் உலகத்தில் திருக்கோயில்கள் ஒன்றேனும் இல்லாமல், நீதி நிறைந்த வருணாச்சிரம தருமங்களும் மாறுதல் அடைந்து, உயர்ந்த தருமகைங்கர்யங்கள் அனைத்தும் குறைவுபட்டு, தீச்செயலை யுடைய அசுரகுலத்தவர் அதிகரித்துச் சிறந்த அமரர்களுக்குத் துன்பந்

களையேசெய்து வருவதை நீக்குதற்கு, பேரொளிப் பிழம்பான அழகிய பராசத்தியின் அம்சமாய், அக்கினி பகவான் அவதாரம் செய்தார் என்று (ஆக்நேய புராணத்தில்) கூறினீர், (எ-று).

‘ஆதியில் கலியின் தொடர்பு’ என்றது, முன்னொரு கற்பத்தில் நேர்ந்த கலியுகத்தை; கடையுகத்தின் ஆட்சி கலிபுருடனுக்கே என்பது கண்கூடு. அவரவரை ஒவ்வொரு தொழிலிற் புகுத்தி, தொழிலுக்குத் தக ஒழுக்கத்தைக் கற்பித்து, அந்நெறி தவறாது ஒழுகுநர்க்கு உளத் தூய்மை யுண்டாக்கி, அத்தூய்மையாங் காலத்து மாபெருந் தூயவனான சிவபிரான் திருவடிப்பேறும் பேரானந்தப் பெருவாழ்வை யினிதளிக்கும் வருணாச்சிரம தருமம், நீதி நிறைந்ததே யாகலின், ‘நீதியார் வருண தருமம்,’ எனப்பட்டது. ‘அறநிலை’யென்பது-பிரமசரியம், தருமஞ்செய்யும் மண்டபம், எண்வகை மணத்துள் முதலதான பிரமமணம், கோயில் ஆதிய பலபொருள் ஒரு சொல். ஆட்சி கலியினதாகலின், அவ் ஒருசொல்லிலேயே அத்துணைப் பொருளை அடக்கி உரைகொள்ளினும் இழுக்காகாது. அசுரர்—சுரர்க்கு மாறானவர். தேவர்—தெய்வத் தன்மை யுடையவர். இடுக்கண்—இடுங்கிய கண்; துன்பம் எனும் பொருள் பயந்தது. ஆலய லோபமும், வருணநிலை கெடலும், அறநிலை குன்றலும், அசுரர் பெருகலும் ஆன கலியின் ஆட்சி அமரர்க்கு இடுக்கணே பெரிதும் விளைவிப்பது. ஆகலின், அவர் துயர் நீக்கப் பராசத்தியின் அம்சமாய் வன்னி அவதாரம் செய்தார் என்று ஆக்நேய புராணத்தில் கூறினீர் என்றார். கீழ்ச்செய்யுளும் இச்செய்யுளும் குளகம்; அடுத்த கவியில் ‘செப்புகென்றனர்’ என்பது கொண்டு முடியும். (11)

அறத்தினைக் காக்கத் தோன்றிய வன்னி
யண்ணலின் சரிதையை விரிவாய்த்
திறமுளாய் கேட்க விழைந்தனஞ் செப்பு
கென்றனர் தெய்வமா முனிவர்
பிறைவளர் சடைய னருளினா லுய்ந்த
பெருந்தகை வியாதனை யுன்னி
நிறைவளர் தூய வன்னியன் காதை
நிகழ்த்துவான் சூதமா முனிவன்.

(போ-ரை) (அறிவின்) திறத்தை யுடையவரே! தருமத்தைக் காத்து நிலைநிறுத்தற்பொருட்டு அவதரித்த பெருமையிற் சிறந்த வன்னியனின் சரித்திரத்தை விரிவாகக் கேட்க விரும்பினோம், திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்று தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த முனிவர்கள் கூறினர்; அவர்கள் விருப்பத்தினை யறிந்த சிறந்த சூதமுனிவர், வளர்பிறை (சூடிய)சடாமகுடத்தையுடைய சிவபிரான் திருவருளால் உய்திபெற்ற பெருந்தகுதி வாய்ந்த (தனது ஆசாரியரான) வேத வியாசரைத் தியானித்து, நிறைவுடைமை அதிகரித்த தூய்மையான வன்னியன் சரிதையைச் சொல்லத் தொடங்கினர்.

திறம்-தவத்தின் திறமெனினும், நூற்களின் நன்மை யுணர்ந்து உரைக்கும் திறம் எனினுமொக்கும். (12)

சம்புவின் றவமுந் தற்பரன் நடமுந்
தற்பரை யிடமச யர்தி
பம்பியச் சம்பு தனைமணந் ததுவும்
பண்புறு மீவள்ளிசெய் ததுவு
மிம்பரி னெழிலா ருருத்திர வன்னி
யினிமைய னெழுந்தவந் ததுவு,
மும்பர்மீ மகளை மணந்துய ரைந்து
மைந்தரா லுவப்புறு நிலையும்.

(பொ-ரை) சம்புமாமுனிவரின் தவமும், இறைவன் நடனமும், இறைவியினிடத்திருந்து அசயந்தி அவதரித்துச் சம்பு முனிவரைத் திருமணஞ்செய்ததும், அழகுற்ற (புத்திரகாமேஷ்டி) யாகம் செய்ததும், (அவ்யாகத்திலிருந்து,) இவ்வுலகத்தில் அழகு நிறைந்த உருத்திர வன்னியர் எனும் இனிய திருநாமத்தை யுடையவர் எழுந்து வந்ததும், தேவர் தலைவனை இந்திரன் மகளை மணந்து (வீரத்தில்) உயர்ந்த ஐந்து மக்களால் மகிழ்வு பொருந்திய நிலையையும், (எ-று).

தற்பரன் (தன்னைத் தோற்றுவிப்பாரின்றி) தானே தோன்றியவன்; தற்பரை யெனினும் அப்பொருளே. உம்பர்மீ—தேவர் தலைவன்; மீ—தலைவன்: இந்திரன் என்க. இந்திரன் மகள்—மந்திரமாலை. (13)

இறைவியின் றுணையா லுருத்திர வன்னி
யிறைவனார் படைகொடு சென்று
நிறைவுறு மமரர்க் கின்னலே செய்த
நீள்வலி யவுணரை யடைந்து
முறையொடு நிறையே பெறுகென வுரைத்தும்
மூள்சின மொடுவுருத் தெதிர்ந்த
குறையுறு நண்ணார் தமையெலா மழித்துக்
கொற்றமாம் வாகைகொண் டதுவும்.

(பொ-ரை) உமாதேவியின் திருவருள் துணையால், உருத்திர வன்னிய மன்னர் நிறைந்த சேனைகளை அழைத்துக் கொண்டு சென்று, நிறைவு பெற்ற தேவர்களுக்குத் துன்பமே செய்தவர்களான அதிகரித்த வன்மையை யுடைய அவுணர்கள் இருக்கும் இடத்தை அடைந்து, (அமரர்க்கு இடுக்கண் விளைவிக்காத) நிறைவு ஒன்றினையே பெற்று இருப்பீராக என்று (நீதி) முறையோடு கூறியும்,

(கேளாது) மூண்ட கோபத்தோடு எதிர்த்த (பலப்பல) குறைகளை யுடையவர்களான பகைஞரை யெல்லாம் கொன்று, வெற்றியினுதாம் வாகைமாலை சூடியதும், (எ-று). (14)

தவத்தினீர் கேண்மோ வாக்கினே யத்திற்
றங்கிய வன்னியம் பரமன்
சிவம்வளர் காதை யுள்ளன வதனைச்
செப்புநர் கேட்குந ரெவரும்
நவமுறு கற்பின் மனைவியுங் குணஞர்
மக்களும் பொருண்முத னண்ணப்
பவவினை நீங்கிப் பரமனி னருளாற்
பல்குவர் பயனெனப் பகர்வான்.

(பொ-ரை) தவமுனிவர்களே! கேளுங்கள்; ஆக்கினேயபுராணத்தில் உள்ள அழகிய உருத்திர வன்னியத் தெய்வத்தின் மங்களம் அதிகரித்த (பலப்பல) சரிதங்கள் உள்ளன; அச்சரித்திரங்களை ஓதுவார் கேட்பார் யாவரும், புதுமையுற்ற கற்பினையுடைய மனைவியும், (நற்) குணங்கள் நிரம்பிய மக்களும், செல்வம் முதலாகச் சொல்லப்படும் பலவும் (வலியவந்து) சேர, (இம்மைமறுமைகளில் இவ்வின்பங்களெல்லாம் அநுபவித்தபின்,) தீவினை நீங்கி, இறைவன் திருவருளால் வீடுபேற்றைப் பெறுவார்கள் என்று (மேல் சரிதத்தை விரிவுறக்) கூறுவார் சூதமாமுனிவர், (எ-று).

அம்வன்னிப் பரமன் என்க. சிவம்—மங்கலம்; வடசொல்: செம்மையெனும் பண்படியென்பாருமுளர். நவமுறுகற்பு—(பிறரிடத்துக் காண்டற்கு இயலாத)மேலான கற்பு. முதல் என்றவற்றால், மறுமையும் பெற்றும். பயன்—வீடுபேறு. (15)

பாயிரம் முற்றிற்று.

உ

# திருத்தலச் சருக்கம்.

உலக மெங்கணு மோங்கு பெரும்புக
ழிலகச் செல்வமு மிம்மை யிணிற்றருந்
திலகச் சிந்துரக் காவென் றிருத்தலங்
குலவு மேன்மையைக் கூறுதும் யாமரோ.

(பொ-ரை.): மெய்யன்புடன் தியானிப்பவர்க்கு, உலகம் முழுதும் (போற்றும்) உயர்ந்த பெரும்புகழையும், (திரண்ட) ஐஸ்வரியங்களையும், இம்மையில் விளங்கக் கொடுக்கும் திலகம் போன்ற (திரு) ஆனைக்கா என்னும் பெயரை யுடைய அழகிய தலத்தின் விளக்கம் தங்கிய சிறப்பை, (பக்தி நிறைந்த உங்கள் மனம் கொள்ளுமாறு) யாம் கூறுகின்றோம், (எ-று).

உலகமெங்கணு மோங்கு பெரும்புகழ் செல்வமும் இம்மையில் இலகத்தரும் என அந்வயிக்க. சிந்துரக்கா—யானைக்கா; "சிந்துரம் வயமா தந்தி" என்பது நிகண்டு. பிறதலங்களுள் திருவானைக்கா திலகமென விளங்குகின்றதென்க; திலகமணிந்த என்று யானைக்கு அடையாக்கினுமாம். குலவல்—விளங்குதல்; குலவல்—(பிறதலக்கூட்டங்களுள்) அருள் வலிமையிக்கது என்று கூறினரும் உளர். (1)

நிலவு நீறணி நின்மலன் போலவின்
னுலவிச் சென்றணி யார்கலி யுண்டகில்
குலவத் தேமுறு கொன்முகி லாமினுள்
மிலவு மார்பினன் போன்முகின் மீண்டவே.

(பொ-ரை.) விளக்கந் தங்கிய திருநீற்றினை அணிந்த மலரகிதனான சிவபிரான்போல் ஆகாய மார்க்கமாக பரவிச்சென்று, அழகு நிறைந்த சமுத்திரஜலத்தைக் குடித்து, அகிற் குழம்பு பூசிய தேமல் படர்ந்த சிறந்த தனங்களை யுடையவளான மின்னற்கொடி போன்ற திருமகள் தோய்ந்த மார்பையுடைய திருமால் போல மேகங்கள் திரும்பின, (எ-று).

சிவபிரான்போல் சென்ற வெண்மேகங்கள் திருமால் போலத் திரும்பி வந்தன என்றவற்றால், இக்கவியின் பேதமின்றிய மனம் வெளியாம். நீறணிந்துள்ள சிவபிரான் வெண்மேகத்திற்கு உவமை. கடல்நீர் குடித்துத் திரும்பும் கார்மேகத்திற்கு நாரணன் உவமை. மின்னலொடு கார்மேகங்கள் மீளுங் காட்சி, மின்னற் கொடி போலும் இலக்குமியையும் நினைவுறுத்தும். (2)

பரவு மேகமப் பண்புறு பானுவா
லுரவு மாதுலன் வெம்மையை யுற்றனன்
இரவி னாட்டுது மென்றகன் சையமேல்
விரவ வாரியவ் விண்ணெழன் மானுமே.

(பொ-ரை.) (அங்ஙனம்) பரவிய மேகமானது, (வெம்மை) இயல்புடைய அச் சூரியனால், (தன்) உறவினை யுடைய மாமன் (மலையரசன்) வெப்பத்தை அடைந்திருக்கின்றான்; (அம்மாமன் வெப்பம் போக்க நீரினால்) அபிடேகிப்போம் என்று எண்ணி, அகன்ற சையகிரியின் முடிமேல் பொருந்த, கடல் ஆகாயத்தில் எழுவதை ஒத்திருந்தது, (எ-று).

மலையிற் பிறந்த நதி கடலிற் கலக்கும் பான்மையால், கடலுக்கு மலை மாமனாகும் உறவு முறையாகும். மாமன் சூரிய வெப்பத்தில் வருந்தினான் என எண்ணி மருமகன்

தன்னிடத்திலுள்ள நீர்கொண்டு அபிடேகிக்கச் சென்ற இது, தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். அகன் சையசிரலின் மேல் என்று அன்வயிக்க. சிரல்—முடிவிடம். வாரி—கடல். (3)

புள்ளி யாஞ்சையப் பொன்னொளி கண்டுவின்
வெள்ளி வீழிடை வைத்தென நீரினை
யுள்ளித் தாமுறு மொண்பொரு ளையுகந்
தள்ளி யீருந ராயின மேகமே.

(பொ-ரை.) மதிக்கும் தன்மை பொருந்தியதான சையகிரியின் பொன்னொளியைப் பார்த்து, வானத்தில் உள்ளோர்; வெள்ளிக் கம்பிகளை இடையிடையே வைத்தார்களோ எனும்படி, யோசித்து(நோக்கி), தம்மிடத்து உள்ள ஒள்ளியசெல்வங்கள் அனைத்தையும்,(ஏற்பவர்க்கு) மகிழ்ந்து வாரிக்கொடுக்கும் வள்ளல்களைப் போல மேகங்கள் (மழையை) வழங்கின, (எ-று).

மழையென வழங்குவர் வள்ளலர் என்பதற்கு மாறாக, வள்ளலர் என மேகங்கள் வழங்கின எனக் கூறினார் அறிவு பாராட்டற்பாலது. உவமையை உவமேயமாகவும் உவமேயத்தை உவமையாகவும் மாற்றிக் கூறிய இது, விபரீத உவமை யணியின்பாற் படும். விண்—இடவாகுபெயர். (4)

மன்னு வாய்மையு மான மனுநெறி
துன்னு மன்னவர் தொன்மைப் புகழென
பன்னு பாவலர்க் கீந்த பரிசென
நன்னர் நீத்தமுன் னூடத் தழைத்தவே.

(பொ-ரை.) நிலைபெற்ற உண்மையும், மானமும், மனுநெறியும் அதிகரித்த அரசர்களின் பழமை நிரம்பிய

கீர்த்தி யெனும்படியும், (சிறப்பித்துக்) கூறப்பெற்ற புலவர்களுக்கு (வள்ளல்கள்) வழங்கிய கைம்மாறு போலவும், அழகிய முதன்மை வாய்ந்த வெள்ளம் (பாவலரும்) விரும்பப் பெருகியது, (எ-று).

மானமனுநெறி யென்பதற்கு—பெருமையிற் சிறந்த மனுநீதியெனினுமாம். நன்னர் முன் நீத்தம் எனமாறுக; முன்நீத்தம்—முதன்மைவாய்ந்த வெள்ளம். நசடுதல்—விரும்புதல். பாவலர்க்கு ஈந்த பரிசு, பெற்றவர்க்கே யன்றி அவர்மூலமாகப் பிறர்க்கும் பயனுகிப் பெருகுதலை வெள்ளத்தின்மேல் ஏற்றிக் கூறினர்.

"ஞான முன்னிய நான்மறை யாளர்கைத் தான மென்னத் தழைத்தது நீத்தமே" என்பர் கம்பர். (5)

முடியு மார்புந் தாளும் முழுக்கியே
நொடியி னீங்குறு நெஞ்சின ராகியப்
படியி னுர்சையப் பல்பொருளைக்கொடு
வடிவின் வேசையர் போலது வந்ததே.

(போ-ரை). தலையையும் மார்பையும் அழகிய பாதங்களையும் (தன்வயத்தில்) அகப்படுத்தி, (தன் காரியம் முற்றுப் பெற்றபின்) நொடிப்பொழுதில் நீங்குதல் பொருந்திய மனத்தை உடையவர்களான (இனிய) வடிவுடைய வேசையர்கள் போல, வெள்ளமானது நிலவுலகின்கண் நிறைந்த சையகிரியின்(உள்ள) பல பொருள்களை (வாரிக்) கொண்டு வந்தது, (எ-று).

அடிவருடித் . தலைதடவி உள்ள பொருளெலாம் கவர்ந்து செல்லும் வேசையர் போலவே, மலையின் உச்சியையும் நடுவையும் அடியையும் தழுவி, அதன்கண் உள்ள மணி முத்து அகில் முதலியவற்றையும் வெள்ளம்

அடித்துக்கொண்டு வந்தது என்றபடி. நெஞ்சினராகிய வடிவின் வேசையர்போல், அது படியின் ஆர் சையப் பல்பொருளைக் கொடு வந்தது என அந்வயிக்க. (6)

பாட ளித்துறு பன்மலர் மாமணி
நீட ளித்துறு நீள்பெரு மோங்கலின்
வீட ளித்திடு வேலனைப் போற்றிபூங்
கோட ளித்துக் குறிஞ்சி கடந்ததே.

(பொ-ரை). (இசை) பாடும் வண்டுகள் நெருங்கிய பலமலர்களையும், சிறந்த (நவ) மணிகளையும் மிகுதியாகக் கொடுக்கப் பொருந்திய நீண்ட பெரிய சையகிரியில், மோட்சம் அளிக்கும் முருகக் கடவுளைத் துதித்து, அழகிய கரைகளை (இருபக்கத்திலும்) உண்டாக்கி (க்கொண்டு), குறிஞ்சி நிலத்தைக் கடந்தது அவ் வெள்ளம், (எ-று).

'பாடு அளி துறு' எனவும், 'நீடு அளித்து உறு' எனவும், 'வீடு அளித்திடு' எனவும், 'கோடு அளித்து' எனவும் பிரித்துப் பொருள் கொள்க. மலைமேல் உள்ள சுனைகளில் பல்வகை மலர்கள் இருத்தலின், 'பன்மலர்' என்றார். முத்து முதலிய மணிகள் மலைகளில் இருத்தல் பிரசித்தம். பூங்கோடு—அழகிய கரைகள். குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனைத் துதித்து வெள்ளம் புறப்பட்டது என்க. (7)

பண்ணு றும்மொழி கிள்ளைகள் பன்மயின்
னண்ண சோலொடு நற்கடம் பும்மெடுத்
துண்ணி றைவொழி வேடுவர் யாவரு
மண்ணு மாசுர மண்மின வெள்ளமே.

(பொ-ரை). பண்போல் பொருந்திய (இனிய) சொற்களை யுடைய கிளிகளையும், பல மயில்களையும், நண்ணிய

அசோக மரங்களோடு இறந்த கடப்ப மரங்களையும் (அலைகளால்) எடுத்துக்கொண்டு, உள்ளத்தில் நிறைவு நீங்கிய வேடுவர் அனைவரும் பொருந்திய பெரிய பாலைநிலத்தை (அவ்) வெள்ளம் அடைந்தது, (எ-று).

'வேடுவர் யாவரும் அண்ணும் மாசுரம் அண்மின வெள்ளம்' என்க. அண்ணுதல்—பொருந்துதல். அண்மின—அடைந்தன. சுரம்—பாலைநிலம். பாலை—வேடர்களுக்கு வாசஸ்தானமான நிலம். வெள்ளம் குறிஞ்சியிலிருந்து பாலை வனத்தை யடைந்தது என்றபடி. (8)

வலையும் பேரொலி வண்புனல் வேடுவ
ருலையு மாறவ ரோட்டிய வெஞ்சிலை
விலையு மாகணை வாரியத் துர்க்கைதா
ளலையு மாமுழுக் காட்டிய கன்றதே.

(பொ-ரை). சூழ்ந்த பெரிய ஓசையை உடைய வளமான நீர்த்தம், வேடுவர் வருந்துமாறு அவர்களைத் துரத்தி, கொல்லும் (தொழிலையுடைய அவர்களின்) விற்களையும், (அவ்விற்களில்) நேரும் அதிகமான அம்புகளையும் (அலைகளால்) அடித்துக்கொண்டு, (அப்பாலை நிலத்துக்கு உரிய தெய்வமான) துர்க்கையின் அழகிய திருவடிகளில் கலக்கும் வண்ணம், பெரிய அபிடேகஞ் செய்து (பின் அந்நிலத்தை விட்டு) நீங்கியது, (எ-று).

முழுக்காட்டல்—அபிடேகம் செய்தல். (9)

மூசு வண்டறை முல்லைய டைந்துதேன்
வீசு கொன்றைமு தற்பல வீதரு
ஆசு நீங்கிய வேய்க்குழ லன்குலம்
பீச பல்கொடு மீண்டன வெள்ளமே.

(பொ-ரை). (மலர்களில்) மொய்க்கும் வண்டுகள் ஒலிக்கும் முல்லை நிலத்தை அடைந்து, தேனை (மிகுதி

யாகச்) சொரியும் கொன்றை முதலாகப் பல மலர்களை யுடைய மரக்கூட்டங்களும், குற்றம் இல்லாத புள்ளாங் குழல்களும், பசுக்கூட்டங்களும் (ஆகிய) பலவற்றையும், மிகுதியாக (வாரிக்) கொண்டு சென்றது அவ்வெள்ளம், (எ-று). வீ—மலர்கள். (10)

பூசு மாரகிற் பூண்முலை யாய்ச்சியர்
காசு மாடையுங் கண்ணனிற் கொண்டுநல்
வாசு தேவனின் றாண்மலர் வாழ்த்தியே
மாசு நீங்குற மாமரு தாற்றதே.

(பொ-ரை). நிறைந்த அகிற்குழம்பு பூசும் ஆபரணம் அணிந்த தனங்களை யுடைய யாதவப் பெண்களின் ஆபரணங்களையும் ஆடைகளையும் கண்ணனைப் போல வாரிக்கொண்டு, (அம்முல்லை நிலத்திற்கு உரிய தெய்வ மான) சிறந்த வாசுதேவனது திருவடித் தாமரைகளைத் துதித்து, (முற்குறித்த நிலங்களில் தான் செய்த) குற்றங் கள் (அனைத்தும்) நீங்கிட சிறந்த மருதநிலம் அடைந்தது (அவ்வெள்ளம்), (எ-று).

வாசுதேவன்—வசுதேவனின் மகன்; கிருஷ்ணன். முல்லை நிலத்துக்கு உரியதெய்வம் கண்ணன் ஆதலின், அவனைத் துதித்து மீண்டதென்க. பிறநிலங்களில் வேடரைத் துரத்தினமை, பறவைகள் மரங்களாதிய வற்றை அடித்துக் கொண்டுவந்தமை முதலிய குற்றம் நீங்க, புண்ணிய பூமியான மருதநிலத்தை அடைந்தது என்க. (11)

ஓங்க ரும்புறு மொண்மகிழ் வாழையுந்
தேங்க ரும்பொடு திண்கமு காகுதேன்
பாங்க ரின்னுயர் பாதிரி மாமர
மாங்க ரும்பிட வண்மிம லிந்ததே.

(பொ-ரை.) உயர்ந்த அரும்புகள் பொருந்திய ஒள்ளிய மகிழமரங்களும், வாழை மரங்களும், இனிமையான கரும்புகளோடு திண்மை வாய்ந்த கமுக மரங்களும், எல்லாப் பக்கங்களிலும் உயர்ந்த தேன் நிறைந்த பெரிய பாதிரி மரங்களும், அம்மருத நிலத்தில் வளம் பெறுமாறு அடைந்து நிறைந்தது (அவ்வெள்ளம்), (எ-று).

பாங்கரின் உயர் தேன் ஆரும் மா பாதிரி மரம் என்க. (12)

காவி கஞ்சங் குவளையுங் கான்றுகான்
தூவி சேலும் வரால்களுந் துள்ளிட
தாவி கால்செய் யசும்பினுந் தண்மைய
வாவி யெங்கு நிறைந்ததவ் வாரியே.

(பொ-ரை.) கருங்குவளை மலர்களும், தாமரை மலர்களும், செங்குவளை மலர்களும் மணம் வீசி, சிறகுகளையுடைய சேல் மீன்களும், வரால் மீன்களும் துள்ளவும், பாய்ந்து சென்று வாய்க்கால்கள் வயல்கள் கிணறுகள் குளிர்ச்சியை யுடைய குளங்கள் (ஆகிய) எல்லா இடங்களிலும் நிறைந்தது அவ் வெள்ளம், (எ-று).

கான்—வாசனை; கான்று-வீசியென்க. தூவி-மீன் சிறகு. கால்-வாய்க்கால். செய்-வயல். அசும்பு-கிணறு; இது இப்பொருளாதலை "கோளிய கிணறு கூபம் கூவலே அசும்பு" எனும் நிகண்டினுங் காண்க. காவி-கருங்குவளை; குவளை-செங்குவளையென்க. (13)

வைத்த சீர்த்திய மாமரு தண்ணலை
மைத்த வாந்திரை யாங்கரப் பண்பினுல்
மெய்த்த நற்றுதி செய்தது மீண்டுயர்
செய்த்த லம்பா னோர்ந்திழைந் திட்டதே.

(போ-ரை.) அதிகமாக நிறைந்த சிறப்பினை யுடைய பெரிய மருத நிலத்துத் தலைவனான வருணனை, (அவ் வெள்ளம்) பசுமை யுடையவான அலைகளாகிய தகுதி வாய்ந்த கரங்களால் மெய்ம்மையான சிறந்த துதிசெய்து கும்பிட்டு, (ஆங்கிருந்து) திரும்பி, பசுமையான நீண்ட கடலை யடைந்து கலந்தது, (எ-று).

'பண்புக் கரங்களால்' எனவும், 'நெய்த்த உயர் அம்பரம்' எனவும் இயைக்க. மருத அண்ணல்-வருணன். செய்தது-முற்றெச்சம். உயர் நெய்த்த அம்பரம்-அதிக பசுமையான கடல் எனினுமாம். அம்பரம்-கடல்; "அரி மகராலயம் நீராழி அம்பரமே வேலை" என்பது நிகண்டு. அலைகள் ஒன்றோடொன்று இழைந்து வருதல், கரங்களால் கும்பிடும் முறையும், அவ்வலைகளின் ஓசையை, துதிக்கும் முறையாகவும் கொள்க. (14)

அன்று தொட்டவ் வழகுறு மாநதி
யென்றும் பாரி னிணங்குமத் தோற்றமே
கன்று மானைக் கரத்தினி லேந்தியோ
னொன்று தேவி யுமையரு ளொக்குமால்.

(போ-ரை.) அந்நாள் தொடங்கி அழகு பொருந்திய அச்சிறந்த நதி, உலகத்தில் எந்நாளும் (பெருகி) வரும் அக்காட்சியானது, மான்கன்றைக் கரத்தில் ஏந்திய சிவபிரானிடத்துப் பொருந்திய உமாதேவியின் திருவருளை ஒத்திருக்கும், (எ-று).

கன்று மானை-மான்கன்றை யென்க. கோபிக்கும் மானை யென்றுரு முளர். தேவி-தெய்வத் தன்மை வாய்ந்தவள். இறைவியின் அருட்பெருக்கைச் சத்தினி பாதம் என்பர் வடமொழி வாணர். இறைவி நதியும், இறைவியின் அருள் அந்நதியின் பயனுமென்க. (15)

அன்ன நீர்மையி னங்குள சோலைகள்
மன்ன வோங்கிட வண்மைசெய் மாண்பினா
லின்ன மாநதி காவிரி யென்பெயர்த்
துன்ன மேலவர் தோய்ந்திடப் பெற்றதே.

(திருவருளை ஒத்தது எனும்) அத்தன்மையின்படி, அம் மருத நிலத்தின்கண் உள்ள சோலைகள் ஓங்கி நிலை பெற வளப்பம் செய்யும் சிறப்பால், இச் சிறந்த நதி, காவிரி யென்னும் பெயர் பெற்று, மேன்மையான ஞானிகள் தன்னில் ஸ்நானம் செய்யும் (புண்ணியத்தை யும்) அடைந்தது, (எ-று).

ஓங்கி மன்னிட என்று இயைக்க. சோலைகளை எப்போதும் மலரச் செய்யும் காரணத்தால் அந்நதி காவிரி யென்னும் பெயர்பெற்றது என்றார்; கா-சோலை. விரிதல்-மலர்தல். கவேரன் மகளாதலின் அந்நதி, காவிரி யெனும் பெயர்த்தாயிற்று என்றாருமுளர். (16)

வன்னி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தந்
துன்னு நல்லரு டோய்ந்திட்டுத் தூய்மையேர்
மன்னு காவிரி வீறுற்ற மன்னர்வாழ்
பன்னு சோழநன் னாட்டின்கண் பல்கிற்றே.

(போ-ரை.) வன்னியனுடைய குலத்து (வந்த) அளவில்லாத அரசர்களது அதிகரித்த சிறந்த கருணை (வெள்ளத்தில்) முழுகி, பரிசுத்தம் என்னும் அழகு பொருந்திய காவிரி யானது, (சிறப்பித்துச்) சொல்லப் படும் வெற்றி அமைந்த சோழ மன்னர்கள் வாழ்கின்ற வளமான (சோழ) நாட்டினிடத்து நிறைந்தது, (எ-று).

வன்னிமன்னர் கருணை வெள்ளத்தில் முழுகித் தூய்மை பெற்ற காவிரி நதியானது, அம்மன்னவர் மா

பினான சோழர்கள் நாட்டில் நிறைவு பெற்றது என்க. பன்னு வீறு உற்ற சோழ மன்னர் வாழ் நல் நாட்டிடை பல்கிற்று என அங்வயிக்க. நல் நாடு, நல்-வளத்திற்கு. அடை. தோய்ந்திட்டு, இடு-துணைவினை. (17)

மன்னர் யாரும் மருத வயலினிற்
கொள்ள நீரை வரப்பது கோலியே
துள்ள யேரை யுகந்தனர் பூட்டியே
தெள்ளு மோகை கொடுநனி துள்ளுவார்.

(பொ-ரை.): மன்னர்கள் அனைவரும் ஜலத்தை மருத (நிலத்துத் தம்) வயலில் கொள்ளும்படி வரப்புக்களைக் கோலி, அதன் பின்பு (தம் இடத்து) உள்ள ஏரை மகிழ்ந்து பூட்டி (உழுது,) தூய்மையான மகிழ்ச்சி கொண்டு மிகமிகக் குதிப்பார்கள், (எ-று).

மன்னர் யாரும் தெள்ளும் ஓகை கொடு நீரை மருத வயலினிற் கொள்ள வரப்பது கோலி என இயைப்பினும் பொருந்தும். வரப்பது, அது-பகுதிப் பொருள் விகுதி. உகந்தனர்-முற்றெச்சம் (18)

அறுசீராசிரிய விருத்தம்.

எழிலுறு மருதந் தன்னி லேரினைப் பூட்டு மார்ப்பு
முழுமவ ரவர்க ளோசைத யுண்மகிழ் தெய்வம் பேணித்
தொழுதிடு மமலை காழை வித்துவர் சும்மை நாற்றுப்
பழுதற நடுனர் ஞாலல் பஃறிசை யாலு மாலோ.

(பொ-ரை.) எழுச்சி யுற்ற மருத நிலத்தில் அவரவர்கள் ஏர்களைப் பூட்டும் ஓசையும், (நிலங்களில்) உழுகின்ற ஓசையும், மனம் மகிழும் (படிச்செய்த வருணனாகிய) தெய்வத்தை வழிபட்டுத் தொழும் ஓசையும், விதை விதைப்பவர் ஓசையும், குற்றம் இல்லாதபடி நாற்று நடுகின்றவர் ஓசையும் பலதிசைகளில் ஒலிந்தன, (எ-று).

அவரவர்கள் என்பதை பூட்டும், தொழுதிடும், வித்துனர், நடுனர் என்னும் இடங்கள் ஒவ்வொன்றினும் இயைக்க. 'பழுதற நாற்று நடுனர்' என அந்வயித்துப் பொருள் காண்க. ஆர்ப்பு, ஓதை, அமலை, சும்மை, ஞாலல், ஆலல் ஆகிய அனைத்தும் ஓசை யென்னும் ஒரே பொருளில் வருவன. இதனை, பொருட் பின்வருநிலையணி யென்பர். (19)

அரம்பைநற் கனியின் சாறு மருங்கரும் புகுத்த தேனும்
விரும்புமா பலவின் றேறல் விரைமலர்ச் சுவிகை மேலும்
பெருஞ்சுவை தருப லத்திற் பிறங்கிடு மதுவு நேர்ந்துத்
திருமலி வயலிற் பாய்ந்துப் பயிர்களுஞ் செழிக்கு மாதோ.

(போ-ரை.) வாழையின் சிறந்த பழத்தினது சாறும், அரிய கரும்பு சிந்திய சாறும், விரும்பத் தகுந்த மா, பலாப்பழங்களின் சாறும், மணத்தையுடைய மலர்கள் (சிந்திய) தேனும், (அதன்) மேலும் பெரிய சுவையை யுடைய பிற விருட்சங்களின் பழங்களில் விளங்கிய சாறுகளும் (ஒன்று) கலந்து, அழகு நிறைந்த வயல்களில் (சென்று) பாய்ந்து, நெற் பயிர்களும் செழிக்கத் தொடங்கின, (எ-று).

அரம்பை—வாழை. சுவிகை—தேன். பிறங்குதல்—விளங்குதல். திருமலிவயல்—லட்சுமி சம்பந்தத்தை யுடைய வயல் எனினுமாம். (20)

பசுமையம் பயிர்க்கு நீலம் பங்கயங் களைக ளாக
வசுமைதம் முககண் ணிற்கு வசையிதாம் வளரி னென்ன
வசும்பிய களைக டம்மை யுழத்திய ரகற்றல் நம்பி
யுசும்புத லடைந்தோர் தம்மி னுறுதுய ரொழித்தற் போலாம்.

(போ-ரை). பசுமையான அழகிய பயிர்களுக்குக் குவளை தாமரை (முதலியவை) களைகளாய் இருக்க, இக்

களைகள் வளர்ந்தால் ஒளியை யுடைய தங்களது முகங்களுக்கும் கண்களுக்கும் வசையாகும் என்று, இடையிடையே உள்ள களைகளை உழத்திப் பெண்கள் நீக்கும் தன்மையானது, தம்மை நம்பி உற்றவர்களின் பொருந்திய துன்பத்தை நீக்குதலை ஒத்திருக்கின்றது, (எ-று).

வசுமை-ஒளி. அசும்புதல்-இடையறாது ஒழுகுதல். நம்பி உசும்புதல் அடைந்தோர்-நம்பி இயங்குதல் உற்றோர். கமலமும் குவளையும் முகங்களுக்கும் கண்களுக்கும் உவமை கூறுவர்; அஃறிணையாகிய அப்பொருள்களை, உயர்திணையாகிய தங்களுக்கு உவமை கூறுவது வசையே யென்று எண்ணிய மாதர்கள், அவ்வசை வளரா வண்ணம் அப்பொருள்களை வேரோடு பிடுங்கி வீசி எறிந்தனர் போலும். இவ்வமைதியோடு ஈற்றடியில், நம்பி யடைந்தவர் துயரம் நீக்கும் நல்லறிவாளர்போல், வளர்ச்சிக்குத் தம்மை நம்பிய பயிர்களுக்குப் பகையான களைகளை மாதர்கள் நீக்கினர் என்று வேறுமொரு அமைதி காட்டினர்: இது தற்குறிப் பேற்ற வணி. (21)

நிலையுறுந் தவத்தர் மேனி
நிறமெனப் பசப்பிற் பூத்துத்
தலையுறுங் கருப்ப மார்ந்துத்
தாளெலாம் பழுத்த தோங்கி
யலையுறும் வறிஞர் தேடி
யளிக்குநர் வணங்கு மாபோற்
பொலனுறப் புரந்தா ரேற்கப்
பொற்கதிற் முதிர்ந்த தாலோ.

(பொ-ரை). நிலைபெற்ற தவஞ்செய்யும் மேலோர்களின் திருமேனி நிறம் என்று சொல்லும்படி பொன்மைபோல் மலர்ந்து, தலைமை யுற்ற கருப்பம்

அடைந்து, தாள்கள் அனைத்தும் ஓங்கிப் பழுத்தது; (அதன்பின்,) அலைகின்ற ஏழைகளைத் தேடி (திரவியங்களை அவர்கள் வறுமை நீங்கத்) தருபவர், (தருதற்கு முன் அவ் ஏழைகளைத் தலை) வணங்கி நமஸ்கரிப்பது போல், அழகுற வளரத் தம்மைக் காத்தவர் கொள்ளுமாறு, பொன் போலும் நெற்கதிர்கள் முதிர்ந்து (பாரம் தாங்காது) சாய்ந்தன, (எ-று).

பசப்பு-பொன்மை; "பிங்கலம் பசப்புப் பீதம் பீதகம் பொன்மை" என்பது காண்க. பழுத்தது, அது-பகுதிப் பொருள் விகுதி யெனக் கொண்டு உரைத்தாருமுளர். வறிஞர், ஞ்-பெயரிடை நிலை. ஆல், ஒ-சற்றசை. (22)

வண்மைசால் மள்ளர் சாலி
　　குயத்தினு லரிந்து வாங்கித்
திண்மையார் மேரு வாக்கித்
　　திகழுறு பகட்டைப் பூட்டி
யெண்மையாற் பாரித் தோட்டி
　　யெழிலுறு வரியை வாரி
யுண்மையாத் தூற்றி வாரித் தம்மி
　　னுறையுளி லுவந்து வைப்பார்.

(பொ-ரை.) வளப்பம் மிகுந்த மள்ளர்கள், (முதிர்ந்த) நெற்பயிரை அரிவாள்களால் அறுத்து எடுத்து, வலிமை நிறைந்த மேருமலைபோல் குவித்து, (அதன்பின், தங்கள்) எண்ணத்தின்படி பரப்பி, (உரத்தோடு) விளங்குகின்ற கடாக்களை (ஒன்றோடொன்று) சேர்த்துக்கட்டி, (பரப்பிய தாள்களின்மேல்) ஓட்டி, (கடாக்கள் மிதித்தலால் சிந்திய) நெற்களை வாரியெடுத்து, (பதரெல்லாம் போக, நெற்கள் மட்டும்) உளதாம்படித் தூற்றி, (பின் ஏராள

மாக நேர்ந்த நெற்களைச் சேர்த்து,) தங்கள் தங்கள் வீடுகளில் (கொண்டுபோய்) மகிழ்ந்து வைப்பார்கள்.

சாலி—நெற்பயிர். குயம்—அரிவாள்; "குயமோடு புள்ளம் மற்றைக் கொடுவாளே அரிவாளின்பேர்" என்பது நிகண்டு. பாரித்தல்—பரப்புதல்; "விரியலே பரத்த லென்ப விளம்பு பாரித்தலும் பேர்" என்பதூஉங் காண்க. வரி—நெல்; "வரி சொல்லு விரீகி சாலி வளர்நெல்லாம் யவமுமாகும்" என்பது நிகண்டு. (25)

திருந்துறு காளை யர்க்குத்
திருமண நிகழ்த்து விப்பா
ரருந்துநர்க் கன்ன மேழு
சுவையொடு மளித்தல் செய்வார்
பெருங்கலை வாணர்க் கெல்லாம்
பெரிதுறு பரிசை யீவா
ரருந்தவர்ப் பேணித் தேவ
ரரும்விழ வாற்று வாரால்.

(பொ-ரை.) திருத்தம் அடைந்துள்ள வாலிபர்களுக்குத் திருமணம் செய்விப்பார்கள்; உண்பவர்களுக்கு, ஏழு வகைச் சுவையோடு (கூடிய) அன்னம் படைப்பார்கள்; பெருமை பொருந்திய கலைகளின் (இனிமையில்) வாழ்கின்ற புலவர்கள் அனைவருக்கும், அதிகமான சன்மானத்தை அளிப்பார்கள்; அருமையான தவசிகளை வழிபட்டு, தேவர்களுக்கு (மற்ற தேயத்தவரால் செய்தற்கு) அரிய திருவிழாவை நடத்துவார்கள், (எ-று)

திருந்தல்—(நற்குண நல்லொழுக்கங்களில்) திருத்தம் அடைதல். மிடுக்குடையா ராகவின் 'காளையர்' என்றார். உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு என்பன அறுவகைச் சுவைகள்; இதனினும்,

விருந்தினர்க்கு மிகவும் இன்பத்தைத் தரவல்ல உபசரித்து ஊட்டல் ஆகிய அன்புச் சுவையை, ஏழாவது சுவை யென்பர். அன்பு என்பது ஏழாவது சுவை யெனப் பொருள்படும் "ஆதர: ஸப்தமோ ரஸ:" எனும் பிரமாண வசனமும் ஈண்டு நினைக்கத் தகும். ஏராளமாக நெற்கள் விளையும் மகிழ்ச்சிப் பெருக்கால் இத்தகைய இன்பங் களை அநுபவிக்கின்றனர் மக்கள் என்றபடி. (24)

வேறு.

இத்துணை நலன தார்ந்த வெழிலுறுஞ் சோழ நாட்டிற்
பத்திசால் புலிக்கா லோனும் பதஞ்சலி மெய்யன் றானுஞ்
சித்தம துருக நித்தஞ் சிவகாம வல்லி காண
நித்தனார் நடிக்குந் தூய சிதம்பர நின்ற தன்றே.

(பொ-ரை.) இத்தகைய சிறப்பு நிரம்பிய அழகு பொருந்திய சோழ நாட்டில், அன்பு மிகுந்த புலியின் கால்களையுடைய முனிவரும், பதஞ்சலி முனிவரும் என்றும் மனம் உருகவும், சிவகாம வல்லியார் நோக்கிய படியே யிருக்கவும், இறைவன் (பஞ்சகிருத்திய) தாண்டவம் செய்யும் தூய்மையை யுடைய சிதம்பரம் (என்னும் தலம்) இருக்கின்றது, (எ-று.) அன்று, ஏ—ஈற்றசை.

புலிக்கால் முனிவரை வியாக்கிரபாதர் என்பர் வடமொழிவாணர்: (வியாக்ரம்—புலி; பாதர்—கால்களையுடையவர்.) பூர்வ நாமம் பால முனிவர்; இவர், சிவ பூசையின் பொருட்டுக் கொய்யும் மலர்கள் பகற் காலத்தில் வண்டுகளால் எச்சில் அடைகின்றனவே என வருந்தி, சிவபிரானிடத்துப் புலிக்காலும் புலிக்கண்ணும் பெற்று, சிதம்பரத்தில் சூரியன் உதயம் ஆதற்கு முன்னே சென்று மலர் பறித்து வைத்துப் பூசை செய்து இறைவனது ஆனந்த தாண்டவத்தை யெப்போதும் தரிசிக்கும் பெருவாழ்வு பெற்றவர்.

பதஞ்சலி முனிவர்:-ஆதிசேடன், இறைவன் ஆனந்த நடம் காணும் ஆவல்கொண்டு, பதஞ்சலி முனிவராக அவதரித்து, சிவபிரான் அருளைனுக்கால் என்றும் அந்நடனப்பேற்றை அநுபவித்து வருவதாகக் கோயில்புராணம் இவர் வரலாறு கூறும்.

'மெய்யன்':—முனிவன்; "துறவர் சார்பில்லோர் நீத்தோர் தூய்த்தவர் முனைவர் மெய்யர்" என்பது நிகண்டு.

சிதம்பரம், சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள ஒரு திவ்விய க்ஷேத்திரம். சிவகாமவல்லியார் வாம பாகத்தில் நின்று திருநோக்குற்று மகிழவும், பிரமனாதி தேவர்கள் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலியோர் கண்டு பேரானந்தம் அடையவும், குருவாரத்தோடு கூடிய பூசத்தன்று சிவபிரான் பஞ்சகிருத்திய தாண்டவம் செய்தருளும் தகுதிவாய்ந்தது; அஃதன்றி, பிற தலங்களில் உள்ள கலைகள் அனைத்தும் அர்த்தயாமத்தில் வந்தொடுங்கிப் பின் செல்லா நிற்கும் தலம்.

துன்மதன், துச்சகன், துற்றெரிசனன் முதலிய அநேகர்க்கு முத்தியீந்தது.

வியாக்கிரபாதர் புதல்வரான உபமந்யு முனிவர் குழந்தையா யிருந்தபோது, அவர் குடிக்கப் பாற்கடலையே அருளியது; சைமினி முனிவர் மூன்றடி தம் கவியாகவும், ஈற்றடி வேதமாயுள்ள வேதபாதஸ்தவம் கூறித் துதிக்கப்பெற்றது.

சேந்தனார் தம் மனைமக்களுடன் விறகுவிற்று வரும் ஊதியத்தில், ஓர் சிவனடியார்க்குப் பகிர்ந்தூட்டி, எஞ்சியதைத் தன்குடும்பத்தாருடன் உண்ணும் நியமத்தை மேற்கொண்டொழுக, ஒருநாள் சிவபிரான், அவர்பால்

நள்ளிரவிற் சென்று, அவர் ஈந்த கூழ் உண்டு, அக்கூழைத் தம்திருமேனிமேல் மறுநாள் ஆலயத்தில் காட்டி, மூலையிலிருந்த அச்சேந்தனாரை முற்றத்தே விட்டு, அவரால் நிகழ்ந்த இவ் அற்புதத்தை ஐயுற்ற அடியவர்களுக்காக, அவர் பாடிய திருப்பல்லாண்டின் வழித்தாய் இரதம் தானே நடந்துவரும்படி அநுக்ரகித்தது.

மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்று, ஊமைப் பெண்ணைப் பேசுவித்து, சிவபிரான் அந்தண வடிவம் கொண்டுவந்து பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்று கேட்டபடி பாடி, அதை யிறைவன் தன் திருக்கரத்தால் எழுதும்படிச் செய்து, பின் ஆனிமாத மகநாளில் சிவத்தின் பேரொளிப்பிழம்பில் இரண்டறக் கலந்திடச் செய்தது.

திருநீலகண்ட நாயனாரையும் அவர் தேவியாரையும் பாலதீர்த்தத்தில் மூழ்கச் செய்து, இளமை நல்கி, தைத் திங்கள் வைசாக நாளில் முத்தி யீந்தது. திருநாளைப் போவார், திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி, காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர், உமாபதிசிவாசாரியார் முதலினோர்க்கு வாழ்வளித்தது. கோச்செங்கட் சோழர்க்கு வீடளித்தது.

களந்தை நகரில் மன்னர் மரபில் கார்த்திகை மாத உத்திரட்டாதி நாளில் அவதரித்த கூற்றுவநாயனார், சிவனடியார்களுக்குத் தொண்டுபூண்டு ஒழுகி, சிவபிரான் தன் திருவடியையே முடியாகச் சூட்டப்பெற்று, நாடாண்டு, ஆடித்திங்கள் திருவாதிரை நாளில் முத்திபெற்றது.

திரு இருக்கு வேளூரில் பங்குனி மாதத்துச் சதையத்தில், குறுநிலமன்னர் மரபில் அவதரித்த, கணம்புல்ல

நாயனர், புல்லறுத்து விற்று வரும் ஊதியத்தால் திரு விளக்குப் பணிசெய்து ஒழுகும் நாளில், ஓர்நாள் அப் புல் விலைப்படாது ஒழிய, அப்புல்லையே இறைவன் திரு முன் விளக்காக எரித்தும், எஞ்சிய காலத்தில் தம் தலையு ரோமத்தையே விரகாக எரித்தும், கார்த்திகைமாதக் கிருத்திகை நாளில் முத்திபெற்றது. சமயாசாரியர் நால் வருக்கும் தனித்தனி திருநடன தரிசனம் காட்டியது. இன்னபல, விரிக்கிற் பெருகும். (25)

வேறு.

காழியர்கோ னன்மணத்திற்
கண்ணுதலாற் கழன்மணந்து கவினுய்யு
மூழியினு முய்ந்தோங்கு மாநல்லூர்ப்
பெருமணமு மொளிரு நீடூர்
வாழுமுயர் வெண்காடு கோலக்காக்
கலிக்காழூர் வளரும் புன்கூர்
தாழுதலில் சாய்க்காடு கழிப்பாலை
முதற்பலவாந் தலங்க ளோங்கும்.

(பொ-ரை.) சீகாழிப் பதியில் திருவவதரித்த திரு ஞான சம்பந்த மூர்த்திசுவாமிகள் (தம்) சிறந்த திருமணத் தில், நெற்றிக் கண்ணுடைய சிவபிரான் திருவடிகளைக் (கலந்து) அழகுடன் உய்ந்த பிரளயகாலத்திலும் (கெடுத லின்றி) உய்ந்து ஓங்கும் திருநல்லூர்ப் பெருமணமும், விளங்கும் நீடூரும், (நிலைபெற்று) வாழும் உயர்ந்த திரு வெண்காடும், திருக்கோலக்காவும், திருக்கலிக்காழூரும், வளர்ச்சியுறும் திருப்புன்கூரும், தாழ்வடைதல் இல்லாத திருச்சாய்க்காடும், திருக்கழிப்பாலையும் முதலாகச் சொல் லப்படும் தலங்கள் (பல, அச்சோழ நாட்டில்) ஓங்கி யுள்ளது, (எ-று).

திருநல்லூர்ப்பெருமணம்:—சீகாழியில் அந்தணர் குலத்தில் சிவபாத இருதயர்க்கும் பகவதியார்க்கும் புதல்வராகத் திருவவதரித்து, மூன்றாவது வயதில் இறைவியின் அருளால் ஞானப்பாலுண்டு, அன்றுதொட்டு வேதத்தின் உண்மைப் பொருள்கள் யாவற்றையும் திருவாய்மலர்ந் தருளும்பொருட்டு அதியற்புதமான தேவாரங்களைப் பல தலங்களை யடைந்து பாடிவந்த திருஞானசம்பந்தசுவாமிகள், பல அன்பர்களின் விருப்பத்தின்படி, நம்பியாண்டார் நம்பிகளின் திருமகளை திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணம் செய்ய இசைந்து, திருநீலநக்கர் சடங்கு செய்யப் பாணிக்கிரகணம் செய்தருளி, அக்கினியை வலஞ் செய்யவேண்டி அக்கினியாவசர் சிவபெருமானே யெனத் துணிந்து, ஆலயத்திற் கெழுந்தருளி, அத்திருக்கோயிலே பேரொளியா யிருப்பவும், அதனுள் ஒருவாயில் காட்டவும் கண்டு, அங்கு நின்று, நமச்சிவாயப் பதிகம்பாடி, மணங்காண வந்த மக்கள் அனைவருடனும் தேவியோடு அவ்வொளியில் கலந்த தலம். இத்தலம், ஆச்சாபுரம் எனவும் வழங்கும்; இத்தலத்து இறைவன் திருநாமம்—சிவலோகத் தியாகேச்சுரர், தேவி—நங்கையுமைநாயகியம்மை, இங்கு, கொள்ளிடநதி தீர்த்தம் உளது.

நீடூர்:—துவட்டா சுரனைக் கொன்ற பழிநீங்க இந்திரன் வழிபட்டதலம்; முனையடுவார் நாயனார் புரட்டாசி மாத மகநாளில் திருவவதரித்துத் தம் பொருள் அனைத்தும் சிவத்திருப்பணிக்கும், சிவனடியார் திருப்பணிக்கும் செலவழித்ததுமன்றி, போர்முனையில் தோற்றவர்கள் வந்து கூலிபேசினாலும், அவர்களுக்காக இணங்கிச் சென்று, அவர்கள்தம் எதிரியைத் தோற்கடித்து, அதன்மூலம் பொருளீட்டி, அடியார்களுக்குத் திருவமுது

செய்து உவப்பித்து, இன்னும்பல அரிய திருப்பணிகள் செய்து, பங்குனிமாதப் பூசநாளில் சிவபதம் பெற்ற தலம்: இத்தலத்து இறைவன் திருநாமம்—அருட்சோமநாதேச்சுரர், தேவி—வேயுறு தோளியம்மை. இங்கு, சிவதீர்த்தம் உளது.

திருவெண்காடு:— தாருகாசுரனை எதிர்த்துக் கொம்புகளை யிழந்த வெள்ளையானை பூசித்ததும், சாபத்தின் காரணத்தால் பிறந்த பசுவொன்று அடியார்களைத் துரத்திச்செல்ல, இறைவன் திரிசூலத்தால் அதைக் குத்தி சந்நிதியில் இன்றும் யாவரும் காணுமாறு வைத்ததும், கோவில் திருக்காப்பிட்டபின், மறந்து கோயிலின் உள்ளே விட்டிருந்த பிள்ளையை எடுக்க நினைத்த அருச்சகர், கதவின் திருக்காப்பை நீக்க, அப்பிள்ளை கொன்றை மரமாகி யிருக்கக் கண்டதுமான தலம். இத்தலத்து இறைவன் திருநாமம், சுவேதாரணியேச்சுரர்; தேவி—பிரமவித்தியா நாயகியம்மை. இங்கு சுவேத தீர்த்தம், திருக்குள தீர்த்தம் முதலியன வுள்ளன.

திருக்கோலக்கா:—கண்ணுவர், அகத்தியர் முதலினோர் வழிபட்டதும், திருஞான சம்பந்த சுவாமிகளது காதான தேவாரத்தைக் கேட்டு மகிழ்வெய்திய இறைவன், பொற்றிருத்தாளத்தைக் காத்திற் கொடுக்க, அத்தாளத்திற்கு இறைவி ஓசையீந்ததுமான தலம்; இத்தலம், திருத்தாளமுடையார் கோவில் எனவழங்குகிறது; இத்தல இறைவன் திருநாமம்—சப்தபுரேச்சுரர், தேவி—ஓசைகொடுத்த நாயகியம்மை. இங்கு, சூரிய தீர்த்தம், ஆகாச தீர்த்தம் என இருதீர்த்தம் உள்ளன.

திருக்கலிக்காமூர்:—பராசர் வழிபட்டதலம்; இது, அன்னப்பன் பேட்டையென வழங்குகிறது: இத்தல

இறைவன் திருநாமம்—சுந்தரேச்சுரர், இறைவி—அழகு வனமுலையம்மை; இங்கு, சிவ தீர்த்தம், அம்புலி தீர்த்தம் என இருதீர்த்தமுள்ளன.

திருப்புன்கூர்:—ஆதனூரில் அவதரித்துத் தரிசிக்க வந்த நந்தனார்முன் குறுக்கிட்டிருந்த நந்திதேவரை விலகச் செய்து தரிசனம் ஈந்ததும்,

சோழர் பெருமானிடத்துச் சேனாதிபதியா யிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார், பரவையிடத்துச் சிவபிரானை சுந்தரமூர்த்தி சுவாமிகள் தூதனுப்பி யிருந்ததை அறிந்து அவரிடத்துச் சினங்கொண்டிருக்க, இருவரையும் இணங்கவைக்கும் திருவருள் சூழ்ச்சியால், நாயனார்க்கு சூலைநோய் உண்டாக, அஃதறிந்த சுந்தரமூர்த்திகள் அந்நோய் நீக்க வருதலை யறிந்து, அவர் முகத்தில் விழிக்க மனமின்றி வாள் எடுத்து வயிற்றைக் கீண்டு இறந்தனர் நாயனார். நாயனார் மனைவியார் அதை மறைக்கப் பார்த்தும், வந்த சுந்தர மூர்த்திகள் நடந்த நிகழ்ச்சி யறிந்து, அவரோடு யானும் இறப்பேன் என வாளெடுக்க, இறைவன் பிரசன்னமாகி சுந்தர மூர்த்திகளைத் தடுத்த படி இறந்தாரை நோக்க, அவரும் எழுந்தார்; இருவரையும் இணங்க வைத்துப் பரமன் திருவ[illegible]ான். இத்துணைச் சிவப்பிரீதியை யுடைய [illegible] நாள் வழிபடப்பெற்று, ஆனி[illegible] ரேவதி நாளில் அவர்க்கு முத்தி யீந்ததுமானதலம். இத்தலத்து இறைவன் திருநாமம்—சிவலோகநாதர், சௌந்தரேச்சுரர்; தேவி—சொக்க நாயகியம்மை, பெரிய நாயகியம்மை. இங்கு, கணபதிகண்ட தீர்த்தம், இடபதீர்த்தம், சிவ கங்கை என மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன.

திருச்சாய்க்காடு:—உபமன்யு முனிவர் பூசித்ததும் உலகியலைப் பகைத்து தெய்வ இயலை விரும்பி, அடியவர் கோலம் தாங்கிவந்த இறைவர் விரும்பிய வண்ணம் தம் மனைவியை அளித்து, அதற்காக எதிர்த்த உறவினரை வாளினால் சாய்த்துத் திருவருளுக்கு இலக்கான இயற் பகை நாயனார்க்கும், அவர் மனைவியார்க்கும் முத்தி யீந்ததுமான தலம். இங்குள்ள இறைவன் திருநாமம்—சாயாவனேச்சுரர், தேவி—குயிலினுநன்மொழியம்மை, இங்கு, சங்கமுக தீர்த்தம், காவிரிநதி தீர்த்தம் என இரு தீர்த்தங்களுள்ளன. இத்தலத்திற்குச் சாயாவனம் என மற்றொரு பெயருமுளது.

திருக்கழிப்பாலை:—வான்மீகர் வழிபட்டதலம். இறைவன் திருநாமம்—பால்வண்ணநாதேச்சுரர், தேவி—பொற்பதவேத நாயகியம்மை. இங்கு, வான்மீக தீர்த்த மும், கொள்ளிடமும் உள்ளன. இத்தலங்களின் பெரு மையை விரிக்கிற் பெருகுமென எண்ணி ஒராற்றான் சுருக் கிக் கூறினும். முதற்பலவாம் தலங்கள் என்றது, சோழ நாட்டில் உள்ள எண்ணிறந்த தலங்களையும் என்க. (26)

அத்தலங்கட் பலவினுளு மருந்தலவா
　　ணைக்காவை யடைந்தோர்க் கெல்லா
முத்தமமாம் பத்திவருஞ் சித்தியுறா
　　முயர்கதியு மொருங்கு கூட்டும்
வித்தகமா மஃதுணர்ந்த வையடிகள்
　　காடவர்கோன் றலத்தின் வெண்பாப்
புத்தகமார் தரப்பாடும் புனிதமுள
　　ரும்பரிசு புகல வாமோ.

(போ-ரை.) (முற்குறித்த) அச்சிவதலங்கள் பலவற் றினுள்ளும் அருமைத் தலமாகிய திருவானைக்காவை

அடைந்தவர்கள் யாவருக்கும், (சென்றவுடன் பிறதலங்களில் வாராத) உத்தமமான பக்தி உண்டாகும்; (அட்ட) சித்திகளும் (கை) கூடும்: (இம்மையில் பேறனைத்தும் பெற்று, பின் மறுமையில் சுவர்க்காதி யின்பங்களை அனுபவித்து, அதன்பின் இம்மை மறுமையிரண்டினும்) உயர்வுடைத்தான மோட்சகதியும் ஏககாலத்தில் உண்டாக்கும் ஞானஸ்தானமாம்; ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அப்பெருமையை அறிந்தே, புதிய உள்ளமாக நிறைவு பெறும்படி, தலத்தின் வெண்பா பாடிய தூய்மையுள்ளவரான தன்மையை (அளவிட்டுச்) சொல்லுதற்கு இயலுமோ? (எ-று).

'ஐயடிகள் காடவர் கோன் புத்து அகம் ஆர்தர தலத்தின் வெண்பா பாடும் புனிதம் உளன் ஆம் பரிசு' என இயைக்க. சித்தியுறும் என்பதற்கு, (இம்மை மறுமையிரண்டினும் நினைத்தது) சித்திக்கும் எனக் கோடலும் ஒன்று. பழைய உள்ளம் மூலமலத்தால் மூடப்பெற்றது; புதிய உள்ளம், அம் மூலமல நீக்கம் பெற்றது என்பர் ஆன்றோராகலின், 'புத்தகம்' என்றார் போலும். (27)

உறையூரி லுறைசோழன் காவிரியின்
    மணியோடு முகப்பி னுடை
திறையூரு மவன்கிழத்தி முத்தார
    வொளிநோக்கி நிமிர்ந்து காதற்
பிறையூருஞ் சடையார்க்கீ தாகுமெனக்
    கருதியதும் புனலின் வீழக்
கறையூருங் களமதனிற் கண்ணுதலின்
    புறவேற்றுக் கவிழு மாலோ.

(பொ-ரை.) உறையூரில் (அரசியல் நடத்திக் கொண்டு) இருந்த சோழமன்னன், (ஒருநாள்,) தன் மனை

வியுடன் மகிழ்ச்சியோடு காவிரிநதியில் நீர் விளையாட்டுச் செய்துகொண்டு இருக்க, கற்பு நிறைந்த இல்லாளின் முத்துமாலையின் ஒளியை அம்மன்னன் (அப்போது ஊன்றிப்) பார்த்து, (நம் தேவி அணிவதைக் காட்டிலும் சிறந்த) இம்முத்துமாலை, பிறைச்சந்திரன் உலவும் சடாமகுடத்தையுடைய சம்புகேச்சுரற்கு (ச் சூட்டுதற்கு) ஆகும் என்று நினைத்ததும், (அம்முத்துமாலை) நீரில் (நழுவி) விழ, (அது கண்டு மன்னன் வருந்துவதை) நெற்றிக்கண்ணுடைய சிவபிரான் (பார்த்து, அம்மன்னவன்) இன்பம் அடையும் வண்ணம், விடம் அமைந்த தம் திருநீல கண்டத்தில் (அம்மாலையைத்) தாங்கி அழகுடன் விளங்கினான்; (இத்தகைய அருமையான திருவிளையாடல், திருவானைக்காவில் ஒருக்கால் நிகழ்ந்தது) (எ-று).

சோழமன்னன் ஒருநாள் தன் தேவியுடன் காவிரியில் நீர் விளையாட்டுச் செய்துகொண்டிருக்கையில், தேவியின் முத்தாரம் நீரின் அலை மோதும் போதெல்லாம் மிதந்து ஒளிசெய்தலைப் பார்த்து, ஆ! இம்மாலையின் ஒளி எத்துணை அழகாய் உளது. விரைந்து கரையேறி இம்மாலையை அமலனுக்குச் சமர்ப்பிப்பேன் என்று நீரினின்றும் விரைந்தெழ, அதே காலத்தில் குறிப்பறிந்து தேவியும் எழ, தெய்வகதியாய்க் கழுத்திலிருந்த மாலை நழுவி நீரில் விழ, அதுகண்ட மன்னன், அந்தோ! அந்தோ!! சம்புகேச்சுரற்குச் சூட்ட எண்ணிய மாலை நீரின் வீழ்ந்து மறைவதேயோ என வருந்தும் அளவில், அன்பராம் மன்னர் பிரான் அழுகைகண்டு சகியாத அமலன், நீரில் வீழ்ந்த மாலையைக் கண்டத்தில் அணிந்த கோலத்தோடு மன்னற்குக் காட்சியளித்த வரலாற்றைத் தலபுராணத்திற் காண்க. (28)

சித்தவுருக் கொண்டெமது சிவபெருமான்
றிருநீற்றைக் கூலி யாக
மெத்தவலித் தூரமான வுயர்மதிலை
யெழுப்புவித்து மேன்மை யாருஞ்
சுத்தமதி நீரிட்டான் றிருமதிலென்
றொருநாமஞ் சூட்டு வித்த
வுத்தமா மிப்பதியி னற்புதத்தை
யொருநாவா லுரைக்க வாமோ.

(பொ-ரை.) எம் இறைவன் சித்த வேடம் தாங்கி, விபூதியையே மிகுதியான கூலியாகத் தந்து, வலிமை பொருந்திய உயர்ந்த மதிலைக் கட்டுவித்து, மேன்மை நிறைந்த தூய்மையான மதிக்கத் தக்க நீரிட்டான் திருமதில் என்று (அம்மதிலுக்கு) ஒப்பற்ற பெயரை வைத்த உத்தமமான இத்தலத்தின் மகிமையை, ஒரு நாவால் கூறுதற்கு முடியுமோ, (எ-று).

திருக்கோயில் மதிலொன்று கட்டாது குறைவுபட்டு இருக்க, சம்புகேச்சுரர் சித்தவடிவு தாங்கி விபூதியைக் கூலியாகத் தந்து அம்மதிலை எழுப்பி, அதற்கு நீரிட்டான் மதில் எனப் பெயர்வைத்த வரலாற்றைத் தலபுராணம் கூறும். சுத்தமதி என்பதற்கு—தூய அறிவின் திறத்தால் ஆன எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். மதிலைக் கட்டுதற்கு விபூதியைக் கூலியாகப் பெற்ற மக்கள் இருந்த அக்காலத்தின் சமயப் பற்று நினைக்கத் தக்கது. சித்தர் ஈந்த விபூதியின் மத்தியில் அவ்வக் கூலியாட்களின் உழைப்புக்குத் தக்க பொன் இருந்ததாகவும் இச் சரிதையைச் சிறிது மாற்றிக் கூறிருருமுளர். (29)

அன்புருவா மிபமொன்று வழிபாட்டி
னருளுற்ற வமைதி தன்னு

லின்புருவா மப்பதியு மானைக்கா
வெனும்பெயர்த்தா யமைந்த தென்ப
மின்புரையுஞ் சடிலமுடிப் பெருமானை
மிகவேத்துஞ் சிலம்பி மேன்மை
யென்புருக வதுகண்டு நற்கதியி
னதையுய்க்கு மெழில தம்மா.

(பொ-ரை.) அன்பின் வடிவமான யானையொன்று வழிபட்டுத் திருவருள் பெற்ற காரணத்தால், இன்பத்தின் வடிவமான அத்தலம், திருவானைக்கா என்னும் பெயர்பெற்றது என்று (கலைவல்லோர்) கூறுவர்; மின்னலை ஒத்த சடாமகுடத்தையுடைய சம்புகேச்சுரரை, மேன்மை (வாய்ந்த) சிலம்பி (ஒன்று, அன்பால்) என்பும் உருகும்படி மிகத் துதிப்பதைப் பார்த்து, (அஃறிணையான) அச்சிலம்பியைச் சிறந்த வீட்டு நெறியில் சேர்ப்பிக்கும் அழகுடையது அத்தலம், (எ-று).

நல்லூழ்ப் பாங்கால் ஓர் சிலம்பியும், நான்கு கொம்புகளை யுடைய வெள்ளையானை யொன்றும் சம்புகேச்சுரரைப் பூசிக்குங் காலத்து, ஒன்றன் பூசைக்கு மற்றொன்று தடைசெய்வதாக இரண்டும் நினைத்துப் பகைமைகொண்டு, ஒன்றினை யொன்று எதிர்த்து இறக்க, இறைவன் அவ்விரண்டின் அன்பினை யோர்ந்து, இரண்டினுக்கும் தேவ உருவம் தந்து, அவற்றுள் யானையை நோக்கி, நீ நிட்காமியமாக நம்மை வழிபட்டமையின், இத்தலத்திற்கு ஆனைக்கா எனும் பேர் வழங்குக; அஃதன்றியும், நீயும் சிவகண நாதனாய் வாழக் கடவை யென்று அனுக்ரகித்தருளியும், சிலம்பியை நோக்கி, நீ பூசிக்குங்கால் ராத்திரிதிகளால் பூசிக்க விரும்பினை யாகலின், அடுத்த பிறப்பில் கோச்செங்கட் சோழ மன்னனாகத் திருவவதரித்து,

பல திருப்பணிகளைச் செய்து, பின் முத்தியடைக எனவும் அநுக்ரகித்த வரலாறுகளைத் தலபுராணத்திற் காண்க. இதனை, "செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன், அங்கட் கருணை பெரிதா யவனே, வெங்கண் விடையாயெம் வெண்ணாவலுளா, யங்கத்தயர்வாயினளா யிழையே" எனவும், "சுறவக் கொடிகொண் டவனீ றதுவாய், உறநெற் றிவிழித் தவெழுத் தமனே, விறன்மிக் ககரிக் கருள்செய் தவனே, அறமிக் கதுவென் னுமெனு யிழையே" எனவும் வரும் ஆளுடைய பிள்ளையார் தமிழ்மறையானும் அறிக. (60)

மாகயிலை மயேந்திரமு மாரூரு
மித்தலமு மன்று காழி
யோகையுற வவதரித்தா ரொன்றென்னு
மாமறையை யோத மேவுந்
தாகமுளார் பிறவியெனும் பெருங்கோடை
தணிந்தடியர் சூழும் வெள்ளி
நாகமதி னுறையமல னருளார்ந்த
தாணிழலி னண்ணி வாழ்வார்.

(பொ-ரை.) சீர்பெற்ற சீகாழிப்பதி மகிழ்ச்சியுறத் திருவவதரித்த திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருக்கயிலையும், திருமயேந்திரப்பள்ளியும், திருவாரூரும், இத்திருவானைக்காவும் ஒன்றெனப் பாடிய சிறந்த (பதிகமான) தமிழ்மறையை ஓதுதற்கு விரும்பும் வேட்கையுடையவர்கள், பிறப்பென்னும் பெரிய கோடைவெயில் தணிந்து, அடியவர்கள் சூழ்ந்துள்ள திருக்கயிலை மலையின்கண் எழுந்தருளியுள்ள மலரகிதனான சிவபிரான் கருணை நிறைந்த திருவடி நீழலில் கலந்து, (பேரின்ப) வாழ்வைப் பெறுவார்கள், (எ-று).

திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாஞ்சிக்காத் தலத்தை யடைந்தபோது, அத்தலத்து இறைவன் திருக் கோலம், திருக்கயிலை, திருமயேந்திரப்பள்ளி, திருவாரூர் முதலான தலங்களிற் கண்ட கோலம் போலவே யிருத் தலைக் கண்டு உள்ளம் உருகி, "மண்ணது வுண்டரி மல ரோன் காணு, வெண்ணுவல் விரும்பு மயேந்திரருங், கண்ணது வோங்கியு கயிலை யாரு, மன்னுலா ரூராதி யானைக் காவே" என்பது முதலாகப் பதிகம் பாடினர். இப்பதிகத்தை யெப்போதும் விருப்போடு பாடுவார், இறைவன் திருவடி நீழலை யடைந்து இனிது வாழ்வார் என்று, காழியர்கோன் இப்பதிகம் பாடிப் பெற்ற இன் பம் பேரின்பம் என்பர் சேக்கிழார்; இதனை, "நாரண ஞன்முகன் காணு உண்மை வெண்ணுவல் உண்மை மயேந் திரமும், சிரணி நீடு திருக்கயிலை செல்வத் திருவாரூர் மேய பண்பும், ஆரணத் துட்பொரு ளாயினுரை யானைக் காவின்கட் புகழ்ந்து பாடி, யேரணியும் பொழில் சூழ்ந்த சண்பை யேந்தலார் எல்லையில் இன்பம் உற்ருர்" என வரும் பெரியபுராணத்திற் காண்க. (31)

திருத்தலச் சருக்கம் முற்றிற்று.

---

உ

# சம்புமா முனிவர் உற்பவச் சருக்கம்.

கண்ணகன் குடுமி மாடக் கடிபொழி லானைக் காவின்
றண்ணலம் பொழிலை யாவ ரளப்பவர் தகவி னோர்ந்தா
ரெண்ணலத் தலத்தின் ஞெள்ள ளறமுனி சம்பு வெம்மா
னுன்னலந் துயர்ந்தார் போற்று முற்பவ வுண்மை சொல்வாம்

(பொ-ரை.) இடமகன்ற சிகரங்களை யுடைய மாளிகைகள் நிறைந்த காவல் அமைந்த திருவானைக்கா என்னும் தலத்தின் குளிர்ந்த நலத்தையும், பெருமையையும் அளவிட்டுக் கூறுபவர் எவர்? (ஒருவருமில்லை யென்றபடி.) நல்லொழுக்கம் நிறைந்த மேலோர்கள் (தங்கள் மனத்தில் இருத்தித்) தியானிக்கும் அத்தலத்தில், மனத்தூய்மையால் மேம்பாடு பெற்ற பெரியோர்கள் துதிக்கும் மேன்மை பொருந்திய எமது பெருந்தகையான சம்பு முனிவரது மெய்ம்மையான திருவவதாரத்தைக் கூறுகின்றோம், (முனிவர்களே கேளுங்கள்) (எ-று).

திருவானைக்கா வென்னும் அத்தலத்தின் மேன்மையை ஒரு சிறிது கூறினேம்; இனிமேல், அத்தலத்தில் சம்புமா முனிவர் திருவவதரித்த வரலாற்றையும் உரைக்கின்றேம் என்று சூதபுராணிகர் சவுனகா தியர்களுக்குக்கூறுகின்றார் என்க. கண்-இடத்தைக் காட்டும் உருபு. மாடம்-மேல்மாளிகைகளையுடைய வீடுகள். கடி—காவல்; "கடிமணம் விரைவு கூர்மை காலம்பேய் விளக்கம் காப்பு" என்பது டகரவேதுகை.

முதலடியிற் போந்த பொழில், தலம் எனும் பொருளின் வருவதை "மண்டலம் தலம் பூ பொழில் வசுந்தரையுடன் பார்" எனவும், இரண்டாவதடியில் வந்த பொழில், பெருமையெனும் பொருளில் வருவதை, "பணை பொழில் பகடு மூரி...............பெருமை" எனவும் வரும் நிகண்டையோர்க. ஞெள்ளல்—மேன்மை, "ஞெள்ளலே...........மேன்மை" என்பது ஞகரவெதுகை. (1)

காயநீற் றொளியன் மீயாங் கருணைநீ ரான கண்ணன்
நேயமுஞ் சிவன்பாற் கொண்டு நெகிழ்தர நேரு நெஞ்சன்
மாயமு மலமு நீத்த மதியினன் பிரம வித்து
நாயக னருளுஞ் செல்வன் சுமித்திர நற்பே ரானே.

(பொ-ரை.) பேரொளி வீசும் திருநீற்றினை யணிந்த திருமேனியை யுடையவரும், மேலான கருணையின் நீர்மை வாய்ந்த கண்களை யுடையவரும், சிவபிரானிடத்துப் பேரன்பு கொண்டு நெகிழப் பொருந்திய மனமுடையவரும், (ஆணவம் கன்மம் மாயையெனும்) மும்மலங்களும் கழியத் துறந்த அறிவினை யுடையவருமான பிரமவித்து (எனும் பெயருடைய) முனிவர் அருளிய புதல்வர், சுமித்திரர் எனும் சிறந்த திருநாமத்தை யுடையவராவர்.

மும்மலமும் மாய நீத்த மதியினன் என இயைக்க. பிரமவித்து முனிவரை பிரமனது புதல்வர் என்பர் ஆராய்ச்சியாளர். பிரமவித்தின் அருந்தவப் புதல்வர் சுமித்திரர் என்றபடி. சுமித்திரரின் தன்மையை அடுத்த செய்யுள் கூறும். சுமித்திரர் எனும் வடசொற் பெயர் சிறந்த நட்புடையவர் எனப்பொருள் தரும் என்க. (2)

நேரிய வுவவின் மேனி தழைத்தவன் னீறு பூத்துப்
பாரிய பவத்தை மாற்றும் பரிதியின் பண்பு மிக்கான்

சீரிய மறைக ளைங்குஞ் செழுங்கலை யாவு மோர்ந்தான்
வேரிய குழற்சு சீலை விழைதரு காந்த னானான்.

(பொ-ரை.) அச்சுமித்திரர் நேர்மையை யுடைய தவத்தில் தழைத்த திருமேனியை யுடையவர்; திருநீற்றினை விசேடமாக அணிந்து, அதிகரித்த பிறவித்துன்பத்தை நீக்கும் (ஞான) சூரியனைப் போல் குணத்தில் சிறந்தவர்; சிறப்பமைந்த நான்கு வேதங்களையும், செழுமை யமைந்த கலைகள் (முதலாகச் சொல்லப்படும்) யாவற்றையும் உணர்ந்தவர்: மணம் நிறைந்த கூந்தலை யுடைய சுசீலை யெனும் பெயருடைய அம்மையார் விரும்பும் கணவரும் ஆனவர், (எ-று).

தவத்தின் நிலை பூரணமாகும் வரை உடல் இளைக்கும் எனவும், முற்றுப்பெற்றபின் பொன்னெனப் பொலிவுறும் எனவும் கூறுவர் ஆன்றோர். இச்செய்யுளால் சுமித்திரர் மேன்மை கூறப்பட்டது. 'உவவு'—தவம்; "தவமென்ப விரதம் நோன்பாம் உவவோடு தவசு மாகும்" என்பது நிகண்டு. 'யாவும்' என்ற சொற்போக்கில், ஆகமம் புராணம் முதலியனவுங் கொள்க. 'சுசீலை'யென்ற பெயர்க்கு, மிகுந்த ஒழுக்கத்தை யுடையவள் என்பது பொருள். வேரி—ஈண்டு மணம் எனும் பொருளது; மலரணியுங் காரணத்தால், அம்மலரிலுள்ள தேன் நிறைந்த கூந்தல் எனினும் பொருந்தும்.

மாசிலா மரபின் வந்து மகமுறை மீக்கூர்ந் தூட்டு
நேசமா ருளத்தாட் காந்த னினைவழிந் தண்மு நீராள்
தேசுறு சரத முள்ளா ளரிப்பினைத் தேய்த்த தெய்வப்
பேசுதின் னிறைபி னோங்கிப்பெருகிய பெண்மை யானாள்

(பொ-ரை.) (அச்சுமித்திர முனிவரின் மனையாளான சுசீலையோ வெனில்,) குற்றமில்லாத வமிசத்தில் உதித்து,

மிகுந்த பரிவுடன் விருந்தினரை உண்பிக்கும் அன்பு நிறைந்த மனம் பெற்றவளும், நாயகனது உள்ளக்குறிப்பு அறிந்து (அதற்கேற்றவாறே) நடக்கும் ஒழுக்கத்தை யுடையவளும், ஒளிபொருந்திய மெய்ம்மையை யுடைய வளும், குற்றங்களை நீக்கிய (யாவராலும் சிறப்பித்துச்) சொல்லப்படும் திண்மை வாய்ந்த தெய்வக் கற்பினால் உயர்ந்து, அதிகரித்த (அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனும்) பெண்மைக் குணங்களை யுடையவளுமாவாள். ()

'அரிப்பினை தேய்த்த பேசு திண் தெய்வநிறை' என இயைக்க. மகமுறை—விருந்து. காந்தன்—கணவன். அண்முதல்—ஒழுகுதல். சரதம்—மெய்ம்மை; "நிச்சயம் சரதம் மெய்ப்பேர்" என்பது நிகண்டு. அரிப்பு—குற்றம்; "அரில் கரில் பழி அரிப்பு" என்பதும் நிகண்டு. (4)

இத்தகை மனையோ டுய்யு மனையறம் பேணி யின்ப
மெத்திய வறங்க ளாற்றி விழைதரு மைந்த ரின்றி
சித்தம துடைந்து தெய்வ நிறையுறு தைய லோடு
நித்தனா ருறையு மானைக் காவினி னின்று நோற்பான்.

(பொ-ரை.) (சுமித்திரன்) இத்துணைச் சிறப்பு வாய்ந்த இல்லாளோடு உய்யத் தகுந்த இல்லறத்தை நடத்தி, இன்பம் நிறைந்த (பலப்பல) தருமங்களைச் செய்தும், விரும்பத் தக்க புத்திரப் பேறு வாய்க்காமையினால் மனம் நைந்தவராய், தெய்வத் தன்மை வாய்ந்த கற்பினை யுடைய தேவியுடன் இறைவன் எழுந்தருளிய திருவானைக் காவில் இருந்தபடியே, (சிவத்தைத் தியானிக்கும்) விரதம் கொள்ளத் தொடங்கினவராய், (எ-று).

இச்செய்யுள் குளகம்; ஏழாம் செய்யுளில் 'மதிக் குறும் தவத்தி னுற்றான்' என்பது கொண்டு முடியும். 'தெய்வ நிறையுறு தையல்' என்றது, ஜம்புகேச்சுரரின்

இடப் பாகத்தின்கண் உறையும் அகிலாண்ட நாயகி அம்மையை. 'கித்தனு ருறையு மானைக் காவினில் தெய்வ நிறையுறுதையலோடு நின்று நோற்பான்' என இயைத்துப் பொருள் கொள்வதும் பொருந்தும்; இங்ஙனம் கொள்ளுமிடத்து, 'நிறையுறு தையல்'-சுசிலை யென்க. (5)

தூயதாஞ் சிவப்பேர் கங்கை குடைந்தனன் றெய்வப் பூதி
நேயமோ டணிந்து கண்டி நிலவுறப் பூண்டு நேர்மை
யாயமன் னமலன் கோயி லடைந்தனன் சூழ்ந்து திங்கள்
வேய்ந்தவ னடியை யேத்தி வணங்கினன் வெம்மை தீர்ப்பான்.

(பொ-ரை.) தூய்மையான பேரை யுடைய சிவகங்கையில் ஸ்நானம் செய்து, தெய்வத் தன்மை பொருந்திய திருநீற்றை அன்போடு அணிந்து, உருத்திராக்க மாலையை விளங்கத் தரித்து, (அகத்தினும் புறத்தினும்) தூயராய், நிலைபெற்ற மலரகிதரான சம்புகேச்சுரரின் திருகோயிலை அடைந்து, வலம் வந்து, (புத்திரப் பேறில்லையே எனும் துன்) வெதும்புதலை நீக்க நினைத்தவராய், சந்திரனை அணிந்த அப்பரமன் திருவடிகளை வணங்கித் துதித்தார்.

குடைதல்—முழுகுதல். சந்ததி வளர மைந்தனில்லாக் குறையால் வெதும்பிய உள்ளத்தரான சுமித்திரர், தண்மை நிறைந்த அமுதங் கொழிக்குந் திங்கள் அணிந்த தற்பரனை வணங்கித் துதித்து, தன் துயரைப் போக்க முயல்கின்றார் என்க. (6)

மெய்ப்படு மறைசு மித்ரன் வளனுறு கோயிற் பாங்க
ரொப்பறு நெறியி னாக மத்துள வொண்மை யுன்னி
துப்பெனச் சிவந்த வாயா ளொடுமருந் தூயர் போற்று
மைப்பெருங் களனை யேத்தி மதிக்குறு நோன்பி னுற்றான்.

(பொ-ரை.) உண்மை பொருந்திய வேத(ங்களை ஓதி உணர்ந்த) சுமித்திரர், (எல்லா) வளப்பங்களையுமுடைய

(அந்) திருக்கோயிலின் பக்கத்தில், (வழிபாடு செய்யும்) ஒப்பற்ற மார்க்கங்களைக்கூறுகின்ற சிவாகமங்களில் உள்ள நலனைச் சிந்தித்து, (அச்சிவாகமங்களிற் கூறியபடி,) பவளம் போலும் சிவந்த வாயினை யுடைய சுசீலையுடன், அருமையான தூய்மைவாய்ந்த பெரியோர்கள் துதிக்கும் திருநீலகண்டப் பெருமானை வணங்கி, (தேவர்களும் முனிவரரும் பிறரும்) மதிக்கத் தக்க தவஞ்செய்யத் தொடங்கினர், (எ-று). நோன்பு—தவம். (7)

ஆதவன் றுகின மாலி பவனமு மச்சா றுமற்
பாதவ மெனவு மாறு பருவமும் பக்க மேய
பேதைபங் குடைய வெம்மான் பொலங்கழ லுன்னி மேலாம்
மாதவம் புரிந்தா னன்னுன் மதலையை வேண்டி யம்மா.

(பொ-ரை.) அச்சுமித்திரமா முனிவர் புத்திரனை(ப் பெற) விரும்பி, வெயில் பனி மழை காற்று ஆகிய இவைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல், மரம்போல் (நிலைநின்று,) ஆறு பருவங்களினும், அன்பு பொருந்திய என்றும் இளமை மாருதவளான அகிலாண்ட நாயகி அம்மையை இடப்பாகத்திலுடைய எமது இறைவரான சம்புகேச்சுரரின் பொன்னுலான வீரக்கழலணிந்த திருவடிகளைத் தியானித்து, பெருந்தவம் செய்தார், (எ-று).

பருவம் எனினும் இருதுவெனினும் ஒரே பொருளாம்; இரண்டு மாதம் கொண்ட காலம்: அது—இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறும்; அவைவடமொழியில், முறையே வசந்தம், க்ரீஷ்மம், வர்ஷா, சரத், ஹேமந்தம், சிசிரம் எனப்படும். சித்திரை முதல் இரண்டிரண்டு மாதம் ஒவ்வோர் பருவம் என்று உணர்க. பன்னிரண்டு மாதகாலம் தவஞ்செய்தனனென்றும், அந்நாட்களில் வெயிற்காலத்து வெயிற்

கும், பனிக்காலத்துப் பனிக்கும், மழைக்காலத்து மழைக்கும், காற்றுக் காலத்துக் காற்றுக்கும் அஞ்சாது நின்றனன் என்றும் அறிக.

ஆதபம்—நன்றாகத் தபிப்பது எனப் பொருள்படும் வடசொல். பாதபம்—அடியினால் (நீரைக்) குடிப்பது எனப் பொருள்படும் வடசொல்; அது, மரம் என்க.

அச்சு—அஞ்சு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். பாதவமெனவும், என—உவமவுருபு.

பேதைபங்குடைய எம்மான் என்றதில் அடங்கிய கதை:-

முன்னொரு காலத்திற் கயிலையங் கிரியில் சிவபெருமானும் தேவியும் ஓர் ஆதனத்தில் நெருக்கமாக வீற்றிருந்தபோது, பிருங்கியெனும் பெயருடைய ஒரு முனிவர் சிவபிரானை மாத்திரம் வலம்வர விழைந்து, ஒரு வண்டு வடிவம் எடுத்து அவ்வாதனத்தை இடையிலே துளைத்துக் கொண்டு அதன் வழியாக நுழைந்து சென்று, இறைவியை விட்டு இறைவனை மாத்திரம் பிரதக்ஷிணம் செய்ய, அதுகண்ட தேவி தன் பதியை நோக்கி, இம்முனிவன் என்னைப் பிரதக்ஷிணம் செய்யாமைக்குக் காரணமென்னை என்று கேட்க, இம்மை மறுமைகளில் இட்டசித்திபெற விரும்புபவர் உன்னைச் சேர்த்தும், முத்திபெற விரும்புபவர் என்னை மட்டும் வழிபடுவர்; இது, வேதாகமங்களின் துணிபு என்று பரமன் பகரக் கேட்ட தேவி, இறைவன் திருவுருவத்தைப் பிரிந்து தனியே இருந்ததனா லன்றோ எனக்கு இவ்விழிவு நேர்ந்தது என எண்ணி, தான் அப்பரமனை விட்டு நீங்காதிருக்க நினைத்து, தவம்புரிந்து துதித்து அப்பிரானது திருவுருவத்திலே இடப்பாகத்தைத் தனக்கு இடமாக வரம்பெற்று, அத்திருவுருவத்திலேயே தான் ஒற்றுமைப்பட்டு நின்றாள் என்பதாம். (8)

ஒண்டவஞ் சமையொன் றூற்ற வுமைவலப் பாலதாணுவ்
விண்மகிழ் விடையிற் றேவியொடுதவ வித்த கன்றன்
கண்மகிழ் தாமுன் றோன்றி யருளலுங் காண்சுமித்ரன்
றண்ணெனத் துணைவி யோடு மெழுந்தனன் போற்றல்
[செய்தான்.

(பொ-ரை.) சுமித்திரன் இவ்வண்ணம் ஒரு வருடம் வரை ஒள்ளிய தவத்தைச்செய்ய, உமாதேவியாரின் வலப் பாகத்தில் இருக்கும் சிவபெருமான், அமரர் (அனைவரும்) களிப்பெய்தும் (தரும) விடையின்மேல் தேவியுடன் (எழுந்தருளி), தவஞ்செய்யும் தூயவனுடைய கண்களிக் கக் காட்சி தருதலும், (அக்கோலத்தைக்) கண்ட சுமித் திர முனிவன் மிக விரைந்து இல்லாளோடு எழுந்து (அப் பரமன் புகழனைத்தும் சொல்லித்) துதித்தான், (எ-று).

சமை—வருடம்; "வற்சரமே ஆண்டே சமை மூப் பேர் வருடமென்ப" என்பது நிகண்டு. எழுந்தனன்— முற்றெச்சம். (9)

முந்துறு தவனை நோக்கி முருகனை யீன்ற வள்ளல்
சிந்தையின் விழைந்தா யாது விளம்புதி செவ்வி தென்றான்
மைந்தனை நினையு மெற்கு வரந்தனை நல்கு கென்ன
வெந்தையு முறுவல் செய்தா னினையன வியம்பி னால்.

(பொ-ரை.) (இவ்வண்ணம் எழுந்து இல்லாளோடு துதி செய்யக்கண்ட) முருவேளினை அருளிய பரமன், (தமது) எதிரிலே யுள்ள சுமித்திர முனிவனது முகத்தைப் பார்த்து, நீ மனத்தில் விரும்பியது யாது? (அதனை) நன்றாகச் சொல்வாயாக என்றான்; (சுமித்திரர், அடி யேன்) புதல்வனை(ப்பெற) விரும்பினேன்; (அங்ஙனம்) வரத்தை அளித்தருள் என்று பிரார்த்திக்க, எமக்கெல் லாம் தலைவனான சிவபிரானும், (அருளினால்) புன்சிரிப்புக்

கொண்டு, (பின்வரும்) இத்தகைய வார்த்தைகளைக் கூறு வார், (எ-று). (இறைவன் திருவாய்மலர்ந்ததை அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.)

முந்து—இடைச்சொல்; உறுதல்—பொருந்துதல். முந்துறு—(யாவரினும் சிறந்து) முதன்மை பெற்ற எனி னுமாம். (10)

பூமகண் மதர்வை யெய்தப் பொருமக ளேமங் கொள்ள
நாமக ணலனிற் றோய நலவறி வான தெய்வ
மாமகண் மலர்ச்சி யார மதிநிறை மாண்பு வாய்ந்துத்
தேமக னொருவ னின்பா லுதித்திடுஞ் செல்வ கேண்மோ.

(பொ-ரை.) தவச் செல்வனே! திலமகள் உள்ளங் களிக்கவும், வீரமகள் மகிழ்வெய்தவும், கலைமகள் இன்பத் திற் படியவும், சிறந்த அறிவின் வடிவமான தெய்வத்தன் மைபொருந்திய பெரிய ஞான லட்சுமி மலர்ச்சிபெறவும், நிறைந்த அறிவின் சிறப்புப் பொருந்திய இனிமையான புதல்வன் ஒருவன் உன்னிடத்தே தோன்றுவான், (அப் புதல்வன் விசேடங்களை மேலும் கூறுகின்றோம்) கேட்பா யாக, (எ-று).

மதர்வு, ஏமம், நலன், மலர்ச்சி முதலிய சொற்கள், இன்பம் எனும் ஒரேபொருளன. பூமகள்—(செல்வத் திற்குரியவளான) தாமரை மலரில் வீற்றிருக்கும் திரு எனினுமாம். பொருமகள்—வீரமகள். நாமகள்—நா விற்கு அதிதெய்வமான கலைமகள். 'நிறைமதி மாண்பு வாய்ந்ததேமகன் என்பதற்கு, (என்றும்) பூரணமதிபோ லும் சிறப்புவாய்ந்த இனிய புதல்வன் எனினுமாம். (11)

ஆரணங் கலைக ளுஞ்சொ லரியதா மாக மங்கள்
பூரண நிலையை யோரும் புகிதனும் பொற்பின் மிக்கான்

நாரண வியநன் னெஞ்சன் னமதுரு மெத்தி யேத்தும்
வாரண மெனவு மின்ப மடைகுவன் வாழ்தி யென்றான்.

(பொ-ரை.) (அப்புதல்வன்,) வேதங்கள், கலைகள், நாம் திருவாய்மலர்ந்தருளிய அருமையான சிவாகமங்கள் (முதலாகச் சொல்லப்பட்டவற்றின்) முடிபு நிலையை, உணர்ந்துகொள்ளும் தூயவனுவான்; அழகு மிக்கவனும், (எம்மிடத்து) அன்பு கலந்த சிறந்த உள்ளத்தை யுடைய வனுமான அவன், நமது (சிவலிங்கத்) திருவுருவத்தை நெருங்கிப் பூசிக்கும் யானை யெனும்படி, பேரின்பத்தை அடைபவனுவான்; (இத்தகைய சிறந்த மைந்தனால் பெரிதும்) வாழ்வாயாக என்று அருளினான், (எ-று).

சிவபிரான் ஆகமங்களைமட்டும் அருளினனெனவும், வேதங்களை கலைகளை பிறவற்றை முனிவரர் அருளினர் எனக்கூறும் மரபுபற்றி இவ்வண்ணம் பொருள் கொள்ளப்பட்டது; சிவபிரானே வேதாகமங்களையும் கலைகள் முதலிய பிறவற்றையும் அருளினான் எனக்கூறி, 'நாம் சொல் அரியதாம் ஆரணம் ஆகமங்கள் கலைகள்' என அந் வயித்தாருமுளர். மூன்றுவதடியிற் போந்த 'நாரண விய' என்பதை, நார் அணவிய எனப்பிரித்து அன்புகலந்த எனப்பொருள் கொண்டாம்; நார்—அன்பு. அணவுதல்-கலத்தல். 'நாரண வியநல் நெஞ்சன்—நீர்மை பொருந் திய அகன்ற நல்ல உள்ளம் பெற்றவன் எனினுமாம்; நார்—நீர்மை; அணம்—பொருந்துதல்: வியன் நல்நெஞ் சன் எனப் பிரிக்க; வியன்—விரிவை யுணர்த்தும் உரிச் சொல்; "வியனென் கிளவி யகலப் பொருட்டே" என்பது காண்க. நாரணன்போலும் பரந்த மனமுளான் எனக் கொண்டாருமுளர். 'பொற்பின் மிக்கான்' என்பதில் புறத்தழகும், 'நாரணவிய நல்நெஞ்சன்' என்றவற்றுல்

அகத்தழகும் பெற்றும். வாரணம்—யானை; "உம்பல் வாரணம்" என்பது நிகண்டு. யானை பூசித்த வரலாற்றைப் பூாபிரத்திற்கூறிறும்; அதை, ஆங்குக் கண்டுதெளிக.(12)

மாமறை வழுத்து வள்ள லுரைத்தது மாணக் கேட்டுத்
தூமகிழ் வடைந்து போற்றுஞ் சுமித்திரன் றன்னை யம்மை
பூமகிழ் தரயா மந்தப் புதல்வனின் சிந்தை நின்றுத்
தேமகிழ் செயல்க ளாற்றிப் புரந்திட றேற்ற மென்றுள்.

(போ-ரை.) சிறந்த வேதங்கள் துதிக்கும் வள்ளலான சிவபிரான் திருவாய் மலர்ந்ததை சிறக்கக் கேட்டு, தூய்மையான களிப்படைந்து, (இறைவனையும் இறைவியை யும்) துதிக்கும் சுமித்திர முனிவரை தேவி (நோக்கி), நிலவுலகம் களிப்பெய்த(த்தோன்றும்) அம் மைந்தனின் மனத்தில் (யாம் துணையாக) இருந்து, பரமன் மகிழத் தக்க காரியங்களைச் செய்வித்துக் காத்தல் நிச்சயம் என்று (உறுதி) கூறினுள், (எ-று).

தே—தெய்வம்; இவ்வோ ரெழுத் தொருமொழி, சிவத்தையுணர்த்திற்று. (13)

கலிவிருத்தம்.

ஆடினன் குதித்தன னயர்ந்து நின்றன
னோடினன் றிரும்பின னுகப்பி னோர்ந்தனன்
கூடின னிறைவியோ டிணைந்த கோலனைப்
பாடினன் பலப்பல பழிச்சி னனரோ.

(போ-ரை.) (இறைவி கூறிய இதனை) மகிழ்வோடு (சுமித்திரர்) உணர்ந்தார்; (உணர்ந்ததும் உண்டான களிப்பால்) கூத்தாடினர்; (மேலெழுந்து) குதித்தார்; (பின்) மெய்ம்மறந்து நின்றார்; (மீட்டும்) ஓடினர்; திரும்பி மீண்டார்; இறைவியோடு கலந்த (இயற்கை) அழகுடைய

பெருமானை (வந்து) அடைந்தார்; (இறைவியோடு இறைவன் புகழைப்) பலப்பல (பாக்களால்) பாடித்துதித்தார்.

'இறைவியோ டிணைந்த கோலனைக் கூடினன்; பலப்பல பாடிப் பழிச்சினன்' என இயைக்க. பாடினன்—முற்றெச்சம். இறைவன் மேன்மையுறும் புத்திர சந்தானத்தை அளித்தனனாக, அதனுடன் தேவியின் அநுக்ரகத்தையும் நினைத்து உண்டான மகிழ்வுப் பெருக்கால் கூத்தாடுவதும், குதிப்பதும், அவற்றாலான அயர்ச்சியால் சிறிது நேரம் நிற்பதும், மீட்டும் அதை நினைத்து ஓடுவதும், பின் திரும்பி வந்து இறைவனை யடைந்து பாடுவதும் துதிப்பதுவும் செய்தனர் என்க. (14)

கற்புறு முளத்தளாங் கவின்சு சீலையு
மற்புத மடைந்தன ளமலற் போற்றியே
தற்புனை வயிற்றிடைத் தனய னற்பெருஞ்
சிற்பரைத் துணைகொடு சிறக்கு மென்னவே.

(பொ-ரை.) கற்பமைந்த மனத்தினை யுடையவரான அழகிய சுசீலை யம்மையும், (இறைவியோடு கூடிய) மலரகிதனை சிவபிரானைத் துதித்து, தனது அழகிய வயிற்றில் (தோன்ற இருக்கும்) புதல்வன், சிறந்த பெருமையை யுடைய ஞானசக்தியான அகிலாண்ட நாயகியாரின் (திருவருள்) துணையைக் கொண்டு சிறப்பை யடைவான் என்று நினைத்து, (தனது பாக்கியம் இருந்தவாறு எண்ணி) அதிசயத்தை யடைந்தனள், (எ-று).

தனது வயிற்றில் தோன்ற இருக்கும் புதல்வனின் எதிர்கால மேம்பாட்டை எண்ணி வியப்பெய்தினள் என்றபடி. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச், சான்றோ னெனக்கேட்ட தாய்" என்ற குறள் இங்கு நினைக்கத் தக்கது. (15)

கோலமார் பரசிவை களிக்குங் கோனுயர்
தாலமேன் மதர்வொடு சிறத்தி ரென்றுபின்
பாலமேல் விழியனான் பரிய தேறினான்
சீலமார் கணமொடுங் கயிலை சென்றனன்.

(பொ-ரை.) பேரழகு நிறைந்த பராசக்தி மகிழும் வாமனும், நெற்றிக்கண்ணை யுடையவனுமான இறைவன், (அவ்விருவரையும் நோக்கி,) உயர்வான இந் நிலவுலகத்தில் மகிழ்ச்சியுடன் சிறந்து இருப்பீர்களாக என்று அநுக்கிரகித்து, பிறகு ஆன்விடையில் (தேவியுடன்) அமர்ந்து, ஒழுக்கம் நிறைந்த சிவகணங்களுடன் திருக்கயிலைக்கு எழுந்தருளினான், (எ-று).

'கோலமார் பரசிவை களிக்குங்கோன், பாலமேல் விழியன், உயர்தாலமேல் மதர்வொடு சிறத்திரென்று பின் ஆன்பரியது ஏறி சீலமார் கணமொடு கயிலை சென்றனன்' என்பது அந்வயம். தாலம்—பூமி; "தாலமே அசலை நேமி............பூமி" என்பது நிகண்டு. மதர்வு—களிப்பு; "களிப்பு............இகழ்பெருமிதம் மதர்ப்பு" என்பதும் காண்க. பாலம்—நெற்றி; "நெற்றி.........மருவிய பாலம்" என்பதும் அறிக. ஏறினான்—முற்றெச்சம். ஆன்பரி—தருமவிடை. பரியது, அது—பகுதிப்பொருள் விகுதி. (16)

கங்கையஞ் சடைமுடி கவினு மெம்பிரான்
பங்கினி னுறைசிவ பரையின் மெய்யருட்
பொங்கலைத் துதித்தனன் புனித மாமுனி
மங்கையி னுடனறம் மலிய வாழுநாள்.

(பொ-ரை). தூய்மைவாய்ந்த சிறந்த சுமித்திரமுனிவர், கங்கையைத் தரித்த அழகிய சடாமகுடத்துடன்

விளங்கும் எமது தலைவனான சிவபிரானது வாமபாகத்தில் அமர்ந்துள்ள சிவசத்தியின் மெய்ம்மையான அருளின் மிகுதியைத் துதித்து, (பின் அங்கிருந்து சென்று தம் இருப்பிடம் அடைந்து, தனது) இல்லாளோடு அறத்தின் பயன் அதிகரிக்கும்படி (இல்லறம் நடத்தி) வாழ்ந்து வந்த நாளில், (எ-று).

இது குளகம்; அடுத்த செய்யுளில் "பிள்ளை கவினிற்றுலோ" என்பது கொண்டு முடியும். (17)

அறுசீராசிரிய விருத்தம்.

மேதினி யிடும்பை பாற மேதகு தருமமோங்க
மாதவ வுறுவர் வாழ வைதிக சமய மோங்க
ஆதிதன் கருணை தன்னா லன்புறுஞ் சுமித்தி ரன்றன்
காதலி வயிற்றின் மேலாம் பிள்ளை கவினிற் றுலோ.

(போ-ரை.) நிலவுலகத்தில் உள்ள பொல்லாங்குகள் ஒழியும்படியும், மேன்மை பொருந்திய தருமங்கள் செழித்து வளரும்படியும், சிறந்த தவத்தையுடைய முனிவர்கள் நல்வாழ்வு பெற்று உயரும்படியும், வேதமார்க்கத்தைத் தழுவிய சைவசமயம் மேலோங்கும்படியும், முதற் கடவுளான சிவபிரானது கருணையினால் அன்பு வாய்ந்த சுமித்திர முனிவருடைய மனையாளின் வயிற்றில் கர்ப்பம் உண்டாயிற்று, (எ-று).

இக் கருப்பத்தில் பிறக்கும் புதல்வர் யாதொரு தீயொழுக்கமுமின்றி எல்லா நல்லொழுக்கங்களையும் உடையவராய், சைவசமயத்தில் நிலைநின்று, தவம்புரிந்து, அழியாவாழ்வு பெற்று, நற்குண நற்செய்கைகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாகி, அவை உலகத்திற் கேடின்றி வளர்வதற்குக் காரணமா யிருந்து, திருவரு

னைக்காவில் எழுந்தருளிய அமலனுக்கே நிழல்தரும் பெரும் புண்ணியத்த ராகலின், இங்ஙனங் கூறினார். மேதினி இடும்பை நீக்கி, மேதகு தருமத்தை உய்ய வைத்து, மாதவமுனிவர் வாழ்வுபெறச் செய்து; வைதிக சைவத்தை வளரவைக்கும் ஓர் புதல்வர், ஆதிதன் கருணையினால் அன்பு நிறைந்த சுமித்திரனின் காதலி வயிற்றில் வந்து அடைந்தனர் என்க.

வைதிகசமயம்—வேதத்தின் வழிப்பட்ட சைவசமயம். பாற, ஓங்க, வாழ, உய்ய என்ற செயவெனெச்சங்கள்—காரியப் பொருளன வாதலால், எதிர்காலம். 'பூதல விடும்பை பாற' என்பதற்கு—பூமி தேவியினது துன்பம் நீங்க என்று உரைத்தலும் ஒன்று. உறுவர்—முனிவர்; "உறுவர் தாபதர் விளங்கும் இருடிகள் உயர்ந்தோர் யோகர்" என்பது நிகண்டு. பீள்சினை—கருப்பம்; இருபெயரொட்டு. (18)

சேர்தலு மதனை யோர்ந்த கேள்வியஞ் செவிய னாங்கு
நேர்தரு பலர்க்கு வேண்டு மாவள நிரம்ப நல்கி
யார்தரு மகிழ்ச்சி யோடு மண்மிய மதிக டோறு
நீர்மைய மரபு மாங்கே செம்மையி னிகழ்த்தி னானால்.

(பொ-ரை.) (அவ்வண்ணம் சுசீலையார்க்குக் கருப்பம்) உண்டாதலும், அதனை அறிந்த அழகிய கேள்விச் செல்வம் நிறைந்த செவிகளையுடைய சுமித்திர முனிவர், அவ்விடத்தில் வசிக்கின்ற யாவர்க்கும் வேண்டிய பெருஞ் செல்வத்தை நிறைந்த மகிழ்ச்சி கொண்டு அதிகமாகத் தானஞ் செய்தும், (கர்ப்பம்) நிறைந்து வருகிற மாதங்கள்தோறும் (தவறாது செய்யவேண்டிய) நீர்மையையுடைய கடமைகளை யெல்லாம், அத்தலத்தில் செம்மையாகச் செய்தார், (எ-று).

கர்ப்பாதானம், பும்ஸவநம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அந்நப்பிராசனம், சௌளம், உபநயனம், விவாகம் முதலிய வைதிக ஸம்ஸ்காரங்களுள், கருப்பாதானத்தின் பின் ஜாத கருமத்துக்குமுன் கர்ப்பகாலத்தில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களைத் ; தவறாது விசேடமாகச் செய்தமை, இங்குக் கூறப்பட்டது. இரண்டாவது அல்லது மூன்றாவது மாதத்தில் பும்ஸவநமும், ஆறாவது அல்லது எட்டாவது திங்களில் ஸீமந்தமும் செய்யத் தக்கன வென்க. மசக்கை தணித்தல், பூச்சூட்டல், கர்ப்பப்பெண் விரும்பிய பொருள்களைத் தேடியளித்து மகிழ்வித்தல் முதலிய லௌகிகச் செயல்களை உரியகாலத்தில் உரியபடி நடத்திய தகுதி, 'நேர்மையமாயும்' என்றவற்றில் அடங்கும். நேர்தரு, ஆர்தரு என்றவற்றில், தா என்ற துணைவினை விகாரப்பட்டது. மதி—சந்திரன்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமெனக் கொண்டு, சந்திர சம்பந்தத்தால் வரையறுக்கப்படுதல் பற்றி, மாதம் எனும் பெயர் அமைந்ததென்க. (19)

காரியை யுருத்து நக்க காய்சினப் பாந்தட் கவ்வ
ஆரியை யுருவச் சோமன் தூய்சுதை யீத லேபோல்
நாரியை மகளை நல்வ யாவினின் மூழ்கி நாடித்
தேரியையருளிற் றந்தானென்றவிற் செல்விபோல்வாள்.

(பொ-ரை.) விஷத்தைச் சிந்திக்கொண்டு விளங்குகிற கொதிக்கும் கோபத்தையுடைய (ராகுகேதுவாகிய) பாம்பு பிடித்துக் கொள்ள, (அதனால்) துன்பத்தை அடையும் வடிவத்தையுடைய சந்திரன், தூய்மையான அமுதத்தையே கொடுத்தாற்போல, பொறுமையில் திருமகளை ஒத்த சுசீலை, கருப்ப வேதனையினால் வருந்தி, (சிவபிரான் பாலும் பரசிவையின் பாலும்) அன்பு கலந்த புதல்வனை,

தெளியும் இயல்பமைந்த கருணையினால் விரும்பிப் பிரச வித்து (இவ்வுலகத்திற்குக்) கொடுத்தருளினாள், (எ-று).

சந்திர மண்டலம் தான் இராகுகேதுவினால் பற்றப் பட்டு வடிவுகுன்றி வருந்தியும், தனது அமுத கிரணத்தை மிகுதியாகப் பொழிந்து உலகிற்கு இனிமையையும் மகிழ்ச்சியையும் தருதல் போல, சுசீலையம்மையார் தான் கருப்ப வேதனையால் வருந்தி ஒரு சற்புத்திரரைப் பெற்றுக் கொடுத்து, உலகத்திற்கு நன்மையையும் மகிழ்ச் சியையும் விளைவித்தன ளென்றபடி. இது, உவமையணி. சுசீலைக்குச் சந்திர மண்டலமும், கருப்ப வேதனைக்கு இராகுகேது கவ்வுதலும், உடல் மெலிந்து வருந்துதற்கு மண்டலம் குறைதலும், உத்தமப் புதல்வரைப் பெற்றுக் கொடுத்தற்கு அமுதத்தைப் பெய்து கொடுத்தலும் உவ மையெனக் காண்க. தான்வருந்திப் பிறர்க்கு நலம்விளைத் தல் கருணையின் காரியமாகலின், 'அருளின் தந்தாள்' என்றார்: அருளின்—அருளினால்; இன்—ஐந்தனுருபு, ஏதுப்பொருளது.

பாற்கடல் கடையும்போது தோன்றிய அமுதத்தை எடுத்துக் கொண்ட திருமால், மிக்க அழகுடைய மோகி னியென்னும் பெண்வடிவு கொண்டு அசுரர்களை மயக்கித் தேவர்களுக்கே அவ்வமுதத்தைப் பங்கிட்டுக் கொடுத்து வருகையில், இராகுவென்னும் ஓர் அசுரன், தான் இருத் தற்குரிய அசுரர் கூட்டத்தை விட்டுத் தந்திரமாக தேவர் கள் கூட்டத்துட் புகுந்து, கையேற்று அமுதத்தை வாங்கி யுண்ண, அதனைச் சூரிய சந்திரர் குறிப்பித்த மாத் திரத்தில் நாரணன் அவனை அகப்பையால் அடித்துத் தலைவேறு உடல்வேறாகச் செய்ய, அமுதம் உண்டதனால் உயிர்நீங்காத அத்தலையும் உடலும், விஷ்ணுவின் அநுக்ர

கத்தினல் இராகுகேதுக்களென இரண்டு கிரகங்களாகி, சூரியன் முதலிய எழு கிரகங்களோடு சேர்ந்து, தம்மேற் கோள் சொன்ன சூரிய சந்திரர்க்குப் பகையாய், சிற்சில காலத்தில் அவர்களை மறைக்கின்றன; அவையே கிரகண மெனப்படும் என்பது புராண வரலாறு. அன்றியும், ஒவ்வொரு காலத்தில் சூரிய சந்திரரை மறைக்கும் சந்திரனது சாயையும் பூமியின் சாயையுமாகிய இராகு கேது வென்னும் சாயாகிரகங்களைக் கரும்பாம்பு செம்பாம்புகளாகக் கூறுவது, கவிசமயம் என்றும் பேசுவர்.

கிரகணம் பிடித்து விட்டபின்பு சந்திர சூரியர்க்கு ஒளிமிகுகின்றன என அறிக. சந்திரனது அமுதமயமான கிரணங்களால் உலகம் உய்வதை, "மண்டலம் பயிலுராகர் பேருயிர்ப்பினுன் மயங்கி, மண்டலம்பொர வருந்திய பெருந்துயர் மாற, மண்டலந்தனை நிழலெனும் மரபினுற்றனது, மண்டலம் பொழி யமிழ்தின்மெய் குளிரவே வைத்தோன்" எனவரும் வில்லிபுத்தூரார் பாரதத்தானும் உணர்க.

"இவ்விதமாய்ச் சந்திரன் அம்ருத மயங்களாயும் குளிர்ச்சி யுள்ளவையாயு மிருக்கின்ற ஜலபரமாணுக்களாலே சுக்ல பக்ஷத்தில் தேவதைகளையும், கிருஷ்ண பக்ஷத்தில் பித்ருக்களையும், புல் பூண்டு செடிகொடி முதலானவைகளை யுண்டாக்குவதனுலேயும், நிலவு சந்தோஷிப்பித்தலினுலேயும், மநுஷ்ய மிருகபக்ஷி முதலானவைகளையும் திருப்தி செய்து வருகிறுன்" என்பது விஷ்ணு புராண வசனம்

கார்—விஷம். உகுத்தல்—சிந்தல். நகுதல்—விளங்குதல். பாந்தள்—பாம்பு. சூர்—துன்பம். சோமன்—திங்கள். சுதை—அமுது. நார்—அன்பு. வயா—கருப்ப

வேதனை. நாடி—விரும்பிபெறும் பொருளது. தேர்—தெளிவு. நோன்றல்-பொறுமை. செல்வி-திருமகள். (20)

உற்றனன் விபுலை மைந்த வொண்மணிக் கோட்டி மாழை
சுற்றிய களபந் தாமங் கேசரஞ் சாந்துந் தூய
பெற்றிய நரந்தச் சேறும் பெட்புறு தேவர் தாங்கித்
துற்றிய பவனங் காணத் தூர்த்தனர் வீசி யார்த்தார்.

(பொ-ரை.) புதல்வர் நிலவுலகத்தில் உதித்தார்; (அவ்வளவில்), அழகு பொருந்திய அமரர்கள் ஒளிசெய்யும் நவரத்தினக் கூட்டங்களையும், பொன்னையும், சூழ்ந்த வாசனைப் பொடிகளையும், மலர்களையும், பூந்தாதுக்களையும், (பலவகை வாசனை கலந்த கலவைச்) சந்தனத்தையும், தூய்மையான தன்மையை யுடைய கஸ்தூரிக் குழம்பையும் (எல்லாவிடங்களினும்) கொண்டு சென்று, நிறைந்த நிலவுலகத்து மக்கள் காணும்படி வீசி (அவர்கள்மேல்) நிறைத்து, ஆரவாரித்தார்கள், (எ-று).

உத்தம புருடரொருவர் அவதரித்தலைக் கண்ட களிப்பின் மிகுதியால் நேர்ந்த செயல்கள் இவையென்க. "பண்ணையுமாயமுந் திரளும் பாங்கரும், கண்ணகன் றிருநகர் களிப்புக் கைமிகுந், தெண்ணெயுங் களபமு மிழுதுநானமுஞ், சுண்ணமுந் தூவின வீதி தோறுமே" என வரும் கம்பராமாயணம் இங்குக் காண்டற்குரியன. ஒண்மணி—ஒளிவீசும் கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. மாழை—பொன்; "நிதானம் மாழை..........பொன்" என்பதுகாண்க. கோட்டி—கூட்டம். களபம்—சுண்ணச் சாந்து; "சுண்ணச்சாந்து..........சுதை யொடு களபமும் பேர்" என்பது நிகண்டு. சுண்ணம்—கந்தப் பொடி, கதம்பப் பொடி; இது, சூர்ணம் என்ற வட

சொல்லின் சிதைவென்பர். தாமம்—மலர்; மிகுமணை மலரே தாமம் வீ இணர் துணர் பூவின்பேர்” என்பது காண்க. கேசரம்—மகரந்தப்பொடி; “கொங்கு கேசரம் பூந்தாதாம்” என்பது நிகண்டு. நரந்தம்—கஸ்தூரி; “அருக்கம் நானம் மான்மதம் நரந்தம் நான்கும் கருது கஸ்தூரியின்பேர்” என்பவற்றால் அறிக. சேறு—குழம்பு; பவனம்—இடவாகு பெயர்; உலகத்து மக்கள் எனும் பொருளது; “பவனம் தாரணி படி புவி தரணி” என்பது காண்க. தூர்த்தனர்—முற்றெச்சம். ‘வீசித் தூர்த்து ஆர்த்தார்’ என இயைக்க. மைந்தன் விபுலை உற்றனன் என்றது—சிசுவின் பூப்பிரவேசத்தைக் குறிக்கும்; அதுவே ஜாதகநிலை நோக்குதற்குச் சிறந்ததென்பர்; விபுலையென்பதற்கு, பூமியென்பது பொருள்; “குவலயம் விபுலை …………வையம்” என்பது நிகண்டு. (21)

அத்தனு மதனைக் கேளா வார்சிவ கங்கை யாடிப்
பத்திசால் முனிவர்க் கெல்லாம் பீதக மாதி நல்கி
நித்தன ருளுஞ் சேய்க்கு நீள்பெருஞ் சம்பு வென்ன
வொத்துள வபிதா னத்தை வைத்தன னொப்பி லாதான்.

(பொ-ரை.) ஒப்பில்லாத தந்தையான சுமித்திர முனிவரும், (புதல்வன் பிறந்த) அச்செய்தியைச் செவியுற்று உணர்ந்து, நீர்நிறைந்த சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து, அன்பு மிகுந்த முனிவர் முதலிய அனைவர்க்கும் பொன் முதலாகச் சொல்லப்படும் பல பொருள்களையும் தானமாகக் கொடுத்து, (முதலிற் செய்ய வேண்டிய ஜாதகருமம் முதலிய சடங்குகளைச் செய்து, பின்) இறைவன் (தமக்கு) அருளிய திருக்குமாரற்கு உயர்ந்த சம்புமுனிவர் என்று (சிவபிரான் திருநாமத்தோடு) ஒத்திருக்கின்ற திருப்பெயரை வைத்தனர், (எ-று).

ஒப்பிலாத அத்தன் என்க. முனிவர்—அந்தணர்; இது, யாவர்க்கும் முதலாவார் எனும் பொருளது. ஆடகம்—நால்வகைப் பொன்களி லொன்று; மற்றவை—கிளிச்சிறை, ஜாதரூபம், ஜாம்பூநதம் என்பன. நித்தன்—நித்தியன்; என்றும் இருப்பன். அத்தன்—பிதா. அபிதானம்—பெயர்; "அபிதானம் நாமம் பேராம்" என்பது நிகண்டு. சிவபிரான் அருளிய குமாரற்குப் பரமானந்த ரூபி, சுகத்தை யுண்டாக்குகிறவர் எனப் பொருள்தரும் அப்பரமனது சம்பு வெனும் திருநாமத்தையே வைத்தார் என்க. "தந்தை யாவது, குலப்பெரியோனாவது பெயரிடுக" என்ற விதிக்கு ஏற்ப, சுமித்திரரே பெயரிட்டனர்.

குழந்தை பிறந்தவுடன் பிதா ஸசேலஸ்நானஞ் செய்து ஜாதகருமஞ்செய்யவேண்டுமென்பதும், குழந்தை பிறந்தவுடன் தந்தை அதனைப் பார்த்த மாத்திரத்தில் கடன் தீரப்பெறுகின்றான் என்பதும், ஒருவனுக்கு புத்திரன் பிறந்தால் அங்கு அமரர்களும் பித்ருக்களும் வருகின்றார்களாதலின், அப்புண்ணிய காலத்தில் பொன் விதை முதலிய சகல தானங்களையும் செய்யவேண்டுமென்பதும், குழந்தை பிறந்த பதினோராவது நாளில் நாமகரணம் செய்யவேண்டு மென்பதும், கர்ப்பாதானம் முதல் சௌளம் அளவாகவுள்ள ஸம்ஸ்காரங்களினால் பீஜகர்ப்ப தோஷங்கள் நீங்கி, உடல்தூய்மை உண்டாகின்றதென்பதும், பிரமசரிய விரதாநுட்டானம் முதலியவற்றால் மறுமையில் நற்கதி உண்டாகுமென்பதும் நூற்கொள்கை. பிள்ளை பிறந்த செய்தி செவிப்பட்டதும் தந்தை பெருமகிழ்ச்சியால் குதித்து நீராடுகிற தீர்த்தத்திலிருந்து தெரிக்கின்ற துளிகளால், பித்ருக்கள் தாகம் தணிந்து மகிழ்கின்றனர் என்பதையும் அறிக. கேளா—உடன்பாட்டு வினையெச்சம். (22)

வாண்பிறை மதியம் போல
  வளர்தலுங் திங்க டோறும்
மாணுறப் படையச் செய்பு
  மதியினைக் காட்ட லுண்டி
பேணுறக் கொடுத்த லாதி
  நெடுஞ்சிகை வினையும் பெட்பிற்
காணுற நடத்திப் பின்னர்
  செவிநெறி காண லுற்றான்.

(பொ-ரை.) ஒளியமைந்த பிறைச்சந்திரன்போல் (அப்புதல்வர்) வளர்ந்துவரும் அளவில், (உரிய) மாதங்களினெல்லாம், சிறந்த அவயவங்கள் குறைவின்றி அமையச் செய்கின்ற சந்திரனைக் காட்டுதலும், விருப்பமுடன் அந்நம் ஊட்டுதலும், நீளுந்தன்மையதான குடுமியை வைத்து க்ஷௌரம் செய்வித்தலாகிய சௌளமென்கிற சடங்கையும் (அப்புத்திரற்கு) அழகுபொருந்தச் செய்து, பிறகு காதுகுத்துதலாகிய சடங்கையும் செய்தார்.

'ஆதி' என்றவற்றால், குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் ரட்சையாக ஐம்படைத்தாலி யணிதலும், பத்தாம் நாள் அல்லது வேறு நாளில் தொட்டில் தூக்குதலும், முப்பத்தோராவது நாளில் குழந்தைக்குச் சங்கினால் பால் புகட்டுதலும் முதலியன கொள்க. மூன்றாமாதத்தில் சூரியனைக் காட்டுதல்; நான்காவது மாதத்தில் அக்குழந்தையை வீட்டினின்று முதலில் வெளியே எடுத்துக் கொண்டுவரும் சடங்கு: முதலில் அந்நம் ஊட்டும் அந்நப்பிராசநம் என்னும் ஆறாவது மாதச்சடங்கு: தலைமயிர் கழித்தலாகிய சூடாகர்மம் என்னும் ஒருவயது அல்லது இருவயதில் செய்யும் சடங்கு முதலியனவும் செய்தார் என்க.

வளர்பிறைத் திங்கள் நாள்தோறும் ஒவ்வொன்றாக் கலைநிறையப்பெற்று வளர்தல் போல, நாளொரு

வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப்புதல்வர் வளர்ந்தார் என்பது முதலடியிற் போந்த பொருள். மதியம், அம்—சாரியை. செவிநெறி புரிதல்—காதுகளில் வழியை (தொளையை)ச் செய்தல். (23)

ஏதமில் வருட மைந்தி னெழில்முநூற் செய்கை யாற்றி
யோதுறுங் கலைக டம்மை யுளமுற வூட்டு ஞான்று
வேதமும் பிறவுங் கூறும் விழைதரு முண்மை யோர்ந்து
ஆதியம் பரன்றாட் சம்பு புகலென வடைத லுற்றான்.

(பொ-ரை.) குற்றமில்லாத ஐந்தாவது வருடத்தில் அழகிய பூணூல் தரிப்பித்தலாகிய உபநயனச் சடங்கையும் (சுமித்திர முனிவர் தன் புதல்வற்குச்) செய்து, ஓதுதற்குரிய கல்விகளையெல்லாம் மனத்திற் பொருந்தும்படி (அம்மகற்குப்) போதித்துவருங் காலத்தில், சம்புவெனும் அப்புதல்வர், வேதங்களும் மற்றைய நூல்களும் (உள்ளபடி) கூறுகின்ற விரும்பத் தகுந்த மெய்ப்பொருளை உணர்ந்து, முதற்கடவுளான சிவபிரான் திருவடிகளை(த்தனக்கு) அரணாகக் கொண்டார், (எ-று).

ஐந்தாவது பிராயம் பூணூல் தரித்தற்குச் சிறந்த காலமே யென்பதை நன்கு விளக்குவார் 'ஏதமில்' என்ற அடைமொழி கொடுத்தார். வித்தியாரம்பம் செய்வித்தற்கு உரியகாலம் ஐந்தாவது பிராயமாதலால், அதுவும் இங்கு இரண்டாம் அடியிற் குறிப்பிக்கப்பட்டது. அடைதல்-சரணம் அடைதல். வேதம் என்ற வடசொல்—(நன்மை தீமைகளை விதிவிலக்குக்களை) அறிவிப்பது என்று காரணப்பொருள்படும். (24)

## வேறு.

கண்ணுதலை முதலிறைஞ்சி யப்பரம
னடியவர்தாள் கவினப் போற்றி
யெண்ணுறுதன் குரவனையும் பரவிமுனி
வரர்கழலை வணங்கி யென்றும்

வண்மையுற வருளினர்தந் தாண்மலரை
முடிசூடித் தகவு வாய்ந்துப்
பண்ணுறுமப் பிரமநெறி பற்றினனுல்
பவநெறியைப் பாற்று வானே.

(பொ-ரை.) (தனது) பிறவித் துன்பத்தை ஒழிப்பவரான சம்பு வென்பவர், தினந்தோறும் சிவபிரானை முதலில் வணங்கி, (பின்பு) அப்பெருமானைத் துதிக்கும் அடியார்களைப் பொலிவுபெறத் துதித்து, மதிக்குந் தன்மை பொருந்திய *ஆசாரியனை நமஸ்கரித்து, முனிவர்களின் திருவடிகளைக் கும்பிட்டு, புகழுண்டாம்படி (தன்னைப்) பெற்ற தாய் தந்தையர்களுடைய திருவடித் தாமரைகளைச் சிரமேற் கொண்டு, இசைபொருந்திய பிரமசரிய விரதத்தைத் தவறாது அநுட்டித்து வந்தார், (எ-று).

கண்ணுதல், நுதல் கண் என மாற்றுக. பவநெறியைப் பாற்றுவான் பிரமநெறி பற்றினன் எனக் கொண்டு கூட்டுக. வண்மை—புகழ்; "வண்மையே வழங்கல் வாய்மை வளம் புகழ் வலியா மென்ப" என்பது ணகாரவேதுகை. பண்—இசை; அஃதாவது கீர்த்தி. நமஸ்கரித்து என்னும் பொருளைத் தருகிற இறைஞ்சி, போற்றி, பரவி, வணங்கி, தாண்மலரை முடிசூடி என்ற சொற்கள் இச்செய்யுளில் ஒருங்கு வந்தது; பொருட்பின் வரு நிலையணி. தாண்மலர்—உருவகம். சிவபிரானை வழிபட்டு, அவனருள் பெற்று, அதனாற் கருமம் ஒழிந்து வீடு பேற்றைப் பெறுந் தன்மைய னென்பார், பவநெறியைப் பாற்றுவான் என்றார்; இதற்கு, மரணபயத்தை ஒழிப்பவன் எனினுமாம். 'தம்' என்ற பன்மை, தனது குலத்தாரை அல்லது தனது ஒருசாலை மாணாக்கர்களை உளப்படுத்தியது என்க. (25).

சம்புமா முனிவர் உற்பவச் சருக்கம் முற்றிற்று.

௮

# தவநிலைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

சுகந்த வார்பொழில் சம்புகேச் சுரத்தவன் றிருத்தா
ளுகந்த மாமுனி யெம்பிரான் கருணையா லுயர்ந்த
அகந்த வாதந லன்புறும் புதல்வனை யடைதல்
பகர்ந்த வாறிதம் மைந்தனின் றவநிலை பகர்வாம்.

(பொ-ரை.) நறுமண முடைய நெடிய சோலைகள் சூழ்ந்த திருவானைக் காவில் எழுந்தருளி யிருக்கும் சிவபிரானின் திருவடிகளை விரும்பிய சிறந்த சுமித்திர முனிவர், எமது இறைவனின் திருக்கருணைப்பேற்றால், மனத்தினின்று நீங்காத நல்ல அன்பு பொருந்திய மேன்மையான (சம்புவென்னும் பெயருடைய) திருக்குமாரரைப் பெற்ற வரலாற்றைக் கூறியமுறை இதுவாகும்; (இனிமேல்,) அப்புதல்வரது தவநிலையைக் கூறுகின்றோம், (எ-று).

'அகம் தவாத நல் அன்பு உறும் உயர்ந்த புதல்வனை அடைதல்' என இயைக்க. உகத்தல்—விரும்புதல். அகம்—உள்ளம். தவாமை—நீங்காமை. (1)

சிறிது நாட்பினர் கங்கையிற் சிறந்துறு வடமீன்
மறுவி லாவுத ரம்வரு மதலையும் மகிழ்வின்
னிறையு மாவனை யத்தனை நெகிழ்வொடு பணிந்து
முறையி னார்சில மாமொழி முகிழ்வொடு நிகழ்த்தும்.

(பொ-ரை.) (சம்பு முனிவர் முற்குறித்த சிறப்புடன் இருந்தனர். இவ்வண்ணம்) சிலநாள் சென்றபின், கங்கையினும் (தூய்மையிற்) சிறந்துள்ள அருந்ததிக்கு ஒப்பான

சுசீலையின் குற்றம் இல்லா வயிற்றில் தோன்றிய புதல்வரான சம்பு முனிவரும், (தான் தோன்றிய காரணமாக) மகிழ்ச்சியினால் நிறைவு பெற்ற பெருமை பொருந்திய அன்னையையும் தந்தையையும் (மன) நெகிழ்ச்சியுடன் (ஒருநாள் கரம்) குவித்து வணங்கி, ஒழுக்கம் நிரம்பிய சில மேலான வார்த்தைகளைக் கூறத் தொடங்கினார்.

'நெகிழ்வொடு முகிழ்வொடு பணிந்து' என இயைக்க. நெகிழ்வு—மனநெகிழ்ச்சி. முகிழ்வு—குவிவு; இது, கரங் குவித்தல், வாய்புதைத்தல், அடங்கி நிற்றல் ஆதியவற்றைக் குறிக்கும். வடமீன்—அருந்ததி; கர்த்தமனுக்கு மகளாகத் தோன்றி வசிட்டரை மணந்த இவ்வம்மை மிகுந்த கற்பினை யுடையவர் ஆகலின், அன்றும் இன்றும் என்றும் யாவராலும் போற்றப்படுபவ ராயினர்: கங்கையினும் தூய்மை வாய்ந்த சுசீலையார், அவ்வருந்ததிக்குச் சிறிதும் பின்வாங்காப் பெருங்கற்பினராகலின், இவ்வம்மையையும் வடமீன் என்றார் போலும். முறை—ஒழுக்கம் எனும் பொருளின் வருவதை "செயல் முறை நடையாசாரம்.......ஒழுக்கம்" எனும் நிகண்டினுங் காண்க. (2)

திறலிற் றம்முட லாகுல முறப்பல தினமும்
பிறங்கு மாதவஞ் செய்தவ ரனைவரும் பெரிது
விறலி னெந்தையே விண்ணவ ரெனவுறு பதவி
முறையி னெய்திய காதையை முழுமையு முணர்வீர்.

(பொ-ரை.) (தவத்தின்) வெற்றி யமைந்த தந்தையே! (மனோ) திடத்தினால் தமது உடல் வருந்தும்படி அநேக காலம் வரை, விளங்கும் சிறந்த தவத்தைச் செய்தவர்கள் யாவரும், தேவர்களேயாகி, பொருந்திய பெரிய (இந்திர பதவி, சந்திரபதவி, சூரியபதவி, வாயுபதவி, வருணபதவி, குபேரபதவி, ஈசாந்நியபதவி, பிரமபதவி,

உருத்திரபதவி முதலிய பலப்பல) நிலைகளை, (அவரவர் களின் சிறந்த தவத்திற்குத் தக்க) முறைப்படி அடைந்த வரலாறுகளை, (தேவரீர்) முழுதும் அறிந்துகொண்டு இருக்கிறீர், (எ-று).

'விறலின் எந்தையே' என எடுத்து, 'முழுமையும் உணர்வீர்' என முடிக்க. 'உறு பெரிது பதவி' என இயைக்க. (3)

மிடலின் மிக்குள நோன்பினின் மிகுந்தவை கலிசூழ்
படியி னில்லையா லன்னது பவப்பிணி யகற்றும்
நொடியி னிம்மையி னின்பமு மறுமையு நவலும்
முடிவி லெஞ்சிவ நற்கதி முழுகுமா றருளும்.

(போ-ரை). கடல் சூழ்ந்த உலகத்தின்கண், வலிமையில் மிகுந்துள்ள தவத்திலும் மேம்பட்டவை இல்லை; அத்தவமானது, பிறவிநோய் நீக்குவது; நொடிப்பொழுதில் இம்மையில் உள்ள இன்பங்களையும், மறுமையில் உள்ள போக பாக்கியங்களையும், இறுதியில், (யாவராலும் சிறப்பித்துக்) கூறும் எமது சிவத்தின் பேரின்பக் கடலில் தோய்தலையும் அநுக்கிரகிக்கும், (அத்துணைச் சிறந்தது தவப்பேறு) (எ-று).

'கலிசூழ் படியின், மிடலின் மிக்குள நோன்பினில் மிகுந்தவை இல்லை, எனவும், 'முடிவில் நவலும் எம்சிவ நற்கதி' எனவும் இயைக்க. மிடல்—வலிமை. நோன்பு—தவம். கலி—கடல். படி—பூமி. நற்கதி—பேரின்பம். (4)

அனைய மாதவஞ் செய்திட வருளுதி ரெனலும்
புனையு மஞ்சடை கங்கையள் பொலிவுறுஞ் சடையன்
நினையக் கூறிய வம்மொழி நிகழ்தர லிதுவென்
றினைய வாசக முண்மகிழ் தரவினி யிசைப்பார்.

(போ-ரை.) அத்தகைய சிறந்த தவத்தை (அடியேன்) செய்தற்கு உத்தரவு அளித்தல் வேண்டும் என்று (சம்பு முனிவர்) வேண்டலும், (புதல்வன் தவஞ்செய்யச் செல்கின்றேன் யான் என்று கூறிய) இவ்வார்த்தை, மேகங்கள் படியும் அழகான கங்காநதி விளங்கும் சடாமகுடத்தை யுடைய சிவபிரான், (புத்திர சந்தானம் கருதித் தவம் செய்த அந்நாள், தான் என்றும்) எண்ணும்படி, (தவம் செய்து பேறனைத்தும் பெறுவான் இப்புதல்வன் என்று) உரைத்த அவ்வாசகம், (இப்போது நடைபெற) நேர்ந்தது போலும் என்று எண்ணி, இதன்பின், மனங்களித்து (பின் வரும்) இவ்வார்த்தைகளை, (பிதாவான சுமித்திர முனிவர்) சொல்வார், (எ-று).

'அனைய மாதவம் செய்திட அருளுதிர் எனலும், இது, புனையும் மஞ்சு அடை கங்கையள் பொலிவுறும் சடையன் நினையக் கூறிய அம்மொழி நிகழ்தால் என்று, இனி, உள்மகிழ்தர இனைய வாசகம் இசைப்பார்' என அந்வயிக்க. மஞ்சு—மேகம். (5)

சிவத்தி னற்கழற் சிந்தையிற் சிறப்புற நிறுத்திப்
பவத்தைப் பாற்றிட மைந்தகேள் விழைந்தனை பரிவின்
தவத்தி னுற்றிடு பேறினைத் தகவொடு மடைந்து
சுவத்தி யெய்துதி யென்றளி திகழ்தர வுரைத்தார்.

(போ-ரை.) புதல்வனே! கேட்பாயாக; அன்புடன் சிவபிரான் அழகிய திருவடிகளை மேம்பாடாக மனத்தில் இருத்தி, பிறவிநோய் நீங்க விரும்பினாய்; (நீ நினைத்த வண்ணமே,) தவம் செய்தலால் சேரும் பயன்கள் அனைத்தையும் தகுதியோடு பெற்று, மங்களம் அடைவாயாக என்று கருணை தோன்றக் கூறினர், (சுமித்திரர்) (எ-று).

'மைந்தகேள் பரிவின்' என முதலில் எடுத்து இயைக்க. பவம்—பிறவி. பரிவு—அன்பு. பேறு—பயன். தகவு—தகுதி. சுவத்தி—மங்களம்; வடசொல். அளிதிகழ் தரல்—கருணை விளங்கல். (6)

கனிவிற் கூறிய வம்மொழி களிப்பொடுஞ் செவியேற்
றினிய நல்லிணர் கொண்டவ ரடிமல ரிறைஞ்சி
நனிம தர்வொடு பெற்றவர் விடைதர நடந்து
அனையன் னற்சிவ கங்கையின் முழுகிய வதன்பின்.

(போ-ரை). அச்சம்பு முனிவர், (தந்தை) அன்புடன் உரைத்த அவ்வார்த்தைகளை மகிழ்ச்சியோடு கேட்டு, இனிமையான (அன்றலர்ந்த) நல்ல மலர்களைக் கொண்டு தாய் தந்தையர்களின் திருவடித் தாமரைகளை (அருச்சித்து) வணங்கி, அவர்கள் அதிக களிப்புடன் விடை கொடுக்க, அங்கிருந்து புறப்பட்டு, சிறந்த சிவகங்கையில் நீராடிய அதன் பிறகு, (எ-று) குளகம்.

'பெற்றவர் அடிமலர்' எனவும், 'அவர் விடைதர' எனவும் இயைக்க. இணர்—மலர்; "வீ யிணர் துணர் பூவின்பேர்" என்பது நிகண்டு. மதர்வு—உள்ளக் களிப்பு; இது இப்பொருளாதலை "பெருமிதம் மதர்ப்பு மதர்........ உள்ளக் களிப்பாம்" என்பதானும் அறிக. (7)

மரவுரி தாங்கிச் செஞ்சடை வகுத்தன னுவவிற்
புரிதரு நெஞ்சன் புண்ணியங் களுக்கெலா முதலா
வுரைபெறு ராம னென்றிடுங் குணகண னுகவை
தருதிரு நீற்றை யைந்தெழுத் துரைத்தனன் றரித்தான்.

(போ-ரை.) மரவுரி உடுத்து, (தலையுரோமத்தைச்) செந்நிறமாகிய சடையாகக் கட்டியவரும், தவத்திற் செலுத்தும் சிந்தையை யுடையவரும், புண்ணியங்கள்

அனைத்திலுக்கும் தலைமையாக (எடுத்துக்) கூறப்பெற்ற ஸ்ரீராமன் என்று சொல்லத் தக்க (தூய) குணங்களை யுடையவருமான சம்புமுனிவர், (அணிபவர்க்கு) மகிழ்ச்சி தருகின்ற திருநீற்றை, ஸ்ரீபஞ்சாக்கரம் செபித்து (ச்சிவாகம விதி வழுவாது) அணிந்தார், (எ-று).

மரவுரி—பூர்ச்ச மரத்தினின்று உரித்தெடுக்கப்படும் மெல்லிய பட்டையாகிய ஆடை; இவ்வுடையொன்றே தவஞ்செய்வார் விரும்பியணியுந் தகுதிவாய்ந்தது. உவவு-தவம். குணகணம்—குணக்கூட்டம். இளமைப் பருவத்தில் தன்னைக் கண்டு மகிழும் குடிகளை, "எதுவினை, இடரிலை, இனிதுநும்மனையும், மதிதரு குமரரும் வலியர் சொல் எனவே" வினவியதும், ஜனகியை மணந்து அயோத்தி சேர்ந்த அப்பருவத்தில், கூனியால் மாறுதலடைந்த கைகேசி, பரதனுக்கே நாடு; நீ பதினான்கு ஆண்டுகள் வரை கானகத்தில் வசித்துப் பின்வா என்றபோது, "அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்ற" முகம் விளங்க வணங்கி, அன்னாய்! "என்பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்றதன்றோ; மின்னொளிர் கானம் இன்றேபோகின்றேன், விடையும் கொண்டேன்" எனக் கூறிபகன்றதும், இங்கிலை நோக்கிச் சினந்த தம்பியர்க்குத் தேறுதல் கூறி, சிற்றன்னை செய்தது நேரிய முறையென அறம்பல வுரைத்ததும், தண்டகாரண்யத்தில் அரக்கர் செய் துன்பத்தை முனிவரர் கூற, அவர்களுக்கு அபயஸ்தம் அளித்து, "வேந்தன் வீயவும், ஆய் வரம் மேவவும், ஏந்தல் எம்பி வருந்தவும், என்னகர்மாந்தர் வன்துயர் கூறவும் யான்வனம் போந்தது, என்னுடைப் புண்ணியத்தால்" என்று அத்தவசிகட்குத் துணை புரிய நேர்ந்த தன் நல்வினையை எண்ணி மகிழ்ந்ததும், தீயது புரிந்த இராவணன் கிராயுதனைக் கின்றபோது,

"இன்றுபோய் நாளைவா" என்று அன்னவனுக்கும் இரக்கங் காட்டி யேவியதும், வேடுவனான குகனையும், வானரனான சுக்ரீவனையும், அரக்கனான விபீஷணனையும் தம்பியரென ஏற்றதும், அணிலின்பால் பரிவுகொண்டு ஆசீர்வாதம் செய்ததும், சடாயுவெனும் பறவையைத் தந்தையென ஏற்றதும், காடியாம் சாம்பவானைக் கருணைகொண்டு தழீயதும் இராமனது குணகணங்கள்; அப்பெருந்தகையின் குணங்களை நினைப்பவர்தம் இருப்புநெஞ்சமும் இளகல்பெறும்; இராகவனது குணகணத்தை, எத்துணைக் கோடி கற்பம் எண்ணினும் போதாதாயின், சிற்றறிவுடையேம் எங்ஙனம் விரித்தல் செய்வேம்; அப்பெருந்தகைக்கு ஒப்பான குணத்தவர் சம்புமுனிவர் ஒருவரே யாகலின், 'புண்ணியங் கூறுக்கெலா முதலாவுரைபெறு ராமன் என்றிடுங் குணகணன்' என்றார். உகவை—களிப்பு; பிறவிப்பிணி நீக்கும் பெருமருந் தாகலின் 'உகவை தருதிருநீறு' என்றார். திருநீறணியும்போது ஐந்தக்கரம் செபித்தல் சைவ சம்பிரதாய மாகலின், 'ஐந்தெழுத் துரைத்தனன் றரித்தான்' என்றார். உரைத்தனன்—முற்றெச்சம். (8)

விழிமணி சூடி யங்கிரி யொன்றினை விபுலை
யெழிலுற நாட்டி யப்பத வூருவி னிசையக்
கழிமகிழ் வோடு மற்றொரு காலினை யிருத்திச்
செழுங்கதிர் பற்று வானெனச் செங்கர முயர்த்தி.

(பொ-ரை.) உருத்திராக்க மணியணிந்து, ஒரு காலை பூமியில் அழகுற ஊன்றி, அவ்வூன்றிய பாதத்தின் தொடையின் மேல் பொருந்த மிகுந்த மகிழ்ச்சியுடன் மற்றொரு காலை வைத்துக் கொண்டு, செழுமையான கிரணங்களை வீசும் சூரியனைப் பிடிப்பவனைப் போல (இரு) கரங்களையும் உயரமாகத் தூக்கி, (எ-று). குளகம்.

சிவபிரான் திருக்கண்களி னின்று பெருகிய ஆனந்த பாஷ்பமே உருத்திராக்க மாகலின், 'விழிமணி' என்றார். அங்கிரி—கால்; "சரணமே பதமே மற்றைத் தாளொடு அங்கிரியே பாதம்" என்பது நிகண்டு. விபுலை—பூமி; "குவலயம் விபுலை.......வையம்" என்பது காண்க. ஊரு தொடை. கதிர்—சூரியன்; ஆகுபெயர். சேண்—உயரம்; "சேணென்ப தகலம் நீளம் செப்பிடி லுயர முப்பேர்" என்பது ணகரவெதுகை. "ஒருகால் போல வொருகால் மண் ணூன்றி யொருகா லெடுத்துயர், எரிகா லிரவி மண்டிலமே னோக்கி யிருகை கஞமெடுத்து, வருகாலக்கால் வீடணனும்" என்று விபீடணன் தவத்தைக் கூறும் இராமாயண உத்தரகாண்ட அடிகளும், "ஒருதாளின் மிசை நின்று நின்றதாளி னூருவின்மே லொருகாலை யூன்றி யொன்றுங், கருதாமன் மனமடக்கிக் கதிரவனைக் கவர் வான்போற் கரங்க ணீட்டி" என அருச்சுனன் தவநிலை கூறும் வில்லி பாரத அடிகளும், இங்கு ஒப்பு நோக்கத் தக்கன. (9)

திருக்கிமை யானு யெற்கதி ராயிரந் திகழும்
பொருக்கரை கஞ்ச மென்றிட நோக்கினன் பொலிவின்
பெருக்கிய வைந்து தீயினை யெண்ணிலன் பெரிது
மொருக்கிய நிலை முன்னரே யுன்னின னுடைத்தோன்.

(போ-ரை.) சூரியனது ஆயிரம் கிரணங்களையும், விளங்கும் அரையில் முள்களை யுடைய தாமரை மலரென (இரு) கண்களையும் இமைக்காது அழகுடன் பார்த்தபடியே இருந்தார்; (இந்நிலையில், இராகம், காமம், கோபம், சடம், நிபனம் எனும் ஐந்து) நெருப்புக்களை முன்னமே தியானத்தின் மூலம் ஒட்டி வெற்றி கண்டவரான அச்சம்பு முனிவர், (இப்போது தன்னைச் சூழ்ந்து) வளர்ந்துள்ள பஞ்சாக்கினியைப்பெரிதாகமதித்தாரில்லை.

மனம் பொறிகளின் வழியாய்ப் புலன்களின்மேற் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உணவு சுருக்குதலும், கோடைக் காலத்தில் பஞ்சாக்கினி நடுவினும், மழைக்காலத்தில் மழையினும், பனிக்காலத்தில் நீர்நிலையிற் பாசியேற நிற்றலும் முதலிய அருஞ்செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தனக்குவரும் துன்பங்களைப் பொறுத்தல் தவத்தின் இலக்கண மாதலை யறிக. பஞ்சாக்கினியாவது—பாக அக்கினிகள் மூன்று மூன்று பக்கங்களினும், ஔபாசனாக்கினி ஒரு பக்கத்திலும், சூரியனாகிய சுடர் வானத்திலும் ஆக ஐந்தெனக் கொள்க.

உலகுய வென்னை யுற்பவங் காண்பதிவ் வுறுவன்
குலவிய சம்பு கேச்சுரன் றாண்மலர் கொளுமன்
புலவிய சிந்தைப் பேரவ னென்றெணு முறவோ
நிலவிய வன்னி காய்ந்தில னின்றன னளியே.

(பொ-ரை.) இத்தவசிரேட்டர், நிலவுலகம் உய்யும் வண்ணம் (அரச மரபிற்கு மூல புருடனாகும்படி, சிவபிரானின் அட்ட மூர்த்த வடிவில் ஒரு மூர்த்தமான) என்னை, அவதாரம் செய்விக்கும் செயலை மேற்கொள்ள இருக்கின்றார்; (அஃதன்றி, எனது வடிவமாக) விளங்கிய சம்புகேச்சுரப் பெருமானுடைய திருவடி மலர்களை யேற்கும் அன்பு கலந்த மனத்தையும், (அப்பரமனது சம்பு வென்னும்) திருநாமத்தையும் உடையவர் என்று எண்ணிய உறவுமுறை பற்றியோ (யாதோ?) விளக்கம் தங்கிய (சம்பு முனிவரைச் சூழ்ந்திருக்கும்) அக்கினி, சுடாது குளிர்ந்து இருந்தான், (எ-று).

பஞ்சாக்கினியின் வேகம் சம்பு முனிவரைப் பாதிக்கா இச்செயலுக்கு உறவு முறையை ஏதுக்காட்டிய இது-

எதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும். உருவன்—தவத்தன். அளி—குளிர்ச்சி. (11)

வலமதிற் றுப்பின் மின்னிடப் பாலதி னீலங்
குலவிட நீற்றின் பேரொளி முத்தெனக் கொளுவ
நலமுறு மங்கை பாகனை நம்பனைக் குறிப்பின்
னிலவின னேமங் கண்ணினுங் காண்பதற் கிலேயே.

(பொ-ரை.) வலப்பாகத்தில் பவள ஒளியும் இடப்பாகத்தில் நீலமணி யொளியும் விளங்க, திருநீற்றின் பெரியஒளி முத்தின் ஒளியென ஒளிர, நலம் பொருந்திய அகிலாண்ட நாயகியை இடப்பாகத்திற் கொண்டுள்ள இறைவனின் (அழகிய கோலத்தைக்) குறிக்கும் கருத்தால், (அகத்தில் விளங்கும்) அத்தோற்றமே, (புறத்திலும் தோன்றக்) கண்களாலும் தரிசித்து (அளவிலா) இன்பம் எய்தினர் சம்புமுனிவர், (எ-று).

மின்-ஒளி: 'துப்பின்மின் குலவிட, நீலம் குலவிட' எனவும் கூட்டுக. 'குறிப்பினும் கண்ணினும் அங்கிலேகண்டு ஏமம் நிலவினன்' என்க. ஏமம்—இன்பம்; இது இப்பொருளாதலை "நகை கடி மகிழ்ச்சி ஏமம் நயம் சுகம் தொய்யல் இன்பம்" எனும் நிகண்டினாலும் அறிக. (12)

அறுசீராசிரிய விருத்தம்.

கறையடியு மத்தினியு மதன்கன்றுந் துறுகலெனை
வுறிஞ்சக் கண்ட
சிறைசிதலேப் புற்றதெனப் பணிகளுறக்
கொடிமலர்க ணெடிய தாரு
விறலதெனச் சுற்றுதலு முறையெனவு
மிமமெனவும் வெயிலு நோக்கா
னிறைமகிழ வரகரவென் றிவன்புரியுந்
தவப்பெருமை யிசைத்த லாமோ.

(பொ-ரை.) ஆண்யானைகளும், பெண்யானைகளும், அவ்விரண்டின் கன்றுகளும், (அசைவின்றித் தவஞ்செய்யும் சம்புமுனிவரைத்) துறுகல் என்று நினைத்து, (தங்கள் தங்கள் உடம்பிலுள்ள தினவு நீங்க) உராய்த்துகொண்டு செல்லவும், (அதைக்) கண்ட கறையான் கூட்டம், (அவர் மீது தாம் வசிக்கப்) புற்று செய்து மூடிக்கொள்ளவும், (அப்புற்றைப்பார்த்த) பாம்புக் கூட்டங்கள் (அப்புற்றின் மேல்) தவழவும், பூங்கொடிகள் (அவரை) வலிமை மிக்க நீண்ட மரமெனக் கருதிச் சுற்றிக்கொள்ளவும், (இது) மழைக்காலம் எனவும், (இது) பனிக்காலம் எனவும், (இது) வெயிற்காலம் எனவும் பாராதவராய், சிவபிரான் திருவுளம் களிக்கும்படி ஹரஹர என்று உச்சரித்துக் கொண்டு, இவர் செய்யும் தவத்தின் மேன்மையை (எத்துணைமேலோர்க்கும்) சொல்ல முடியுமோ, (எ-று).

கறையடி—ஆண்யானை; அத்தினி—பெண்யானை, இதனை "கறையடி எறும்பி..........யானை" எனவும், "வடவை அத்தினி யிரண்டும் பிடிகளாம் கரிணியும் பேர்" எனவும் வரும் நிகண்டினை யோர்க. சிதலை—கறையான். பணத்தை யுடையது, பணி; இது, பாம்பு எனும் பொருளது. 'மலர்க்கொடி விறல் நெடிய தாரு என சுற்றுதலும்' என இயைத்துப் பொருள் கொள்க. உறை—மழை; "வருடமே உறையே ஆலி வானமு மழைப்பேர்" என்பது காண்க. இமம்—பனி; "பனி இமம் துகினமும் பேர்" என்பது நிகண்டு. யானைகள் உராய, கறையான் புற்றிட, பாம்புகள் தவழ, கொடிகள் சுற்ற, வெயில் மழை பனி தம் வேகங்காட்டிட, அவற்றை ஒரு பொருளாக எண்ணாது சிவநாமம் உச்சரித்துச் சம்புமுனிவர் செய்யுந் தவத்தை அளவிட வல்லார் யாரே உளர் என்றபடி. (13).

எத்துணையோ முனிவரருந் தவம்புரிந்தா
ரெழினிறைந்த விமையோர் போற்று
மெத்துதவங் கணக்கிலையென் றுரைத்தாலுஞ்
சுமித்திரன்றான் விரும்பி யீன்ற
புத்தமுதக் கலைக்கடலின் கரைகண்ட
புதல்வனெனும் புனிதச் சம்பு
பத்தியுடன் றவமேற்ற லத்தவஞ்செய்
பெருந்தவத்தின் பயன தம்மா.

(பொ-ரை.) முனிவர்களும் எண்ணிறந்த தவத்தைச் செய்திருக்கின்றனர்; நிறைந்த அழகினரான தேவர்கள் செய்த அதிகரித்த தவத்திற்கு அளவில்லை என்று (பிறர்) கூறுவாரெனினும், சுமித்திர முனிவர் மகிழ்ந்து பெற்ற புதிய அமுதம்போலும் (வடமொழி தென்மொழியாகிய இருவகை) நூற் கடலின் கரைகண்டு உணர்ந்த திருக்குமாரர் என்னும் தூய்மையான சம்பு முனிவர், ஒழுக்கத்துடன் தவத்தை மேற்கொள்ளல், அந்த தவம்செய்த பெரிய தவத்தின் பயனாகும், (எ-று).

முனிவர்களும் விண்ணவரும் தவத்தை மேற்கொள்வதுண்டு; எனினும், பலகால் அத்தவ ஒழுக்கத்தினின்று தவறினமை சரித்திரப் பிரசித்தம். தவம் அன்னவரை நோக்குகின்றது; அந்தோ! என்னை மேற்கொண்டு மேன்மை படையும் இவர்கள் ஒழுக்கத்தினின்று தவறி எனக்கு மாசினை யீகின்றாரேயென வருந்தி, எனக்குப் பெருமை தாவல்ல ஒரு தூய புருடர் என்னை மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்து, அத் தவம் தவஞ் செய்ததன் பயனாக, ஒழுக்கம் நிறைந்த இச்சம்பு முனிவர் தவமேற்றார் என்றபடி. பத்தி—ஒழுக்கம்; "பத்தியே முறை ஒழுக்கம் பகர்வழிபாடு முப்பேர்" என்பது தகர வேனுகை. (14)

அங்கிதனை யங்கியினாற் றகித்தடக்கி
வெம்மையதை யரிய சீர்த்தி
பொங்கியுள வாயுவினா லகற்றிமே
லுவ்வியுறு மமுதப் பொன்மை
யிங்கிதமாத் தன்மையுற விதயத்தை
யிந்நிலையி னிதத்தி னாய்ப்
புங்கவன்றா னின்றொடுக்கி மகிழ்வினுடன்
றன்னுடலம் புளகித் தானே.

(பொ-ரை.) மேன்மையுடையவரான சம்பு முனிவரானவர், (பசியில்லா திருக்கச்) சாடாக்கினியை மூலாக்கினியால் வெதுப்பி அடக்கி, (அம்மூலாக்கினியின்) வெப்பத்தை, (வெளியே விட்டு உள்வாங்கி அடக்கலால்) நிறைந்த வாயுவினால் நீக்கி, சிரத்தின் மேல் தங்கிய (சந்திரகலையின்) அழகிய அமுதத்தினால் குறிப்பாகக் குளிரும்படி, மனத்தை இந்த நிலையில் இனிமையாகப் பொருந்த (பாவனையில்) இருந்து ஒடுக்கி, மகிழ்ச்சிப் பெருக்கால் தனது தேகமனைத்தும் புளகாங்கிதங் கொண்டார்.

புங்கவன் தான்—எழுவாய். சாடாக்கினியை மூலாக்கினியால் அடக்குதல்—பசியின்மை யாதல். வாயுவை வெளிவிடல்—ரேசகம்; உள்வாங்கல்—பூரகம்; உள்நிறைத்தல்—கும்பகம் என்பர் வடமொழிவாணர். 'உவ்விமேல்' எனவும், 'பொன்மை அமுதம்' எனவும் இயைக்க. உவ்வி—சிரம்; "உரவிய தலையே......உவ்வி" என்பது நிகண்டு. இங்கிதம்—குறிப்பு. இதம்—இனிமை.

திருமலனை விழைவுடனம் முனிவரனு
நினைத்தவவை யியற்ற னேக்கி
மருதநிலப் புரத்தான்றன் பதவிகொள
வருவனிவ னெனவு முளகிக்

கருதரிய வலம்புஜையே முதலான
கணிகையரை மதனங் காட்டிப்
பொருதவனின் பெருந்தவத்தை யழிக்கவெனப்
பொலிவினவர் புறப்பட் டாரால்.

(பொ-ரை.) மலரகிதனுன சிவபிரானை, விருப்பத்துடன் அச் சம்புமுனிவர் தியானித்துத் தவம் செய்வதை மருதநிலத்துத் தலைவனுன இந்திரன் பார்த்து, (அவர் கருத்தை அறியாத காரணத்தால், இத்தவத்தின் மூலம்,) இவர் தனது பதவியை அபகரித்துக் கொள்ள வருவர் என்று நினைத்து(ப் பொறாமை யுற்று, அவர் தவத்தைக் கெடுத்துக் கலைத்துவிட வேண்டும் என்னும் கருத்தனுய்,) நினைத்தற்கும் அரிய (அழகு வாய்ந்த) அலம்புஜை முதலாகச் சொல்லப்படும் (பொன்னுலகத்து) நடன மாதரை (நோக்கி, நீங்கள் விரைந்து சென்று சம்பு முனிவர்க்குக்) காமன்லையைக் காண்பித்து, (லீலைப்) போர் விளைத்து, அம்முனிவரின் பெரிய தவத்தை அழிப்பீர்களாக எனக் கட்டளையிட்டதும், அப்பாவையர் (அனைவரும் அப்போதே அச்செயல் நிகழ்த்த) புறப்பட்டனர், (எ-று).

ஆல்—அசைநிலை,

உன்குதல்—நினைத்தல். 'அலம்புஜையே முதலான கணிகையர்' என்றது, அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய பலரையும் என்க. கணிகையர்—வேசையர். மதனம்—காமம். பொலிவினவர்—இயற்கை செயற்கையாதிய இருவகை அழகும் வாய்ந்த மாதர். 'அழிக்கவெனப் புறப்பட்டார்' என்றது—விரைப்பொருளது. (16)

கருவேளுந் தநுவேந்திப் பகழியுடன்
றந்திரமுங் கதுவல் காண
அரிவையர்க ளதுகுழுவு மருந்தவத்துச்
சம்புவின்பா லடைதற் செய்ய
வருந்தமிழி னிருப்பிடமாம் பொதியினுள
மாருதமு முறுத லந்தத்
திருந்திழையர் செயல்கண்டிம் முனிமயங்கா
வஃதுணர்த்தத் திகழ்ந்த போலும்.

(பொ-ரை.) மன்மதன் கரும்பு வில்லும் மலர்க்கணைகளும் தாங்கிச் சேனைகளுடன் சூழ்ந்துவர, அலம்புஜையர்களின் கூட்டம் அரிய தவத்தை யுடைய சம்பு முனிவரைச் சமீபிக்க, அருமையான தமிழ் மொழியின் வாசஸ்தானமான பொதிகை மலையின்கண் உள்ள தென்றற் காற்றும், (அச்சமயம் அம்மாதர்களுக்குத் துணையாக வந்தது ஏனெனில்,) திருத்தம் அடைந்துள்ள ஆபரணங்களை யணிந்த அவ்வரம்பையர்களின் செய்கையைப் பார்த்து, இச்சம்பு முனிவர் மயக்கம் அடையாத அச்சம்பவத்தை, (உலகின்கணுள்ள அனைவருக்கும்) அறிவிக்க வந்தது போலும், (எ-று).

வசந்த காலம், நிலா, மணி, மேடை, மணற்குன்று, பூஞ்சோலை, சந்திரோதய காலம், மலர், வாசனை, அழகு முதலியன மன்மதன் பரிவாரங்கள். தமிழ் வளர்ந்த இடத்தில் தானும் வளர்ந்து, அத்தமிழொடு பழகிய தூய குணம் தென்றலுக்கும் இருத்தலின், உத்தமச் சம்புவின் மயங்காத் தன்மையை உலகினுக்கு உணர்த்த முயன்றதுந் தக்கதே யாயது. காமம் அதிகரிக்கத் துணைசெய்ய வந்த தென்றலுக்கு, 'முனிமயங்காச் செயல்காட்ட வந்தது' என்று கூறி, அதற்குக் காரணம் தமிழ்வளரும்

இடத்தில் தான் வளர்ந்தமையே என ஓர் ஏதுக் கூறினமையின் இது, ஏதுத்தற்குறிப் பேற்றவணி. 'கருவேள் தநாவும் பகழியும் ஏந்தி, தந்திரமுடன் கதுவல் காண' என்றியைக்க. கருவேள்—மன்மதன்; கருப்பாசயக் குழியில் வீழும் விருப்பத்தை விளைவிப்பவன் எனப்பொருள்படும் பெயர்: கரியநிறமுடையான் என்பது மொன்று. தநு—வில். பகழி—அம்பு. தந்திரம்—சேனை; "தானையே பதாதி வெய்ய தந்திரம்........சேனை" எனும் நிகண்டிலுங் காண்க. மாருதம்—(தென்றல்) காற்று. (17)

எழுசீராசிரியம்.

கந்தமா ரினிமை வல்லரி கோதி
மாழையின் றுணைருறு கந்த
முந்திய கிளையிற் கோகிலங் கூவ
வும்பலர் தநுவினின் முன்னாள்
முந்திய வசுரன் றன்னைவெல் வேட்குத்
தார்புனை முடிமணி சூட்டி
யந்திவண் ணனுக்கு மஞ்சுறே லென்ன
வண்மின வசந்தகா லமுமே.

(பொ-ரை.) மணம் நிறைந்த இனிமையாகிய தளிர்களைக் கோதி, மாமரங்களினுடைய பூங்கொத்துக்களிலுள்ள வாசனை வீசுகின்ற கிளைகளில் (அமர்ந்த) குயிலினது கூட்டம் (இனிமையாகக்) கூவிக்கொண்டிருக்க, அழகிய வலிமையை யுடைய வில்லினால் முன்னொரு காலத்தில் (தன்னை) எதிர்த்த சம்பராசுரனை வென்று வெற்றி மாலை சூடிய மன்மதனுக்கு, இரத்தின மணிகள் பதித்த கிரீடத்தைத் தரித்து, அந்திப் பொழுதுபோலும் நிறத்தை யுடைய சிவபிரானுக்கும் பயப்படாதே என்று சொல்வதுபோல, வசந்த காலமும் வந்தது, (எ-று).

தென்றல் வீசலும், வண்டு கிளி பூவை அன்றில் குயில் முதலிய இவையெலாம் மகிழ்தலும், மாங்கனி யுதிர்தலும், புன்னை மகிழ் தாழை சண்பகமாதிய இவை மலர்தலும், இந்திரகோபம் கேகயம் முதலிய மெலிதலும் இளவேனிற் காலத்தின் இயல்பாகும்; சித்திரை வைகாசி யான இருதிங்களும் வசந்த காலமென்க. வசந்தமெனி னும் இளவேனில் எனினு மொக்கும். "ஆமும் ஆரச் சேறும் அரும்பனி நீரும் பூவும், ஈரவெண் மதிநிலாவும இதம்பெறும் தென்றல் காலும், ஓர் உயிர இரண்டு மெய் யாய் உருகுவார் உருகும் வண்ணம், மாரனை மகுடம் சூட்ட வந்தது வசந்த காலம்" என்று வசந்தகால நிலை கூறும் வில்லியின் செய்யுள் இங்கு நினைக்கத் தக்கது. சிவ பிரானது அந்திப்பொழுதின் நிறத்தை நோக்கி, அப்பர மன் யோகம் கலைத்த அந்நாள் எரிந்து அநங்கனையதை யெண்ணி அஞ்சாதே யென்று, அதே நிறம் காட்டி வந் தது வசந்தம் என்க. கந்தம்—மணம். வல்லரி—தளிர்; "வல்லரி கிசலயம்பூ........தளிரின்பேர்" என்பது நிகண்டு. மாழை—மாமரம்; "மாந்தி சூதம்........சினைபடு மாழை மாவாம்" என்பது காண்க. துணர்—பூங்கொத்து; "தொத்து மஞ்சரியிணேடு துணர் இணர்........பூங்கொத் தின்பேர்" என்பதானுமுணர்க. 'கந்தம் உந்திய கிளை' யெனப்பிரித்துப் பொருள் கொள்க. உந்துதல்—பெருக் கெடுத்து வருதல். கோகிலம்—குயில். உம்பல்—வன்மை; "மிடல் வயம் திண்மை மைந்து மெய்ந்நலம் திரம் உம் பல்" என்பது நிகண்டு. உம்பல்—எழுச்சியுமாம்; டகர வேதுகை காண்க. முடிமணி யென்பதை, மணிமுடி யென இயைக்க. (18)

ஐம்பொறி புலனைப் பாந்தலி லிருத்தி
யாற்றிய சுமித்திர முனிவன்
னம்புறு மதலை நற்றவ முணர்ந்து
நாமுமந் நெறியினே மெனல்போ
லம்பரந் தொறுஞ்செம் மஞ்சரிச் செழுந்தீ
யாக்கியெல் லொளியினை விழித்து
அம்பத மதனி னின்றன வெழுந்தங்
கண்மிய வகலியங் களுமே.

(பொ-ரை.) அத்தவச்சாலையில் நிறைந்துள்ள மரங்கள் எல்லாம், அழகிய சடைமுடியை யுடைய சுமித்திர முனிவர் விரும்பிப் பெற்ற புதல்வரான சம்பு வென்பவர், ஐந்து பொறிகளில் அமைந்த புலன்களை (விஷயாதிகளில் தாவிச் செல்லாதபடி) காவலில் இருத்திச் செய்யும் சிறந்த தவத்தைப் பார்த்துத் தெரிந்துகொண்டு, நாங்களும் அந்த தவத்தைச் செய்பவர்கள்தான் என்று சொல்வன போல, திக்குகள் தோறும் சிவந்த தளிர்களாகிய செழுமையான தீயை வளர்த்து, சூரியனது ஒளியைப் பார்த்தபடியே அழகிய (அடிப்பாகமாகிய ஒரே) காலில் நின்று ஓங்கியிருந்தன, (எ-று).

சோலையை வர்ணிக்கும் இச்செய்யுள், சிந்திப்பார் உள்ளத்திற்குச் சிறந்த விருந்தளிப்பது. மோகமூட்டு முனையும் தென்றலினிடம் ஒரு தூய்மை காண்பதும், செழுமிய சோலைக்குத் தவநிலை கற்பிப்பதும் கவிவாணர் மரபுபோலும். பாந்தல்—ஒடுக்கம்; "ஒடுக்கமே பதுங்கல் பாந்தல்" என்பது நிகண்டு. நம்புதல்—விரும்புதல்; "நம்பும் மேவும் நசையாகும்மே" என்னும் சூத்திரத்தை நோக்க. அம்பரம்—ஆகாயம்; "அண்டம் வானுலகு மங்குல்........அம்பரம்" என்பதை அறிக. மஞ்சரி—

தளிர்; "மஞ்சரியே பூங்கொத்து மாலை செந்தளிருமாகும்" என்பது ஞகரவேதுகை. எல்—சூரியன். அம்பதம்-அழகிய கால். அகலியம்—மரம்; "தரு அகலியம் விருக்கம் தாவரம்........மரம்" என்பது நிகண்டு. (19)

திரைத்தட வுததி யமுதொடு தோன்றி
வானவர் துறக்கம தடைந்தோர்
விரைவினி லுவவை யகற்றுத லுன்னி
வேண்டிய வினையெலா மியற்று
மரபுட னவனை யடைதரு போது
மானொடு குயிலுமா மயிலார்
நிரைதவம் புரிவான் பெருகிய தீயி
னள்ளுற விருந்தவா வுணர்ந்தார்.

(பொ-ரை.) அலைகளை யுடைய பெருமை பொருந்திய திருப்பாற்கடலிற்றோன்றிய அமுதுடன் உற்பவித்துப் பொன்னுட்டை யடைந்தவர்களும், மானையும் குயிலையும் மயிலையும் ஒத்தவர்களுமான (இந்திரன் ஏவிய) அந்த அப்ஸரமாதர்கள், வெகு சீக்கிரத்தில் தவத்தைக் கலைக்க நினைத்து, (அதற்காகச் செய்ய) வேண்டிய செயல் அனைத்தும் செய்யும் முறைமையுடன், அவரை அடைந்த வேளையில், ஒழுங்கான தவத்தைச் செய்[illegible] முனிவர், அதிகரித்த பஞ்சாக்கினி ம[illegible]தியில் இருந்[illegible]தப் பார்த்தனர், (எ-று).

68904

திரை—அலை; திரைவது திரையென அலைக்குக் காரணக்குறி: திரைதல்—மடங்குதல். தடம்—பெருமை; "பகடு ஆரி மோடு மால் தடம்.......பெருமை" என்பது காண்க. துறக்கமது, அது—பகுதிப் பொருள் விகுதி. மாபு—முறைமை. நிரை—ஒழுங்கு. நள்—நடு. மருண்ட பார்வையில் மானையொப்பாரும், இ[illegible] குயிலை

யொப்பாரும், அழகிய சாயலில் மயிலை யொப்பாருமான அமுதொடு பிறந்த மாதர்கள் இந்திரன் ஏவலால் வந்து, சம்பு முனிவர் பஞ்சாக்கினி நடுவில் தவஞ்செய்வதைப் பார்த்தனர் என்க. (20)

விண்டலத் தமரர் துந்துபி யோங்க
வேளவன் முழவது மிழற்றக்
கண்டெனு மொழியார் மேகலை யோடுங்
காற்சிலம் பவைகளுங் கலிக்கச்
செண்டெடுத் தடித்த லம்மனை செய்த லங்கழங்
காடலு மியற்றித்
தண்மைய திலகந் தீட்டுவா ராகி
யெத்திசை களுமவர் திகழ்ந்தார்.

(பொ-ரை.) (இத்தெய்வப் பெண்களுக்கு வெற்றி யுண்டாகும்படி) பொன்னுலகத் தேவர்களின் துந்துபி வாத்தியம் (ஒருபால்) முழங்கவும், மன்மதனது (சொந்த) வாத்தியங்கள் (ஒருபால்) சப்திக்கவும், கற்கண்டுபோல் இனிக்கும் சொற்களையுடையவர்களான அப்பெண்களின் மேகலாபரணத்துடன், காலில் அணியும் சிலம்புகள் (கரத்தில் அணியும் வெள்வளைகள்) முதலிய ஆபரணங் களும் (ஒருபால்) ஓசை காட்டவும் (நேர்ந்த அந்நேரத் தில், அப்பெண்களில்) பூச்செண்டுகளை எடுத்து எறிவார் (சிலர்), அம்மனைக்காய் எறிந்து ஆடுவார் (சிலர்), அழகிய கழங்காடலைச் செய்வார் (சிலர்; இவ்வண்ணம் செய்தும் முனிவன் தங்களை நோக்காமையினால்) குளிர்ந்த திலகங் களை (நெற்றியில்) இடுவாராய், எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டனர், (எ-று).

அமரர்—அமுதுண்டதனால் வந்த பெயர்; மரண மில்லாதவர் எனும்பொருளது. துந்துபி-துந்து என்னும்

ஒலியை யுடைய தேவவாத்தியம். மேகலை-பலமணிகளைக் கோத்த எட்டுக் கோவை யுடைய ஒருவகை ஆபரணம்.

கோகில மழைத்துத் துப்பிதழ் மலர்ந்துக்
கொஞ்சுறு சுகத்தினை விளிப்பார்
கேகய நடிக்கத் தாமுமொண் கலாப
மாமணி யொளிசெய நடிப்பா
ரேசுநா யகனி னிப்பதி தினமு
மெண்மைய வொளிசெயு மெமதுப்
போகநா டெனவுங் கூறுவார் பொலிவிற்
பொன்மைய சுகந்தரு மென்பார்.

(போ-ரை.) பவளம் போலும் வாயைத் திறந்து (சிறிதுபோது) குயிலுடன் கூவி, (பின்) கொஞ்சிப் பேசுகின்ற கிளிகளை அழைப்பார்கள்; மயில் கூட்டம் ஆடிட, தாங்களும் ஒள்ளியசிறந்த கலாபமாகிய இரத்தினபரணத்தின் ஒளி வீச (ச் சிறிது போது) ஆடுவார்கள்; முதற்பெருந்தெய்வமான சம்புகேச்சுரர் எழுந்தருளியிருக்கும் இத்திருவானைக்கா என்னுந் தலம், எந்நாளும் மதிக்கத் தக்க ஒளி நிறைந்த எங்கள் (பொன்னுடாகிய) போக பூமியென்று கூறுவார்கள் (சிலபோது;) எங்களுக்கு இத்தலம் அழகான பொன்போலும் (சிற்றின்ப) சுகத்தைத் தருவதாகும் என்றும் (சிலபோது) கூறுவார்கள்,(எ-று).

'துப்பிதழ் மலர்ந்து கோகிலம் அழைத்து' என இயைக்க. கோகிலம்-குயில். சுகம்-கிளி. கேகயம்-மயில். 'மா கலாப மணி' யென்க. மேகலை எட்டு வடத்தை யுடைய தெனவும், கலாபம்—இருபத்தொரு வடத்தை யுடைய தெனவும் கூறுவர் நச்சினார்க்கினியர்; மேகலை எழு வடத்தை யுடைய தெனவும், கலாபம்—பதினறு வடத்தை யுடைய தெனவும் மண்டல புருடர் கூறுவர்.

சிறிதுபோது என்பதைப் பின்வரும் இரண்டு செய்யுள் களில், அவ்வவ் வினைமுற்றுக்களுக்கும் உரைக்க. (22)

கூந்தலே யவிழ்ப்பார் பினரதை முடிப்பார்
குங்குமங் குயத்தினி லணிவா
ரேந்திய நிதம்ப மடிநெகிழ்த் தணிவா
ரேகசந் திருப்புவா ரிடுவார்
பூந்துகி னனைய நதியினிற் படிவார்
சந்தனம் புழுகொடு பனிநீ
ரேந்துவ ரெறிவார் மதனனின் கலையைக்
கட்கடைக் குறிப்பினு லிசைப்பார்.

(பொ-ரை.) கூந்தலைக் கலேத்து பிறகு அக்கூந்தலை முடிப்பார்கள், முலைகளின்மேல் குங்குமச் சாந்து பூசு வார்கள்; சுமக்கின்ற அல்குலின் (மேல் உடுத்த) ஆடை யை அவிழ்த்து (ப்பின்) உடுத்திக் கொள்வார்கள்; (மார் பில் அணிந்த) உத்தரீயத்தைத் திருப்பி அணிவார்கள்; அழகிய பட்டுச்சேலை நனையும்படி சிவகங்கையில் முழுகு வார்கள்; சந்தனத்தையும், புனுகையும், பனி நீரையும் எடுத்து (சம்பு முனிவர்மேல்) வீசுவார்கள்; காம சாஸ்தி ரத்தின் பொருளைக் கடைக்கண்ணால் குறிப்பித்துக் கூறு வார்கள், (எ-று).

குயம்—கொங்கை. மடி—சேலை; "மடிபரி வட்டம் சேலை" என்பது நிகண்டு. ஏகாசம் என்பது, ஏகசமென ஆயது; ஏகாசம்—மேலாடை; நிகண்டு. கட்கடை-கடைக் கண் என்க. பூந்துகில் என்பதற்கு, பூவேலைசெய்த ஆடை யெனினும், பட்டுச்சேலை யெனினும் ஒக்கும். (23)

பண்ணிறை கலனி னின்னிசை நெறியே
பாடுவார் குழலினிற் படிவார்
பெண்ணிறை குணங்க ளின்றியே கலவிப்
பேச்சினை புரைத்துவக் தடிப்பார்

விண்ணிறை யமுத முண்டுகி ரதனால்
வின்மலர் பறித்துமே லெறிவா
ரெண்ணிறை மடவார் செய்தவச் செயலு
மித்துணை யெனச்சொல லாமோ.

(போ-ரை.) இசை நிறைந்த வீணையில் இருந்து உண்டாகும் இனிய இராகத்தின் வழியாகப் பாடுவார்கள்; வேய்ங் குழலில் (ஊதி, அப்பண்ணினில் மனம் லயித்து, அதனிலேயே) அழுந்துவார்கள்; பெண்களுக்கென நிறைந்த (அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனும் நால் வகைக்) குணங்கள் சிறிதும் இல்லாமல், புணர்ச்சி சம்பந்தமான வார்த்தைகள் அனைத்தையுஞ் சொல்லிக் கொண்டே வந்து நெருங்குவார்கள்; சுவர்க்கத்தின் (இருந்து தாம் கொண்டு வந்த) நிறைந்த அமுதத்தை உட்கொண்டு, ஒளியுடைய மலர்களை நகத்தால் பறித்து, (சம்பு முனிவர்) மேல் வீசுவார்கள்; (யாவராலும்) மதிக்கும் தன்மை நிறைந்த (அம்) மாதர்கள் செய்த அக்காரியங்கள், இவ்வளவு எனச் சொல்லுதற்கு இயலுமோ? (இயலாதென்றபடி) (எ-று).

கலம்—வீணை; "கலம் அலம் யாழ் பூண்" என்பது லகரவெதுகை. உகிர்—நகம். வில் மலர் என்றவற்றில், வில்—ஒளி. (24)

தண்டலை புறவம் பொய்கையின் மலர்ந்த
தண்மையச் சுமனசச் சரங்க
ளண்டின புதைந்த வென்னினு முளத்தி
னப்புலன் வழிச்செலா தமல
னெண்டகு நிலையின் முன்செலு நெறியே
சம்புவ மடைந்தன னெழிலின்
முண்டக முதல வெய்தவச் செயலின்
முடித்தன னிரதிகேள் வனுமே.

(பொ-ரை.) சோலைகளிலும், காடுகளிலும், குளங்களிலும் மலர்ந்துள்ள குளிர்ச்சி வாய்ந்த மலர்களாகிய கணைகள் (எய்யப்பட்டு) வந்து, (அதற்குரிய) உள்ளிடத்தில் (மிகத்தைத்து) அழுந்திய தெனினும், அவ் ஐம்புலன்களின் நெறி செல்லாமல், மலரகிதனான சிவபிரான் நினைக்கத்தக்க நிலைமையின்படி, முதலில் தியானஞ் செய்து கொண்டிருந்த மார்க்கமாகவே சம்புமுனிவரும் இருந்தார்; இரதிதேவியின் மணவாளனான மன்மதனும், அழகுடைய தாமரை முதலாக (உள்ள மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் முதலிய அம்புகளைச் சம்புமுனிவர் மேல் ஏவி) அடித்த அச்செய்கையில், (இனிமேல் அம்பு விடுவதற்கும் இயலாது மிகவும்) சோர்வடைந்தான், (எ-று).

ஐந்து மலர்களில் அசோக மலரும் மாமலரும் சோலைகளிலும், முல்லைமலர் காடுகளிலும், நீலோற்பல மலரும் தாமரை மலரும் குளங்களிலும் பறிக்கப்பட்டன என்க. சுமனசம்—மலர்; "தகைபெறு குசுமம் போது தார் அலர் சுமனசம்.....................பூவின்பேர்" என்பது நிகண்டு. எத்துணையோ அம்புகளைக் காமன் எய்தான் எனினும், 'இவ் அன்பன் தூயவன்' என்று சிவபிரான் தன் திருவுளத்திற் கருதும் வண்ணம், புலனின் நெறி செல்லாது தியானத்திலேயே நிலைத்தார் சம்பு முனிவர் என்க. "நினைக்கும் அரவிந்தம்; நீள்பசலை மாம்பூ; அனைத்துணர்வும் நீக்கும் அசோகம்; வனத்திலுள் முல்லை கடை காட்டும் மாதே! முழுநீலம் கொல்லும் மதன் அம்பின் குணம்" என்ற வற்றால், காமன் கணைகளின் செயல் அறிக. முறையாகத்தான் அம்புகளை எய்தான் என்பார் 'முண்டகம் முதலா எய்த அச்செயல்' என்றார். முண்டகம்—தாமரை; அரையில் முள்களையுடையதெனும்

பொருளது. முசித்தல்—இளைத்தல். தியான சீலத்தால் காமன் கணைகளை வெல்லும் பெரியாரானார் சம்பு முனிவர் என்க. "காமத்தாற் கனலும் வெந்தீ சீலத்தா லவிவதன்றிச் செய்யத்தா னவதுண்டோ" என்பர் கம்பர். (25)

காலனை யுதைத்த பாதமு மணிந்த
கைம்மலை யுரிவையு நீற்றின்
கோலமும் வெயிலுந் திங்களும் வசவுங்
கோலிய நிலவொளிர் விழியுஞ்
சாலவண் சடையுங் கங்கையும்
பிறையுந் தானென லலபிற மதியான்
வாலிதின் மாற்ற மில்லவன் வரையென்
றுயினன் வளனுறு தவத்தோன்.

(பொ-ரை.) வளப்ப முற்ற தவத்தினரான சம்பு முனிவர், (வசந்த காலம், தென்றற் காற்று, மாதர் சேட்டை, காமன் கணைகள் ஆகிய இத்தனையும் தன்னைச் சூழ்ந் திருந்த போதும், மார்க்கண்டேயரைக் காத்தற் பொருட்டு) இயமனை உதைத்த திருவடிகளையும், உடுத்திய யானைத் தோலையும், திருநீற்றினையணிந்த திருமேனியையும், சூரிய சந்திர வன்னியாக வருத்த ஒளி வீசும் திருக் கண்களையும், நிரம்பிய வளப்பமான சடைமுடியையும், அதன்மேல் தங்கிய கங்கையையும், (அக்கங்கையில் படகென உலவும் மூன்றாம்) பிறைச்சந்திரனையும் (உடைய சிவபிரானை, உள்ளத்தில் நினைத்துத்) தியானித்தலன்றி, மற்ற எவற்றையும் (ஒருபொருளாக) மதியாதவராய், (எவற்றாலும் எவ்வகை) மாறுதலும் அடையாதவராய், தூய்மையதான மலைபோலச் சலனமில்லாமல் இருந்தார், (எ-று).

கையையுடைய மலைபோலும் வடிவினதாகலின், யானை—கைம்மலை யெனும் பெயரின தாயது. உரிவை-தோலாடை. வெயில்-சூரியன். வசு-அக்கினி. மாற்றம்-தொழிற் பெயர்; மாறு—பகுதி; அம்—புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி; பகுதி ஒற்றிரட்டல் விரித்தல்; உகரக்கேடு சந்தி. (26)

முன்னரா னிருந்த யோகினை விலக்கி
 புணர்விலா தநங்கனுய் முடிந்தான்
மன்னவ னுரைத்த வர்ணியின் படியே
 யடைந்தவன் றவனிலை மதித்தா
னின்றொரு சிவத்தி னன்பனி னிலையை
 யகற்றிலென் விளையுமென் றேங்கி
நின்றில னவனு நிற்குமோ பரன்றன்
 விழியினு னீறுபட் டடையோன்.

(போ-ரை.) முன் ஒரு காலத்தில் சிவபிரான் (சவுனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்கக்) கொண்ட யோகத்தை அறிவிலாது விலக்கி, (அதனால் இறைவன் நெற்றி விழியால் சாம்பராகி, பின் இரதி பரனைப் பணிந்து வேண்ட அவ்வண்ணல் அருளியபடி, இரதி கண்களுக்கு உருவமாகவும், பிறர் கண்களுக்கு) அருவமாகவும் ஆன மன்மதன், இந்திரன் கூறிய சொற்படி வந்து, (பலப்பல பாணப் பிரயோகஞ் செய்து, இறுதிவரை மயங்காத) சம்பு முனிவரது தவத்தின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு, இன்றைய தினத்தில், ஒப்பற்ற சிவபிரானைத் தியானிக்கும் அன்பரான இவர் தவநிலையை மாற்றினால், இப்போது நமக்கு என்ன ஆபத்து வருமோ என்று (பயந்து) வருந்தி, ஓட்டம் பிடித்தான்; (அவ்வளவு வேகமாக ஏன் ஓடவேண்டு மெனில்,) பரசிவத்தின் நெற்றிக்

கண்ணால் (முன்னொரு காலத்தில்) பஸ்மமாகி யிருக்கும் அவன், நிற்கத்தான் நேருமோ? (அதனாற்றான் தாமதிக் காது ஓடினான்) (எ-று).

அநங்கன்—உருவமில்லாதவன்: அருவமானவன். மன்னவன் என்றது, இந்திரனை. வாணி—சொல்; "மாற்ற மே மொழியே கிரே வாணி" என்பது நிகண்டு. (27)

வானவன் பணியா லெய்தவம் புஜையா
மென்முதல் வனிதையர் பலரு
மானதஞ் செயல்கள் யாவையு மியற்றிப்
பெற்றில ரொருபய னகன்றார்
கானக மணைத்து மாமண நிறைத்துக்
கானபுள் ளிமிர்தர நுழைந்த
வேனிலு மகன்ற தந்நிலை யுரைக்க
மேவின ரிவையர் துறக்கம்.

(பொ-ரை.) இந்திரன் ஏவலால் வந்த அலம்புஜை என் பவள் முதலாகச் சொல்லப்படும் மாதர்கள், தம்மாலான காரியங்கள் அனைத்தும் செய்து, ஒரு பயனும் அடை யாதவர்களாய் நீங்கினர்; காடு முழுதும் சிறந்த மணத் தை அதிகரிக்கச் செய்து, இசையை யுடைய வண்டுகள் ஒலிக்க வந்த இளவேனிற் காலமும் அகன்றது: (மன்மத னும் அவன்படையும் தாங்களும் தோல்வியடைந்த) அச் செய்தியை (இந்திரனுக்குக்) கூற, அவ் வப்ஸரப் பெண் களும் தேவலோகத்தை யடைந்தனர், (எ-று).

கானம்—இசை; புள்—வண்டு. துறக்கம்—பொன் னுடு. (28)

சென்றவ ருரைக்கக் கோபதி மயங்கிச்
செய்வதென் னெனவெணி யமைச்சி
னின்றவற் பணிந்து கூறலு மவனும்
நின்மல னருளினை யடைய

மன்றவன் கழலை யுன்னினன் றவஞ்செய்
சம்புவின் மனநிலை யுணர்த்தி
யின்றவன் கருத்தை யெம்பிராற் குரைத்த
ணங்கடன் வருதியென் றிசைத்தான்.

(பொ-ரை.) (சுவர்க்கம்) சென்ற அம்மாதர்கள், (தமது செயலால் முனிவர் மயங்கா நிலைமையைக்) கூற (க்கேட்ட) இந்திரன் (அறிவு) மயங்கி, (எப்படியும் இவர் தவஞ் செய்து நம்பதவிக்கு வருவரே, இதற்கு) என்ன செய்வது என்று ஆலோசித்து, (தனக்கு ஆசாரியராக வும்) அமைச்சராகவும் இருக்கின்ற பிரகஸ்பதியை நமஸ்கரித்து (இச்செய்தியைக்) கூறுதலும், அப்பிரகஸ் பதி, மலரகிதனும், அம்பலத்தில் இன்ப நிருத்தம் செய்ப வனுமான சிவபிரான் திருவருளைப் பெறுதற்கு, அப் பரமன் திருவடியைத் தியானித்துத் தவஞ்செய்யும் சம்பு முனிவர் மனத்தின் (தூய) நிலையைக் கூறி, இன்றைய தினத்திலேயே அச்சம்பு முனிவரின் மனக்கருத்தை எம் இறைவனுக்குக் கூறுதல் நமது கடமையாகும்; வருவா யாக என்று கூறினர், (எ-று).

தன் பதவிக்குச் சம்பு முனிவர் வருவாராயின் என் செய்வது என்று மயங்கிய இந்திரன், அப்பொழுதே பிர கஸ்பதியிடம் கலந்து ஆலோசித்திருப்பானுயின், அவர் ஞானதிருஷ்டியால் உண்மை யறிந்து கூறி இந்திரனைத் தேற்றியிருப்பார், இது திண்ணம். முன்னரே அதைச் செய்யாது சம்பு முனிவர் தவத்தைக் கலைக்க முயன்ற அபராதத்தைத் தேடிக்கொண்டு, அப்படியும் தன் எண் ணம் பூர்த்தியாகாது வருந்திய அவன், இறுதியில் குரு வைப்பணிந் துவிஷயம் கூறி உண்மையுணர்ந்தான் என்க. சிவனடியார்மனங்கலைக்க முயன்றதால் இந்திரன் தேடிய

பழியை நீக்கப் பிரகஸ்பதி நினைத்து, சம்புமுனிவரின் தவநிலையைச் சிவபிரானிடம் அறிவித்து, அப்பரமன் திருவருள் சம்புமுனிவருக்கு விரைவில் வாய்க்கும்படிச் செய்ய முயல்வதன் மூலம், அப்பழியை நீக்க நினைக்கின்றுராகலின், 'இன்றவன் கருத்தை யெம்பிராற் குரைத்தல் நங்கடன் வருதியென்று இசைத்தான்' என்ருர். இது, அவ் ஆசாரியனின் நல்லெண்ணத்தை நினைவுறுத்தும். மேலும், சிறியர் செய்த பிழையை நீக்கப் பெரியவர்கள் முயல்கின்ற தூய்மையையும் அறிவுறுத்தும். (29)

பொன்னவன் குயில வுண்மையை யுணர்ந்த
போகியுந் தெருட்சியை யடைந்து
என்னிது புரிந்தே னென்றெணி யிரங்கி
யெண்மைய குருமொழிப் படியே
மன்னுறு மமரர் சூழ்தர நடந்து
மாணுறு மதிசடை விமலன்
றன்னடி யடைந்தச் சம்புவின் றவத்தை
யோதிடக் கயிலையைச் சார்ந்தான்.

(பொ-ரை.) பிரகஸ்பதி (இவ்வண்ணம்) கூற, (அதனுல்) உண்மையைத் தெரிந்துகொண்ட இந்திரனும் தெளிவுபெற்று, (ஒப்பற்ற அடியவர் மனம் வருந்த) இவ் வடாத காரியத்தைச் செய்தேனே! என்னே இது என்று எண்ணி வருந்தி, மதிக்கத் தக்க (தனது) ஆசாரியன் உரைத்த வண்ணமே, நிலைபெற்ற தேவர்கள் (தன்னைச்) சூழ்ந்துவரப் புறப்பட்டு, சிறப்புப் பொருந்திய மதி யணிந்த சடாமகுடத்தை யுடைய சிவபிரானது திருவடியைச் சார்ந்து சம்பு முனிவரின் தவத்தின் மிகுதியைக் கூறுதற்குத் திருக்கயிலாய மலையை அடைந்தான்.

பொன்னவன்—வியாழன்; தேவகுரு. போகி—இந்திரனது பலபெயர்களு ளொன்று. (30)

தவநிலைச் சருக்கம் முற்றிற்று.

உ

# அசயந்தி சருக்கம்.

## கோச்சகக் கலிப்பா.

தருமமென வடிவெடுத்துத் தவமியற்றும் பெருமுனிவன்
புருகூதன் விடுத்திடுமப் பூவையரான் மயங்காத
பெருநிலையை யுரைத்துமினிப் பெருமாட்டி புன்னகையின்
வருமன்னை சம்புதனை மணம்புரியுந் திறமுரைப்பாம்.

(பொ-ரை.) தரும தேவதை யென்னும்படி வடிவம் தாங்கித் தவஞ்செய்யும் பெருமை பொருந்திய சம்பு முனிவர், இந்திரன் அனுப்பிய அத்தெய்வ மாதர்களால் மனம் மயங்குத லடையாத பெரிய நிலையை, (இதுகாறும்) கூறினோம்; இனிமேல், உமாதேவியாரின் புன்னகையிலிருந்து தோன்றும் அசயந்தி யம்மை, (அச்)சம்பு முனிவரைத் திருமணம் செய்யும் மேம்பாட்டையும் சொல்கின்றோம், (கேளுங்கள்) (எ-று).

புருகூதன்—இந்திரன். இதுமுதற் பத்தொன்பது கவிகள்—நாற்சீரும் காய்ச்சீரும் மாச்சீரும் விளச்சீருமாக விரவிவந்த அளவடி நான்குகொண்ட தரவு கோச்சகக்கலிப்பாக்கள்; இவற்றைக் கலிவிருத்த மென்பாருமுளர். சீர்கள் அளவு மிக்கும் குறைந்தும் வருதலின், கொச்சகமென்றலே சிறப்புடையது. (1)

கலைமகளின் மேனியெனக் கவினன்ப ருள்ளமென
நிலைமோனர் முழுஞானப் பிழம்பெனவு நீளமுதச்
சலதியெனப் பலகோடி சந்திரரி னுதயமென
நிலவுமொளித் திருக்கயிலைச் சிவகணங்க ணிறைவதுவே.

(பொ-ரை.) சரஸ்வதியின் திருமேனி யெனும்படியும், அழகிய அன்பர்களின் (தூய்மையான) திருவுள்ளம்



சிவசத்தி தாண்டவத்தில் அசயந்தி தேவியார் அவதரித்தல்.

எனும்படியும், நிலையை யுடைய ஞானிகளது முழுமை யான ஞானத்தின் திரட்சி யெனும்படியும், நீண்ட திருப் பாற்கடல் எனும்படியும், அநேக சந்திரர்கள் உதயமா னார்களோ எனும்படியும் விளங்கிய பேரொளி வீசும் திருக்கயிலாயம், சிவகணங்கள் நிறைந்திருப்ப தாகும், ()

இது, உவமை யணியென்க. (2)

விந்தை மகிழ்தில் றென்றிடுமவ் வியன்பொருப்பிற்
பந்தணையு மெல்விரற் பாவை யிடப்பாலிற்
சந்தநிறை மன்ற முறைதருமச் சங்கரனை
மெந்தை முகநோக்கி யெழுந்திறைஞ்சி யஃதுரைப்பாள்.

(போ-ரை.) (ஞான) லட்சுமி களித்திருப்பது; முடி வில்லாதது என்று (அறவோரால்) கூறப்பெறும் அந்தப் பெருமை பொருந்திய (திருக்கயிலாய) மலையில், (பூச்) செண்டு சேர்ந்துள்ள மென்மையான விரல்களை யுடைய சித்திரப்பாவைபோலும் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியார் (விரைவில்) எழுந்து, அழகு நிறைந்த (திருவோலக்க) மண்டபத்தின்கண் (இருக்கும் அரியணை யில்) அமர்ந்துள்ள சங்கரனை அப்பெருமானின் திரு முகத்தைப் பார்த்து நமஸ்கரித்து, (பின்வரும்) இதனைக் கூறுவார், (எ-று).

விந்தை—இலக்குமி. வியன்—பெருமை. பாவை— கண்மணிப்பாவை யெனினுமாம். சந்தம்—அழகு; நகர வேதுகை காண்க. 'உறை தருமச் சங்கரன்' எனப் பிரித்து—எழுந்தருளியுள்ள அறத்தின் வடிவான இறை வன் எனப் பொருள் கொள்ளினுமாம்; சங்கரன்—சுகத் தைத் தருபவன். (3)

கண்மகிழும் வரைவளைத்த கரத்தோய்நி னற்கவினும்
மண்ணுலகங் கலைக்கடலின் னயமறியா மதியமைந்து

எண்மையுறப் பெரிதாஞ்சிவஞ் சத்தியே யேற்றமென
உண்மைநிலை புணராம லுரைக்குமஃ துணர்வேயோ.

(பொ-ரை.) (காண்பவர்) கண்கள் களிக்கத் தக்க (மேரு) மலையை (வில்லாக) வளைத்த திருக்கரத்தை யுடையவரே! தேவரீரால் விளங்கும் நிலவுலகம், நாற்கடலின் இனிமையை புணராத அறிவு பொருந்தி, (பிறர்) மதிக்குந் தன்மை (தமக்கு) உண்டாக, (சத்தியினும்) சிவமே பெரியது; (சிவத்தினும்) சத்தியே மேலானது என்று (நமது) உண்மை நிலைமையை புணர்ந்து கொள்ளாமல் இவ்வண்ணம் (பிதற்றலாகக்) கூறுவது, (உண்மை) உணர்ச்சியின் பாற்பட்டதோ, (இல்லை யென்றபடி). ()

'கண்மகிழுங் காத்தோய்' என இயைப்பினும் தகும். நயமறியாமதியமைதல் — பேதைமை பெற்றிருத்தல். குத்தன் மாகுத்தன் எனுமிருவர் கலைகளை ஓதிய செருக்கால், சிவம் பெரிது சத்தி பெரிது என்று இருவர்களும் தாந்தாமே வாதிட்டு, இறுதிவரை முடிவுபெறுதலின்றி, திருக்கயிலை யடைந்து, சிவத்தினிடம் தத்தம் கருத்தை வெளியிட்டுத் தங்கள் ஐயம் விலக்குமாறு வேண்ட, அப்பரமன் அவ்விரு பெயரின் பேதமிலாப் பெருநிலையை யுரைத்தும் ஒவ்வாராய் மீட்டும் பகைக்கக் கண்டு, சிவம் பெரிதென்றவனைச் சிவமும் சத்தி பெரிதென்றவனைச் சத்தியும் சபித்த வரலாற்றைத் திருக்கழுக்குன்ற தலபுராணத்திற் காண்க. இத்தகைய வாதம் மிகுந்த அக்கால நிலையை நினைத்தே இறைவனை நோக்கி யிவ்வண்ணம் இறைவி வினவலுற்றாள் என்க. உலகம்—இடவாகுபெயர். (4)

இன்ன குறைநீங்க வருடியென விசைத்திடலும்
முன்னவனுந் தன்றேவி முகநோக்கிப் பாவாய்கே
ளின்னவா றன்னவர்க ளிசைத்திடினுங் கரிலொன்று
மொன்றனுரு நந்தம்மை யுண்மை யெனவுரைப்பான்.

(பொ-ரை.) (அறியாத் தன்மையால், உலகம் பெறுகின்ற) இந்த குறைபாடு நீங்க அருள்செய்தல் வேண்டும். என்று (தேவி) கூறுதலும், முதற்கடவுளான சிவபிரான் தன்னுடைய தேவியின் திருமுகத்தைப் பார்த்து, மாதே! கேள்; இவ்வண்ணம் (உலகின் வாழும்) அம்மக்கள் (சிவம் பெரிது சத்தி பெரிது என்று) உரைப்பினும், குற்றமொன்றும் நம்மைச் சாராது: (இது) மெய்ம்மையாகும் என்று (மேலும்) கூறுவான், (எ-று). கரில்—குற்றம். (5)

பேதைப் படுக்கும் பிறவிக் கடனீந்து
மோதித் திறத்தை யுணர்ந்தோர்க ளிவ்வகையா
வாதம் புரியார் வண்டார்பூங் குழலின்னை
நாத வடிவினிறை நயமா மெனநவில்வார்.

(பொ-ரை.) அறியாமையிற் சேர்க்கும் பிறப்பாகிய கடலைக் கடத்தற்குக் கருவியான தத்துவ ஞானத்தின் தன்மையை அறிந்தவர்கள், (தாம் அத்தத்துவ ஞானத்தை உடையவர்களாகையால்,) இவ்வகையாக வாதஞ் செய்யமாட்டார்கள்; வண்டுகள் மொய்க்கும் அழகிய கூந்தலையுடைய உன்னை, (எமது) நாத வடிவத்தில் நிறைந்த இன்பமாகும் என்று (அவர்கள்) சொல்வார்கள், (எ-று).

ஓதி—அறிவு; தத்துவ ஞானம். நயம்—இன்பம்; நிகண்டிற் காண்க. (6)

பொன்னானே மொளிநீ பூவானேம் மணநீ
மின்னிசைநீ பாவானேம் வாணீ யியல்மணியா
மன்னநிலை மெய்ப்போத வின்ப மஃதறியா
ரென்னாவர் கலையோதி யேமாற்ற மடைந்தாரே.

(பொ-ரை.) யாம் பொன்னாக உளேம், நீ (அப்பொன்னில் நிறையும்) ஒளியானாய்; யாம் மலராக உளேம், நீ.

(அம்மலரின் நிறையும்) மணமானாய்: யாம் பாசுரமாக உளேம், நீ (அப்பாசுரத்தில் நிறையும்) இனிய இசையானாய்; யாம் இலட்சணமான மணியாக உளேம், நீ (அம்மணியின் மிளிரும்) ஒளியானாய்; அந்த அபேதநிலைதான் சச்சிதானந்தம் எனப்படும்: அந்த நுண்மையை அறியாதவர்கள், நூற்களைக் கற்றதனால் மட்டும் என்ன பயன் அடைவார்கள்: (வீணுக்கு அனைத்தும் அறிந்தவர்போலிருந்து, இறுதியில் ஒரு பயனையும் அடையாது) ஏமாற்றந்தான் அடைந்தார்கள், (எ-று).

"பாவானேம் இன்னிசைநீ, யாம் இயல்மணி நீ வாள்" என இயைக்க. வாள்—ஒளி; உரிச்சொல். மெய்ப்போத யின்பம், உண்மை அறிவு ஆநந்தம், சத்து சித்து ஆநந்தம் என்பவை ஒருபொருளன. (7)

தண்மைநீ புனலானேந் தழலானே னீயுரும
முண்மையரு ணீயே யுறைதருநல் மஞ்சிகையா
மெண்மையுற வுயிர்க்குயிரா யிருந்தேமெவர்களுக்கு
மண்மையதா யம்பலத்தி லானந்த நடம்புரிவேம்.

(பொ-ரை.). யாம் நீராக உளேம், நீ(அந்நீரின் உள்ள) குளிர்ச்சியானாய்; யாம் நெருப்பாக உளேம், நீ (அந்நெருப்பின் நிறைந்த) வெம்மை யானாய்; (என்றும்) உளதான திருவருள் நீயே, (அத்திருவருள்) தங்கிய பேழை, யாமாவோம்; நிலைத்தலைச் செய்து உய்யும்படி (இருதிணையுலகில் வதியும்) உயிர்க்கு உயிராக (யாமிருவரும்) இருக்கின்றோம்; (அஃதன்றி,) யாவர்க்கும் சமீபமாகச் சிற்றம்பலத்தில் ஆனந்த தாண்டவம் செய்கின்றேம், (எ-று).

உருமம்—வெம்மை; "வெம்மை கோரம் கருமை உருமம்" என்பது நிகண்டு. மஞ்சிகை—பெட்டி. தம்மை நினைத்து உய்ய உயிர்க்குயிரா யிருந்து, மேலும் அவ்வு

யிர்த் தொகுதியின் பக்கத்தே யிருந்து நாண்டவம் செய்வது தற்பரன் கருணை. (8)

என்று சொலுநிலையி னெம்பெருமா னியற்கைநிலை
யொன்ற வருமகிழ்ச்சி யுடனெம் மூமையினுடன்
மன்றதனி னிலைவெய்தி னனே மகிபர்பல
ரின்று நடக்காட்சி யெங்குளதென் றேங்கினரோ.

(பொ-ரை.) என்று (தேவியிடம்) சொல்லிக்கொண்டேயிருக்கும் நிலையில், எமது இறைவன் (தனது) இயற்கைத் தன்மையின் நிலைமை பொருந்தவந்த களிப்போடு, எமது உமாதேவியாருடன் (தனது) சிற்றம்பலத்தின் நிலைப்பைக் கொண்டானே; (நாடோறும் திருத்தாண்டவ தரிசனத்தை மாலைப் பூசையில் பெற்ற பின்னரே உணவுகொள்ள நினைக்கும்) பல அரசர்கள், இன்றைய தினத்தில் (எம்பரன்) திருக்கூத்தாக் கோலம் (தரிசனமாகவில்லையே; அந்தோ! அக்காட்சி இவ்வேலை) எங்குப்போயுளதோ என்று கூறி வருந்தினரோ, (எ-று).

குளகம்; அடுத்த செய்யுளில், "உரைநடுவே நடனமியற்றினர்" என்பதுகொண்டு முடியும். (9)

அம்மன்ன ருய்ய வருங்காட்சி யளித்திடவோ
விம்மகியுஞ் சத்திசிவ மொன்றென்ன வினிதறிய
நம்பனுள மெண்ணியதோ நவின்ற வுரைநடுவே
யெம்பரனுமுமையர்சிவையுமெழினடன மியற்றினரால்.

(பொ-ரை.) (தாண்டவ தரிசனம் நினைத்து வருந்திய) அந்த அரசர்கள் உய்யும் வண்ணம், அருமையான (நடனக்) காட்சியை (அவர்களுக்கு) வழங்குதற்கோ, இவ்வுலகம் முழுவதும் சத்தியும் சிவமும் ஒன்றேயாகும் என்று இனிதாக அறிந்துகொள்ள இறைவன் திருவுள்

ளம் கருதியதோ, (அறியோம்;) தேவியாரிடம் வார்த்தை யாடிக்கொண்டேயிருக்கும் சொல்லின் இடையில், எமது பரமனும், உயர்ந்த மங்களத்தை யுடைய பரமேஸ்வரி யாரும் (மகிழ்வு மிக்கு) அழகிய தாண்டவத்தைச் செய்ய லாயினர், (எ-று).

தன்பெருமை தானறியாத் தன்மையனுஞ் சிவபெரு மான், இறைவியோடு தான்கலந்த அபேதநிலை கூறிவரும் போதே, இயற்கை நிகழ்ச்சியின்படி தேவியுடன் ஆனந்த தாண்டவஞ் செய்ய நேர்ந்ததற்கு, சிற்றம்பலத்தை நினைத்தோ, தாண்டவ தரிசனம் கண்டபின் உணவு கொள்ளும் நியமத்தை யுடைய சேரமான் பெருமாள் நாயனார் போன்ற பேரரசர்கள், அன்று நடதரிசனம் காணாது வருந்தும் நிலைநீக்க நினைத்தோ, சத்திசிவ மொன்றென்பதை உலகறிய வெண்ணியோவென ஐய வணியில் வைத்துக் கூறிய இதனை, அதிசயோக்தியணி யென்றுருமுளர். (10)

அன்னிலைமுன் புறப்பட்ட வரியுடன்விண் புலவோரும்
பொன்னவனு மெய்திப் பொலிவு நிறைநடனந்
தன்னைக் கணங்களுடன் றாங்கண்டு மதர்வெய்தி
யென்னையாம் பெற்ற யேற்றமென மெய்மறந்து.

(போ-ரை.) (இறைவனும் இறைவியும் ஆநந்த தாண் டவம் செய்துகொண்டே யிருக்கும்) அப்போது, (சம்பு முனிவர் தவநிலையைச் சிவபிரானிடம் விண்ணப்பிக்க,) முன்னே பொன்னுலகினின்று புறப்பட்ட இந்திரனுடன், தேவர்களும் பிரகஸ்பதியும் (திருக்கயிலாயத்தில் உள்ள திருவோலக்க மண்டபத்தை) அடைந்து, நிறைந்த அழ கினை யுடைய திருத்தாண்டவத்தை சிவகணங்களோடு நோக்கி மகிழ்ச்சி யடைந்து, (எதிர்பாராமல் இக்காட்சி

காண) யாம் அடைந்த மேம்பாடு என்னே என்று (நினைத்து) மெய்ம்மறந்தவர்களாய், (எ-று).

குளகம்; அடுத்த செய்யுளில் 'ஆடுவார்' என்பது கொண்டு முடியும். மதர்வு—மகிழ்வு. (11)

ஆடுவார் கணங்களுட னயனுங் கலையாளு
மீடிலா முனிவரா ரேழிசையா ழுதையிசைக்க
வூடே பெருமுழவை வாணனொடு முயர்நந்தி
நீடுற வொலித்திடுமந் நிருத்தமது வாழியவே.

(பொ-ரை.) சிவகணங்களுடன் (சேர்ந்துகொண்டு, தாமும்) ஆடத் தொடங்கினார். பிரமனும், (அவன் மனையாளான) கலைமகளும், (ஒருவரும் தமக்கு) ஒப்பாகாத முனிவர்களான தும்புரு நாரதரும், சப்த சுரங்களையுடைய வீணாகானம் செய்ய, உயர்ந்தவரான நந்தியெம்பெருமான், இடையிடையே வாணனோடு பெரிய முழவினை அதிகமாக ஒலித்தல் செய்ய நேர்ந்த அத் திருத்தாண்டவம், வாழக்கடவது, (எ-று).

ஏழ் இசை—ச, ரி, க, ம, ப, த, நி யெனவரும் சப்த ஸ்வரங்கள். அயன்—பிரமன்; அஜன் எனும் வடசொல்லின் விகாரம்: விஷ்ணு புதல்வன் என்பது பொருள்: அ—விஷ்ணு.

வாணன் வரலாறு:—சிவப்பிரீதி மிக்க இவன், பின் விபரீத அறிவால் அமரரை யிம்சித்தல் நோக்கிய சிவபிரான், தன்பால் அன்புசெலுத்திய அவனைத் தானே தண்டிக்க மனமின்றி, கிருஷ்ண பகவானைக் கொண்டு அடக்கி இறுதியில் வீடுபேறளித்தனர். அவன் கயிலையில் குடமுழா முழக்கும் திருப்பணியின் ஈடுபட்டுளான் என்பதை, "குடமுழா வாணன் ஈராயிரங் கரங்கொண்டு குமுகுமுவென்றேமுழக்க" எனவரும் தமிழ்மறையானறிக.

நந்தி வரலாறு:—சிலாதர முனிவரின் புதல்வரான இவர், கோடி வருடம் மிக உக்கிரமான தவஞ்செய்து, சிவபிரானுக்கு வாகனமும் துவாரபாலகருமானவர்; சந்தான குரவர்களுக்கு முதற்குருவும் சிவபெருமானுக்குப் பிரதம மாணுக்கரா யுள்ளவரும் இவரேயாம். (11)

அன்னிலையி னிறைவி யருட்கூத்து விஞ்சுதலை
யுன்னலுறு விபுத ருண்மகிழ்ந்து கரங்கொட்ட
வென்ன யிதுவென் றெவரு மதிசயித்துப் [கன்
பன்னவூர்த் துவதாண்ட வம்புரிந்தான் பாண்டரங்

(பொ-ரை.) அவ்வேளையில் தேவியின் திருவருள் தாண்டவம், (சிவபிரான் தாண்டவத்திலும் மேலாக) அதிகரித்தலை நினைத்தல் பொருந்திய தேவர்கள், உள்ளங் களித்து கைகொட்டுதலும், அதே காலத்தில், (ஆ) என்ன இது! என்று எவரும் வியந்து கூற, (முப்புரமெரித்த போது) பாண்டரங்கக் கூத்தாடிய பரமன், (ஒருசேர வென்று)ஊர்த்துவ தாண்டவத்தைச் செய்தான், (எ-று).

விபுதர்—தேவர்கள். ஊர்த்துவ தாண்டவச் செய்தியை அடுத்த செய்யுளினுங் காண்க. பாண்டரங்கம்—பதினோராடலுள் ஒன்று; அது—தேவர்களாகிய தேரில் முன்நின்ற பிரமன் பார்க்கும்படி, பைரவி வடிவமான சிவபிரான் முப்புரமெரிக்கச் சென்ற காலத்தில் வெண்ணீற்றை யணிந்து ஆடியது: பாண்டரங்கக் கூத்தாடிய காரணத்தால், இறைவனுக்கும் பாண்டரங்கன் எனும் பெயர் உளதாயிற்று. "தேர்மு னின்ற திசைமுகன் காணப், பாரதி யாடிய வியன்பாண் டரங்கம்" என்பது காண்க. (12)

ஓரடியைப் பூவிருத்தி யோரடியை விண்டேக்கி
நேரலுறு மக்கூத்தி னிலைமை தனையுணர்ந்துப்

பாரறிய நாணும் பரசிவையு முகந்திருப்பி
மூரனகை சிறிதரும்பி யொளிதன்னை முகிழ்த்தனளால்.

(பொ-ரை.) ஒரு திருவடியைப் பூமியில் ஊன்றி, மற்றொரு திருவடியை ஆகாயத்தில் தூக்கி(ச்செய்ய)நேர்ந்த அத் தாண்டவத்தின் (மேன்மை)நிலைமையைத் தெரிந்து, (தானும் அத் தாண்டவம்போல் செய்ய இயலாப் பெண்மை நிலையால்) உலகறிய நாணங் கொள்ளும் இறைவியும், திருமுகத்தை (ஒருபக்கமாகத்) திருப்பி, புன்னகை சிறிதரும்பி (அந்நகை) ஒளியைத் தோற்றுவித்தாள், (எ-று).

'ஓரடியைப் பூவிருத்தி யோரடியை விண்டேக்'கல், ஊர்த்துவ தாண்டவமென்க. பூ—பூமி. (13)

கருங்குழலுஞ் சேல்விழியுங் கமல மெனுமுகமு
முருந்திளகை மஞ்ஞைரு முகிழ்சாயன் னடையன்னந்
திருந்து மிழைநுசுப்புத் தெய்வ வணங்கொருவள்
விருந்தாகு மனைநகையின் வெளியாகி வணங்கினளே.

(பொ-ரை.) (மேகத்தைப் போன்ற) கருமையான கூந்தலும், சேல்மீன் போன்ற கண்களும், தாமரைமலர் போன்ற திருமுகமும், (முத்துவரிசை போன்ற) வெண்மையான பற்களையுமுடைய மயில்போன்ற குவிந்த சாயலையும், அன்னம்போன்ற நடையையும், திருத்தமான நூல்போலும் இடையையுமுடைய ஒரு தெய்வமாது, புதுமையான தேவியின் புன்னகையினின்று அவதரித்து, (தான் அவதரித்தற்குக் காரணமான இறைவனையும் இறைவியையும்) நமஸ்கரித்தாள், (எ-று).

கருமையும் சேலும் கமலமும் முருந்தும் மஞ்ஞையும் அன்னமும் இழையும், முறையே கூந்தலுக்கும் கண்களுக்கும் முகத்திற்கும் பற்களுக்கும் சாயலுக்கும்

நடைக்கும் இடைக்கும் உவமை. நடையன்னம்—உருவகம் எனினுமாம். முருந்து—வெண்மை; லகரவேதுகை. விருந்தாகும் அனை நகையென்பதற்கு—காட்சி விருந்தான தேவியின் புன்னகை யெனினுமாம். (14)

முன்னரளி யுயர்மாதர் நவமணியின் முகிழ்வித்த
வன்னையவ ணகையொளியி லசயந்தி வருதலுள
பின்னிலையும் புதியதோ வெம்பெருமா னனைவோர்க்குந்
தன்னடனச் சாந்தி யுளகாட்சித் தகவளித்தான்.

(பொ-ரை.) முன்னொரு காலத்தில் கருணை மிகுந்த (ஒன்பது) மாதர்களை, (தனது திருவடிச் சிலம்பிலிருந்து உதிர்ந்த) நவரத்தினங்களினின்றும் தோற்றுவித்த அன்னையான அவ்வுமாதேவியாரின் புன்னகை ஒளியிலிருந்து, அசயந்தி (யென்னும் திருநாமத்தை யுடைய அம்மையார்) அவதரித்தல் செய்த இந்த நிலைமை, (தேவிக்குப்) புதிய செய்கை யன்று, (பழைமையேயாம்; அதன்பின்,) எமது இறைவன் (தேவர்கள் முதலிய) யாவருக்கும், தனது தாண்டவ அமைதியான மேலான திருக்காட்சியைத் தகுதியாக அநுக்ரகித்தான், (எ-று).

சூரன் தொல்லை நீங்க அமரர் பிரார்த்தித்த போது, சிவபிரான் ஆறு திருமுகங்களிலிருந்து எழுந்த ஆறு நெருப்புப் பொறிகளையுங் கண்டு, அஞ்சியோடிய தேவியின் காற்சிலம்பு ஒன்றுடனொன்று மோதி உதிர்ந்த நவமணியின்மீது அத்தேவியின் சாயைபட, அச்சாயலையே ஒன்பது மாதராகப் பாகிவை வருவித்தாள் என்று கந்தபுராணங்கூறும். அவ்வாறு பொறிகளும் சரவணப்பொய்கையில் தங்கி முருகனாயபின், அவ்வொன்பது மாதரும் சிவத்தைக் காதலித்துப் பெற்ற வீரவாகு முதலிய வீரர்களே முருகப்பிரானுக்குத் துணைவராயினர் என்பது வர

லாறு. புன்னகையில் அசயந்தியைத் தோற்றுவித்தது அதிசயமன்று; இறைவிக்கு இத்தகைய நிகழ்ச்சி பல முன்னரே இயன்றுளது என்று பழைய உண்மை தோன்றக் கூறிய இது, எடுத்துக்காட்டுவமையணியின்பாற்படும். அசயந்தியென்ற வடசொல்லுக்கு, நகையில் உதித்தவள் என்பது பொருள்; அசம்—சிரிப்பு. நடன அமைதியை, நடனச் சாந்தியென மங்கலமாகக் கூறினார். (15)

அஞ்சலிக்கு மசயந்தி யாகமுறத் தழுவுமுமை
யெஞ்சலிலாய் வாழி யெமதிடத்தி னிருத்தியென
மஞ்சரியைக் கொய்து வழிபாட்டின் மன்னவவள்
விஞ்ச வுறுவிபுதர் கழலிறைஞ்சி விளம்புறுவார்.

(போ-ரை.) (தம்மை) நமஸ்கரித்து நிற்கும் அசயந்தியை உடல்பொருந்தத் தழுவிய உமாதேவியார், குறைவில்லாதவளே! வாழ்வாயாக; (இனி) எமது பக்கத்தில் இருப்பாயாக என்று அநுக்ரகஞ் செய்தலும், (அதன் பின்) அசயந்தி, (தேவிக்கு) மலர்பறித்துச் செய்யும் வழிபாட்டிற் பொருந்த, (அச்சமயம்) மிகுதியாக உள்ள தேவர்கள் (சிவபிரான்) திருவடியை நமஸ்கரித்து, (பின் வருமாறு) சொல்லத் தொடங்கினர். (எ-று).

மஞ்சரி—பூங்கொத்து; "தொத்து மஞ்சரியினோடு துணர் இணர் குலையைந்தும் பூங்கொத்தின் பேர்" என்பது நிகண்டு. அசயந்தி-இரண்டாம் வேற்றுமைத் தொகை. (16)

பண்ணியனுன் மறைவிரித்த பரமேட்டி மெய்யடியா
ரெண்ணியகா ரியமுடிப்பாய் சம்புமுனி யெனவொருவ
ரண்ணுதவ முணர்தி யஃதுரைக்க வந்துநடங்
கண்மகிழக் காணும் பெரும்பேறு கண்டனமால்.

(போ-ரை.) இசை நிறைந்த நான்கு வேதங்களையும் வெளிப்படுத்திய தெய்வமே! மெய்ம்மையான அடியவர்கள் நினைத்த கருமங்களை நிறைவேற்றுபவரே! சம்பு முனிவர் என்ற ஒரு பெரியவரது பொருந்திய தவத்தை யறிந்துளீர்; (நாங்கள்) அத்தவ நிலையை (த்தேவரீரிடம்) கூறவந்து, கண்கள் களிக்க (இறைவியுடன் செய்த) ஆநந்த தாண்டவத்தைத் தரிசிக்கும் பெரியதொரு பாக்கியத்தை யடைந்தோம், (எ-று).

பரமேட்டி—மேலோன்; கடவுள். அண்ணுதல்-பொருந்துதல். கண்டனம்—பெற்றேம்; காண்டல்-படைத்தல். ஆல்—அசை. (17)

என்னப் பரம்பரனு மிசைந்து விடையமர்ந்து
கன்னல் மொழியினொடு கணங்களுடன் வரவமரர்
துன்னத் தவமியற்றுந் துகளில் பெருமுனிவன்
முன்னரெழுந் தருளுதலு மெய்ம்மறந்து முன்னிறைஞ்சி.

(போ-ரை.) என்று (தேவர்கள்) கூறுதலும், (இறைவன் அவர்கள் கருத்திற்குச்) சம்மதித்து, கரும்பென்ன இனிக்குஞ் சொற்களை யுடைய உமாதேவியோடு (தரும) விடைமேல் ஆரோகணித்து, சிவகணங்களும் தேவர்களும் தொடர்ந்து வர, நிறைந்த தவஞ்செய்யும் குற்றமில்லாத பெருமை பொருந்திய சம்புமுனிவரின் எதிரில் எழுந்தருளவும், (அம்முனிவர் ஞேரெலென நேர்ந்த இக்காட்சியைப் பார்த்து,) முதலில் தன்னை மறந்து, (பின்) அவ்விறைவனை வணங்கி, (எ-று).

குளகம்; அடுத்த செய்யுளில் 'துதித்தான்' என்பது கொண்டு முடியும். (18)

திங்கள் பிறைக்கணியு மிதழியுந் தாதகியுங்
கங்கையுறை சடையுங் கருணை வழிவிழியும்

மங்கை யிடப்பாக மன்னு நிதிப்பெருக்கே
துங்கவிடை யுடையாய் போற்றியெனத் துதித்தான்.

(போ-ரை.) பிறைச்சந்திரனும், அர்த்தசந்திர மாலையும், கொன்றை மாலையும், ஆத்திமாலையும், கங்காநதி தங்கிய சடாமகுடத்தையும், கருணை வழியும் கண்களையும், உமாதேவியாரை இடப்பாகத்திலு மாகக்கொண்ட பெருஞ்செல்வமே! தூய்மையான இடபத்தை (ஊர்தியாகக்) கொண்டவரே நமஸ்காரம் என்று துதித்தல் செய்தார், (சம்பு முனிவர்) (எ-று).

கணி—கண்ணியென்பதன் தொகுத்தல். பிறைக்கண்ணி—மூன்றும் பிறைச்சந்திரன்போன்ற வடிவுடைய ஒருவகை மாலை. இதழி—கொன்றை. தாதகி—ஆத்திமாலை. (19)

அறுசீராசிரிய விருத்தம்.

விடையவன் மகிழ்ந்து நிற்கு வேண்டுவ வினவு கென்ன
வுடையவ மறவா துன்னை யேத்துறு முணர்வு வேண்டுங்
கடையனேன் பதவி பின்னை யேவையுங் கருத கில்லேன்
நடலைய பிறவித் தாப நீக்கதை நல்கு கென்றான்.

(போ-ரை.) தருமவிடைமேல் (தேவியுடன்) அமர்ந்திருக்கும் சிவபிரான் களித்து, (அன்பனே!) உனக்கு வேண்டுவதைக் கேள் (அளிக்கின்றோம்) என்று கூறவும், (சம்புமுனிவர், எம்மை அடிமையாக) உடையவரே! கடைப்பட்டவனான யான், பிற்பட்ட எப்பதவிகளையும் கருதினே னில்லை; தேவரீரை (யென்றும்) மறவாமல் துதித்தல் செய்யும் உணர்ச்சி (மட்டுந்தான் அடியேற்கு) வேண்டும்: துன்பத்திற் கேதுவான பிறவிக் கோடையை நீக்கத் தருந்த அவ்வரத்தை அநுக்ரகித்தல் வேண்டும் என்றார், (எ-று).

பின்னைப் பதவியென இயைக்க; பிற்பட்டபதவி யென்பது பொருள்; எனவே இவை பிறவித்துன்ப நீக்கா வென்பது பெறப்பட்டது நடலை—துன்பம். இதுமுதல் ஐந்து கவிகள்—பெரும்பாலும் முதற்சீர் விளச்சீரும், மற்றைய மாச்சீர் களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (20)

மதியணி யிறைவன் னின்றன் மாமனப் படியே யாகத்
திதியணி யரையர் பல்லோர் நின்வழித் திகழ்க வென்னக்
கதியளித் திடுமெம் மன்னை கன்னிகை யொருத்தி தன்னை
விதிவழி மணந்து நல்ல யில்லறம் வளர்த்தி யென்றாள்.

(போ-ரை.) (சம்புமுனிவர் கூறியது கேட்ட) பிறைச் சந்திரனை யணிந்த சிவபிரான், (அம்முனிவரை நோக்கி,) உன்னுடைய சிறந்த மனத்தின்படியே ஆகுக; (நிலவுலகத்தைக்) காக்கும் அழகுடைய பல அரசர்கள், நினது மரபில் (தோன்றி) விளங்குக என்று அருளலும், (யாவர்க்கும்) மோட்சகதியை யளித்தல் செய்யும் எமது அன்னையான உமாதேவியார், (அன்பனே! நீ) ஒரு சிறந்த பெண்ணை (வேத) விதிப்படித் திருமணம் செய்து, சிறந்த இல்லற தருமத்தை வளர்ப்பாயாக என்று கூறினாள், (எ-று).

திதி—காத்தல், அரையர்—மன்னர். (21)

முனநிகழ் விழைவை முற்று நீக்குற முயலும் யானும்
பினர்நிகழ் நயப்பை மேலும் பெற்றினிப் பிணிப்பி னுயி
லுனைநிக ரொருவ ரில்லாய் தேவியை யுமையா னுன்னித்
தினையள வெனினு நீங்கா தேத்திடச் சிவனு மோதான்.

(போ-ரை.) உமக்கு ஒப்பாக ஒருவரும் இல்லாதபடி (உயர்ந்தோங்கி) இருப்பவரே! முன்னமே (என்னு

டன்) பொருந்தியுள ஆசாபாசபந்தம் முழுமையையும் நீக்குதற்கு முயற்சிசெய்யும் நான், இனிமேலும் இப்பிறப்பில் நேரும் (ஒரு) ஆசாபாசத்தை யடைந்து (அதனாற்) கட்டப்படுவே னாயின், (இறைவா!) தேவரீருடன் இறைவினை அடியேன் தினையளவு காலமேனும் நீங்காது தியானித்துத் துதித்தல் இயலுமோ, (எ-று).

தான்—ஈற்றசை. முனம் என்பது—முற்பிறப்பையும், பினர் என்பது—இப்பிறப்பையும் உணர்த்தும். முனநிகழ் விழைவு—இப்பிறப்பெடுக்கும் பொழுதே ஆன்மாவோடு தொடர்ந்து வந்த முற்பிறப்பின் கருமபந்தம். அருமையான மானுட ஜன்மம் எடுத்ததற்குப் பயன், கர்மபந்தத்தை யொழித்து முத்திபெறுதலே யாகலின், 'முயலும் யான்' என்றார். ஆசைக்கு உரிய விவாக பந்தத்தைப் 'பிணிப்பு' என்றார். (22)

எனவுரை முனியை நோக்கி யெம்பிரா னிசைப்பானிந்த
நனந்தலை யுலகு போல நாடிடாய் மயக்கி னன்ப
பனிமதி வதனச் செவ்வாய்ப் பாலக னொருவன் றோன்ற
லுனியிதை யுரைத்தாம் நீயு முண்மகிழ் மணஞ்செய் கென்றான்.

(பொ-ரை.) என்று கூறிய முனிவரை, எம்மிறைவன் நோக்கிக் கூறுவான்; அன்பனே! இந்த அகன்ற உலகத்தவரைப்போல் (நீ) மயக்கத்தில் விருப்பங் கொள்ளாய்; (இதுயாமறிந்ததே எனினும்,) குளிர்ந்த திங்கள்போலும் முகமும், செவ்விய வாயும் அமைந்த புதல்வன் ஒருவன் (நின்மூலம்) தோன்ற இருத்தலை நினைத்தே, இதனைக் கூறினோம்; (ஆகலின்,) நீயும் (எம்சொற்படி) உள்ளம் களிக்கும் திருமணத்தை, (விரைந்து) செய்க என்று உரைத்தான், (எ-று). (23)

இறைவியும் பரனை நோக்கி யெண்ணச யந்தி மாதை
நிறைமண மிவற்குச் செய்து மென்றலு நிமல னோர்ந்து
பிறைமதி நுதலி னாளைப் பெட்புறு மமரர் சூழ்ந்து
வெறிமலர் மாரி சிந்தத் திருமணம் வியக்கச் செய்தான்.

(பொ-ரை.) (அச்சமயம்) உமாதேவியும் சிவபி ரானைப் பார்த்து, (யாவரும்) மகிழத் தக்க அசயந்தி யென்னும் இம்மங்கை நல்லாளை, இச்சம்பு முனிவனுக்கு (எல்லா மங்கலமும்) நிறையும்படி திருமணம் செய்து வைப்போம் என்று சொன்னவுடனே, மலரகிதனான பரமன் (ஏதோ வொன்றை) நினைத்து, அழகு பொருந் திய தேவர்கள் சூழ்ந்து மணம் வீசும் மலர்மாரி பொழிய, பிறைத்திங்கள் போன்ற நெற்றியமைந்த அசயந்தியை (யாவரும்) வியக்கத் திருமணம் முடித்தான், (எ-று).

தவத்திற் சிந்தை செலுத்தும் முனிவரை நீர் மணஞ் செய்து கொள்ளவேண்டும் என இறைவனும் இறைவியும் உரைப்பதும், முனிவர் மறுத்தபோதும் புத்திரப்பேற் றை நினைவுறுத்திப்பரமன் தூண்டுவதும், அதே சமயத் தில் இறைவி, யாவரும் மதிக்கத் தக்கவள் அசயந்தி யென முனிவன் செவி கேட்கப் பரமனைப் பார்த்துக் கூறி, இவளை இத்தவச்சிரேட்டனுக்கு மணஞ் செய்விக்க லாமெனக் குறிப்பாக் கூறுவதும், உடனே அமலன், முனிவன் சம்மதத்தைக் கேட்பதின்றியே விரைந்து திரு மணத்தை நிறைவேற்றி வைப்பதுமான இவ்வரலாறு, இறைவனும் இறைவியும் ஏதோ தம் திருவுளத்திற் கரு தித்தான் இங்ஙனம் விரைந்து இச்செயலை நடத்துகின்ற னர் என்பது, ஒடியாங்கு ஓதினாலும் உணரப் பெறும். எனவே, தவமே தனமெனக் கொண்டொழுகும் இம் முனிவர் சிறிது தாமதித்தால், மனம்மாறி இணங்கா

ராயின் என்செய்வது என்று இச்செயலை இறைவன் விரைந்து நடத்தினனே யாதோ யாவரறிவர். இம் மணத்தை நடத்திவைக்கும் அப்பார்வதிநாயகன் திருவுள் ளக் கருத்தை, இம்முனிவர் வரலாற்றின் இடையிலேனும் உணர்வோம்; இது திண்ணம். எது எங்ஙனமாயினும், அமலனும் பரசிவையும் நிகழ்த்தும் இவ்வருள் நாடகக் குறிப்பறிந்து மலர்மாரி பொழிய முப்பத்து முக்கோடி அமரர் சூழ்ந்திருந்தது கோடிபெறும். (24)

அதிசய மடையும் பொற்பி னசயந்தி மகிழ்நற் சேர்ந்துத்
துதிபல செயவு மெம்மான் றுணைவியோ டாக்கங் கூறி
யிதமுறு கணங்கள் சூழ பெழினிறை விடையி ஞர்ந்துக்
கதிதரு கயிலை நண்ணி யிருந்தனன் கருணை மூர்த்தி.

(போ-ரை.) வியப்பினை யடைந்த அழகுள்ள அசயந்தி (தனது) கணவருடன் பரமனைப் பலவகையில் துதி செய்யவும், கருணைமூர்த்தியான இறைவனும், இறைவியுடன் (தம்மைத் துதித்த அவ்விருவர்க்கும்) ஆசிகூறி, (அதன்பின்,) இனிமை பொருந்திய சிவகணங்கள் (தேவர்களாதியோர் தம்மைச்) சூழ்ந்துவர, அழகு நிறைந்த இடபத்தின் மேல் (தேவியுடன்) அமர்ந்து, (யாவர்க்கும்) வீடுபேற்றினை வழங்கும் திருக்கயிலாயத்தை அடைந்து பழைய கோலத்தோடு எழுந்தருளி யிருந்தான், (எ-று).

எதிர்பாராது தமக்கு நிகழ்ந்த இத்திருமணத்தை எண்ணியெண்ணி சம்புமுனிவரும் அசயந்தியும் அடைந்த அதிசயத்தை முதலடியிற் காண்க. (25)

அமலனின் கருணைத் தன்மை யிருந்தவா வகத்தி னுன்னி
விமலனுங் கிழத்தி யோடு வியன்மனை மகிழ்வி னெய்தி

யுமைமகிழிறைவன் ரேன்றி நிகழ்ந்ததை யுகப்பிரேதித்
தமையளித் தவர்க்கு நல்ல மனையறந் திகழ நின்றான்.

(பொ-ரை.) குற்றமற்ற சம்புமுனிவரும், சிவபிரான் கருணைத் தன்மை யிருந்த முறையை தேவியுடன் மனத்தில் மகிழ்ச்சியுடன் எண்ணியவராய், (பின் ஆங்கிருந்து புறப்பட்டுத் தமது) பெருமை பொருந்திய இல்லம் சென்று, உமாதேவி மகிழும் பரமன் காட்சியளித்து (அசயந்தியாரை மணம் செய்துவைத்த) நிகழ்ச்சியை தன்னைப்பெற்ற தாய் தந்தையர்க்குக் களிப்பொடு கூறி, (அவர்கள் தெரிவித்த வண்ணம்) சிறந்த இல்லற தருமம் விளக்கம் அடையும்படி இருந்தனர், (எ-று).

அமலனின் கருணைத் தன்மையை எப்போதும் எண்ணுவார் விமலராவார் என்பது சம்பிரதாயம் ஆகலின், சம்பு முனிவரை 'விமலன்' என்றார். (26)

அசயந்தி சருக்கம் முற்றிற்று.

௨

# வாதாவி யினதாவிச் சருக்கம்.

எண்சீராசிரிய விருத்தம்.

அற்றமறு மாகயிலை யாதிசிவை யோடு
　　மாடுநட மிடையுட்கு மம்மைநகை மின்னிற்
பெற்றவச யந்தியினை சம்புமுனி வோர்க்குப்
　　பேணுமண மியலுமுறை பேசிமகிழ் வுற்றோம்
கொற்றநிறை பண்ணவர்கள் கொள்வலியை மாற்றிக்
　　கோதுறுமவ் வசுரகுல மோங்ககளி கொள்ளும்
பெற்றியின வாதாவி யென்னுமிரு பேயர்
　　பேதமுறு கடினநிலை பேணுதலைச் சொல்வாம்.

(பொ-ரை.) குற்றமற்ற சிறந்த திருக்கயிலை மலையின் கண் எழுந்தருளியிருக்கும் முதற்கடவுளான சிவபிரான், உமாதேவியாருடன் (செய்த) ஆநந்த தாண்டவத்தின் இடையில், (ஊர்த்துவ நடனம் செய்யக்கண்டு தான் அது போல் செய்ய இயலாமை கருதிய) இறைவியார், (தனது) புன்னகை யொளியினின்று தோற்றுவித்த அசயந்தி யம்மையை, சம்புமுனிவருக்கு விரும்பத்தக்க திருமணம் நிகழ்த்துவித்த முறைமையைக் கூறிக் களிகூர்ந்தோம்; (இனிமேல்,) வெற்றிநிறைந்த தேவர்கள் கொண்டுள்ள வன்மையை மாறுபடுத்தி, குற்றம் பொருந்திய அசுரவம்சம் விருத்தியாக மகிழ்ச்சி கொள்ளும் தன்மையரான வாதாவி இனதாவி என்ற பெயரையுடைய இருபேய் மக்கள், பேதம் பொருந்திய கொடிய செயலை மேற்கொள்வதைச் சொல்கின்றோம், (முனிவர்களே கேளுங்கள்) (எ-று).

இனவாதாவி யென்பதை, இனதாவி வாதாவி யெனக்கொண்டு கூட்டுக. அமரர் வன்மையை மாற்றி அசுரகுலத்தை ஓங்கவைத்து மகிழும் தன்மையரான இவரை, பேயர் என்றழைக்கும் பெற்றி சுவையுடைத் தென்க. (1)

மங்குறவழ் தென்சலதி மய்யமிசை லக்கம்
மன்னனுறு வியலிடம யோசனையும் வேதி
பிங்கலமு மாமணிய தாரநகை மின்னப்
பீடதில மிடலதுறு ரத்னபுரி யாளுஞ்
சிங்கதுவ சன்குமரன் சேர்விபர சித்துச்
சயவிசய வயசனொடு சோமகரை யீன்றான்
கங்குலியல் வார்வழியிற் காண்வயச னில்லாட்
காமநிறை படிறரிரு கான்முளைய ரீன்றாள்.

(போ-ரை.) மேகங்கள் (நீர்கொள்ளப்) படர்கின்ற தென்கடலின் நடுவில், பொருந்திய இலட்சம் யோசனை விஸ்தீரணமுள்ளதும், நவரத்தின சுவர்ண ரசிதமுதலான வைகளால் பேரொளி வீசும் மதில்களை யுடையதும், ஒப்பில்லாத வன்மை பொருந்திய இரத்தினாகரபுரம் என்னும் சிறந்த நகரத்திலிருந்து அரசாட்சி செய்யும் (அசுர வம்சத்தனான) சிங்கத் துவஜன் புதல்வனாகப் பொருந்திய விப்பிரஜித்து என்பவன், ஜெயன், விஜயன், வயசன், சோமகன் முதலாகச் சொல்லப்படும் பெயர்களையுடைய நான்கு மக்களைப் பெற்றெடுத்தான்; இரவில் சஞ்சரிப்பவர்களான அவ்வசுர வமிசத்தில் தோன்றிய வயசன் என்பவன் மனைவி (யான மகாமோகினி யென்பவள்,) காமம் நிறைந்த வஞ்சகர்களான இரண்டு புதல்வர்களைப் பெற்றாள், (எ-று).

வியன்-அகலமுணர்த்தும் உரிச்சொல். 'பிங்கலமும் மாமணிய தாரநகை வேதிமின்ன' என இயைக்க. பிங்

கலம்-பொன்; ஙகரவெதுகை. தாரம்-வெள்ளி; ரகரவெதுகை. வேதி-மதில்; "வேதி சாலம்..........மதிலின் நாமம்" என்பது நிகண்டு. நகை மின்னல் - ஒளிவீசல். பீடு-பெருமை. மிடல்-வன்மை. சிங்கதுவசன் புதல்வன், விப்ரசித்து; விப்ரசித்துவின் மனைவி மகாமோகினியின் வயிற்றில் இரு புதல்வர் பிறந்தனர் என்க. மகாமோகினிக்குச் சிம்ஹிகையென வேறொரு பெயருமுண்டென்றும், இவள் திதியின் மகள் எனவுங் கூறுவர். கங்குல் இயல்வார் - இரவில் உலவுபவர் எனப் பொருள்படும்; நிசிசரர் எனவரும் வடமொழிப் பெயரை யீண்டு ஓர்க. படிறர்-வஞ்சகர். "படிறு சாட்டியமே வஞ்சம்" என்பது நிகண்டு. (2)

அன்னவர்க ளுற்பவம தன்றுணரும் வெள்ளி
யாதிபனு மண்மியவ னச்சிறுவ ரோங்க
துன்னியவ னாசியுரை யோதியெதிர் காலி
னுற்றிடுநி கழ்வதனை யோர்ந்தமர ரேத்துந்
தன்னிகரில் வாதாவி யினதாவி யென்னத்
தக்கபெய ரிட்டிடலுந் தந்தைமகிழ் வுற்றான்
பன்னவரை யத்திபரி பாய்பரிய தார்தற்
பண்புநிலை மாயைமுதற் குருபயில வைத்தான்.

(பொ-ரை.) அச்சிறுவர்கள் பிறந்ததை அக்காலே தெரிந்துகொண்ட (அசுரகுல குருவான) சுக்கிராச்சாரியும் அவ்விடம் அடைந்து, அப்புதல்வர்கள் சிறப்படைய வேண்டும் என்று நினைத்து, வளர்ச்சிக்கேதுவான ஆசிமொழி கூறி, எதிர்காலத்தில் (அப்பிள்ளைகளால்) நேர இருக்கும் நிகழ்ச்சியை (முன்னரே ஞானதிருஷ்டியால்) தெரிந்துகொண்டு, தேவர்கள் அனைவரும் துதிக்கும்படி தமக்கு ஒருவரும் ஒப்பில்லாத வாதாவி இனதாவி

யென்று (அவ்விருவருக்கும்) தகுதியான பெயரை வைத்தலும், (அது கண்ட) தந்தையான விப்ரசித்து, (அளவிறந்த) களிப்படைந்தான்; (அதன்பின்,) குருவான சுக்கிரன், பிரஸ்தாபிக்கப்பட்ட அப்பிள்ளைகள் யானை, தேர், பாய்ந்து வரும் குதிரை (முதலியவற்றின் மேல்) ஏறி நடத்தல், வில்வித்தை, (சகல) மாய ஜாலம் முதலியவற்றைக் கற்கும்படிச் செய்தான், (எ-று).

வெள்ளி-சுக்கிரன். ஆதிபன் - தலைவன்; குலகுரு. 'அவண் அண்மி' யென இயைக்க. அத்தி-யானை. அரி-தேர்; "அரியொடு கூவிரம் தேர்" என்பது நிகண்டு. பரி-குதிரை. ஊர்தல்-ஏறி நடத்துதல். சிலை-வில். சுக்கிரனே வில்வித்தை முதலிய பலவற்றையுங் கற்றுக்கொடுத்தான் என்றபடி. 'முதல்' என்ற சொற்போக்கில், வாள்வித்தை, அஸ்திர சஸ்திரப் பிரயோகமாதிய அனைத்துங் கொள்க.

ஆயபினர் பன்னிருபி ராயமதை யுற்ற
வாரவுணர் விந்தமலை யண்மியய னுன்னி
நேயநிலை யோகவழன் விண்ணளவு நீட
நின்றுவவி யற்றமுனர் நின்றனன்வி ரிஞ்சன்
தூயபிர மாத்திரமு தற்கணைக ளோடு
தொன்மைவலி யீகவென நல்கியவன் செல்ல
வேயபுக ழார்கயிலை சாரலைய டைந்தே
யெண்ணிருபி ராயமுற மாலணுதம் பித்தார்.

(பொ-ரை.) அதன் பின் பன்னிரண்டு வயதை யடைதல் பொருந்திய (வாதாவி இனதாவி யெனும் பெயருடைய அவ்)அவுணர்கள், விந்தமலையை அடைந்து, பிரமனை அன்பு நிலையில் தியானித்து, யோகாக்கினி ஆகாயமளவு வளர இருந்து தவஞ்செய்ய, கமலாசனனான பிரமன், (அவர்கள் தவத்திற்கு இரங்கி, அவ்விருவர்) எதிரில்

(காட்டிநத்து) நின்றான்; தூய்மை வாய்ந்த பிரமாஸ்திரம் முதலாகச் சொல்லப்படுகின்ற அத்திரங்களோடு, (எங்கள் வம்சத்திற்குரிய) பழமையான வன்மையையும் தருவீராக என்று (அவர்கள்) கேட்க, (அவர்கள் கருத்தின்படி) பிரமன் (வரத்தைக்) கொடுத்துவிட்டுச் செல்ல, (அதன் பின் அவர்கள்,) பொருந்திய புகழ் நிரம்பிய திருக்கயிலைமலைச் சாரலையடைந்து, பதினறு வயதில் (அவ்வயதின் அளவாகவே) நிற்க, பிராணவாயுவை ஸ்தம்பனம் செய்தனர், (எ-று).

மாலனு - பிராணவாயு; அனு - ஆன்மா; மால் - காற்று. பிராண வாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தனர் என்றபடி: இதனை, பிராணயாமம் எனவும், கலைஞானம் அறுபத்திநான்கில் ஒன்றெனவும் கூறுவர். பிரமனிடம் வரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின் திருக்கயிலைமலைச் சாரலை யடைந்து பிராணவாயுவை ஸ்தம்பனஞ் செய்தனர் என்க. (4)

நீடுதவ மன்னவர்க ளின்னவகை செய்ய
    நின்மலனும் வந்திலனென் றன்னதுதெ ரிந்தே
கூடுதன மாவுலவைப் பாசமென வேவிக்
    கோவுலவை கட்டியுறு கோதையொடு மாநட்
பாடுதலை யெண்ணியினை வாயுவலஞ் செய்யு
    மாதிமறை யோதிவா தாவியது செய்தான்
பீடுநிறை யங்கிமறை பின்னவனு மோதிப்
    பேரொளிய பாற்கரனைப் பெரிதயிறல் செய்தான்.

(பொ-ரை.) அவ்விருவரும் இவ்வகையாக உயர்ந்த தவத்தை (நீண்டகாலமாகச்) செய்ய, மலரகிதனான சிவபிரான் (பிரசன்ன மாகாமையின், தங்கள் தவத்திற்கு அப்பரமன்) மகிழ்ந்திலன் என்ற அதனைத் தெரிந்து,

கொண்டு, (அவ்விருவரில்) வாதாவி யென்பவன், தன்னிடத்தில் உள்ள சிறந்த பிராணவாயுவையே பாசமாகச் செலுத்தி, பிரபஞ்ச வாயுவை (வளைத்துக்) கட்டி, பொருந்திய பிராணவாயுவோடு சிறந்த நட்புகொள்ளுதலை நினைத்து, வாயு ஸ்தம்பனம் செய்யும் முதன்மையான மந்திரத்தை யுச்சரித்து, அக்காரியத்தைச் செய்து முடித்தான்; (வாதாவியின்) பின்னவனான இனதாவியும், பெருமை நிறைந்த அக்கினி ஸ்தம்பன மந்திரத்தை உச்சரித்து, (உலகிற்குப்) பேரொளி செய்யும் சூரியனை (அசுர ஜால மாயா சத்தியால் ஒரு சிறு வடிவாகத் திரட்டி, தன்னிதய மண்டல சூரியனோடு தோழனாக இருக்க) எடுத்து விழுங்கினான், (எ-று).

மாவுலவையென்பதும், கோதையென்பதும் பிராணவாயுவை யுணர்த்தும். பிறகாற்றினும் சிறந்ததாகலின், மா உலவை யென்றும், "கோதை முன் கைத்தோல் கட்டி குழல்தார் காற்று ஒழுங்கு சேரன்" என்னும் தகரவெதுகையில் கண்டபடி, கோதை, ஒழுங்குடையது எனும் பொருளினும் வருதலின், பிறகாற்றினும் நேர்மையுடையதாகலின் கோதை யென்றும் பிராண வாயுவைக் குறிப்பித்தார் என்க. கோவுலவை-பிரபஞ்ச வாயு; கோ-பூமி. வாயுவயம் செய்தல் - காற்றினை வசப்படுத்தல். அஃதாவது, வாயு ஸ்தம்பனம். வாயுவயம் செய்யும் ஆதிமறை-வாயு ஸ்தம்பனஞ் செய்யும் முதன்மையான மந்திரம். பின்னவன்-தம்பியான இனதாவி. பாற்கரன்-சூரியன். (5)

வாடைசுட ரின்றிமகி வானுலகி னுற்றோர்
வாதமத டங்கவினெவ் வைப்புசெல வின்றி
நீடிருளி னுற்றனுவு நோயுறவி திர்ப்பி
னின்றனர்க டம்பெயரு ணின்றகுறி வன்னி

யாடிமுன ருற்றவரை விட்டிடுதல் செய்தா
னன்னவரை நம்விழைவ றைந்திடுதி ரென்னக்
கூடமரர் நாமகளை யேத்தியெமை யன்னே
கூடலரின் காத்தியெனக் கூக்குரல்செய் திட்டார்.

(பொ-ரை.) காற்றும் சூரியனும் இல்லாமல், நிலவுலகம் விண்ணுலகம் ஆகிய இரண்டிலும் இருப்பவர்கள், காற்று அடங்கிவிட்டமையால் (சுவாசமும் பந்தித்து) எவ்விடமும் செல்ல இயலாதவர்களாய், நீண்ட அந்தகாரத்தில் அகப்பட்டு, பிராணாவஸ்தை யடைந்து நடுக்கத்தோடு (தத்தளிக்கத்) தமது பெயருள் இருந்த குறிப்பின்படி, (வாதாவியும் இனதாவியும் தவஞ் செய்துகொண்டு) இருந்தனர்: (அதுகண்டு கருணை மூர்த்தியான சிவபிரான், (அவர்களுக்குக்) காட்சியளித்து, (அவர்கள் விழுங்கியிருந்த சூரியன் வாயு என்னும்) அவ்விருவரையும் விடுதலைசெய்து, (அதன் பின்,) அவ் அசுரர்களை (நோக்கி,) (யாது கருதித் தவஞ் செய்கின்றீர்கள்) உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள் என்று கேட்க, (அதே காலத்தில், இறைவன் இவர்களுக்கு இறவா வரத்தை யீவானாயின், என்செய்வது என்று அஞ்சி ஒன்றாகக்) கூடிய தேவர்கள், கலைமகளைத் துதித்து, தாயே! எமைப் பகைவரின் (ஆபத்திலிருந்து) காப்பாற்றுவாயாக என்று (கதறிக்) கூவினார்கள், (எ-று).

சிவபிரான் வரம் வழங்கும் வேளையில் அஞ்சிய அமரர், சத்தியலோகஞ் சென்றுதான் கலைமகளைப் பிரார்த்தித்திருப்பார் என்று கொள்ளவேண்டியதில்லை. அமலன் தவசிகட்குக் காட்சியளிக்கும்போதெல்லாம் சிவகணங்களோடு பிரமாதி தேவர் தொடர்ந்து வருவதுண்டு; ஆகவின், வரம்வழங்க இருக்கும் அப்போது, தங்கள் முன்

பிரசன்னமாயிருந்த கலைமகளைப் பிரார்த்தித்தனர் அமரர் என்றும், தாந்தாம் இருந்த இடத்தே அத்தேவியை பிரார்த்தித்திருக்கவும் கூடும் என்றும் எண்ணுகின்றனர் பெரியோர்.

வாடை, வாதம் என்பன, காற்று என்றும் பொருளில் வருவன. சுடர்-சூரியன். மகி-பூமி; மகி, வானுலகு-இடவாகு பெயர். எவ்வைப்பு - எவ்விடமும். அணு - ஆன்மா; "அணு இயமானன் ஆன்மா" என்பது நிகண்டு. அணு நோயுறல் - பிராணாவஸ்தை யடைதல். வாதாவி - வாயுவைப் பட்சணம் செய்தவன்: இனதாவி - சூரியனைப் பட்சணம் செய்தவன். சூரியனையும் வாயுவையும் விழுங்கியதை 'தம் பெயருள் நின்றகுறி நின்றனர்' என நயமுறக் கூறியது காண்க. வன்னியாடி என்பது - அழலாடி யெனும் சிவபிரான் திருநாமமென்க. கூடலர் - (தம் முடன்) கூடாதவர்; பகைஞர். (6)

அன்னவளு மன்னவரை யஞ்சலென நல்கி
யாரவுணர் நாவினிடை வல்லைவர லானாள்
முன்னவனி னற்கழலை மூதவுண ரேத்தி
மூவரொடு சக்கிரனு நாகமுனி வோர்பூ
மன்னவர்க ளுர்வனப றப்பனவி லங்கு
மாதிரம பாலகரின் மாய்தலில வாக
யின்னவர மீதியென வாணிதடை செய்ய
யெந்தையிறை வன்னியையி சைத்திலர்க ளம்மா.

(போ-ரை.) (அமரர்தம் முறையீட்டைக் கேட்ட) அக்கலைமகளும், அத்தேவர்களை அஞ்சவேண்டாமென்று அபயஸ்தம் தந்து, (தவஞ்செய்யப்) பொருந்தின அவுணரான அவ்விருவர் நாவில் விரைந்துவந்து சேர்ந்தாள்; (அதன்பின், வலிமை) முதிர்ந்த தானவர் இருவரும்,

முதற்பெருங் கடவுளான சிவபிரானது சிறந்த திருவடிகளைத் துதித்து, (இறைவனே!) திரிமூர்த்திகளோடு இந்திரனும், தேவர்களும், முனிவர்களும், அட்டதிசைப் பாலகர்களும், நிலவுலக மன்னர்களும் (ஆகிய எவர்களாலும்,) ஊர்வன, பறப்பன, மிருகாதிகள் முதலிய எவைகளாலும் (நாங்கள்) இறவா திருக்க வேண்டும்; இத்தகைய வரத்தை (எங்களுக்குத்) தருவீராக என்னும் போது, கலைமகள் (தேவர்களுக்கு வாக்குக் கொடுத்தபடி அவ்வவுணர் நாவினிருந்து) தடை செய்தமையின், எந்தையான அக்கினி பகவானை மட்டும் (முற்குறித்தவர்களோடு சேர்த்துக்) கூற மறந்தார்கள், (எ-று).

சக்கிரன்-இந்திரன்; நாகர் முனிவர் என்பது, நாக முனிவர் என்றாயது; கடைக்குறை யென்க. மாதிரம் - திசை. எந்தையும் இறைவனுமான வன்னி யென்க. (7)

தந்தியுரி யோனதுதெ ரிந்ததனை நல்கத்
தானவர்க டம்பதிய டைந்தசுர சிற்பி
தந்தசிறை மாடமலி மாளிகைகள் கூலந்
தங்குமுடு ஞெள்ளலிறை கண்டரசை யாண்டு
தந்திரம தோருதம தேசிகற்ப ணிந்தே
தாயனைய யெந்தைபடை தாவெனவு மன்னுன்
றந்தபல தந்திரம சிந்துவென லாகித்
தானுமுற பாணிசெயத் தானவ ருணர்ந்தார்.

(பொ-ரை.) சிவபிரான், (கலைமகள் சூழ்ச்சியால் அக்கினி பகவானை மறந்து கேட்ட) அதனை யுணர்ந்து, (அவர்கள் கேட்ட) அவ்வரத்தை அநுக்கிரகிக்க, (அதனைப் பெற்றுக்கொண்ட) அவ்வசுரர்கள் தமது (இரத்தினகர புரம் என்னும்) நாட்டையடைந்து, அசுர சிற்பியான மயன், (தங்கள் கட்டளையின்படி) (உயர்ந்த) மதில்களும்,

கிறைந்த (மேல்) மாடங்களை யுடைய மாளிகைகளும், கடைவீதிகளும், (ஆழமாகத் தங்கிய) அகழிகளும், (பிற) வீதிகளும் ஆகப் படைத்த அப்பெரிய நகரத்தைப் பார்த்து, (தந்தைக்குரிய அவ்விராஜ்யத்திற்கு வாதாவி யான தமயனை மன்னனாக, தம்பியான இனதாவியே பிற காரியங்கள் செய்வோனாக அமைய) அரசாட்சி செய்து, நூற்களின் (நுண்மைத்) தன்மையை உணர்ந்த தமது ஆசாரியனான சுக்கிரனை வணங்கி, (எங்களுக்குத்) தாயை யொத்த எந்தையே! (தேவரீர் எங்கள் தோள் வலிக்குத் தக்க) சேனைகளை (ச்சிருட்டித்துத்) தருதிர் என்று பிரார்த்திக்க, அச் சுக்கிரன் (மந்திர பலத்தால்) தோற்றுவித்த பலகோடி சேனைகள், கடல்போல் பெருக் கெடுத்து நிலைத்துப் பேரொலி செய்வதை, (வாதாவி யினதாவி யெனும் அவ்) அசுரர் அறிந்தனர், (எ-று).

தந்தியுரியோன்-யானைத்தோலை யுரித்துப் போர்த்த சிவபிரான். சிறை-மதில். கூலம்-கடைவீதி. உடு-அகழி. தெருள்ளல் - பொது வீதிகளைக் குறித்தது. 'தாயனைய எந்தை' யென்பதில் - தந்தையும் தாயும் நீரே யென்ற பொருள் தொனித்தல் காண்க. தந்திரம்-சேனை. சிந்து-கடல். தானு-நிலைபேறு. பாணி-ஒலி. கடலெனப் பெருகிய சேனை, அக்கடலொலிபோல் முழக்கஞ் செய்தது என்க. (8)

சிந்தைமகிழ் வெய்தியவர் தம்மசுர சிற்பி
சிந்தைவரு மின்னிடையர் மாமயிலர் சேல்கண்
விந்தைமகிழ் நேமிமகன் மான்றனுறு காம
வல்லியினை முன்னவனும் மாயையினை பின்னுஞ்
சுந்தரம ணம்புரிதற் செய்தபின ரோங்குஞ்
சுக்கிரனு மன்னவர்தஞ் சிந்தையுற வாக
விந்திரன்மு தற்பலசு ரர்கணும மாற்று
ரின்னிலையி னன்னவர டக்கியிரு மென்றான்.

(பொ-ரை.) (சேனைப் பெருக்கத்தைப் பார்த்து) மனமகிழ்ந்த அவ்வசுரர்கள், (அதன்பின்,) தமது அசுரகுலசிற்பியான மயனுடைய இருதயத்திலிருந்து உற்பவித்த மின்னல்போலும் இடையினை யுடையவரும், சிறந்த மயில் போலும் சாயலை யுடையவரும், சேல்போல் (பிறழும்) கண்களை யுடையவரும், திருமகள் மகிழும் திருமாலின் புதல்வனான மன்மதன் மயங்கும் (அழகினை யுடையவருமான இருமாதருள், முதலவளான) காமவல்லியை முன் பிறந்தவனான வாதாவியும், (அவனுக்குப்) பின் பிறந்தவனான இனதாவி, (காமவல்லிக்குப் பின்பிறந்த) மாயாவல்லியையும், சுந்தரமான வகையில் திருமணஞ்செய்தபிறகு, உயர்ந்த சுக்கிரனும், அவ்வசுரர் மனத்தில் அமையும்படி, இந்திரன் முதலாகச் சொல்லப்படும் தேவர்கள் உங்கள் குலத்துப் பகைஞர்கள்; (ஆகையால்,) இப்போதே (போர் புரிந்து) அவர்களை அடக்குதல் செய்து, (பின் கவலையின்றி) இருப்பீர்களாக என்று கூறினன், (எ-று).

நேமி-திருமால். மான்றல்-மயங்குதல். (9)

அற்றமறு மாரியனி னன்புரை மதித்தே
வன்னவனி னற்கழலை வீழ்ந்தனரி றைஞ்சக்
கொற்றமுற செல்லுதிர்க ளென்னபடை முன்மைக்
கோடியுறி யோசனைய கூடிவர யேகி
வெற்றிகொளு ருத்திரன லாதநிசை யோரை
வென்றிகொடு மாபவனஞ் சென்றவரை வென்றே
நற்றுதிசெய் தன்னவர்க ளேத்தநனி சென்றே
நாடமரர் வாழ்நகர நண்ணினர்கள் மாதோ.

(பொ-ரை.) (தங்கள் விஷயத்தில்) குற்றமற்ற ஆசாரியனின் அன்புகனிந்த வார்த்தைகளை நினைத்து, அச்சுக்கிரனின் சிறந்த திருவடிகளில் வீழ்ந்து வணங்க, (அவ்-

வாசாரியன்,) வெற்றியுண்டாகப் போய்வாருங்கள் என்று ஆசிர்வதிக்க, (வாதாவியும் தம்பியான இனதாவியும்) மூன்றுகோடி யோசனை தூரம் (தங்கள்) சைந்நியம் (தங்களைத்) தொடர்ந்துவரப் புறப்பட்டுச் சென்று, வெற்றியைக்கொண்ட உருத்திரன் நீங்கலாகவுள்ள (பிற) திசைகளில் வசிப்பவரை (யுத்தத்தில்) சயித்துக்கொண்டு, (பிறகு) சிறந்த பாதலஞ் சென்று, (அங்குள்ள) நாகலோகத்தவரையும் வெற்றிகொண்டு, (தோல்வியெய்திய) அப்பாதலவாசிகள் வணங்கிச் சிறந்த துதிசெய்ய, (ஆங்கிருந்து) விரைந்து சென்று, விரும்பத்தக்க தேவர்கள் வசிக்கும் சுவர்க்க லோகத்தை அடைந்தனர், (எ-று).

மூன்றுகோடி யோசனை தூரம் சேனைகள் சூழ்ந்து வந்தன என்றவற்றால், அப்படைப் பெருக்கம் வெளியாம். பவனம்-பாதலம்; "பரவிய நாகலோகம் பவனமாம்" என்பது நிகண்டு. நாடமரர்-விரும்பத்தக்க தேவர்கள்; நாடுதல்-விரும்புதல். (10)

அங்கணித நிற்றுசில சாரணர்கள் கூற
வஞ்சிபடர் கொண்டுபுர புட்டவடி வாகி
மங்கையுட னிந்திரன கன்றிடலு மன்னார்
மம்மருற வானவரை மைந்தினொடு பற்றி
வெங்கதமொ டும்பெரித டித்தனர்பி ணித்து
வீரமொடு தஞ்சிறையின் வைத்தவதன் பின்னர்
பொங்குபுக ழன்னவர்தஞ் செல்வமிலை கொண்டு
போகமக லோகமவர் போந்தடி பணிந்தார்.

(போ-ரை.) சில (தேவலோகத்து) ஒற்றர்கள் அவ்விடம் (வாதாவி படையெடுத்து வரும்) இதனை அறிந்து (வந்து) சொல்ல, இந்திரன் (வாதாவிபெற்ற வரத்தின்வலியறிவானாதலின்) பயந்து, (மிகுந்த) துன்பமடைந்து,

இந்திராணியுடன் குயிலின் வடிவங் கொண்டு (பறந்து) (பொன்னாட்டைவிட்டு) ஓடிப்போய்விடினும், அவ்வாதாவியின் சேனைகள், (தலைவன் கட்டளையின்படி,) தேவர்களைத் துன்பமடைய வன்மையோடு பிடித்து, கொடிய கோபத்தோடு (பலப்பல வகையில்) மிகுதியாக அடித்து, வீரத்தோடு கட்டித் தமது சிறையில் இட்டபிறகு, அதிகரித்த புகழையுடைய அத்தேவர்களின் ஐஸ்வர்யங்களை கொள்ளையடித்துக்கொண்டு, (அதன்பின்,) மகாலோகத்திற்குச் செல்ல, (அந்த) உலகத்தவர் (பெரிதும் அஞ்சி வாதாவியைக் காணிக்கையுடன்) வந்து பணிந்து உயிர் தப்பினர், (எ-று).

சாரணர்-ஒற்றர்; "வேயர் சாரணர் ஒற்றர்" என்பது நிகண்டு. படர்-துன்பம். பரபுட்டம்-குயில்; "கோகிலம் களகண்டம்மே கோரகை குயிலின் பேர்தான், ஆகுமே பிகத்தினோடு பரபுட்டம் தானும் அப்பேர்" என்பது நிகண்டு. மம்மர் என்பதும் துன்பம் எனும் பொருளது; "அல்லலே அலக்கண் மம்மர்.........துன்பம்" என்பது காண்க. மகலோகம் போக, அவர் போந்து அடிபணிந்தார் என இயைக்க. (11)

கொந்தலரின் வஞ்சியணி கோபவுணர் மன்னன்
    கோகனக மார்தலுறு கோனுலக னென்னை
வந்தணனு மஞ்சிசில வாசிமொழி கூற
    வங்கவனை வைத்தபினர் நாரணனின் மாவை
குந்தமத டைந்தனிமு குந்தனடி யேத்திக்
    குன்றவிலி யுற்றகயி லைப்பதிபு குந்தே
நந்திவிடை நல்கவுள டைந்தமலற் போற்றி
    நந்துதலி முனையொடு நாடுனைல் செய்தான்.

(பொ-ரை.) கொத்துக் கொத்தாகவுள்ள வஞ்சி மலர் மாலே சூடிய சிறந்த அவுணர்க் கரசனான வாதாவி யும், (அதன்பின்) தாமரை மலரில் வீற்றிருக்கும் தலைவ ஞன பிரமனது சத்தியலோகத்தை யடைய, அப்பிரம னும் (அவன் விஷயத்தில்) அச்சத்துடன், (எதிர்கொண்டு வந்து பல) ஆசி வார்த்தைகளைச் சொல்ல, (அவன்) அப் பிரமனை அப்பதியில் (தன் ஆணைக்கு அடங்கி யிருக்கு மாறு) வைத்து, அதன் பிறகு, ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளிய வைகுந்தம் அடைந்து, கருணை நிறைந்த அம்முகுந்தன் திருவடியைத் துதித்து, (பின் அங்கிருந்து நீங்கி,) சிவபிரான் எழுந்தருளி யிருக்கும் திருக்கயிலே மலையை யடைந்து, திருநந்திதேவர் விடைதர சந்நிதியில் நுழைந்து, பரமனைத் துதித்து, கெடுதல் இல்லாத சேனு சமூகத்தோடு தனது நாட்டினை யடைந்தான், (எ-று).

வஞ்சிமாலே - வீரர்கள் வெற்றிக்கு அறிகுறியாக அணிவது. குன்றவிலி-மலையை வில்லாக வுடைய சிவ பிரான். விலி, நணல் என்பது, இடைக்குறை; இவை, வில்லி, நண்ணல் என விரியும். (12)

நாற்றிசையின் மன்னவரி யாவரையு மன்னூர்
　　நாணசிறை யிட்டவரி னங்கையர்பு ணர்ந்தா
ரூற்றநிறை வாதாவி யென்னுமிறை யானே
　　னும்பர்களை யன்னவரி னேங்குநிறை தெய்வ
யேற்றமுறு மங்கையரை யென்பணிசெய் கென்று
　　னென்புரிவ தென்றவர்க ளேங்கியழு திட்டார்
நீற்றையணி மாமுனிவர் நல்லுவவ ழித்தார்
　　நீதயில ராகியுறு நிசெரர்க ளந்தோ.

(பொ-ரை.) அவ்வசுரர்கள், நான்கு திசையிலுமுள்ள (இவ்வுலக) மன்னவர்கள் அனைவரையும் நாணும்படி சிறை

வைத்து, அவர்களின் மனைவியரை (வலிந்து) கலந்தனர்; வலிமை நிறைந்த வாதாவி யென்னும் (அசுரகுல) மன்னனாவன், தேவர்களையும், அத்தேவர்களின் உயர்ந்த கற்பினையுடைய தெய்வத்தன்மையான மேன்மை வாய்ந்த மாதரையும், எனது ஏவலைச் செய்வீர்களாக என்று கட்டளை யிட்டான்: (அதுகேட்ட) அவர்கள், என்னசெய்வதென்று ஏங்கி அழுதனர்; (அதன்பின் வாதாவியின் ஏவலின்படி,) நீதிநெறி யறியாதவர்களான அசுரர்கள், ஐயோ! திருநீற்றை யணிந்த மேலான முனிவர்களின் சிறந்த தவத்தையும் அழித்தனர், (எ-று).

அந்தோ என்பது, இரக்கக் குறிப்பின் மேலது. (13)

ஐந்தருவின் மாமலர்ப றித்தரியின் மைந்த
 னாரவுனன் காலினிடை வைக்கவர மாதர்
வந்தடிபி டித்தலொடு மானபணி செய்ய
 வாண்மதியு மாதவனு மந்திவிகை யாக
வுந்துலவை யங்கணம்வி ளக்கநல சோம
 னெண்ணிதிய ளிக்கவிதி யைந்தியலு ரைக்க
முந்துமகி மாலிகட னல்கவிழை யாழின்
 மூதறிஞர் கானவிசை முற்றருதற் செய்ய.

(பொ-ரை.) இந்திர குமாரனான சயந்தன், பஞ்ச தருக்களின் சிறந்த மலர்களைப் பறித்து, (வலிமை) நிறைந்த அவ்வசுர மன்னனுடைய பாதங்களில் வைக்கவும், தேவலோகத்துப் பெண்கள் (திரண்டு) வந்து (அவன்) கால்பிடித்தலோடு, (மற்றும் தம்மால்) இயல்வதான பணிக ளனைத்தும் செய்யவும், ஒளிபொருந்திய சந்திரனும் சூரியனும் அழகிய விளக்குகளாக அமைந்திருக்கவும், விரைந்து செல்லும் வாயுதேவன், (தன் வேகத்தை யடக்கி,) முற்றங்களை விளக்கும் பணிசெய்யவும்,

சிறந்த குபேரன் ஒள்ளிய திரவியத்தை (க்கேட்கும் குறிப்பறிந்து வாரிவாரிக்) கொடுக்கவும், பிரமன் (காலந் தவருது) வந்து பஞ்சாங்கங் கூறவும், (அரவின் கூட்டங்களுக்கு) முதன்மை வாய்ந்த ஆதிசேடன், (குடிக்கக்) கள் குடம் (எடுத்துக்) கொடுக்கவும், விரும்பத்தக்க வீணையில் வல்லகந்தருவர்கள், பொருந்திய பண்ணை முன்னிருந்து பாடவும், (எ-று). குளகம்.

அரி-இந்திரன்; அவன் மைந்தன்-சயந்தன். தீவிகை யென்பது, திவிகையென நின்றது; தீவிகை-விளக்கு; "தீவிகை திபம் மற்றைத் திகழ்சுட ரொளிவிளக்கே" என்பது நிகண்டு. உலவை-காற்று. அங்கணம்-முற்றம்; ஙகரவேதுகை காண்க. 'ஒண்ணிதியளிக்க' என்ற சொற் போக்கில், சோமன் என்றது குபேரனை யென்க; மேலும், "புருடவா கனனே சோமன் புட்பக விமான முள் ளோன்" என்ற நிகண்டினும், குபேரனுக்குச் சோமன் எனும் பெயருள்ளமை யறிக. விதி-பிரமன். ஐந்தியல்-கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் எனவரும் சோதிடத்திற் குரிய ஐந்துறுப்புகள்; இவ்வைந்தனையும் பஞ்சாங்கம் என வழங்குவர். அகி-பாம்பு; ககரவேதுகை காண்க. முந்தும் அகி யென்றவற்றால், அரவினத் தலைவனை ஆதிசேடன் என்றும். மாலி-கள்; "மது சுமாலி மாலி....................கள்ளினுக் கமைத்த பேரே" என்பது நிகண்டு. சடம்-குடம். கான இசை-இருபெயரொட்டு எனக்கொள்வது மொன்று. (14)

நாகவுல காயிழையர் நன்னடன மாட
    நாதநம வென்றமரர் நாடிதுதி செய்ய
நாகபக டேறிவரு மன்மறலி நித்தம்
    நண்ணியுரை வன்பணியை செய்துதொழு தேத்த

மோகினிவ யிற்றுவரு மூதவுணர் மன்னன்
மோதுவய மாவணையின் முன்னினனி ருந்தான்
போகவுல கோர்தமது புன்மையெணி யேங்கப்
போதனொடு யாரெனினு முன்னைவினை போமோ.

(பொ-ரை.) நாகலோகத்து மாதர்கள் சிறந்த நடனஞ் செய்யவும், தேவர்கள் (ஒன்றாகக்கூடி) வந்து, (வாதாவி யெனும் பேருடைய) தலைவனே நமஸ்காரம் என்று சொல்லித் துதிக்கவும், மலைபோலும் (பருத்த எருமைக்) கடாவின்மேல் அமர்ந்துவரும் மன்னனான இயமன், தினந்தோறும் வந்து, சொல்லும் கொடிய ஏவல் தொழிலைச் செய்து வணங்கித் துதிக்கவும், போக நாட்டுத் தேவர்கள் (தற்போது) தங்களுக்கு நேர்ந்துள்ள சிறுமைத் தன்மையை நினைத்து (மிகவும்) வருந்தும்படி, மகாமோகினி வயிற்றிலிருந்து பிறந்த பெரிய அவுணர் தலைவனான வாதாவி, எதிர்க்கும் தன்மை வாய்ந்த சிங்கத்தால் சுமக்கப்பட்ட சிறந்த பீடத்தில் அமர்ந்திருந்தான்; பிரமனுடன் எவரேயாயினும், முன்செய்த வினை (அநுபவித்த பின்னன்றி அவரைவிட்டு) நீங்குமோ, (எ-று).

நாகவுலகு - நாகலோகம்; நாகபகடு - மலைபோலும் கடா. (15)

இந்தநிலை யிவ்வணம தாகமுனை நீங்கு
மிந்திரனை வானவர்க ளோடியொரு கானிற்
சந்தசிவ போடவுணர் கட்டுபெரி தஞ்சித்
தானுறைதல் கண்டடியி ருழ்ந்தனரி றைஞ்சி
யெந்தையெமை நீபிரித லாற்றபினர் கோளா
ரெம்மைபுரி கோடணைபி யம்பிவிட லாமோ
வந்தகுறை நீங்கவழி கண்டிடுதி யென்ன
வாசவனு மன்னவர்கள் தேறவகை சொல்வான்.

(பொ-ரை.) (வாதாவி செய்த) இந்த அட்டூழியம் இவ்வண்ணமாக, (அவன் படையெடுத்துச் சுவர்க்கம் சென்ற) முன்னாளில், (குயில் உருவங் கொண்டு) ஓடிய தேவேந்திரனை, தேவர்கள் தேடி (அலைந்து, இறுதியில்) அழகுடைய இந்திராணியோடு அவுணர்களுக்குப் பெரிதும் பயந்து ஒருகாட்டில் (ஒளித்துக்கொண்டு) இருத்தலை நோக்கி, (அவனது) பாதத்தில் வீழ்ந்து வணங்கி, எந்தையே! நீர் எம்மைவிட்டுப் பிரிந்தபிறகு பகைவர்கள் எங்களுக்குச் செய்த கொடுமையை (வாய் விட்டுச்) சொல்லுதற்கு இயலுமோ; (நமக்கு) நேர்ந்த இக்குறைபாடு நீங்க (த்தக்க) மார்க்கத்தைக் காண்பீராக என்று கூற, (அதுகேட்ட) இந்திரன், அத்தேவர்கள் (மனம்) தேற, (துன்பம் நீங்கும்) வகையைச் சொல்லத் தொடங்கினன், (எ-று).

நேடல்-தேடுதல். சந்தம் - அழகு; நகரவேதுகை. சசி-இந்திராணி. தானுறைதல் என்றவிடத்து, தான்-அசை. செளார்-பகைவர். கோடணை-கொடுமை; "கொடுமையின் பேரே சண்டம் கோடணை கடினம் கோரம்" என்பது நிகண்டு. வாசவன்-இந்திரன். (16)

ஊரிதரு தானவர்க ளொன்பியலு மன்றே
முன்னுநம பொன்னகர வாழ்வுமுடி வன்றேன்
நேரலர்க ணம்முலகை யுற்றபொழு தஞ்சி
நேரிழையொ டோடியுயி ருய்த்தலுற நின்றே
னாரதணி நம்பனல தன்றியுய விலலை
யன்னயிறை முன்னருற வம்மினென வோத
நேரனுமு மேமமொடு மன்னவரு மேகி
நித்தனுறை மாகயிலை நண்ணினர்க ளன்றே.

(போ-ரை.) வலிமைபொருந்திய அவுணர்கள் தவஞ் செய்யத் தொடங்கிய அந்நாளிலேயே, நினைக்கத்தக்க நமது பொன்னாட்டு வாழ்வு முடிந்துவிட்டது என்று கூறினேன்; (அதன்பின்,) பகைவர்கள் (படையுடன் புறப்பட்டு) நம்முலகத்தை அடைந்தபோது, (இவர்கள் நம்மை யென்செய்வார்களோ என்று) பயந்து, இந்திராணியுடன் (குயில் வடிவு கொண்டு) ஓடி உயிர் பிழைத்து (இத்தனை காலமாக) இருந்தேன்; (இனி,) ஆத்திமாலை யணிந்த சிவபிரானை யன்றி (நாம்) உய்ய வகையில்லை. அப்பெருமான் சந்நிதானத்திற்கு (முறையிடச்) செல்ல (அனைவரும்) வாருங்கள் என்றுகூற, அத்தேவர்களும் பொருந்திய களிப்புடன் (இந்திரனைத் தொடர்ந்து) சென்று, சிவபிரான் எழுந்தருளிய திருக்கயிலை மலையை அன்றே (சென்று) சேர்ந்தனர், (எ-று).

ஊறி - வலிமை; ரகரவேதுகை. ஆர் - ஆத்தி மாலை. ஏமம் - களிப்பு. (17)

நந்திகழ லேத்திவிடை பெற்றமலன் முன்னர்
நம்பவப யம்மெமது நாதவப யஞ்சிர்
தந்தியுரி யோயபய மென்றிடலு மன்னார்
தம்மையரு ளாரெமது தற்பரனு நோக்கி
யெந்தகுறை நேர்ந்தவென வெண்ணலர்க ளாற்று
மெண்ணவில கோடணைபி ழைத்தவரு மெந்தா
யெந்தமைய ளித்தியென வேயிறைவ னன்பா
லெம்மையளி யன்னைமுக நோக்கியிது சொல்வான்.

(போ-ரை.) (அவ்வண்ணம் சென்ற தேவர்கள்,) திருநந்தி தேவரின் திருவடிகளைத் துதித்து, (அவரிடம்) விடை பெற்றுக்கொண்டு (உள் சென்று,) சிவபிரான் சந்நிதானம் அடைந்து, (யாவரும்) நம்பி சரணம்

அடையத் தக்கவரே! அபயம்; நாத தத்துவத்தில் வீற்றிருப்பவரே! அபயம்; சிறப்பமைந்த யானைத்தோலையுரித்துப் போர்த்தவரே! அபயம் என்றலும், கருணை நிறைந்த எமது இறைவனும், அவர்களைப் பார்த்து, (தேவர்களே! உங்களுக்கு) நேர்ந்த குறை யாது? என்று கேட்கவும், அத்தேவர்கள், (அவுணர்களான) பகைவர்கள் தங்களுக்குச் செய்யும் அளவில்லாத துன்பங்களைக்கூறி, எந்தையே! (அவர்கள் உபத்ரவத்திலிருந்து) எங்களைக் காப்பாற்றுவீராக என்று பிரார்த்திக்க, (அதுகேட்ட) இறைவன், அன்புடன் எம்மைக் காக்கும் உமாதேவியாரின் திருமுகத்தை நோக்கி (ப் பின்வரும்) இதனைக் கூறத் தொடங்கினான், (எ-று). (18)

முன்னரளி சம்புமுனி புன்னுமன முன்னி
முந்துபுக ழாஞ்செயல்மு டித்திடுவெ லென்று
யன்னநிலை யன்னவனை யண்மிமக வேள்வி
யாக்குதித னஞ்சயனு நம்புதல்வ னாக
மன்கிரதி ரூன்றியரி யானவரை மாய்த்தே
வானவர்பு ரந்தளிவ முங்குமிது வாய்மை
யின்னசெய னின்னருளி னாகுமத னானீ
யேகுகடி தென்றிட லுமெம்மனையு வந்தாள்.

(பொ-ரை.) முன்னொரு காலத்தில், அன்புடன் சம்பு முனிவர் தியானிக்கும் மனத்தில் இருந்து, (அம்முனிவனுக்கு) முதன்மையான புகழ் உண்டாக்கும் செயல்களை முடித்து வைப்பேன் என்று கூறினாய்; அதன்படி அச்சம்பு முனிவரை யடைந்து, (புத்திர சந்தானத்தை யுண்டாக்கும்) புத்திரகாமேஷ்டி யாகம் (செய்யும்படி கூறி, அம்முனிவனுக்குத் துணையாகயிருந்து அவ்வேள்வியைச்)செய்வாயாக; நிலைபெற்ற அவ்வேள்வியி லிருந்து

அக்கினி பகவானும், நமது புதல்வனுன முருகனது அம்சமாக அவதரித்து, பகைவர்களான தானவரை நாசஞ்செய்து, தேவர்களைக் காத்து, (யாவருக்கும்) அருள்பாலிப்பான்; இது மெய்ம்மையாகும்: இத்துணைச் செயலும் நினது திருவருளினுலேயே ஆகுமாதலின், நீ விரைந்து புறப்படுவாயாக என்று (பரமன்) கூறுதலும், எமதன்னையான உமாதேவியார், (சம்புமுனிவருக்குத் தான் அன்றுரைத்த மொழி யின்று நிறைவேறுதலை யெண்ணி,) மகிழ்ச்சி கொண்டார், (எ-று).

சம்பு முனிவரின் மனத்திலிருந்து அவற்குப் புகழுண்டாகுங் காரியங்களைச் செய்வேன் என்று தேவியுரைத்தது, சுமித்திரற்குப் புத்திரசந்தானம் அளித்தபோதென்க. நீ அன்றுரைத்த வார்த்தையை இன்று நிறைவேற்றுதி என்கின்றுன் இறைவன். கிரது-வேள்வி; "எச்சமே கிரது வேள்வி" என்பது நிகண்டு. தனஞ்சயன் - வன்னியன். அரியானவர் - பகைவர்கள்; "அரிகளே செறுர் சேரார்...........பகைவர்" என்பது நிகண்டு.

நித்தனையி றைஞ்சியது செய்வனென வம்மை
நீளமரர் சூழவிடை கொண்டுநெறி கொண்டு
தத்தைமொழி புக்கிலொடு தக்கதரு மஞ்செய்
சம்புமுனி வாழ்பதிய டைந்தெதிரி னிற்க
வித்தமுறு மன்னவனு மன்னையைவ ணங்கி
விஞ்சுபுகழ் கஞ்சவடி நெஞ்சினுறு மஞ்சின்
பத்தியொடு மெத்தியம ரர்நிலையு ரைத்த
பார்ப்பதியு ளப்படியொர் வேள்விமுயல் வுற்ருன்.

(பொ-ரை.) உமாதேவியார் இறைவனை வணங்கி, (தேவரீருரைத்த வண்ணமே) அந்த வேள்வியைச் செய்கின்றேன் என்று கூறி விடைபெற்றுக் கொண்டு, அநீ

கரிந்த தேவர்கள் சூழ்ந்துவர வழிநோக்கிப் புறப்பட்டு, (கொஞ்சிப் பேசும்) கிளியைப்போன்ற மழலைமொழியை யுடைய மனையாளான அசயந்தியம்மையாருடன், தகுதி வாய்ந்த இல்லற தருமத்தை நடத்தும் சம்பு முனிவர் வாழ்கின்ற (திருவானைக்கா என்னும்) தலத்தை யடைந்து, (அம்முனிவரின்) நேர் நின்று காட்சி தர, மெய்ஞ்ஞான முற்ற அம்முனிவரும், (யாவர்க்கும்) அன்னையான பரமேஸ்வரியாரை வணங்கி, (அவ்வம்மையின்) அதிகரித்த புகழை யுடைய தாமரை மலர்போலும் திருவடிகளை மனத்திற்கொண்ட அழகிய அன்போடு துதித்து, தேவர்கள் (அவுணரால் அடையும் துன்ப) நிலையை(த் தனக்குக்) கூறிய அப்பார்வதி தேவியார் கருத்தின்படி, ஒப்பற்ற (புத்திரகாமேஷ்டி) யாகஞ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார், (எ-று).

தத்தை-கிளி. புக்கிலொடு-இல்லாளோடு; புக்கில்-மனை: இது, மனைக்கு உரியாளை யுணர்த்திற்று. வித்தப் ஞானம். கஞ்சம்-தாமரை. மஞ்சு-அழகு. (20

வாதாவி யினதாவிச் சருக்கம் முற்றிற்று.

உ

## உருத்திர வன்னிய மகாராஜன்

# திருவவதாரச் சருக்கம்.

அறுசீராசிரிய விருத்தம்.

கொழுந்துமதி யணிபரனின் வரவலியா லிமையவரைக்
கொடுமை காணு
மழுந்துமன நிசிசரர்க ளழிவுபெற முயலம்மை
யருந்த வன்மு
னெழுந்தருளி யதையுரைத்த னுரைத்துமினிப்
பெருங்கிரதை யியற்றி வன்னிக்
கழுந்துவரிச் சிலேப்பரனை வருகைசெயு முயர்நிலையைக்
கவினக் காண்பாம்.

(பொ-ரை.) இளந்திங்களை (முடியிற்) சூடிய இறைவன் தந்த வரத்தின் வல்லமையால், தேவர்களைக் கொடுமை செய்யும் அழுந்திய மனத்தையுடைய அவுணர்கள் நாசமடைய முயல்கின்ற இறைவி, அருமையான தவத்தை யுடைய சம்புமுனிவர் திருமுன் எழுந்தருளி, அதனைக் கூறிய செய்தியை யுரைத்தோம்; இனிமேல், பெரிய வேள்வியைச் செய்து, (அதன் நடுவில், பலதாய் பிடித்தலால்) தேய்ந்த பிடியும், கட்டமைந்த நாணும் வாய்ந்த வில்லேந்திய வன்னியனை பரமனை, அவதரிக்கச் செய்த உயர்ந்த வரலாற்றை, (யாம்) விளக்கம் அடையக் கூறுவோம், (எ-று). (1)

முருகோனை யருள்வதெனுஞ் சிலேநதியின் றக்கிணைத்து
முதிர்ந்த கேள்விப்
புருகூதன் னகருறையும் மயனைவிளித் தெமதன்னை
புகன்ற வாறு

பெருகொளிய மகச்சாலை கடத்தம்பஞ் சமித்தமுதற்
பெருக வாற்றித்
தருமவொளி யுருவினிறை யிறைவியுறை தாவிருக்கை
சமைத்திட் டானல்.

(பொ-ரை.) எமது இறைவியான பாசிலை, இந்திரனது பொன்னகரில் வாழும் கேள்வி ஞானம் முதிர்ந்த மயன் என்பவனை யழைத்துக் கூறிய வண்ணம், (அவன்) முருகப் பரமனை யருளிய கங்கையென்று சொல்லத் தக்க (சிறப்பினையுடைய) சிலாநதியின்தென் பாகத்தில், மிகுந்த ஒளியினை யுடைய வேள்விச் சாலை, கும்பம், யூபஸ்தம்பம், ஓமமண்டபம் முதலாகச் சொல்லப்படுபவை யனைத்தும் நிரம்பப் படைத்து, பேரொளி வீசும் நிறைந்த தருமத்தின் வடிவமான உமாதேவியார் வீற்றிருக்க, (ஒரு) பீடத்தையும் அமைத்திட்டான், (எ-று).

கடம்-கும்பம். தம்பம்-யூபஸ்தம்பம். சமித்தம்-ஓமமண்டபம். (2)

புவிபுகழுங் குடமுனியும் புலத்தியனு மங்கிரசப்
புனிதன் சேர்த்திக்
கவுதமனும் வசிட்டமுனி மார்க்கண்டன் காசிபனுங்
கவினச் சூழ்ந்து
சுவவுதனி லுறைகுநரைச் செலுத்திபெரு வேள்வியினைச்
சுவத்தி செய்ய
உவவுநிலை பெறுசம்பு முனிவனுய ருமையுரைத்த
பணியி னுற்றான்.

(பொ-ரை.) உலகம் புகழும் அகத்தியரும், புலத்தியரும், ஆங்கிரசப் பேருடைய தூய்மையாளரும், சிறப்பமைந்த கவுதமரும், வசிட்ட முனிவரும், மார்க்கண்டேயரும், காசிபரும் (வேள்விச்சாலை) அழகுபெறச் சூழ்ந்தி

ருந்து, பொன்னாட்டில் வாழும் தேவர்களை (ஒவ்வொரு பணிசெயச்) செலுத்தி, அப்பெரிய யாகசாலையைத் தூய்மை செய்ய, (அதன்பின்,) நிலைபெற்ற தவத்தை யுடைய சம்புமுனிவர், சிறந்த உமாதேவியார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பணியில் ஈடுபட்டார், (எ-று). (3)

புனிதமுறு சிலாநதியின் மனையினுடன் குடைந்துயர்ந்த
பூதி பூசிக்
கனிவுநிறை கணபதியைத் துதித்தெமது கந்தனையு
மகத்திற் கண்டு
முனிவரர்நன் மறைபுகலக் கிரதுதனைத் துவக்கியதின்
முளரித் தெய்வ
நனிமகிழ மலர்சொரிந்து மனுவேவாதிப் பிறர்வியக்கு
நலத்த னானான்.

(பொ-ரை.) (சம்புமுனிவர் தன்) தேவியான அசயந்தி யம்மை யாருடன், தூய்மை பொருந்திய சிலாநதியில் நீராடி, மேலான திருநீற்றினை யணிந்து, (உயிர்த்தொகுதிகளிடத்து) அன்பு நிறைந்த கணபதியை வழிபட்டு, (அதன்பின்) எமது கந்தக்கடவுளை உள்ளத்திருத்தி, முனிசிரேட்டர்கள் சிறந்த வேதமோத வேள்வியைத் தொடங்கி, அவ்யாகத்தில் அக்கினி பகவான் மிகுந்த களிப்படைய மந்திரங்களைச் செபித்து, மலர் சொரிந்து, (இதனைக் காணும்) பிறர் அனைவரும் வியப்படையத்தக்க மேன்மையரானார், (எ-று).

கிரது-வேள்வி. முளரித்தெய்வம்-அக்கினிக் கடவுள்.

விதிவழுவா தியல்வுறச்செய் விதியுளியிற்
பெருங்கொழுந்து வளர வேதம்
பதிநிலையன் மகபதியின் திசையிருந்து வசிட்டனெடு
பலரு மோர்ந்து

மதித்திடநற் சடங்கினனு தாத்தமுதாத்
தஞ்சொரித மனுவினேசை
யுதித்தலுற வெமதிறைவ னுரைமொழியி
னழற்கிரதை யுகந்து செய்தான்.

(போ-ரை.) விதிதவறாமல் நடைபெறச் செய்த யாகத்தில் பெருங்கொழுந்து வளர்ந்தோங்கும்படி, (சம்பு முனிவர்) தம்பதி சமேதராய் இந்திரனுக்குரிய (கீழ்த்) திசையில் அமர்ந்து,வசிட்டருடன் உள்ள பலமுனிவராரும், சிறந்த சடங்கு முறையைப் பார்த்து, (தத்தம் கருத்தில்) ஆய்ந்து மதிக்கும்படி, உதாத்தம், அனுதாத்தம் சொரிதம் எனும் மந்திர ஓசை தோன்ற, எமது சிவபிரான் திருவாய் மலர்ந்தருளிய ஆகம நெறிப்படி வேள்வியை மகிழ்ந்து செய்தார், (எ-று).

உதாத்தம்-எடுத்தல், அனுதாத்தம்-படுத்தல்: சொரிதம்-நலிதல். விதியுளி-யாகம். (5)

விசும்புநில னெடுந்திசையும் புரியசன நிலையமதின்
விளையுஞ் சீர்த்திப்
பசும்புகையும் படர்ந்துபெரு படமெனவும்
மறைவுசெயப் பளகி லாதத்
தசும்புபடு மிழுதுபொரி சமித்தினொடு
விபுதருக்குத் தகவு வாய்ந்த
அசும்புபடு மினிமைமதி யமுதெனவு
மாகுதியை யளித்தற் செய்தான்.

(போ-ரை.) செய்த அவ்வேள்விக் களத்தினின்று எழுந்த சிறப்புடைய பசிய புகையானது, வானினும் நிலத்தினுடன் திசைகளினும் பரவி, பெரிய போர்வை யெனும்படி மறைக்க, குற்றமில்லாத குடத்தில் உள்ள நெய் பொரி சமித்துக்களால், தகுதியமைந்த தேவர்

களுக்கு ஊற்றெடுக்கும் இனிமை தங்கிய அமுதம்போல், ஆகுதி செய்தார் சம்புமுனிவர், (எ-று).

நெய்யாலும் பொரியாலும் சமித்தாலும் என்க. ஒடு-கருவிப் பொருட்டு. சமித்து-ஓமவிறகு; அத்தி, அரசு, பலாசு, வன்னி முதலியன. (6)

அன்னிலையிற் சம்புமுனி வலப்புயமு
 மிகத்துவள வசயந் திப்பேர்
மின்னினிடை யொசிதலுறத் ததும்பகுயம்
 விளைபயசு மிகவு மூற
மன்னுமிட விழிதுடிக்க மகியினுட னெனைத்துலகும்
 மகிழ்விற் பொங்க
வுன்னியறம் பெரிதுவக்க வுவணையியம்
 மிகவொலிக்க வுறுவர் வாழ்த்த.

(பொ-ரை.) அச்சமயத்தில் சம்புமுனிவரின் வலத் தோள் மிகுதியாகத் துடிக்கவும், அசயந்தி யென்னும் திருநாமத்தை யுடைய அம்மையாரின் மின்னலை யொத்த நுண்ணிய இடை துவளும்படி, பருத்த கொங்கைகளி னின்றும் பெருகிய இனிய பால் வெள்ளம் மிகுதியாக ஊற்றெடுக்கவும், நிலைபெற்ற (அவ்வம்மையின்) இடது கண் துடிக்கவும், நிலவுலகத்தவருடன் எல்லா உலகத்த வரும் மிகுந்த களிப்படையவும், (எதிர்காலத்தில் தனக்கு வர இருக்கும் வாழ்வைத்) தரும தேவதை எண்ணிப் பெரிது மகிழவும், தேவ வாத்தியங்கள் மிகுதியாக ஒலித்தல் செய்யவும், தவமுனிவர் வாழ்த்துக் கூறவும், (எ-று).

குளகம்; தோன்றிற்று எனும் அடுத்த செய்யுளோடு முடியும். உவணை இயம்-தேவவாத்தியம். உறுவர்-தவ முனிவர். (7)

பொங்குவனை யரம்பையர்க ணடமியற்றப் புலவோர்பூ
மாரி தூற்றப்
பங்குனியி னுத்திரமீன் பவுர்ணமிமன் மதிக்கிழமை
பகருஞ் சிங்கப்
புங்கமுறு நிலையோரைப் புனிதமுற மகநடுவிற்
பொலிவு மிக்குத்
துங்கநிறை வயந்திகழும் புலிக்கொடிக்கீ ழொருவடிவந்
தோன்றிற் றலோ.

(பொ-ரை.) மிகுந்த பொன்னாட்டு மாதர்கள் நடஞ்செய்யவும், தேவர்கள் மலர்மழை பொழியவும், பங்குனித் திங்கள், உத்திரநாள், பவுர்ணமி, சோமவாரம், (சிறப்பித்துச்) சொல்லப்படும் உயர்வு பொருந்தி நிலைத்த சிங்க லக்கினம் (ஆதியவை யனைத்தும்) தூய்மையடையவும், (அச்சமயம்,) வேள்வியின் நடுவில் அழகு மிகுந்துப் பெருமை நிறைந்த வெற்றி விளங்கும் புலிக்கொடியின் கீழ் ஒரு வடிவம் (கண்ணுக்குப் புலனாகத்) தோன்றியது, (எ-று). (8)

அருக்கனுட னுயர்சசியென் றினிதுரைக்கும்
விழிகடமை யடைக்க வம்மை
கருக்குமிருட் பரவுதலும் மதிமயங்கிப்
புலவரெலாங் கலங்கி யுள்ள
முருக்கமுறப் பரம்பொருளே வபயமென
வுமைபதியு றதனி னாட்டம்
பெருக்குமொளி வன்னியனுய் விபுதரடை
துயர்கழிக்கப் புகுந்த போதும்.

(பொ-ரை.) தேவியார், சூரியனுடன் உயர்ந்த திங்கள் என்று இனிதாகக் கூறும் (சிவபிரான் இரு) கண்களையும் மூட, (அதனால், உலகமெங்கும்) அடர்ந்த இருள் பர

வுதல் செய்யவும், தேவர்கள் அனைவரும் அறிவு மயங்கி மனக்கலக்கம் அடைந்து, (இறைவன் திருவுள்ளம்) உருகுமாறு, மேலான தெய்வமே! அபயம் என்று அரற்ற, உமாபதியான சிவபிரான் தேவர்கள் அடைந்த துன்பினையகற்ற நினைத்து, நெற்றிக் கண்ணில் ஒளிபெருக்கும் வன்னியராக எழுந்தருளியதுபோலவும், (எ-று). குளகம்.

சோம சூர்ய அக்கினியெனும் மூன்றுமே சிவபிரானது திருக்கண்கள் என்பதையும், அவ்விழிகளின் ஒளியினுலேயே உலகம் உய்கின்றது என்பதையும் யாவர்க்கும் அறிவுறுத்தக் கருதிய இறைவியார், ஒருநாள் பரசிவத்தின் சூரிய சந்திரர் எனும் இருகண்களையும் விளையாட்டுக் காரியமாக மூட, அதனல் எங்கும் இருள் பரவி, எவ்வுலகத்தவரும் வருந்தி தன்னை நோக்கி அபயக் குரலிடலையறிந்த உமாபதி, ஞேரேலென்று அக்கினி சம்பந்தமான நெற்றிக் கண்ணைத் திறந்து, முன்னையினும் பேரொளியையெங்கும் பரவச் செய்து, உலகங்களை உய்யக் கொண்ட இவ்வரலாற்றை அருணசல புராணத்திற் காண்க. (9)

மதிக்குலத்தின் கறையகற்ற மனுநெறியின் றவம்பலிக்க
மகிழ்ந்து விச்சா
வதிகுளிர வறம்விளங்கக் கலைக்கடலின் பெருக்கனைத்தும்
வளர்தற் செய்யத்
திதியரைய ரசநெறித் தெளிவுபெற மலைத்துவசன்
றிகழ நீர்மைப்
பதிதலுறு மகமக்னின் வகினியையா யுமையளுமூற்
பவித்தற் போலும்.

(போ-ரை.) சந்திர குலத்தின் களங்கத்தை நீக்கவும், மனுநூல் நெறி (செய்த) தவம் பயன் அடையவும், விச்சாவதி குளிர்ந்த மகிழ்ச்சி கொள்ளவும், அறக் கடவுள்

விளக்கம் பெறவும், நூற்கடலின் தொகுதி யெல்லாம் வளர்ச்சி யமையவும், காத்தல் புரியுங் காவலரின் அரசியல் துறை தெளிவடையவும், மலையத் துவச பாண்டியன் விளக்கம் பெறவும், ஒழுக்கம் அமைந்த வேள்விக் குண்டத்தில் உமாதேவியார் வஹ்நியையாகி அவதரித்தது போலவும், (எ-று).

விச்சுவாவசு எனும் கந்தருவன் புதல்வியான விச்சாவ்தி யென்பாள், உமாதேவியாரை நோக்கித் தவங்கிடந்து பெற்ற வரத்தின்படி, மறுபிறப்பில் பாண்டி நாட்டையாளும் மலையத் துவச மன்னனுக்குக் காஞ்சனமாலை யெனும் பெயருடை மனையாளாகத் தோன்றி, அம்மன்னனுடன் சேர்ந்து செய்த யாகத்தினின்று, பரசிவை மூன்று வயதுப்பெண்ணாகத் தோன்றி தடாதகை மீனாட்சி யெனும் பல திருநாமங்களை யெய்தி வளர்ந்த வரலாற்றை, இங்கு பிரஸ்தாபித்தார். சிவபிரானை வஹ்நியன் என்பர்; அது நோக்கித் தேவியை வஹ்நியை என்றார்: வன்னியினின்று மெழுந்தவளாகலின், வஹ்நியை யென்றார் போலும்.

மலையத்துவசன் சந்திர குலத்தவனாகலின், அக்குலத்தின் மூலபுருடனான சந்திரனுக்குள்ள மாசு அக்குலத்திற்கு முண்டெனக் கருதி, அக்களங்கம் நீங்க இறைவி மதிகுலத்தில் அவதரித்தாள். வேள்வியின்கண் எழுந்த மீனாட்சியார், தனக்குத் தந்தை முறையாக அமைந்த மலையத்துவசனது பாண்டி நாட்டைத் தானேற்று, பின் சோமசுந்தர பாண்டியராக வந்த சிவபிரானை மணந்து, அப்பரனும் தானுமாக, ஆடுவார்க் காடிக் காட்டும் தன்மைபோல் அரசு முறையைச் செய்து காட்டினாளாகலின், 'அரசுநெறித் தெளிவுபெற' என்றார். விரிக்கிற்பெருகும். (10)

96



சம்புமஹாரிஷி செய்த யாகத்தில்
உருத்திரவன்னிய மஹாராஜன் திருவவதரித்தல்.

துணைவரெனக் கருதாமற் சிறுவயது முதற்றுவக்கி
வீரகு சூழ்ந்துத்
துணைபடிறுப் புனற்புதைத்து மனைகொளுத்திக் கழுங்
துகிலுரிந்தக் [காடித்
துணைவரினை வனம்புகுத்தித் துயர்புரிந்த துரியனவன்
வீழ வைந்து
துணைவருக்குந் துணைபுரியப் பாஞ்சாலி வன்னியினி
ரூன்றல் போலும்,

(பொ-ரை.) சகோதரர்கள் என்று எண்ணுமல், சிறு வயதிலிருந்து கொடுமை செய்து, வஞ்சகத்தையே துணையாகக் கொண்டு, (அச் சகோதரர்களை) நீரில் அமிழ்த்தியும், (குடியிருக்கும்) வீட்டை நெருப்புவைத்துக் கொளுத்தியும், சூதாடியும், (அவர்களின் மனையாளையும் அவர்களையும்) ஆடைகளைந்தும், அந்த ஐந்து சோதரரைக் காட்டிற் செலுத்தியும், (இன்னம் பல) துன்பங்களைச் செய்த துரியோதனன் வீழ, அந்த ஐந்து துணைவர்களான பாண்டவர்க்கு உதவிபுரிய துரோபதையார் யாகாக்கினியில் அவதரித்தது போலவும், (எ-று).

சூதபுராணிகர் கலியுக ஆரம்பத்தில் இருந்தவராகலின், இச்சரித்திர காலத்திற்குப் பலகாலம் பிற்பட்டது பாரதமெனினும், தன் காலத்திற்கு முன் நிகழ்ந்த வரலாறு என்பது கருதி, இதனையும் உவமையாகக் கொள்கின்றூர். இதனைக் கற்பபேத மெனவுங் கூறுவர் சிலர். உவமையை மயங்குதலாகாது. இதைப்போலும் எத்தனையோ இடங்கள் காவியங்களில் இருத்தல்கண்கூடு. (11)

சூர்புரிந்த துயரகற்றச் சிவபரன்றன் னுதல்விழியிற்
சிறக்கத் தோன்றிப்
பார்புரிந்த பெருந்தவத்தா லுக்கிரபாண் டியனுகிப்
பகருங் காழி

நேர்புரிந்த பெருஞ்சைவ நிலைத்திடற்குக் குரவனென
நிலைத்து நின்ற
ஏர்புரிந்த வறுமுகத்தெம் மிறையவனே வன்னியனு
வெழுதற் செய்தான்.

(பொ-ரை.) சூரபன்மன் (தேவர்களுக்குச்) செய்த துன்பத்தை நீக்க, சிவபெருமான் (அக்கினி சம்பந்தத்தை யுடைய) நெற்றிக் கண்ணின் வழியாக (உலகு) சிறக்குமாறு முருகனைத் திருவவதரித்தும், உலகம் செய்த பெரிய தவத்தால் உக்கிரகுமார பாண்டியராக அவதரித்தும், ஒழுங்கமைந்த பெரிய சைவசமயம் நிலைப்ப தன் பொருட்டு சீகாழிப்பதியில் சமய குரவராகவும் தோன்றிநின்ற அழகு விளங்கிய எமது ஆறுமுகப் பரமனே, (அவ்வேள்விக் குண்டத்தினின்று,) வன்னியம் பரமனைத் திருவவதரித்தான், (எ-று).

சூரபன்மன் கதை - பிரசித்தம். சோமசுந்தர பாண்டியர் மீனாட்சியாரைத் திருமணஞ்செய்தபின், அவர்பால் அவதரித்தவர் உக்கிரகுமாரபாண்டியர். சமயத்தை விளக்குவதன் பொருட்டுச் சீகாழிப்பதியில் திருஞான சம்பந்த மூர்த்திகளாகத் திருவவதரித்ததும் இங்குப் பிரஸ்தாபிக்கப்பட்டது. உக்கிரபாண்டியரும் திருஞான சம்பந்தரும் காலத்தாற் பிற்பட்ட அவதார மூர்த்திகள். இதற்கும், முன் உரைத்த எதுவையே கொள்க. இத்தனை வகையில உலகைக் காக்க இருந்த முருகப் பரமனே வன்னிய மன்னராகத் திருவவதரித்தனன் என்றபடி. (12)

வலையமிக வொளிர்முடி பிறழுமணிக் குண்டலமும்
வனப்பு வீசச்
சிலைக்கரமு முடல்வயமுந் திகழ்வயிரக் கவசவசஞ்
சிறக்க யேந்திச்

கொலைத்தலைய வரிக்குருளைப் பொலங்கிரியின் புறமதனிற்
குதித்த தென்னத்
தலைவியுள முவகையுறத் தடப்பரிமே லெமதிறைவன்
றகவின் வந்தான்.

(போ-ரை.) (புயங்களில்) வாகுவலயம் மிக்கு விளங்கவும், (தலையில்) கிரீடம் பிரகாசிக்கவும், (செவிகளில்) இரத்தினம் அழுத்திய குண்டலங்கள் பேரழகைச் செய்யவும், வில்லேந்திய திருக்கரமும், உடலின் வன்மையும், விளங்கிய (போர்க்குரிய) வச்சிர கவசமும் சிறப்பொடு தாங்கி, கொல்லுந் தொழிலையுடைய சிங்கக்குட்டி பொன்மலைமீதிருந்து புறத்தில் குதிப்பதையே ஒப்ப, எமது இறைவனை வன்னியம் பரமன், பரசிவையின் உள்ளங் களிக்குமாறு பெரிய குதிரைமேல் (இருந்த கோலத்துடன்) வேள்வியின் நடுவிலிருந்து மேன்மையுறவந்தான், (எ-று).

தலைவி-யாவர்க்குந் தலைமையான உமாதேவி. ஓங்கி வளர்ந்த வேள்விக்குண்டம் பொற்கிரியென்ன இருந்ததெனவும், குதிரையே அக்கிரியென்ன இருந்ததெனவும் கூறுவர். தாவிப்பாயுங் குதிரையுடன் அக் குண்டத்தினின்று குதித்து வெளிப்பட்ட வன்னிப்பரமன் பொற்கிரியின் புறத்தே குதிக்குஞ் சிங்கக்குட்டியென மதிக்க ஆனான் என்றபடி. (13)

தேரோடு நற்பரிதி யருணமணிச் சிகரமதிற்
றிகழச் செவ்வி
நீரோடை யிற்செழுமைக் கமலங்க ணிறம்வாய்ந்து
நிலைத்தற் போல
விரோத யன்னுதித்த வமையமதி னுவகைமிக
விழைவு மிக்குப்
பாரோர்தங் கண்களித்த வருமகவைப் பரிவினுடன்
பார்க்குந் தோறும்.

(போ-ரை.) சிறந்த சூரியன் தேருடனே சிவந்த அழகிய உதயகிரியில் உதிக்க, செந்தாமரை மலர்கள், நீரையுடைய ஓடைகளில் அழகுடன் சிறத்தைப் பெற்று மலர்ந்து நிற்பதை யொப்ப, வீரம் தோன்றற்கு இடமாயுள்ள சேய், (பரிமேல்) வந்து அவதரித்தலைச் செய்யும் அளவில், (அங்ஙனம்) அவதரித்த புதல்வனை அன்புடன் பார்க்குந் தோறும், மகிழ்ச்சி மிகுதியாக (மேன்மேலும் பார்க்கும்) ஆசை யதிகரித்து, (பார்த்துப் பார்த்து) உலகத்தவரின் கண்கள் களிப்படைந்தன, (எ-று).

வீர உதயன்-வீரோதயன்; "அ ஆ முன் உ ஊ வரின் இரண்டுங்கெட ஓர் ஓகாரந் தோன்றும் என்னும் விதி காண்க." தோறும் என்பது-காலப் பன்மைபற்றி வந்தது. புதல்வன் அவதரித்த அச்சமயத்தில் இவ்வண்ணம் யாவரும் களிப்பெய்தினர் என்க. (14)

சங்கமுறு சங்கமெலாம் மிகவொலிக்க வெறிந்தார்த்துப்
புழுகுஞ் சாந்துந்
துங்கமுறுங் கொடித்தொடைக டோரணங்கண் மிகப்
சோழ தேயம் [பரப்பிச்
புங்கவனுஞ் சயந்தனுற மகிழ்வுபெறு பொன்னகர்போற்
புளகங் கொள்ளத்
திங்களிளம் பிறையுதித்த தெனவிருந்த வுயர்வுபெறு
திசைக ளெல்லாம்.

(போ-ரை.) சோழ நாட்டில் உள்ளவர்கள், கூட்டமாகவுள்ள சங்குகள் மிகுதியாக ஒலிக்கவும், புழுகையும் சந்தனக் குழம்பையும் வீசி ஆரவாரஞ்செய்து, பெருமை பொருந்திய கொடிகளையும் மாலைகளையும் தோரணங்களையும் மிகுதியாக (எங்கும்) பரவக்கட்டி, காளைபோலும் மிடுக்குடைய சயந்தன் பிறக்க (அதனால்) களிப்படையும்

சுவர்க்கத்தைப்போல் புளகாங்கிதமடைய, உயர்வு பொருந்திய எல்லாத் திசைகளும் இளம்பிறைத் திங்கள் உதித்ததுபோல் (மகிழ்வுமிக்கு) இருந்தன, (எ-று).

முதலிற் போந்த சங்கம், கூட்டம் எனும் பொருளது.

அன்றொருகா லருளுருவ முருகேச னிசிசரரை
யடக்க வந்தா
னின்றுமவன் றனதளியா லுருத்திரவன் னியனாக
யிறைவன் னெற்றி
யின்விழியி னுறையழலி னமிசமென முனசெயற்கே
யிணங்கி யுற்று
னென்றுபெரு மொழியொன்று மகசாளத்து விண்மேலி
னெழுந்த தம்மா.

(பொ-ரை.) (அச்சமயத்தில்,) அருளின் வடிவமான முருகப் பரமன், அவுணர்களை அடக்குதற்கென்று அன்னாளில் அவதரித்தான்; சிவபிரானது நெற்றிக் கண்ணிற் பொருந்திய அக்கினி யமிசம் என அப்பரமன், (அவுணர்களை யடக்கும்) பழையசெயலுக்கே இணங்கி, உருத்திர வன்னியனாக இன்னும் திருவவதரித்தான் என்று, பெருமை தங்கிய அசரீரி வாக்கியம் ஒன்று, யாகசாலையினிடத்தில் ஆகாயத்திலிருந்து எழுந்தது, (எ-று).

சூரனாதிய அவுணரை யடக்க அன்று அவதரித்த முருகோனே வாதாவியாதிய அவுணரை யடக்க இன்று உருத்திர வன்னியனாகத் திருவவதரித்தான் என்று வான்மொழி யுரைத்ததென்க. அம்மா-வியப்பின்கட்குறிப்பு. முருகப்பரமனும் சிவபிரான் விழியழலின் வந்தான்: உருத்திர வன்னியனும் அவ்வண்ணலின் வடிவமான அக்கினியினின்றே அவதரித்தான் என்றபடி. வேள்வியி லவதரித்த பாஞ்சாலியையும் சிவபிரான் விழியழலினின்று

அவதரித்தாள் என்பதை "மண்மேலொருத்தி யரக்கர் குலமாளப் பிறந்தாள் வாமன்நுதல் கண்மேல் இன்றும் இவள் பிறந்தாள்" என வில்லிபுத்தூராழ்வார் உரைத்தவற்றினுங் காண்க: (வாமன்-சிவபிரான் திருப்பெயர்.) ()

அவ்வேளை கிரதுதனிற் கயிலையுடன் வைகுந்த
மயன்றனூடு
செவ்விபெறு விபுதநகர் முதலுலகப் பலரமிசந்
திகழ வந்தா
ரவ்வறவ ரொடுமறவ ரோரிலக்கக் கோடியரு
மணைய வந்தத்
தெவ்வையடு துணைவருடன் வருமிறைவ னிறைவியடி
தொழுதற் செய்தான்.

(போ-ரை.) அதே காலத்தில், திருக்கயிலையுடன் வைகுந்தம், பிரமனது சத்தியலோகம், அழகுநிரம்பிய சுவர்க்க முதலாகவுள்ள பல உலகத்தவரின் அம்சமாக விளங்கப் பலர் (அந்த) யாகத்தினின்றும் தோன்றினர்; தருமவடிவமான அவர்களுடன், ஒரு லட்சங்கோடி வீரர்களும் (அவ் யாகத்திலிருந்து) எழ, பகைவர்களை வெல்லத்தக்க அத்துணைவர்களோடு அவதரித்த உருத்திர வன்னியர், உமாதேவியாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர், (எ-று). (17)

இறைவியளி வழங்கியபின் சம்புமுனி யொடுமனை தா
விறைஞ்சி யேத்த
கிறைவுபெறு விழைபசவு மந்தணர்மு னனைவருக்கு
திகழுந் தானங்
குறைவின்றி நடத்தினன் தன்பலவாந் தருமங்கள்
குலவச் செய்யப்
பொறைமகிழத் துந்துபியும் மங்களமாம் பெருவொலி
பொலிந்த தாலோ.

[யாத்

(போ-ரை.) (வணங்கிய உருத்திர வன்னியற்குப்) பரசிவை திருவருள் செய்தபின், சம்புமுனிவருடன் அன்னையான அசயந்தியம்மையாரின் திருவடிகளை வணங்கித் துதிக்க, (அப்போது, சர்வ லட்சணங்களும்) நிறைந்த காமதேனு, அந்தணர் முதல் அனைவர்க்கும் ஒரு குறையுமின்றி விளங்கிய தானம் நடத்தவும், குபேரன் பலவகையான தருமங்களை விளங்கச் செய்யவும், உலகம் மகிழ்ச்சி பெறுமாறு தேவதுந்துபி வாத்தியம் மங்களமான பேரொலி செய்து அழகு பெற்றது, (எ-று).

விழைபசு-காமதேனு. பொறை-பூமி. உருத்திரவன்னியரின் அவதாரத்தால் மகிழ்ச்சி நிறைந்த காமதேனுவுங் குபேரனும் தானதருமங்களைச் செய்ய, தேவதுந்துபி தனது மங்கள வோசையால் தானும் ஓர் மங்களம் பெற்றது என்க. (18)

பரசிவையெம் பெருமாட்டி வானவரைப் பதிக்கேகப்
பணிக்க வந்தச்
சுரர்தொழுதெம் மிறைவிதனை யகல்போது நம்மவர்க
டுயர நீங்க
அரன்மகனுங் குமரேச னுருத்திரவன் னியனாக
வவதரித்தா
னாங்கிளரு மவுணவலி யுடையுமினி யெனமகிழ்வி
னுரைத்துச் சென்றார்.

(போ-ரை.) (அதன்பின்,) பரசிவை யெனும் திருநாமத்தையுடைய எமதிறைவியார், தேவர்களை அவரவர்களது பதிக்கு ஏகுமாறு உத்தரவளித்த காலை, அவ்வானவர்கள் எமது அன்னையாரை வணங்கி, (தம் பதிநோக்கிச்) செல்லும்போது, (அவுணர்களால் வருந்தும்) நம்மவர்கள் துன்பம் நீங்க, சிவகுமாரரான கந்தப்பெருமான்

உருத்திர வன்னியராகத் திருவவதரித்தாராகலின், இனி, வலிமை மிகுந்த அசுரர்களின் வன்மை புறங்காட்டும் என்று (தத்தமக்குள்) மகிழ்ந்து பேசிக்கொண்டே சென்றனர், (எ-று). (19)

சிவமொழியும் மறையுரையும் பிறகலையுஞ் சம்புவிட
முணர்தற் போல
நவமதுறு முனையுணர்வா லுணரெமது நல்லிறைவன்
னடித்துக் கற்றான்
பவமறுக்கும் பவையினடி பணிவதுவும் படைஞருடன்
னதியின் பாங்கர்
தவமுனிவர்க் குழுபணிக ளியற்றுவதுந் தொழிலானுன்
றகனி றைன்.

(பொ-ரை.) புதுமையான (ஓதாதுணரும்) பண்டையுணர்வால், (எதனையும்) உணர்ந்துகொள்ளும் எமது சிறந்த உருத்திர வன்னியப் பெருமான், வேதமொழிகளையும், சிவமொழியான ஆகமங்களையும், மற்றுமுள்ள கலைகளையும் சம்பு முனிவரிடம் கற்று உணர்வதுபோல, நாடகம் நடித்துக் கற்றார்; தகவு வாய்ந்த அப்பரமன், பிறவிப் பிணி நீக்கும் உமாதேவியாரின் திருவடிகளை வணங்குவதும், (தன்னுடன் அவதரித்த) வீரர்களுடன், இலாகதியின் பக்கத்தில் வாழும் தவஞ்செய் முனிவர்களுக்கு ஆன திருப்பணிகளைச் செய்வதையுமே தொழிலாகக் கொண்டு இருந்தார், (எ-று). (20)

உருத்திர வன்னிய மகாராஜன் திருவவதாரச் சருக்கம்
முற்றிற்று.

---

உ

## உருத்திர வன்னிய மகாராஜன்
# திருமணச் சருக்கம்.

எழுசீராசிரிய விருத்தம்.

சம்புமா முனிவன் செய்தவேள் வியினிற்
சண்முக னமிசமா வன்னி
நம்பிய வமரர் துன்பினை யகற்ற
நண்ணிய துரைத்தன மினிமேல்
வம்பியற் குழலா ரிந்திரன் பயந்த
வனிதைய ரிருவரை மகிழ்வி
னெம்பிரான் மணந்த செய்தியின் னிலையை
யெழிலுற வினிதெடுத் திசைப்பாம்.

(பொ-ரை.) சிறந்த சம்புமுனிவர் செய்த யாகத்தில், வன்னியம் பரமன், ஆறுமுகப்பெருமான் அம்சமாக (த் தன்னை) நம்பிய தேவர்களின் துன்பத்தை நீக்கத் திரு வவதரித்த செய்தியை (இதுகாறும்) கூறினோம்; இனி மேல், எமது இறைவனான உருத்திர வன்னியர், இந்திரன் பெற்ற மணம் நிறைந்த கூந்தலை யுடையவர்களான இரு மாதர்களையும் திருமணம் புரிந்த வரலாற்று முறைமை யை, (யாம்) அழகுபெற இனிதாக எடுத்துக் கூறுவோம்.

இத்திருமணச் சருக்கங் கூறிய பேற்றால் யாமே விளக்கம் பெறுவோம் என்பது கருத்து. நம்பிய-விரும் பிய எனினுமாம். (1)

நங்கையர் மயலான் றன்னவை யடைந்த
நற்பொனை மதித்திடா திருந்த
மங்குலம் பரிய னக்குரு சபித்த மன்பெரு
மொழியினு லுயர்வுத்

தங்கிய சுதன்மைச் சங்கமன் னிதிமுன்
னண்ணிய தனமெலா மழகுப்
பொங்கிய வரம்பை யென்முத லவர
கன்றிடப் புலம்பின னிருந்தான்.

(பொ-ரை.) பெண்கள்பால் கொண்ட மோகத்தை யுடையவனாய், தனது சபையை யடைந்த சிறந்த பிரகஸ்பதியை, (அம்மோகங் காரணமாக, எதிர்கொண்டு வணங்கல் உபசரித்தலாதிய முறையில்) மதித்தல் செய்யாமல் இருந்த மேகவாகனனாகிய இந்திரன், அந்த குருமூர்த்தியான பிரகஸ்பதி சபித்த நிலைபெற்ற பெருமையை யுடைய சொற்களால், உயர்வு பொருந்திய சுதன்மை யெனும் தனது தெய்வசபையும், நிலைத்த சங்கநிதி (பதுமநிதி) முதலாகச் சொல்லப்படும் ஐஸ்வர்யம் அனைத்தும், அதிகரித்த அழகினை யுடைய அரம்பை யென்பவள் முதலாகச் சொல்லப்படும் அம்மாதரும், (தன்னைவிட்டு) நீங்க, (அதுகண்டு சகியாது) வருந்தியவனாக இருந்தான், (எ-று).

அப்சரப்பெண்கள் நடிக்க, அவர்களது அழகுகண்டு மையல் தங்கிய மனத்தை யுடைய இந்திரன், தனது குருவான வியாழன் சபைநோக்கி வருவதையும் மதியாதிருந்தானாக, அது கண்டு சினந்த அவர் சபித்தது காரணமாக, தனது செல்வமெல்லாம் ஒவ்வொன்றாகக் கழிய, என் செய்வதென்று வருந்தியிருந்த இந்திரனது இவ்வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் கூறுமெனினும், இச்சம்பவம் அதனினும் முற்பட்ட வேறொரு கற்பத்தில் நிகழ்ந்தது என்பர் அறிஞர். (2)

அவ்வினைச் செயலா றன்னைவா தாவி யொடுபல
வவுணரு முதித்துக்
கவ்வைசெய் திடலுங் கானகத் தொளித்தென்
செய்வதென் றிருந்தவக் கரியன்

செவ்விய வமர கண்டம துறையுஞ்
சித்திர ரதனரு ளரிவை
நவ்வியின் விழியள் சித்ரரே கையினை
நன்மணம் புணர்ந்துவாழ்ந் திருந்தான்.

(போ-ரை.) அத்தீவினைச் செய்கையால், வாதாவியோடு பல அசுரர்கள் தோன்றி, தன்னை (பல) துன்பஞ் செய்யவும், (அவர்கள் கொடுமைக்குப் பயந்து) கானகத்தில் ஒளித்து, என்ன செய்வது என்பது தெரியாமல் (வருந்தி) இருந்த அவ் விந்திரன், (தான் மறைந்து வசித்த அக்காலத்தில்,) சிறந்த அமர கண்டத்தில் வாழும் (கந்தருவனான) சித்திரரதன் பெற்ற மான்போலுங் கண்களையுடைய சித்திரரேகையை, நலமான திருமணஞ்செய்து (இல்லறத்தனாய், அவளுடன்) வாழ்ந்து கொண்டு இருந்தான், (எ-று).

இந்திரனுக்குத் துன்பம் நேர்ந்த காரணம் குருவின் சாபமொழியே யென்றவர், இனி, அக்குருவை அவமதித்த தீவினைச் செயல் ஒருருப் பெற்று, வாதாவி முதலான அவுணரைத் தோற்றுவித்து, அவ்விந்திரனுக்குப் பலதுன்பங்களை விளைவித்ததென்பதையும் இச்செய்யுளிற் கூறினார். "தாந்தாஞ் செய்தவினை தாமே அனுபவிப்பர்" என்பது முதுமொழி. இவ்வுலகில் நல்லவை சில இருந்ததெனின், அவை நல்லோர் நினைவின் பரிணாமமெனவும், தீயவை சில இருந்ததெனின், அவை தீயோர் நினைப்பின் பரிணாமம் எனவுங் கூறுவர் ஆன்றோராகலின், அதற்கு ஏற்றவாறு, இந்திரன் தேடிய அத்தீவினை பிரமனுதியோரையும் வாதாவியின்பால் வருந்த வைத்ததென்க: "போதனொடு யாரெனினும் முன்னைவினை போமோ" எனவரும் வாதாவியினதாவிச் சருக்கப் பாசுரமும் இங்கு நினைவு கூரத்தக்கது.

வாதாவிக்கு அஞ்சி இந்திராணியுடன் குயில்வடிவங் கொண்டு பறந்தோடிய இந்திரன், அவளுடன் சமயத்திற்கு ஏற்றவாறு பலவிருட்ச வடிவம் தாங்கி யிருந்து, இருவரும் பலவடிவுடன் இணங்கி யிருப்பதை எப்படியேனும் அவுணர்கள் அறிந்து கொள்வராயின் என் செய்வதென்று நினைத்து, அவளொருபக்கம் நானொரு பக்கமாகப் பிரிந்து வசித்தபோது, தான் நீண்ட தூரத்தில் உள்ள அமரகண்டத்தில் தங்கநேர்ந்த அமயம், சித்ரரேகையின் பால் காதல்கொண்டு, தன்னை மணக்கத் தவங்கிடந்த அன்னவளை மணஞ்செய்தனன் என்க. (3)

கந்தனை யகத்தி னெண்ணுமவ் வரிவை
முன்னுறக் கவினுறு கடவுட்
சிந்தர முயர்ந்த வள்ளியென் றுரைக்குந்
தெய்வவங் கனையருங் குழவிச்
சந்தமொ டணைய வன்னவ ளெடுத்துத்
தன்பதிக் குறைத்தன ளவனு
மிந்துவை நிகர்த்த வன்னரை வளர்த்தெம்
வன்னியை மணப்பரென் றிருந்தான்.

(பொ-ரை.) குமரக் கடவுளை மனத்தில் (இருத்தித்) தியானிக்கும் அந்த சித்திரரேகையின் எதிரில், ஒருநாள் அழகு பொருந்திய தெய்வ யானையார், ஸ்ரீ வல்லி நாச்சியார் என்று கூறும் தெய்வமாதர்கள் (இருவரும்) குழந்தைக் கோலத்தோடுவர, அச்சித்திர ரேகை பெருங்களிப்படைந்து, அவ்விரு குழந்தைகளையும் (தழுவி) எடுத்து, (அதனைத்) தனது நாயகனான இந்திரனுக்குக் கூற, அவனும், சந்திரனை ஒத்த (தண்மையும் ஒளியும் வாய்ந்த) அவ்விரு பெண் குழந்தைகளை (அருமையாக) வளர்த்து, (இம்மாதர்கள் எதிர்காலத்தில் நமது) வன்னியம் பாளை

திருமணஞ் செய்வர் என்று, (தனது ஞானதிருஷ்டியால் எண்ணி) இருந்தான், (எ-று). (4)

மந்திரப் பிணையல் லாவண்ய சார
வல்லியென் பெயருரு மவர்தஞ்
சிந்தையிற் குடிகொ ளக்கினி கருப்பன்
றன்னையொண் சிறப்பொடு மணக்க
வந்தியும் பகலு முன்னினற் றவஞ்செய்
தன்புட னெழுகிட வொருநா
ளெந்தையு மவர்மு னெய்தியுங் களையாம்
மணப்பமென் றிசைத்துருக் கரந்தான்.

(பொ-ரை.) மந்திரமாலை, லாவண்ய சாரவல்லியென்னும் பெயரை (இந்திரனால்) பெற்ற அம்மாதர்கள் இருவரும், (இளமை தொடங்கிப் பருவகாலம் எய்தியவரைக்கும்,) தமது மனத்திற்குடிகொண்டுள்ள முருகப்பரமனு வன்னியரை மிகுந்த சிறப்பொடு திருமணஞ் செய்ய இரவும் பகலும் கருதினராய், அன்புடன் சிறந்த தவத்தைச் செய்து வர, எமது உருத்திர வன்னியர் ஒருநாள் அவ்விரு மாதர்களின் முன் எழுந்தருளி, (நீங்கள் கருதிய வண்ணம் விரைவில்) உங்களை மணஞ்செய்வோம் என்று உறுதிமொழி கொடுத்துத் திருவுருக் கரந்தார், (எ-று).

பிணையல்-மாலை. அக்கினி கருப்பன்-முருகனது பல திருநாமங்களு ளொன்று; அக்கினிபூ என்றபடி. கர்ப்பம் கருப்பமென விகாரப்பட்டது. பாவகி யெனும் திருநாமமும் இதே பொருள் பயப்பனவாம். அங்கமுடையவனை அங்கியெனல்போல் அக்கினியை உடம்பாகவுடையவனை அக்கினி கருப்பன் என்றார். அவ்வக்கினி, சிவபெருமானது நுதல்விழியி னின்று தோன்றிய பேரொளி யென்க. அக்கினி கருப்பனை 'பாவகாத்மஜன்' எனப்

பெயரிட்டழைப்பர் வடநூலார். அவ்வடநூற் பெயர் அக்கினி கருப்பன் எனும்பொருள் பயப்பது. "அடியவர் களை (க் கருவிகரணக் கட்டினின்று விடுவித்து முடிவான) அக்கிரத்திற்குக் கொண்டு வருதலின் (சிவமாகிய) யாம் அக்கினி யாவோம். (பாசிவையான) தினது புதல்வன் நம்மிடத்திருந்து ஆவிர்ப்பவித்தது காரணமாக அக்கினிபூ எனப்படுகிறான்" எனவரும் கந்த புராணச் சம்பவகாண்டத்தின் 35-ஆம் அத்தியாயத்து 12-ஆம் சுலோகத்தானும், "எமது வீரியம் மேல் நோக்கிச் செல்லாநின்ற அக்கினிக்கண்ணினின்று அவதரித்தமையினும் (முருகனை) அக்கினிபூ என்னலாம்" என ஷை 13-ஆம் அத்தியாயத்துச் சுலோகத்தானும் இது உறுதி பெறும்.

வாசவன் றனது மங்கையர் களையவ்
 வன்னியம் பரமனுக் களிக்கும்
நேசமொ டமலே சன்னதி யடைந்துத்
 தன்னுளக் கருத்தினை நிகழ்த்தத்
தேசமர் சிவையு முண்மகிழ் வொடுமித்
 தெய்வநற் றிருமண மியற்றும்
பாசன முறையி னுய்ந்திடு முலக
 மென்றனி திகழ்தரப் பகர்ந்தாள்.

(பொ-ரை.) இந்திரன், தன்னுடைய புதல்வியரை, அந்த வன்னியம்பரமனுக்குத் (திருமணஞ்செய்து) தரும் அன்புடன், (உருத்திர வன்னியர் தங்கியுள்ள இடத்தில் அமைந்துள்ள) குற்றமற்ற உமாதேவியாரின் சன்னிதானத்தையடைந்து, (நமஸ்கரித்து,) தனது மனக்கருத்தை விண்ணப்பிக்க, பேரொளியின் வடிவமாகவுள்ள இறைவியும், மனக்களிப்புடன், தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த இத்திருமணத்தைச் செய்துவைக்கும் உறவு முறையால்,

உலகம் உய்திபெறும் என்று கருணை விளங்கத் திருவாய் மலர்ந்தருளினுள், (எ-று). பாசனம்-உறவு. (6)

சென்னியை யிறைஞ்சிச் சென்றளி நிறைந்த
சேயினின் கழலடி யிறைஞ்சி
யென்னையின் றளிக்கு நாயக நினதோ
ளேய்தர வெனதிரு மூவவான்
மன்னரி வையரை மாமணம் புரிந்தெம்
வானவர் குலமுய வருள்கென்
றன்னவ னிசைக்க நற்பரன் றனை
மணஞ்செய வருதுமென் றறைந்தான்.

(போ-ரை.) (இறைவி யுரைத்தது கேட்டு மகிழ்ந்து) முடிசாய்த்து வணங்கிச் சென்ற இந்திரன், கருணை நிறைந்த உருத்திர வன்னியரின் வீரக்கழலணிந்த திருவடிகளை வணங்கி, என்னை இன்று காக்க இருக்கும் நாயகரே! தேவரீரது திருத்தோளிற் கலக்குமாறு எனது சிறந்த தவத்தால் நேர்ந்த மாதரார் இருவர் தம்மைத் திருமணஞ் செய்து, எமது தேவர்கள் குலம் உய்திபெற அருளல் வேண்டும் என்றுகூற, சிறந்த அப்பெருமான் (மகிழ்ந்து, அவன் வேண்டுகோளுக்கு இசைந்து,) திருமணஞ் செய்ய நாளை வருவோம் என்று அருளினுன், (எ-று). (7)

எம்பர னுரையிற் றன்னுளங் களித்த
விந்திர னெழிலுறு மிறைவ
னம்பரந் தொழுதுத் தன்னக ரடைந்தவ் வணிநகர்
குதுகலிப் படைய
வும்பரை முரசொ லித்திட வுரைத்துத் தன்னக
ரணிசெய வமைமையும்
நம்புறு கணங்க டங்களை விளிக்க
நல்வினை யுரைப்பவர் விடுத்தாள்.

(போ-ரை.) எமது உருத்திர வன்னியர் அருளிய மொழிகளால் தனது மனங் களித்த இந்திரன், எழுச்சி யுற்ற அப்பரமனது அழகிய திருவடி மலர்களை வணங்கி, (அதன்பின்) தனது பொன்னுட்டை யடைந்து, அழகிய அச்சுவர்க்கம் (திருமணச் செய்தியறிந்து) குதூகலத்தை யடைய, தேவர்களை மணமுரசு ஒலிக்கப்பணித்து, தனது நகரத்தை அலங்கரிக்க, (அதேகாலத்தில்) உமாதேவி யார், விரும்பத் தக்க சிவகணங்களை அழைத்துவர, சிறந்த தன் தூதர்களை ஏவினுள், (எ-று). (8)

புத்தியட் டகரு ருத்திரர் பலரும்
பாரிடக் கணங்களும் புனித
நித்திய பவர்மு னுற்றவர் தபனி
யேச்சுரர் நீலலோ கிதரு
மத்திரி நெடுமைக் காரியு மளிகத்
தீவிழி யுருத்திர ருடுக்கைப்
பைத்தகஞ் சுகத்தர் ஞானியின் முதுகிற்
றங்கிய தலைவனி பகர்வோர்.

(போ-ரை.) அட்ட வித்தியேச்சுரர்களும், பல உருத்திரர்களும், பூதகணங்களும், பவர் முதலாகச் சொல்லப்படும் எட்டு மூர்த்திகளும், ஆடகேச்சுரரும், நீலலோகித உருத்திரரும், குதிரையை யுடைய பெரிய சாத்தனும், நெற்றியில் நெருப்புக் கண்ணை யுடைய (பதினெரு) உருத்திரர்களும்; பசுமையான சட்டையைத் தரித்த சிவகணத் தலைவர்களும், ஞானியின் முதுகில் தங்குதலைக் கொண்ட கேத்திர பாலர் எண்மரும், (எ-று). குளகம்.

புத்தியட்டகராவரர்-சூக்கும புவனம் எட்டின் தலைவர்களாம்; அவர்கள்-அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், சிகண்டி

என்பவர். சூக்கும புவனமாவன-பைசாசம், இராட்சசம், யாட்சம், காந்தர்வம், மாகேந்திரம், சௌமியம், பிரா சேச்சுவரம், பிராமம் என்பனவாம்.

பவர் முதலிய அட்டமூர்த்திகளாவார்:—பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், மகாதேவன், உக்கிரன், உருத்திரன் என்போர். நீலலோகிதர்-பிரமனது நிட்டைக் காலத்தில் அவன் நெற்றியினுதித்தவர். ஞாளி-நாய். தலத்தைக் காத்தல் செய்வோரைத் தலவனி பகர்வோர் என்றார்; இவரை கேத்திர பாலர் என்பர் வடமொழி வாணர். கேத்திரபாலராவார் - அசிதாங்கர், ருரு, சண்டர், குரோதனர், உன்மத்தர், கபாலி, பீடணர், சங்கரர் என்போர். (9)

நான்முகன் வசுக்கள் பாலகர் திசையின்
　　னற்றிறன் மருத்துவ ரருக்கர்
பான்மதி சிறந்த புலிக்கழல் முனிமன்
　　பதஞ்சலிப் பயசரி பருகும்
வான்சிறு முனிகுற் குறுமுனி சனகா
　　தியர்சுகர் வாமதே வருடன்
றேன்மணங் கமழுங் குழலவ ரெழுவ
　　ரெனவனி திகழுறு மனையர்.

(பொ-ரை.) பிரமனும், அட்டவசுக்களும், எண்திசைத் தலைவர்களும், சிறந்த ஆற்றலை யுடைய எட்டு மருத்துவர்களும், பன்னிரண்டு சூரியர்களும், பால்போலும் ஒளியினையுடைய சந்திரனும், சிறந்த வியாக்கிர பாத முனிவரும், நிலைபெற்ற பதஞ்சலி முனிவரும், பாற்கடல் பருகிய உயர்ந்த உபமன்னிய முனிவரும், அகத்திய முனிவரும், சனகர் முதலிய நால்வரும், சுகமுனிவரும்,

வாமதேவ முனிவர் முதலியோருடன் தேனும் மணமும் பரிமளிக்கும் கூந்தலை யுடைய எழுவர் என்ற கருணை விளங்கும் சத்த மாதர்களும், (எ-று). குளகம்.

'திசையின் பாலகர்' என்றியைக்க. பயசரி-பாற் கடல்; பயசு-பால்: அரி-கடல். உபமன்யு-வியாக்கிர பாத ருக்கு வசிட்டரின் தங்கையிடம் உதித்தவர்: இவர் சிறு குழந்தையாக இருந்தபோது சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்து அப்பரமனால் அருளப்பெற்ற பாற்கடலை யுண்டவர்.

எழுமாதர்-அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வாராகி யெனப்படுவோர். (10)

அன்புறு சிவமாஞ் சித்தரும் விச்சா
தாருட னளியுறு மியக்கர்
கின்னரர் மறையோர் செழுதகை முனிவர்
யோகியர் கிளர்பட வரகர்
அன்னினர் பயிலும் பூதவே தாள
ரென்பவ ரனைவருந் துகளில்
பன்னரு நிறைவான் வலியுறு நதியி
னன்னையர் பலர்வரப் படர்ந்தார்.

(பொ-ரை.) அன்பு பொருந்தி சிவமே ஆன சித்தர் களும், வித்தியாதரரும், அவர்களுடன் பரிவு மிகுந்த இயக்கர்களும், கின்னரரும், வேதமுணர்ந்த சிறப்ப மைந்த முனிவர்களும், யோகியர்களும், கிளர்ந்த படத் தையுடைய நாகர்களும், கூட்டமாக உலவும் பூதவேதா ளர்கள் என்று சொல்லப்படும் யாவரும், குற்றமில்லாத சொல்லுதற்கும் அருமையான நிறைவுடைமையாக்

வன்மை பொருந்திய நதிகளுக்குரிய தலைவியர் (முதலாக உள்ள) பலரும் பரவி வருகின்றார், (எ-று). (11)

வந்தவ ரெமது வன்னியம் பரமன்
வாழ்தரு நிலையக மடுத்து
எந்தமை யளிசெய் யன்னையை யிறைஞ்சி
யெண்மைய யிறைவனை வணங்க
முந்தினர் நுழைந்து முன்னவ னடிக்கீழ்
வீழ்ந்திறைஞ் சினர்கர முகிழ்த்து
வந்தனை செயலு முருத்திர வன்னி யண்ணலும்
மணவணி புனைந்தான்.

(பொ-ரை.) வந்த அவர்கள் அனைவரும் எமது உருத்திர வன்னியர் எழுந்தருளிய இடத்தை யடைந்து, எம்மைக் காத்தல் செய்யும் பார்வதியை வணங்கி, மதிக்கத்தக்க வன்னியண்ணலை வணங்க (நினைத்து, அப்பரமன் இருக்கும் இடத்தை யடைய ஒவ்வொருவரும்) முற்பட்டு நுழைந்து, முதற்பெருந் தெய்வமான அவ்வண்ணலின் திருவடிக்கீழ் வீழ்ந்து வணங்கி (எழுந்து) கரங்குவித்துத் துதிசெயலும், உருத்திர வன்னி யிறைவரும் (குறிப்பறிந்து) திருமணக் கோலம் கொண்டனர், (எ-று).

உமாதேவியார் அநுக்ரகத்தால் தன்னுடன் அவதரித்த தோழர் பணிசெய்ய, உருத்திர வன்னியர், சிலாநதியின் கரையோரத்தில் சம்புமுனிவர் வேள்வி செய்த அந்நாள் அவ்வேள்வி மண்டபத்தில் மயன் சிருட்டித்த மாளிகையில் அம்முனிவர் அசயந்தியார் முதலினோருடன் தங்கியிருந்தாராகலின், திருமணம் காணவந்தவர்கள் அங்கு வந்து சேர, உமாதேவியின் குறிப்பறிந்த அவ்வண்ணல் திருமணக்கோலந் தாங்கினார் என்க. (12)

செங்கரத் தயனு மிந்திரன் முதலாஞ்
செவ்விய வமரரோ டெவர்க்கும்
மங்கல மளிக்குங் கட்கடை யிறைவன்
மங்கலம் புனைந்தன னெனவுஞ்
சங்கைகொண் டிறைவி யின்னடி பணிந்தச்
சங்கரி தருரத மமர்ந்துப்
புங்கவ ரிறைவி புடனெழுந் தருளப்
பொன்மைய மலர்மழை பொழிந்த.

(பொ-ரை.) செவ்விய கரத்தை யுடைய பிரமனுக்கும், இந்திரன் முதலாகச் சொல்லப்படும் அழகிய தேவர்களுக்கும், பிறயாவருக்கும் கடைக்கண்ணோக்கத்தால் எல்லா நன்மைகளையும் அளிக்கவல்ல உருத்திர வன்னியர், (தான்) ஒரு மங்கலக்கோலம் செய்துகொண்டவர் போலத் திருவுளங் கொண்டு, உமாதேவியாரின் திருவடிகளை வணங்கி, அவ்விறைவி அருளிய தேரில் அமர்ந்து, தன்னைச் சூழ்ந்துள்ள அனைவரும் பாசினையுடன் தொடர்ந்து வருமாறு புறப்படலும், (அதேகாலத்தில், ஆகாயத்தினின்றும்) மலர்மாரி சொரிந்தது, (எ-று).

தனது கடைக்கண் நோக்கத்தாலேயே அனைவருக்கும் மங்கலத்தை யருளும் உருத்திர வன்னியர், எக்நாளும் மங்கலங்கள் அனைத்திற்கும் உறைவிடமாயிருந்தே புதுவதாக மங்கலத்தை எய்தினர் போல ஒரு திருவிளையாடல் செய்தனர் என்றபடி.

"மாணணி நோக்கினார்த மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தாணணி யானபோது தனக்கணி யாது மாதோ"

எனவரும் கம்பராமாயணச் செய்யுளை ஈண்டு கருதுக.

சங்கை-எண்ணம். (13)

துந்துபி முழங்க மங்கல மொலிக்கத்
தாளம திசைக்கவிஞ் சையர்கள்
கொந்தலர்க் குழலார் நன்னட மியற்றக்
கோட்டினை முகந்தொறும் பிடித்து
வந்தநற் பானு கம்பனு மிழற்ற
வாணனும் முழவினை முழக்க
நந்தம திறைவ னனைவருந் தொடர
விண்ணவர் நகரினை நணினன்.

(போ-ரை.) தேவ துந்துபி முழங்கவும், (இயக்காதி யோர்) மங்கல வாத்தியங்களைக் கல்லென்று ஒலிக்கவும், விஞ்சையர்கள் தாளம் போடவும், (தனது ஆயிரம்) வாய் தோறும் (ஆயிரம்) சங்குகளைப் பிடித்துவந்த பானு கம்பன் (அச்சங்குகளை) ஊதிக்கொண்டே வரவும், வாண னும் குடமுழா முழக்கிக் கொண்டே வரவும், நமது இறை வரான உருத்திர வன்னியர், யாவரும் தொடர்ந்துவரப் பொன்னாட்டினை அடைந்தார், (எ-று). கோடு-சங்கு.(14)

அறுசீராசிரிய விருத்தம்.

விண்ணவ ரிறைவன் வந்தான் விகிர்தவெம்
பெருமான் வந்தான்
கண்மகி ழுருத்ர வன்னிக் கருணையி
னுருவன் வந்தான்
பண்ணிறை பரமன் வந்தான் பசுபதிப்
பகவன் வந்தா
னெண்ணிறை யமலன் வந்தா னென்றிய
மியம்பு போதில்.

(போ-ரை.) (பொன்குட்டை யடைந்தநாம்,) தேவர்களுக்கெல்லாம் இறைவன் வந்தருளினன்; மிகுந்த தூய்மைவாய்ந்த எமது பெருமான் வந்தருளினன்; (காணுங்) கண்கள் களிக்கத் தக்க கருணையின் வடிவனான உருத்திர வன்னியன் வந்தருளினன்; இசை நிறைந்த மேலான அண்ணல் வந்தருளினன்; உயிர்த்தொகுதிகளுக்குத் தலைவனான பகவான் வந்தருளினன்; (சிந்திக்கும்) சிந்தனையில் நிறைந்திருக்கும் மலாகிதன் வந்தருளினன் எனப் பொற்சின்னங்கள் ஒலித்த அப்போது, (எ-று).

குளகம். இயம்-பொற்சின்னம். (15)

கொடியினின் றுகுத்த தாரிற் கொம்பனார்
கலையுங் கன்றுர்
தொடிகளுஞ் சுதையின் றூளுஞ் சுரர்மலர்ப்
பொழிவுங் காவற்
படிறிலார் நெருக்க நீக்குஞ் சூரலிற்
சிதறும் பல்ல
முடிகளின் மணவுந் தாரும் வீதியின்
முகிழ்த்த தம்மா.

(போ-ரை.) கொடிகளினின்றும் (மலர்ந்து) சிந்திய மலர்களைப்போல, பூங்கொம்பை ஒத்த மாதர்களிடத்திலிருந்து சிந்திய மேகலையும், வளைகளும், தொடிகளும், சுண்ணப் பொடியும், தேவர்கள் பொழிந்த மலர்களும், குற்றமில்லாத (நகர்க்) காப்பாளர் ஜனநெருக்கத்தை நீக்கும் பிரம்பு தாக்குதலால் சிதறிய பல (அமரர்களின்) மகுடங்களிலுள்ள மாணிக்கங்களும், கற்பகப்பூ மாலைகளும் வீதிகளில் (குப்பையாகக்) குவிந்தது, (எ-று).

அம்மா-வியப்பின்கட் குறிப்பு. உருத்திர வன்னியர் வின்றோடு நண்ண அந்நாட்டு மக்கள் அவரைத் தரிசிக்க வந்தபோது நேர்ந்த நிகழ்ச்சிகள் இவையென்க. முதலடியிற் போந்த தார்-மலர் எனும் பொருளினும், ஈற்றடியில் வந்த தாரு-கற்பகமாலை எனும் பொருளினும் வந்தது. கலை-மேகலை; முதற்குறை. கன்று-வளை. 'சுரர் பொழி மலரும்' எனவும், 'படிறிலாக் காவலர்' எனவும் இயைக்க. சூரல்-பிரம்பு. மணவு-மணி. (16)

மாமனை யருகி னெய்தி வண்குய
  விழிந்து வானக்
கோமக னெதிர்கொண் டேத்தக் குணமறை
  யவர்கள் வாழ்த்தக்
காமனுங் கரங்கு வித்துக் கவினுறு
  மிறையைப் போற்ற
நாமக ளிறைஞ்ச வெம்மான் நன்மண
  வறையிற் புக்கான்.

(போ-ரை.) சிறந்த அரண்மனையைச் சமீபித்து, வளமமைந்த தேரினின்றும் இறங்கி, இந்திரன் எதிர்கொண்டு வந்து (வணங்கித்) துதிக்கவும், மேன்மையான அந்தணர்கள் வாழ்த்துக் கூறவும், மன்மதனும் (இரு) கரங்களைக் குவித்து இயற்கை யழகுடைய இறைவனைத் தொடரவும், கலைமகள் வணங்கி வரவும், எமது உருத்திர வன்னியர் சிறந்த மணவறையில் நுழைந்தார், (எ-று). (17)

நான்மறை துதிக்கச் சிய நன்மணித்
  தவிசி னேறித்
தேன்முகம் பிலிற்றுஞ் செய்ய தேமலர்த்
  தவிசின் வைகு

நான்முகன் முதலா னோரை நல்லணை
யமரு மாறு
வானவர் பெருமா னுய்யுந் திருக்கடை
நாட்டம் வைத்தான்.

(பொ-ரை.) நான்கு வேதங்களும் துதிக்க, (மணவறையில் தனக்கென அமைந்திருந்த) சிறந்த மணிகள் பதித்துச் செய்த சிங்காதனத்தில் ஏறி அமர்ந்து, வாய் வழியாகத் தேன் சிந்தும் செவ்விய இனிய கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரமன் முதலான யாவரையும், (அவரவர்களுக்கென அமைந்துள்ள) தூய ஆதனங்களில் அமரும்படி, தேவர் தலைவரான உருத்திர வன்னியர், (யாவரும்) உய்யத்தக்க திருக்கடைக்கண் செய்தருளினார், (எ-று). (18)

பூமகிழ் தரவென் றோரும் புண்ணியப்
புலவர் தங்கள்
நாமகிழ் தரப்பா மாலை நலம்பெற
வணிந்தி றைஞ்சுந்
தூமகிழ் முருக னெம்மான் றுகளிலா
ருளத்தின் மேவுந்
தேமகிழ் மடந்தை மாரைத் திருமகிழ்
கோலஞ் செய்வார்.

(பொ-ரை.) உலகம் களிப்பெய்த, புண்ணியரான வித்துவ சிரேட்டர்கள், தங்கள் நாவானது களிப்படையும் வண்ணம், பாக்களாலாகிய மாலையை, என்றைக்கும் சூட்டித் தொழும் தூய்மை (யென்ற ஒன்றினால்) மகிழப் பெறும் இறைவனும், குற்றமில்லாதார் உள்ளத்தில் விரும்

பியெழுந்தருளும் தெய்வமுமான முருகப்பரமன் களிப் பெய்தும் அரிவையரான (ஸ்ரீவள்ளி தேவயானையாரின் அம்சமாகிய) மந்திரமாலை, லாவண்ய சாரவல்லியெனும் இருவரையும், (இயற்கையழகுடன் செயற்கை யழகைச் செய்விக்கும் முறையால்,) இலக்குமியும் மகிழ்ச்சிகொள் ளும் மணக்கோலஞ் செய்யத் தொடங்கினர், (எ-று). ()

முரசொடு வளைமு ழங்க மூழ்கிமெல்
 லறுவை சாத்திப்
பரசிய புலவர்க் கெல்லாம் பரிசுக
 ளுகக்க நல்கி
விரைசெறி மலரைச் சூடி மிகுமணி
 வியக்கப் பூண்டுத்
திரைகட லமுத மன்னார் திருமணக்
 கோலங் கொண்டார்.

(பொ-ரை.) (அத்தேவமாதர்கள் நெருங்கிச் செய்த திருப்பணியின்படி,) பேரிகையும் சங்கமும் ஒலிக்க நீராடி, மெல்லிய ஆடை யணிந்து, (தம்மைத்) துதித்த வித்துவ சிரேட்டர்கள் அனைவரும் களிப்பெய்த பல பரிசுகளைத் தந்து, மணம்நிறைந்த மலர்களை(க் கூந்தலில்) அணிந்து, (யாவரும்) வியக்க மிகுந்த ஆபரணங்களைப் பூண்டு, அலை களை வீசும் கடலில் தோன்றிய அமுத்தை ஒத்த மந்திர மாலையாரும், லாவண்ய சாரவல்லியாரும் திருமணக் கோலம் தாங்கினர், (எ-று). (20)

சுந்தர வனிதை யர்க்குச் சோபன மெனவும் வாழ்த்தி
யிந்திரை வாணி யுந்த மெழிலுறு கரத்தை நீட்டக்
கொந்தவிழ் கதுப்பு மாதர் பேரறங் குலவுந் தங்க
ளந்தளிர் கரத்தைப் பற்றி யெழுந்தனர் சுருதி யார்ப்ப.

(போ-ரை.) இலக்குமியுங் கலைமகளும், சுந்தரமான (இத்தெய்வ) மகளிர்க்கு மங்கலம் என்று வாழ்த்துப் பாடி, தமது அழகுபொருந்திய கரங்களை நீட்ட, (அக் கரங்களை) பூங்கொத்துகள் அலர்ந்த கூந்தலையுடைய மந்திர மாலையாரும் லாவண்ய சாரவல்லியாரும், பெரிய தருமநிலை விளங்கும் தங்களது அழகிய தளிர்போன்ற கைகளால் பிடித்துக்கொண்டு, வேதங்கள் ஒலிக்க எழுந்தருளினார்கள், (எ-று). இந்திரை-திருமகள்; வாணி-கலைமகள்.

> தூரியத் துடனற் சங்க மொலித்திடச் சுமன சந்தூ
> மாரியு நிறைந்த வார்ந்த கவரியும் மாதர் வாயின்
> நேரிய சுவத்தி நேர்ந்த நிகழிவை சுலவப் போந்த
> ஏரிய லெமைய ளித்தா ரிறையிரு பாலி னுற்றார்.

(போ-ரை.) திருமண முரசங்களுடன் சங்கங்கள் முழங்கவும், (தேவர்கள் பொழியும்) தூய்மையான மலர் மழை நிறைந்தன; சாமரைகள் வீசப்பெற்றன; மகளிர் வாயினின்றும் மங்கல மொழிகள் தோன்றின; (இவ்வண்ணம்) நேர்ந்த இவையனைத்தும் சூழ, நடந்து வந்த அழகு நிறைந்த எம்மை யருளிய அன்னையர் இருவரும் உருத்திர வன்னியரின் இரு புறத்துமாக அமர்ந்தனர், (எ-று).

'தூ சுமனச மாரி' யெனவும், 'கவரியும் நேர்ந்த' எனவும், இயைக்க. சுமனசம்-மலர். சுவத்தி-மங்கல மொழி. சுலவ-சூழ. (22)

> மாமறை வழுத்தும் வள்ளல் மன்னிய வரியின் பீடந்
> தாமரு கடைந்துப் பெம்மாற் சார்ந்தவ ரிருந்த காட்சி
> காமரு முருகன் பாலி னெம்மனை யிருவர் காணத்
> தூமரு வியமுற் றோற்றம் மெய்ம்மையிற் றோன்றிற் றம்மா.

(போ-ரை.) மந்திர மாலையாரும், லாவண்ய சாரவல்லியாரும், சிறந்த வேதங்கள் துதிக்கும் வள்ளலான உருத்திர வன்னியர் எழுந்தருளி யிருந்த சிங்காதனத்தைச் சமீபித்து, அப்பெருமானது இருபக்கத்திலுமாக அமர்ந்த அத்தோற்றமானது, விரும்பத்தக்க (பேரழகுடைய) முருகப் பரமன் இருபக்கத்திலும், எமது அன்னையரான ஸ்ரீவள்ளி நாச்சியாரும், தெய்வயானை யம்மையாரும் எழுந்தருளி யிருந்த தூய்மை பொருந்திய பண்டைக் காட்சியானது, மெய்ம்மையாக (அப்போது யாவர் கண்களுக்கும்) தரிசனமாயிற்று, (எ-று). (22)

மாக்கடி வனச மேலோன் மக்களோ டொருங்கு தங்கி
நாக்களி னடுதா லார நன்மைய கிருதம் மிக்க
வாக்கிட நிரம்ப வுண்டு வலஞ்சுழித் துதர மார்ந்துத்
தேக்கிடு மமலை காட்டித் திகழ்சிகி யெழுந்த தாலோ.

(போ-ரை.) பெருமை பொருந்திய மணமுடைய தாமரைமலரில் வசிக்கும் பிரமன், புத்திரர்களோடு ஒருசேர இருந்து, ஏழு நாக்களில் நடுநாவால் சுவையறியுமாறு (சுருக்கு சருவங்களால்) நறிய நெய்யை நிரப்பி வார்க்க, விளக்கந் தங்கிய தீயானது, நிரம்பப் பருகி வலமாகச் சுழித்து வயிறுநிரம்பி, தேக்கெறியும் ஒலி போல் ஒலித்து மேலெழுந் தோங்கியது, (எ-று).

தால்-நா. கிருதம்-நெய். சிகி-அக்கினி. ஆல், ஓ-ஈற்றசை. (23)

சுற்றிலும் மறைகள் மிக்க வளையுடன் றுரிய வோசை
முற்றுறப் பிரமன் யாகச் செயலினை முழுதுஞ் செய்யத்
துற்றுமன் கலாரண் சாத்தித் துகளறு மிருவர் நற்கை
பற்றினன் விழைவி லார்க்குப் பாகதி யளிக்கும் யோகி

(பொ-ரை.) நான்கு புரத்திலும் வேதவோசையும், மிருந்த சங்கங்களுடன் (கலிக்கும்) பிற இயங்களின் ஓசையும் நிரம்பவும், பிரமன் வேள்விச் சடங்கு முழுதும் நடத்த, (எவ்வகைப் பொருளினும்) பற்றில்லாதவர்களுக்கு வீடுபேற்றினை யருளும் உருத்திர வன்னியர், நிறைந்த திருமங்கல நாணைப் பூட்டி, குற்ற மற்ற (தமது தேவியரான அவ்) இருவரது சிறந்த திருக்கரங்களைப் பற்றி யருளினார், (எ-று). (24)

இணரெரி யிறையுந் தானே யெரியெழுப்
புவனுந் தானே
உணவினைத் துய்ந்த னுந்தா னெனவுரை
யொருவன் வையம்
புணர்தரு கலவி தோயப் புரிகுழற்
புருட னாகி
மணந்தனை முடித்தற் செய்தா னவனிலை
மதிக்கற் பாற்றோ.

(பொ-ரை.) பல சுடரை யுடைய அழற்கடவுளும் தானே; அவ்வழலை வளர்ப்பவனுந் தானே; (அத்தீமுகமாக அவியைக் கொள்ளுபவனும் தானே என்று (வேதங்களால்) சொல்லப் பெறுகின்ற ஒப்பற்ற உருத்திர வன்னியர், உயிர்கள் புணர்தல் பொருந்திய போகத்தில் அழுந்த, ஆணும் பெண்ணுமாகி, இத்திருமணச் செயலை நிறைவேற்றினார்; அப்பெருமானது திருவருட் செயலை அளந்து அறிதற்கு இயலுமோ?, (எ-று).

பொரியினை யழலிற் சிந்திப் பொலிவுறு தருமங் கண்டே
யெரிவல முறையி னாகி யெழிலுறு மனையர் பாத
விரிமல ரம்மி சேர்த்தி வியனருந் ததியைக் காட்டி
யரியமின் னிடைய ரோடு மணிமண வறையிற் புக்கான்.

(பொ-ரை.) வேள்வித் தீயில் பொரியைச் சிந்தி, பொலிவு நிறைந்த தருமங்களைச் செய்து, விதிப்படி தீயை வலமாக வந்து, அழகு பொருந்திய தேவியர்களின் திருவடித் தாமரைகளை அம்மிமேல் வைத்து, பெருமை பொருந்திய அருந்ததியைக் காண்பித்து, அருமையான மின்னலை யொத்த நுண்ணிய இடையையுடைய அத்தேவியருடன், அலங்கரித்துள்ள திருமண அறையுள் புகுந்தருளினார் (உருத்திர வன்னியர்), (எ-று). (26)

எழுசீராசிரிய விருத்தம்.

மட்ட லம்பு கண்ணி யாரை மாம
    ணம்பு ணர்ந்தவன்
பட்டி சைந்த வல்கு லாரின்
    பாக னாக வெளிவர
வுட்ட தும்பு மேம வோத
    முற்றெ ழுந்த மொக்குளோர்
கட்ட தும்பு மப்பின் மூழ்கிக்
    களிய டைந்த துலகெலாம்.

(பொ-ரை.) தேன் ததும்பும் மாலையை யணிந்த மந்திரமாலையையும் லாவண்ய சார வல்லியாரையும் திருமணம் புரிந்த உருத்திர வன்னியர், பட்டாடை பொருந்திய அல்குலையுடைய அம்மாதரை யிருபாகத்திலும் பெற்றவராய், (மணவறையினின்றும்) வெளியேவர, உள்ளத்தில் ததும்பிய மகிழ்ச்சி வெள்ளத்திற் பொருந்தி யெழுந்த குமிழியைப் போல, கண்களிலே ததும்புகின்ற (ஆனந்தபாஷ்பமெனும்) நீரில் அமிழ்ந்து, எல்லா உலகங்களிலும் இருப்பவர் களிப்புற்றனர், (எ-று).

'மட்டு அலம்பு' எனவும், 'பட்டு இசைந்த' எனவும், 'உன் ததும்பும்' எனவும், கலுன் ததும்பும் எனவும் பிரித்துப் பொருள் கொள்க. அலம்புதல்-சுண்டுத் ததும்புதல். அல்குல்-அரை; "பட்டிசைந்த அல்குலாள்" என்பது தேவாரம். (27)

கங்கை வேணி கொன்ப ரன்றன்
    காளை மீதி னேறிவந்
தங்க மர்ந்த தேவி யோடு
    மன்பு கொள்ள வமர்தலும்
பங்கி னின்ற மாத ரோடு
    பன்னு ருத்ர வன்னிய
ரங்கை கூப்பி யேத்த வாதி
    யாசி கூறி னனரோ.

(போ-ரை.) (அச்சமயம்,) கங்கை தங்கிய சடைமுடியினையுடைய சிவபிரான், தனது விடையின்மேல் எழுந்தருளி வந்து, அத்திருமண மண்டபத்தில் (உள்ள அரியாசனத்தில் மணச்செயலை பார்வையிட்டுக் கொண்டிருந்த தனது) தேவியான பார்வதியுடன், அன்புகொண்டவராய் (ஒருசேர) அமர்தலும், (வேதங்களால் சிறப்பித்துச்) சொல்லப்பெறும் உருத்திர வன்னியர், (இறைவன் வந்திருப்பதை யறிந்து,) தனது இருபாலிலும் நிற்கும் தேவியருடன் அழகிய கரங்குவித்துத் துதிக்க, முதற் கடவுளான சிவபிரான், (மணத்தம்பதிகளுக்கு) ஆசிமொழி கூறினர், (எ-று). (28)

ஆர றஞ்செ யன்னை யாசி
    யன்பி னீய வாதிமு
ராரி பூமின் போதன் வாணி
    யாத வன்ன வன்மனை

யீரத் திங்கண் பண்டி மாக
ணங்க ளெண்ணி லார்பிறர்
தார வன்னி யர்வ ழுத்தித்
தம்ப திச்சென் றெய்தினர்.

(பொ-ரை.) நிறைந்த (முப்பத்திரண்டு) தருமங்களை யும் செய்து வரும் அன்னையான உமாதேவியார், (உருத் திர வன்னியர்க்கு) அன்புடன் ஆசிமொழி யளித்ததும், முதற்கடவுளான சிவபிரானும், நாரணனும் திருமகளும், பிரமனும் கலைமகளும், சூரியனும் அவன்மனைவியான சாயாதேவியும், குளிர்ந்த கிரணங்களை யுடைய சந்திர னும் உரோகணியும், சிறந்த சிவகணங்களும், அளவில் லாத மற்ற அனைவரும், மலர்மாலை சூடிய உருத்திரவன் னியர்க்கு ஆசிகூறி, தங்கள் தங்களது இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர், (எ-று).

ஆதி-சிவபிரான். முராரி-விஷ்ணு; முரன் எனும் அசுரனை யழித்தமையால் வந்த பெயர். பூமின்-திருமகள். போதன்-பிரமன். வாணி-கலைமகள். ஆதவன்-சூரியன்; அவன் மனை-சாயாதேவி. பண்டி-உரோகிணி. தார வன்னியர்-தேவியர் சமேதராக யிருந்த உருத்திரவன்னி யர் எனினுமாம். (29)

சம்பு வென்னு மெந்தை யாசி
சொற்ற பின்னர் சக்கிரன்
நம்ப னான வன்னி யன்ற
னன்ம லர்க்க ழறொழு
தம்பி றங்கு சீத னச்சி
றப்ப ளிக்க வண்ண லும்
வம்பி யற்கு ழன்ம டந்தை
யர்க ளிக்க வைகினான்.

(போ-ரை.) சம்பு முனிவர் என்னும் பெயருடைய எந்தையார் ஆசிமொழி கூறியதன் பின், இந்திரன், (யாவரும்) நம்பிச் சரண மடையத் தக்க உருத்திர வன்னியருடைய சிறந்த தாமரைமலர்போலும் வீரக்கழல் அணிந்த திருவடிகளை வணங்கி, அழகு விளங்கும் (பல வகை) சீதனச் சிறப்புக்களைச் செய்ய, பெருமையிற் சிறந்த உருத்திர வன்னியரும், மணம் வீசும் கூந்தலையுடைய (மந்திரமாலை லாவண்ய சாரவல்லி யென்னும் இரு) தேவியர் மனங்களிப் பெய்துமாறு, (பொன்னாட்டிற் சிலநாள்) தங்கி யிருந்தார், (எ-று). (30)

திருமணச் சருக்கம் முற்றிற்று.

113

உ

# நகர்செய் சருக்கம்.

அறுசீராசிரிய விருத்தம்.

புலவனின் றவத்திற் பூத்த புகழினர்
கலையிற் பூத்த
புலவனை மணந்த செய்தி புகன்றனம்
புவியி னூர்ந்த
புலவரின் கவிதை போலும் வன்னிய
புரமுஞ் சிறப்பப்
புலவனு லமையப் பெம்மா னதிற்புகும்
புதுமை சொல்வாம்.

(பொ-ரை.) இந்திரனது தவத்தில் மலர்ந்த புகழை யுடைய மந்திரமாலை லாவண்ய சாரவல்லி யென்னும் இருவரும், கலைகளில் மலர்ந்த உருத்திர வன்னியரை திருமணம் புரிந்த வரலாற்றைக் கூறினோம்; (இனி,) நிலவுலகத்தில் உள்ள வித்துவ சிரேட்டர்களின் பாக்களைப் போன்ற வனப்பு நிறைந்த (உருத்திர) வன்னியபுரம் என்னும் தலம் ஒன்று, தெய்வத்தச்சனால் படைக்கப் பெற, அத்தலத்தில், (எமது) உருத்திரவன்னியர் எழுந்தருளும் அதிசயத்தையுஞ் சொல்கின்றோம், (எ-று).

முதலடியிற் போந்த புலவன், தேவர் தலைவனையும், இரண்டாவதடியிற் போந்த புலவன்-கந்தக்கடவுளின் அவதாரமான உருத்திர வன்னியரையும் குறித்தது; முருகனுக்குக் கலையுணர் புலவன் என ஒரு திருநாமம் உள்ளமை யறிக. (1)

சிலாநதிச் சிவேதைப் பாலி னொருபுரஞ்
சிறக்கச் செய்கக்
கலைநிறை யுருத்ர வன்னிக் கழனுறு
கடவுட் கென்னும்
மலைமக டனையி றைஞ்சி மயனெனு
மதித்த பேரா
னலைகட லுலகி னன்னை யருள்முனி
நிலைய மார்ந்தான்.

(பொ-ரை.) சிலாநதியின் தென்பாகத்தில், கலைகளில் நிறைந்து விளங்கும் உருத்திர வன்னியர் எனும் அழகு மிகுந்த தெய்வப் பெருமானுக்கு, ஒருதலம் சிறப்புடன் அமைப்பாயாக என்று கூறிய பார்வதி தேவியாரை, மயன் என்று யாவராலும் மதிக்கப் பெற்ற பேருடைய தெய்வதச்சன் வணங்கி, அலைகள் நிறைந்த கடல் சூழ்ந்த நிலவுலகத்தில், உமாதேவியார் அருளிய சம்புமுனிவர் ஆச்சிரமமான குறித்த இடத்தை யடைந்தான், (எ-று).

தேவியின் கட்டளைப்படி தான்செய்த தவப்பேற்றால் உருத்திர வன்னியருக்கு சிறந்த தலம் நிருமிக்க முயலும் இவனே முதல் மயன் ஆவான்; இவன் நினைத்த மாத்திரத்து எத்தகைய நகரங்களையும் நிருமிக்கும் ஆற்றலுடையவன்: இவன் வமிசத்தில் வந்தவர் அனைவரும் மயன் எனும் தமது மூதாதையின் பெயரைத் தாங்கிய தெய்வ சிற்பிகளாய்த் திகழ்ந்தமை சரித்திரப் பிரசித்தம். வேள்வி துவக்கிய நாள்தொடங்கி சிலாநதியின் தென்பாகத்தில் மயன் நிறுவிய ஆச்சிரமம் சம்புமுனிவர்க்கு உரித்தாயிற்று ஆகலின், 'அன்னையருள் முனி நிலயம்' என்றார். சிவேதை-தென்திசையின் பெயர். (2)

கலிவிருத்தம்

வேத மோது வியன்பெரு மண்டபம்
நீத வர்த்த நிமிர்தரு மண்டபஞ்
சீத சோமன் றிகழுயர் மண்டபம்
மாத ராரின் மதிநட மண்டபம்.

(பொ-ரை.) வேதபாராயணஞ் செய்யும் அகன்ற பெருமை பொருந்திய மண்டபமும், உயர்ந்த நியதியை யுடைய அருத்த மண்டபமும், குளிர்ந்த சந்திரன் தவழ விளங்கும் ஓங்கிய மகாமண்டபமும், இனிய மாதர்களின் மதிக்கத் தக்க நடன மண்டபமும், (எ-று). (3)

ஆதி யண்ண லணிபெறு மண்டபந்
தீதி லாதந் திருமண மண்டபம்
மாதி றத்துக் கணக்கறி மண்டபம்
ஓதி நேர வுணர்கலை மண்டபம்.

(பொ-ரை.) முதற்கடவுளான சிவபிரான் திருவிழாக் கோலம் கொண்டருளும் மண்டபமும், குற்றமில்லாத திருமண மண்டபமும், சிறந்த திறத்தை யுடைய கணக்கறிமண்டபமும், கல்வி வாய்க்க உணர்கின்ற கலைமண்டபமும், (எ-று). ஓதி-கல்வி. (4)

பட்டி யோடுப் பரிசன மண்டபம்
மட்டின் மந்திர யோசனை மண்டபம்
வட்டி லென்ன வளைமதி யின்னரண்
புட்க ரத்தொடு பூதரத் தாமரண்.

(பொ-ரை.) பட்டி மண்டபத்துடன் பரிசன மண்டபமும், அளவில்லாத (பெருமையை யுடைய) மந்திரா

ஸோசன மண்டபமும், லட்டாகாரம் எனும்படி வளைந்த மதிலினது அரணும், நீரரணினுடன் மலையரணும், (எ-று).

புட்கரம்-நீர்; பூதரம்-மலை. (5)

சித்ரத் தெற்றிச் சிலம்பகற் கூடமும்
பத்தி கூலங் கிடங்குமப் பார்ப்பன
ரத்த மன்னர் வணிக ரவர்பினோர்
மெத்து வீதியும் வேந்தனின் கோயிலும்.

(பொ-ரை.) சித்திர கூடமும், சிறந்த சிலம்பக்கூடமும், வரிசையான கடைவீதிகளும், அகழிகளும், அந்தணர், பொருள் நிறைந்த அரசர்கள், வணிகர்கள், அவர்களின் பின்னவரான சூத்திரர்களாதியோர் வசிக்கும் வீதிகளும், அரசனது அரண்மனையும், (எ-று).

கூலம்-கடைவீதி. கிடங்கு-அகழி. அத்தம்-ஐஸ்வர்யம். (6)

பொன்னி னல்விழை புண்ணியக் கண்ணிறு
டன்னு ளப்படித் தண்ணரு ளாலய
முன்னு தீர்த்தமு முண்மகிழ் சோலையும்
மன்னச் செய்தனன் மாமய னன்றரோ.

(பொ-ரை.) சிறந்த பொன்னிறம் வாய்ந்தவரும், (அடியவரைக்காக்க) விரும்பும் புண்ணியத் தன்மையார்ந்த கண்களையுடையவருமான ஸ்ரீ சொர்னகாமாட்சியாரின் திருவுளப்படி, (அவ்வம்மைக்குக்) குளிர்ந்த அருட்கோயிலும், (யாவரும்) நினைக்கத் தக்க தீர்த்த (தடாக)மும், உள்ளங்களிக்கும் சோலையும், சிறந்த மயனென்பவன் நிலைபெறும்படி சிறக்க அமைத்தான், (எ-று).

முதலடியில் சொன்ன காமாட்சியார் எனும் பெயர் தோன்றுதல் காண்க. நன்றரோ, அரோ-ஈற்றசை; அன்று எனப்பிரித்து-அந்நாள் எனினுமாம். (7)

அன்ன செய்தியை மன்னை யறிந்திடப்
பன்ன நன்மயன் பார்ப்பதி பாவகன்
றன்னை யண்மியச் சம்பவஞ் சாற்றியொண்
பன்னி மாருடன் பார்கொணர்ந் தாளரோ.

(பொ-ரை.) (தேவிகருத்தின்படி தான் ஒரு தலத்தைப் படைத்த) அச்செய்தியை, உமைதன்னை அறியுமாறு சிறந்த மயன் (வந்து) கூறலும், பார்வதியார் உருத்திர வன்னியரை அடைந்து, அந்த நிகழ்ச்சியைத் தெரிவித்து, (அவரைத்) தேவியருடன் (பொன்னாட்டினின்று) நிலவுலகத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தார், (எ-று). (8)

உன்னு ருத்திர வன்னிய வூரெனப்
பன்னு நாமம ளிக்கப் பரசிவை
வன்னி யப்பெரு வள்ளலுந் தேவியர்
மன்னு வீரரு டன்னதின் மன்னினன்.

(பொ-ரை.) உமாதேவியார் (அந்நகரத்திற்கு) தனக்கத்தக்க உருத்திர வன்னியபுரம் என்று (சிறப்பித்துச்) சொல்லப்பெறும் பெயர் சூட்ட, வள்ளலான உருத்திர வன்னியர், [illegible]யான மந்திரமாலை லாவண்ய சார வல்லியார் ஆகிய இருவர், (தன்னுடன் வேள்வியினின்றும் எழுந்த) நிலைபெற்ற வீரர்களாதியோருடன் அப்பதியில் அமர்ந்தருளினார், (எ-று). (9)

அன்னை யளித்த வரியணை யேறிய
வென்னை யளித்த வெழிலுறு வன்னிய
மன்னை யளிக்க மணிமுடி சூட்டினள்
பொன்னை யளித்த பொலனுரு வாம்பரை.

(போ-ரை.) (தனது) அன்னையான இறைவியார் அநுக்ரகித்த சிங்காதனத்தில் அமர்ந்த என்னைக் காத்து வரும் அழகு பொருந்திய உருத்திர வன்னிய மன்னரை, (எவ்வுலகத்தையும்)காக்குமாறு, திருமகளை உய்ய வைத்த பொன்னின் உருவமான உமாதேவியார், நவமணிகள் பதித்த மகுடாபிஷேகம் செய்வித்தார், (எ-று). (10)

தத்து வப்பொரு டன்னெதிர் ஞாலமும்
மெத்து செய்தியின் மேவுறன் மானவே
சத்தி தன்னருட் சார்தரு வாய்மையால்
வித்த கப்பதி காத்தனன் வேந்தனே.

(போ-ரை.) பரம்பொருளினுடைய சந்நிதானத்தில் பிரபஞ்சமும் தொழிற்படும் உபாயத்தை யடைவதைப் போல, பராசத்தியின் திருவருள் (தன்னைச்) சார்ந்துள்ள மெய்ம்மையினால், தூய்மை வாய்ந்த (தம்பெயரமைந்த) அப்பதியை, உருத்திரவன்னிய மன்னவர் பெருமான், பரிபாலித்துக்கொண்டு இருந்தார், (எ-று). (11)

நகர்செய சருக்கம் முற்றிற்று.

# புதல்வர் வந்த சருக்கம்

கலிநிலைத்துறை.

பன்னு ருத்திர வன்னிய மன்னனும் பரையின்
மன்னு நல்லரு ளாலுறு மகியினை யடைதற்
சொன்ன வாறிதத் தூயவன் றேவியர் துகளில்
மின்ன னார்வயின் மாமகார் வந்தவா றறைவாம்.

(பொ-ரை.) (யாவராலும் சிறப்பித்துச்) சொல்லப் பெற்ற உருத்திர வன்னிய மன்னரும், பராசத்தியின் நிலைத்த சிறந்த திருவருளால், பொருந்திய (அரசியல் நடத்தப்) பூமியை அடைந்த வரலாற்றைக் கூறியமுறை யிதுவாகும்; (இனி,) அந்த தூயவரான அரசர் பெருமானது மனைவியரான குற்றமற்ற மின்னற் கொடிபோன்ற மாதர்கள் இருவரிடத்தும், சிறந்த புதல்வர்கள் தோன்றிய செய்தியைக் கூறுகின்றோம், (எ-று). (1)

மன்ன வர்க்கர சாயினன் மனையரி னுலகிற்
பன்னு மில்லறம் பேணவும் பாசிலை யருளின்
மன்னு மாதரா ருண்மகிழ் கொளவவர் வயினிற்
றுன்னு சூலினை யோரிறை சடங்கெலாந் தொகுத்தான்.

(பொ-ரை.) அரசர்க்கு அரசாயிருக்கும் உருத்திர வன்னிய மன்னவர், தேவியருடன் உலகிற் (புகழ்ந்து) கூறும் இல்லறத்தை மேற்கொண்டிருக்கவும், உமாதேவியின் திருவருளால் (அறத்தில்) நிலைந்த அம்மாதர்களின் உள்ளம் மகிழ்ச்சி கொள்ளுமாறு, அவர்களின் வயிற்றிற் பொருந்திய கருப்பத்தை யுணர்ந்த மன்னவர் பெரு

மான், (அக்கருப்பகாலத்திற் செய்யத்தக்க) சடங்கனைத்தும் செய்தார், (எ-று). (2)

உரிய திங்களி னுயர்வுறு மோரையி னுகந்த
வரிவை மந்திரப் பிணையனு மிருவரை யளித்தாள்
தெரிவை சுந்தரி மூவரைத் திகழ்தர வருளப்
பரவை யார்த்தது மலர்மழை பொழிந்தது பரிவின்.

(போ-ரை.) உரிய பத்தாம் திங்களில், உயர்வு பொருந்திய சுபலக்கினத்தில், விரும்பிய மந்திர மாலையம்மையார் இருபுதல்வரை யருளினர்; (அதேகாலத்தில்,) லாவண்ய சுந்தர வல்லியார், விளக்கம் அடைய மூன்று புதல்வரைத் தந்ததும், அம்மகிழ்ச்சிப் பெருக்கால் சமுத்திரம் உத்கோஷித்தது; (வானம்) மலர்மழை சொரிந்தது.

கண்ட மன்னவன் றன்னுளங் களித்துபல் தானம்
மொண்ட ளித்தயர் மந்திரப் பிணையலின் முளைக
ளண்ட ருய்தர வன்றளி யிறைபெயர் நீல
கண்ட னோங்கிய வச்சிரப் புயனெனக் கணித்தான்.

(போ-ரை.) (அக் காட்சியைக்) கண்ட உருத்திர வன்னிய மன்னர், தமது மனம் களித்து, பலவகைத் தானங்களை மிகுதியாகச் செய்து, மந்திரமாலை யருளிய இருபுதல்வர்களுக்கும், (பாற்கடல் கடைந்த காலத்து எழுந்த விடத்தை யுண்டு கண்டத்து இருத்தி,) தேவர்கள் உய்ய அன்று காத்தருளிய சிவபிரான் திருநாமங்களாக, (முதல் புதல்வற்கு) நீலகண்ட வன்னியர் என்றும், (இரண்டாம் புதல்வற்கு) உயர்ந்த வச்சிரவாகு வன்னியர் என்றும் (பொருந்திய) பெயர்களை வைத்தார், (எ-று). (4)

சுந்த ரப்பெய ரானவ டீனயராங் தகவோ
ரிந்து வுங்களி கங்கைய பாலனு மினிமை

117

மூர்த்து மெஞ்சிவ னுங்களி சாம்பவன் முகிழ்வின்
வந்த பாசுப தன்னென வெம்மிறை வகுத்தான்.

(பொ-ரை.) சுந்தரமான (லாவண்ய சாரவல்லியெனும்) பெயரினள் அருளிய தகுதிவாய்ந்த புதல்வர்களுக்கு, சந்திரனும் மகிழத்தக்க கங்காபால வன்னியர் என்றும், இன்பம் முதிர்ந்த எமது சிவபிரானும் மகிழத்தக்க சாம்பவ வன்னியன் என்றும், விளக்கத்துடன் தோன்றிய பாசுபத வன்னியன் என்றும்(மூன்று புதல்வர்களுக்கு) எமது இறைவரான உருத்திர வன்னியர் பெயர் வகுத்து வைத்தார், (எ-று).

ஐந்து புதல்வர்களின் பெயரும் சிவபரன் திருநாமமாக இருத்தல் காண்க. (5)

சம்பு மாமுனி வாருறு புதல்வரைத் தகவி
னும்ப ரேத்திடப் பலகலை புணர்த்தின ருவர்துத்
தம்பி ரானிடந் தநயருந் தநுமுத லுணர்ந்தென்
னெம்பி ராட்டியி னடிமல ரிறைஞ்சிவாழ்ந் திருந்தார்.

(பொ-ரை.) சம்புமா முனிவர், (அங்ஙனம்) தோன்றிய புதல்வரைத் தகுதி வாய்ந்த அமரரும் துதிக்குமாறு, பல நூற்களையும் மகிழ்ந்து (அவர்கள் உணரும் வண்ணம்) கற்பித்தார்; (அவைகளைக் கற்ற) [illegible]வர்களும், தமது தந்தையான உருத்திர வன்னிய[illegible]ல், வில் வித்தை, (வாள் வித்தை, [illegible] சஸ்திரப் பிரயோகம்) முதலியவற்றைக் கற்று [illegible]திக்கும் தன்மை வாய்ந்த எமது பார்வதியின் திருவடி மலரை வணங்கி, (அப்பதியில்) வாழ்ந்திருந்தனர், (எ-று).

'என் எம்பிராட்டி' யென்பதற்கு-யாவரா [illegible]னக் கப்பெறும் இறைவி யென்றும், சம்புமுனிவர் வம்[illegible] முன்

னேற்றத்தையே என்னும் அன்னையெனவும் கொள்ளினுமாம். (6)

சேய ரேற்றமுந் திகழர சியலினிற் செழுமை
யேய மாநில மகங்களித் திடுவது மெழிலி
ஞய நற்கிலை கிரதளி நாண்முத லளிக்கு
நேய மாரரு ளதனையு நினைமுனி மகிழ்வான்.

(பொ-ரை.) (இங்ஙனம் அமைந்த) புதல்வர்களின் முன்னேற்றமும், விளங்கிய(உருத்திர வன்னியமன்னரது) அரசியலால், வளப்பம் பொருந்திய பெரிய நிலவுலகம் மனம்மிக மகிழ்வதும், அழகு பொருந்திய உமாதேவியார், (தான்) யாகஞ்செய்தநாள் முதலாக (த் தமக்கு) அநுக்ரகித்துவரும் அன்பு பொருந்திய திருவருளையும், (ஒவ்வொன்றாக) நினைத்துப் பார்க்கும் சம்பு முனிவர், உள்ளக் களிப்பினை யடைந்தார், (எ-று). (7)

மானி னேக்கினர் மதலையர் தன்புடை வதிய
வானி டத்தவ ரிறைஞ்சனை தாளிணை வணங்கி
பானல் மாமதிக் குடைநிழற் றன்னிலொண் பவனந்
தான ளித்துறு மேன்மையி னின்றனன் றகவோன்.

(பொ-ரை.) தகுதி வாய்ந்த உருத்திர வன்னிய மன்னர்பிரான், மான்போலுங் கண்களை யுடைய தேவியரும் புதல்வர்களும் தன்னருகு பக்கத்தில் அமர்ந்திருக்க, தேவர்கள் துதிக்கும் அன்னையான பார்வதியாரின் இருதிருவடிகளையும் வணங்கி, பால்போலும் இனிமையிற் சிறந்த சந்திர வட்டக் குடைநிழலில் உயர்ந்த இவ்வுலகத்தைக் காத்தல் செய்து, பொருந்திய மேன்மையுடன் இருந்தார்,

புதல்வர் வந்த சருக்கம் முற்றிற்று.

உ

# தேவர்கள் முறையிடு சருக்கம்.

கலிவிருத்தம்.

பண்டரு கிளவியங் கயற்கண் பாவைய
ருண்மகிழ் தநயரு முறுத லோர்ந்தன
மண்டரை யவுணரு மிடுக்க ணாற்றிட
வெண்டகு மவர்முறை யிடுதற் கூறுவாம்.

(பொ-ரை.) இனிமை பொருந்திய சொற்களையும், அழகிய சேற்கண்டைபோலும் கண்களையுமுடைய மந்திரமாலை லாவண்ய சாரவல்லியென்னும் இருமாதரின் உள்ளங் களிக்கும் புதல்வர்கள், வந்த வரலாற்றை உணர்ந்தோம்; தேவர்களை அசுரர்கள் (மேலும்) துன்பஞ்செய்ய, எண்ணத்தக்க அவ்வமரர்கள் (உருத்திர வன்னியரிடம் வந்து) முறையிட்ட செய்தியைக் கூறுகின்றோம், (எ-று).

புங்கவ ருயங்குறப் புவியின் வைகிய
சங்கச வவுணரின் றலைவ னானவன்
பங்கசத் தவனொடு பரிவில் வானவ
ரிங்கிலை யதிசய மியம்பு கென்றனன்.

(பொ-ரை.) அறிஞர்கள் வருந்த நிலவுலகத்தில் இருந்த அவுணர் கூட்டத்தின் தலைவனான வாதாவி, (ஒரு நாள், தனது மந்திரியரை நோக்கி,) பிரமனுடன் (நம்மிடம் சிறிதும்) அன்பில்லாத தேவர்கள், இவ்விடத்தில் இல்லையே! என்ன அதிசயம் இது! கூறுமின் என்றான்.

தனக்கு அடிமைத்தொண்டு செய்து கொண்டிருந்த வானவர் தன்முன் இல்லாதது குறித்து வியப்பெய்திய வாதாவி, 'இங்கில்லை அதிசயம் இயம்புக' என்றனன், என்றார். (2)

அன்னவர் பெருவலி சிவத்தி னாருள்
மன்னின ரெனநமை மதித்தற் செய்திலர்
ரன்னதை யுரைசெய வணங்கி னயினேம்
மன்னவென் றுரைத்தனர் மதியி லார்களே.

(பொ-ரை.) (வாதாவியின் சொற்கேட்ட) அறிவில்லாத அமைச்சர்கள், மன்ன! பெருவன்மை படைத்த சிவபெருமானின் நிறைந்த திருவருளைப் பெற்றவரை யொப்ப, அத்தேவர்கள் நம்மை (சிறிதுகாலமாக) மதியாராயினர்; (இத்தனை நாட்களாக) அச்செய்தியை (தேவரீரிடத்துக்) கூறுதற்கு அஞ்சியிருந்தோம் என்று கூறினர், (எ-று).

'அணங்கு'-அச்சம்; "பனிப்பு அணங்கு அச்சம்" என்பது நிகண்டு. (3)

மந்திர ருரைத்ததை மதித்த மன்னவ
னுந்திய பெருஞ்சின முளத்தி னூறிட
இந்திரன் முதலுறு மிகலி னர்தமைச்
சிந்திட வவுணர்சிறைசெய் கென்றனன்.

(பொ-ரை.) அமைச்சர்கள் கூறியதை யறிந்த வாதாவி, விரைந்தெழுந்த பெருங்கோபம் உள்ளத்தில் அதிகரிக்க, (தன் படைகளை நோக்கி,) அவுணர்களே! இந்திரன் முதலாக உள்ள பகைஞரான தேவர்களை நாசமாகுமாறு சிறைசெய்யுங்கள் என்றான், (எ-று).

மதியிலா அமைச்சர்களோ மந்திரிகள் எனும் பேர் பெற்றார்; அவர்கள் வார்த்தைகளை மதிப்பவன் வாதாவியாகலின், தனது நாசத்திற்கே வழிகோலுவான்போல, 'சிந்திடச் சிறைசெய்க' என்றான். சிந்திட என்பதன் இருபொருள் பயத்தலை யிண்டறிக. (4)

அவ்வுரைப் படிபல வவுண ரேகியே
செவ்விய விபுதரைச் சிறைசெய் தன்னவ
ருவ்விபுண் ணுறப்புடைத் துயங்கச் செய்திடக்
கவ்வையின் மகபதி கலங்கி யோடினன்.

(பொ-ரை.) (வாதாவி யுரைத்த) அவ்வார்த்தையின் படி அவுணர்கள் சென்று, செம்மை வாய்ந்த தேவர்களைச் சிறைசெய்து, அவர்களின் தலை புண்ணும்படி குட்டி வருந்தச் செய்ய, (இதுகண்ட) இந்திரன் (அளவிறந்த) துன்பம் அடைந்து, (தன்னையும் என்னசெய்வரோ என்று அஞ்சி,) கலக்கத்தோடு (அவர்கள் கண்ணுக்குத் தெரியாத வேற்றுருவங்கொண்டு, சில தேவர்கள் தன்னைத் தொடர) ஓட்டம் பிடித்தான், (எ-று). உவ்வி-தலை. (5)

பொன்னக ருளபல புனித மாதரை
யன்னவர் புரிதுய ரறைய லாகுமோ
மன்னிய பிறபதி யடைந்து மற்றவர்
வென்னிட வவரையும் விலங்கிட் டேகினர்.

(பொ-ரை.) பொன்னாட்டின்கண் உள்ள பல (கற்பு நிறைந்த) தூய்மையை யுடைய பெண்களை, அந்த அவுணர்கள் செய்த துன்பம் சொல்லுதற்கு இயலுமோ? (பின்) அவ்வவுணர்கள் நிலைபெற்ற பிறதலங்களை யடைந்து, அங்கங்குள்ள அனைவரையும் விலங்கிட்டு (அழைத்துக்கொண்டு) சென்றனர், (எ-று). (6)

பாவிக ளுறைதரு பதிய டைந்துவா
தாவியி னடிமல ராகத் தள்ளலுங்
கூவின ரழுதுகை குவித்தி றைஞ்சினர்
காவியின் விழியினர் கதிக லங்கினர்.

(பொ-ரை.) (இத்தகைக் கொடிய காரியம் பல செய்த) பாவிகளான அவுணர்கள், (தாங்கள்) வசிக்கும் (இரத்தினகரபுரம் எனும்) நகரத்தை யடைந்து, (சிறை பிடித்துவந்த தேவர்களை,) வாதாவியின் பாதத்தில்

(விழும்) மலர்போலத் தள்ளுதலும், (விழுந்த அவர்கள்,) ஐயோவென்று கூவி அழுதனர்; கைகுவித்து வணங்கினார்கள்: நீலோற்பலம் போன்ற கண்களை யுடைய அமரமாதர்கள், (இனியென்ன நேருமோ என்று) மதி கலங்கினார்கள், (எ-று). (7)

ஆவது முரைத்தன ரருளி லீயவன்
போலது புரிந்தனர் புலம்பு வாரிவர்
நோவதை யியற்றுமி னென்மையி ரென
ஆவவென் றரற்றிட வடித்திட் டாரரோ.

(பொ-ரை.) (வாதாவியின் நெஞ்சம் இளக எத்தனை இரங்கிச் சொல்ல இயலுமோ,) அத்தனையும் (அத்தேவர்கள்) கூறினார்; (எத்தனை சொல்லியும்) இரக்கம் என்பது சிறிதும் இல்லாத கொடியவனான வாதாவி, (தனது படைஞரான அவுணர்களைப் பார்த்து,) வன்மைமிக்க அவுணர்களே! முன்னே ஓடிப்போய்விட்டனர்; (ஆகையால், பிடித்துக் கொண்டு வந்தபின்) அழுகின்ற இவர்களைச் சித்ரவதை செய்யுங்கள் என்று கட்டளையிட, (பாழும்) அந்த அவுணர்கள்,) ஐயோ ஐயோ என்று கதறுமாறு (தேவர்களை) அடித்தனர், (எ-று).

நோ+வதை=சித்திரவதை. ஆ ஆ வென்பது, ஆவ என்றாயது. அரோ-ஈற்றசை. (8)

தண்டனை யியற்றிய தகுவர் தேவரை
முண்டிதம் புரிந்துடல் முடங்க வாட்டினார்
கண்டகர் வழங்கிய கடிய தீமைக
ளுண்டினு முரைத்திட வுளம்வ ருந்துமால்.

(பொ-ரை.) (இத்தகைய) தண்டனைகளைச் செய்த அவுணர்கள், (மேலும்,) தேவர்களை மொட்டையடித்து உடல் மடங்க வருத்தப் படுத்தினர்; (அக்) கீழ்மக்கள் புரிந்த கொடுமையான தீச்செயல்கள் இன்னம் பலவுள (எனினும், அதனைக்) கூறுதற்கே மனம் வருந்துகின்றதே.

முண்டிதம்-மொட்டை. முடங்கல்-மடங்கல். கண்டகர்-தீயோர். (9)

ஓடிய சதமக னுமையை வன்னியன்
பாடிய புகழொடு பழிச்சு வேளையிற்
கூடினன் கிளையுட னழுது கூவினன்
வாடின னிறைவனை வணங்கிக் கூறுவான்.

(பொ-ரை.) (இதுநிற்க, அவுணர் கொடுமைக்கு அஞ்சி முன்னரே) ஓட்டம் பிடித்த இந்திரன், உருத்திர வன்னிய மன்னர் பிரான் உமாதேவியாரை(ப் பலபாக்களால்) பாடும் புகழுடன் துதித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், (தன்னுடன் தொடர்ந்த) தேவர்களுடன் வந்து சேர்ந்தான்; (வன்னி மன்னரையும் தேவியையும் பார்த்ததும் துக்கம் பொங்கியெழ, வாய்திறந்து) வாடியமுகத்தனுய் கதறியழுதான்; அரசர் பெருமானை வணங்கி (பின்வருமாறு) கூறினன், (எ-று). (10)

தஞ்சமென் றடைந்தனந் தகவி னெந்தையே
அஞ்சின முயவரு ளவுணர் செய்துயர்
விஞ்சின வமரரைச் சிறையின் வீழ்த்தினர்
பஞ்சென நலிந்தனம் பகைவன் காலினல்.

(பொ-ரை.) தகுதிவாய்ந்த எந்தையே! அவுணர்கள் செய்யும் துன்பம் அதிகரித்தது; (மீண்டும்) தேவர்களைச் சிறையில் அழுத்தினர்கள்; வலிய பகையென்னுங் காற்றினல், பஞ்சுபோல மெலிவடைந்தோம்; (இனி என்ன என்ன நேருமோ என்று) அஞ்சி (உம்மையே அடைக்கலமாக அடைந்தோம்; (யாங்கள்) உய்யும் வண்ணம் அருள்செய்யும், (எ-று). குளகம். (11)

என்றுரை மொழியினை யிறைவன் கேட்டுளங்
கன்றிய பொழுதினிற் கமலனேடுயர்
வொன்றிய பதியுளா ருலவி னேடிவந்
தின்றெமை யளித்தியென் றிறைஞ்சி னாரோ.

(போ-ரை.) என்று (இந்திரன்) கூறிய சொற்களை உருத்திர வன்னிய மன்னர் கேட்டு உள்ளங் கொதித்த அப்போது, பிரமனோடு உயர்வு பொருந்திய (மற்ற) அண்டங்களில் உள்ளவர் பலர் நடுக்கத்துடன் ஓடிவந்து, (மன்னர்பெருமா!) இன்று எங்களைக் காப்பாற்றுவீராக என்று வணங்கினார்கள், (எ-று). (12)

அஞ்சுதல் விடுமினவ் வவுணர் தம்முயிர்
துஞ்சிடப் புரிதுதுந் துயர கற்றுதும்
பஞ்செனப் படுவரப் பதக ரென்றிறை
விஞ்சின சினவுரை விமலை நோக்கினாள்.

(போ-ரை.) அந்த அவுணர்களின் உயிரை நாசஞ் செய்கின்றோம்; உங்கள் துன்பங்களை யகற்றுகின்றோம்; அச்சத்தை விடுவீர்களாக; அப்பாதகர் அனைவரும் (நம்முன்) பஞ்செனப் பறப்பர் என்று கூறும் உருத்திர வன்னிய மன்னரின் கோப வார்த்தையை, உமாதேவியார் நோக்கினார், (எ-று). (13)

அன்புறு முருத்திர வரச கேண்மதி
மின்புரை யவுணரும் விழுத றிண்ணமா
மென்றிட வான்கணங் குணலை யேய்ந்தன
வன்றிற லிறைபடை வகுத்திட் டானரோ.

(போ-ரை.) (மன்னர்பெருமானை நோக்கிய இறைவி,) அன்பு பொருந்திய உருத்திர வன்னியமன்னா! கேள். (தோன்றி மறையும்) மின்னலை யொத்த அந்த அவுணர்கள் (நின்கரத்தால்) நாசமாதல் திண்ணமாகும் என்று கூறுதலும், தேவர் கூட்டம் (தம்துயரம் நீங்கும் எனும் மகிழ்ச்சிப் பெருக்கால்) குணலைக் கூத்தாடின. வலிமை மிகுந்த மன்னவர் பெருமான், (அமர்புரியச்) சேனைகளை ஒன்றாகக் கூட்டினார், (எ-று). (14)

தேவர்கள் முறையிடு சருக்கம் முற்றிற்று.

---

121

௨

## உருத்திர வன்னிய மகாராஜன்

# படையெழுச்சி சருக்கம்.

### கலிவிருத்தம்.

முந்துபகை யாமவுணர் மோதவலி யெய்தி
யிந்திரனொ டாம்பலரு மெய்திமுறை கூற
நந்தமிறை யன்னவரை நல்குமளி சொற்று
மெந்தைபடை கொண்டெழுத லேயதையி சைப்பாம்.

(பொ-ரை.) முற்பட்ட பகைவர்களான அவுணர்கள் அடிக்க (அதனல்) துன்பம் அடைந்து, இந்திரனுடன் சேர்ந்த யாவரும் அடைந்து முறையிட, நமது உருத்திர வன்னிய மன்னர் அவர்களை (அஞ்சாதீர்கள் என்று) அநுக்ரகித்தலை கூறினேம்; (இனி அந்த) பெருமான் (போர்க்குப்) படையுடன் எழுதலான அச்செய்தியையும் கூறுவோம், (எ-று). (1)

கங்கைமுத லாகநதியின் காரினொடு மாவைந்
தங்கைமுத லாமகனை யன்பினபி டேகஞ்
செங்கைமுத லெந்தைமுனி செய்யபடை மீயா
மங்கைமுத லாமிறைவி மன்னவரு டந்தாள்.

(பொ-ரை.) கங்கை முதலான (புண்ணிய) நதிகளி லிருந்து கொண்டுவந்த நீருடன், பஞ்சகவ்வியத்தைக் கொண்டு, அழகிய கரத்தை யுடைய முதற்புதல்வரான நீலகண்ட வன்னியரை; செவ்விய கரத்தை யுடைய முதல்வரான எமது சம்புமுனிவர், (இறைவியின் திருவுளக் குறிப்பறிந்து) அன்பு பொருந்திய அபிடேகம் செய்த

னும், அப்புதல்வரை, முதற்பெருந்தெய்வமான பாசிவை, (உருத்திர வன்னியருடைய) சேனாதிபதியாக நிலைபெறத் திருவருள் நல்கினாள், (எ-று).

கார்-நீர். ஆ ஐந்து-பஞ்சகவ்வியம். (2)

ஆனவது செய்தபின ரன்பினுரு வன்னி
மானினிய ரானதன மாதரினை நம்ப
வானியணி தேம்பலில வண்டிஒலி யோயா
வூனமில தீவிகையெம் வெற்றியெனு மூகம்.

(பொ-ரை.) முற்குறித்த சேனாதிபதி யாக்கும் அச்செயலைச் செய்தபிறகு, அன்பின் உருவமான உருத்திர வன்னிய மன்னவர், மாதரிற் சிறந்த தனது மனைவியரைப் பார்த்து, நமது பாசிவையின் மாலை வாடாது; சங்கத் தொனி ஓயாது; அகண்ட தீபம் குன்றாது: (இது பகைவர்பால் போர் செய்யும்) எமது வெற்றியெனப்படும் அநுமானமாகும், (எ-று). குளகம்.

அணி-மாலை; "அலங்கலே அணி சுருக்கை....மாலை" என்பது நிகண்டு. வண்டு-சங்கு; "வண்டு இடம்புரி வெள்ளை சங்காம்" என்பது காண்க. தீவிகை-தீபம். (3)

ஒருமிதை யென்னயிறை கூறியுமை யாளு
நேருவய மாவமர நீள்படைகள் சூழ
மேருவெனு மொள்ளிரத மேலமர்தல் செய்தே
தேருவகை கொண்டிரு தென்சலதி சார்ந்தான்.

(பொ-ரை.) இதனை உணருங்கள் என்று (தம் தேவியர்க்கு) மன்னர் பெருமான் உரைத்து, உமாதேவியாரும் (தன்னை வந்து) அடைந்த சிங்க வாகனத்தில் அமர, மிகுந்த சேனைகள் தன்னைச் சூழ்ந்துவர, மேருமலையென்னத் தக்க ஒள்ளிய இரதத்தின்மேல் அமர்ந்து, (அமரர்

துயர் நீக்க முனைந்த இச்செயலால்) தெளிந்த மகிழ்ச்சி கொண்டவராய், தெற்குக் கடற்கரையை அடைந்தார்.

அவ்வமய மெம்மிறையை யம்மையுரி றுத்தி
யிவ்விடமி ருத்திரென வேகியசு ரேசத்
தெவ்வனுறு மப்பதியி லாய்ச்சியென தெய்வ
நவ்விவிழி யாபெருகு பெருகெனநவின்றாள்.

(பொ-ரை.) (தென்கடல் சார்ந்த) அச்சமயம், உமா தேவியார் உருத்திர வன்னிய மன்னனை, (மன்ன!) இவ் விடம் (படைகளுடன்) தங்குவாயாக என்று பணித்து திறுத்தி, பகைவனான வாதாவி வாழ்கின்ற இரத்தின கரபுரம் எனும் அந்நகரில் தெய்வத்தன்மை வாய்ந்த மான்போலும் விழியுடைய பெண்ணாகச் சென்று, தயி ரோ தயிரு என்று கூவினர், (எ-று). (5)

அந்தகுர லோரவுண ரவ்விடம டைந்து
இந்தததி யின்கிரய மெவ்வளவ தென்னத்
தந்தபடி நூறுபொரு டாருமினி யென்பா
ளெந்தவுல கும்பணியு மெம்மிறைவி யானாள்.

(பொ-ரை.) அந்த குரலோசையை யுணர்ந்த அவு ணர்கள், (அம்மை யிருக்கும்) அவ்விடம் அடைந்து, இந்த தயிரின் விலை யெவ்வளவு என்று கேட்க, எல்லா உலகும் வணங்கும் எமது இறைவி, கொடுத்த ஒருபடி தயிர் நூறு பொன்னாகும்; (அப்பொன்னை) இனி கொடுப்பீர்களாக என்று கேட்பாள், (எ-று). பொருள் - பொன். (6)

பாலினொடு வெண்ணெயுள நெய்யுமுள பாரீர்
வாலிதிதை யாயிரம காணமுற வாங்கீர்
கோலமுள மாபெரியர் கொள்வரிதை யென்ன
நீசியிவை யென்னவிலை நின்றுரைசெய் கென்றார்.

(போ-ரை.) (அஃதன்றி,) பாலுடன் வெண்ணெயும் உளது; நெய்யும் உளது; மிகப் புனிதம் வாய்ந்த இதனை ஆயிரம் பொன்கொடுத்து வாங்குங்கள்; வனப்பு மிக்க சிறந்த மேலோர் வாங்குவார்கள் இதனை யென்று கூறுதலும்; (அதுகேட்ட அவுணர்கள்,) நீலியே! (பால் தயிர் நெய் வெண்ணெய் ஆகிய) இவைகள் (நூறு பொன்னோ? ஆயிரமா?) என்னவிலை கூறினாய்; நின்று சொல் என்று அதட்டிக் கேட்டனர், (எ-று). (7)

என்னவுரை யாரவுணர் தம்மையனை யேடா
வுன்னுமும தீநெறியின் மிக்கவுள தோதா
னென்றுகடி தாமொழிக ளெவ்விடமு மோத
அன்ன துணர் மன்மகனு மாங்கினிது வந்தான்.

(போ-ரை.) என்று கூறிய நிறைந்த அவுணர்களை இறைவி (நோக்கி,) ஏண்டா! உங்கள் தீநெறியைக் காட்டிலுமோ (யான்கூறும் விலை) மிகுதியாயுளது; நினைத்துப் பாருங்கள் என்று கடிதான (இத்தகைய) சொற்களை எல்லா இடங்களிலும் கூற, அதனை யுணர்ந்த (வாதாவி) மன்னன் புதல்வனை அக்னிசித்து என்பவன், (தேவியிருக்கும்) அவ்விடத்தில் இனிதாக வந்தான், (எ-று). (8)

அன்னைசெயல் கண்டுவரு மக்கினிசித் தென்பா
னென்னையிது நீபுரிக லாமென யிசைப்ப
வுன்னையெவர் விட்டனர்க ளோதெனவுரைப்பக்
கன்றியெம தம்மைதனை காதகன் பிடிப்பான்.

(போ-ரை.) உமையின் செய்கையைப் பார்த்துக் கொண்டே வந்த அக்கினிசித்து என்னும் வாதாவியின் புதல்வன், (தேவியை நோக்கி,) என்ன இது நீ செய்கின்ற கலகம் என்று (அதட்டிக்) கூற, (இறைவியார் அவனை

நோக்கி,) அடா! உன்னை எவர் அனுப்பினார்கள் சொல் என்று பதில் கூற, அக்காதகன் சினந்து, எமது அம்மையாரைப் பிடிப்பதன் பொருட்டு, (எ-று). குளகம். (9)

பல்படைக ளோடுவரு பாவியினை நிறு
நில்நிலெனத் தீச்சவா சந்தனையு னீட்டிப்
புல்கவரு வோர்கடமை பூளையென வீட்டி
மல்கவுயர் வானெழுதன் மன்னினகை கொண்டான்.

(பொ-ரை.) பல சேனைகளுடன் வரும் அப்பாவியை, உமாதேவியார் கோபித்து, நில் நில் என்று அதட்டி, அக்கினி சுவாசத்தை நீளச்செய்து, (தன்னைத்) தழுவ வருகின்ற அவர்களைப் பூளைப் பூவைப் போல மாய்த்து, நிறைந்துயர்ந்த ஆகாயத்தில் எழும்பி, அங்குப் பொருந்திக் கோப நகை செய்தாள், (எ-று). (10)

கோபமொடு மக்கினிய னென்றிடுமக் கோளன்
மாபலமொ டெய்திவிணின் மாகணைக ளேவச்
சோபமுறு நெற்றிவிழி யாரலினிற் சோரப்
பாபனவன் மூர்ச்சையுறப் பார்ப்பதிவி ழித்தாள்.

(பொழி-ப.) (இதுகண்டு) கோபத்தோடு அக்கினிசித்து என்னும் அவ்வஞ்சகன், மிகுந்த வன்மையுடன் (தானும்) ஆகாயத்தை யடைந்து, (தேவிபால்) சிறந்த அம்புகளைவிட, நெற்றிக் கண்ணின் நெருப்பால், (வந்த அம்புகள்) தளர்வடைந்து சோரவும், பாவியான அக்கினிசித்து மூர்ச்சையடையவும், உமாதேவியார் விழித்து நோக்கினார், (எ-று). (11)

தேவியது செய்தபினர் தேவரவ ருய்ய
மாவிரத ருத்திரகல் வன்னியனின் கையா

லேவுகணை யின்னசுரர் வீழ்கயினி யென்றே
தாவுவய மாவினிறை தன்படைய டைந்தாள்.

(பொ-ரை.) உமாதேவியார் (யாவரையும் மூர்ச்சையாக்கும்) அச்செயலைச் செய்தபிறகு, தேவர்கள் உய்யும் வண்ணம் சிறந்த விரதத்தை யுடைய நல்லஉருத்திர வன்னிய மன்னரின் கரத்தால் ஏவுகின்ற அம்புகளினால், இனி அசுரர்கள் அனைவரும் மாள்வார்களாக என்று சாபமிட்டு, தாவிப்பாயும் சிங்கத்தின்மேல் (ஏறி,) அரசர் பெருமானது சேனைகள் தங்கியிருக்கும் இடத்தையடைந்தார், (எ-று).

தேவர்களைக் காப்பதே விரதமெனக் கொண்டார் என்பார் "மாவிரத" வன்னியர் என்றார்; இதற்கு, சிறந்த இரதத்தை யுடைய வன்னியர் எனினுமாம். (12)

சூலமதை யேவவரி யுண்டுமகி சூலத்
தாலநிமிர் வாகவரு தானைமகிழ் வான
ஏலகட மின்னெனரி யெம்மனைமு னேக
வாலிதவர் பாழவுணர் வண்பதிய டைந்தார்.

(பொ-ரை.) (அதன்பின் உமாதேவியார், தனது) சூலத்தை ஏவ, (அச்சூலம்) கடலை (வற்றும்படிக்) குடித்துப் பூமியைக் குடைந்து செல்ல, (அதனால்) பூமி (மேடாக) உயர, (மிகுதியாக) வந்த சேனைகள், (அதுகண்டு) களித்தன; (இனி இதன்மேல்) பொருந்த நடப்பீர்களாக எனக் கட்டளையிட்டு, சிங்கவாகனரூடியாய் எமது இறைவியார் முன்செல்ல, (உருத்திர வன்னியரின்) அப்படைகள் தூய்மையுடன் புறப்பட்டு, பாழான அசுரர்கள் இருக்கும் வளப்பமான இரத்தினகரபுரம் என்னும் நாட்டை யடைந்தன, (எ-று).

அரி - கடல். மகி, தாலம் இரண்டும் பூமியெனும் பொருளன. சூலல் - குடைதல். (13)

பல்லனிக மோங்குபெரு பாசறைய மைக்க
வல்லபுய வச்சிரனை வன்னியன ழைத்துக்
கல்லபுய வல்லமரர் காணிறைவி டுத்தி
யல்லதமர் செய்தியென வவ்வவுணர்க் கோதி.

(போ-ரை.) (தொடர்ந்து வந்த) பல சேனைகளும், (வாதாவி நகரத்தின் வடபாரிசத்தில் தாம் தங்குதற்குப்) பெரிய பாசறை யொன்றை யமைக்க, உருத்திர வன்னியர் (தனது புதல்வனை) வன்மை வாய்ந்த வச்சிரவாகுவை அழைத்து, (நீ சென்று,) மலைபோலும் வன்மை படைத்த தோள்களை யுடைய தேவர்களை இட்டசிறை நீக்குவாயாக; அது செய்யாயெனில், போர்தொடங்குதி யென்று (அவுணர் மன்னனை) வாதாவிக்குக் கூறி, (எ-று). குளகம். பாசறை-படைகள் தங்குமிடம். (14)

அம்மறவ னுன்னினைவ றிருந்துவரு கென்ன
விம்மெனவெ ழுந்துபெரு விண்ணிலவ னேகிச்
சிம்மவொலி செய்தவுணன் சேயவனை நேருள்
கொம்மணையி னேறிவரல் கொண்டதையு ரைத்தான்.

(போ-ரை.) அக்கொடியன் உள்ளக் கருத்தை அறிந்து வருக என்று கூறலும், அவ்வச்சிரவாகு சரே லென எழுந்து பெரிய ஆகாய வழியாகச் சென்று, (வாதாவியின் அரசமண்டபத்தையடைந்து,) சிங்காதஞ் செய்தனனாய், அந்த அவுணர் தலைவனது சிங்காதனத்தின் நேரில் உள்ள பருத்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து, (வாதாவி தேவர்களைச் சிறையிட்டதும், அவுணரை யழித்து அமரரைக் காக்க உருத்திர வன்னிய மகாரா

ஜன் அவதரித்ததும், அமரரைச் சிறைவிடுதல், அல்லது அமர் தொடங்குதல் ஆகிய இரண்டில் எது உமது நோக்கம் என்பதை யறிந்து வருமாறு மன்னன் தன்னைத் தூதாகப் போக்கி யிருப்பது மாகிய) தான் வந்த வரலாற்றைக் கூறினான், (எ-று). (15)

சீற்றநிறை கொள்ளவுணன் தீவிழிப றக்க
ஆற்றலுள ரஞ்சுவர டாவெதிரி னாகப்
பீற்றலுரை செய்தனையி தோபெரிய பேதாய்
கூற்றுலகு சேறியெனக் கூவியெதி ருற்றான்.

(பொ-ரை.) அதிகரித்த கோபங் கொண்ட வாதாவி, நெருப்புப்பொறி கண்களிற் பறக்க, அடா! எனது எதிரில் வருதற்கே வலிமை மிகுந்தவரும் அஞ்சுவர்; (நீயோ எனது எதிரில் உள்ள சிங்காதனத்திலும் அமர்ந்தனை; அஃதன்றி என்னை யெதிர்ப்பாரும் உளரென்று) பினத்தல் வார்த்தைகளையும் கூறினாய்; பெரிய பேதையே! (இவ் அடாத காரியம் செய்த நீ முதலில்) யமலோகம் செல் என்று (பயங்கரமாகக்) கனைத்து, (வச்சிரவாகுவைக் கொல்லுதற்கு) நெருங்கினான், (எ-று). (16)

முந்திமுக மோதிவய வாகுவிணி லாக
வந்தசுரன் விட்டகணை வாள்கொடுத டுத்தே
உந்துமருள் செய்தவுண ரும்மையழி வூட்ட
வந்துளமென் றோதிதம பாசரையின் வந்தான்.

(பொ-ரை.) (தன்னைக் கொல்ல வந்தவனுக்குமுன்னே) வச்சிரவாகு முற்பட்டு, வாதாவியின் முகத்தில் அறைந்து (சரேலென) ஆகாயத்தில் எழுந்து நிற்க, வாதாவியும் தொடர்ந்து வந்து விட்ட அம்புகளை (தனது) வாள்படைகொண்டு தடுத்து, (இவனைக் கொல்ல நம்மா

லாகாது என்பதை யறிவானுகலின், ஓர் சர்வமாயாஸ்திரத்தை யபிமந்திரித்துவிட்டு, வாதாவிக்கும் அவனைத் தொடர்ந்துவந்தார்க்கும் சிறிதுநேரம்) மயக்கம் உண்டாகும்படிச் செய்து, உங்கள் அனைவரையும் மாய்த்தற்கே வந்துளோம் என்று (யாவரும் அறிய பேரோசையிட்டுக்) கூறி, தங்கள் பாசறையை வந்து சேர்ந்தான், (எ-று). (17)

அம்பிகையொ டத்தனுய ராரடிவ ணங்கி
வம்பனுரை வச்ரபுய னேதகல வன்னி
நம்பனுய ருக்ரவமர் நாளைசெய லென்னப்
பம்புகதி ரோனுதயம் பார்த்தினிதி ருந்தார்.

(போ-ரை.) வச்சிரவாகு உமாதேவியாருடன் தன் தந்தையான உருத்திர வன்னிய மன்னருடைய உயர்வு பொருந்திய திருவடிகளை வணங்கி, வம்பனுன வாதாவியின் சொற்களைக் கூற, யாவரும் நம்பிச் சரணமடையத் தக்க சிறந்த உருத்திர வன்னிய மன்னர் பெருமான், நாளைய செயல் கடுமையான போர் தொடங்குவதே என்று சொல்ல, (படைஞர் அனைவரும்,) அதிகரித்த கிரணங்களை யுடைய சூரியோதயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இனிதாக இருந்தனர், (எ-று). (18)

உருத்திர வன்னிய மகாராஜன் படையெழுச்சி சருக்கம்

முற்றிற்று.

உ

# வாதாவி மந்திராலோசனைச் சருக்கம்

கலிநிலைத்துறை.

உலக நாயக வுருத்திர வன்னியன் படைகட்
சலதி தாண்டலுந் தகுமிடஞ் சார்தலுங் கவுரி
யிலகு மாடலு முயர்மகன் றூதனு மிசைத்தாம்
மலக மார்தரு வாரிழி மந்திர முரைப்பாம்.

(பொ-ரை.) உலகங்கள் அனைத்திற்கும் தலைவரான உருத்திர வன்னியரின் சேனைகள் கடல் கடந்ததும், பாசறை யடைந்ததும், பார்வதியின் விளங்கும் திருவிளையாடலும், உயர் புதல்வனை வச்சிரவாகு தூதுசென்ற அச்செய்தியும் கூறினோம்; (இந்த சம்பவத்தால்) கலக்கம் எய்திய அவுணர்கள் கேவலமான மந்திராலோசனை செய்ததையும் சொல்கின்றோம், (எ-வ).

மலக்கம் என்பது மலகம் எனக்குறைந்தது; மலக்கம்-கலக்கம். (1)

வச்சி ரப்புய னகன்றது மாமரு ளகல
வச்ச மெய்திய பெருஞ்சின முற்றிடு மவுணர்
மெச்சு தச்சனும் மதியிலார் மேதரு மவையிற்
கிச்ச மிக்கெழு யினிச்செய லென்னெனக் கிளர்ந்தான்

(பொ-ரை.) வச்சிரவாகு சென்றதும், (வாதாவி முதலோரைச் சூழ்ந்திருந்த) பெரியமயக்கம் நீங்க, அதிகரித்த பெருங்கோபம் அடைந்த அவுணர்கள் மெச்சும் கீழ்மகனான வாதாவி, மேன்மை பொருந்திய அறிவிலார் (கூடிய) சபையில், (நடந்த செயல் அறிந்துளீர்!) இனி என்ன

செய்யலாம் என்று மிகுந்த செருப்பெழுமாறு (சீற்ற மொடு) கேட்டான், (எ-று). கிச்சம்—தீ. (2)

அகியு ளக்கயக் கரவரி யாசிய வமைச்சர்
சுகியு ளப்பெரு மிறைவநந் துன்னலார் முடிகிள்
ளுகிரு ளப்பெரு மழல்விழி யெம்மிட முளவால்
துகிலு ளச்சய நினதிடந் தோன்றலென் றுரைத்தார்

(பொ-ரை.) இரும்பு (போலும் கடினமான) மனத்தை யுடைய கஜாசியன், கராசியன், சிம்மாசியன் எனும் பெயரினரான மந்திரிகள், (வாதாவியை நோக்கி,) சுக போகமான உள்ளம் பெற்ற பெருமை வாய்ந்த மன்ன! எங்களிடம், நமது பகைவர்கள் தலையைக் கிள்ளியெறியத் தக்க (கூரிய நீண்ட) நகங்களும் உள்ளன; பெருநெருப்பைக் கக்கும் கண்களும் உள்ளன: (ஆகலின்,) மேன்மை பெற்றவனே! நின்னிடம் வெற்றிக் கொடியும் உள்ளன கண்டாய்; என்று (அலட்சியமாகப் பதில்) கூறினர்.

'ஆசிய' என்பதை, கயம், கரம், அரி யெனும் மூவிடத்தும் கூட்ட, கயாசியன், கராசியன், அரியாசியன் என அமைவது காண்க. கஜாசியன் எனும் வடசொல் கயாசியன் என ஆயது. அரியாசியன் எனும் பெயர்-சிம்மாசியன் எனப்போதரல் அறிக. 'நினதிடம் சயத்துகில் உள' என அந்வயிக்க. தோன்றல்-ஆண்பாற் சிறப்புப் பெயர்: இதனை எதிர்மறையாக்கொள்வேமெனின், பகைவரை வெல்லும் எத்துணை ஆற்றல் நம்மிடம் இருப்பினும், அவை, உருத்திர வன்னியர்முன் தோன்றுதொழியும் என அமங்கலப் பொருளும் தொனித்தல் சிந்திக்கத் தக்கது. அமைச்சரை அறியாதே இப்பொருள்பெறும் சொல் அவர்வாயில் வருகின்றதென்க. அகி-இரும்பு. (3)

வீர சிங்கமா துலனவர் வீண்மொழி யுணர்ந்துக்
கார கத்தனுய் மருககேள் காண்டகு வன்னி
தார கத்தனு மமரைக் காத்திடுந் தகவின்
பார கத்தினி லவதரித் தானவன் பரிவால்.

(போ-ரை.)(வாதாவியின்) அம்மானுகிய வீரசிங்கன், அந்த அமைச்சர்களின் பயனில்லாத சொற்களைச் சிந்தித்து வெதும்பிய மனத்தனுய், (வாதாவியை நோக்கி) மருகனே! கேள். காணத்தக்க உருத்திர வன்னியர் பிரணவத் திருமேனியை யுடையவராகும்; அப்பெருமான், தேவர்களைக் காக்கும் தகுதியான கருணையின் செயலால் நிலவுலகத்தில் திருவவதரித்துளார் (என்பதை யுணர்வாயாக), (எ-று). காரகம்-வெதும்பல். தாரகம்-பிரணவம். (4)

வான கத்தவ ரருந்தவர் மங்கையர் தமைநீ
யீனஞ் செய்தனை யிரங்கிய வன்னவ ரிறையோன்
றூன மெய்திகங் காளனுக் கோததன் சிவையைத்
தீன பந்துவு மவர்துயர் தீர்த்திட விடுத்தான்.

(போ-ரை.) தேவர்களையும், அருமையான தவசிரேட்டர்களையும், (கற்பு நிறைந்த) மாதர்களையும் நீ இழிவு படுத்தினு யாகலின், வருந்திய அவர்கள் அனைவரும் சிவபிரானது இருப்பிடமான திருக்கயிலையை யடைந்து, பரமனிடம் இதனை விண்ணப்பிக்க, எளியவரைக் காக்கும் அப்பரமன், (முறையிட்ட) அவர்களது துன்பத்தை யகற்றுமாறு தனது பராசத்தியை ஏவினுன், (எ-று).

இறைவன், கங்காளன், தீனபந்து முதலியன-சிவபிரானது திருநாமங்கள். (5)

சம்பு தன்னையச் சிவபரைசக்கரக் கிரதை
யம்ப கஞ்செய வுரைக்கவஃ தாற்றலு முனிவன்
பம்பு வேள்வியி லுருத்திர வன்னியம் பரமன்
வம்புசெய்யவு ணர்குலக் காலனாய் வந்தான்.

(பொ-ரை.) (இறைவன் ஏவ வந்த) அந்த உமாதேவி யார், (நிலவுலகின் வந்து,) சம்பு முனிவரை பெருமை யமைந்த வேள்வியொன்றை வளர்த்துமாறு கூற, அம் முனிவர் (தேவியுரைத்த வண்ணமே) யாகத்தைச் செய்த லும், எழுச்சிபெற்ற அவ்வேள்வியிலிருந்து உருத்திர வன்னியப் பரமன், தீயவை யியற்றும் அவுணர் குலக் காலனாக வந்து அவதரித்தான், (எ-று).

சக்கரம்-பெருமை; சக்கரவெதுகை. அம்பகம், பம்பு எனும் இரண்டும் எழுச்சியெனும் பொருளன. (6)

தேவி மாதுணை புரிதரத் தெண்கடற் கடந்து
சேவு கைத்தவன் மதிலையுஞ் சேனைக ளொடுவந்
தேவு தூதையு மறுத்தனை யெம்பரை கோவர்
பாவை யாகிவந் தளித்திடு சாபமும் பலிக்கும்.

(பொ-ரை.) இடபத்தில் ஊர்ந்தருளும் சிவகுமார ரான (வேள்வியில் எழுந்த) உருத்திர வன்னியரும், உமா தேவியார் சிறந்த துணைசெய்ய, குளிர்ந்த நீர் நிரம்பிய கடலைச் சேனைகளுடன் கடந்து வந்து, (உன்னிடம்) ஏவிய தூதையும் மறுத்தாய்; எமது பரசிவையானவள் யாதவ மகளாகத் திருவுருத் தாங்கி வந்து இட்ட சாபமும் பலிக் கப் போகின்றதே, (எ-று). (7)

பரமன் தன்னிலைம் பூதமுற் பவிப்பபோற் பளகில்
கிரம முற்றிடு மைந்துபா லகரொடு கிளரும்
பிரம மானவன் னின்னொடு புரிபம ரதனிற்
சிரம மெய்திடா முன்னமன் னுன்கழற் சேர்தி.

(பொ-ரை.) பிரமத்திலிருந்து (நிலம் நீர் தீ காற்று விண் எனும்) ஐந்து பூதங்களும் உதயமானது போல, குற்றமில்லாத முறையின் (தன்வழி) வந்த ஐந்து புதல்வர்களுடன் கிளர்ந்து வரும் அந்த உருத்திர வன்னியத் தெய்வம், உன்னுடன் செய்யும் போரில் (நீ) துன்பம் அடைதற்கு முன்னே, அப்பரமன் திருவடியைச் சரணமடைவாயாக, (எ-று). (8)

அண்டரைச்சிறை விடுதியே லப்பா னுகவை
கொண்டு நம்முயிர் கொண்டிடான் கொள்ளிது சரதம்
விண்ட யென்மொழி வீணல வென்றவன் விளம்ப
மண்ட ரிப்பினன் மண்விழித் தீப்பொறி வளர்ந்த.

(பொ-ரை.) தேவர்களை (இட்ட) சிறை விட்டிடுவாயானால், அவ்வுருத்திர வன்னியர் மகிழ்வு கொண்டு, நம்மனோர் உயிரைக் கொள்ளை கொள்ளார்; இந்த மெய்ம்மையை (மனத்திற்) கொள்வாயாக: (இங்ஙனம்) கூறிய எனது வார்த்தை வீண்போவன அல்ல என்று அம்மானாகிய அவ்வீரசிங்கன் கூற, அவுணர் மன்னனான வாதாவி, (இதுகேட்டு) அதிகரித்த கோபத்தைக் கொண்டவனேயானான்; கண்களிலும் நெருப்புப் பொறிகள் அதிகரித்தன, (எ-று). (9)

மாசி லர்ச்சிவ னளித்தரு ளென்வலி மதியாய்
கூசி டாதுரை வகுத்தனை கூற்றுவ னுலகின்
வீசி யன்னவர் தமதுயிர் வீட்டுவ னெனவும்
பேசி னன்மனை வலிநெறு யவவுரை பேனுன்

(பொ-ரை.) குற்றமில்லாத சிவபிரான் அளித்த எனது வன்மையையும் மதித்தாயில்லை. கூசாது பலபல வார்த்தைகளைக் கூறினாய்! அப்பகைவரின் உயிர் யமலோகம் செல்லுமாறு வீசி, (அவர்களைக்) கொல்வேன் காண்

என்று, பகைவலியது என்ற வீரசிங்கன் வார்த்தைகளை மதியாத வாதாவி கூறினன், (எ-று). (10)

என்று கூறிய மருகனை யென்னுரை கேளாய்
பொன்ற நேர்ந்தனை யுருத்திர ரூபனைப் புராந்த
கன்னி டச்சிவை வலியனு மவன்வலி காணென்
றன்ற வன்னழ வறிமன னரிப்பொடு நகைத்தான்.

(பொ-ரை) என்று சொல்லிய மருகனான வாதாவியை (வீரசிங்கன் நோக்கி,) என் வார்த்தைகளை, (செவி சாய்த்துக்) கேட்டாயில்லை; இறக்கவே நேர்ந்தனையே! உருத்திரவடிவனும், சிவபிரானது இடப்பாலிலுள்ள உமா தேவியாரினது (வரப்பிரசாத) வன்மையனுமான அவ் உருத்திர வன்னியனின் வலிமையை (இனியேனும் சிந்தித்துக்) காண்பாயாக என்று அவ்வீரசிங்கன் (சொல்லி) அழுவதை அறிந்தவாதாவி, கோபத்துடன் நகைத்தான்.

பேதை யாயினை யிருவெனப் பேணலா திருத்த
மேதை வீரசிங் கன்வினை மேலெணி யிருந்தான்
ஆதன் வீரப் படைஞரின் றொகையெணி யடைகென்
றோத சாரண ருருக்கரந் தோடின ருகப்பால்.

(பொ-ரை.) அறிவில்லாதவனாயினை; (யாதொன்றும் பேசாமல் அடங்கி) இருப்பாயாக என்று அறிவில்லாத வாதாவி, அறிவுடைய வீரசிங்கனை மதியாமல் அமரு மாறு செய்ய, அவ்வீரசிங்கன், இனிமேல் நடக்க இருப்பதை மனத்தில் எண்ணி வறிதே (அடங்கி) இருந்தான்; (அதன்பின் வாதாவி,) நீங்கள் உருத்திர வன்னியரின் படைப் பெருக்கை அளவிட்டு வாருங்கள் என்று கூற, ஒற்றர்கள் (உடனே) வேற்றுருத் தாங்கி (அப்பணி புரிய) மகிழ்ச்சியுடன் விரைந்து சென்றனர், (எ-று). (12)

வந்த வேயரு முருத்திர வன்னியன் படையு
ளுந்து கூவிரக் குழுவினி லுற்றொளித் திடலு
மெந்தை நீலமா களனறிந் தெண்ணலா ருளாவின்
முந்தி னோர்களைப்பிடித்திறை முன்னுற விடுத்தான்.

(போ-ரை.) (அங்ஙனம்) வந்த ஒற்றர்களும், உருத்திர வன்னிய மன்னரின் சேனைகளுள் எழுச்சியுற்ற தேர்க் கூட்டத்தை யடைந்து, (பிறர் தங்களை யறியா வண்ணம்) மறைந்திருக்கவும், (அங்ஙனம் அவர்கள் ஒளித்துக் கொண்டிருத்தலை) சிறந்த எமது பெருமானுன நீலகண்ட வன்னியர் பார்த்து, பகைஞனுன வாதாவியின் உளவால் முற்பட்டு வந்தவர்களான அந்த ஒற்றர்களை கைப்பிடியாகப் பிடித்துச்சென்று (தமது தந்தையான) உருத்திர வன்னியர் எதிரில் விட்டார், (எ-று).

வேயர்-ஒற்றர். கூவிரக்குழு-தேர்க்கூட்டம். 'எந்தை மாநீலகளன்' என இயைத்து, எந்தையான சிறந்த நீல கண்ட வன்னியர் எனினுமாம். (13)

என்னி தென்றிடு மிறைவனை யேத்தின ரழுது
மன்னி னேமெம மகிபனும் மந்திர முறையி
னுன்னி யேவினன் றொகையெண்ணி யுற்றிட வெனலும்
வன்னி மன்னவன் மிகுநகை கொண்டிது வழுத்தும்.

(போ-ரை.) (தம் நேரில் சிறைப்பட்டு நிற்கும் ஒற்றர்களை நோக்கி,) இது என்ன என்று கேட்ட உருத்திர வன்னிய மன்னரைத் துதிசெய்து, (அவர் தங்களைத் தண்டிப்பரே யெனும் அச்சத்தால்) அழுது, எங்கள் அரசனுன வாதாவி மந்திராலோசனையை முறைப்படி நடத்தி, உங்கள் (சேனைகளின் பெருக்கைக்) கணக்கெடுத்து வருமாறு (எங்களை) அனுப்பினுன்; (அதனுற்றுன் யாங்கள்) வந்தோம் என்று கூறுதலும், (அது

கேட்ட) உருத்திர வன்னிய மன்னர் மிகச் சிரித்து, இதனைச் சொல்வார், (எ-று). (14)

தேவர் தங்களைச் சிறைவிடல்செய்திடா னெனினே
யேவர் தாந்துணை புரியினு மெய்யுமெங் கணையால்
வீவர் தானவ ரெனுமிதை வீணனுக் குரைமின்
பாவ காரிகாள் செலுமெனப் பாசறை யகன்றார்

(பொ-ரை.) ஏ பாபிகளே! வாதாவி (இன்னும்) தேவர்களை சிறைவிடா திருந்தானாயின், (அவனுக்காக வேவு பார்க்க வந்த உங்களைப்போல) எத்தகையோர் துணை செய்தாலும், (போர்க்களத்தில்) விடும் எனது அம்புகளால் அசுரர் அனைவரும் அழிவர் என்னும் இதனை, (அந்த) வீணனான உங்கள் தலைவனுக்குக் கூறுங்கள்; செல்லுங்கள் என்றதும், (விட்டதே போதுமென) அவர்கள் பாசறையினின்று நீங்கி ஓடினார்கள், (எ.று). (15)

தீய னுக்கதை யுரைத்தனர் சென்றவர் தெளியாப்
பேய னாயினன் பெருஞ்சின மோடெழப் பெரிது
நேய வல்லியா மவன்மனை நீடுயர் நிறையாள்
வாய டித்தழு தடைந்தன ளவ்விடம் வகுப்பாள்.

(பொ-ரை.) (உயிர் தப்பிச்) சென்ற ஒற்றர்கள், தீயவனான வாதாவிக்கு, (உருத்திர வன்னிய மன்னர் சொல்லியனுப்பின) அம்மொழிகளைக் கூறினார்கள்; (அதனை ஒரு சிறிதும்) சிந்தியாத பேயனான அவன் மிகுந்த கோபத்துடன் (அரியணையிலிருந்து விரைந்து) எழ, (அந்நேரத்தில்,) காம வல்லியெனும் மிக உயர்ந்த கற்பினை யுடையவளான அவனது மனைவி, அதிகமாக வாயில் அடித்து அழுதுகொண்டே அவ்விடம் அடைந்து (பின்வரும் இதனைச்) சொல்லத் தொடங்கினாள், (எ-று). (16)

காந்த கேளொரு கறைபொழி காருடை கவினப்
போந்த சூலிநம் பொழிலிது பூழியாய்ப் போக
ஏந்தற் செய்யவென் கனவிடையெய்ந்ததே யிறைவா
வீந்த தேயினி யவுணரின் வாழ்வென மெலிவாள்.

(போ-ரை.) நாத! இது கேள்; உதிரஞ் சொரியும் கறுத்த ஆடை விளங்க வந்த ஒரு காளி, நமது (இரத்தினாகரபுரம் எனும்) இப்பதி துகள் துகளாய் (சிதைந்து) போக மேடாக்கியது போல, எனது சொர்ப்பனத்தில் நேர்ந்ததே; இறைவனே! இனிமேல், அவுணர்களின் வாழ்வுதான் நாசமாகுமோ என்று கூறி (மேலும்) வருந்துவாள், (எ-று).

கறை-உதிரம். கார் உடை-கரிய சேலை. சூலி-காளி. பொழில்-பூமி. பூழி-துகள். ஏந்தல்-மேடு. வீயாததற்கு முன்னே 'வீந்ததே யினி யவுணரின் வாழ்வு' என்றது, அச்சத்தால் நேர்ந்த தடுமாற்றம் என்க. (17)

அன்ன சொப்பன மமைதர வன்னியா மமலன்
றன்னொ டுஞ்சமர் தொடங்கினை தக்கதன் றிதனை
யுன்னல் செய்கவென் றுரைமொழி யுன்னிடான் வெகுளி
துன்னச் சீயினி யெதிர்நிலா தோடெனத் துடித்தான்.

(போ-ரை.) (யான் கண்ட) அந்த கனவிற்குப் பொருந்த, குற்றமற்ற உருத்திர வன்னிய மன்னருடன் நீ போர் தொடங்கியுள்ளமை தகவன்று; (யான் கூறும்) இதனைச் சிந்திப்பாயாக என்று சொல்லிய சொற்களை (ப் பொருளென) நினையானாய், சீற்றம் அதிகரிக்க, (காமவல்லியை,) சீ! இனி என் எதிர் நில்லாது ஓடு என்று பதைப்புடன் கூறினான், (எ-று). (18)

மாதர் நீதியும் மாதுலன் போதமு மதியாப்
பேதை யான்புரி பெருஞ்சமர் தன்னிலப் பகைஞர்
வீதற் றிண்ணமென் றமர்க்கெழ வீரமா வரியு
மாதகாதிது மருகயான் செல்வனென் றெழுந்தான்.

(போ-ரை.) (காமவல்லியான) மாதரால் உரைத்த நீதி மொழியையும், அம்மான் உரைத்த தெளிந்த அறவுரையையும் மதியாத பேதையான வாதாவி, யான் (மூண்டு) செய் பெரும் போரில், அப்பகைவர் இறத்தல் திண்ணம் என்று கர்ச்சித்து யுத்தத்திற்கு எழ, (அது நோக்கிய அம்மானை) வீரசிங்கன், ஆ! மருகா! (யாங்கள் இருக்க, என்ன சொல்லியும் கேளாத நீ போர்க்கு முதலில் புறப்படும்) இது தகவன்று; யானே (பகைஞரை எதிர்க்கச்)செல்கின்றேன் என்றுகூறி எழுந்தான், (எ-று).

எதிர்காலத்தில் வாதாவி உருத்திர வன்னிய மன்னரால் வீழ்வான் என்பதை யுணர்ந்துள்ள வீரசிங்கன், தன் கண்முன் அவன் இறத்தலைக் காணச் சகியானாய், தான் முன்னே சென்று இறக்கத் துணிந்து, 'யான் செல்வன்' என்று போர்க்கு எழுகின்றான் என்க. (19)

நன்றுரைத்தனை மாதுல வஞ்சுறே னரரை
மென்று தின்றுயிர் பருகிநீ மீளுதி விரைவி
லென்றுரைத்துவன் படைபதி யாக்கிமிக் கெழிலிற்
றுன்று தானையாங் கடல்புடை சூழ்தர விடுத்தான்.

(போ-ரை.) (வீரசிங்கன் உரைத்ததை யோர்ந்த வாதாவி,) மாதுல! நன்று கூறினாய்! அஞ்சாதே; (பகைஞரான) மானிடரை, நீ (போரில் வென்று, அவர் தம் உடலை) மென்று தின்று உயிரினைப் பருகி விரைவில் திரும்புவாயாக என்று உரைத்து, (வீரசிங்கனை) வன்மை

யான படைகளுக்குத் தலைவனாக்கி, மிகுந்த அழகுடன் நிறைந்த சேனைகளான சமுத்திரம் சூழும்படி செய்து அனுப்பினான், (எ-று). (20)

பாதகாதிப னளித்திடு பாடிசூழ் மறமார்
போதகாதிபன் புறப்படு போதினி லிழியுங்
காதகாதிப னிவன்விளி காலமு நணுமுன்
மேதகாதிப னல்விழு வேனென நடந்தான்.

(பொ-ரை.) பாவத்தின் தலைவனான வாதாவி யளித்த படைகள் சூழ்ந்துவர, நிறைந்த வீரசிங்கன் எனும் சேனாதிபதி யானவன், (போர்க்குப்) புறப்படும் போது, நிறைந்த வஞ்சகத் தலைவனான இந்த வாதாவி வீழும் நிலை பொருந்துமுன், (உயிர்த்தொகுதிகள் தம்மனைத்தில்) மதிக்கும் அக்னிசமய உருத்திர வன்னியர் கரத்தால் மாள்வேன் என்று (தன் மனத்தில் எண்ணிக்கொண்டே) சென்றான், (எ-று).

'ஆர் மறப் போதக அதிபன்' என இயைக்க. போதகம்-சிங்கக்குட்டி; அதிபன் என்றது-சேனைத் தலைவன் எனும்பொருட்டு. காதகம்-வஞ்சனை. மேதகம்-மேன்மை யெனினுமாம். (21)

முந்து யாமளைக் காம்பலி முகிழ்த்தபின் னாறென்
னந்த வெள்ளவா கினிபுடை யடைதர வாவஞ்
சிந்து வாரமு நவியமு நேமியுஞ் சுரிகை
யுந்து பல்படை கொடுதுய வேறியுள் ளுகந்தான்.

(பொ-ரை.) (புறப்பட்ட வீரசிங்கன்,) முற்பட்ட காளிக்கு ஆனபலி கொடுக்குஞ் சடங்கு நிறைவேற்றிய பின், அம்புறாத்தூணி, வில், மழு, சக்கரம், உடைவாள் முதலிய அதிகரித்த பல ஆயுதங்களை எடுத்துக்கொண்டு,

நூறு வெள்ளம் சேனைகள் சூழ, இரதத்தின்மேல் ஏறி யமர்ந்து உள்ளங் களித்தான், (எ-று).

யாமளை-காளி. வாகினி-சேனை. ஆவம்-அம்புக்கூடு. சிந்துவாரம்-வில். நவியம்-மழுப்படை. சுரிகை-வாள். (22)

தந்தி ரத்தொடு தகுவனு ளேர்முனர் சவிதா
யிந்தி ராதிய ருயவரு மெம்மிறை யவுணர்
சிந்தி டப்புரி யமர்நிலே சேணிருந் துணர
முந்து காதலின் குணகடற் கூப்பிகை முளைத்தான்.

(பொ-ரை.) அவுணனான வீரசிங்கன் படைகளுடன் (போர்க்களத்தை) யடைதற்கு முன்னே, சூரியனானவன், இந்திரன் முதலான அனைவரும் உய்யத் திருவவதரித்த எமது இறைவனான உருத்திர வன்னிய மன்னவர், அவுணர் வீழ்ச்சி யடையப் புரியும் யுத்த நிலையை உயர இருந்து காண முற்பட்ட ஆசையால், (அவரைக் கிரணங்களாகிய) கரங்களைக் குவித்துக் கும்பிட்டுக் கிழக்குக் கடலில் உதயமானான், (எ-று). சவிதா சூரியன். (23)

வாதாவி மந்திராலோசனைச் சருக்கம் முற்றிற்று.

உ

வன்னி மன்னர்

# அணிவகுப்புச் சருக்கம்.

எழுசீராசிரியச் சந்தவிருத்தம்.

அற்றை நாள்பரை வன்னி மன்னவ
　　னப்ப டைக்கதி பன்னிட
மிற்றை நாலிர தாதி பர்களு
　　மிங்கு றுங்கே ளார்தமை
வெற்றி கொண்டிட லான வஞ்சிமி
　　லைச்சி வேகமொ டாமமர்
துற்றி டும்படி யோத லும்மது
　　தோன்ற லுஞ்செய் வானரோ.

(போ-ரை.) (சூரியோதயமானதும்,) அத்தினத்தில், உமாதேவியாரும் உருத்திரவன்னியரும், (தம்பிடமுள்ள) அச்சேனைகளுக்குத் தலைவனிடத்தில், இன்று (அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என்னும்) நான்கு இரதாதிபர்களும், இங்குவரும் பகைஞரை வெற்றி கொள்வதற்கு ஏதுவான வஞ்சிமாலை சூடி, விசையொடு புரியும் போரினைச் சூழ்ந்து செய்யுமாறு கூறுதலும், (சேனாதிபதியான) நீலகண்ட வன்னியரும் அச்செயலைச் செய்யத் தொடங்கினர், (எ-று).

அதிரதர்-(தாம் ஒரு தேரில் ஏறி அமர்ந்து, தம் தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவராமல் காத்து, பல ஆயிரம் தேர்வீருடன் எதிர்த்து, வேறு துணை வேண்டாமலேயே போர்செய்து வெல்லும் வல்லமை யுடைய) முழுத்தேர் அரசராவார். மகாரதர்-அதிரதரிற் சிறிது

தாழ்ந்தவர்; இவர்கள் பதினோராயிரம் தேர்வீரருடன் போர்புரிபவர். சமரதர்-ஒரு தேர்வீரனுடன் தாமும் ஒருவராய் எதிர்க்க வல்லவர். அர்த்தரதர்-பகைஞர் மிக முனைந்து எதிர்ப்பாராயின் தம் தேர் முதலியவற்றை இழப்பவர்; அர்த்தரதர் இருவர் சேர்ந்தால், ஒரு சமரதனுக்கு ஒப்பாவர். வஞ்சி-பகைவர்மேல் போர்செய்யச் செல்பவர் அணிதற்கு உரிய ஒருவகைப் பூமாலை. (1)

அதிர தாதிபர் தானு நல்லளி
　　ருத்ர வன்னிய வண்ணலுஞ்
சிதைவில் வச்சிர வாகு சாம்பவர்
　　மார தாதிபர் சமரதப்
பதியர் கங்கா பால ரர்த்த
　　தேரின் பாலக ராப்பசு
பதியு மாம்படி நீல கண்டர
　　மைத்த கங்களி பல்கினர்.

(போ-ரை.) தானும், சிறந்த கருணை மூர்த்தியான உருத்திர வன்னியரும் அதிரதத் தலைவர்களாகவும், (போரில்) வலியழிதலில்லாத வச்சிரவாகு வன்னியரும், சாம்பவ வன்னியரும் மகாரதத் தலைவர்களாகவும், கங்காபால வன்னியர் சமரதத் தலைவராகவும், பாசுபத வன்னியர் அர்த்தரதத்தலைவராகவும், (சேனாதிபதியான) நீலகண்ட வன்னியர் அமைத்து, நிறைந்த உள்ளங் களிப்பெய்த இருந்தார், (எ-று). (2)

ஆன மாபடை கண்டு வந்தபி
　　னைம்பு லன்களு முள்ளமு
மான நேர்ந்தென மக்க ளைவரு
　　மன்ன னுஞ்சமா ருன்னவே

வான மாமுகி லேறி டிப்பட
வந்த தென்னவும் வார்கட
லான வாப்பறை நேர்ந்த தென்னவு
மார்த்த கோட்டிய வாம்பலே.

(பொ-ரை.) (இங்ஙனம் அணி) வகுக்கப் பட்டதான சிறந்த (உக்கிரமான) சேனைகளைப் பார்த்து மகிழ்ந்த பின்பு, பஞ்ச இந்திரியங்களும் மனமும் ஒருமித்துப் போனாற்போல, ஐந்து புதல்வர்களும் உருத்திர வன்னிய மகாராஜனும் (ஒருமித்து) போரினைக் குறித்து நிற்க, (அதே காலத்தில்,) ஆண் இடி மிகுதியாக உண்டாக (நீருண்டு மழைபெய்ய) ஆகாயத்தில் வருகிற காளமேகங்களின் கூட்டம் போலவும், (வரிசையாகப் பொங்கிவரும்) நிறைந்த கடல்போலவும், (மிக்க ஓசை மென்மேல் உண்டாக முழங்கும்) வாத்தியங்களின் கூட்டம் கூடியது போலவும், (அச்சேனை சமூகத்திலுள்ள) யானைகளின் கூட்டம் கர்ச்சனை செய்தன. (எ-று).

ஐம்புலன்கள் புதல்வர்க்கும், உள்ளம் உருத்திர வன்னியர்க்கும் உவமையாக முறையே சென்று இயைதலால், முறைநிரனிறைப் பொருள்கோள்; [நன்-பொது-௯௩.] இதனை வடநூலார் கிரமாலங்காரம் என்பர். பின் இரண்டடி-உவமையணி: மேகமும் கடலும் யானைக்கு ஒலியினாலே யன்றி, கரிய பெரிய வடிவத்தாலும் மதநீர் வெள்ளத்தாலும் உவமையாம். (3)

உரல டிக்கரி யுரகர் பைத்தலை
யுறும ணிக்கண முடைபட
நிரல வாகிய படர்தல் செய்தன
நிமிரு கூவிர முருளெதிர்

பரல மாகிரி படின்பி லத்திடை
பதிய சேர்வரு பரிகளின்
குரது கட்சமர் செய்து விண்ணிழி
தடவு மோங்கிய கொடிகளால்.

(பொ-ரை.) உரல்கள் போன்ற கால்களை யுடைய யானைகள், (அடியெடுத்து வைக்குந்தோறும், மென்மேற் படுதலால், கீழுலகத்துள்ள) நாகரது படத்தை யுடைய தலையிற் பொருந்திய மாணிக்கங்களின் கூட்டமெல்லாம் மிகப் பொடியாகும்படி, வரிசை வரிசையாக விரைந்து நடந்தன; உயர்ந்த தேர்கள், (உருண்டுசெல்லும் அழகிய சக்கரங்களின்) எதிரில் பருக்கைக் கற்களையுடைய பெரிய மலைகள் அகப்பட்டால், (அம்மலைகள் நாகர்கள் வாழும் பெரிய) பாதாள லோகத்தில் புதைந்து அழுந்தும்படி, எதிரே செல்லும் தன்மையவான (தம்மிற் கட்டிய) குதிரைகளினுடைய கால் குளம்புகளால் (மேலே) எழுப்பப்பட்ட புழுதியினால், (மேலுள்ள தேவர்களோடு) போரைச் செய்து, (தம்மீது கட்டியுள்ள) உயர்ந்த கொடிச்சீலைகளால் சுவர்க்கத்தில் உள்ள அத்தேவர்களது கண்களைத் துடைத்தலுஞ் செய்தன, (எ-று).

உரல்-யானைக்காலுக்கு, வடிவாலும் வலிமையாலும் உவமம். முன்னிரண்டடியிலும் மூன்றாவதடியிலுமாக இரு உயர்வு நவிற்சியணியும், பிறர்க்கு வருத்தமுண்டாம்படி முன்னே கலகம் விளைத்துப் பின்பு அவரைக் கண்துடைத்துச் சமாதானப்படுத்துபவரது தன்மை, தேரினிடத்து ஏற்றிக் கூறப்பட்டதனால் நான்காவதடியில், தற்குறிப்பேற்ற வணியொன்றும் இவ்வொரே செய்யுளில் அமைந்திருத்தல் காண்க; இதனைக் கலவையணி யென்பாருமுளர். கூவிரம்-தேர். குரம்+துகள்=குரத்துகள்

என வரற்பாலது, நிலைமொழி வடசொல்லாதலின், வருமொழி வலி யியல்பாயிற்று. [நன்-மெய்-௩௬.] முதலிரண்டடிகளில் யானைகளின் வலிமையையும், மலைகளையும் பாதாளத்தில் அழுத்த வல்லன என்றது-தேரின் வலிமை மிகுதியையும், குதிரைகளின் கால்குளம்புகளால் எழும் புழுதி விண்ணவருடன் போரிட்டது என்றது-குதிரைகளின் வலிமையையும், கொடிச் சீலை அவ் விண்ணவர்தம் கண்துடைத்தன என்றது-தேர்களின் உயர்ச்சியையுங் குறிப்பிக்கும். (4)

பலதுறைப்படு நடையுடற்கதி
யுலவை யொத்தன பரவைசூ
ழுலக முழுதையுங் ககன முய்த்தலி
னுரகர் தஞ்சுமை யுதறின
யிலகு சக்கர கிரியை சுற்றளா
வெனவளைப்பன வெழுமுகில்
குலவு மத்தலை கிழிய வைப்பன
குரவி தத்தன குரகதம்.

(பொ-ரை.) குதிரைகள், அநேகவகைப்பட்ட நடைகளையுடைய உடம்பின் விரைந்து செல்லுதலிலே வாயு வேகத்தை யொத்தன; கடல் சூழ்ந்த நிலவுலகம் முழுவதையும் (தம் கால்களால் எழுப்பப்படும் தூள்கள் மூலமாக) ஆகாயத்திற் செலுத்துதலால், (கீழிருந்து நிலத்தைத் தாங்கும்) நாகர்களுடைய தலைப்பாரத்தைக் குறைத்தன; (உலகத்தைச் சூழ்ந்து) விளங்குகிற சக்கரவாள கிரியை, (தாம் வட்டமாக ஓடுவதற்கு அளவாக அமைத்த) சுற்றெல்லை யெனும்படி மண்டல கதியாய்ச் சுற்றி வருவன; சப்த மேகங்களினது நிலவிய தலை கிழியும்படி (அவற்றின்மேல்) வைப்பனவான காற்குளம்புகளின் வகையையுடையன, (எ-று).

பலதுறைப்படு நடை-ஐவகை நடை; அவை-"விக்கிதம் வற்கிதம் வெல்லு முபகண்டம், மத்திமம் சாரியோ டைந்து" என்பன. ஆஸ்கந்திதம், தோரிதகம், ரேசிதம், வல்கிதம், புலுதம் என்று சொல்லப் பெறுதலுமுள. மிக விரைவுமின்றி மிகமந்தமுமின்றி சமமாகச் செல்வது-ஆஸ்கந்திதம்; அதனினும் அதிகமான சதுரமாச் செல்வது-தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்ட நடை-ரேசிதம்; வேகத்தினால் முன்கால்களைத் தூக்கிவரும் நடை-வல்கிதம்; அவ்வளவு விரைவும் சமமுமாச் செல்கை-புலுதம் என்க. இனி, மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, இடபகதி என்றலுமுண்டு. இதனுடன் பஞ்சளி, முரளி, சுடாலம், வலனம் என நான்கையும் கூட்டி நவகதி கூறுவாருமுளர். குரவிதத்தன-காற்குளம்புகளின் வகைகளையுடையன. இப்பாட்டில், தற்குறிப்பேற்ற வணியும் தொடர்புயர்வு நவிற்சியணியும் விரவி வந்தது காண்க. (5)

நுதல வில்லெழ வரியு யிர்ப்பெழ
வீர நகையெழ நுதலொணாக்
கதமி குந்தரி மனம துற்றெழ
வன்மை கரமுறு மயிலினின்
விதம வெயிலெழ வணியும் பல்லணி
வீசு மழகெழ விரியிமை
மதர்வு விழிமிகு மருண மெழவரு
மறவர் நிலைசொல லாகுமோ.

(போ-ரை.) (தத்தம்) புருவங்கள் விற்களைப்போல் வளைந்து தோன்றவும், (தமது நாசியில்) சுவாசத்தோடு புகைகிளம்பவும், (வாயில்) வீரநகை தோன்றவும், மனத்திலிருந்து கோபமாகிய தீப் பொங்கவும், வலிமையார்ந்த கைகளிற் பொருந்திய வேல்களில் சூரியகாந்திபோன்ற

ஒளி வீசவும், (தாம்) அணிந்துள்ள பல ஆபரணங்களின் அழகு விளங்கவும், ஒளிசெய்யும் இமைகளைப் பெற்ற கொழுவிய கண்களில் (கோபமிகுதியால்) செந்நிறம் பொருந்தவும், (போர்க்குமுந்தி) வந்த வீரர்களின் உக்கிர நிலையைச் சொல்லுதற்கு இயலுமோ, (எ-று).

முதலடியிற் போந்த அரி-புகையெனும் பொருளினும், இரண்டாவதடியிற் போந்த அரி-நெருப்பு எனும் பொருளினும் வந்தன. கதம்-கோபம். அயில்-வேல். மிளிர்இமை-ஒளிவிளங்கும் இமைகள். மதர்வு-கொழுமை. அருணம்-சிவப்பு. மறவர்-வீரர். (6)

தேவி புற்கல னண்ணல் மார்பு
நீல ருன்னந் திகழ்புயம்
ஆவ வச்சிர வாகு சாம்பன்
கங்கை பசுபதி யடியிணை
சேவ கப்பிற மன்ன ரானவர்
செம்மை யவயவ மெனவுறு
தாவு மொன்னமர் பூமி நேமொரு
தேக மொத்தது தானையே.

(போ-ரை.) உமாதேவி உயிராகவும், உருத்திர வன்னிமன்னர் மார்பாகவும், நீலகண்ட வன்னியர் முகமாகவும், அம்புறுத் தூணியை யுடைய வச்சிரவாகு வன்னியரும் சாம்பவ வன்னியரும் விளங்கும் இரண்டு தோள்களாகவும், கங்காபால வன்னியரும் பாசுபத வன்னியரும் இரண்டு கால்களாகவும், வீரம்நிறைந்த மற்ற அரசர்கள், (இன்னமுள்ள வேறு) அழகிய உறுப்புக்கள் முதலியவையாக அந்த சேனை, பாய்ந்து செய்யும் ஒள்ளிய சமர பூமியிற் பொருந்திய ஒருதேகத்தையொத்திருந்தது, (எ-று).

இது, உவமையணி. சேனையின் தோற்றத்தை ஒரு மனித உருவத்துக்கு ஒப்பிட்டவாறும். உயிர் உடலிலிருந்து அதனைக் கொண்டு தொழில் நடத்துதல்போல, இறைவி உயிர்களனைத்தினும் உள்ளிருந்து அவற்றைக் கொண்டு தொழில் நடத்தலின், 'தேவி புற்கலன்' என்றார். புற்கலன்-ஆன்மா. வீரர்க்கு உறுப்பனைத்தினும் மார்பு சிறந்து முற்பட விளங்கல்போல உருத்திர வன்னிய மன்னர் யாவரினும் சிறந்து முற்பட விளங்கலின் 'அண்ணல் மார்பு' என்றார். முகம் முக்கிய அவயவமாக முன்விளங்குதல்போல நீலகண்ட வன்னியர் சேனாதிபதியாய்ச் சேனைமுகத்தில் நின்று விளங்கலின் 'நீலன் ஆனனம்' என்றார். தமது வலிமையாற் பகைதொலைத்து வெற்றிதரவல்ல தோள்கள்போல வச்சிரவாகு வன்னியரும் சாம்பவ வன்னியரும் தமது திறமையாற் பகைஞரை அழித்து வெற்றிவிளைப்பவ ராதலின் 'ஆவ வச்சிரவாகு சாம்பன் திகழ்புயம்' என்றார். கால்கள் தாழ்ந்த உறுப்புக்களாய்த் தம்மை யுடையவன் நினைத்த இடம் செல்லப் பொருந்திய கருவியாக இருத்தல்போலக் கங்காபால வன்னியரும் பாசுபத வன்னியரும் உருத்திர வன்னிய மன்னர் முதலினோர் கருதிய வண்ணம் பணிசெய்பவ ராதலால் 'கங்கை பசுபதி யடியிணை' என்றார். உடம்பில் உள்ள பிறவுறுப்புக்கள் அனைத்தும் ஏற்ற வண்ணம் உதவுதல் போல, யுத்தத்தில் துணையாக வந்த வீரர்கள் அனைவரும் சமயோசிதமாகத் தொழில் செய்தலால் 'மள்ளர் ........செம்மை யவயவம்' என்றும் உருவகப்படுத்தினர். முதல் மூன்றடிகளிற் கூறிய இவ்வுருவகம்-ஈற்றடியிலுள்ள உவமைக்கு அங்கமாகக் கலந்து வந்ததாகலின், உறுப்புறுப்பிக்கலவையணி. (7)

ஆறு மாபடை வன்னி வேந்த
　　னங்க னுற்றிடு மமையமே
சீறு வீர சிங்க னேங்கிய
　　திண்மை சேனை களொடுவர
வீறு கொண்டெழு மிருதி றப்படை
　　செய்த கர்ச்சனை விண்ணிடி
யேறு சக்கர மேழு யங்கிட
　　வெங்கு மாகிநி றைந்ததால்.

(போ-ரை.) சிறந்த அறுவகைச் சேனைகளை யுடைய உருத்திர வன்னியர் (போர்க்குச் சித்தமாக) அங்கு தங்கி யிருந்த அப்போது, சீற்றம் மிகுந்த (வாதாவியின் அம்மானுன) வீரசிங்கன் அளவிறந்த வன்மையையுடைய சேனைகளுடன் (போர்க்களத்தில்) வருதலும், பெருமிதம் கொண்டு எழுந்த இருபக்கத்துச் சேனைகளும் (ஏககாலத்தில்) செய்த கர்ச்சனை யானது, ஆகாயத்தில் உள்ள ஆண் இடியும் ஏழு சமுத்திரங்களும் வருந்த, எல்லா இடங்களினும் பரவி நிறைந்தது, (எ-று).

இருதிறப் படைகள் செய்த கர்ச்சனை, தம்மொலியினும் மிக்கிருத்தலின், ஆண் இடியும் எழுகடலும் இவ் ஓசையின் காரணம் அறியாமல் உயங்கினபோலும். அறுவகைப்படை "ஒத்தவில் வேல் வாள் யானை யுயர்பரித் தேரோடாறே" எனும் நிகண்டின்படி, வில்வீரர், வேல் வீரர், வாள்வீரர், யானைப்படை, தேர்ப்படை, குதிரைப் படை முதலியனவாம். சக்காம்-கடல். (8)

வன்னிமன்னர் அணிவகுப்புச் சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ சொர்ன காமாட்சி துணை.

136

# முதற்போர்ச் சருக்கம்

## வீரசிங்கன் வதம்

### கலிவிருத்தம்.

தூய ருத்திர வன்னியர் தொல்படை
நாய கன்னணி செய்தபி னண்ணலா
ராய மெய்தின வன்னது ரைத்தனந்
தீய ரோடமர் செய்தலை யோதுவாம்.

(போ-ரை.) தூய்மை பொருந்திய உருத்திர வன்னிய மன்னரின் தொன்மை வாய்ந்த சேனாதிபதியான நீலகண்ட வன்னியர், (தனது சேனைகளை) அணிவகுத்த பிறகு, பகைவர்களின் சேனைகளும் வந்து சேர்ந்ததைக் கூறினோம்; (இனி,) கொடியவர்களான அவ்வவுணப் படைகளுடன் வன்னியர்படை யுத்தம் செய்வதைச் சொல்லுகின்றோம், (எ-று). (1)

கச்சை யத்தியுங் கந்துகந் தேருள
மெச்சு வன்னியன் வேலவ னாதலாற்
றுச்சர் வீழ்வது திண்ணமென் மாமுர
சுச்ச மோங்கவொ லித்தன வோகையால்.

(போ-ரை.) கழுத்திடு கயிற்றையுடைய யானைகளையும், குதிரைகளையும், இரதங்களையும் உடைய (யாவரும்) கொண்டாடும் உருத்திர வன்னியர், (அவுணர் குலகாலனான) வேற்படை யேந்திய முருகப் பெருமானது அம்சமாதலால், கயவர்களான அவுணர்கள் மடிவது நிச்சயம் என்னும் எண்ணத்தால் சிறந்த பேரிகைகள், விண்முகடு எட்ட மகிழ்ச்சியொடு சப்தித்தன, (எ-று).

உருத்திரவன்னியர் சேனையில் இயல்பாக வெற்றிக்கு அடையாளமாகவும் போரில் ஊக்கத்தை வளர்த்தற்கும் முரசங்கள் அடிக்கப்பட்டு மிகுதியாக முழங்குதலை, உருத்திர வன்னியர் முருகனின் அவதாரம் என்பதை யுணர்ந்த களிப்பால் மிக்குமுழங்கினதாக ஒரு காரணங் கற்பித்த இது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. (2)

வண்டை யேந்திய வண்கம லக்கர
அண்ட னுண்மகிழ் வாமரு மானெனக்
கண்ட கொக்கரை கண்டனம் வாழ்வெனு
அண்டி டம்பணி லத்துட னார்த்தவே.

(பொ-ரை.) உருத்திர வன்னியர் (பாஞ்சசந்யம் எனும்) சங்கையேந்திய கையை நிரம்பிய கமலமொத்த திருக்கரத்தையுடைய நாராயணனின் உள்ளங்களிக்கும் மருகர் என்பதைக் கண்டு கொண்ட வலம்புரிச்சங்குகள், (தமது இனத்துத் தலைமைச்சங்கை யேந்திய பெருமானின் மருகற்குத் தக்ககாலத்தில் பணிசெய்ய நேர்ந்தது குறித்து, யாமும் மிகுந்த) சிறப்புப் பெற்றேமென்று நெருங்கிய இடம்புரிச் சங்குகளோடும் சலஞ்சலமென்னும் சங்குகளோடும் மிக்கு ஒலித்தன, (எ-று).

இப்பாட்டும் - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. வண்டு சங்கு; அது-பாஞ்சசந்யம். கொக்கரை-வலம்புரிச்சங்கு. இடம்-இடம்புரி. பணிலம்-சலஞ்சலம். (3)

ஆர்ந்த கூவிரங் கூவிர மார்ந்தன
நேர்ந்த கும்பியுங் கும்பியு நேர்ந்தன
தேர்ந்த பாடலம் பாடலந் தேர்ந்தன
மூர்ந்த வீரரும் வீரரும் முட்டினார்.

(பொ-ரை.) (இருசேனைகளிலும்) பொருந்திய தேர்களும் தேர்களும் (ஒன்றோடொன்று) நெருங்கின;

(வெற்றி) அமைந்த யானைகளும் யானைகளும் (ஒன்றோ டொன்று) எதிர்த்து நடந்தன; தேர்ச்சிபெற்ற குதிரை களும் குதிரைகளும் (ஒன்றோடொன்று) எதிர்த்தன; அடர்ந்தகாலாள் வீரர்களும் காலாள் வீரர்களும் (ஒருவ ரோடொருவர்) மோதினார்கள், (எ-று).

கூவிரம் - தேர். கும்பி - யானை. பாடலம்-குதிரை. இங்கு அவற்றின் மேலுள்ள வீரரையுங் குறிக்கும். (4)

பற்று கட்கமுங் கட்கமும் பாய்ந்தன
குற்று ஞாங்கருஞ் ஞாங்கருங் குத்தின
முற்று வில்லொடு வில்லு முறிந்தன
துற்று கோல்களுங் கோல்களுந் தோய்ந்தவே.

(பொ-ரை.) (இருதிறத்திலும்) பிடித்த வாளாயுதங் களும் வாளாயுதங்களும் (ஒன்றின்மேலொன்று) பாய்ந் தன; நெரிக்கும் வேலாயுதங்களும் வேலாயுதங்களும் (ஒன்றையொன்று) குத்தின; (வன்மை) முதிர்ந்த விற் களும் விற்களும் (ஒன்றையொன்று) அழித்தன; அடர்ந்த அம்புகளும் அம்புகளும் (ஒன்றின்மேலொன்று) பொருந்தின, (எ-று). ஞாங்கர்-வேல். (5)

சென்னி சென்றவர் கேசவச் செம்மலா
லொன்ற கற்சிர வத்தமொ டொத்தன
ரன்று தாளகல் வுற்றவ ராதபன்
றுன்று சாரதி யென்னவுந் தோன்றினார்.

(பொ-ரை.) (அப்போரில்) தலையறுபட்ட வீரர்கள், நாரணனால் பொருந்திய தலையறுபட்ட இராகுவுக்குச் சமானராயினர்; அன்று கால்களை யிழந்தவர்கள், சூரி யனது தேரைச் செலுத்துதற்கு அமைந்த சாரதியான அருணனைப்போலக் காணப்பட்டனர், (எ-று.)

அத்தம்-இராகு. இது, உவமையணி. (6)

உருவ கோற்களு மானபி னுடித்த
முருவ கோற்களை வாங்கிவி லூட்டுவா
ருருவ மேனிய வன்னிய னுண்மகி
முருவ பல்படை யுள்சில வீரரே.

(போ-ரை.) உருவத்திருமேனியையுடைய உருத்திர வன்னியர் மனம் மகிழும் நெருங்கிய சேனசமூகத்தி லுள்ள சிலவீரர்கள், (பகைவர் உடலில்) ஊடுருவிச்செல் லும் (தங்கள் கையிலுள்ள) அம்புகளெல்லாம், (அப் பகைவர்மேல் எய்து) ஒழிந்துபோன பின்பு, (பகைவர்க ளால் எய்யப்பட்டுத்) தமது உடம்பில் தைத்துள்ள அம்பு களைப் பிடுங்கி வில்லில் சேர்த்து விடுவார்கள், (எ-று).

இதனால், அவர்களது கலங்குதலின்றிய திடச்சித்தம் வெளியாம். இது, புறப்பொருளின் பகுதியான தும்பைத் திணைக்கு உரியது: நூழிலாட்டு எனவும் படும். (7)

வீசி நின்றொரு வன்பெரு வேலெதிர்
மூசி நின்றுளன் முன்முடி தள்ளினன்
ஏசி தன்றலை யேகயி ருந்தவன்
னேசி யுவ்வியு நீங்குற வீசினன்.

(போ-ரை.) ஒருவன் (தைரியமாக) நின்று, பெரிய வாளை வீசி, எதிரில் அடர்ந்திருந்த பகைவனது தலையை முதலில் வெட்டித் தள்ளினன்; (அங்ஙனம்) தன் தலை அறுபட வெட்டிய எதிரியைப் பழித்து, (வெட்டிய அவ னால்) விரும்பப்படும் அவனது தலை சிதறும்படி (தானும் வாளை) வீசினன், (எ-று). இது, தொக்தயுத்த நிலை. (8)

வீதற் செய்தவர் தம்முறை வீதா
லாத காமெதன வீழ்த்திய வன்னரைக்
காத கத்தொடு கட்டிப் புரண்டுயிர்
சாதற் செய்தபின் சாய்ந்தன ராஞ்சிலர்.

(போ-ரை.) (பகைவரால் வெட்டப்பட்டு) விழுபவர்கள், அப்பகைவரைக் கொல்வதாக முன்னரே சபதம் செய்த) தமது வார்த்தை பழுதுபடுவது, ஆ! தகாது என்று தம்மை வீழ்த்திய அவ்வெதிரிகளை மிகுந்த கோபத்துடன் கட்டிப் புரண்டு, (அவர் தம்) உயிரினைப் போக்கிய பின்னர் மாய்ந்தனராம் சில வீரர்கள், (எ-று).

இருதிறத்து வீரரின் வீரவாதம் இதனில் வெளியாம்.

நீல கண்டனு நின்றுசெய் போரினு
லோல மிட்டரி யோடலை நோக்கிய
சீல மாமற சிங்கனெ திர்ந்தெதிர்
கால னென்னக் கணைபல தூவினன்.

(போ-ரை.) (சேனாதிபதியான) நீலகண்ட வன்னியரும் (வீராவேசத்துடன்) நின்று செய்த யுத்தத்தில், தன் சேனை அபயக்குரலிட்டு ஓடுதலைப் பார்த்த சிலம்பிக்க வீரசிங்கனும், நீலகண்டவன்னியரின் நேர்வந்து எதிர்த்து, யமன் எனும்படி பல அம்புகளை விட்டான்.

அன்ற வன்சொரி யப்புக ளம்மவோ
துன்று வன்னியன் தொல்படை முற்றுமே
யொன்ற பேரிரு ளுற்றன வென்னவே
கன்றி டப்புரிந் திட்டது காணவே.

(போ-ரை.) அவ்வீரசிங்கன் அன்று பொழிந்த அம்புகள், அம்மா! உருத்திரவன்னியரின் அடர்ந்த பல சேனைகளும், மிகுந்த இருள் பொருந்த வந்தன என்று எண்ணிக் காணுமாறு வருந்தச் செய்தன, (எ-று). (11)

அந்த வேலையி னங்குறு நீலனுந்
சிந்து மாவட வையெனச் சீறியே
யிந்தி ரக்கணை யேவியன் னன்மிக
வுந்து மப்பும ழையினை யோட்டினன்.

(பொ-ரை.) அப்போது அங்கிருந்த நீலகண்ட வன்னியரும், கடலின்கணுள்ள பெரிய வடவாமுகாக்கினி போலக் கொதித்து, இந்திராஸ்திரத்தையேவி, அவ்வீர சிங்கன் விருதியாகவிட்ட பாணவர்ஷத்தை (இருக்குமிடம் தெரியாதபடி) துரத்தினார், (எ-று). (12)

வீர சிங்கனும் வீசியி ராங்கணை
சூர னின்கணை துண்டு துண் டாக்கினான்
தீர னீலனெட் டாங்கணை சீறியே
வீர மாவரி மார்புற விட்டனன்.

(பொ-ரை.) (அதுநோக்கிய) வீரசிங்கனும் பத்துக் கணைகளை யேவி, சூரான நீலகண்டவன்னியரின் அம்புகளை பொடிப்பொடியாகச் சிதற அடித்தான்; தைரிய மிக்க நீல கண்டவன்னியரும், கோபத்துடன் (மறுபடி) எட்டுக்கணைகளை வீரசிங்கனின் மார்பிற்கு நேராக விட்டார், (எ-று). (13)

அன்ன போதரி னாறென வாஞ்சரந்
தன்னை யேவலுந் தீயெழ வத்தொடை
மன்னி நீலனின் கந்தள மட்டுக
வென்னச் செய்தபி னெண்ணிலர் கொன்றன.

(பொ-ரை.) அவ்வமயம் வீரசிங்கன், (எதிரிகளை நோக்கித்) தாவிவரும் ஆறுகணைகளை விடுதலும், நெருப்பெழவந்த அவ் அம்புகள், நீலகண்ட வன்னியரின் மார்புக் கவசத்தை மண்துகள் எனும்படி யுடைத்தபிறகு, அளவில்லாத வீரர்களையும் அழித்தன. கந்தளம்-கவசம்.

அக்கி னிப்பெய ரத்திர மொன்றினை
யுக்கி ரத்துட னேவலு மூத்தமன்
றிக்கெ லாமொளி செய்தது தீயெழப்
புக்க போதரி மோகினி போக்கினான்.

(போ-ரை.) (அஃதறிந்த) உத்தமரான நீலகண்ட வன்னியர், மிகுந்த உக்ரத்துடன் அக்கினியாத்திரத்தை விடுதலும், திசைகளனைத்தும் (கேட்க) ரீங்கரித்துக் கொண்டு நெருப்பெழ அக்கணை வந்தபோது, (அதனைத் தடுக்க) வீரஸிங்கன் மோகினியாஸ்திரத்தைப் பிரயோகித்தான், (எ-று). (15)

மோக னப்பெய ரத்திர முன்னய
வாக மென்படை யுண்டுபின் வானவன்
நோக மெய்திடக் கையைத் துளைத்தயர்
வாக மேயின தாயிது பாவமே.

(போ-ரை.) அம் மோகனாஸ்திரம், முதலில் (நீலகண்ட வன்னியர் விட்ட) அக்கினியாஸ்திரத்தை விழுங்கி, பிறகு மேன்மையான அந்நீலகண்டவன்னியர் துன்பம் எய்தக் கையைத் துளைத்துக்கொண்டு மூர்ச்சையாகச் செய்து சென்றது; ஆ! இது மிகுந்த பாவமாகும் (எ-று).

பாவி யும்மது செய்தபின் பல்படை
யேவி யண்டமெ லாநிறை வெய்துறக்
கோவி னின்படை கொள்ளவ யங்களைச்
சீவி னானது செப்பவு மாகுமோ.

(போ-ரை.) பாவியான வீரசிங்கனும் அச்செயலைச் செய்த பிறகு, ஆகாயமெல்லாம் நிறையும்படி பல அம்புகளை ஏவி, உருத்திரவன்னியரின் சேனைகளது அவயவங்களை அறுத்துத் தள்ளினான்; அக்கொடுமையை வாய்விட்டுச் சொல்லுதற்கு ஆகுமோ, (எ-று). (17)

வச்சி ரப்புயன் வாட்படை சாம்பவ
னச்ச மெய்திட லானதஞ் சேனைகள்
மெச்ச மன்றநு விற்றொடு வாளியாற்
றச்ச னின்படை தூளென வாக்கினார்.

(பொ-ரை.) வச்சிரவாகு வன்னியரும் வாளாயுதம் ஏந்திய சாம்பவ வன்னியரும், அஞ்சுதலடைந்த தமது சேனைகள் மதிக்குமாறு, நிலைபெற்ற வில்லில் தொடுத்து விட்ட அம்புகளால் நிபஞன வீரசிங்கனின் சேனைகளைத் துகளாக்கினார்கள், (எ-று). (18)

ஓர்ந்த நீயனு மோடலிர் நின்மென
சேர்ந்த வாகதம் வீசின வீணுறத்
தேர்ந்த வீரரு மன்னனைத் தேய்த்துறு
கூர்ந்த கூவிரந் தூளெனக் கோட்டினார்.

(பொ-ரை.) (அதனை) உணர்ந்த வீரசிங்கனும், (அவ் விளங்குமாரிருவரையும் பார்த்து,) ஓடாதிர் நில்லுங்கள் எனக்கர்ச்சித்து, அமைந்த அம்புகளை யதிகமாக எவி னான்; (போரில்) தேர்ச்சிபெற்ற (அவ்) வீரப்புதல்வர்கள் அவன் விட்டபாணங்களை நாசமாக்கி, (அவன்) அமர்ந்த பெரிய தேரைப் பொடிப்பொடியாக ஆக்கினர், (எ-று).

ஏறி வேறொரு தேரினி லெண்ணலான்
வீறி வாருண வாசுக வாயுவுந்
தூறி விட்டவ ராகமுஞ் சோர்வுறச்
சீறி னனுடைந் தோடின சேனையே.

(பொ-ரை.) பகைஞனை வீரசிங்கன் வேறொரு தேரில் ஏறி, வருணாஸ்திரம் வாயுவாஸ்திரமாதிய கணை களை (மேகமெனச்) சொரிந்து, அவ்வீரப்புதல்வர் இரு வரது தேகமும் சோர்வடையச்செய்து, மேலும் கோபத் தோடு போர் புரிய வன்னியர் சேனை புறங்காட்டியது.

சோக நீங்கிய நீலனுந் துன்னொன
மாக முட்டிய மன்குய வேறியே
சாக சத்தொடு சாடினன் சீயனை
வேக மெய்திய வெங்கணை யாலரோ.

(பொ-ரை.) (அச்சமயம்) மூர்ச்சை தெளிந்த நீலகண்ட வன்னியரும், ஆகாயத்தையளாவிய நிலைபெற்ற (தன்) இரதத்திலேறி, விரைவு மிக்க கொடியகணைகளால் வீரத்துடன் வீரசிங்கனை யடித்தார், (எ-று). (21)

ஒன்று பத்தது நூறென வொண்சர
மென்று தூவியப் பாதக னேறுதேர்
கன்று சாரதி கந்துக மாதிய
பொன்றச் செய்தனன் பூபதி மைந்தனே.

(பொ-ரை.) உருத்திர வன்னிய மன்னரின் புதல்வரான நீலகண்ட வன்னியர், (மேலும்,) ஒன்று பத்தாகப் பத்து நூறாக என்று வரும் ஒள்ளிய அத்திரங்களைச் சொரிந்து, பாதகனை அவ்வீரசிங்கன் ஏறிய இரதத்தையும்; கோபித்த சாரதியையும், (அவ்விரதத்தில் பூட்டிய) குதிரைகளையும் சாக-அடித்தார், (எ-று). (22)

வில்லொ டித்தவன் வீசிய தோமரம்
புல்லி தாக்கியப் புன்மையன் சேனையைத்
தல்லி தாம்பிறை யானனத் தோணியால்
கல்லி யோடவுங் கண்டன னீலனே.

(பொ-ரை.) நீலகண்ட வன்னியர் வீரசிங்கனது வில்லையொடித்து, (மேலும்) அவன் எறிந்த தோமரம் எனும் ஆயுதத்தையும் அற்பமாகும்படி அடித்து, அந்நியவனது சேனைகளையும் தூய்மையதான பிறைமுகக்கணையால் பிளந்து புறங்காட்டச்செய்து ஒட்டினார், (எ-று).

எங்கும் மாயையை யெண்ணலன் செய்தலுந்
துங்க னன்னது தோற்றிடச் செய்துபின்
புங்க மொன்றினைப் போக்கலு மன்னது
சிங்க னின்றலை தான்தடிந் திட்டதே.

(போ-ரை.) (அதன்மேல்) பகைவனான வீரசிங்கன் எங்கும் மாயையைச் செய்தலும், தூயவரான நீலகண்ட வன்னியர் அவன் செய்த மாயா காரியங்களை நாசஞ் செய்து, அதன்பின் அம்பொன்றையேவ, அது, வீரசிங் கனின் தலையை யறுத்துத் தள்ளியது, (எ-று). (24)

ஓடி னார்மிகு மொன்னல ரெஞ்சினு
ராடி யங்கதிர் மேற்கட லாழ்ந்தன
பாடி னக்கழு காதிய பண்பினால்
நீடி னார்பலர் நீலனை யேத்தினர்.

(போ-ரை.) மிகுதியாக வந்த பகைச்சேனையில் தப் பிப்பிழைத்தவர் புறங்காட்டி யோடினார்; அசைந்தாடிக் கொண்டே அழகிய கிரணச் சூரியன் மேற்குக்கடலில் ஆழ்ந்தான்; கழுகு முதலியனவெல்லாம் (தக்க உணவு கிடைத்த மகிழ்ச்சியால் குரல்விட்டுப்) பாடின; வீரம் மிகுந்த நெறியினர் நீலகண்டவன்னியரைத் துதித்தனர்.

மாச கன்றிடு மாபடை ருத்திரத்
தேச வன்னியன் றேவியை யேத்திடக்
காச ணிப்பரை வாழ்த்தக் கனிவினாற்
பாச ரைப்பதி தன்னிற் பரவினர்.

(போ-ரை.) குற்றமற்ற சிறந்த சேனைகளுடன் ஒளி யுருவினரான உருத்திரவன்னியர் உமாதேவியாரிடம் சென்று துதிக்க, பணி பல அணிந்த அப் பரசிவை அவ ருக்கு வாழ்த்துக்கூற, அன்றிரவு பாசரையில் படைக ளுடன் அன்பொடு தங்கினர், (எ-று). (26)

ஆவி நீங்கின ளாரி யென்னவா
தாவி சோர்தலை யன்னவன் றம்பியர்
கூவி நீலனைக் கொல்வழி யாமெனத்
தீவி ரத்தொடு செல்லுதி ரென்றனன்.

(போ-ரை.) (உயிர் தப்பி ஓடிவந்தவர் நடந்தது கூறக்கேட்டு,) வீரசிங்கன் இறந்தானே என்று வாதாவி சோர்வடைவதை நோக்கிய அவ்வீரசிங்கனின் (எக்கு சத்ரு, தும்புராட்சன், நீலன் என்னும் மூன்று) தம்பியரும்,(எமது அண்ணனைக்கொன்ற) அந்நீலகண்ட வன்னியனை யாங்கள் கொல்கின்றோம் என்று பெருங்கூச்சலிட, வாதாவி, (நல்லது, நீங்கள் அச்செயல் புரிய) விரைவாகச் செல்லுங்கள் என்று கூறினன், (எ-று). (27)

எல்லி நீங்குற வெண்ணியி ருந்தவவ்
வில்லி கள்களம் வீழ்தலைக் காணுமாந்
துல்லி தக்களி சூழவந் தானென
அல்லி ரிந்திட வந்தன னுதவன்.

(போ-ரை.) இரவு நீங்குங் காலத்தை யெண்ணிக் கொண்டிருந்த வில் வீரர்களான அவ்வீரசிங்கன் தம்பியர், யுத்தகளத்தில் விழுந்திறத்தலைக் காணும் தூயமகிழ்வு சூழவந்தனன் எனும்படி, இருள் நீங்க (க்கிழக்குத்திசையில்) சூரியன் உதயமானன், (எ-று). (28)

முதற்போர்ச் சருக்கம் முற்றிற்று.

உ

# இரண்டாம்போர்ச் சருக்கம்.

## எக்ஞுன் முதலானவர் வதம்.

---

### அறுசீராசிரியச் சந்த விருத்தம்.

கடலின் மிக்க வன்னியன் ககனம் வீறு டன்னெழ
வடலின் மிக்க தெவ்வரி னளவில் சேனை யெய்தின
படக வோசை மிக்கன பரிபு ழைக்கை முட்டின
கடக வீர ரும்பல கதுவு போரி லாயினர்.

(போ-ரை.) கடலினும் பரந்த உருத்திரவன்னியரின் சேனைகள் ஆண்மையுடன் (போர்க்களத்திற்கு) எழுச்சியுடன் வந்துசேர, வலிமை மிகுந்த பகைவர்களின் அளவு கடந்த சேனைகளும் அங்குவந்துசேர்ந்தன; (இருதிறத்தும் வெற்றிச்சின்னங்களான) வாத்தியவோசை அதிகரித்தது; குதிரைகளோடு குதிரைகளும் யானைகளோடு யானைகளும் (முதல்நாள்யுத்தம்போலவே ஒன்றோடொன்று) போர் தொடங்கின; கடகமணிந்த கரங்களையுடைய பலவீரர்களும் சினந்த போரில் கலந்தனர், (எ-று). ககனம்-சேனை.

தும்பு ராட்ச னீலனோ டெக்ஞ னென்னுந் தூர்த்தராம்
வெம்பு வீர சிங்கனின் வெம்ம றங்கொ டம்பிய
ரும்ப ருண்ண டுங்கிட வொண்ச ரங்க ளேவலா
லம்ப ரம்ம றைந்தன வதிபனஃத றிந்தனன்.

(போ-ரை.) வெதும்புதலுடைய வீரசிங்கனது கொடியவீரத்தைக்கொண்டதம்பியர்களான தும்புராட்சனும் நீலனுடன் எக்ஞன் என்னும் கொடியவர்கள், தேவர்களின் நெஞ்சுதிடுக்கிட ஒள்ளிய அம்புகளை எவினார்க

ளாதலால், ஆகாயம்முழுமையும் மறைந்த அதனை சேனாதிபதியான நீலகண்டவன்னியர் அறிந்தார், (எ-று). (2)

கமல யூக மானதன் ககன முய்ய வையமே
லமல நீல னுற்றெதி ரடைதற் கண்ட மூவருஞ்
சமல சீற்ற முற்றடா சமரி னில்லெ னச்சரம்
நிமலன் மீதிற் றாவலா நிகழு மன்ன தோட்டினன்.

(பொ-ரை.) குற்றமற்ற நீலகண்டவன்னியர், பதுமயூகமாக அமைந்த தனது சேனைகள் உய்யும் வண்ணம் தேரேறி, தமது எதிரில் வருதல்கண்ட அவுணர்களான அம்மூன்று அதிபர்களும், குற்றமுற்ற கோபமெய்தி, அடா! போரில் ஓடாது நில் எனக் கர்ஜித்து, நீலகண்டவன்னியர்மேல் பல அம்புகளைவிட்டனர்; அவர் தன்னை நோக்கிவந்த அக்கணைகளை, (தான்விட்ட அம்புகளால் மிக எளிதில்) அடித்து ஒழித்தார், (எ-று). (3)

குனித்த சாப முற்றெழுங் கோல்க டம்மைத் தும்பனு
னனித்த வாளி தூவி லழித்த போது நானமே
செனித்த வில்ல கங்கனோர் சிலையை யேந்தித் தெவ்வினுந்
தனித்த தேருந் தள்ளினன் றலையுஞ் சீவித் தள்ளினன்.

(பொ-ரை.) (நீலகண்டவன்னியரின்) வளைந்தவில்லிலிருந்து எழுகின்ற அம்புகளை தும்பன் எனும் அவுணன் அறிந்து, கூர்மைபொருந்திய பல அம்புகளைச் சொரிந்து (அவர் ஏந்திய) வில்லையழித்தபோது, பழுதென்பதே தோன்றுத வில்லாத கங்காபால வன்னியர், ஒருவில்லை யேந்தி (எதிர்த்து,) பகைவனுன அத் தும்பனின் வில்லையும் ஒப்பற்ற தேரையும் முறித்துத் தள்ளினார்; (அதன் பின் அவனது) தலையையும் வெட்டித் தள்ளினார், (எ-று). (4)

வந்தெ திர்ந்த யெக்ஞனை வச்சி ரப்பு யத்திறன்
முந்தி விட்ட யேவவன் மூது டற்பு தைந்தன
சிந்தி யப்பு மாரியைச் சீறி யுற்ற தெவ்வனும்
முந்து போதி லன்னவன் மூரி வில்ல றுத்தனன்

(போ-ரை.) (அதேகாலத்தில்தன்னை) வந்துஎதிர்த்த எக்ஞன்எனும் அவுணனை, வச்சிரவாகுவன்னியர் முற்பட்டு எதிர்த்துச் சொரிந்த அம்புகள், அவனது பெரிய தேகத்தில் அழுந்தின; (அதனால் பெரிதும்) சீற்றத்துடன் எதிர்த்த பகைவனான எக்ஞன், அம்புமழை சொரிந்து முற்பட்டபோது, (வச்சிரவாகுவன்னியர்) அவனது பெரிய வில்நாணியை யறுத்தார், (எ-று). (5)

வில்லி ழந்த தானவன் வியன்வி லொன்றெ டுத்துமீ
யெல்லி ணைந்த வாயிரத் தெழுப தென்னு லக்கமாச்
சொல்லி யங்கு மாகணை சொரிதல் செய்து வச்சிரக்
கல்லி யங்கு வாகுவைக் கலக்கி மூர்ச்சை யாக்கினன்

(போ-ரை.) வில்லை யிழந்த எக்ஞன், சிறந்தவில் வேறொன்றை ஏந்தி, சிறந்த ஒளிகலந்த ஆயிரத்தெழுபதுலட்சம் என்று சொல்லப்பெறும் பல கணைகளைப் பொழிந்து, மலையை யொத்த வச்சிரவாகுவன்னியரைக் கலங்கச்செய்து மூர்ச்சை யாக்கினன், (எ-று). (6)

மோதி வன்னி யன்படை யுயங்க முன்பி னேறலுந்
தீதி லாத வச்சிர னெழுந்து தேரி லேறியே
வீதி யென்ன நாரணன் வியன்ப டைத்தொ டுத்தலும்
ஆசு னவ்வி யையறுத் தகங்க ளித்த தன்னதே.

(போ-ரை.) உருத்திரவன்னியர் படைகள் கலங்க முறியடித்துக்கொண்டுமுன்னேறிச் செல்லுதலும், (இதற்குள், மூர்ச்சையடைந்திருந்த) குற்றமில்லாத வச்சிரவாகு

வன்னியர் (தெளிந்து) எழுந்து, தன் தேரில் ஏறி, இத்துடன் முடிக என்று சிறந்த நாராயணாஸ்திரத்தை விட்டதும், (அக்கணை) தீயவனான எக்ஞன் தலையை யறுத்து மகிழ்ந்தது, (எ-று). (7)

நீல னென்னு நீதமில் நிசிய னும்பன் மென்றுயர்
கால னென்ன வச்சிரக் கணக்கெ னும்பு யத்தனை
யேல மோத சாம்பவன் னிரத மோடன் னானெதிர்
சூல பாணி யென்றிடத் துளைக்க வந்து முட்டினான்.

(பொ-ரை.) (அது நோக்கிய) நீலன் என்னும் பெயருடைய நீதியில்லா நிசிசரனும், பற்களைக்கடித்து உயர்ந்த யமன் எனும்படி வச்சிரவாகுவை (எதிர்த்து) மிகவும் மோதுதலும், (அதுகண்ட) சாம்பவவன்னியர், தேரின் மேல் அமர்ந்த சிவபிரான்போல அந்நீலனின் உடலைத் துளைக்க நேர் வந்து எதிர்த்தார், (எ-று). (8)

பன்ன கைப்ப கைக்கணைப் பகைவ னேவ சாம்பவன்
றுன்ன யிந்தி ரக்கணை தொடுக்க வன்ன தேகியே
அன்ன கோலுஞ் சாபமு மழித்த சேனை யாதியா
மன்ன கச்சை யாங்கொடி மகித்த றுத்த வாமரோ

(பொ-ரை.) பகைவனான நீலன் கருடாஸ்திரத்தை விட, (அதற்குப்) பொருந்த சாம்பவ வன்னியர் இந்திராஸ்திரத்தைப் பிரயோகித்தலும், அக்கணை விரைந்து சென்று, அக்கருடக்கணையையும், அதை விட்ட வில்லையும், அவுணர்சேனைகள் முதலாக நிலைபெற்ற நீலனின் கவசத்தையும்., (தேரில் வெற்றிக்கு அறிகுறி) ஆன கொடியையும் கணக்கிட்டு அறுத்துத்தள்ளியது, (எ-று). (9)

ஆன பின்னு மன்னவ னரிப்பின் வேறொர் வில்லினின்
மான வக்கி னிப்படை விடுக்க வுக்ர சாம்பவன்

வான வாரு ணாத்திரம் மனுவி னேவிப் பின்னய
மான மாத டிப்படை மாண வீசி யார்த்தனன்

(பொ-ரை.) அதன்பின்பும் அக்நீலன் சிற்றத்துடன் வேறுமொருவில்லெடுத்து, அதனில் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்துவிட, உக்ரமிகுந்த சாம்பவ வன்னியர், அதற்குப் பொருந்த வருணாஸ்திரத்தை மந்திரத்துடன் அபிமந்திரித்து விட்டு, அதன்பின்பு இருப்புலக்கை ஆயுதமொன்றை, நீலன்மேல் பொருந்தவீசி ஆரவாரித்தார். அயமான மாதடி-பெரிய இருப்புலக்கை.

காதி கண்ட கன்றலை கடைந்து சென்ற வப்படை
யேது வென்றி யில்லையென் றிரிந்து தெவ்வ ரோடலுஞ்
சூது மிக்க தீயரைச் சினந்த போரு வந்தநல்
லாத வன்கு ணக்கடற் குளித்தற் செய்ய வண்மினன்,

(பொ-ரை.) வந்த அந்த இருப்புலக்கை, தீயவனான நீலனின் தலையை மோதியுடைத்துவிட்டுச் சென்றது; (அது நோக்கிய) பகைவர்கள், இனி நமக்கு வெற்றி இருப்பதெங்கே என்று சிதறி ஓடுதலும், சூது மிகுந்த தீமையுடைய அவுணரைச் சீறிச்செய்த போரை மகிழ்ந்து நோக்கிய சூரியன், ஸ்நாநம் செய்ய நினைத்தவன்போல் மேற்கடலில் சேர்ந்தான், (எ-று). (11)

சூரா னுற்ற வம்பரஞ் சிவந்த தன்றி மாநிலஞ்
சோரி யெங்கு மானதா லடைந்த செக்க ராயின
வீரர் பாடி தன்னையும் விழைந்தி ருந்த வவ்வீரா [வர்
கோர யெண்ணர் தானவன் கொதித்த லோர்ந்து கூறு

(பொ-ரை.) (அப்பொழுது) சூரியன் மறைந்த திசை சிவந்திருந்ததோடு, பெரிய நிலப்பரப்பு முழுதும் இரத்த வெள்ளமாக யிருந்தலால், (எங்கும்) சிவந்ததன்மை

யாயினை; சத்த வீரர்களான உருத்திரவன்னியர் படையிலுள்ளவர்கள் பாசரையை விரும்பியிருந்த அந்த இரவில், வாதாவி, (தனது இளையமாதுலர்களும் இறந்துபட்டதறிந்து) மிகுந்த கோபங்கொள்ளுதலை அவனது கோரமான (சிங்கமுகன் யானைமுகன் கழுதைமுகன் என்னும் மூன்று) மந்திரிகளும் அறிந்து சொல்லத் தொடங்கினர்.

நாளை யந்த சூரரா நரர்க ளெம்மின் போரினால்
பூளை யென்ன வீதலைப் பொறுத்தி ருந்து காணெனக்
கூளை கூறப் போக்கினான் குணக்கி னுந்தி யெல்லுமவ்
வேளை காண வுற்றன னெனவும் வந்து தோன்றினான்

(பொ-ரை.) நாளையதினம் அந்தசூரர்களான மனிதர்கள் எமது யுத்தத்தில் பூளைப் பூவைப்போல (சாய்ந்து) விழுதலை (ச்சிறிது) பொறுத்திருந்து பார் என்று சிறுமையான வார்த்தைகளைச் சொல்ல, (வாதாவியும், நல்லது அப்படியே செய்யச் செல்வீர்களாக என்று உத்தரவு கொடுத்து) அனுப்பினான்; (பின் அவ்வவுணர்களுடன் வன்னியர் அமர்செய்யும்) அச்சமயத்தில், நேரிலிருந்து பார்க்க விரும்பினான்போல, கிழக்குக் கடலில் சூரியன் உதயமானான், (எ-று). (13)

இரண்டாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

உ

# மூன்றாம் போர்ச் சருக்கம்.

## சிங்கமுகனாதியர் வதம்.

அறுசீராசிரியச் சந்தவிருத்தம்

உந்துஞ் சமரின் மூன்றா நாளுவல்
படைக ளிரண்டுமுற
முந்துங் களனூர் நீலன்றான் முகிழ்த்தான்
படையாப் புயங்கயுகம்
நந்துங் கரனுஞ் சிங்கனொடு நலித
லியற்றுங் கயமுகனும்
வந்துச் சகட யூகத்தை வகுத்துச்
சமரை வலித்தனரால்

(பெ-ரை.) (நாற்படைகளும் ஒன்றையொன்று) தள்ளிச்செய்யும் மூன்றாம் நாள் போரில், வன்மையுற்ற இருதிறப் படைகளும் கலக்க, முற்பட்ட நீலகண்ட வன்னியர் மாசுண வியூகமாகத் தன் சேனையை வகுத்தார்; (கொடுமை) மிகுந்த கழுதைமுகனும், சிங்கமுகனுடன் (பிறர்க்குத்)துன்பத்தைச் செய்யும் யானைமுகனும் (சமர்க்களம்) வந்து, (தம்சேனைகளைச்) சகட வியூகமாகச் சமைத்துப் போர் தொடங்கினர், (எ-று). (1)

வீரப் படையின் முன்னணியில் மிளிரும்
வயமா முகவன்றான்
தீரத் துடனவ் வன்னிபடை திகைக்கச்
சமரைப் புரிபோது
சூரக் கவனம் முன்னின்ற சுமித்ரப்
பெயரார் முதுவனவன்
பாரப் படைகள் கொண்டுபெரு பகைவன்
னெதிரிற் பாய்ந்திட்டான்.

(போ-ரை.) (தனது) வீரச்சேனையின் முதல் வரிசையில் நின்ற சிங்கமுகாசுரன், உருத்திரவன்னியர் படைகள் திகைப்பெய்துமாறு தைரியத்துடன் போர் செய்த காலத்தில், சூரத்தன்மையுற்ற (உருத்திரவன்னியர்) சேனைகளின் முதல் வரிசையில் நின்ற சுமித்திரர் எனும் பெயருடைய அமைச்சரான அவர், கனத்த ஆயுதங்களையேந்தி, பகைவனான சிங்கமுகாசுரனெதிரில் பாய்ந்தார்.

அவுணமந்திரிகளுடன் உருத்திரவன்னியரின் அமைச்சரான சுமித்திரர் போர் தொடங்கினர் என்க.
கவனம்-சேனை. முதுவன்-அமைச்சன். (2)

சிங்கன் வரலு மன்னவனைத் திகழு
முருத்ர னெனவெண்ணன்
புங்கம் பொழியச் சீறியவன் புரிந்த
சமரில் விடுத்தகணை
யெங்கு நிறைந்துத் துன்புசெய யிரண்டு
கணையி லவனுயிரைத்
தங்கும் புதையி னின்றகற்றித் தகவின்
வளைய முழக்கினனால்.

(போ-ரை.) சிங்கமுகாசுரனும் வந்து எதிர்க்க, விளங்கிய ருத்ரமூர்த்தியெனவந்த அமைச்சரான சுமித்திரர் (அவன்மீது) அம்பு மழை வர்ஷிக்க, (அதுகண்டு) சினங்கொண்ட அச்சிங்கமுகன் செய்த போரில் விட்ட அம்புகள் எல்லா இடங்களிலும் நிறைந்து (அவ்வருக்கும்) துன்பத்தைச்செய்ய, (சுமித்திரர்) இரண்டு கணைகளால் அச்சிங்கமுகனது உயிரை உடலினின்று நீக்கி, தகுதியொடு வெற்றிச் சங்கெடுத்து ஊதினர், (எ-று)
எண்ணன்-மந்திரி. புதை-உடல். (3)

நாக முகத்தா னெய்திவிலின் னரப்பை
யறுத்துச் சுமித்திரனைத்
தோக முகத்தா னுக்கிடலுந் துகளில்
லுழையன் குயவுந்தி

மேக முகத்தா னின்றுபல விசிகஞ்
செலுத்தி மேவலனைச்
சோக முகத்தா னாக்கியவ னுயிருஞ்
சோர வடித்திட்டான்.

(போ-ரை.) (அதுகண்ட) யானைமுகாசுரன் (விரைந்துவந்து, சிங்கமுகனைக் கொன்ற) வில்லின் நாணியையறுத்து, சுமித்திரனை வாடிய முகத்தனாம்படிச் செய்ததும், குற்றமில்லாத சுமித்திரர், தேரை அவன் எதிரில் செலுத்தி, தனது வில்லிலிருந்து பல அம்புகளையேவி, பகைவனான யானைமுகனைத் துன்பமான முகனாம்படிச் செய்து, பின் அவனது உயிரும் வீழ அடித்துக்கொன்றார். (எ-று). மேகமுகம்-கார்முகம்; வில். (4)

கோகா திபனாந் தியமுகக் கொலைசெய்
யவுணன் றனதுமுனா
நாகா திபனை வீழ்த்தியவந் நரனைச்
சினந்து கொல்வனெனா
வேகா திபவெம் பூதையினால் விழுமத்
தவரும் வையமொடு
பாகா திபனு மிற்றுவிழப் பகிரப்
பதைத்தான் பரிவினனே.

(போ-ரை.) நிலைமையான கழுதைமுகத் தலைவனான கொலை செய்வதையே தொழிலாகக் கொண்ட அசுரன், தனது முன்னவனான யானைமுகாசுரனைக் கொன்ற அந்த மனிதனை, யான் சீறிக்கொல்வேன் என்று சபதம் கூறி, விரைவுமிக்க கொடிய தனது கணைகளால் சுமித்திரனது சிறந்த வில்லும், ஏறிய இரதமும், அதனை நடத்தும் சாரதியும் முறிந்துவிழப் பிளக்க, (அதுகண்ட) சுமித்திரர் மனம் பதைத்தார், (எ-று). கோகு-கழுதை. பூதை-கணை. தவர்-வில். வையம்-தேர். (5)

ஏலா வமரின் வேறுமொரு யிரதத்
தமர்ந்து சுமித்திரனுங்
காலார் திணிதேர் வேசரியைக் கணைகள்
பலவாற் களைப்பாக்கி
மேலார் வலியார் வில்லழித்துக் கவச
மிரித்து விரைகுயவும்
பாலார் வலவன் றானும்விழ வடித்துப்
பகைவன் றனைமாய்த் தான்.

(பொ-ரை.) சுமித்திரரும் வேறு ஒரு இரதத்தில் ஏறி, சக்கரங்கள் அமைந்த வலிய தேரின்மீதுள்ள கழுதை முகாசுரனைப் போரில் எதிர்த்து, (அவனை, தானெவிய) பல அம்புகளால் களைப்படையச்செய்து, அதன்பின், நிறைந்த வன்மைபொருந்திய (அவனது) வில்லையழித்து, கவசத்தை முறித்து, விரைந்துசெல்லும் தேரையும், அதன்பால் அமர்ந்துள்ள சாரதியையும் விழஅடித்து, (பின்) பகைவனை அக்கழுதைமுகனையுங் கொன்றார்.

ஏலா-உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம்; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு, 'ஏலா அமர்' எனஎடுத்து, ஒருவரோடொருவர் மனம்பொருந்தாது செய்யும் போரெனினுமாம். திருவள்ளுவர் "கால் வல்நெடுந்தேர்" என்றார்போல, 'காலார்திணிதேர்' என்றார்; இனி இத்தொடருக்கு, வேகத்திற் காற்றையொத்த தேர் எனினுமாம். (6)

மூவர் விழலு மவ்வவுணப் படையிற்
பலரின் முடிகடமைச்
சிவல் புரியச் சூழ்வோனுந் திதியின்
மைந்தர் புறந்தந்தார்
பாவர் குருதித் தன்னுடலிற் றெறித்துப்
படுத லறிந்துகதிர்
நீவல் புரிய யெண்ணினபோல் நிமிருங்
குடபா லுற்றதுவே.

(போ-ரை.)(வந்த) மூன்று அவுணமந்திரிகள் இறந்த தும், அமைச்சரான சுமித்திரர், அந்த அசுரசேனையில் பலரது தலைகளை அறுத்துத் தள்ள, (அதனால்) திதியென்பவளின் மைந்தர்களான அசுரர்கள் (இறந்தவர்போக எஞ்சினவர்கள்) புறங்காட்டியோடினர்; (அன்று நடந்தபோரில்,) பாவிகளான அவுணர்களின் உடலிலிருந்து தெறித்த இரத்தம் தன் உடம்பெலாம் பட்டிருத்தலை அறிந்த சூரியன், (அதனைக்) கழுவ நினைத்தவனைப்போல உயர்ந்த மேற்குக்கடலை யடைந்தான். (எ-று).

சூழ்வோன் - அமைச்சன் பெயர். (7)

அற்றை யிரவின் வாதாவி யறிந்தா
னதனைச் சினமூறச்
செற்று ரழியச் செல்வனெனச் சிறுமை
யமைச்சர் பின்னிருவர்
முற்று வலியர் முன்னேகன் முறையல
செலயாம் முறையென்னப்
பற்று ரழித்தி ரென்றிட்டான் பரிதியு
முதயஞ் செய்திட்டான்.

(போ-ரை.) அன்று இரவில் அச்செய்தியை அறிந்த வாதாவி, அதிகரித்த கோபத்துடன் பகைவரைக் கொல்லயானே செல்வேன் என்று கர்ச்சித்தலை யறிந்த (நரிமுகனும் முதலைமுகனுமான) கீழ்மை பொருந்திய பின்னும் இரண்டு மந்திரிகள், (மன்னா!) முதிர்ந்த வன்மையில்லா அப்பகைவர் முன்னே நீ செல்வது தக்கதன்று; (அவர்களைக் கொல்ல) யாங்கள் செல்வதுதான் தக்கது என்று கூறுதலும், (நல்லது; அப்படியே சென்று) பகைவர்களை அழித்து வாருங்கள் என்று (வாதாவி) விடைகொடுத்தான்; (அன்று நடைபெறும் போரைக் காண விரும்பினான்போல) சூரியனும் (கீழ்த்திசைக் கடலில்) உதயமானான், (எ-று). (8)

மூன்றாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

147

# நான்காம் போர்ச் சருக்கம்.

## நரிமுகனதியர் வதம்.

எழுசீராசிரியச் சந்தவிருத்தம்.

வெம்புயவ கன்றகிலை மேருவதி ரண்டுசமை
வன்னிபடை தன்னி னதிபன்
நம்புமக ரவ்விபுக மாகதன வானிதனை
நட்பினொடு வைத்த பினரவ்
வம்பவுண மந்திரிக ளானவினை வோரிமுகன்
வன்முதலை யான முகனும்
பம்புழுக ரிஞ்சமதி யூகமத னோடுபெரு
பன்னமர்தொ டங்கி னர்களால்.

(பொ-ரை.) வலிய தோள்களாகிய பெரிய மேருமலைகள் இரண்டையுடைய உருத்திர வன்னியரின் சேனாதிபதியான நீலகண்ட வன்னியர், தனது சேனைகளை விரும்பத்தக்க மகரவியூகமாகப் பொருந்த அமைத்தபிறகு, சீற்றம் பொருந்திய நரிமுகாசுரன், வன்மைமிக்க முதலைமுகாசுரன் எனும் வம்பர்களான அவுணமந்திரிகள் இருவரும், (தங்கள் சேனைகளை) மதிக்க அடர்ந்த கிரிஞ்ச வியூகமாக அணிவகுத்து, பெரும்போர் துவக்கினர், (எ-று).

வானி-சேனை. ஓரிமுகன்-நரிமுகன். (1)

தேருதய சண்டனென நின்றபடை மீமிசைதிர்
தெவ்வரிம மென்ன யிரியத்
தாருதய மாவவுணர் சிந்துருக சாபமொடு
தானுமொரு தேரி லுறுவா

ஞொருதனி யின்றிபல தியனரைய ழித்துவரு
முத்தமசு மித்தி ரனையே
மாருதவ லிப்பகைவ ஞேரிமுகன் வாவெனவ
ளைந்துசமர் வந்து விளைத்தான்.

(போ-ரை.) தேரோடு உதித்தலையுடைய சூரியன் போல விளங்கிநின்ற சேனுதிபதியான நீலகண்ட வன்னியரின் எதிரில், பகையவுணர் படைகள் மூடுபனிபோல அகல, முன்னணிச் சேனையிலே விளங்கித் தோன்றுதலையுடைய அவுணர்களாகிய கடல் வற்றும்படி, தான் ஒரு தேரில் எதிர்த்து வந்து, ஒருவரது சகாயமும் இல்லாமல் பல் கொடிய அவுணர்களை நாசம் செய்துகொண்டே வருகின்ற உத்தமரான அந்த சுமித்திரரை, வாயுபகவானைப் போலும் வன்மையுடைய பகைவனுன நரிமுகாசுரன், (நேற்று மூன்று மந்திரிகளைக் கொன்ற உன்னைத் தான் எதிர்பார்த்தேன்; போர்-செய்வோம்) வா என்று அவரைச் சூழ்ந்துகொண்டு போர் செய்தான், (எ-று).

'தார் உதயம்' என்பதற்கு, போர்மாலையோடு எதிரிலே தோன்றும் எனினுமாம். (2)

முந்தவுண னுங்கொடிய வாயுகணை மோககணை
நாககணை யென்னு முதலா
வுந்தவுண வாகவவை தேர்பரிக ளும்வலவ
ஞேடுகொள வுத்த மனையு
மைந்துறமு நூறளவை யாயிரச ரத்தினுடல்
சில்லியென வாக்க வவனுஞ்
சிந்துபல புங்கமகி லின்னிறைய வந்தவுண
னுவ்விதனை தன்னி யதுவே.

(போ-ரை.) (அவ்வண்ணம் போரில்) முற்பட்ட நரிமுகாசுரனும், கொடுமைவாய்ந்த வாயுவாஸ்திரம் மோக

ஞஸ்திரம் நாகாஸ்திரம் என்பது முதலான பலகணைக ளைத் தூவ, அக்கணைகள் தேரையும், (அதனிற் பூட்டிய) குதிரைகளையும், சாரதியோடு உணவாகக்கொள்ள, (அதன்பின் அந்த) உத்தமரான சுமித்திரரையும், ஐந்தி னுல் பெருக்கப்பட்ட நூறென்னும் அளவையுடைய ஆயி ரமென்னும் தொகையுடைய ஐந்துலட்சம் அம்புகளால் தேகமெல்லாம் சில்லியாக்க, அவர் சிறித் தூவிய பல அம்புகள், பூமியுடன் ஆகாயமெலாம் நிறைந்துவந்து, அவு ணருன கரிமுகாசுரனின் தலையை அறுத்துத் தள்ளியது.

விண்ணவர்க ளஞ்சகனி சிஞ்சுமர னும்பெரிய
 வில்லினையெ டுத்து விரைவிற்
கண்ணிணைநெருப்பெழபகைத்துபகைவன்னெதிரிற்
 காலனென சீறி வருவோன்
வண்ணவித வுக்ரகணை கோடியென வீசிபல
 வானவர்ச காயன் படையை
யெண்ணுமதி பன்றனைசு மித்திரனை மற்றவரை
 செய்ததுய ரெண்ணு மளவோ.

(பொ-ரை.) (அன்றநோக்கி,) தேவர்கள் மிகவும் அச் சங்கொள்ளுமாறு பெரியவில்லை அதிவேகமாக எடுத்து, இருகண்களும் நெருப்புப்பொறிபறக்கப் பகைகொண்டு, பகைவரான சுமித்திரரின் எதிரில் யமன் எனச்சினந்து வந்த முதலைமுகாசுரன், உக்ரத்தன்மையான பலவித அம் புகளை கோடிக்கணக்காகச் சொரிந்து, தேவர்கள் சகாய ரான உருத்திர வன்னியரின் சேனைகளை, மதிக்கத்தக்க சேனுதிபதியை, சுமித்திரரை, மற்றுமுள்ளவரைச்செய்த துன்பங்களை அளவிட்டுக் கூற இயலுமோ, (எ-று).

சிஞ்சுமரன்-முதலைமுகன். (4)

சீறிவரு மன்னவனை யும்பிரம வத்திரம
தானுயிரை செம்மல் கொளவும்
மாறிவரு தெவ்வரினி றந்தவர்க ளன்றியுயிர்
மன்னினர்க ளோட பிரவி
யேறிவரு மென்னிரத மிம்முதுவன் காணிலரி
யின்னிரத மென்ன வறைவன்
மீறிவரு முன்மறைவ னென்றெணின னென்னகடல்
வாருணமொ ளித்த னனரோ.

(பொ-ரை.) சுமித்திரர், (அங்ஙனம்) சினந்து போர் செய்து கொண்டுவரும் முதலைமுகாசுரன் உயிரை பிர மாஸ்திரத்தால் வாங்கிவிடவும், மாறுபட்டுவந்த பகை வர் சேனையில் இறந்தவர்கள் நீங்கலாக உயிர்தப்பிய சிலர் புறங்காட்டி ஓடுதலைப் பார்த்த சூரியன், இப்போது முன்னேறிவரும் எனது தேரை அமைச்சரான இச்சுமித் திரர் கண்டால், பகைவரது தேர் என்று எண்ணி இதனை யும் உடைத்துவிடுவாராகலின், (அவர்) மீறிவருதற்கு முன்னே மறைந்துவிடுதலே நலம் என்று நினைத்தான் போல, மேற்குக்கடலில் மூழ்கி யொளித்தான், (எ-று).

அரி-சூரியனுக்கும், பகைவனுக்கும் பெயராதலை யறிக.

(5)

மந்திரிகள் வீதலுணர் மன்னவுண னின்வெகுளி
மாதிரமு ணர்ந்து டையவே
தந்திரிக ளின்றனைய ராமெழுவர் தாமடிப
ணிந்துவிடை தர்வ ரிகளைத்
சுந்திரிக ளாகவெரு வய்யுணவ ளிப்பமென
கண்டகனு மேகு கெனவு
மிந்திரியி ருஞ்சலதி யெல்லவனு மல்லகல
வுற்றனனு ளின்ப முடனே.

(போ-ரை.) தனது அமைச்சர்கள் போரில் இறந்ததை (அன்றிரவு) அறிந்த அவுணர் தலைவனான வாதாவியின் பெருங்கோபமறிந்து, சிறந்த எல்லாத்திசைகளும் (இனியென்ன நேருமோ என்று மனம்) உடையவும், (அச்சமயத்தில், இறந்த) அவ்வமைச்சர்களின் புதல்வர்களான ஏழு அவுணர்கள், வாதாவியின் கழல் வணங்கி, (எமது தந்தையரைக் கொன்ற) அப்பகைவர்களை, பெருவிருந்தாக எண்ணி கழுகு (பேயாதிய) உண்ணுமாறு செய்கின்றோம்; எங்களுக்கு விடைதாருமென்று கூற, தீயவனான வாதாவி, அங்ஙனஞ் செய்யச் செல்லுங்கள் என்று கூறுதலும், சூரியன் (அப்போரையுங் காணும்) மகிழ்வு கொண்டானென்ன இருள் நீங்கக் கிழக்குக்கடலில் உதயமானான், (எ-று).

தந்திரிகள்-மந்திரிகள் எனும் பொருட்டு. கந்திரிகள்-பெருவிருந்துகள். எருவை-கழுகு. ஐந்திரி-கிழக்கு; அது, இந்திரியென ஆயது. எழுவராசவார்-மகோதரன், நீலன், ஜம்புமாலி, நராந்தகன், மகாராட்சன், மத்தன், கசன் முதலானோர். (6)

நான்காம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

உ

# ஐந்தாம்போர்ச் சருக்கம்.

## மகோதராதியர் வதம்.

வஞ்சித்துறை.

சிவைகழற் பணிந்தன, கவையிலப் படைகளுங்
குவைபகைக் குலத்தின, ருவையிடத் தடைந்தன.

(பொ-ரை.) குற்றமில்லாத உருத்திர வன்னியாது சேனைகள் (காலைக்கடன் முடித்ததும்,) உமாதேவியாரின் திருவடியை வணங்கின; (அதேகாலத்தில்,) பகைவர்களான அவுணகுலத்தவரின் கூட்டம் (போர்செய்தற்கு) அவ்விடத்தை யடைந்தன, (எ-று). (1)

ஐந்தெனுந் திகத்தினின், மைந்துறும் மணிக்களன்
இந்துவென் வியூகமா, முந்துறத் தெதிர்ந்தனன்.

(பொ-ரை.) (போர்துவக்கி) ஐந்து என்னும் அந்நாளில், வலிமையுற்ற நீலகண்ட வன்னியர், அர்த்தசந்திர வியூகமாக அன்று அமைந்த தன் சேனைகளுடன் முற்பட்டு, (பகைவரை) எதிர்த்தார், (எ-று). (2)

மகோதரப் பெயரின, னகோரபோர் விளைத்தலுஞ்
சுகோதயக் களத்திறை, ககோரமா வழித்தனன்.

(பொ-ரை.) மகோதரன் எனும் பெயருடைய அவுணன் கடுமையான யுத்தஞ்செய்தலும், நீலகண்டவன்னியர், (அவனை) மிகுந்த கோரமாகக் கொன்றார், (எ-று).

நீலனை மணிக்களன், வேலையின் முழுத்தவக்
காலையின் மிடற்சிரு, காலமா லிவந்தனன்.

(பொ-ரை.) (அதன்பின் வந்து எதிர்த்த) நீலன் என்னும் அவுணனை, நீலகண்டவன்னியர் (அம்புகளால்) நடுக்

கடலின் அமிழ்த்தலும், அச்சமயம், வலிமைமிக்க ஜம்பு மாலியெனும் அவுணன் (எதிர்த்து) வந்தான், (எ-று).

சிருகாலமாலி-சம்புமாலி; சிருகாலன்-நரி. (4)

வயிரவொண் புயத்தனல், வயிரியை யழித்தலுங்
குயிறுமந் நராந்தக, னெயிறுதின் றெதிர்ந்தனன்.

(போ-ரை.) ஒள்ளிய வச்சிரவாகு வன்னியர், (எதிர்த்துவந்த) பகைவனான அச்சம்புமாலியை நாசம் செய்தலும், (மனிதர்களைக் கொல்லும் யமன் என்று) சொல்லப்பட்ட அந்த நராந்தகன் எனும் அவுணன், பற்களை (நற நறவென்று) கடித்துக்கொண்டு வந்து எதிர்த்தான். (5)

கண்டமென்னுங் கோடரி, கொண்டுகண்ட மாக்கினன்
கண்டகத்துத் தியனை, மண்டுவச்சி ரப்புயன்.

(போ-ரை.) முன்னைப்போல் பிறர்க்குக் கொடுமை செய்யும் தீயவனான நராந்தகனை, அடர்ந்த வச்சிரவாகு வன்னியர், கண்டம் என்னும் பேருடைய கோடரியினால் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றார், (எ-று). (6)

அன்னபின்ம ராட்சனும், மன்னசாம்ப வன்னியன்
றன்னிருப்பு லக்கையாற், சின்னபின்ன மாக்கினன்.

(போ-ரை.) அதன்பின் மகாராட்சன் வந்தெதிர்க்க, (அவனை) சாம்பவவன்னியர் அடர்ந்த இருப்புலக்கையால் (அடித்துச்) சின்னபின்னஞ் செய்தார், (எ-று). (7)

அங்கெதிர்ந்த மத்தனை, கங்கபால வன்னியன்
றங்குமுவ்வி தள்ளிபின், சிங்கநாதஞ் செய்தனன்.

(போ-ரை.) (பிறகு) அவ்விடத்தில் எதிர்த்துவந்த மத்தன் எனும் அவுணனை, கங்காபாலவன்னியர், (போரில், அவனது உடலில்) தங்கிய தலையை வெட்டி வீழ்த்திய பிறகு, சிங்ககர்ச்சனை செய்தார், (எ-று). (8)

பசுபதிப்பெ ரண்ணலுங், கசனெனும்பெ ராதனை
முசலமென்னு முட்டியா, லசலமென்ன வீழ்த்தினான்.

(போ-ரை.) பசுபதிவன்னியர், (தன்னையெதிர்த்த) கசன் எனும்பெயருடைய தீயனை, முசலமென்னும் ஆயுதத் தால் கொன்று, (அவனை) மலைபோலக் கீழே தள்ளினார்.

நட்பமிக்க வானவர், புட்பமாரி தூவினா
ரொட்பமேலை ஞாயிறுந், திட்பவேலை சார்ந்தனன்.

(போ-ரை.) நுண்ணறிவு மிகுந்த தேவர்கள், (இவ் வெற்றி கண்டு) மலர்மாரி பொழிந்தார்கள்; ஒளி நிறைந்த சூரியனும், திண்மைவாய்ந்த மேற்குக்கடலை யடைந்த னன், (எ-று). (10)

மாசகன்ற வன்னியர், பாசரைக்க ணெய்தினா
ராசடைந்த மன்முனே, நீசரோதி னாரிதே.

(போ-ரை.) குற்றமற்ற வன்னியர், படைகளுடன் பாசறைசென்று சேர்ந்தனர்; குற்றமுற்ற வாதாவியின் எதிரில் நீசரான அவுணர்கள் (ஓடி)நடந்தது கூறினர். (11)

அன்னபாவி சீறினான், மன்னனை சென்றுயான்
றன்னலாரைக் கொல்வனா, லென்னவோதி னானரோ.

(போ-ரை.) (விஷய முணர்ந்த) பாதகனான அந்த வாதாவி, பெருஞ்சினங் கொண்டவனாய், யான் நாளைத் தினம் பொருந்தச் சென்று, நமது பகைவர்களை நாசஞ் செய்வேன் என்று கர்ச்சித்தான், (எ-று). (12)

எண்ணலா னடுங்குபோர், கண்ணினோக்க வெண்ணியே
விண்மணிக்கு ணக்கினி, னண்ணிவந்த தென்பவே.

(போ-ரை.) பகைவனான வாதாவி நடுங்கும்படி உருத் திர வன்னியர் செய்யும் யுத்தத்தை, (தனது) கண்களால் காண நினைத்தான்போல, சூரியன் கிழக்குக் கடலில் உதயமானான், (எ-று). (13)

ஐந்தாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

# ஆறும்போர்ச் சருக்கம்.

## வாதாவி யுத்தம்.

### அறுசீராசிரியச் சந்தவிருத்தம்.

நஞ்சமெ னுந்திதி மைந்தர்க
ளுக்கிறை நமகண் டப்பொருநன்
வஞ்சமு டித்திட முந்துறு
மன்னெரி சித்தெம சித்துமுற
விஞ்சிய வைஞ்னூ றென்றிடு
வெள்ளமெ னும்படை சூழ்தரலும்
பஞ்சக திப்பெரு முக்கிர
பற்பரி யாங்குய வேறினனே.

(பொ-ரை.) திதியின் புதல்வர்களான விஷம் எனத் தக்க அவுணர்களுக்கு அதிபனான வாதாவி, காலதண்டன் எனும் சேனாதிபதி, வஞ்சத்தை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டு நிலைத்த அக்கினிசித்து, எமசித்து முதலியவரோடு அதிகரித்த ஐஞ்னூறு வெள்ளம் சேனைகள் தன்னைச் சூழ்ந்துவர, ஐந்துகதியுடன் பெரிய உக்கிரத் தன்மை வாய்ந்த பல குதிரைகள் பூட்டிய தேரில் ஏறினான், (எ-று). (1)

அண்டக டாகமி டிந்ததெ
னப்பெரு மவ்விர தச்செலவால்
மண்டுசி லம்பெழ வானவர்
மாழ்கினர் மண்மழை சோரிமழை

கொண்டிட வத்திகள் வீழ்தர
குக்கலி னோலமு மூளனுளை
யுண்டத னைம்மதி யாதிர
தஞ்சம ருன்கள மோட்டினனே.

(போ-ரை.) அண்டமுகடு இடிந்தது எனும்படி பெரிய அவ் இரதஞ் செல்லுதலால், அதிகரித்த ஓசை யெழுதலையறிந்து, தேவர்களெல்லாம் கலங்கினர்; (அப்போது) மண்மாரி, இரத்தமழை யாதியபொழிய, (அதனுடன்) எலும்புகள் விழ, நாய் ஓலமிட்டழுதலும், நரியின் ஊளையும் நேர்ந்தது; வாதாவி அவ்வபசகுனத்தையும் கவனிக்காமல், தன் இரதத்தை, போரையெண்ணிப் புறப்பட்ட யுத்தபூமிக்குச் செலுத்தினான், (எ-று). ஊளன்-நரி.

பூழியெ ழுந்துயர் வானம
றைத்திட பூதர வரியுறலு
மூழியெ ழுந்தது வோவென
வுன்னிய வுத்தம வன்னிபடை
யாழியெ ழுந்தது வென்றிட
வண்ணலை யெய்திட லுஞ் சிலைவாய்
வாழியெ ழுந்தபி னித்துக
ளென்னென வாளைமயு ரைத்திடுவாள்.

(போ-ரை.) மண்துகள் மிக்கெழுந்து, உயர்ந்த ஆகாயம் முழுதும் மறைந்துபோம்படி, மலைபோலும் தேர் (யுத்தகளம் நோக்கி) வருதலும், (அதைநோக்கி,) ஊழிக் காலந்தான் நேர்ந்ததுவோ என்று எண்ணிய உத்தமமான வன்னியர் சேனைகள், சமுத்திரமே கிளர்ந்தது போலச் சென்று உருத்திரவன்னியரை யடைதலும், (அவர் எதிரில் வீற்றிருந்த) உமாதேவியாரின் வாயிலிருந்து தமக்கு ஆசிமொழி வந்தபின், (உருத்திரவன்னியர்

தேவியை நமஸ்கரித்து,) பெருந்துகள் இவ்வண்ணம் எழுந்ததற்குக் காரணம் யாதெனக்கேட்க, தேவியார் (பின்வருமாறு) கூறுவார், (எ-று).

பூதரம்-மலை. அரி-தேர். சிவை, வாமை-உமையின் பெயர். (3)

வருபவன் வாதா விப்பெய
ரானவன் மாயா விக்குயவில்
பொருதிட வுற்றன னென்றனை
கூறிட புண்ணிய வன்னியனுங்
கருதிசி வைக்கழ லேத்திய
பின்னுறு கண்டக னின்னெதிரே
விருதரொ டுஞ்செல நீலனு
மகரவி யூகம் விளைத்தனனே.

(பொ-ரை.) (இம்மண் துகளெழ) வருகின்றவன் வாதாவியென்னும் பெயருடைய அவுணர் தலைவன்; மாயாவியென்னும் இரதத்தில் போர் செய்ய வந்தான் என்று அன்னையார் கூற, (உடனே) புண்ணியத்தின் வடிவான உருத்திரவன்னியரும், உமாதேவியின் திருவடிகளைத் தியானித்துத் துதித்த பிறகு, வருகின்ற அத்தீயவன் எதிரிலே போர்வீரர்களுடன் செல்ல, நீலகண்ட வன்னியர் (தன்சேனைகளை) மகரவியூகமாக அணிவகுத்தார், (எ-று). (4)

அங்கரி யெய்திய பின்சம
கண்டக வப்படை யாதிபனுஞ்
சங்கக ரிஞ்சவி யூகம
தாகனி தானெதிர் வுற்றிடலும்

பொங்கிய வன்னிய னின்படை
போதுறு மப்படை தனைமோதத்
தங்கிய தந்திர நாயக
ருஞ்சமர் தம்மில் விளைத்தனரால்.

(பொ-ரை.) (வாதாவியின்) தேர் அங்குவந்து சேர்ந்த பிறகு, அந்த அவுணசேனாதிபதியான காலதண்டனும், தன் சேனைத்தொகுதியை பெரிய கரிஞ்ச வ்யூகமாகச் செய்து, தான் விரைந்து எதிர்த்தபோது, அதிகரித்த உருத்திரவன்னியரின் சேனைகள் புறப்பட்டு வந்த அவ்வவுணர் சேனைகளை மோதியடிக்க, (இருதிறத்திலும்) சேனாதிபதிகளாகத் தங்கிய நீலகண்டவன்னியரும் காலதண்டனும் தங்களுக்குள் போர் தொடங்கினர்.

காலனை தண்டனை செய்திடு
காதக னைக்கள நீலனெடு
மோவிட வம்புபு தைத்தவ
னின்னுயி ரோட்டிட வும்படையின்
சாலமொ டும்மெம சித்துற
சாடின னல்பெரு மூர்ச்சையுற
வாவிநி னுற்றசு மித்திர
னாகிய வண்மையு றம்பெரியோன்.

(பொ-ரை.) நீலகண்டவன்னியர், (ஒருகாலத்தில்) யமனைத் தண்டித்த தீயனான காலதண்டனை, பெருங்குரல் விட்டுக் கதறும்படி (உடலெல்லாம்) அம்புகளைப் பதித்து, (பின்) அவனுடைய உயிரை நீக்குதலும், (அதனைப் பார்த்து,) சேனைப் பெருக்குடன் எமசித்து எதிர்த்துவர, தூய்மையுடன் அங்குவந்தெதிர்த்த வண்மை நிரம்பிய பெரியவரான சுமித்திரனெனும் அமைச்சர், அவ் எம

சிந்துவை (பாணங்களைச் சொரிந்து) பெருமூர்ச்சை யடையும்படி செய்தார், (எ-று). (6)

அக்கினி சித்தவு னன்றனை
தாம்படை தன்னைய தஞ்செய்தே
மிக்குறு பாசுப தப்பெய
ரன்னுறு மேதகு தேர்வீழ்த்த
வக்கணம் வேறொரு கூவிர
மேறின னந்தனு விற்பொழியு
முக்கிர வாளியி ஞலவ
ஞேடவு டைத்தன ஞெண்சிலையே.

(போ-ரை.) (மற்றொரு பக்கத்தில்) அக்கினிசித்தூ என்னும் அவுணன், தான்விடும் அத்திரங்களை யெல்லாம் நாசஞ்செய்துகொண்டு, தன்னை எதிர்த்துவரும் பாசுபத வன்னியர் ஏறிவரும் தேரை, (சுக்கல் சுக்கலாக உடைத்துத்) தள்ளுதலும், அதே நேரத்தில் அவர் வேறொரு தேரிலேறி, (தனது) அழகிய வில்லினிடத்திலிருந்து சொரிந்த உக்கிரமான கணைகளால், ஒள்ளிய வில்லை யொடித்து அவனை(ப் புறங்காட்டி) ஓட்டினார், (எ-று).

மாலுயிர் வையம துற்றிடு
வாதா விப்பெய ரானவனுங்
கோலினை வீசிய சாபமொ
டுஞ்சொரி கொண்டலெ னக்கறுவி
மேலெழு கூவிர மத்திக
ளும்பரி வீரியர் மெய்யுருவிக்
காலுள றற்றெழு புன்சரு
கென்னவு டைத்தான் கையறவே.

(போ-ரை.) (அதையறிந்த) மாயாவித்தேரில் வந்த வாதாவி யென்னும் பெயருடைய அவுணர் தலைவன்,

அம்புகளைச் சிந்துகின்ற வில்லுடன், மழைபொழியும் மேகமெனக் கர்ச்சித்து, மேலும் மேலும் (தன்னை எதிர்த்து) எழுகின்ற தேர்வீரர்கள், யானைவீரர்கள், குதிரைவீரர்கள், காலாள் வீரர்களாதியோரின் தேகத்தில் பட்டு உருவும்படி அம்புகளை விட்டு, மாருதக் காற்றால் பறந்தெழும் புல்லிய சருகெனும்படிப் புறங்காட்டியோட (அவர்களை) அடித்தான், (எ-று).

மாலுயிர்வையம்-மாயாவித்தேர். (8)

பட்டவ ரெண்ணில வாயிர ராக
பட்டார்ம லுயிர்ப்பொடுபின்
னிட்டவ ரெண்ணில வாயிர ருட்கி
யிரிந்துயர் வாந்திறலுங்
கெட்டவ ரெண்ணில வாயிரர் கேடில
ராககி ளர்ந்தசமர்
விட்டவ ரெண்ணில வாயிரர் வாதா
பியவன் விடுங்கணையால்.

(பொ-ரை.) வாதாவியென்பவன் ஏவிய அம்புகளால் இறந்தவர் அளவிறந்த ஆயிரம்பேர்; இறவாமல் பெருமூச்சோடு புறங்காட்டி யோடியவர் அளவிறந்த ஆயிரம் பேர்; நடுங்கிச் சிதைவுபட்டு மேலான ஆற்றல் அழிந்தவர்கள் அளவிறந்த ஆயிரம்பேர்; கெடுதலொன்றும் அடையாமலேயே, (அச்சங் காரணமாக, இனி எப்போதும் போர் புரிவதே யில்லை யென்று) போர்த்தொழிலைக் கைவிட்டவர் அளவிறந்த ஆயிரம் பேர்கள், (எ-று). (9)

ஓடிய சேனையு ருத்திர வன்னிய
வொண்மையன் சார்பிலுற
நீடிய சிற்றமு ளங்கொளு கித்திய
வண்ணலு மிந்திரனுற்

கூடிய கூவிர மேறியி ருங்கள
　　முற்றுறு கூடலரைச்
சாடிய டித்திடு போர்நிலே யாமது
　　சாற்றிட லாமளவோ.

(பொ-ரை.) (வாதாவிக்கு) பயந்து ஓடிய சேனைகள், தூய்மை வாய்ந்த உருத்திர வன்னியர்தம் பக்கத்தில் போய்ச்சேர, என்றும் அழிவில்லாத அப்பெருந்தகையும் (விஷய முணர்ந்து) மிக்க கோபத்துடன், இந்திரனால் வந்து சேர்ந்த ஒரு இரதத்தில் அமர்ந்து, வலிமிக்க யுத்த களத்தை யடைந்து, பகைவரை மோதி யழிக்கும் அச் சமரின் நிலே யாம் அளவிட்டுக் கூறுந்தரத்ததோ, (எ-று).

வாதாவி மாயாவி ரதத்தில் வருவதைப் பார்த்த இந்திரன், எத்தகைய ஆயுதத்தாலும் அழிதலில்லா இரத மொன்றை உருத்திரவன்னியர்க்கு அனுப்பிவைத்தான் என்று முதனூல் கூறுதலின், 'இந்திரனல் கூடிய கூவிரம்' என்றார். (10)

தேசமர் பூதிகை யெம்பிறை தீரமொ
　　டேமோ தும்போது
மூசின யின்னவ ளேக்கிழி மோதென
　　மூளுறு சீற்றமொடு
பேசறு திண்டிற லெய்திய பேணல
　　ரேறிவ ரும்பிடார்
தூசிய ணிப்படை தூசிய ணிப்படை
　　யாயிட செய்தனனல்.

(பொ-ரை.) ஒளியுருவமான திருமேனியை யுடைய உருத்திரவன்னியர், தைரியத்துடன் (அவுணர்களை) மோதிச் சமர்செய்தபோது, சுற்றிமொய்த்துக்கொண்டு,

இவனை மோதுங்கள்; இரண்டாய்க் கிழியுங்கள் என்று மூண்டெழுந்த கோபத்துடன் பேசுகின்ற மிகுந்த வன்மை படைத்த அப் பகையவுணர்கள் ஏறிவரும் பெருமை பொருந்திய குதிரைப்படைகளெல்லாம், வரிசை வரிசையான புழுதிக்கூட்டமே ஆகும்படிச் செய்தனர், (எ-று).

துரசி-குதிரையெனவும், தூசு எனவும் இருபொருள் பயத்தலை யீண்டறிக. (11)

நீடுதெ யித்திய ரின்பகை யாகிநி
 லைத்திடு நீளரியா
யோடுற நம்மவ ரைக்கொலை செய்திடு
 மொன்னல வன்னியனை
வீடுற மோதுதி ரென்னசெ யிர்ப்பொடு
 வீணின ரேவுதலுங்
கூடிய மாகரி கூடிய மாகரி
 யாகவொ ளுத்தினனால்.

(பொ-ரை.) மிகுந்த அவுணர்களின் பகைவனாய், நிலைக்கப்பெற்ற பெரிய சிங்கமாக இருந்து, நம்மவரைப் புறங்காட்டும்படி கொலை செய்யும் பகைவனை இந்த உருத்திரவன்னியன் நாசமாகுமாறு மோதுங்கள் என்று கூறி, சீற்றத்துடன் வீணர்களான அவுணர்கள் ஏவவந்து எதிர்த்த பெரிய யானைப் படைகளெல்லாம், குவிந்த பெரிய கரிக்கூட்டங்களாகுமாறு (அக்கினியாஸ்திரத்தால்) எரித்தார், (எ-று). (12)

மாழைய ணிப்பணி பற்பல சூடிய
 வன்னிய னையிவனே
பீழைபு ரிந்தெம கேளிர ழித்தன
 னென்றெதிர் பேணலர்க

ஆருழண ராதுவி டுத்துசி லீமுக
மோதமெ னப்பெருகுங்
கூழைய ணிப்படை கூழைய ணிப்படை
யாகரு வித்தனனால்.

(பொ-ரை.) பொன்னணி பல அணிந்த உருத்திர வன்னியன் எனப்படும் இவன்தானோ, எமதுஉறவினரைத் துன்பம் விளைத்துக் கொன்றவன் என்று கேட்டுக்கொண்டே, (தமது) விதியிருந்த வண்ணம் அறியாராய், அம்புகளைச் சொரிந்துகொண்டே ஊற்று நிறைந்த கடலெனப் பெருகி எதிர்த்த பகைவர்களின் கூழையெனும் பின்னணிப் படைகள் அனைத்தும், கூழையெனும் சேறென ஆகும்படி குவித்தார், உருத்திர வன்னியர், (எ-று).

கூழை-படைவகுப்பும், சேறும் என இருபொருள் தருதலை நிகண்டிற் காண்க. (13)

வந்தெதிர் முட்டின னன்னது ணர்ந்திடு
வாதா விப்பெயரான்
சிந்துவ ரத்தைவ லித்துசி லீமுக
மெங்குஞ் சிந்தியிறை
யுந்திய பத்திர மத்தனை யுஞ்சிதை
வுற்றிட விட்டிடலும்
முந்திய வன்னியு ருத்திர மொய்கணை
முன்னிவி டுத்தனனே.

(பொ-ரை.) அதையறிந்த வாதாவி உருத்திர வன்னியரின் நேர்வந்து எதிர்த்து, வில்லை வளைத்து, அவர் பொழிந்த அம்புகள் யாவும் சிதைவாக, எல்லாவிடங்களிலும் (பரவும்படி) அம்புகளைச் சொரிதலும், முற்பட்ட உருத்திர வன்னியர், (அவன் விட்ட கணைகளனைத்தையும் அழிக்க) நினைத்து, அடர்ந்த கணைகள் பலவிட்டார்.

சிந்துவாரம்-வில்; அது, சிந்துவரமென்றாயது. சிலீமுகம், பத்திரம் இரண்டும்-அம்பு எனும் பொருளன. (14)

அக்கணை யாயிர மாகவ டைந்தெதி
ரம்பையி ரித்தபினர்
வக்கிர புத்திய னுற்றிடு வாம்பரி
சாரதி வையமொடு
மிக்கச ராசன மாதிய ழித்தது
மின்னென வேறொருதேர்
திக்குந டுங்கிட யேறிநி கழ்த்தினன்
சிங்கக ருச்சனையே.

(பொரை.) (உருத்திர வன்னியர் எவிய) அந்த அம்புகள் ஆயிரக்கணக்காகப் பெருகி, எதிர்த்துவரும் (வாதாவியின்) அம்புகளைச் சிதைவித்த பிறகு, கோணல் புத்தியையுடைய வாதாவியின் பெரிய வில்லையும், தேரையும், (அதனில் அமைந்த) குதிரைகளையும், பாகனையும் அழிவுபடுத்தியது; (அதன்பின் வாதாவி,) மின்னலென அதிவிரைவில் வேறொரு தேரில் ஏறி, திசைகளனைத்தும் நடுங்கும்படி சிங்கநாதஞ் செய்தான். சராசனம்-வில். (15)

துன்னிய வாசுக மெண்ணில தூவிவி
யோமம றைத்துமிகு
வன்னிய ரின்படை கால்கர மொள்ளுயிர்
வாங்கிக யத்தொகுதி
பன்னிய கொய்யுளை யாதிக ளேவர
பாதப மாக்கிமதி
மன்னிய கூவிர மெத்தனை யோபல
மாகற வீசினனே.

(போ-ரை.) (அதன்பின் வாதாவி,) அடர்ந்த எண்ணிலா அம்புகளை ஆகாசம் முழுதும் மறைய இறைத்து, மிகுந்த வன்னியரின் சேனைகளில் பலரை, கால்வேறு கைவேறாகச் செய்தும், ஒள்ளிய உயிரை நீக்கியும், யானைப் படைகள், (சிறப்பித்துச்) சொல்லப்பெறும் குதிரைப் படைகளாதியவற்றைக் கொன்றும், (அவைகளைப்) பிண மலைபோலக் குவித்து, மதிக்கும் தன்மைபொருந்திய அளவிறந்த பல இரதங்கள் (தூகள் தூகளாகிப்) பழுதுபட அடித்தான், (எ-று). வியோமம்-ஆகாயம்.

கயம்-யானை. கொய்யுளை-குதிரை. களேவரம்-பிணம். பாதபம்-ஈண்டுமலையெனும் பொருளது. (16)

தீயவ னின்கணை செய்திடு தீமையை
செம்மலு ணர்ந்துசிவ
நேயவ ருக்கணை விட்டிட வன்னது
நீளும வன்கணைகள்
மாயவ டித்தவ னின்றனு தேரொடு
மாபர மாதியெலாம்
வீயவ ழித்தது காதக னுந்தரை
நின்று விளம்பிடுவான்.

(போ-ரை.) தீயவனான வாதாவியின் அம்புகள் செய்த தீங்கினை உருத்திர வன்னியர் அறிந்து, சிவாஸ்திரப் பிரயோகம் செய்ய, அது, பெருகிவந்த வாதாவியின் அம்புகள் யாவற்றையும் நாசஞ்செய்து, (அதனுடன்) அவனது வில், கவசம், இரதம் முதலியவற்றை அழித்தது; (ஆதலின்,) துன்மார்க்கனான அவ் அவுணர் தலைவன் பாதசாரியாய் நிலத்தின்மேல் நின்று, (உருத்திர வன்னியரை நோக்கிப்) பின்வருமாறு கூறுவான், (எ-று).

மாபரம்-கவசம். (17)

தேக்கிய சீருடன் மிக்கவ ரத்தொடு
தெவ்வட லாமிடலும்
வீக்கமு றும்படை நான்முக னாதியர்
வந்துப ணிந்திடுமென்
றூக்கமு ணர்ந்திலை வந்துச மர்க்கள
மண்மினை நீசிறுவ
னூக்கமொ டும்மெதிர் வேனெனி னின்னுயி
ரோடிடு மோடென்றான்.

:(பொ-ரை.) மிகுந்த ஒள்ளிய செல்வத்துடன், மிகுந்த வரங்களொடு பகைவர்களை யழிக்கும் வன்மையும், அதிகரித்த சேனைகளையும், பிரமனாதிய தேவர்கள் வந்துவணங்கும் எனது மேன்மையையும் அறிந்தாயில்லை; (என்னுடன்) போர்க்களம் வந்து சேர்ந்தாய்: (மேலும்) நீ வயதிலும் சிறுவன்: (யானோ) ஊக்கத்துடன் போர்செய்வேனாயின், (வீணே) நினது உயிர் (உடலைவிட்டு) ஓடிப்போய் விடும்: (ஆகவின்,) (எனதெதிர் நில்லாமல்) ஓடிப்போய் விடு என்று கூறினன், (எ-று). (18)

ஆதனு ரைத்திடு மம்மொழி யத்தன
நிந்துமு கிழ்த்துநகை
போதனை கேளினு நியவ புங்கவ
ரைச்சிறை விட்டிலையேல்
மோதிமு டிச்சிதை வாகவ டித்திட
முன்னவ னேவினனால்
வீதலை யெய்துமு னெம்முரை முன்னென
வேநல னோதினனே.

(பொ-ரை.) கீழ்மகனான வாதாவி கூறிய அச்சொற்களை, இறைவரான உருத்திர வன்னியர் கேட்டுப் புன்ன

கைகொண்டு, (அவனை நோக்கி,) தீயவனே! (யாம்கூறும்) இத்தருமோபதேசத்தைக் கேள்; தேவர்களைச் சிறையி லிருந்து விடுதலைசெய்யாயின், உனது தலை சிதையுமாறு மோதியடித்துக் கொல்லும்படி முதற்கடவுளான சிவபிரான் எம்மையனுப்பினார். நீ இறத்தலை யெய்துதற்கு முன்னே, எமது இவ்வார்த்தையைச் சிந்திப்பாயாக என்று, அவன் நலத்தையடையும் இம்மொழிகளைக் கூறினார், (எ-று).

எனவே, தேவர்களைச் சிறைவிட்டாயின், வாதாவி உய்யலாம் என்பது கருத்து. (19)

அள்ளிலை வெம்படை யவ்வரி யன்னதை
யுன்னில னம்புகளால்
வள்ளல மர்ந்திடு வையம றைத்துறு
மாயமு தற்கதிரந்
துள்ளவி டுத்துவி னத்தொடு சேனையை
சோகமு றுத்தவனைக்
கொள்ளைய டித்திட யேவின னிந்திர
சோவினை யெப்பெருமான்.

(பொ-ரை.) கூர்மை பொருந்திய அச்சவடிவான வெவ்விய அத்திரங்களையுடைய பகைவனான அவ்வாதாவி, (உருத்திரவன்னிய ருரைத்த) அதனை மதியாது சினந்து, வள்ளலான அவர் எழுந்தருளிய தேரை, பல அம்புகளால் (கண்ணுக்குத் தெரியாதபடி) மறைத்து, (அதன் பின்,) மாயை முதலான அம்புகளைத் துள்ளிவரும்படி விடுக்க, அவ்வத்திரங்கள் (வன்னியர்) படைமுழுதும் சோகமுறச்செய்ய, (அதனையறிந்த) எமது பெருமான், அம்மாயாத்திரமாதிய அம்புகளைக் கொள்ளை கொள்ளுமாறு இந்திராஸ்திரத்தைப் பிரயோகித்தார், (எ-அ). (20

கூர்த்திடு மக்கணை யன்றியும் பின்சிவ
கோலினை விட்டிடலும்
நீர்த்தத ழன்றெழு மாயையை நீக்கிய
னன்கர வெஃகமெலா
மீர்த்தவ னின்னுட லெங்குநு ழைந்தழி
னெண்ணில சில்லிசெய
வேர்த்தவ னுஞ்செய லின்றியி ருந்திட
விமலனு ரைத்திடுவான்.

(பொ-ரை.) (உருத்திர வன்னியர்) கூர்மை பொருந்திய அந்த இந்திராஸ்திரமேயல்லாமல், பின்னும் சிவாஸ்திரமொன்றை யேவுதலும், நீர்மையுடையதான அக்கணை சினந்து, எங்கும் பரவிய மாயையை அகற்றி, அவ்வாதாவியின் கரத்திலுள்ள ஆயுதங்கள் யாவற்றையும் பறித்து, பிறகு அவனுடைய தேகம் முழுதும் நுழைந்து அளவிறந்த துவாரம் உண்டாக்க, (அதனால் உடல் முழுதும்) வியர்த்தவனை அவனும், யாதொன்றும்செய்ய இயலாமல் நிராயுதபாணியாய் இருத்தலே, மலரகிதரான உருத்திர வன்னியர் பார்த்து, (பின்வருமாறு) கூறுவார், (எ-று).

துன்றமர் செய்திட நீவரு போதுறு
தூரிய வீரமெலாங்
கன்றின கண்டனை செய்துன காதகம்
வீயவி டுத்தினி
நன்றினி வானவ ரைச்சிறை விட்டிட
லல்லது நாடமரே
லின்றினி சென்றுயி ருன்னையி னெய்துதி
யென்றன னெம்மிறையே.

(பொ-ரை.) (வாதாவியே! இன்று,) அடர்ந்தபோர் செய்யநீவந்தபோது பாய்ந்த வீரம் அனைத்தும் பழுது

பட்டதைப் பார்த்தனே; இனிமேலாயினும் (இதுவரை) செய்துள்ள தீங்குகள் முழுதும் விடுவாயாக; நல்லது: இனி தேவர்களின் சிறையை நீக்குவாயாக; அல்லது போர்செய்யத்தெளின், இன்று (நிராயுதபாணியாகவும், துணையின்றித் தனியாகவும் இருக்கின்றாயாகலின், திரும்பிச் சென்று,) இனி, போர்செய்ய (ஆயுதங்களுடனும் படைகளுடனும்) நாளை வருவாயாக என்று உருத்திர வன்னியர் கூறினார், (எ-று). (22)

வானவர் மாமலர் சிந்திட வும்பெரு
வஞ்சிமி லைந்தயிறை
மானவர் சூழ்தர பாசரை மன்னிட
மாதகு வர்க்கிறையோன்
மானமொ டும்புதி யெய்ததி வாகரன்
மன்னமர் கண்டுவகை
யானபெ ருங்கட லுற்றிடு நட்பென
மேற்கட லாயினனே.

(பொ-ரை.) தேவர்கள் மலர்மாரி பொழியும்படி பெருமைவாய்ந்த வஞ்சிமாலை சூடிய உருத்திரவன்னியர், (மயக்க நீங்கிய) படைவீரர் சூழ்ந்துவரப் பாசறையடைதலும், அதிகரித்த அவுணரது தலைவனை வாதாவி, (நான் அவ்வன்னிய வீரரிடத்து இளைக்க நேர்ந்ததே என்று) நாணங்கொண்டு தனது அரண்மனையை யடைதலும், நேர்ந்த இந்த அருமையான போரைக்கண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருந்த சூரியன், (அற்றைப்போர் முடிந்ததும், வேறு எங்கும் தங்கமனமின்றி, கடல் எனும் பெயரளவில் மகிழ்ச்சிக்கடலுக்கும் இக்கடலுக்கும்) நட்பு என எண்ணினன்போல, மேற்குக்கடலை யடைந்து குளித்தான், (எ-று). (23)

அற்றையி னீங்கல வாமவ மானமொ
டண்மிய முன்னெதிரே
பிற்றையி ரும்பக லன்னவ ரைச்சிறை
பேணுவன் காண்டியென
மற்றைய னுமின தாவியு ரைத்திட
மன்னது செய்யெனவத்
தற்றமர் கண்டிடு மாவலெ னக்கதிர்
கீழ்க்கட றன்னினனே.

(போ-ரை.) அன்றைய தினத்தில் நீங்காத அவமானத்துடன் (அரண்மனை) வந்து சேர்ந்த அண்ணனை வாதாவியில் எதிரில், தம்பியாகிய இனதாவி, நாளைத்தினமே அப்பகைவர்களைச் சிறை செய்துவருகின்றேன் காண்பாயாக என்று கூறுதலும், அரசனான வாதாவி, அங்ஙனமே செய்துவா என்று உத்தரவளித்தலும், அந்த மறுநாளைய அடர்ந்த போரினைக்காணும் ஆவல்கொண்டானோ எனும்படி சூரியன் கிழக்குக்கடலில் உதயமானான், (எ-று). (24)

இரும்போர்ச் சருக்கம் முற்றிற்று.

159

உ

# ஏழாம்போர்ச் சருக்கம்.

## இனதாவிவதம்.

சந்தக் கலிவிருத்தம்.

வல்லியமெ னப்பெருகு வன்னிபடை நோக்கிப்
பல்லியமு ழக்கிவரு பாவியின தாவிச்
சல்லியமெ டுத்துவிடு தாவுசமர் வீரஞ்
சொல்லவொரு வர்க்கொருவர் தொல்சமர்வி ளைத்தார்.

(பொ-ரை.) புலிகளின் கூட்டம்எனப் பெருகிவந்த வன்னியர் சேனைகளை நோக்கிப் போர்ப்பறை முழக்கி வந்த பாதகனை இனதாவி, அம்புகளை எடுத்துத்தொடுத் துப் பாய்ந்துசெய்யும் போர்வீரங் கூறுதலும், ஒருவர்க் கொருவர் பழைய யுத்தத்தைத் துவக்கினர், (எ-று) (1)

தேரிவுளி தும்பிவலி தேருமயில் கோணம்
மாரிமுக மானவிசை மன்னுமணி காலாள்
போரிலுற வந்தவர்கள் பூளையென வீய
வீரியின தாவியம ரிற்கணைகள் விட்டான்.

(பொ-ரை.) தேர் வீரர்களும், குதிரை வீரர்களும், யானைவீரரும், தேர்ந்த வேல், வாள், கார்முகம் (முதலி யவைதாங்கிய) விரைவுமிக்க காலாட்படைகளுமான வீரர்கள், யுத்தத்தில் (தன்னை எதிர்க்க) வர, வந்த அவர் களெல்லாம் பூளைப்பூப்போல மடியுமாறு, வீரங்கொண் டெழுந்த இனதாவி, அப்போரில் பலகணைகளை யேவி னான். கோணம்-வாள். மாரி முகம்-கார்முகம்; வில். (2)

நீலகளன் வச்ரனுயர் நீளுமுர கங்கா
பாலனனி சாம்பனொடு பாசுபத ஐனோர்
மாலடைய மோககணை மாதிறன்விடுப்ப
யேலவவர் பாரினிடை யெய்ப்பதுற நின்றார்.

(போ-ரை.) நீலகண்ட வன்னியர், வச்சிரவாகு வன்னியர், மிக்க வன்மை வாய்ந்த கங்காபால வன்னியர், சாம்பவ வன்னியர், பாசுபத வன்னியரான ஐவரும் மயக்கம் அடையும்படி, பெருந்திறலுடைய இனதாவி மோகனாத்திரத்தையேவ, (அக்கணைசெய்த செயலால்,) அவர்கள் பூமியில் பொருந்திய அயர்ச்சியொடும் இருந்தனர்.

பட்டபடை யல்லபிற பாவியிவ னம்பாற்
கெட்டவத நிந்துவரு கேழ்கிளரு மெய்யன்
றொட்டகணை வில்லினொடு சூறைபவ னம்போல்
விட்டிரத மவ்வவுண வீணனையெதிர்த்தான்.

(போ-ரை.) (இனதாவியால்) இறந்த சேனைகள் அல்லாத மற்ற வீரர்கள், பாவியான அவனது கணைகளால் புறங்காட்டலை யறிந்து வந்த ஒளிவீசும் திருமேனியையுடைய உருத்திர வன்னியர், சண்டமாருதமென அம்புகளைச் சொரியும் வில்லினுடன் தேரைச் செலுத்தி, அந்த அவுணனான வீணனை யெதிர்த்தார், (எ-று). (4)

அத்திரம்விடுத்தவனி னஞ்சிலைய றுத்தே
சித்திரமெ னச்சமைய செய்தபினர் தெவ்வன்
புத்திதெளி வுற்றுசின பூட்கையென மிக்கக்
கத்திவளி மேகவகி கார்கணைசொரிந்தான்.

(போ-ரை.) (உருத்திர வன்னியர் பல) அம்புகளை யேவி, அந்த இனதாவியின் வில்நாணியை யறுத்து, அவனை சித்திரம்போல் அசைவற்றிருக்கும்படிச் செய்த

பிறகு, பகைவனை இனதாவி (சிறிதுநேரம் கழித்து) அறிவு தெளிவடைந்தவனாய், கோபமுடைய சிங்கமெனப் பெரிய கர்ச்சனைசெய்து, வாயுவாத்திரம், மேகாத்திரம், நாகாத்திரம் வருணாத்திரமாதிய கணைகளை அவர்மேல் எவினான், (எ-று). (5)

கோடுமுனி யம்புபல கொண்டெமது வன்னி
நீடுகொடி யந்திரம முறித்தவனி னீள்வில்
வீடுறமு றித்துமிக மீறியின தாவி
சூடுமுடி யுவ்வியது சோரகணை விட்டான்.

(போ-ரை.) எமது உருத்திர வன்னியர், (தமது) வளைந்தவில்லில்(சேர்த்துவிட்ட)பல கணைகளைக்கொண்டு, அந்த இனதாவியின் உயர்ந்த கொடிகள்கட்டிய இரதத்தையும், நீண்டவில்லையும் நாசமாம்படி முறித்து, (அதன் பின்) பெரிதும் சினந்து, அவனது முடிசூடும் தலையானது அற்றுப் போகுமாறு சில கணைகளைப் பிரயோகித்தார், (எ-று). (6)

அந்தகணை யன்னவனி னஞ்சிரம றுத்தே
வந்தவது னார்ந்துமலர் வானவர் சொரிந்தார்
முந்துமரு ளுற்றவரு முன்னலொ டெழுந்தார்
சிந்தினவ ரன்றிபல சேரலரி ரிந்தார்.

(போ-ரை.) அக்கணையானது அவ் இனதாவியின் தலையை அறுத்துத் தள்ளித் திரும்பிவரும் அதனை அறிந்ததேவர்கள் பூமழை பெய்தனர்; முன்னே மயக்கம் அடைந்திருந்த அனைவரும் தெளிவுகொண்டு எழுந்தனர்; இறந்தவர்போக உயிரோடிருந்த பல அவுணர்கள் (அதை நோக்கி,) (நாற்பக்கத்திலும்) சிதைந்து ஓடினர், (எ-று).

ஓகைகொடு வன்னிபடை பாடிதனி லுற்ற
வேகமொடு சாரணர்கள் வேந்தனடி மன்னி
வாகையுகு பின்மகிபின் மாய்ந்தவது கூற
சோகமுற லாகியவன் சோர்வுறவி ழுந்தான்.

(பொ-ரை.) வன்னியர்படை மகிழ்ச்சியுடன் பாசறை அடைந்தன; ஒற்றர்கள் வாதாவியினிடம் விரைந்துவந்து சேர்ந்து, வெற்றிமாலையைச் சிந்திய பின்னவனான இளதாவி நிலத்தில் விழுந்து இறந்த அதனைக் கூறுதலும், வாதாவி (அளவிறந்த) சோகத்தையடைந்தவனாகி, உடல் சோர்ந்து (அரியணையிலிருந்து) கீழே விழுந்தான். (8)

அறுசீராசிரிய விருத்தம்.

பிறிவெனும் பெரிய துன்பம் பிறந்தநா
டொடங்கித் தம்பி
இறுதிலை யிலதென் றாவி யொன்றெனக்
கருதி யுள்ளான்
எறிவருஞ் சமரிற் றம்பி யிறந்தன
னெனவுங் கேட்டு
அறிவழிந் தயர்ந்து பின்ன ராற்றினா
னண்ட முற்ற.

(பொ-ரை.) பிறந்த நாளிலிருந்து தங்களுக்குள் பிரிந்திருத்தல் என்னும் பெரிய வருத்தம் நேராது எனவும், (உடல் இரண்டு) உயிர் ஒன்றே யெனவும் எண்ணியிருந்த வாதாவி, (அத்தகையதனது) தம்பியான இளதாவி, (படைகளை) வீசிச் செய்யும் போரில் இறந்தனன் என்று (பிறர்) கூறக்கேட்டு, உணர்விழந்து, அயர்ச்சியடைந்து, பிறகு அண்டகடாகம் இடியும்படி (வாய்விட்டு) அழத் தொடங்கினான், (எ-று). முற்ற-இடிய. (9)

கொச்சகக் கலிப்பா.

தம்பியோ தேவர்களாந் தாமரையொண் வனங்கலக்குந்
தும்பியோ வென தன்னை யுளங்களிக்குந் தோன்றலோ
நம்பியோ பாற்கரனி னுமந் தனைத்துடைத்த
வெம்பியோ நீயிறந்தா யென்றுமுயிர் வாழ்வேனே.

(பொ-ரை.) ஐயோ தம்பி! தேவர்களான ஒள்ளிய குளிர்ச்சிபெற்ற தாமரைக்காட்டைக் கலக்கும் யானையே! ஐயோ! என் அன்னையான மாமோகினி மனம் மகிழும் குமரா! ஐயோ! ஐயோ! ஆண்மக்களில் சிறந்தோனே! ஐயோ! (இளம்பருவத்திலேயே) சூரியனது பெயர் தோன்றுவண்ணம் அழித்த என் அப்பா! ஐயோ நீ இறந்தாய் என்று கேட்டும் நான் உயிர்சுமந்து உலகத்தில் வாழ்வேனோ (எ-று). (10)

மல்லொன்று திண்புயத்தாய் வன்னியனு மானுடனின்
வில்லொன்று நின்னுடலம் வீயப் புரிந்ததெனுஞ்
சொல்லொன்றே யுள்ளஞ் சுடுகின்ற தாகலினால்
வல்லியமே யாற்றேன் வானவர்க்கும் வாழ்விதுவோ.

(பொ-ரை.) மல்லில் (தேர்ச்சி) பொருந்திய திண்ணிய தோள்களை யுடையவனே! வன்னியனாகிய மனிதனுடைய ஒருவில்லானது, உனது தேகம் விழும் படிச் செய்தது எனும் வார்த்தையொன்றே, எனது உள்ளத்தைச் சுடுகின்றது; ஆகையினால், புலிபோன்றவனே! சகிக்காதவனானேன்; இந்நிகழ்ச்சி, தேவர்களுக்கு வாழ்வாக நேர்ந்ததுவோ, (எ-று). (11)

என்னக் கரைந்தழுது மெய்தியழல் சித்தவனும்
மன்னுயி னிக்கலங்கல் வன்னிபடை நாளையினிற்
சின்னபின்ன மாகச் செய்வனிது காண்டியென
அன்னவனி னுளந்தேற்றி யாயத்த மாயினனே.

(பொ-ரை.) என்று சொல்லி மனங்கரைந்து அழுதளும், அக்னிசித்து அவளிடத்தில் அடைந்து, அரசே! இனி, கலக்கமடையாதீர்! நாளையதினம் அவ்வன்னியர் சேனையைச் சின்னபின்னமாம்படி செய்கின்றேன்; இதனை(ப்பொறுத்திருந்து) காண் என்று கூறி, அவ்வாதாவியின் மனத்தைத் தேற்றி (அப்போதே போர்க்குச்) சித்தமானான், (எ-று). (12)

அல்லொழிக்குந் தனையடக்கு மப்பாவி தனையழித்த
வில்லாளன் றனைவாழ்த்தி மேல்கடலி னெய்துகதிர்
சொல்லிமற மெய்துந் துன்னுதழற் சித்துவிழும்
வல்லமர்காண் விழைவென்னக் கீழ்க்கடலின் வந்தனனே.

(பொ-ரை.) இருளையகற்றும் தன்னை, (ஒருகாலத்தில் விழுங்கி) அடக்கிய பாவியாகிய அந்த இனதாவியைக் கொன்ற வில்வீரரான உருத்திர வன்னியரைத் துதித்து மேற்குக் கடலை யடைந்திருந்த சூரியன், (அன்று இரவு வாதாவியினிடம் தன்) வீரங்கூறிப் புறப்பட்ட அடர்ந்த அக்கினிசித்து, (வன்னியர் படையால்) சாயும் வன்மையான போரைக்காணும் ஆவல்கொண்டானென, கிழக்குக் கடலில் உதயமானான், (எ-று). (13)

ஏழாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

௮

# எட்டாம்போர்ச் சருக்கம்.

## அக்கினிசித்து வதம்.

### சந்தக் கலிவிருத்தம்.

வல்லசுர ரோடே வந்தவக சித்து
அல்லுற வீசன் சேனையை யழிக்கக்
கொல்லுவல்வி ரைந்தே கோளிவனை யென்ன
வெல்லுமுயர் சாம்ப வன்னெதிரி ஞறான்.

(பொ-ரை.) வன்மைமிக்க அவுணர்களுடன் (எட்டாம் நாள் காலையில்) வந்த (வாதாவியின் முதற்புதல்வனான) அக்னிசித்து, உருத்திரவன்னியரின் சேனைகளைத் துன்பமடையும்படி அழித்தல் செய்யவும், (எவரையும்) வெற்றிகொள்ளும் உயர்ந்த சாம்பவ வன்னியர், வலிமையுடைய இவனை விரைந்து கொல்கின்றேனென்று அவனெதிரில் வந்தார், (எ-று). (1)

நாரணனி னேவை நாடலன்வி டுப்ப
மாரணக ளத்தே மன்னுமதை யண்ணல்
வாரணம தென்ன வந்தனைபு ரிந்தே
ஆரணம தோதி யக்கணம்வ சித்தான்.

(பொ-ரை.) பகைவனான அக்னிசித்து நாராணாஸ்திரப் பிரயோகஞ் செய்தலும், பெரிய (அந்த) யுத்தபூமியில் வரும் அவ் அஸ்திரத்தை சாம்பவவன்னியர், கஜேந்திரன் எனும்படி வழிபாடு செய்து, அஷ்டாட்சரம் செபித்து, அதே நேரத்தில் பிடித்துக்கொண்டார், (எ-று). (2)

அன்னவரி யோடீ ராயிரமென் வெள்ளம்
மன்றுபடை வீழ மாமுளரி யேவப்
புன்பகையு நீங்கப் போந்துயிர நீத்த
அன்றிரவி மேலாய்க் கீழ்க்கடற்பி றனை.

(பொ-ரை.) (அதன்பின் சாம்பவவன்னியர்,) அப்பகைவனையும், இரண்டாயிரம் வெள்ளமாகப் பொருந்திய அவனது சேனைகளையும் நாசமாக்க எண்ணி, சிறந்த அக்னி(யாஸ்திரப்)பிரயோகஞ் செய்ததும், (அவ்வஸ்திரமானது, நீண்டகாலமாகத் தன்னையடக்கியிருந்த) புன்மையான பகையாகிய அந்த அக்கினிசித்துவும், (அவனது சேனைகளும்) அழியும்படி வந்து, அவர்களது உயிரை நீக்கியது; (இக்காட்சியை கண்டிருந்த) சூரியன், அன்றுமாலை மேற்குக்கடலிற் சென்றிருந்து, பிறகு மறுநாள் காலையில் கிழக்குக் கடலில் உதயமானான், (எ-று). (3)

எட்டாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

உ

# ஒன்பதாம்போர்ச் சருக்கம்.

## யமசித்துவதம்.

சந்தக் கலிவிருத்தம்.

போராண்மைகொள் சித்துத்தழல் வீந்திட்டது பின்னே
தேராண்மையும் வில்வீரமுந் தேரும்யம சித்து
நேராண்மையு மோதித்தன தந்தன்றுயர் நீங்கத்
தாரண்மையனாகிக்கள மெய்திச்சமர் தந்தான்.

(போ-ரை.) மிகுந்த வீரத்தொழிலைக்கொண்ட அக்கினிசித்து இறந்ததன் பிறகு, தேர்செலுத்துந் திறமையிலும் வில்வீரத்திலும் தேர்ந்த (வாதாவியின் இரண்டாவது புதல்வனான) எமசித்து என்பவன், (முதற்புதல்வன் பிரிவு கருதி வருந்தும்) தனது தந்தையின் துன்பம் நீங்குமாறு, தன்னிடத்தில் நேர்ந்த வீரத்தன்மையைக் கூறி, வெற்றிமாலை சூடிய வீரனாய், போர்க்களத்தை யடைந்து சமர் தொடங்கினான், (எ-று). (1)

சட்கோணநெடுங்கூவிர மேறிப்பகை சாடி
யுட்காமிக வன்னிப்படை யோடக்கணை தொட்டான்
முட்கோல்விடு மைந்துப்புதல் வோர்தம்மையு மோகம்
புட்கோக்கணை யால்செய்தெதிர் சென்றான்சினப் பூணான்.

(போ-ரை.) கோபத்தையே ஆபரணமாகக்கொண்ட எமசித்து, ஆறுமூலைகளை யுடைய பெரிய தேரில் ஏறி வந்து, பகைவர்களை மோதி, வன்னியர் படைகள் மிக அஞ்சி (ப்புறங்காட்டி) யோடும்படி அம்புகளை ஏவினான்;

(அதற்கெதிராக,) முன்போலும் (கொடுமை செய்யும்) அம்புகளை எவிய ஐந்து புதல்வரான வன்னியர்களையும், கருடான்திரத்தால் மயக்கமுண்டாகும்படி செய்து, எதிரேறிச் சென்றான். புட்கோக்களை-கருடக்களை. (2)

வன்றான்வலி மன்னுஞ்சிவ வன்னிப்பெருமானுஞ்
சென்றானெதிர் தூவிக்களை சோர்படை தன்னைக்
கொன்றானுயர் தண்டாவலி கொண்டானெனு மெண்ணான்
தன்றாதைநி கர்த்தானெதிர் தந்தான்சமர் தந்தான்

(பொ-ரை.) வலிய முயற்சியும் வன்மையும் அமைந்த ருத்திரவன்னியப் பெருமானும் எதிர்சென்று, பல அம்புகளைச் சொரிந்து, பகைவர் சேனைகளிற் பலரைக் கொன்றார்; (அச்சமயத்தில்,) நீங்காது மிகுந்த வன்மை கொண்டவர் என்று கூறப்பெறும் அமைச்சரான சுமித்திரர், (வாதாவியான) தனது தந்தையை ஒத்த பராக்கிரமத்தையுடைய யமசித்துவின் எதிர் வந்து போர் தொடங்கினார், (எ-று). எண்ணான் - சுமித்திரர். (3)

மிஞ்சக்களை விட்டேயம சித்தின்னுயிர் வாங்கிக்
குஞ்சக்குடை யுந்தள்ளினன் பின்னோடினர் கூடா
ரஞ்சிக்கள மெங்குங்கடி யாடக்குறை யாட
விஞ்சத்தம மேற்குக்கடல் விண்ணின்மணி யானான்.

(பொ-ரை.) (சுமித்திரர்) அளவிறந்த அம்புகளை விட்டு (எதிர்த்து,) யமசித்தின் உயிரைப் போக்கி, (அவனது தேரில் உள்ள) குச்சம் கட்டிய குடையையும் அறுத்துத் தள்ளினார்; (அவ்வளவில்) பகைச்சேனைகள் பயந்து புறங்காட்டி யோடின; போர்க்களம் முழுவதிலும் பேய்கள் கூத்தாடவும், உடற்குறைகள் கூத்தாடவும், இருள் அதிகரிக்கவும், சூரியன் மேற்குக் கடலில் தோய்ந்தான்.

கடி - பேய். குறை - (உடலறுபட்ட) குறையுடல், தமம்-இருள், விண்ணின் மணி-சூரியன். (4)

முதுகிட்டவ ருற்றேமுனை முனைவீழது ரைக்க
மதுகைப்பெரு வாதாவியு மிருமைக்குரல் விட்டே
கதுமென்றழ வாற்றிச்சம தண்டன்களங் கண்டா
னுதயக்குண நீராழியி னுற்றானொளி யினனே.

(போ-ரை.) புறங்கொடுத்தோடிய அவுணர்கள், (இரண்டாவது) புதல்வனை யமசித்துவும் போர்க்களத்தில் (சுமித்திரால்) இறந்த அதனைக் கூறுதலும், பெரு வன்மையுடைய வாதாவியும் (அதுகேட்டு, இருபுத்திரரும் இறந்த சோகத்தால், அன்றிரவு) கதுமெனப் பெருங் குரல்விட்டு அழுதலும், காலதண்டன் (வாதாவியை ஒருவாறு) தேற்றி, யுத்தகளம் வந்து சேர்ந்தான்; (அவ்வமயம்) கிழக்குக்கடலில் களிப்புமிக்க சூரியன் உதயமானான், (எ-று). (5)

ஒன்பதாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

# பத்தாம்போர்ச் சருக்கம்.

## காலதண்டன் வதம்.

### சந்தக் கலிவிருத்தம்.

பயிலுநற் பாசறைப் பார்த்திப வன்னியர்
துயிலுணர்ந் தொண்சிவை தூயவாங் காற்பணிந்
தயிலுநஞ் சொத்தபோ ரக்களங் கற்கியுஞ்
சயிலமே யென்கயத் தானையோ டெய்தினர்.

(போ-ரை.) அரசர்களான வன்னியர், (தாம்) பொருந்திய சிறந்த படைவீட்டிலே, நித்திரை கலைந்தெழுந்து, ஒள்ளிய பரசிவையின் தூய்மையான திருவடிகளை வணங்கி, (அத்தேவியின் அநுமதிப்படி,) குதிரை வீரர்கள், மலையேயெனத்தக்க யானைச்சேனைகளாதியோருடன், உண்கிற விஷத்தை யொத்த (பகைவரைக் கொல்லும் கொடுமை வாய்ந்த) யுத்தகளத்தையடைந்தனர்.

கற்கியும் கயமும், மற்ற இரண்டு அங்கங்களுக்கும் உபலக்ஷணம். (1)

இந்திர னாதியா ரெண்ணிலார் தங்களா
லந்தரப் பாலற வங்கதம் மங்குற
வந்துவந் திருபெருஞ் சேனையும் மாறுபட்
டுந்தினா ரொண்படை யொட்டினார் முட்டினார்.

(போ-ரை.) (போர்காணவந்த) இந்திரன் முதலான அளவிறந்த தேவர்களால், ஆகாயவெளி வெற்றிடமில்லையாகவும், (தமது அதிபாரத்தைத் தாங்கமாட்டாமல்)

ஆதிசேடன் வருந்திக் கலங்கவும், இருதிறத்துப் பெரும் படைஞரும் நெருங்கி வந்து, (ஒருவரோடொருவர்) எதிர்த்து, ஆயுதங்களைச் செலுத்தி, வீரவாதஞ் செய்து தாக்கிப் போர் செய்தனர், (எ-று).

அந்தரப்பால்-ஆகாயவெளி. அங்கதம்-ஆதிசேடன். ஒட்டுதல்-வீரவாதம் பேசல். (2)

வல்லைபோர் செய்யநீ வாவென வன்னவன்
வில்லையுந் துண்டென வெட்டினு னவ்வரி
ஒல்லையிற் றும்பியோ டொண்குப வேரொடெத்
தெல்லையம் பாரிமே லெற்றின னிலனே.

(போ-ரை.) பகைவனான அக்காலதண்டன், (போர்க்களத்தில் எதிர்த்துநின்ற நீலகண்ட வன்னியனைநோக்கி,) நீ போர்செய்ய வல்லவன் அல்லவா; (இருவரும் நம் திறம் காண்போம்) வருவாயாக என்று சொல்லிக்கொண்டே, அவரின் வில்லையும் இருதுண்டாகப் பிளந்தான்; (அதை நோக்கிய நீலகண்ட வன்னியர்) அதே நேரத்தில், மத யானையென விரைந்து, (காலதண்டனை, அவன் ஏறிய) ஒள்ளிய தேருடன் தூக்கி அழகிய அந்நிலப் பரப்பில் மோதியடித்தார், (எ-று). (3)

வாவரும் வேகமாக் கூவிரம் வலவர்போ
யேவரும் வேனுபோ யெண்புய வன்மைபோய்
தாவருங் காலதண் டன்னுயிர் சாய்ந்தன
தேவரும் பூமழை தூவினர் துள்ளினர்.

(போ-ரை.) (அவ்வளவில்,) விரைவாகத் தாவிவரும் குதிரைகளும், தேரும், சாரதியும் அழிந்து, அம்பும் வில்லும் போய், மதிக்கத்தக்க தோள்வலியும்போய், (சமரில்) பாய்ந்து வந்த காலதண்டனது உயிர் அகன்றது;

(அதுகண்ட) தேவர்களும் மலர்மழை சொரிந்து (ஆநந்தத்தால்) கூத்தாடினார்கள், (எ-று). ஏ-அம்பு. (4)

வன்றிறல் வாளினால் மாற்றலர் சேனையைக்
கொன்றன னெஞ்சினு ரோடினர் கோவிடம்
நின்றுய ராதவன் னீலவனி மூவண்மையை
யன்றுணர்ந் தானென மேற்கட லாயினான்.

(போ-ரை.) (நீலகண்ட வன்னியர், மேலும்,) பகைவர் சேனைகள் அனைத்தையும், வலிமைமிக்க வாளாயுதத்தால் கொன்றார்; உயிர்தப்பிய சிலர் வாதாவியிடம் (அதுகூற) ஓடினார்கள்; (ஆகாயத்தில்) உயர்ந்துநின்ற சூரியன், நீலகண்ட வன்னியரின் ஆற்றல் முழுதும் அன்று அறிந்துகொண்டான் எனும்படி மேற்குக் கடலில் முழுகினான்.

அறியாதிருப்பானாயின் இன்னம்சிறிதுநேரம் நின்று பார்த்திருப்பான் என்பது குறிப்பு. (5)

கூவினு ரையகேள் கோமடிந் தானென
வாவினார் கூறலுஞ் சீறினான் மாற்றல
ராவிநீங் குஞ்சமர் நாளையென் றுறினான்
பாவிவீழ் வோர்வெனப் பாற்கரன் றோன்றினான்.

(போ-ரை.) ஓடிவந்த ஒற்றர்கள் (வாதாவியை யடைந்து,) ஐயனே! கேள்; சேனாதிபதியான காலதண்டனும் இறந்தான் என்று இரைச்சலிட்டுக் கூறுதலும், (வாதாவி) பெருஞ் சீற்றங்கொண்டு, (பின்) நமது பகைவர்களான அவர்களின் உயிர்கழியச் செய்யும் அமர் (என்னால்) நாளை நடைபெறும் என்று கூறி (அச்சினம்) தணிந்தான்; அப்பாவி வீழும் போரைப் பார்க்கவந்தானெனும்படி, சூரியன் காலையில் உதயமானான், (எ-று).

பத்தாம்போர்ச் சருக்கம் முற்றிற்று

௧

# பதினோராம்போர்ச் சருக்கம்.

## வாதாவி யுத்தம்.

நேயநீல கண்டனுந், தோயயூகங் கண்டனன்
ஆயபோது வாணிசூழ், தீயன்வந் தெதிர்த்தனன்.

(பொ-ரை.) (யாவரிடத்தும்) நட்புடைய நீலகண்ட வன்னியரும், (தன்சேனையை) கடல்வியூகமாக அணி வகுத்து நிறுத்தினார்: அச்சமயம், (அவுணர்) சேனைகள் சூழ்ந்த கொடியவனானவாதாவி வந்து எதிர்த்தான், ()

வாணி-சேனை. (1)

மேருசூழும் பொச்சைபோற், சேருமூவ கைக்கரி
தேருநீல கண்டரைக், சோரமா வெதிர்த்தன.

(பொ-ரை.) மேருகிரியைச் சூழ்ந்த குன்றுகளைப் போல, (போரில்) தேர்ச்சி பெற்ற நீலகண்டவன்னியரை, மூவகை யானைப்படைகளும் உக்ரமாகச் சூழ்ந்து எதிர்த்தன, (எ-று).

மூவகை யானை-வனசரம், கிரிசரம், நதிசரம் என்பன. (2)

நீலனுஞ்சி னந்தெதிர், தோலினத்தைத் தோலதா
சாலமோதி நால்வாய், நால்வாயு மாக்கினன்.

(பொ-ரை.) நீலகண்ட வன்னியரும், கோபித்து எதிர்த்த சில யானைகளை மிகவும் அடித்து, (எலும்புகளை முறியச்செய்தமையின்,) தோல் எனும் பெயர் பொருந்தச் செய்து, (மற்றுஞ்சில) யானைகளை (வாய்கிழித்து) நால் வாய் எனும் பெயர்க்குப் பொருந்த அழித்தார், (எ-று).

தோல், நால்வாய்-யானையின் பெயர்கள். (3)

அத்திபின்சூ ழாக்களை, யத்திபின்சூ ழாங்களாக்
குத்திநீல கண்டனும், பத்திபத்தி யாக்கினன்.

(பொ-ரை.) நீலகண்டவன்னியர், (மேலும் பல) அத்தியெனும் பெயருடைய யானைக்கூட்டங்களை (காலால் ஒங்கிக்) குத்தித்தள்ளி, அவைகளை) அஸ்த்தியெனும் எலும்புக் கூட்டங்களே யாகச் செய்தார், (எ-று).

அத்தி-யானையும், எலும்புமாம். (4)

கூவியோட சேனைவா, தாவியே ரெதிர்த்துபோர்
நிவிரத்தொ டாற்றலுந், நீலனும்ப தைத்தனன்.

(பொ-ரை.) (அவுணர்படை ஆற்றாது) பெருங் கூச்சலிட்டுப் புறங்காட்டி யோடவும், (அதுகண்ட) வாதாவி, (நீலகண்டவன்னியரின்) முன் வந்து எதிர்த்து விரைந்து போர் செய்தலும், நீலகண்டவன்னியரும் துடித்தார்.

வாதாவி அவ்வளவு கொடுமையாகப் போர் செய்தான் என்க. (5)

நீலகண்ட நம்பனை, சாலமோதித் தள்ளிறு
லைமென்ன வெய்திப, பாலரும்ப றந்தனர்.

(பொ-ரை.) நீலகண்ட வன்னியரை முதியடித்து மூர்ச்சையாக்கினன்; (அதுகண்டு) ஆலகால விஷம்போல் சீறிவந்த மற்ற நான்கு புதல்வர்களும், (வாதாவியின் போரில் எதிர்கிற்கமுடியாமல்) கிடைந்தோடினர் (எ-று).

அன்னிலைச்சு மித்திரன், மன்னியேர மன்னமண்
கின்னிமிர்த்தி வீழ்த்திஞன், துன்னுமாக நங்களால்.

(பொ-ரை.) அப்போதுசுமித்திரர் (அங்கு) அடைந்து எதிர்க்க, அவுணர்க்கரசனுனவாதாவி, வில்லை நிமிர்த்தி விட்ட அடர்ந்த அம்புகளால் (அவரையும்) மூர்ச்சையாக்கினன், (எ-று). (7)

லங்கெதிர்த்த மாபடை, யுந்தியோடத் திக்கனை
சிந்திபேர்நி லன்னவ, ரெக்கைதயோல மென்றனர்.

(போ-ரை.) (அஃதறிந்து) வந்து எதிர்த்த மிகுந்த சேனைகளை, (ஒருவரோடொருவர்) நெருக்கித் தள்ளிக் கொண்டு புறங்காட்டி யோடுமாறு அக்கினியாஸ்திரங்களை (வாதாவி) மிகுதியாக எவியபோது, அவர்கள் (அஞ்சி) எந்தையே! அபயம்! என்று (உருத்திரவன்னியரையடைந்து) கூவினர், (எ-று) (8)

அஞ்சலென்ற ளித்தவி, னிஞ்சருத்ர வன்னியர்
மிஞ்சுமன்ன நியனோர், வஞ்சவில்வ ளைத்தனர்.

(போ-ரை.) கருணை மிகுந்த உருத்திரவன்னியர், (அவர்களை) அஞ்சவேண்டாமென அபயஸ்தம் தந்து, (போரில்) முன்னேறி வந்த தியவனான வாதாவியின் எதிர் வந்து, வஞ்சத்தோடு வில்லை வளைத்தார், (எ-று). (9)

ஒன்றுபத்து நூறெனக், கன்றுபுங்க மேவியே
துன்றுதேரு டைத்தன, னன்றுசிறி யெம்பிரான்.

(போ-ரை.) அன்று மிகச்சினந்த எமது பெருமான், ஒன்று, பத்து, நூறு எனும்படி உக்ரக் கணைகளை எவி, (அவனது) பெரிய இரதத்தை (பொடிப்பொடியாய்ப் போக) உடைத்தார், (எ-று). (10)

பாவிவேறு தேரினிற், றுவியேறி [illegible]
தாவிமேலு மேலுமே, தேவி[illegible]

(போ-ரை.) பாவிய[illegible] தேரி[illegible] ஏறி, பலப்பல அம்புகளை [illegible] சொரிந்து, மேலு[illegible] மேலும் உருத்திர வன்னியரை எ[illegible]திர்த்தான், (எ-று). (11)

துட்டனேவு தீக்கணை, [illegible]ட்டறுத்து வண்டிவ
லட்டதிக்கு லாமபடை[illegible] வெட்டிவெட்டித் தள்[illegible]

(போ-ரை) துஷ்[illegible] வாதாவி விட்ட [illegible]க்கினி யாஸ்திரங்கள் முழுதைப் ([illegible]) அம்புகளால் நாசமாக்கி, எட்டுதிக்கிலும் ப[illegible] (அவ[illegible]) சேனைகளை

யெல்லாம் வெட்டி வெட்டிச் சாய்த்தார் உருத்திர வன்னியர், (எ-று). (12)

செம்புனற்பெ ருக்கினிற், றும்பியென்மு தற்படை
பம்பியோட வுன்னிய, வம்பனேடி னனரோ.

(போ-ரை.) (உருத்திரவன்னியரின் கடும்போரால்,) உதிரப்பெருக்கில் யானைச் சேனை முதலிய தனது படைகள் முழுதும் மிதந்து ஓடுதலைப்பார்த்த வம்பனுன வாதாவியும் (அஞ்சிப்) புறங்கொடுத்து ஓடினன், (எ-று).

ஞாயிறுங்கு டக்கினி, லாயதுன்னி வன்னியர்
சேயசேனை யுய்வுட னேயிடம்ம டைந்தன.

(போ-ரை.) சூரியனும் மேற்கு (க்கடலில்) சென்றதை யறிந்து, வன்னியரின் சேனைகள் (இறைவியின் அருளால் மூர்ச்சை தெளிந்து) உய்தி பெற்று, தம் பாசறை சென்று சேர்ந்தன, (எ-று). (14)

சத்தமுற்ற சாலையின், மெத்துகாளி கோயிலைப்
பித்தனெய்தி மேம்படப், பத்தியோடு மேத்தினன்.

(போ-ரை.) பித்தம் பிடித்தவாதாவி, அந்த இரவில், மேலோங்கிய காளியின் திருக்கோயிலை யடைந்து, அன்புடன் அத்தேவியைத் தியானித்துத் துதிக்கத் தொடங்கினன், (எ-று). (15)

அன்னையெம்மின் றானையை, வன்னிமன்னர் தன்னிறு
ரன்னருய்த்து போரினில், மன்னுமாறு செய்கென.

(போ-ரை.) தாயே! உருத்திர வன்னியர் எமது படைகளனைத்தையும் கொன்றார்; (யான் தனித்தேன்; ஆகலின், யான் உய்தியடைய) அச்சேனைகள் முழுதும் உயிர் பெற்று, போரில் (எனக்குத்துணையாக) வருமாறு அருள்செய்க என்று பிரார்த்தித்தான், (எ-று). (16)

அஞ்சிடற்க மன்னநீ, தஞ்சினுனெ மூப்புவல்
முஞ்சகாளி யென்னவே, அஞ்சிலோதி யோதினள்.

(போ-ரை.) அழகிய சடைக் கூந்தலையுடைய காளியும், மன்னா! நீ சிறிதும் அஞ்சாதே! இறந்த சேனைகள் முழுதும் மீண்டும் உயிர் பெற்று எழுமாறு நானேயதினை யிம செய்கின்றேன் என்று கூறினாள், (எ-று). (17)

சண்டிகைக ழற்பணிந், தண்டலூர்தன் கோயிலை
மண்டுகாதற் பாட்டனுங்,கொண்டெதிர்கொளுத்துவான்

(போ-ரை.) காளியின் வீரக்கழலணிந்த பாதங்களை (மகிழ்வொடு) வணங்கிய வாதாவி, (அதன்பின்) தன் அரண்மனையடைதலும், மிகுந்த அன்புடைய பாட்டனான மாயாவிசூரன் என்பான், வாதாவியை யெதிர்கொண்டு பின்வரு கூறுவான், (எ-று). (18)

மள்ளர்கள் மடிந்தனர், தள்ளருஞ்ச மர்க்களம்
மெள்ளசந்து செய்தியா, துள்ளயாமு முய்யவே.

(போ-ரை.) (நம்மிடத்துள்ள) வீரர்கள் அனைவரும் மடிந்தனர்; நீங்குதற்கரிய போர்க்களத்தில் மென்மையொடு போந்து, இறவாதிருக்கும் யாமேனும் பிழைக்குமாறு (வன்னியருடன்) சமாதானம் செய்து கொள்வாயாக, (எ-று). (19)

என்றநீதி கேட்டிலான், கன்றுபோரைக் காண்விழை
வென்றிடக்கு ணக்கடற், றுன்றுசோதி தோன்றினான்.

(போ-ரை.) என்று (பாட்டன்) உரைத்த நீதியை(ச் சிறிதும் காது கொடுத்துக்) கேளாத வாதாவியினது (இறுதிகாலின்) சினந்த போரைக்காணும் ஆசைகொண்டானென, கிழக்குக்கடலில் மிக்க ஒளியுடன் சூரியன் உதயமானான், (எ-று).

காளியிடம் பெற்ற வரபலத்தைப் பாட்டன் அறியாது கூறினான் என, அவன் சொற்களை வாதாவி செவிசாய்த்துக் கேளாது அவமதித்தான் என்க. (20)

பதினோராம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

உ

# பன்னிரண்டாம்போர்ச் சருக்கம்.

## வாதாவி வதம்.

எழுசீராசிரிய விருத்தம்.

தரும வன்னி யுடனெ திர்த்த சமரி லுட்கி யோடியுங்
கரும நன்கி னடையு மென்க ருத்தி னோடு காதகன்
முரண்மி குத்த குயவி னேறி முகிழ்வி னெய்திப் போர்க்களம்
விரைவின் வன்னிப் படைக ளோட விசிக மாரி தூவினான்.

(பொ-ரை.) தரும வடிவினரான உருத்திரவன்னியருடன் (நேற்று) எதிர்த்த போரில் அஞ்சி, (தோற்று முதுகுகொடுத்து) ஓடியிருந்தும், (தான் வெல்லும்) செயல் (காளியால்) சிறக்க வாய்க்கும் என்னும் சிந்தனையுடன், காதகனான வாதாவி, வலிமைமிகுந்த ஒரு இரதத்தில் ஏறி, மகிழ்ச்சியுடன் யுத்தகளம் அடைந்து, வன்னியர் சேனை புறங்காட்டுமாறு, வேகமாக அம்புமழை சொரிந்தான்.

அங்கு லங்க னன்றெ திர்த்த வணிதொ டேரி னான்றனைச்
சிங்க மென்ன வன்மை தங்கு சிறுவர் சூழ்ந்து சிறலும்
புங்க வத்தி லன்னர் பூமி யிடையின் மூர்ச்சை பூணுமா
றெங்கு மாகிச் செய்த போரி லிறைவன் வந்தெ திர்த்தனன்.

(பொ-ரை.) சிங்கங்கள் எனும்படி வன்மை பொருந்திய (நீலகண்ட வன்னியர் முதலான ஐந்து) புதல்வர்களும், அவ்விடத்தில் மனக்கொதிப்புடன் எதிர்க்கும் அலங்காரமான தேரிலிருக்கும் வாதாவியைச் சூழ்ந்துகொண்டு சினந்து போர்புரிதலும், (அவன், தான்விட்ட அம்புகளால்) அப்புதல்வர்கள் நிலத்தில் மூர்ச்சையாம்படி, எல்லாவிடங்களிலும் பரவிச்செய்த யுத்தத்தில், எமது இறைவரான உருத்திரவன்னியர் (அறிந்து) வந்து (அவனை) எதிர்த்தார், (எ-று).

(2)

169



உருத்திரவன்னிய மஹாராஜன் வாதாவியசுரனை சம்ஹாரித்தல்.

நூல்வி தத்த ஞான வொண்மை நோன்ற ருக்கை வன்னியன்
வேல்வி தத்தும் வாள்வி தத்தும் வில்வி தத்த வீசவெங்
கோல்வி தத்தி னிமை யிக்க கோள ளாச்சி தைத்தெதிர்
கால்வி தத்த மற்ற சேனை காணு றக்க லக்கினன்.

(போ-ரை.) சாஸ்திர வகைகளில் சொல்லப்பட்ட மிகுந்த ஒள்ளிய ஞானபுருடரான வசியவில்லை யேந்திய உருத்திரவன்னியர், வேல்களின் வகைகளாலும், வாள்களின் வகைகளாலும், விற்களின் வகைகளாலும் எய்யப்பட்ட கொடிய அம்புகளின் வகைகளாலும், இமையே மிகுந்த வலியனான வாதாவியைச் சிதையுமாறு அடித்து, பிறகு எதிர்த்த அவனது காலாள் வகைகளையும், மற்ற (இரதம் கஜம் துரகம் ஆதிய) சேனைகளையும், (தன் படைகளும் தேவர்களும்) காணும்படி கலங்க அடித்தார், (எ-று).

வேல்விதம்-குத்துவேல், எறிவேல், கைவேல் முதலியன. கோல்விதம்-நெட்டம்பு, மொட்டம்பு, பிறைமுக அம்பு முதலியன; காலாள்வகை-வில்வீரர், வாள்வீரர், வேல்வீரர் முதலினோர். (3)

சொற்ற முற்ற நீல கண்டன் மூர்ச்சை நீங்கிக் கோளிட
முற்ற போது தம்ம னீச மங்க லெய்தி யொன்னலார்
துற்ற வானி யோங்கி யோங்கித் தோன்ற லுன்னி யெம்பனை
பற்றி காற்ப ணிந்தி தோதப் பல்கு மன்னை பேசவாள்.

(போ-ரை.) அச்சமயம் வெற்றி நிறைந்த நீலகண்ட வன்னியர் மூர்ச்சை தெளிந்தெழுந்து, உருத்திர வன்னியரிடம் சமீபித்தபோது, தமது சேனைகள் (முழுதும்) குறைந்து, பகைவரது அடர்ந்த சேனைகள் வளர்ந்து வளர்ந்து பெருகித் தோன்றுதலைச் சிந்தித்து நோக்கி, எமது பராசத்தியின் திருவடித் தாமரைகளை பற்றித் தொழுது, இந்நிகழ்ச்சியைக் கூறுதலும், கருணை நிறைந்த அன்னை, (பின்வருமாறு) சொல்லத் தொடங்கினள். (4)

அங்கு சூலி தீய னுக்க றைந்த வண்ண மன்பொடு
சங்கு தோயஞ் சிந்தி வீழ்ந்த தாச வாளி யாவையுந்
துங்க மோடெ ழுந்து போரிற் றோன்றல் செய்த றேக்கென
மங்க சங்கு வீழ்த்து கென்று மன்னு மம்பு நல்கினள்.

(பொ-ரை.) அப்பக்கத்தில் சூலமேந்திய காளியானவள், (நேற்றைய இரவில்) தீயவனான வாதாவிக்கு வாக்குக் கொடுத்தவண்ணம், (தன்னிடத்துள்ள ஜீவ) சங்கிலுள்ள ஜலத்தை அன்பொடு தெளித்து இறந்த ஆட்களான சேனைகள் யாவும், தூய்மையுடன் எழுந்து யுத்தகளத்தில் விளங்குமாறு செய்வதைக் காணுதி என்று கூறி, (காளிகரத்துள்ள அந்த) சங்கு பழுதுபட அடிப்பாயாக என்று நிலைபெற்ற அம்பொன்றை (உமாதேவியார் நீலகண்ட வன்னியரிடம்) அளித்தனர், (எ-று). (5)

சொன்ன தோர்ந்த நீல னன்னை தாட்ப ணிந்து சோர்விலா
வின்னி மிர்த்தி யந்த புங்கம் விட்ட வான்சி னத்தெதிர்
மன்னி வீரி யான்ம சங்கு டைந்து மாதி றக்கணை
சின்ன பின்ன மாக்கி யந்த சேனை யைச்சி தைத்தவே.

(பொ-ரை.) (இறைவி) உரைத்ததை யுணர்ந்த நீலகண்ட வன்னியர், அன்னையான அத்தேவியாரது திருவடிகளை வணங்கி, அயர்ச்சியென்பதில்லா வில்லைநிமிர்த்தி, (தேவியருளிய) அந்த அம்பை(ச் சேர்த்து வேகமொடு) விட்டார்; மிகுந்த திறமையை யுடைய அந்தக் கணையானது, (வாதாவியின் சேனைகளது) எதிரில் கோபத்துடன் (விரைந்து) வந்து, (காளியேந்திய) ஜீவசங்கையுடைத்து, (உயிர்பெற்றெழுந்திருந்த) அந்த அவுணர் சேனைகள் அனைத்தையும், (கால்வேறு கைவேறாகப் பலவகையில்) சின்ன பின்னஞ் செய்து சிதைவுபடுத்தியது. வீரி-காளி.

காளி வண்டு டைந்து போன துன்னி கண்ட லங்கியே
வாளி செய்கை யஞ்சி யோடி வாழ்ந்த கோயி லெய்தினு

னாளி யேற தாவெ திர்த்த வாத னன்ன தேர்க்கெதிர்
மீளி தன்னை மோத மீறி வீரி யெய்த னன்கணை.

(பொரை.) காளியானவன், (தனது) ஜீவனுக்கு உடைபட்டுப் போனதை நினைத்துக் கண்கலக்கம் அடைந்து, (மேலும் சங்கையுடைத்த) அம்பு (தான் எழுப்பிய யாவரையும் கொன்ற) செய்கையை(ப் பார்த்து, தனது உயிருக்குப்) பயந்து ஓடி, (தான் எழுந்தருளியிருந்த) கோபியை அடைந்தான்;(அச்சமயம்)ஆண் சிங்கமென எதிர்த்த தீயவனை வாதாவி, அங்நிகழ்ச்சியை யறிந்து, (மிக வருந்தி, தனது) எதிரிலுள்ள புருட சிரேஷ்டரான உருத்திர வன்னியரை மிகுதியும் மோத எண்ணி, விருப்புடன் பல கணைகளை விட்டான், (எ-று). (7)

மூந்தி வீறி யவுணன் றன்னை வன்னி சேனை முதல்வனும்
வந்தெதிர்த்த பூட்கை மீது வலிய சிம்பு ளெனவளைந்
துந்து போது குயவொ டிந்த வில்ல ழிந்த வுவணியுஞ்
சிந்த லான கிருதன் காரின் மூழ்கி மாயை செய்தனன்.

(பொ-ரை.) வன்னியர் சேனையின் முதல்வரான உருத்திர வன்னியர், வீறுடன் முற்பட்டு, அவுணனான வாதாவியை, நெருங்கி யெதிர்த்த சிங்கத்தின்மேல் வன்மையான சிம்புளெனச் சூழ்ந்து மோதியபோது, (அவனது) தேர் முறிந்தது; வில்லழிந்தது; வாளும் சிதைவு பெற்றது; (அப்போது) வாதாவி, மேகமண்டலத்தில் மறைந்து (பல) மாயைகளைச் செய்தான், (எ-று).

உவணி-வாள், கார்-மேகம். (8)

கிருதன் செய்த மாயை நீங்க நீறு மாறு தக்கனை
சுருதி யன்ன யெந்தை யான தூய வன்னி நித்தனும்
கருகி வந்த வன்பு ரிந்த கன்று மாயை நீக்கிசெல் [னன்.
பொருத ழித்த பின்னு மெய்திப் போரி னங்கிச் செய்து

(போ-ரை.) வேதமே அன்ன பெருமானாகிய தாய்மை பொருந்திய உருத்திர வன்னியர், அவனான வாதாவி செய்தமாயை நீங்குமாறு, நீண்ட வாயுவாஸ்திரத்தை எவுதலும், (அக்கணையானது,) கோபத்துடன்வந்து அவன் செய்த நினைந்த மாயைகளை நீக்கி, மேகங்களை (யெல்லாம்) மோதிச் சிதைத்தபிறகும், (வாதாவி உருத்திர வன்னியரெதிர்) கலந்து போர் புரிந்தான், (எ-று). (9)

எந்தை யுஞ்சி னந்து சித்ர பானு வான வேவினை
சிந்தை செய்து மந்த்ர மோதி விட்ட போதத் தீக்கணை
முந்தி பாவி தன்னி லுவ்வி தள்ளி மூழ்கி யொண்கடல்
வந்த தன்னி புட்ப மாரி வான ருடர் தூவினர்.

(போ-ரை.) எமது பெருமானான உருத்திர வன்னியரும் மிகுந்த சீற்றங்கொண்டு, (தேவியைத) தியானித்து, அக்கினியாஸ்திரத்தை, (அதற்குரிய) மந்திரத்தைச் செபித்து விட்டபோது, அந்த அக்கினியாஸ்திரம் முற்பட்டு வந்து, பாவியான வாதாவியினுடைய தலையை அறுத்து(க் கீழே)தள்ளி, ஒள்ளிய சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து (திரும்பி)வந்தது; (அதை) அறிந்த தேவலோகத்தவர், (மகிழ்ச்சியால்) மலர்மழை பொழிந்தனர், (எ-று).

ஓடி யொற்ற ரன்ன செய்தி யோத காம வல்லியும்
வாடி மோதி யான னத்தில் வந்த டைந்து போர்க்களந்
தேடி நோக்கி வீழ்ந்தெ ழுந்து தேம்பி மூர்ச்சை யாகிபின்
கூடு யிர்ப்பி னோடெ ழுந்து வாய டித்துக் கூவினள்.

(போ-ரை.) ஒற்றர்கள் ஓடிச்சென்று, அந்த செய்தியைக் கூறுதலும், (அதுகேட்ட) காமவல்லியும், வாட்டத்துடன் முகத்தில் மோதி அறைந்த வண்ணம் யுத்தகளம் வந்து, (தனது நாயகனிருக்குமிடம்)தேடிக்கண்டுபிடித்து, (அவன்மேல்) விழுந்தெழுந்து, தேம்பியழுது, மூர்ச்சை

யடைந்து,'பின் சுவாசமுண்டாக எழுந்து, வாயிலடித்துக் கொண்டு கூவியழுதாள், (எ-று). (11)

அறுசீராசிரிய விருத்தம்.

மன்னுறு மன்னரொடு வானுடர் தமையடக்கி
வாழ்வி னின்ற
கண்ணாளா கொண்டலினை யன்றுனி னடக்குமாங்
காண்ட லென்றோ
விண்ணோர் தஞ்சிறையை விடுத்திடெனப் பலகாலும்
விளம்பி னேனே
யென்னுமவ் வுரையை நீயிறத்த லறமாமோ
வெமது கோவே.

(பொ-ரை.) இவ்வுலகத்தை யாளும் அரசர்களுடன் தேவர்களையும் அடக்கி, (பெரு) வாழ்வில் நிலைத்த கண்ணாளா! அந்நாளில் வாயுவினை யடக்கிவைத்த (நினது) வலிமையை என்று (யான்) காண்பதுவோ? எமது தலைவனே! விண்ணாட்டுத் தேவர்களினுடைய சிறையை விடுவிப்பாயாக என்று பலமுறை கூறினேனே! அச்சொல்லை (சிறிதும்) மதியாமல் நீ (இவ்வண்ணம்) இறந்து கிடக்க வழிதேடியதும் தருமந்தானோ?, (எ-று). (12)

மாதுலனி னின்மொழியு மென்கனவு மதியாமல்
மன்று நீதா
னுதலனே யிவ்விடத்தில் வன்னியரா லழிந்தனையே
யாவா வந்தோ
கோதுடலம் யானாக நீயுயிராக் குடியிருந்தாய்
குணவொண் குன்றே
மாதவமே யென்வலியே நீபிரிந்தாய் நினைத்தொடர்ந்து
வருகின் றேனே.

(போ-ரை.) அம்மானான வீரசிங்கனது இனியசொற்களையும் எனது கனவையும் மதிக்காமல், அரசே! நீ இவ்விடத்தில் வன்னியரால் அழிந்த வறுமையாளனைப் போல் சாய்ந்து கிடக்கின்றனையே! ஆ! ஆ! ஐயோ! குற்றமான உடலம் யானாக, (அவ்வுடலில்) நீ உயிராகத் தங்கியிருந்தாய்; தூய குணக்குன்றே! (எனது) தவப்பேறே! எனது வன்மையின் பரிணாமமே! நீ பிரிந்தாயாதலின், (யான்) உன்னைத் தொடர்ந்து வருகின்றேன், (எ-று). (13)

என்னுமவ ளழுகுரலைப் பாசறையி னுளவன்னி
யிறைவன் கேட்டு
மன்னுசுமித் திரனைவிடுத் தலுமவரு மவர்கடமை
மதியின் தேற்றிப்
பன்னுசிவை சமுகமழைத் தனியிருந்த பதகமலம்
பணியச் செய்தான்
கன்னலெனு மொழியினர்க்கு யெமதன்னை விதிப்பய
கனிவிற் சொன்னாள்: [லைக்

(போ-ரை.) என்ற அக்காமவல்லியின் அழுகுரலை, பாசறையில் தங்கியிருந்த உருத்திர வன்னியர் கேட்டு, (பக்கத்திற்) பொருந்தியிருந்த சுமித்திரரை விடுத்தலும், அவரும் (விரைந்துசென்று,) அம்மாதரை (தனது) அறிவினால் (வருந்துதலினின்று) தெளியச்செய்து, (யாவராலும் சிறப்பித்துச் சொல்லப்பெறும்) உமாதேவியார் சமுகத்தில் அழைத்துச் சென்று, கருணையிருந்த அவரது திருவடித்தாமரைகளை வணங்குமாறு செய்தார்; எமது இறைவியார், கரும்பெனும் மொழியை யுடையவரான காமவல்லி முதலான மாதர்களுக்கு அன்புடன் விதியின் பயனைக் கூறினார், (எ-று). (14)

தேவர்களையும் முனிவர்களையும் இம்சித்ததும், அதனால் அவர்கள் வருந்தி சிவத்தினிடம் முறையிட்டதும், அப்பெருமான் உருத்திரவன்னியால் அவுணர் குலம் நாசமாகும் என்று அருளியதும் ஆகிய அனைத்தும், வாதாவி பிறந்ததற்குக் காரணமாயிருந்ததாகலின், தேவி, விதிப்பயனை கனிவிற் சொன்னாள் என்றார்.

உளத்தூய்மை தனக்கொத்த வுயர்வுறுவ ரன்னெறியி
னொழுகி நீவிர்
வளத்துறைதி ரெனவன்னை புகன்றிடலு மங்கையரு
முருத்ர வன்னி
யளக்கரெனி யெமதிறைவ னடிவணங்கி யெம்பதியி
னடைக வென்னத்
துளக்கமில மலரிதன் வருவலினி நாளையெனத்
திகழ்விற் சொன்னான்.

(பொ-ரை.) உள்ளத்தின் தூய்மைக்கு ஒத்த மேம்பாட்டை (உலகத்தவர்) அடைவர்; (ஆகலின், மாதர்கள்!) நீங்களும் அந்நெறியுடன் நடந்து, வளத்துடன் வாழ்வீர்களாக என்று உமாதேவியார் கூறுதலும், அம்மாதர்கள் உருத்திர வன்னியர் எனும் கிருபைக்கடலான எமது பெருமான் திருவடிகளை வணங்கி, (இறைவனே!) எமது வாசஸ்தானத்திற்கு எழுந்தருள்வீராக என்று கூறுதலும், அச்சமென்பதின்றிய நின்மலரான அப்பெருமான், நாளை (சூரியோதயமானதும்) வருவோம் என்று விளங்கக் கூறினார், (எ-று). (15)

காவலுறு தம்பதியை யடைமாதர் நாயகர்க்குச்
சடங்கு கண்டு
ஆவலொடு மொன்னகரை யலங்கரிக்க யன்னைசிவை
யனியி றேங்கி

மேவுறு வன்னிபடை யாவையுமே யெளிர்தலுணர்
கதிரின் செல்வன்
வாவுபரித் தேரேறிக் குணகடலின் மகிழ்வினுடன்
வந்து நின்றான்.

(பொ-ரை.) (அதன்பின்) காவல் பொருந்திய தமது நகரத்தை யடைந்த அம்மாதர்கள், (தங்கள் தங்கள்) கணவருக்கு(ச் செய்யவேண்டிய) சடங்குகளைச் செய்து, (உருத்திர வன்னியாரது வருகை கருதி,) அன்புடன் (தங்கள்) ஒள்ளிய நகரத்தை அலங்கரித்தலும், (யாவர்க்கும்) அன்னையான உமாதேவியாரது கருணையால் இறந்தும் மூர்ச்சித்தும் கிடந்த வன்னியர் சேனைகள் யாவும் விருப்பமுடன் எழுந்தோங்கி விளங்கவும், அஃதுணர்ந்த சூரியன், தாவிவரும் எழுபரி பூட்டிய தேரில் அமர்ந்து, மகிழ்ச்சியுடன் கிழக்குக்கடலில் உதயமானான். (எ-று).

சுமித்திரர் தேற்றிய முறையாலும், இறைவி அருளிய உபதேசத்தாலும் மனம் தேறிய காமவல்லி முதலானோர், உமாதேவியாரையும் முருகப்பரமனின் அம்சமான உருத்திர வன்னியரையும் உபசரிக்கும் வகையில், தம் குலத்து மாசு நீங்கும் எனக்கருதி அழைத்தற்கு இணங்கியபின், போர்க்களத்தில் இறந்து கிடந்த வன்னியர் சேனைகளைமட்டும் இறைவி எழுப்பினாள் என்க. (16)

பன்னிரண்டாம்போர்ச் சருக்கம் முற்றிற்று.

---

உ

# விருதுகள்பெற்று மீண்ட சருக்கம்.

அறுசீராசிரிய விருத்தம்.

வில்லுமிழ் பகழி சிந்தி விளைபஃ திரண்டு நாளாப்
புல்லிய சமரில் வன்னி விறல்பெறு புகழுஞ் சொற்றும்
எல்லுமிழ் விருது தாங்கி யெமதிறை யெழிலிற் போந்த
நல்லிதத் திகழ்வு தன்னை மகிழ்வுறத் தொகுத்துச் சொல்வாம்.

(பொ-ரை.) வில்லிலிருந்துவரும் அம்புகளைப் பொழிந்து, வளர்ந்த பன்னிரண்டு நாளாகச் செய்தபோரில், உருத்திர வன்னியர்க்கு (நேர்ந்த) விறல்பெற்ற புகழையும் கூறினோம்; (இனிமேல்,) எமதிறைவரான அவர், ஒளி வீசும் விருதுகளைத் தாங்கி அழகொடு புறப்பட்ட தூய்மையான செய்தியை, (யாவரும்) மகிழ்ச்சியடையத் தொகுத்துக் கூறுகின்றோம், (எ-று). (1)

கற்றையங் கதிர்கான் றெல்லே கவினுற வடைந்த வைகல்
தெற்றென வெழுந்துத் தெய்வ வளிமிகு தெளிவன் காலை
முற்றிய கடன்க ளாற்றி முகிழ்சிவை தொடர்தற் செய்ய
வெற்றிய படைக ளோடு வியத்தகு நகரிற் புக்கான்.

(பொ-ரை.) சூரியன் அடர்ந்த அழகிய கிரணங்களைப் பரப்பி அழகுபொருந்த உதயமான வைகறைவேளையில், தெய்வக்கருணை மிகுந்த அறிவின் உருவத்தரான உருத்திர வன்னியர் விரைந்தெழுந்து, காலைக்கடன்களை நிறைவேற்றி, விளக்கம் தங்கிய உமாதேவியார் தொடர்ந்துவர, (நேற்று காமவல்லிக்குக் கொடுத்த வாக்குறுதி

யின்படி,) சேனைகளுடன் (இரத்தினகரபுரமென்னும் அவூரது) வியக்கத்தகுந்த நகரத்துள் பிரவேசித்தார். (2)

மேனிலை யதனி னிட்ட மிளிர்விளக் குமிழுந் தூமம்
வானிமி ருலகப் பித்தி மலிதரு கறையைச் செய்ய
வானிவர் கொடிகள் நீவி வளர்கரி சகற்ற வோங்குங்
கானிமிர் வடைந்த ரத்ந கரபுரி யெழுச்சி கண்டான்.

(போ-ரை.) மேன்மாடத்தில் ஏற்றிவைத்த விளக்குக்களிலிருந்து வெளிவரும் புகையானது, ஆகாயத்தில் ஓங்கிய அண்டகோளங்களின் சுவர்களில் நிறைந்த மாசுண்டாம்படிச் செய்ய, (அம்மேன்மாடங்களிலிருந்து) ஆகாயம் அளாவக்கட்டிய கொடிகள், (காற்றில் அசைந்து அசைந்து அச்சுவர்களைத்) துடைத்து, (அச் சுவர்களில்) மிக்கிருந்த மாசுகளை நீக்கவும், உயர்ந்த சோலைகள் மிகுந்துள்ள இரத்நகரபுரம் (எனும் நகரம், தனது வருகை கருதி காமவல்லியால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்) எழுச்சியை, (உருத்திர வன்னியர் படைகளுடன்) பார்த்தார்.

வந்தன னிறைவ னென்ன வுளத்தெழு மகிழ்வு பொங்கக்
கந்தடு கயமுந் தேருந் துரகதங் கனிவிற் சூழ
முந்துறு விழைவின் வல்லி முகிழ்படை யனுப்பி மிக்க
வந்தனை புரிவொ டேற்க வளர்மனை யடைதற் செய்தான்.

(போ-ரை.) முதன்மைபொருந்திய காமவல்லி, உருத்திர வன்னியர் (நகரத்துள்) நுழைந்தனர் என்று (தெரிந்துகொண்டு,) மனத்தில் எழுந்த மகிழ்ச்சி அதிகரிக்க, கட்டுத்தறியையும் முறிக்கும் (வலிமைமிக்க) யானைகள், தேர்கள், குதிரைகள் முதலியன விழைவுடன் சூழ்ந்துசெல்லும் விளக்கந் தங்கிய சேனைகளை அனுப்பி, அன்புமிக்க வணக்கத்துடன் வரவேற்க, (உருத்திர வன்னியர் தன்னுடன் வந்தவர்களோடு அவளது) அரண்மனையை யடைந்தார், (எ-று). (4)

ஆர்தரு தரும வல்லி யளிமிகு மதிப னோடு
நேர்தரு வரிசைக் கேற்ப நிறுத்தணை யமர்தற் செய்ய
வேரியற் கோதை காம வல்லியும் விடுக்க வந்த
நேரிய லமர ரோடு வணங்கினள் நலத்தி னின்றாள்.

(போ-ரை.) (எங்கும்) நிறைந்த தருமவல்லியான உமாதேவியார், கருணைமிகுந்த உருத்திர வன்னியருடன் பொருந்திய (அவரவர்களின்) தகுதிக்கு ஏற்றவாறு அமைத்திருந்த ஆசனங்களில் அமர்தலும், (அச்சமயம்,) தேன்நிறைந்த கூந்தலை யுடைய காமவல்லி, (உருத்திர வன்னியர் உத்தரவிடுதற்கு முன் தன் கடமையெனஎண்ணி) சிறைவிடுக்க(த் தொடர்ந்து) வந்த நேர்மையமைந்த தேவர்களுடன், (தேவியையும் உருத்திர வன்னியரையும்) வணங்கி, பயபக்தி விசுவாசத்துடன் (ஒருபுறம்) ஒதுங்கி நின்றாள், (எ-று). (5)

அஞ்சமென் றடைந்த வான ருடரைத் தகவி னோக்கி
யஞ்சலென் றெமது தேவி யதிபனு மளித்தல் செய்ய
உஞ்சன மினியென் றன்னா ருகப்புட னுரைக்க வன்னை
மஞ்சன குழலி னாளின் மதிமுக நோக்கிக் கூறும்.

(போ-ரை.) அபயம் என்று அடைந்த தேவர்களை எமது பரசிவையும் உருத்திர வன்னியரும் கருணையொடு நோக்கி, (இனி நீங்கள்) அஞ்சுதலொழிமின் எனக்கூறித் திருவருள் வழங்க, (அவுணராதியரை யழித்தே பெருமான் தங்களைச் சிறைமீட்டான் என்பதைக் குறிப்பாலறிந்த) அத்தேவர்கள், இனி உய்ந்தோம் என்று மகிழ்ச்சியுடன் கூறுதலும், உமாதேவியார், மேகமொத்த கரிய கூந்தலையுடைய காமவல்லியின் திங்களையொத்த முகத்தை நோக்கி(ப் பின்வருமாறு) கூறுவார், (எ-று). (6)

மாணுற யிளமைச் சேயாம் நினதுயர் மழவு காத்து
ஏணுறு வயதி லன்று னெழிலுற மகுடஞ் சூட்டிப்
பேணுதி யறத்துப் பேறு பிறங்குமத் திகதி காறுங்
காணுதி யரசின் செல்வ மெனுமுரை கருத்தி னேற்றாள்.

(பொ-ரை.) (ஏ! காமவல்லி!) மிகவும் இளமைவாய்ந்த நினது கைக்குழந்தையைச் சிறப்பாக வளர்த்து, (அச் சிறுவன்) வலிமையடையும் (தக்க) பருவத்தில் அவனுக்கு அழகமைய முடிசூட்டி, தருமப்பயனை வளர்ப்பாயாக; விளங்கும் அந்நாள் வரும்வரை அரசியலை நடத்துவாயாக என்று அருளிய மொழிகளை, (காமவல்லி மனத்திற் பொருந்தக் கொண்டனள், (எ-று).

இதனால் காமவல்லிக்குக் கைக்குழந்தை ஒன்று இருந்ததென்பது புலனாகின்றது. (7)

நவ்வியம் விழியள் பின்னு னலமுற நோக்கி யெந்தை
செவ்விய வுருத்ர வன்னிச் செழியனை யிறைஞ்சிக் காந்தன்
றெவ்வடு முறையிற் பெற்ற திகழ்விரு தனைத்து மீந்துப்
பவ்வமென் னெளியா யெம்மின் பவப்பிணி யகற்று கென்றாள்.

(பொ-ரை.) மானொத்த அழகிய கண்களையுடைய காமவல்லி, மற்றும் (தமது வசமிமே) மேன்மையடைய, எமது பெருமானை செவ்விய உருத்திர வன்னியத் தெய்வத்தை நோக்கி வணங்கி, (தனது) நாயகன் (தேவர்களான தனது) பகைவர்களை வென்றிகொண்ட முறையில் பெற்றிருந்த விளக்கந் தங்கிய விருதுகள் யாவற்றையும், (அவர்கரத்தில் பணிவுடன்) கொடுத்து, கடலெனப் பெருகிய கருணையாளரே! எங்களது பிறவிநோயை அகற்றுவீராக என்று பிரார்த்தித்தாள், (எ-று).

எம்மின் என்றது, இனதாவியின் மனைவியான மாயாவல்லி முதலானோரையுஞ் சேர்த்துக் கூறியதென்க. உருத்

திர வன்னியர் முருகப்பரமனது அம்சம் என்பதைத் தனது உள்ளுணர்வால் உணர்ந்த காமவல்லி, 'பவப்பிணி யகற்றுக' என்று பிரார்த்திக்கின்றாள் என்க. (8)

அம்மொழி யுணர்ந்த வண்ண லணங்குகே ளறங்க ளார்ந்த
செம்மறை வழிவ ழாது தெளிவொடு மொழுகித் தூய
கைம்மையின் விரத மாற்றிக் கதியடை கென்று சாற்றி
யெம்மையுமளித்தல்செய்தான் படையொடுமெழுதற்செய்தான்.

(பொ-ரை.) (காமவல்லியுரைத்த) அச்சொற்களை உணர்ந்த எம்மைக் காத்துவரும் உருத்திர வன்னியர், (பெண்ணே!) தருமநிலை பொருந்திய செம்மையான வேத நெறி தவறாது தெளிந்த நெறியொடு நடந்து, தூய்மையான கைம்மை விரதம் பேணியிருந்து, (இறுதியில், (எமது) வீடுபேற்றையடைவாயாக என்று கூறி, (அதன் பின் தனது) சேனைகளுடன் எழுந்தார், (எ-று). (9)

வானவர் துணரின் மாரி பொழிதர வைய மேறித்
தேனமர் குழலெம் மன்னை திகழரி யூர்ந்து செல்லத்
தானைக ளுடனல் லைந்து தநயருந் தொடர்தற் செய்யத்
தானவர் குலத்தின் காலன் தகுவிடை பெற்று மீண்டான்.

(பொ-ரை.) அசுரகுல காலரான உருத்திர வன்னியர், தேவர்கள் மலர்மாரி பொழிய இரதத்தில் ஏறியமர்ந்து, தேன்பொருந்திய கூந்தலையுடைய பரசிவை, விளங்கும் சிங்கவாகனத்தில் ஏறி (முன்னே) செல்லவும், சேனைகளுடன் சிறந்த ஐந்து புதல்வர்களும் தொடர்ந்து வரவும், (வழிவிடவந்த காமவல்லி முதலானோரிடம்) தக்கபடி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார், (எ-று). (10)

வாலிதி னடையு மண்ணல் வழிவரு மளவில் கங்கை
பாலடைந் ததனின் மூழ்கிப் படையொடும் பளகி லாது

சாலவொண் ணதிகடோறுந் தகவொடும்படிந்து மேலாம்
ஆலமர் களத்தான் கோயி லளவில பணிந்து போற்றி.

(போ-ரை.) தாய்மையுடன் புறப்பட்ட உருத்திர வன்னியர் வழியே வரும்போது, கங்கையை யடைந்து, அதனில் சேனைகளுடன் நீராடி, (அவ்வண்ணமே) குற்றமில்லாத மிகுந்த பல ஒள்ளிய நதிகள் தோறும் முழுகி, மேன்மையான திருநீலகண்டப் பெருமான் (எழுந்தருளியுள்ள) அளவில்லாத திருக்கோயிலை (யடைந்து, அங்கங்கே அவ்விறைவனை) வணங்கித் துதித்து. குளகம். (11)

அமலைபன் றுரைத்த வண்ட கோளமு தனைத்து மெய்தி
விமலனங் கருவாழ விகிர்தரை விடுத்துப் போந்து
எமையளி யிறைவ னையு மெழிற்சிவ புரத்தை யண்மி
நிமலனி னருளை தார்ந்து நீணில மடைதற் செய்தான்.

(போ-ரை.) உருத்திர வன்னியர், அன்று உமாதேவியார் அருளிய அண்டங்கள் அனைத்தும் சென்று, அந்த அந்த அண்டங்களில் வாழுமாறு (தம்மால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட) தூயவர்களைச் செலுத்தி, (ஆங்கிருந்து) சென்று, எம்மை அளிக்கும் சிவபிரான் வீற்றிருக்கும் அழகிய திருக்கயிலையை யடைந்து, மலைமிதனை அப்பரமனது திருவருளை மிகுதியாகப் பெற்று, (பின் தம்மைத் தொடர்ந்த பல தேவர்களுடன் படைகள் தொடர்ந்துவர,) பெரிய இந்நிலவுலகத்தை யடைந்தார்.

எழுசீராசிரிய விருத்தம்.

கேசரித் துவசங் குயவரித் தோகை
சிலைப்படங் கெழுபுழல் கதலி
மாசக லெகினத் துகிலொடு மன்று
மலைமை மதிவிலோ தனமும்

பேசுறு முவணக் கொடியுயர் தேரும்
பிறங்கிய தவளமா யானை
வாசியின் முளரி கடுக்கையந் தாமம்
வில்மணித் தூபவொண் கலசம்.

(பொ-ரை.) சிங்கக்கொடியும், புலிக்கொடியும், விற்கொடியும், மிக்க மீன்கொடியும், குற்றமற்ற அன்னக்கொடியுடன் மதிக்க நிலைத்தமைத்த மயில்கொடியும், (யாவரும் சிறப்பித்துக்) கூறும் கருடக்கொடியும், (வானளாவ) உயர்ந்த தேரும், விளங்கிய பெரிய வெள்ளையானையும், சிறந்த அக்கினிக் குதிரையும், அழகிய கொன்றை மாலையும்,, வில்மணியும், ஒள்ளிய சாம்ப்ராணிக் கலசமும்.

கேசரி-சிங்கம். குயவரி-புலி. புழல்-மீன். எகினம்-அன்னம். உவணன்-கருடன். தவளம்-வெள்ளை. இன் முளரி வாசி யென்க; இனிய அக்கினிக்குதிரை யென்பது பொருள். கடுக்கை-கொன்றை. துவசம், தோகை, படம், கதலி, துகில், விலோதனம் முதலிய அனைத்தும் கொடி யெனும் ஒரே பொருளில் வந்தன; இதனை பொருட்பின் வருநிலையணி யென்பர். இது, குளகம். (18)

சங்கொடு திகிரி நடுப்பகல் திவட்டி
சடக்கழ லணைமுடி படலை
யங்கிரி களாஞ்சி தவளவண் டெனல்
லருங்குழற் றாளவொண் குடையுங்
தூங்கவெண் கொடிசி கரசித கலிங்கந்
துவத்தியும் வளைதடி பரிசை
மங்குத லிலவாத் தூணிவெங் கலக்கோல்
மதிநக ராசய பேரி.

(பொ-ரை.) சங்கு, சக்கரம், பகல் தீவட்டி, அறுசாற் பீடம், மகுடதோரணம், பாதகளாஞ்சி, தவளச்

சங்கு முதலியவற்றுடன், சிறந்த அருமையான புள்ளாங்குழல், ஒள்ளிய முத்துக்குடை, தூய்மையான வெள்ளைக் கொடி, சாமரை, வெள்ளைப்பாவாடை, வாள், வளைதடி, கேடயம், குறைதலில்லா அம்புறுத்தூணி, வெங்கலக் கொம்பு, மதிக்கத்தக்க நகரா, சயபேரி, (எ-று).

திகிரி-சக்கரம். தீவட்டியென்பது, திவட்டியென்றுயது. சடக்கமுல் அனை-அறுகாற்பீடம். முடிபடலை-மகுட தோரணம். அங்கிரி-பாதம். வண்டு-சங்கு. சிகரம்-சாமரை. சிதகலிங்கம்-வெள்ளைப்பாவாடை. தாவத்தி யென்பது ஓசைகருதி தவத்தியென்றாயது; தாவத்தி-வாள். பரிசை-கேடயம். தூணி-அம்பிருக்குங்கூடு. நகரா, சயபேரி இரண்டும்-வாத்தியப் பெயர். (14)

என்றுரை விருது முப்பஃ திரண்டு
மெழிலொடு புடைவர வருளார்
மன்றுறை யிறைவன் மதலையும் பதியை
மகிழ்வுட னடைந்துநற் காதல்
துன்றிய மனைய ரிருவரு மெதிர்கொண்
டிடமனை புகுந்துநற் றேவ
ரன்றகங் களிக்க விழைவிருந் தாற்றி
யரியணை யமர்ந்தன னதிபன்.

(பொ-ரை.) என்று சொல்லப்படும் முப்பத்திரண்டு விருதுகளும் அழகுடன் (தன்னைச்) சூழ்ந்துவர, அருள் நிறைந்த சிற்றம்பலத்தில் எழுந்தருளிய சிவபிரானது புதல்வரான உருத்திர வன்னியர், மகிழ்ச்சியுடன் (தமது) உருத்திர வன்னிய புரம் எனும் நகரத்தையடைந்து, சிறந்த காதல் மிக்க (மந்திரமாலை, லாவண்ய சாரவல்லி யெனும்) இருவரும் எதிர்கொள்ள அரண்மனையிற் புகுந்து, அன்று, மேன்மையுள்ள தேவர்கள் உள்ளங் குதூ

178




உருத்திரவன்னிய மஹாராஜன் வெற்றிபெற்ற 32-விருதுகளுடன்
தனது நகரத்திற்கு வருதல்.

179



களிக்க விரும்பத்தக்க விருந்தொன்று நடத்தி, (அதன் பின் பழையபடி) தமது சிங்காதனத்தில் ஏறியமர்ந்தார்.

வானவர் பலநா ளமலனின் பதியில்
வதிந்தபின் விடைகொடு சிறந்த
தானதந் நகரை யடைந்தனர் திகழு
மரிவைய ரொடுபல முனிவோ
ரினவ ருவகை யொடுதம தலத்தை
யடைந்தன ரருந்தவம் புரிவான்
மானெனும் விழியர் மகரொடு மகிமை
யளித்தனன் வன்னிய மகிபன்.

(பொ-ரை.) தேவர்கள் பலநாள்வரை உருத்திரவன்னியபுரத்தில் இருந்தபிறகு, (ஒருநாள் அப்பரமனிடம்) விடைபெற்றுக் கொண்டு, விளங்கிய மனைவியருடன் தங்கள் தங்கள் நகரம்போய்ச் சேர்ந்தனர்; (அவ்வண்ணமே) பல முனிவர்களும் மகிழ்ச்சியுடன் அருந்தவம் செய்யத் தங்கள் வாசஸ்தானத்தை எய்தினர்; (அதன் பின்,) மானொத்த விழியினரான தேவியருடனும், (ஐந்து) புதல்வருடனும், உருத்திர வன்னிய மன்னர் நிலவுலகத்தை தருமநெறிப்படி காத்து, அரசாட்சி செய்துகொண்டு இருந்தார், (எ-று).

உருத்திர வன்னியர் அவுணர்களை நாசஞ்செய்தமையின், வானவர்கள் பொன்னாட்டை தம் நகர் என்று உரிமை கொண்டாடவும், அவர்களது மனைவியர் திகழ்வு பெறவும், முனிவரர் உவகைகொள்ளவும் நேர்ந்ததென்க.

விருதுகள்பெற்று மீண்ட சருக்கம் முற்றிற்று.

# வன்னிமன்னர்
# அரசாட்சி சருக்கம்.

கலிநிலைத்துறை.

கருது வன்னிய னிறைவியி னருளினாற் கவினும்
விருதொ டும்பதி யடைந்தது விளம்பினு மினிமேற்
சுருதி யேத்துற மணத்தொடு சுதர்தமக் கரசும்
வருதற் செய்தவத் தகுதியு நலமுற வகுப்பாம்.

(பொ-ரை.) (யாவராலும்) தியானிக்கப்பெறும் உருத்திர வன்னியர், உமாதேவியாரின் திருவருளால் முப்பத்திரண்டு விருதுகளுடன் (தமது) நகரத்தையடைந்ததைக் கூறினோம்; இனிமேல், (அப்பெருமான் தனது) புதல்வர்களான ஐவர்க்கும், வேதங்கள் அனைத்தும் துதிக்கத் திருமணத்துடன் அரசியலும் அமையும்படிச் செய்த அந்த தன்மையையுங் கூறுவோம், (எ-று). (1)

மலைம கட்சொன வுரைப்படி மகிபனுண் மறையோர்
குலமு வந்திட வமரரின் குலமழைத் துயர்வாம்
நிலம ளித்திடு மதிபரை யறிஞரை நிகழும்
நலம ணச்செய லதற்குள பணிசெய நவின்றான்.

(பொ-ரை.) உருத்திர வன்னியர், உமாதேவியார் (குறிப்பிட்டு) அருளிச்செய்த வண்ணம், தூய அந்தணர் குலம் உவகைபெறவும், தேவர்களை(த் தூதர் மூலம்) வரவழைத்து, (அவர்களையும்,) உயர்வு பொருந்திய நிலவுலகத்தைக் காக்கும் (மற்ற) அரசர்களையும், புலவர்களையும் நோக்கி,) சிறந்த (ஐந்து புதல்வர்களுக்கும்) திருமணச் செயல் (நிகழ இருத்தலின்,) அதற்குரிய திருப்பணிகளைச் செய்யுமாறு கூறினர், (எ-று). (2)

பொன்னி னுடென ருத்திர புரமது பொலிய
மன்னி விச்சுவ னனிபல வளித்தபின் மதியில்
துன்னு தூதரால் பலநகர்க் குணர்த்தலுந் துகளில்
மன்ன ருந்தவ ரொடுபலர் மனையொடு மடைந்தார்.

(பொ-ரை.) (அச்சமயம்) விச்சுவகருமன் எனும் தேவசிற்பி (அங்கு) வந்து, உருத்திர வன்னியபுரம் பொன்னுடெனப் பொலிவுபெற அலங்காரஞ்செய்தபிறகு, (திருமணச்செயல் நடைபெறும் தேதியை, அரசர் பெருமான்) அறிவில் நிறைந்த தூதர்களைக் கொண்டு பல உலகத்தவர்க்குங் கூற, குற்றமற்ற மன்னர்களும், அருந்தவ முனிவர்களுடன் மற்றும் பலரும், (தம்தம்) மனைவியருடன் வந்து சேர்ந்தனர், (எ-று). (3)

வந்த வர்தமை யெதிர்கொடு மகபதி யழைக்க
முந்து துந்துபி முதலிய பலவியம் முழங்கச்
சந்த னம்பனி மழைதனை வருணனுந் தசவின்
சிந்த வோமவக் கினியது செழித்தெழுந் ததுவே.

(பொ-ரை.) இந்திரன் (திருமணங்காண வந்தவர்களை எதிர்கொண்டு சென்று (உபசரித்து) அழைக்கவும், முதன்மை வாய்ந்த துந்துபி முதலிய பல வாத்தியங்கள் (ஏககாலத்தில்) ஒலிக்கவும், வருணனும் சந்தனம் பனிநீர் ஆதியவைகளைத் தகுதியொடு சொரியவும், (வசிட்டரால்) திருமண வேள்வி செழித்தெழுந்து வளர்ந்தது, (எ-று).

தூய ருந்ததி மகிழ்நனே சடங்கெலா மியற்ற
நேய மெய்திய வுயர்நல முழுத்தமு நிகழ
ஆய போதுநற் றருமனு மளிவசந் திகையை
ஏய நீலவொண் களற்கென வுயர்மண மிசைத்தார்.

(பொ-ரை.) தூய்மை பொருந்திய அருந்ததி கணவரான வசிட்ட முனிவரே மணச்சடங்குகள் அனைத்தும்

செய்யவும், நட்புபொருந்திய உயர்ந்த நன்முகூர்த்தமும் நேர, அப்போது, சிறந்த தருமன் பெற்ற வசந்திகாதேவி யென்பவளை, (அறநெறி) அமைந்த தூயவரான நீலகண்ட வன்னியருக்கு உரியமனையெனச் சிறந்த திருமணத்தைச் செய்தனர், (எ-று).

நீலகண்ட வன்னியர் வசந்திகையை மணந்தார் என்றபடி. (5)

வருணன் செய்தவ மெனவளி வருளமஞ் சரியைக்
கருணை மிக்குறு வயிரவொண் கவின்புயன் றனக்குந்
தருண மாமொழி வளியருள் கந்தமஞ் சுளையைப்
பருணி தர்புகழ் வரநதி பாலனுக் கெனவும்.

(பொ-ரை.) கருணைமிகுந்த தூய அழகுடைய வச்சிரவாகு வன்னியருக்கு, வருணன் தான் செய்த தவப்பேறு எனும்படி பெற்ற வருளமஞ்சரித் தேவியையும், புலவர்கள் புகழும் கங்காபால வன்னியருக்கு, வாயுதேவன் பெற்ற சிறந்தமேன்மையான சொற்களையுடைய கந்தமஞ்சுளா தேவியையும், (எ-று). குளகம்.

மூன்றாவதடியிற் போந்த வளி-வாயுதேவன் எனும் பொருளது. பருணிதர்-புலவர். வரநதிபாலன்-கங்கா பால வன்னியர். (6)

கின்ன ரர்க்கிறை யருளிய கெழுநிதிப் படலை
தன்னை சாம்பவன் னிருதிமத் தியநகர் தெரிமா
மன்னு தோகைய னிரத்தின மஞ்சரிச் சுதையைத்
துன்னு பாசுப தற்கெனத் திருமணம் புரிந்தார்.

(பொ-ரை.) சாம்பவ வன்னியருக்கு, கின்னரர்களுக்குத் தலைவனா குபேரன் பெற்ற சிறந்த சுவர்ணமாலிகா தேவியையும், நிருதிமத்திய தேசத்தில் இருந்து அரசாளும சிங்கத்துவசன் பெற்ற இரத்தின மஞ்சரித்தேவியை,

(சர்வ லட்சணங்களும்) நிறைந்த பாசுபத வன்னியர்க்கெனவும், (உருத்திர வன்னியர் வானவர்களாதியோருடனிருந்து) திருமணஞ் செய்வித்தார், (எ-று).

நிதிப்படலை - சுவர்னமாளிகை. தெரிமாத்தோகையன்-சிங்கத்துவசன். (7)

ஐந்து மாமகார்க் கியல்மண நடந்தபி னதிபன்
வந்த வந்தண ரதிஞரு மகிழ்தர வகுத்த
மூந்து தானமு மளித்தன னமு திர்சுவை யமுத
மிந்தி ரன்முத லனைவரு மருந்தின ரிருந்தார்.

(பொ-ரை.) (உருத்திர வன்னியர்,) ஐந்து புதல்வர்களுக்கும் பொருந்திய திருமணம் நிறைவேறிய பிறகு, வந்திருந்த அந்தணர், புலவர்களாதியோர் மகிழ்ச்சியடையும்படி, ஏற்பாடு செய்திருந்த முதன்மையான தானங்களையும் செய்தார்; (அதன்பின்,) இந்திரன் முதலாக உள்ள அனைவரும், மிக்க இனிமையமைந்த அமுதத்தை உண்டு, (மாளிகையிலேயே) தங்கியிருந்தனர். (8)

அம்மை சொற்படி யமலனு மைந்துமன் னகரிற்
சிம்ம நல்லணை விசுவனாற் சமைத்திடப் பணிக்கச்
செம்மை யம்முகி லூர்பவன் சுதன்மையே யெனவு
மம்ம கித்தலத் தளித்தனன் மதிமிகு மவனே.

(பொ-ரை.) உருத்திர வன்னியர், (அதன்பின்) தேவியுரைத்தபடி (காஞ்சிபுரம், அரியனூர், சிதம்பரம், சம்புகேச்சுரம், சிவகிரியாகிய) நிலைபெற்ற ஐந்து நகரங்களிலும், சிறந்த (ஐந்து) சிங்காதனங்களை விசுவகர்மனால் அமைக்கும்படி திட்டஞ்செய்ய, அறிவுமிக்க அவன், அந்த தலங்களில், அழகிய மேகவாகனனான இந்திரனது நலம்மிக்க சுதன்மைப்பெயர் ஆசனம் எனும்படி, (ஐந்து சிங்காதனங்களை) அமைத்தனன், (எ-று). (9)

அறுசீராசிரிய விருத்தம்.

மங்கலக் கானம் பாட மறைமிக வொலிக்கத் தூய
சங்கின முழங்கப் பாண்டி நண்ணுமை குமுற மற்றப்
பொங்குபல்லியங்க ளோங்கப் பொலிவுறு மைந்து சேயர்
க்கபி டேக மாதி நடத்தின ரகம கிழ்ந்தார்.

(பொ-ரை.) (அரம்பையர்) மங்கலகீதம் பாடவும், வேதபாராயணம் மிக்கு ஒலிக்கவும், தூய்மைபொருந்திய சங்கினது குலம் முழக்கம் செய்யவும், கைத்தாளம், மத்தளம் முதலியன பேரோசை செய்யவும், மற்ற மிகுந்த பல வாத்தியங்கள் பெரிதிசைக்கவும், அழகுமிகுந்த ஐந்து புதல்வர்களுக்கும், அவ்விடத்தில் அபிடேகம் முதலியண நடத்தி மனங்களித்தனர், (எ-று). (10)

சம்புவென் முனியுந் தூய வசிட்டனுந் தகுதி வாய்ந்த
ஐம்பெருந் தலத்தி லைந்து புதல்வரு மரசு செய்யப்
பம்பிய மணிக ளார்ந்த பகர்முடி கவித்து வாழ்த்தி
யும்பரும் பொழினு மாரப் புரிந்தன ருவகை மாதோ.

(பொ-ரை.) சம்புமுனிவரும், தூயரான வசிட்டமுனிவரும், தகவமைந்த (முற்குறித்த) பெரிய ஐந்து தலங்களில், ஐந்து புதல்வர்களும் இருந்து அரசு செய்தற்கு, அடர்ந்த மணிகள் பதித்த (சிறப்பித்துச்) சொல்லப்பெற்ற முடிசூட்டி, ஆசிர்வதித்து, விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் மகிழ்ச்சியடையச் செய்தனர். (11)

கம்பைநதிக் கரையதனிற் பஃதிரண்டு திருநாமங்
கவினி யைந்து
பம்புதலஞ் சிறந்துபிற தலங்களொடு மதிசயங்கள்
பலவும் வாய்ந்த
யெம்பரையு மிருகாழி நெல்லதனு லெண்ணான்கு
தருமங் கண்ட
நம்புபதிக் கச்சிதனி மணிக்களனு மடைந்தரசு
நடத்தி னுனல்.

(பொ-ரை.)(பிறகு,) கம்பாநதியின் கரையில், பன்னிரண்டு திருநாமங்கள் விளங்கப்பெற்று, (நல்லகம்பம், வெள்ளக்கம்பம், கள்ளக்கம்பம், திருமயானம், வாலீச்சுரம் எனும்) நிறைவுபெற்ற பஞ்சப்பிரம தலம் சிறந்திருக்கப் பெற்று, (திருக்கச்சபாலையம், காரோணம் பணாதரீச்சரம், சுரகரீசரம், பராசரீசம், வீரட்டகாசம், மாணீச்சரம், உருத்திர கோடி, மகாசாத்தன்றளி, இவைகளன்றி திருக்கச்சிநெறிக் காரைக்காடு, திருவேகம்பம், திருக்கச்சிமேற்றளி, திருவநேகங்காவதம், திருவோணகாந்தன்றளி முதலிய) மற்ற தலங்களுடன் பலப்பல அதிசயங்கள் வாய்ந்ததும், எமது தெய்வமான காமாட்சி தேவியாரும் இருநாழி நெல்லால் முப்பத்திரண்டு தருமங்களையும் விளங்கச் செய்த (யாவரும்) விரும்பும் காஞ்சிபுரத்தை, நீலகண்டவன்னியர் (முடிசூட்டிக்கொண்டபின்) அடைந்து, (தருமநெறியுடன்) அரசாட்சி செய்துகொண்டு இருந்தார், (எ-று).

வெள்ளக்கம்பம் - பிரமன் பூசித்தது; கள்ளக்கம்பம்-வாமனன் பூசித்தது. நல்லகம்பம்-உருத்திரன் பூசித்தது. திருமயானம்-வானவரை உடல்மெலியச் செய்த வண்டாசுரனை யழித்து உலகத்தைக் காத்தது. வாலீச்சுரம் - எதிர்த்தவர் வலியிற் பாதி தானடைய வாலி வரம் பெற்றது. பொழிப்புரையின் இறுதியிற்கண்ட ஐந்து தலங்கட்குத் தனித் திருப்பதிகங்க ளிருக்கின்றன. பலப்பல அதிசயங்களை, காஞ்சி புராணத்தில் காண்க. (12)

தெரியலணித் திகழ்வயிர புயனுயர்ந்த
செழுமையணி யரிய னாரும்
வரநதிசேய் பிருமகியிற் கதிகாட்டுஞ்
சிதம்பரமும் வளரா னைக்கா
பெரியபதி சாம்பவன்றன் பெயர்க்கிளையக்
கதியளிக்கும் பெரிய சைவ
கிரியதனைப் பசுபதனுந் தருமநெறி
வழுவாமற் காக்க லானார்.

(பொ-ரை.) மலர்மாலை சூடி விளங்கும் வச்சிரவாகு வன்னியர், உயர்ந்த வளத்தை யளிக்கும் அரியலூரையும், கங்காபால வன்னியர், நிலவுலகத்தில் (தரிசித்த மாத்திரத்தா) வீடுபேற்றை வழங்கும் சிதம்பரத்தையும், சாம்பவ வன்னியர், வளர்ச்சி பெற்ற பெரிய திருவானைக்கா என்னும் தலத்தையும், பாசுபதவன்னியர், தனது பெயருக்குப் பொருந்த அருள்மணங் கொழிக்கும் பெருமை பொருந்திய சிவகிரியையும், (அரச) தருமம் வழுவாதபடி (நடத்திக்) காத்தனர், (எ-று). (13)

சுமித்திரரு மினம்பலரு மணம்புரிந்து
    மனையறத்திற் சுகித்து வாழ
வழுதையுண மிகவளித்த புலவோர்தம்
    வரிசையுட னனைத்துப் பேறு
மிமிழ்திரைய தெனச்சூழ வைம்புதல்வ
    ராசாட்சி யெழிலு நோக்கி
யெமதிறைவ னணவோர்க்கும் பதிக்கேகக்
    கொடுத்துவிடை யினிது வாழ்ந்தான்.

(பொ-ரை.) சுமித்திரரும், (அன்றுவேள்வியிலிருந்து எழுந்த) மற்றும் பலரும், திருமணஞ் செய்துகொண்டு இல்லறத்தில் இன்பமடைந்து வாழவும், உண்ணுதற்குச் சிறந்த அமுதத்தை மிகுதியாகக் கொடுத்த தேவர்களுடைய (சீதன) வரிசைகளுடன், மற்ற எல்லாச் செல்வங்களும் ஒலிக்கும் கடலென (ப்பரவி) சுற்றியிருக்கவும், (தமது) ஐந்து புதல்வர்களது அரசாட்சி புரியும் அழகையும் எமது தெய்வமான உருத்திரவன்னியர் பார்த்து, (திருமணம் பட்டாபிடேகம் இரண்டையுங் கண்டுகளிக்க வந்த) யாவருக்கும் (அவர்களது) இருப்பிடத்திற்குச் செல்லுமாறு விடைகொடுத்து, இனிதாக வாழ்ந்திருந்தார், (எ-று). (14)

வன்னிமன்னர் அரசாட்சி சருக்கம் முற்றிற்று.

183



உருத்திர வன்னிய மகாராஜன்
அரசாட்சிச் சிறப்பு.

உ

# அருள்பெற்ற சருக்கம்.

கலிவிருத்தம்.

ஓங்கிய பெரும்புக ழுயரும் வன்னியர்
தாங்கிய வரசியல் சாற்றி னுமினி
பாங்கினி லவர்குலம் பாரிற் பார்ப்பதி
யாங்களி யருள்பெற லான தோதுவாம்.

(பொ-ரை.) உயர்ந்த பெருங்கீர்த்தி வளரப்பெற்ற வன்னியர்கள், அரசியல் நடத்திவந்த வரலாற்றைக் கூறினேம்; இனிமேல், அவர்களது வமிசம் நிலவுலகத்தில் அழகுடன் உமாதேவியார் அளித்த திருவருளைப் பெற்ற தன்மையையுஞ் சொல்கின்றேம், (எ-று). ஆங்கு-அசை.

அன்னவ ருலகினை யளித்தல் செய்தபோ
துன்னியெம் மிறைவனை யுபரு மாமுனி
தன்னிக ரில்பரன் சம்பு கேத்திரம்
மன்னினா னுவனின் மகிழ்ந்து நோற்கவே.

(பொ-ரை.) உருத்திரவன்னியரும் புதல்வர்களும் தருமநெறிப்படி உலகத்தைக் காத்து வந்தபோது, எமது சிவபிரானைத் தியானஞ் செய்து (அதனால்) உயர்வு பெற்ற சிறந்த சம்புமுனிவர், தனக்கு ஒருவரும் ஒப்பில்லாத இறைவனது திருவானைக்கா (என்னும்) தலத்தையடைந்து, நாவல் வனத்தில் மகிழ்ச்சியுடன் தவஞ்செய்து கொண்டிருந்தனர், (எ-று). (2)

எண்டரு சிவபர னெழிலி னோக்கமோ
பண்டறிந் திலவொரு பழமுன் வீழ்ந்தது
கண்டனன் வியந்தனன் கனியைக் கண்களால்
கொண்டனன் புளகமு மதித்துக் கூறுவான்.

(பொ-ரை.) (அப்போது, யாவரும்) எண்ணும் தகுதியை யுடைய சிவபிரானது அழகிய திருவருள் நோக்கங்

தானோ? (யாதோ! யாவர் அறிவர்;) இதற்கு முன் (எவரும்) கண்டறியாத ஒப்பற்ற நாவல் கனியொன்று, (தவஞ்செய்யும் சம்புமுனிவர்) எதிரில் விழுந்தது; (அவர்) அந்தக்கனியைக் கண்களால் நோக்கினார்; (அளவிறந்த) அதிசயம் அடைந்தார்: (தேகமுழுதும்) மயிர்க்கூச்சிட யோசித்து, (பின்வருமாறு) கூறுவார், (எ-று). (3)

அற்புதக் கனியிஃ தடைய வொண்ணுமோ
பொற்பம ரிதன்சுவை புலவ ரோர்வரோ
சிற்பர னுகர்தர வளித்த றாய்மையாம்
விற்பருப் பதனிடம் விரைவின் மேவுவேன்.

(பொ-ரை.) அற்புதமான இந்த கனியை (ப்பிறர்) அடைதற்கு இயலுமோ? அழகு பொருந்திய இதன் சுவையை, (அமுதச்சுவையை யனுபவித்தவரெனினும்) தேவர்கள் அறிவாரோ? (இதனை) சிவபிரான் உண்ணக் கொடுத்தலே தூயசெயலாகும்; (ஆதலின்,) மேருமலை வில்லாளனான பெருமானிடம் (இதனையெடுத்துக்கொண்டு விரைந்து செல்வேன், (எ-று). (4)

என்றெணிச் சம்புமா முனிவ னெய்தியம்
மன்றவன் கயிலையின் மலர டித்தொழூ
தொன்றிய நயப்புட னுவப்பி னக்கனி
யன்றளித் திடயிறை யமுது செய்தனன்.

(பொ-ரை.) என்று சம்புமுனிவர் (தம்மனத்தில்) நினைத்து, அழகிய திருக்கயிலையை யடைந்து, சிவபிரான் திருவடித்தாமரைகளை வணங்கி, அக்கனியை பொருந்திய அன்பொடு அன்று தருதலும், பரமன் (அன்பாளித்த (அதனைத்) திருவமுது செய்தான், (எ-று). (5)

வீங்கிய சுவைக்கனி விமல னுண்டபின்
பாங்கினி னுமிழ்ந்தனன் பவித்த வித்தினை
யோங்கது வழுதெனை வுவந்து சூரவிற்
றூங்குற விலமுறை விழுங்கத் தாபதன்.

(பொ-ரை.) இறைவன் முதிர்ந்த சுவையையுடைய அக்கனியை உண்டு, (அதனில்) நேர்ந்த விதையைப் பக்கத்தில் உமிழ்ந்தனன்; (இறைவன் வாயிலிருந்து உமிழப் பெற்ற) அவ்விதையை சம்புமுனிவர், உயர்ந்த அமுதென (நினைந்து) மகிழ்ந்து (எடுத்து,) (தனது) பல்லில் படாத வகையாக (பயபக்தி விசுவாசத்துடன்) உண்டதும், (எ-று). குளகம். (6)

வினையிலர்க் களித்திடும் விழுமி தாம்பொருள்
தினையுள பனையெனத் திகழும் பெற்றிபோ
லனையனி னுயர்வயி றமர்ந்த வவ்விதை
நினையுமுன் முளையென வெழுந்து நீண்டதே.

(பொ-ரை.) இருவினை நீங்கிய அறிஞர்கட்குத் தானம் செய்யும் சிறந்த பொருள் தினையளவெனினும், (அது தக்கார் கைப்பட்டதாயின்) பனையளவாகி உயர்ந்து விளங்கும் தன்மைபோல, அந்த சம்புமுனிவரின் சிறந்த வயிற்றில் தங்கிய அவ்விதையானது, நினைத்தமாத்திரத்தில் முளையென எழுந்து நீண்டு வளர்ந்தது, (எ-று). (7)

சம்புமுன் னிகழ்த்திய தவம்வ ளர்ந்தென
வம்புறு தருசிரம் மதிக்க வாய்திறந்
தும்பரி னுலகுற வுயர்ந்த தென்னவே
பம்புறு தளிர்மலர் பசந்து நின்றதே.

(பொ-ரை.) சம்புமுனிவர் முன்செய்த தவந்தான் வளர்ந்ததோ எனும்படி, மணம்மிக்க வெண்ணாவல் மரம், (உலகம் என்றைக்கும்) மதித்துப் பார்க்கும் வண்ணம் அவரது சிரத்தைப் பிளந்துகொண்டு விண்ணுலகம்வரை செல்ல உயர்ந்ததெனும்படி (வளர்ந்து,) நிறைந்த தளிர்களும் மலர்களும் பசுமித்து நின்றன, (எ-று). (8)

எழுதரு தருநிழ லெழிலை நோக்கிய
கொழுதவ முனிவருங் குணலை செய்தனர்
செழிநிலைத் துணரினைச் சிதற வானவர்
பொழிந்தன யிணர்தருப் புதும துக்கனே.

(பொ-ரை.) எழுச்சியுற்ற அவ்விருட்சத்தின் பொலிவைப் பார்த்த சிறந்த தவசிரேட்டர்கள், குணாலிக்கூத்தாடினர்; செழிப்புற்ற நிலைமையதான மலர்களைத் தேவர்கள் சொரியவும், பூமரங்கள் புதியதேனைப் பொழிந்தன.(9)

சுரும்பொடு கிளிகுயி றோகை யாதிய
விரும்பியத் தருவினில் பிணிர்த்து தங்கின
யிரும்புக ழமரரு மியைந்து நீழலி
லருந்திய வருந்தவ மடைவி னாற்றினர்.

(பொ-ரை.) வண்டுகளுடன் கிளிகள் குயில்கள் மயில்கள் முதலான பறவைக் கூட்டங்கள், அவ்விருட்சத்தில் விருப்பங்கொண்டு சிறந்து (கூடுகட்டித்) தங்கின; மிகுந்த கீர்த்தியையுடைய தேவர்களும் (அதன்) நிழலில் தங்கி, ஆரம்பித்த அரியதவத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

இவ்வணஞ் சிலதின மேகச் சம்புவு
மவ்வணந் தவந்தன தாற்றி னன்பினர்
செவ்வனே யிறையடி சேர்ந்து யெந்தைநீ
யிவ்விய லெனாதிழ லிருமென் றேத்தினன்.

(பொ-ரை.) இவ்வண்ணம் சிலநாள் கழிய, சம்புமுனிவரும் (பிரம்மரிஷியாதலினாலும், சிவப்பிரசாதம் உண்ட விசேடத்தாலும் அழிதலின்றி, விருட்சமாகி யிருக்கும்) அவ்வண்ணமே, (திருக்கயிலையில்) தனது தவத்தைச் செய்துகொண்டு இருந்தார்; பிறகு (ஒருநாள்,) செவ்விய முறையில் இறைவன் திருவடியை யடைந்து, எந்தையே! தேவரீர் இந்த (மரமாகி விளங்கும்) இயல்புடைய எனது நிழலில் எழுந்தருளி யிருக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார், (எ-று). (11)

ஆங்கிறை கனிகொரு மிடத்தை யண்மிநீ
ஒங்கிய தவத்துட னொழுகு வாயினி
பாங்குற வடைகுது மெனவும் பண்பொடு
நீங்கின னடைந்தன னிமிரு தன்றலம்.

(பொ-ரை.) அப்போது இறைவன், (அவரைநோக்கி,) நீ நாவற்கனியை முன் எடுத்த அத்தலத்தில் (சென்று) உயர்ந்த தவத்துடன் இருப்பாயாக; இனி, (யாம் நினது கருத்தின்படி) பெருமை பொருந்த வந்து சேர்கின்றோம் என்று அருளலும், (சம்புமுனிவர், அவ்வணமே அவ்விடம் விட்டு) நீங்கி, சிறந்த தனது இருப்பிடமான சம்புகேச்சுரத்தை யடைந்தார், (எ-று). (12)

அப்பொழு தமலனு மவனி னீழலி
னிப்புவி புகழுற விருந்து வந்தனன்
லொப்பறு முமைபதி யுவக்க நோற்றலிற்
செப்பரு முனிவனு மின்றுஞ் சேர்ந்துளான்.

(பொ-ரை.) அச்சமயம் இறைவனும், அச்சம்புமுனிவரது நிழலில் இந்நிலவுலகம் புகழும்படி வந்து தங்கினான்; சொல்லுதற்கரிய சிறப்பினை யுடைய சம்புமுனிவரும், ஒப்பற்ற அகிலாண்ட நாயகியாரின் நாயகரான சிவபிரான் (உள்ளம்) உவகைபெறத் தவம் புரியும் செயலை, (அன்று தொடங்கி) இன்றைக்கும் அடைந்துளார்.

சம்புமுனிவரது இந்த வரலாற்றைத் திருவானைக்காப்புராணத்திற் பரக்கக் காண்க. (13)

முனிவரின் றவநிலை முகிழ்வி னோக்கிய
கனிவுறு பரசிவை களித்து வன்னியர்
நனிமகிழ் வுறவவர் விளித்து நன்முறை
தனியர சாளுதிர் சாற்றக் கேண்மினே.

(பொ-ரை.) சம்புமுனிவரின் தவநிலையை அன்போடு நோக்கிய கருணைமிக்க அகிலாண்ட நாயகியார் மகிழ்ந்து, வன்னியர்கள் மிகுந்தகளிப்படைய அவர்களை அழைத்து, சொல்லுகின்றேன் கேளுங்கள்; சிறந்த தருமமுறைப்படி ஒப்பில்லாமல் அரசாள்வீர்களாக, (எ-று). குளகம். (14)

எமைநினை யமையமே வருவ லென்றிறை
தமையடை தாவுயர் தகவொண் கோயிலி

துமையினை வழிபட அருற்றி யோங்கினர்
நமையளி வன்னிய நம்ப ராணவர்.

(பொ-ரை.) எம்மை (நீங்கள்) நினைத்த அப்போதே எழுந்தருளிக் காட்சி தருவோம் என்றருளி, சிவபிரானை (முன்போல்) அடைந்தனர்; நம்மைக் காக்கும் உருத்திர வன்னியர் முதலானவர்கள், (அன்றுமுதல்தொடங்கி) சொர்ணகாமாட்சியாரை, தகுதியான தூய திருக்கோயிலில் அர்ச்சாரூபமாக வைத்து வழிபாடு செய்து உயர் வடைந்தனர்.

அம்முறை பலபகல் நடத்து மன்னனுஞ்
செம்மலம் மணிக்களச் செழியன் மைந்தனை
தம்மர சுரிமையைத் தகவொ டேற்கவைத்
தெம்மகி புகழ்புக ழெழிலி னாயினன்.

(பொ-ரை.) அவ்வண்ணம் பலநாள் (தங்குலத்தவர்க்கு வழிகாட்டி) நடத்திவந்த உருத்திர வன்னியர், நீலகண்ட வன்னியரது புதல்வற்குத் தமது அரசுரிமையைத் தகுதியொடு தந்து, எவ்வுலகும் புகழ்ந்து கூறும் அழகுடன் இருந்தார், (எ-று). (16)

இவ்வுல குயவரு மிறைவன் றன்மனை
செவ்விய ரொடுமுனர் திகழ்வி னின்றனை
னவ்வியல் பரன்வழி பலர்க ளண்மினர்
பவ்வமென் னளிநிறை பதிந்த சிந்தையார்.

(பொ-ரை.) இந்நிலவுலகம் உய்யும் வண்ணம் (உருத்திர வன்னியராகத்) திருவவதரித்த முருகப்பரமன், பேரழகினரான (மந்திரமாலை, லாவண்ய சாரவல்லியெனத் திருவவதரித்த) தனது தேவியருடன், (தனது) முன்னைய (திருக்கோலமான) விளக்கத்துடன் இருந்தான்; (முருகனையும்) அந்த இயல்புடைய உருத்திர வன்னியர் வமிசத்தில், கடலென நிறைந்த கருணை பதிந்த மனத்தவரான பல மன்னர்கள் தோன்றினர், (எ-று). (17)

அறுசீராசிரிய விருத்தம்.

விரதமிகு மாங்கிரசன் றவச்சம்பு பாரத்துவசன்
விளையுங் கோத்ரச்
சரதநெறி யுறுமரைய ரெல்லவரும் வன்னியராத்
தகவி னுற்றார்
வரதரெனு மவர்சிவனின் றிருமாலின் வளர்கோயில்
வனைந்து போற்றி
பிரதமொழி மறைபேணிச் சுடர்விளக்கி னிறைவிதனை
யிறைஞ்சி வாழ்ந்தார்.

(பொ-ரை.) மிக்க நோன்பினை யுடைய ஆங்கிரச முனிவர், (இன்றும்) தவநிலையினரான சம்புமுனிவர், பாரத்துவாசமுனிவர் (ஆகிய இம்மூவர் பெயரால்) விருத்தியான கோத்ரத்தைப் பெற்ற வாய்மை நெறியினராகிய அரசர்கள் அனைவரும், வன்னியர் எனும் பொதுப் பெயராம் தகுதி வாய்ந்தவராயினார்; (யாவர் எதை விரும்பினும் வழங்கும் தன்மையால்) வரதர் எனும் (சிறப்புப் பெயரால் அழைக்கப்பெறும்) அவ் அரசர்கள், சிவபெருமானுடையவும், திருமாலினுடையவுமான வளர்ச்சி பெற்ற திருக்கோயில்கள் பலவற்றை அமைத்துத் துதித்தும், இனிய மொழிகளையுடைய வேதங்களைப் போற்றியும், ஒளியமைந்த திருவிளக்கில் பரமேசுவரியாரைத் தியானித்தும் வாழ்ந்திருந்தனர், (எ-று). (18)

இவ்வம்ச வளர்ச்சியின் வரலாற்றை, பின்வரும் வன்னி குலாதிக்கத்திற் காண்க.

என்றுமிக மகிழ்வினுட னிதையுரைத்த சூதனொனு
மெழிற்பே ரானை
நன்றியொடு முனிவர்க ளெழுந்தேத்தி நலநிறைந்த
மலர்க டூவி
யன்றவனி னடிமலரை யருச்சித்தா ரமலனிறை
யருளைப் போற்றி
வென்றியுறு வன்னியர்தங் குலம்வாழத் தம்மனத்தில்
வழுத்தி னரால்.

(பொ-ரை.) என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் இவ்வரலாற்றைக் கூறிய அழகிய சூதபுராணிகரை, நன்றியுடன் நைமிசாரண்ய முனிவர்கள் எழுந்து துதித்து, அன்று அச்சூதமுனிவரின் திருவடித் தாமரைகளை மலர்சொரிந்து அருச்சித்து, வெற்றி பொருந்திய வன்னியர்களது குலம் வாழ்வுபெறும் வண்ணம், மலரகிதனான சிவபிரானது நிறைந்த திருவருளை வணங்கித் துதித்தனர், (எ-று).

வன்னியர்தம் வளர்காதை தனைத்தூய்மை யகத்திருத்தி
வழுத்தி னோரு
மென்றுமகிழ் வினுட னிதையோதிப் பொருளுரைக்கு
மெழிலி னோரும்
நன்னேர்மை பெறவச்சிற் பதித்தவரு மதித்தவரு
நலக்குஞ் சீர்த்தி
மன்னுமி நிறைமனையும் வளர்மகவும் பொருணலமு
மன்னி வாழ்வார்.

(பொ-ரை.) வன்னியர்களுடைய வளர்ச்சிபெற்ற இச்சரித்திரத்தை, தூய்மைபொருந்திய மனத்திலிருத்திப் போற்றினவர்களும், மகிழ்ச்சியுடன் என்றைக்கும் படித்து நல்லநேர்மையுடன் பொருள்கூறும் அழகினரும், (யாவர்க்கும் பயன் விளையும்படி) அச்சிட்டவர்களும், (இந்நூல் பொருள் நிரம்பிய அருள்நூல் என்று) மதித்தவர்களும், நலம்மிக்க சிறப்பமைந்த அரசர்களாகத் தோன்றி, அழகும் கற்பும் நிறைந்த மனையாளும், சிறந்த புதல்வர்களும், (குபேர) சம்பத்தும் பொருந்தி வாழ்வர்.

சுபம். சுபம். சுபம்.

வன்னியர் புராணம்

மூலமும்-உரையும்

முற்றிற்று.

188

# வன்னிகுலாதிக்கம்.

"வன்னிகுலமித்திரன்" பத்திராதிபர்
ஆ. சுப்பிரமணிய நாயகர் அவர்களால்
எழுதப்பெற்றது.

189

உ

சொர்ணகாமாட்சி துணை.

# வன்னிகுலாதிக்கம்.

பரதகண்டமாகிய இவ்விந்து தேசத்திலே அனேக ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் பல சக்ரவர்த்திகளும் அனேக அரசர்களும் அரசுபுரிந்து வந்தார்களென்று செப்பேடு, சிலாசாஸனங்களை யன்றி பல இதிகாச புராணங்களும் முறையிடுகின்றன. அவ்வித அரசர்களின் உற்பத்தியைக் கூறுமிடத்து கர்ப்பாந்த சிருஷ்டி, காரணார்த்த சிருஷ்டி, பிரளயாந்த சிருஷ்டி என வகுக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்ரியர்களுக்கு மூலபுருடர் ஆங்கீரசரெனவும், அவர்வழி வந்தவர்களே ஆங்கீரஸாளான அக்கினி வம்சத்தார் அல்லது வன்னியர் எனவும் வியாச பாரதம் அநுசாசன பர்வம் 113, 126, 129-வது சுலோகங்களில் கூறப்பட்டிருக்கிறது.

பதினென் புராணங்களில் ஒன்றாகிய ஆக்னேய புராண உத்தரபாக தேவி மஹாத்துவமாகிய வன்னியர் புராண ஆதாரப்படி, அரக்கர்களது துன்பத்தைப்போக்க காரணார்த்த சிருஷ்டியாக சம்புமகா ரிஷியின் யாகத்தினின்று உருத்திர வன்னியர் முதலாயினோர் தோன்றினார்களெனவும், அம்மன்னர் மரபே வன்னியர்களெனவும் காண்கின்றோம். இதுவுமன்றி, வியாஸ மகாபாரதம் ஆரண்யபர்வம் 220-வது அத்தியாயம் மார்க்கண்டேய சருக்கம் 5-வது சுலோகத்தில் "வேதத்தில் மிக வல்ல பிராமணர்கள் சம்பு என்னப்பட்ட அக்நி புத்திரனுடைய பிரதாபங்களைப்பற்றி பேசத்தொடங்கினார்கள்" என்று கூறுகிறது.

கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் பாடிய சிலையெழுபது
2-வது பாடலின்கண்

"மூந்துநாள் வீரசம்பு முனிசெய்மா மகத்திற் போந்த
சந்ததி யார்சி ரோது கெனத்தகு முதியோர் கேட்ப
இந்தனி சடிலத் தெம்மா னிணைகழல் பாஅ யிசைத்தான்
செந்தமிழ்க் கம்பன் செம்பொற் சிலையெழு பதுவா மிந்நூல்"

எனக் கூறியிருப்பதில், சம்புமகா முனிவரால் செய்யப்பட்ட மகத்தாகிய யாகத்திலிருந்து உற்பவித்த (உருத்திர வன்னிய மகாராஜன் முதலியோர்) சந்ததியாரெனக் குறிப்பிட்டிருக்கிறார். பின்வரும் வன்னிமன்னர் சாஸனங்கள் பலவற்றிலும், சம்புவராயர் என்றே பதிந்திருக்கிறது.

ஹரிவம்ஸம் 32-வது அத்தியாயத்தில் 115-முதல் 122-வது வரையிலுள்ள சுலோகத்தின் கருத்தாவது:-

"பிரம்மாவினிடமாக அக்நி; அக்நியினிடமாக சந்திரன்; சந்திரனது குமாரன் புதன்; புதனுக்கு புரூரவன்; புரூரவனுக்கு ஆயு, நகுஷன், யயாதி முதலியவர்கள் தோன்றி, அக்கால்வழியே துர்வசு உற்பவித்தானெனவும், துர்வசுவின் குமாரனே வன்னி எனவும், அச்சந்ததியில் வந்தவன் துஷ்யந்தனெனவும், இந்த துஷ்யந்தனுக்கு கருத்தமனும், கருத்தமனுக்கு ஆக்ரீடனும், ஆக்ரீடனது நான்கு குமாரர்களே பாண்டியன், கேரளன், சோழன், கலிங்கன்" எனவும் கூறுகிறது. இதனால், வன்னி என்னப்பட்ட மகாராஜனது கான்முளைகளே சேர, சோழ, பாண்டியர்களென்பது சங்கையற விளங்குகிறது. அவர்களை அக்நி, சூரிய, சந்திர குலமெனப் புராண இதிஹாசங்கள் புகன்றபோதிலும் இவர்களின் மூலபுருஷர் வன்னியேயாதலின், அரசர்களின் பொதுப்பெயரில் வன்னியர் எனவே வழங்கிவருதல் கண்கூடு. இனி, பல்லவர்களது உற்பத்தியையும் சிறிது ஆராய்வோம்.

பல்லவ மன்னர்களது உற்பத்தியை அம்மரபினுதித்து காஞ்சிபுரத்தில் கி. பி. 550-ம் ஆண்டில் ஆட்சிபுரிந்த ராஜஸிம்ம வர்மனால் மேட்டுத்தெருவில் கட்டித்து கட்டப்பட்டுள்ள இராஜ

ஸிம்ம பல்லவேஸ்வரம் என்னும் கைலாஸநாதர் ஆலயத்தின் வெளிப்புறத்தில் வெட்டப்பட்டிருக்கும் சிலாசாஸனம், தேவநாகர எழுத்திலிருக்கிறது. அதை தமிழில் மொழிபெயர்த்து வருணதருப்பணத்தில் வெளியிடப்பட்டிருப்பது, பின்வருமாறு.

+ × × பிரம்மாவினிடமாக வுதித்த அக்கி குமாரனாகிய ஆங்கிரஸனையும், ஆங்கிரஸனுக்குக் குமாரனும், இந்திரனுக்கு மந்திரியும் தேவர்களுக்குக் குருவுமாகிய பிரஹஸ்பதியும், இவருக்குப் புத்திரனான சமியும், இவருக்குப் புத்திரனாக உக்கிரமான பராக்கிரமத்தை யுடையவரும், திரிலோகங்களிலும் பூஜிக்கப் பட்டவரும் அதிபராக்கிரமத்தை யுடையவருமான பாத்வாஜ முனி யுதித்தார். இம்முனீந்திரர் பல்லவ வம்சோற்பவத்திற்குக் காரணபூதரானார்.

இவரிடத்திலிருந்து பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருவாகிய துரோணர் உதித்தார். இவரிடமிருந்து அரசர்களுடைய பராக்கிரமத்தையும் கர்வத்தையுமடக்கிய அசுவத்தாமனும், ஆதியில் பிரமாவினிடமாக வுதித்த மனு அரச வம்சத்திற்கு மூலபுருஷராய் எவ்வாறிருந்தாரோ அவ்வாறு ஷை அசுவத்தாமன் புத்திரனாகிய பல்லவன் உலகமுழுமையும் அரசாளக் கூடிய ஜெயசாலிகளாயும் பராக்கிரமசாலிகளாயு முள்ள அரசர்களுக்கு மூலபுருஷனானான்.

பல்லவ அரசர்கள் பக்தியுடையவர்களாயும், கலியின் கொடுமையை யடக்கினவர்களாயும், சத்தியசீலராயும், காம்பீரகுணமுடையவர்களாயும், பெரியோர்களை அதி விநயத்துடன் பூஜிக்கப் பட்டவர்களாயும், திரிவர்க்கசாதன (தர்மார்த்தகாம) சாலிகளாயும், காமக்குரோத முதலிய சட்குணங்களை அடக்கினவர்களாயும், அஸ்திர பிரயோகங்களில் தேர்ந்தவர்களாயும், இரணக்களத்தில் பின்னிடையாதவர்களாயும், மனுநீதி தவறாதவர்களாயும் இருந்தார்கள்.

பல்லவர்களுக்குள் புராந்தகனாகிய மஹாதேவனிடத்திலிருந்து எவ்வாறு குமாரக்கடவுள் உதித்தாரோ அவ்வாறு ரண

ராசிகா வென்னும் பட்டணத்தை ஜெயித்த பல்லவ வம்ச உக்கிரதண்ட மகாராஜாவினிடமிருந்து பல்லவராஜ கீர்த்திப்பிரதாப அத்தியந்த காமன் என்னும் அரசன் உதித்தான். இவ்வரசன் தனது வேலாயுதத்தினால் பூமண்டலத்திலுள்ள அநேக சத்துருக்களை நாசஞ்செய்தான். மேலும் அவனது இராஜாங்க முறைமையினால் பெருநயனென்னும் பெயரைப் பெற்றான். சைவ சமயத்தைத்தழுவி சன்மார்க்க நெறியில் ஒழுகியதால் பாபரகிதனானான். + + + என்று வரையப்பெற்றுளது.

இவ்வுற்பத்திக் கிரமத்தையே அமராவதியில் அகப்பட்ட பல்லவ அரசர்களின் சிலாசாஸனமும் தெரிவிக்கிறது. மேற்கூறிய பிரமாணங்களால் க்ஷத்ரியர்கள் ஆங்கிரசர், சம்பு, பாரத்வாஜர் முதலிய மூலகர்த்தர்களின் வழி வந்தார்களென ஏற்படுகிறது. ஆனதால் வன்னியர்கள் ஷை மகரிஷிகளின் கோத்திரங்களை வழங்கிவருகிறார்க ளென்றாலும், தமிழ் நாட்டிலுள்ள சுமார் முப்பது லட்சம் ஜனங்களில் பெரும்பாலும் சம்புமகாரிஷி கோத்திரமே வழங்கிவருகிறார்கள். வன்னியரில் ஒரு பிரிவினராகிய பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரம் வழங்கியதை காஞ்சி திருவத்தியூர் அருளாளப் பெருமாள் ஆலய சாசனம் 363-வது பக்கம் வெளிவந்திருப்பதில் தெரிந்து கொள்ளவும்.

அரசர்களின் பொதுப் பெயர் வன்னியர் என்பதற்குப் பிரமாணம் வருமாறு:-

சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றாகிய சிவதருமோத்திரம்
சிவதான ஞானவியல் 13-வது கவி.

“தடுத்த தண்ணியன் பாற்கொள்க சாத்திரம்
கொடுக்கும் தேசிகன் றன்குலத் தில்லையே
லடுத்த வன்னிய னேயரு கன்றொழிற்
கொடுக்க னுபார மார்த்தங் கொடுப்பதே”

என்பதால், தக்க அந்தணனிடத்தில் சிவதீட்சையைப் பெறவேண்டும். அவ்விதம் செய்யக்கூடிய அந்தணன் அக்குலத்தி லில்லாவிடில், அடுத்த அரசனே அத்தொழிலுக் குரிய

வன் என்பதால், அந்தணனுக்கு அடுத்த அரசன் என்பதற்கு வன்னியன் எனக் குறிப்பிட்டிருப்பது நினைக்கத் தக்கது.

ஞானவாசிட்டம் ஐந்தவர் கதை 7-வது கவி.

"மைந்த ரொருப தின்மராகி மறைநூ னிறைந்து வளர்ந்ததற்பின்
றந்தை தாயா ரிறந்தேகத் தனையர் கயிலைத் தலமெய்திச்
சிந்தை செய்வார் நல்குரவு தீரவுயர்வன் னியராவோ
மந்த நிலைசற் றுதலிறு லதிகரிலை மன்னவ ராவோம்."

(காசிபரிஷிக்கு) பத்து குமாரர்கள் பிறந்தார்கள். அவர்கள் எல்லாம் வளர்ந்து, வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பின்பு, அப்பிள்ளைகளைவிட்டு தாயும் தகப்பனும் நீங்கிச்செல்ல, அம் மக்களெல்லாம் கைலைக்குச்சென்று, தரித்திரம் நீங்கும்படி உயர்ந்த அரசர்களாவோம்; அந்த நிலையும் நீங்கினால் சக்ரவர்த்திகளாவோம் என்று (தமக்குள்) சிந்தை செய்தனர், என்பது இதன் பொருள்; இதனால், மன்னர் தம்பொதுப்பெயர் வன்னியர் என்பது உணரப்பெறும்.

ஷை ஞானவாசிட்டம் சதவுருத்திரர் கதை 5-வது கவி.

"பாதபம்விதையானற்போற் பள்ளிகொள்மறையோன்தன்பாற்
போதுறு கனவிற்றன்னைப் பொருவில்வன் னியனுங்கண்டான்
மேதகு முணர்வாற்றுஞ்சி மேவிய கனவிற் றன்பாற்
பூதலத் தாசனாக வவன்றனைப் பொலியக் கண்டான்."

நித்திரைசெய்த பிராமணனானவன், விருட்சம் வித்தானது போல, தன்னை வன்னியனாகவும் கனவுகண்டான்; மீண்டும் உணர்வொடு உறங்கி அவ்வன்னியனாகிய அவனே தான் பூதலத்தாசனாயிருப்பதையும் கண்டான் என்பது இதன்பொருள்.

தன்னை வன்னியனாகக் கண்ட அந்தணனே நிலவுலக மன்னனாகவும் மிளிர்ந்த பெருமை இப்பாசுரத்தால் உணரப்பெறும். எனவே, முதல்தோற்றம் வன்னியன்: அடுத்தது அவன் முடிசூடிக் காட்சிதரும் கோலம் என சான்றோர்கள் பொருள்கூறிப் போற்றுகின்றார்.

கல்லாடர் அருளிச்செய்த கல்லாடம் 40-வது கவி.

"தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கும்
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்."

தருமமெனும் பெரும்பயிரை உலகம் பெறும்படி விளைவித்த ரத, கஜ, துரக, பதாதி என்று சொல்லக்கூடிய நால்வகைச் சேனைகளையுடைய அரசர்களைப் படைத்த பரமன் என்பது இதன்பொருள். இவர், அரச பெருமக்களை நாற்படை வன்னியர் என்று அழைத்ததும் ஓர்க.

கம்ப ராமாயணம் உத்தரகாண்டம்
இலங்கையை அழித்த படலம் 11-வது கவி.

"கொடிமன்னு மாடக் குலமென்னு மயோத்தி யெய்திக்
கடிமன்னு வாயிற் கடைநின்றருள் கால னேக்கிப்
படிமன்னி வாழும் பலவன்னியர் மண்ட லீகர்
முடிமன்ன ரெல்லா முறையேபுகுந் தேவல் கேட்க."

என்னும் இவற்றால், வன்னியரான பல மண்டலீகரும், முடிமன்னரும் ஸ்ரீமந் நாராயணனது அவதாரமான இராகவன் திருமுன் ஏவல்கேட்டமை யுணர்கின்றோம்.

இனி, சம்புகுலம் பல்லவகுலம் இரண்டும் ஒன்றே யென்பதற்குரிய ஆதாரத்தை ஆராய்வோம்.

இன்றைக்குச் சுமார் 400 வருடங்களுக்கு முன் காஞ்சிபுரியை ஏகாம்பரச் சம்புபல்லவன் என்பவன் அரசாண்டிருந்த காலத்தில், இரட்டைப்புலவர்கள் என்னும் இரு பெரும் சகோதரர்கள் காஞ்சிமாநகரை யடைந்து, ஏகாம்பரநாதர் தெய்வீக உலா வென்னும் ஓர் பிரபந்தத்தைப் பாடினார்கள். அப்பிரபந்தத்தில் அவ்வரசனைப் பற்றி குறிப்பிடுவதில், ஷை உலா 151-கவி:"வெஞ்சமரில், தத்துபரி பல்லவன் சம்புகுலப்பெருமான், வைத்த துலாபார மண்டபத்தும்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஷை துலாபார மண்டபம் கிழண்டை ராஜவீதியின் வடவண்டை பக்கம் சம்புகுல சோழ பல்லவராய பக்தஜன சபையார்களாகிய வன்னியர்களால் கட்டப்பட்டு வருகிறது.

இவ்விரட்டைப் புலவர் ஏகாம்பரச், சம்புபல்லவன் சமுகத்தில் உலா பாடியதை, தொண்டமண்டல சதகம் 89-வது செய்யுளில்,

"மேதைப் புலவரொன் னேகாம்பரச் சம்பு மெச்சநெடுங்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்பவாண ருலாவு மந்த
மாதைப் பனுவலும் பாராட் டிடுந்தொண்ட மண்டலமே."

என்று குறிப்பிட்டிருக்கிறது.

கம்பர் பாடிய சிலையெழுபது 50-வது செய்யுளில்,

வளமருவு மங்கையர்கோன் சொலத்தருபல்
லவராயன் மாபிற் றோன்றி
களமருவு கறையுடைய கண்ணுதல்கச்
சியின்வாழே காம்ப ரேசற்
குளமருவு மன்பினரா யொளிர்மகுட
மணிபொற்றே ருதவி மேலோன்
தளமருவு தாமரைபொன் முகவணியர்
படைத்தபுகழ் சாற்றற் பாற்றோ."

என்றுபாடியிருப்பதால், சம்புகுலம் அல்லது செம்பியர்கள், பல்லவர்கள், வன்னியர்கள் என்பன ஒரே மரபாரைக் குறிக்கின்றன என்பது உறுதிப்படுகின்றது. டை வன்னியின் மரபில் தோன்றிய சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கிய மன்னர்கள் இந்நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தேவாலயங்களிலும், மடாலயங்களிலும், பலவகையான சிலாசாஸனங்களும், செப்பேடுகளு மிருக்கின்றன. டை சாஸனங்களில் கூறியுள்ள அரசர்களின் ஆதிக்கத்தை ஆராய்ச்சி செய்யும்பொருட்டு, ஆங்கிலேய துரைத்தனத்தாரால் நியமித்துள்ள தாம்பிர சிலாசாஸன பரிசோதன கமிட்டியார், பல க்ஷேத்திரங்களுக்கேகி, ஆங்காங்குள்ள சாஸனங்களைப் பரிசோதித்து, முக்கியமானவைகளைப் புத்தக ரூபமாகப் பிரசுரஞ்

செய்திருக்கின்றார்கள். இஃதன்றியும், சில ஜில்லா கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களில் கிடைத்த செப்பேடுகளையும், சாஸனங்களையும், ஷை கமிட்டியாருக்கு அநுப்ப, அவற்றிலுள்ள விஷயங்களையும், உண்மைக் குத்தாரமாகப் பதிவு செய்திருக்கின்றனர். இவ்விதம் சேகரிக்கப்பட்ட செப்பேடு சிலாசாஸனங்களும், அவ்விஷயங்களடங்கிய புத்தகங்களும் பகிரங்கமாகப் பலரும் பார்க்கும் பொருட்டு பலபொருட் காக்ஷிசாலையாகிய சென்னை மியூஜியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில வருண தருப்பணத்தில் வெளியானதையும், பிறகு சமது ஆராய்ச்சியில் கிடைத்ததையும் ஒருங்குதிரட்டி ஈண்டு பிரசுரித்திருக்கிறோம்.

---

### திருக்கழுக்குன்றத்திற்கு கிழக்கே 8 மயில் தூரத்திலுள்ள மஹாபலிபுரம் கடற்கரை யோரத்திலிருக்கும் கோயிலின் வடபக்க அடிவாரத்திலுள்ள சாஸனம்.

× × × ஸ்ரீகோ ராஜராஜ ராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜ ராஜதேவற்கு யாண்டு இருபத்தாறுவது ஆமூர் கோட்டத்து ஆமூர் நாட்டு நகரம் மல்லாபுரத்து நகரத்தோமும் பேரிளமையோமும் இந்நகரத்து ஜலசயனத்து க்ஷத்திரிய சிம்ம பல்லவ ஈஸ்வரத்து தேவரும் ராஜ சிம்ம பல்லவ ஈஸ்வரத்து தேவரும் பள்ளிகொண்டருளிய தேவரும் உடைபட்டாரத்து பொன்னில் இத்தளிகள் பதிபன்சாரிய ப......ட்டை.......ச...தேவ...கண்மிகள்ப......நாங்கள் கொண்டு கடவ பொன்பத்தொன்பதின் கழஞ்சி இத்தேவர்களுக்கு × × × × என வெட்டியுளது.

இது, இராஜகேசரி வர்மன் சிம்மாசனமேறிய 26-வது ஆண்டு (கி. பி. 1064ல்) க்ஷத்திரிய சிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. ஷை சாஸனத்தால் பல்லவர்கள் க்ஷத்ரியர்களென உறுதியாதல் வெளிப்படை.

---

## காஞ்சீபுரியில் கி. பி. 670-க்குமேல் அரசாண்ட பரமேஸ்வர பல்லவராயன் காலத்தில் காஞ்சி தாலுகா கூரம்கிராமத்தில் ஏற்பட்ட செப்பேட்டில் கூறும் விஷயமாவது.

× × × × × × ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வளூர் நாட்டுக்கூரமும் ஓம்மணம் பாக்கமு ஒங்கணதட விச்சாவி நீதப்பல்லவாசன் விலைக்காணங் கைகொடுத்துச் சினைசெய்து ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம் தனி எடுப்பதற்கு ஓடு சடக் கொண்ட நிலம் தலைப்படாகத்துள் ஆனைமேட்டுப் பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுங் கூட அயிந்தேகால் பட்டி நிலமும் விற்றுக்கொண்டு விச்சாவி நீத பல்லவ பரமேச்சரம் எடுத்து எரிதோண்டி இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனையும் × × × × × × × × ×

இச்சாஸனத்தில் இன்னும் பல விஷயங்கள் விரிவாக எழுதப்பட்டிருப்பதால் அதன் சுருக்கம் பின்வருமாறு; 1264-ம் ஆண்டுகளுக்குமுன் பரமேஸ்வர பல்லவராயனெனவும், விச்சாவிநீதப்பல்லவ அரசன் எனவும் பெயர்கொண்ட மன்னனால் கூரம் கிராமத்திலுள்ள விச்சாவிநீத பல்லவபரமேஸ்வரம் என்னும் ஆலயமும், பரமேஸ்வர தடாகம் என்கிற கூரம் ஏரியும் கட்டப்பட்டது. மேற்படி தடாகத்திற்கு, பாலாற்றினின்று தண்ணீர் கொண்டுவரும் பொருட்டு பெரிய வாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டது, நிலங்களின் வருவாயை இருபத்தைந்து பங்குகளாக வகுத்து, இவற்றுள் மூன்று பங்கு ஆலயத்தின் நித்தியக்கட்டளைக்கும் ஆலய மராமத்திற்கும், ஒரு பங்கு மண்டகப்படிக்கும், மண்டபத்தில் பாரதம் வாசித்து பிரசங்கஞ் செய்வதற்கும், இருபது பங்கு சதுர்வேதிகளுக்கு தானங்கொடுத்த பங்குகளில், மூன்று பங்கு அனந்தசிவ ஆசாரியாருக்கும் அவருடைய சந்ததியார்க்கும், ஒன்றரை பங்கு புல்சருமருக்கும் அவர் சந்ததியார்க்கும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. ௸ கூரம் பட்டயத்தால், பூர்வத்தில் பல்லவ அரசர்கள் தத்தம் ஆளுகையில் பிரஜைகள் விவசாயஞ்செய்து ஜீவிப்பதற்கு ஜலாதாரமும், பக்தி செய்வதற்கும் பூஜிப்பதற்கும் ஆலயங்களும், பாரதம் வாசிப்பது முதலிய நற்காரியங்களையும் செய்திருக்கின்றதாக ஏற்படுகின்றது.

---

### விரிஞ்சிபுரத்திற்குச் சமீபத்திலுள்ள பொய்கையென்னும் கிராமத்தில் பெருமாள் ஆலயத்தின் தென்னண்டை மதிலின் அடிவாரத்திலுள்ள சாஸனம்.

(ராஜராஜ சோழதேவன் ஆளுகையின் 24-வது ஆண்டில் வரையப்பட்டது. கி. பி. 1216)

ஸ்வஸ்தி ஸ்ரீ ஆயிரத்தொரு நூற்றுயபத்தொன்று செல்லாநின்ற ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு இருபத்து நாலாவது தைமாசமுதல் பொய்கையான ராஜேந்திர சோழநல்லூர் சித்திரமெழிமலை மண்டல விண்ணக ரான அருளாளப்பெருமாளுக்குப் புத்தூர் நாற்பாங்கெல்லைக்கு ளுற்பட்ட மேனோக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் நன் செய் புன்செய் நாற்பாங் கெல்லையு முட்பட்ட கடமை குடி மைகளும் ஆயம்பாடி காவல் சில்வரி யெடுத்துக்கொட்டி அரி முக்கையுட்பட்ட பல நெல்லாயங்களும் கார்த்திகை அரிசி கார்த்திகை காசு கார்த்திகைபச்சை வெலிப்பயறு நீர்நிலக்காசு தறியிறை கடையிறை காக்கப்பட்டம் தட்டார்ப்பட்டம் ஆசவக் கடமை செக்குக்கடமை எரிபீலிக்காசு இனவரி வகைத்த காசு பட்டோலை காசு மற்றுமெப்பேற்பட்ட காசு பலகாசாயங்களும் அந்தராயமும் வெட்டித்தனி ஆளுட்பட்ட நெல்லாயகாசாயங்க ளும் உட்பட திருவிடையாட்டமாக மலை மண்டலத்து ஆய சனூர் சிறை ராமன் கேரளன் பக்கல் பொன்னறக்கொண்டு மண்ணறவிட்டேன் விராசனி அம்மை அப்பன் அழகிய சோழ னுன எதிரிலி சோழசம்புவராயன் × × எனவுள்ளமை காண்க.

இதனுல் எதிரிலிச் சோழசம்புவராயனுல் புத்தூர் என்னுங் கிராமத்தை கேரளராமனிடத்திலிருந்து பொன்னறக்கொண்டு பெருமாளுக்கு விட்டதாகத் தெரிகின்றது.

---

## திருமலையில் வன்னர்தீட்டிய குகைக்குச் செல்லும் இடது பாரிசத்தில் பதியப்பட்ட கல்வெட்டு.

× × × ஸ்வஸ்தி திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜ தேவற்கு யாண்டு இருபதாவது முதல் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து தமனூர் நாட்டுவீரன் பாக்கத்து இலானப்பெருமான் மகன் ஆண்டான்கள் பங்காளராயருக்குப் பல குன்றக் கோட்டத்துப் பங்காளநாட்டு நடுவில் குன்றத்தூரான இராஜ கெம்பீரநெல்லூர் இவருக்குக் காணியாக கீழ்நோக்கின கிணறும் மேல்நோக்கின மரமும் நாற்பாங் கெல்லையும் விற்றுற்றிப் பரிக்கிரயத்திற்கு உரித்தாவதாகக் கொடுத்தோம்; அத்திமல்லன் சம்புகுலப்பெருமாளான ராஜகெம்பீர சம்புவராயன் × × என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சுமார் 740 வருடங்களுக்குமுன் ஆட்சிபுரிந்த ராஜராஜ தேவன் காலத்தில் ஓர் அரசனாகயிருந்தவன் ராஜகெம்பீர சம்புவராயன் என்று தெரிகிறது. முற்காலத்தில் சோழ பல்லவர்களுக்கு சம்புவராயர் என்று வழங்கப்பட்டதைப்போல், தற்காலத்தும் தென்னாற்காடு, தஞ்சை ஜில்லாக்களில் வசிக்கும் வன்னியர்களில் சிலருக்கு சம்புவராயர் பட்டம் வழங்குவதுடன், காஞ்சிபுரத்தில் நாட்டாண்மைதாரர்களுக்கு வீரசம்பு மகா நாட்டார் என்றே நானதும் வழங்கப்பெற்று வருகிறது.

---

## சிவகஞ்சி சுரஹரீஸ்வரர் ஆலயத்தின் முன் மண்டபத்தில் தென்னண்டை மதிலிலுள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயகண்டகோபால தேவர்க்கு யாண்டு இருபத்தைஞ்சாவது × × × பூர்வ பக்ஷத்து தசமியும் திங்கள் கிழமையும் பெற்ற பூராடத்து நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து காஞ்சிபுரத்து சுரவட்டாரமுடைய நாயனாருக்கு பல்லவ வம்சத்து அம்பலூரதிப்பு ராஜ நல்ல சித்தாசனென் திருமடவளாகத்திலுள்ள தறிக்கடமையும் × × × × என உளது.

இச்சாஸனம் விஜயகண்டகோபால தேவர் ஆளுகையின் 25-ம் ஆண்டு (கி. பி. 1267) வரையப்பட்டது. இதனால் பல்லவ வம்சத்து அம்பலூர் அதிபனாகிய ராஜ சித்தாசன் ராஜகாரிய நிர்வாகியாக யிருந்தானெனத் தெரிகிறது.

---

## காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் அர்த்தமண்டபத்து மதில் கல்வெட்டு.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பூமாது விளங்க புவிமாது விளங்க ஞமாது விரும்ப ஜயமாது விரும்ப ஸ்ரீமது மலர் மன்னவருக்கு உபமன் னிய வருமையால் மணபூடவருக்கு உச்சங்கொள் தெசைதொ ரும் செலுத்தி வெங்கலி னிக்கமய்யற் தழப்பக் கலிங்கமிறிய கடாமலே நடத்தி வலங்கொள்ளா வரையாமனடத்தி ஒரு சடா வும் ஒருகுடை நீழல்.........னடத்திஞேம் பூமாவித்திருக்கும் சக்கறவர்த்திகள் ஸ்ரீ விக்கிறமசோழதேவர்க்கு யாண்டு ௪-வது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து தாமற்கோட்டத்து தாமற் ஞுட்டத்து திருசிகாமணி சதுர்வேதி மங்கலத்து மஹாஸபை யோம். ஆளுடையார் திருவேகம்பமுடையார் ஆதிதர்ச்சண்டே சுவற தேவருக்கு நில வெலைக் கையெழுத்து.

சோழமண்டலத்து ருசாதிருச வளநாட்டு கங்கூர் என் னுங் கோட்டத்து கிழ்ப்படும் மதுரந்தகப் பெறிநாட்டு பல்லவ தீறயர் உடையார் திருவேகம்ப முடையாருக்கு திருவறத்த சாமத்துக்கு சிறப்பாக வைத்த திருப்பொன் னகத்துக்கும் பாலாத்து திருமஞ்சனம் செம்பாருக்கும் இவர் எழுந்தருளி விக்க சிகாழிஞடு ஒடையப் பிள்ளையாருக்கும் திருசுத்தியும் திரு வமுது படிக்கும் வேண்டுவத்துக்கு சந்தருஇத்த வரைக்கும் செல்லுவதாக ஒங்கள் பக்கல் தேவதானமாக கொண்டுவிட்ட னிலமாவது × × × × × × × × இதன் கீழ் அநேக ஊர் நிலங் களை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இச்சாஸனம் கி. பி. 1118 முதல் 1132 வரையில் ஏக சக் ராதிபதியாக அரசாண்ட விக்கிரமசோழனது பிரபாவங்களைத் தெரிவிப்பதில், கலிங்கமிறிய என்று கூறப்பட்டிருக்கிறது. விக்ரமசோழாது தந்தையாகிய அபயகுலோத்தமனது சேனைத் தலைவனுகிய கருணுகாத் தொண்டவன்னியனே கலிங்கத்தின் பேரில் யோருக்குச் சென்று கலிங்க மிறியவனென ஜெயங்

கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி கடைத்திறப்பு 44-வது செய்யுளில்,

“கலிங்கமெறிந்த கருணாகரன்றன்
களப்போர் பாடத் திறமினோ.” என்றும்,

43-வது பாடலில்,

“காஞ்சியிருக்கக் கலிங்கங்குலைந்த
களப்போர் பாடத் திறமினோ.” என்றும் வருவதால்,

கருணாகரனது வெற்றியை அவனது தலைவனாகிய குலோத்துங்கன், விக்கிரமசோழன் இவர்களது பிரபாவத்தில் கூறப்பட்டது. மேலும் பரணிப்பிரபந்தத்தில் கருணாகரன் வீரப்பிரதாபங்களைக் கூறுமிடத்தில் காளிக்குக் கூளி கூறிய 52-வது செய்யுளில்,

“தண்ணாரின் மலர்த்திரடோளபயன்
றனேவிய சேனை தனக்கடையக்
கண்ணாகிய சோழன் சக்கிரமாங்
கருணாகரன் வாரண மேற்கொளவே” என்றும்,

ஷை 54-வது செய்யுளில்,

“மறித்தோடி எவ்வரசுஞ் சரியவென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன் வண்டைவேந்தன்”

என்றுங் கூறப்பட்டிருப்பதால், கருணாகரனை சோழனென்றும், பல்லவனென்றும் கூறப்பட்டிருக்கிறது. குலோத்துங்கனது காலத்திற்குப் பிறகும் விக்கிரமசோழனது ஆட்சிகாலத்தும் காஞ்சீபுரமுள்ள சுற்றுப் பக்கங்களில் கருணாகரன் ஓர் சிற்றரசனாக யிருந்து ஆட்சிபுரிந்தானென விளங்குகிறது. அவன் பேரால் சில கிராமங்களுக்கு கருணாகரத்தொண்டனூர், கருணாகரச்சேரி என நாளதும் வழங்கி வருகிறது. எனவே, காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலய சாஸனத்தில் பல்லவதிறயர் என்னும் ஓர் சிற்றரசன் விக்ரமசோழனது 4-வது ஆண்டில் திருவேகம்பமுடையாருக்கு அர்த்தசாமக் கட்டளைக்கும், பாலாற்று திருமஞ்

சனத்திற்கும் திருவமுதுபடிக்கும் அனேக நிலங்களை விடப்பட்டதாய் தெரிகிறதால், ஷை பல்லவதிறயன் கருணாகரனே யாதல் வேண்டும். சிலர் வன்னியர் வேறு பல்லவர் வேறு என மலைவு படுகின்றனர். பரணியில் குறிப்பிடப்பட்ட கருணாகரனை மேலே நாம் பல்லவனெனவும் சோழனெனவும் கண்டோம். அம்மன்னனே வன்னியனென்பதை கம்பர் பாடிய சிலையெழுபது 68-வது செய்யுளில்,

"அவிக்கா தாங்கூர் புனிதர்மகிழ்த் தருள்வன் னியரை
யாம்புகழச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச் சிந்தை யுவந்து
சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொன் னிறைநீக்கிப் பொற்றண் டிகைபூ
வுதணத்தோடும்
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான் கருணாகரத்
தொண்ட வன்னியனே!

என வருவனவற்றாலும், கருணாகரத்தொண்ட வன்னியனார் சதகம் 24-வது கவியில்,

"எரிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரச்சம் பெனுந்தமிழால்
பொரிக்கும் புலிக்கொடியான் புகழ்பெற்ற புலமையெல்லாம்
தரைக்கு மதனப்புறத்துத் தெரிந்திடேர் தன்மைகண்டேன்
மறைக்குவா லோதுங் கருணாகரத் தொண்ட வன்னியனே"

என்பதனாலும் வன்னியர்களே பல்லவர்களெனவும், பல்லவர்களே வன்னியர்களெனவும் சங்கையறத் தெரிந்துகொள்ளலாம். பல்லவர்களே பள்ளிகள் என்பதற்கு, நாளதும் ஏகாம்பர ஈஸ்வரர் ஆலயத்துள்ள பல்லவகோபுரம், பள்ளிகோபுரம் என வழங்கிவருவதே பிரத்தியட்சப் பிரமாணமாகும். அக்கோபுர ஆதிக்கம், பல்லவர் வம்சத்தார்களாகிய பள்ளிகளென்னும் வன்னியர் வசமே இப்போதும் இருந்து வருகிறது.

### காஞ்சீபுரத்திற்கு வடக்கே 30 மயில் தூரத்திலுள்ள திருவாலங்காடு நடராஜர் ஆலய இரண்டாவது பிரகாரத்தின் கீழண்டை மதிலிலுள்ள கல்வெட்டு.

× × × கோவிராஜகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு இரண்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவூர் கோட்டத்து புரலைசநாட்டுச் சிவபுரத்துப் பக்கலிருக்கையில் திருவமுது செய்தருளாயிருந்து மென்மலை பழையனூர் திருவாலங்காடுடைய மகாதேவர்க்கு இவ்வூர் கிலத்திலே ராஜேந்திரசோழபாடி என்னும் பெயரால் இருபத்தைஞ்சு சங்கரபாடி குடியேற்றி பதினஞ்சு திருநந்தா விளக்குக்கு வேண்டும் எண்ணெயாட்டி எரிக்கப்பண்ணவேண்டுமென்று நங்கன்மிகளில் வீரசோழ பல்லவரையன் நமக்குச் சொன்னமையில் இருபத்தஞ்சு சங்கரபாடி குடியும் இத்தேவர்க்கு திருவிளக்கு எண்ணெயாட்டக் கடவார்களாக நாமே குடுத்தோமென்று திருமந்திரவோலை அருமொழி விழுப்பரயர் எழுத்திநாற் புகுந்த திருவாய்க்கேழ்விப்படி இத்தருமத்துக்கு அழிவுசெய்வார் திருவாணைமரத்தாரென்று கல்வெட்டுகவென் அதிகாரிகளை நாங்கொற்றக்கடம்பன் ஏவ இரங்க நாரான வீர சோழ பல்லவரையர் × × × என்பதாம்.

டை திருவாலங்காட்டுச் சாஸனம் ராஜேந்திரசோழ பல்லவனுகிய முதலாவது குலோத்துங்கசோழன் சிம்மாசனமேறிய 2-வது ஆண்டில் (கி. பி. 1066-ல்) ஏற்பட்டது. இச்சாஸனத்தில் 15 திருநந்தா விளக்குக்கு எண்ணெ கொடுத்துவர சங்கரபாடியில் 25 குடும்பங்கள் வசிக்க வீரசோழ பல்லவரையன் ஏற்பாடுசெய்தானெனத் தெரிகிறது. இதனால் அவன் அப்பக்கம் ஆட்சி செய்த ஓர் சிற்றரசனுதல் வேண்டும். பல்லவர்களும் சோழர்களும் கலப்புற்று சோழபல்லவர்கள் என வழங்கினார்களென்பதை இச்சாஸனம் உறுதிப்படுத்துகின்றது. ஆகையால்தான் முதலாவது குலோத்துங்கனுகிய அநபாயச்சோழன் வேளாளர் மரபுதித்த சேக்கிழார் பெருமானுக்கு உத்தமச்சோழ பல்லவன் என்ற உயர்பட்டத்தை அளித்தானென எற்படுகிறது. இல்லா

விடில் உத்தமச்சோழன் அல்லது உத்தம பல்லவன் என்றல்லவா கொடுத்தல்வேண்டும். இதனை பெரிய புராணத்தில் சேக்கிழார் புராணம் 8-வது செய்யுளில்,

அத்தகைய புகழ்வேளாண் மரபிற் சேக்கிழார்
குடியில் வந்த அருண்மொழித் தேவர்க்குத்
தத்துபரி வளவனுந்தன் செங்கோலோச்சுந்
தலைமையளித் தவர்தமக்குத் தனதுபெரும்
உத்தமச்சோழப் பல்லவன் றென்று முயர்பட்டங்
கொடுத்திடவாங் கவர்நீர் நாட்டு
நித்தனுறை திருநாகேச் சரத்தி லன்பு
நிறைதலினுன் மறவாத நிலைமை மிக்கார்.

என்பதனாலறிக.

---

## காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலின் கர்ப்பகிருகத்தில் வரைந்துள்ள சாஸனத்தில்

பள்ளிகொண்ட பாஞ்சகிரி வர்ணனுறை ராஜேந்திர பல்லவராயன் என்றும் கோவிராஜ சக்கிரவர்த்திகளாகிய குலோத்துங்க சோழன் என்றும், இவன் மனைவியின் பெயர் லோகமாதேவி என்றும் சொல்லப்பட்டிருப்பதால், முதலாவது குலோத்துங்கசோழனைப் பல்லவராயன் என்பதால் பல்லவர்களும், சோழர்களும் ஒரே வம்சத்தவர்களாக வழங்கிவந்ததாய்த்தெரிகிறது.

---

## சிதம்பரம் சிலாசாஸனம்.

### சிதம்பரம் நடராஜர் ஆலயம் 2-வது பிரகாரத்தின் மேலண்டை மதிலில் வெட்டப்பட்டது.

× × × × பூமண்டபத்துக்கு ஸமீபத்திலெ திருமாளிகையிலெ கல்வெட்டவும் திருநந்தவனக்குடிகள் பெர் இருவற்குந் திருநந்தவனக்குடிகள் செய்து வருங்குடிமை உள்ளிட்டன கொள்ளா தொழியவும் பெறவெணுமென்று கோளராஜன் நமக்குச் சொன்னமையில் இப்படிசெய்

யக்கடவதாகச்சொல்லி இப்படி சணக்கிலும் இட்டுக்கொள்ளக் கடவர்களாக வரிக்குக் கூறுசெய்வார்களுக்குஞ் சொன்னோம், இந்நிலம் ஒன்பதாவது முதல் பல வாளைவையொருங்கூட்டித் திருநந்தவனமும் திருநந்தவனக்குடிகள் பேர் இருவற்கும் இலக்கைக்குங் கொற்றுக்குந் திருநந்தவனப்

புற இறையிலியுமாய்நிற்க இப்படிக்குக் கோயிலிலே கல்வெட்டவும் பண்ணி இத்திருநந்தவனக்குடிகள் அளக்கக்கடவ திருப்பள்ளித்தாமம் பேர் ஒன்றுக்கு நாளொன்றுக்குக் குறுணி நாழியாக வந்த திருப்பள்ளித்தாமம் திருப்பூமண்டபத்தாக்கு முதலாக அளக்கவும் இவர்களைத் திரு

நந்தவனக்குடிகள் செய்துவருங் குடிமையுள்ளிட்டன கொள்ளாதொழியவும் பண்ணுவது எழுதினேன் திருமந்திர ஓலை ராஜநாராயண மூவேந்தவேளான் எழுதி விழுப்பாதிராஜரும் அளம்பாதிராஜரும் பாண்டியராஜரும் களப்பாளராஜரும் நந்தியராஜரும் இராஜவல்லவப்

பல்லவராயரும் வயிராதிராஜரும் எழுத்திட்டுப் புகுந்த செய்யும்படிப்படி எழுதியது. × × × என உளது.

இது சுமார் 720-ஆண்டிற்குமுன் அரசுபுரிந்த மூன்றாவது குலோத்துங்கசோழன் பராக்கிரமத்தையும், கோளாராயன் சிதம்பரத்திற்கருகிலுள்ள கடவாச்சேரியில் திருநந்தவனத்திற்காக விடப்பட்ட நிலத்தையுந் தெரிவிக்கின்றது.

ராஜநாராயண மூவேந்த வேளான், விழுப்பாதி ராயர், அளம்பாதிராயர், பாண்டியராயர், களப்பாளராயர், நந்தியராயர், இராஜவல்லப பல்லவராயர், வயிராதிராயர் இப்பெயர்கள் அக்காலத்தில் பிரபல நிலைமையிலிருந்த பல்லவ சோழ சளுக்கிய முதலிய அரசர் பாரம்பரையைக் குறிக்கின்றன. இப்பாரம்பரையைச் சேர்ந்தோரும், இவைபோன்ற பட்டப்பெயரை யுடையோரும் சிதம்பரம் சீயாழி மாயவரம் கும்பகோணம் முதலிய தாலூக்காக்களில் வசிக்கும் சம்புகுலத்தாரென்றும் வன்னியரென்றும் வழங்கும் வகுப்பினரால் தற்காலத்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

---

திருப்புறம்பயம் உடையவனான செம்பியன் பல்லவராயன் சாஸனம்: கும்பகோணத்திலுள்ள நாகேச்சுரர் கோயில் வெளி மண்டபம் வடக்குச்சுவரில் வெட்டப்பட்டது.

(௧—) ஸ்வஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டருளி விஜயாபிஷேகமும் வீராபி (௨—) ஷேகமும் பண்ணி அருளின ஸ்ரீ திரிபுவன வீரதேவற்க்கு யாண்டு முப்பத்தஞ்சாவது உய்யகொண்டார் வளநாட்டுப் பாம்பூர்நாட்டுத் திருக்குடமூக்கில் உடைய (௩) நா திருக்கீழ் கோட்டமுடையார் கோயில் முதல் பிராகாரத்துக் கீழைத் திருமாளிகையில் வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பிய முடையனான செம்பியன் பல்லவரைய (௪-)ன் எழுந்தருளுவித்த உடையார் திருப்புறம்பிய முடையார்க்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு.........வேளைக்கு அரிசி நாழியும் இவ்வரிசியால் வந்த ப (ரு) ருப்பமுதும் கறியமுதும் உப்பமுதும் மிளகமுதும் தயிரமுதும் நெய்யமுதும் அடைக்காய் அமுதுபாக்கும் இலையமுதும் மற்றும் திருமஞ்ச(ரு)னமும் திருப்பள்ளித்தாமமும் திருமேற்பூச்சும் உள்ளிட்ட × × × × × × × × × × × × (௧௩)க்கு உடையமாக வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பிய முடையானாக செம்பியன் பல்லவரையன் முப்பத்தஞ்சாவது நாள் உள் (௪௪) ஆயனுல் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கினகாசு பதினேழாயிரமும் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கினமைக்கு இவை இராமநாருடையான் மூலபருஷைப் பிரியனெழுத்து × × × × எனவுளது.

இது, கி. பி. 1178 முதல் ஆட்சிபுரிந்த வீரதேவன் என்றழைக்கப்பெறும் மூன்றாவது குலோத்துங்கன் காலத்தில் திருப்புறம்பயம் பிரதேசத்தை அரசுபுரிந்த செம்பியன் பல்லவரையன் என்னும் அரசனால் திருப்புறம் பியமுடையார்க்கு நித்ய கட்டளை உற்சவாதிகள் நடைபெற, 17 ஆயிரம் காசு பண்டாரமாகிய பொக்கிஷத்தில் வைத்ததைத் தெரிவிக்கிறது. செம்பியன் பல்லவரையன் என்பதால் சோழகுல பல்லவன் என விளங்குகிறது. சோழ வம்ஸமும் பல்லவ வம்ஸமும் கலப்புற்று சோழ பல்லவர், பல்லவச் சோழர்கள் என்றழைக்கப்பட்டார்கள் என்பது இச் சாஸனத்தால் உறுதிப்படுகிறது. முற்காலத்தில் அரசனிடம் பொக்கிஷாதிபதியாக யிருந்தவர்களுக்கு பண்டாரத்தார் என்ற பட்டப்பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

## திருவல்லம் வில்வநாதீஸ்வரர் ஆலயத்தின் மடப்பள்ளி மேலண்டை மதிலிலுள்ள கல்வெட்டு.

"ஸ்வஸ்தி ஸ்ரீ விசையகண்ட கோபாலதேவர்க்கு யாண்டு மூன்றாவது முதல் அழகிய பல்லவன் எதிரிலிச் சோழ சம்புவராயனென் நம்பற்றுக் கடமையும் ஆயமும் கொள்ளுமிடத்தில் முற்காலத்தில் இல்லாததொரு வரிபான செலவளவு மாகாணி வாசியும் நாலுமாவாசியுங் கழித்துக் கடமையும் ஆயமுங் கொள்ளக்கடவதாகச் சொன்னோம். அழகிய பல்லவன் எதிரிலி சோழசம்புவராயன்." × × × × என்று இருக்கின்றது.

ஷை அரசன் காலத்தில் மாகாணியும், நாலுமாவாசியும் வரியிறையைக் கழித்துக் கொடுக்கப்பட்டதை இது தெரிவிக்கின்றது. இச்சாஸனம் கி. பி. 1286-ல் விஜயகண்ட கோபால தேவன் சிங்காதனம் ஏறிய மூன்றாவது ஆண்டில் ஏற்பட்டது.

---

## திருவல்லம் வில்வநாதீஸ்வரர் ஆலயத்தின் வடவண்டை மதிலிலுள்ள கல்வெட்டு.

ஸ்ரீசுவஸ்தி கோபரி கேசரிவர்மரான ஸ்ரீராஜராஜ சோழ தேவர்க்கு யாண்டு 4-வது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மிய்யாறு நாட்டுத் தீக்காலிவல்லத்து சபையோம் கைஎழுத்து +

உடையார் ஸ்ரீராஜ ராஜேந்திர சோழதேவர் பெருந்ரத்து நித்திய விநோத வளநாட்டு பாம்புணிக் கூத்தத்து அரை ரூர் உடையான் ஈராயிரவன் பல்லவனான உத்தமச்சோழ பல்லவரையன் கையால் யாங்கள் கொண்டு கடவ அன்றாடு நற்காசு ஐம்பது இக்காசு அன்பதும் எங்களூர் திருவல்ல முடையார் கோயிலில் இவர் எடுப்பித்த ராஜராஜ ஈஸ்வர முடையார் × × × எனவுளது.

இது, கோபரி கேசரி வர்மரான ராஜராஜ சோழதேவன் 4-வது ஆண்டில் (கி. பி. 1216-ல்) உத்தமச்சோழ பல்லவரையன் என்னும் அரசனால் திருவல்லம் வில்வநாதீஸ்வரருக்கு ஐம்பது காசு கொடுத்துவந்ததை இச்சாஸனம் தெரிவிக்கிறது.

---

## திருவெண்ணைநல்லூர் கிருபாபுரியீசுவரர் கோபுரம் உள்வாயில் வடவண்டை பக்க சாஸனம்.

சுவஸ்திஸ்ரீ சம்புவராயன் ஓலை இராச இராச வளநாட்டு திருமுனைப்பா வெண்ணைநல்லூர் உடையார் தடுத்தாட்கொண்டருளிய ஸ்தானத்தார் கொண்டு தங்கள் நயனாற் திருமடைவிளாகத்திலும் யிருக்கும் செட்டிகள் கைக்குன்ற வாணிபற்சேனை அங்காடி கோயில் அங்காடிகள் பெரிக்கடமை தரிக்கடமை × × × களவாசல் பணம் திருமடை விளாகத்தில் வாசல் பணம் பத்தும் யிப்பேர்ப்பட்டவைகளும் × × × தடுத்தாட்கொண்டருளிய நயனாருக்குப் படிக்கு வஞ்சனத்துக்கு திருநாமத்துக் காணி இறையிலியாகத் தந்தோம் இவை சம்புவராயன் எழுத்து. × × × என்பதாம்.

ஷை சாஸனத்தில் காலவரை விளங்கவில்லை. சம்புவராயன் என்பவன் திருவெண்ணைநல்லூர் தடுத்தாட்கொண்ட கிருபாபுரீஸ்வரருக்கு பல வரும்படிகளை நித்ய படிக்கு விட்டதாயும் சில நிலங்களுக்கு வரியில்லாமல் மானியமாக ஏற்படுத்தியதாயும் தெரிகிறது. இதனால் சம்புவராயன் என்பவன் அப்பிரதேசங்களை ஆட்சிசெய்தவனாதல் வேண்டும்.

---

## ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா மணிமங்கலம் இராஜகோபாலப் பெருமாள் ஆலயமண்டபத்தின் தென்னண்டை மதிலிலுள்ள சாஸனம்.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியனையும் முடித்தலை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 12-வது தனுநாயற்று அமரபக்ஷத்து சஷ்டியும் திங்கள் கிழமையும் பெற்ற சித்திரை நாள் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து குலோத்துங்க வளநாட்டு மணிமங்கலமான சதுர்வேதி மங்கலத்து மகாசபையோம் எழுத்து.

நம்மூர் வண்டுவராபதி எம்பெருமான் கோயில் ஸ்ரீ காரியஞ்செய்கிற காசம்பியசெட்டு கேசவ பட்டரும் ஸ்ரீவைஷ்ணவ

கண்காணி அரட்டமுக்கிதாசனுங்கண்டு இக்கோயில் திருவாய்க்குலத்து எம்பெருமானுக்கு நாநாழி அரிசியால் ஒரு திருப்போனகம் அமுதுசெய்தருள இம்மண்டலத்து இந்நாட்டுக் கீழ்மாங்காட்டு நாட்டுத் திருச்சுரத்துக் கண்ணப்பன் அரசி ஆதிநாயகன் நீலகங்கரையன் வன்னிய நாயனுன உத்தமநிதி கண்ணப்பன் + + + எனவுளது.

இந்த சாஸனம், தினம் நாநாழி அரிசியால் பெருமாள் அமுது செய்தருளுதற்கு வன்னிய நாயன் உத்தமநிதி கண்ணப்பன் 600 குழி நிலம் வாங்கிவிட்டதை தெரிவிக்கின்றது. இவன் மூன்றுவது குலோத்துங்க சோழன் 12-வது (கி. பி. 1189-ல்) ஓர் அரசனுக யிருந்தானெனத் தெரிகிறது.

---

## செங்கல்பட்டுக்குத் தெற்கே 9 மயில் தூரத்திலுள்ள திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் ஆலயத்தின் மூலஸ்தானத்திலுள்ள சாஸனம்.

+ + + கோவி ராஜகேசரி வர்மரான சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு கசு-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டு தன் கூற்று தேவதானம் திருக்கழுக்குன்றமான உலகளந்த சோழபுரத்து ஸ்ரீ மூலஸ்தான முடைய மகாதேவர்க்கு ஓய்மா நாட்டு சேவூரான சோழ கேரள நல்லூரிலிருக்கும் பள்ளிச் செல்வன் பழமுடையனுன குலோத்துங்க சோழப் பெரிய னையன் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றினுக்கு அருமொழி தேவனுழக்கால் நிசத முழக்கு நெய்க்குவிட்ட சாவா மூவா பேராடு தொண்ணூறு × × × என்றுளது.

இது குலோத்துங்கசோழன் ஆளுகை 14-ம் (கி. பி. 1078) ஆண்டில் வரையப்பட்டது. பள்ளிச்செல்வன் என்ற சிறப்புப் பெயர் கொண்ட குலோத்துங்க சோழ பெரிய ஆரயன் திருநந்தா விளக்கு ஒன்றுக்கு உழக்கு நெய் தினம் ஆலயத்திற்கு கொடுத்து வரும்பொருட்டு 90 ஆடுவாங்கி விட்டதை, இச்சாஸனம் தெரிவிப்பதுடன் பள்ளி என்னும் பதம் அரசர்களுக்கு சிறப்பாக வழங்கிவந்ததையும் காட்டுகிறது.

---

## திருக்கழுக்குன்றத்து மலைமேல் வேதகிரீஸ்வரர் கோயில் பிரகாரத்திற்கு மேலண்டைச் சுவரில் எழுதியிருக்கப்பட்ட சாஸனம்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மூந்துமவாணைத் திரிபிர்மாதிகள் முனிவர் மூப்பத்துமுக்கோடி தேவர்கள் வந்து சேவிக்கப் போதாதிடமென்று மண்டபம் திருமுன்னெ வகுத்த வொகந்தவாலி திருக்கழுக்குன்றனூர் கச்சிவாழ் தொண்டனைக் காந்தறயனைச் சாந்தவாரித்தலை மன்னரியாரினும் சாபசாத னிவனெனத் தந்ததே × × ×

செங்கல்பட்டுக் கருகில் திருவிடையீச்சுரம் என்னும் ஸ்தலத்தில் சுமார் 400 வருடங்களுக்குமுன் காந்தவராயன் சேந்தவராயன் என்னும் வன்னி மன்னர்கள் ஆண்டுவந்த காலத்தில், காந்தவராயனால் திருக்கழுக்குன்ற மலைமேல் மண்டபம் வகுத்ததை மேற்படி சாஸனம் தெரிவிக்கிறது.

## திருமலை கோபுரத்திற்கும் வன்னநீட்டிய குகைக்கும் மத்தியில் புதைக்கப்பட்ட படிகளின் பாறைமேலிருக்கும் சாஸனம்.

× × கோப்பரி கேசரி வர்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு 12-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பங்கான நாட்டு நடுவில் வகைமுகை நாட்டுப் பள்ளிச்சந்தம் வைகலூர் திருமலை தேவர்க்கு இளையமங்கை வைத்த திருநந்தா விளக்கொன்று. இதற்கு பூமி திருத்தக்காசு இருபது இப்பூமியால் ஆசந்திராதித்தியவரை இப்பள்ளியுடைய ஆரம்ப நந்திக்கு நித்தம் நந்தாவிளக் கொன்றும் பல்லவராசியார் தேவியார் சின்னவையார் சந்திராதித்தவரை வைத்த நந்தா விளக் கொன்றுக்கு கொடுத்த காசு அறுபது × × × என்றுளது.

சின்னவையார் என்னும் பல்லவ அரசி ஓர் சோழன் குமாரத்தி; இவள் பல்லவராஜனை மணம் புரிந்துகொண்டவள்: இப்பல்லவ அரசி, வைகலூர் திருமலைத்தேவர்க்குத் திருநந்தா விளக்குக்காக அறுபது காசும் இளையமங்கையார் இருபது காசும் கொடுத்திருக்கின்றார்கள். இதை மேற்படி சாஸனம் தெரிவிக்கின்றது.

## தென்னார்க்காடு ஜில்லா கூடலூர் தாலூகாவில் திருமாணிக்குழி வாமனபுரீஸ்வரர் கர்ப்பக்கிருகத்துக் கீழண்டை மதில் முகப்பின் வலதுபக்கத்திலுள்ள சாஸனம்.

× × × வீர சிம்மாசனத்துப் புவன முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி வர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு மூன்றாவது சிம்மநாயற்று அமரபக்ஷத்து பஞ்சமையும் திங்கள்கிழமையும் பெற்ற அஸ்வனிநாள் ராஜராஜ வளநாட்டு உடையார் திருமாணிக்குழி நாயனாருக்கு இந்நாட்டுக் கூடலரச நாராயணன் எழிசை மோகனான ஜனநாதகச்சிராயன் திருநந்தா விளக்கொன்றுக்கு சாவா மூவாப்பசு ௩௰௨ இப்பசு முப்பத்திரண்டும் கைக்கொண்டு இத்திருநந்தா விளக்கு ஒன்றும் சந்திராதித்திய வரை செலுத்தக் கடவோம் திருவுண்ணாழிகை சபையோம். இப்படி சம்மதித்து இவ்வுபையங் கொண்டோம். இது பன்மாஹேஸ்வரரக்ஷை × × என்று உளது.

இது, கூடல் அரச நாராயணன் எழிசை மோகனான ஜனநாதகச்சிராயன் திருநந்தா விளக்குக்காக திருமாணிக்குழி ஆளுடைய நாயனாருக்கு 32 பசுக்கள் விட்டதைத் தெரிவிக்கின்றது. காஞ்சிமாநகரை யாட்சிபுரிந்த சோழபல்லவ மரபார்களுக்குத்தான் கச்சிராயர் என்னும் பட்டப்பெயருண்டு; விருத்தாஜலம் தாலூகா முகாசா பரூர் ஜமீன்தாரர்களுக்கு நாளதும் கச்சிராயதுரை என்றே வழங்கப்பட்டுவருகிறது. அத்துடன் தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள படையாட்சியார்களின் குடும்பங்களில் சிலர், கச்சிராயர் என்ற பட்டப்பெயருடையவர்களாகவே நாளது மிருக்கின்றார்கள்.

### காஞ்சிமாநகரில் ராஜநாராயண சம்புவராயர் கி. பி 1355-ல் அரசியற்றிய காலத்து விஷ்ணுகாஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலய அபிஷேகமண்டபத்தின் தென்பாகத்தில் வரையப்பட்ட கல் வெட்டு.

ஸ்வஸ்தி சகலலோக சக்கிரவர்த்திகள் ஸ்ரீராஜ நாராயண சம்புவராயருக்கு யாண்டு இருபதாவது ஆனிமீ ௩௦௨ பெருமாள் அருளாளநாதன் கோயில் ஸ்தானத்தாருக்கு நயினார்பெருமாள் திருநாள் எழுந்தருளுமளவில் ஆனை நம்பிரானிலும் குதிரை நம்பிரானிலும் ஸ்ரீ கெருடாழ்வானிலும் நாலுநாளு மிறங்கின தெருவீதியிலே எழுந்தருளிவிக்கக் கடவாராகவும். திருத்தேரில் எழுந்தருளுமளவில் திருநாள்தோறும் ஏழாந்திருநாளில் அத்தைக்கு கெங்கைகொண்டான் மண்டபத்து எழுந்தருளினால் மீளவும் எழுந்தருளிவிக்கக் கடவராகவும் × × என்பதாம்.

இச்சாஸனத்தால், சம்புகுலத்து மன்னர்களில் முடிமன்னனாயிருந்து சுமார் 600 வருஷங்களுக்குமுன் காஞ்சீபுரத்தில் அரசு செலுத்தியவன் ராஜநாராயண சம்புவராயனெனத் தெரிகிறது. இதற்குப் பின்னரே ஏகாம்பரச்சம்பு பல்லவன் அரசியற்றினனெனவும், அவனது சமூகத்தே இரட்டைப் புலவர்கள் தெய்வீக வுலாவை அறங்கேற்றினாரெனவும் ஏற்படுகிறது. அவர்கள், தம் வாக்கால், சம்புகுலம், பல்லவகுலம் யாவும் ஒன்றேயென விளக்கியிருக்கிறார்கள்.

---

### நாராயணசம்புவராயர் சிம்மாஸனம் ஏறிய முதலாவது ஆண்டில் மஹாபலிபுரம் வராகசுவாமி கோயிலின் முன்மதிலில் எழுதியுள்ளதாவது.

+ + + + நாராயணன் சம்புவராயற்கு யாண்டு முதல் மாமல் நின்ற பெருமாளுக்கும் நிலமங்கை நாச்சியாற்கும் வைபண நிலம் உள்ளது அஞ்சாவது முதல் திருவாராதனைக்கும் + + +

என்று எழுதியிருப்பதால், காஞ்சிபுரம் மஹாபலிபுரம் இவைகளுக்கு விசேஷதானங்களை நாராயண சம்புவராயர் செய்ததைத் தெரிவிப்பதுடன், இவர் சுமார் 600 ஆண்டுகளுக்குமுன் பேரரசு புரிந்ததாகவும் ஏற்படுகிறது.

---

## காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் அத்திகிரி பருவதத்திற்குத் தென்புறம் எழுதியிருக்கும் சாஸனம்.

ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு ஆண்டு பதிமூன்றாவது மேஷஞாயிற்று பதின்மூன்றாந்தேதி வியாழக்கிழமை பூர்வபக்ஷத்து அஷ்டமியுமான செயங்கொண்ட சோழமண்டலத்து யெயிற் கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாள் ........அம்மயப்பர் தன்னுடைய பொருளாளான விக்கிறம சோழ சம்புவறயர் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு (௩௰௨) ரிஷபம் ௧-க்கு அழக்கும் மொழிநங்கை நாழியாலே உழக்கு நெய் அளக்கக்கடவதாகவும் பாலமுதுக்கு விட்ட பால்பசு யெட்டும் ஆக பசு (௪௰) நாற்பதும் ரிஷபம் ௧-ம் கைக்கொண்டோம். இப்படி சந்தராதித்தியவரைக்கும் செலுத்தக் கடவதாகக் கைக்கொண்டோம். + +

கி. பி. 1136-ல் அரசாண்ட 2-வது ஸ்ரீ குலோத்துங்க சோழன் பதின்மூன்றாமாண்டில் விக்கிறம சோழ சம்புவறயர் விஷ்ணு காஞ்சிபுரம் வரதராஜப் பெருமானுக்கு நெய்விளக்கேற்றிவரவும், பாலமுதுக்கு 40 பசுவும், 1-ரிஷபமும் விட்டதை ஷை சாஸனம் தெரிவிக்கிறது.

---

## காஞ்சி திருவத்தியூர் அருளாளப்பெருமாள் ஆலயத்தில் வரையப்பட்ட சாஸனம்.

+ + + மகா மண்டலேஸ்வர ஸ்ரீவீர ஹரிராயருக்குச் செல்லாநின்ற சகாப்தம் ௧௩௱௨௰-க்குமேல் சித்திரபானு சம்வத்சரத்து ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்துக் காஞ்சிபுரத்தில் திருவத்தியூர் நின்றருளிய பெருமாள் அருளாள நாதனுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ மஹாமஹிமண்டலேஸ்வரன் பரம வம்ஸோத்பவ பல்லவ குலதிலக பாரத்வாஜ கோத்திர பவுத்திரத்துக்கு ஸ்ரீ புவநேஸ்வர காமக்கோட்டம் பிகாலபத வாத்தசாதபரம மாஹேஸ்வர பெனிதார்த்த சந்திர கட்டுலாக்க

துவசக்குவாய உபரபோஷண சத்தியசம்பாஷண பசபவபூஷண விற்பவாஞ்ச நிவாரண வேஷண திருவேங்கிட நாதனுடைய வடிசாக சர்ச்சன நீதிபாராயண கிரந்த சேஷ சிற்ப பரப்பிரசண்ட ருத்ராவத்தார ஜெகதங்க பைரவ புவனீதாரண ருபகார்த ரப்ப அநேக நிபுநிருபதி மணிமகுட கடித சரணாரவிந்த பூலோக சாதுர்வர்ண பரிபாலவ......ராஜஸம் விக்ரம விகாரமல்லாபுர வல்லவ மைலாபுரநாத......ஜெகத்கோபால பல்லவாதீத திரு நேத்திரனைய பல்லவாராய + + என்று வரையப்பட்டிருக்கிறது.

இது, வீரஹரிஹரராயர் ஆளுகையில் (கி. பி. 1379-ல்) காஞ்சியில் அரசனாக யிருந்த திருநேத்திரனைய பல்லவாராயனைச் சிறப்பித்துக் கூறுகின்றது. பல்லவச் சோழர்கள் பாரத்வாஜ கோத்திரம் வழங்கினதையும் தெரிவிப்பதுடன், மல்லாபுர வல்லவ மைலாபுர நாதர் என்பதால், காஞ்சிபுரத்திற்கும் மயிலை நகரத்திற்கும் அரசர்களாக யிருந்தார்களென குறிப்பிடுகின்றது. அதனால்தான் காஞ்சி பல்லவகோபுரத்தில் வன்னியர்களுக்கு ஆதிக்க மிருப்பதைப்போல், சென்னை மயிலாப்பூர் கோபுர நியாராதனை சுதந்திரமும், நாளதும் வன்னியர்கள் வசம் இருந்து வருகிறது.

---

## வந்தவாசி தாலூகா வயலூர் திருவேதி மலையில் பெருமாள் ஆலயத்தின் தென்னண்டை சுவற்றிலுள்ள சாஸனம்.

ஸ்வஸ்திஸ்ரீ.........திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 15-வது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து உத்தமசோழ வளநாட்டு வயலூரான குலோத்துங்க சோழ நல்லூரில் திருவேதிமலையில் என் பாட்டன் எழுந்தருளுவித்த அம்மை விண்ணகராழ்வார்க்கும் அம்மைக்கும்.........திரு வாரம் சிறப்பு திரி பூஜைக்கும் உள்ளிட்ட..................திருநல்லூரான சித்திரமேழி நல்லூரில் வெட்டியும் காவலும் தனியாட

பெறும் கஅ காணிமா நெல்லும் தேவற்குக்கொடுத்து கல்வெட்டு வித்தேன் மிண்டனாகிய ஸ்ரீ அம்மையப்பனான எதிரிலி சோழசம்புவராயர் எய்+ + + என்றுளது.

1919ஆ நவம்பர்மீ 20உயில் வந்தவாசி தாலூகா வயலூர் கிராமத்தில் கூடிய வன்னிகுல க்ஷத்ரிய மகாநாட்டிற்கு, ம-ா-ா-ஸ்ரீ சேலம் சு. அர்த்தநாரீச வர்மா, K. ஏகாம்பர நாயகரவர்களுடன் சென்றிருந்தகாலையில், வயலூர் மலையின் ஆலயத்திலிருந்து இச்சாஸனம் அகப்பட்டது. மற்றும் அச்சுற்றுப்பக்கமுள்ள சரித்திர ஆராய்ச்சிகளை செய்தபோது நம்மனோரின் ஆட்சிப்பிரபாவங்களும், அக்காலத்தில் ஏற்பட்ட ஆலய மேன்மைகளும், அது தற்காலம் சீரழிந்திருப்பதையும் காண எங்களுக்கு ஆச்சரியமும் அடங்காதுக்கமும் தோன்றியது. அச்சரித்திரசாசன குறிப்புகளைக்கொண்டு வித்வான் சேலம் சு. அர்த்தநாரீச வர்மா அவர்கள் எழுதிய பாடல்கள் பின்வருமாறு.

கோதிலா வயலூரின் பூர்வநாமம்
குலோத்துங்க சோழநல்லூ ரென்பதாகும்
மீதுலவு திருவேதி மலையின்மீது
விண்ணகரத் திருமாலின் கோயிலுண்டு
சேதமுற்ற சிவன்கோயில் தன்னைக்காண
சித்தமிகப் புலம்புமிந்த நிலைசெய்தோர்
பாதகராம் புறமதஸ்தர் லிங்கமூர்த்தி
பனிவெய்யில் மழைபொறுத்தல் பாவம்பாவம்.

குனைக்கிரண்டு நாழிகையிற் றிருவாய்ப் பாடி
குன்றதனி லரங்கர்க்கு கோயிலுண்டு
மனமுறவே கிடந்ததிருக் கோலமாகும்
மால்பாதம் பொய்கைதனில் மதிக்கக்காணும்
தணப்பரிய தீர்த்தங்கள் சிரம்பவுண்டு
தலமதனை யாண்டவர்கள் சம்புவேந்தர்
எணைத்தகுந்த வயலூரே யிராஜதானி
இன்றுமதன் சின்னங்க ளெங்குந்தோன்றும்.

நகரழிந்த பலகுறிகள் காட்சியாவும்
நாடுபவ ருள்ளத்தை நடுக்கஞ்செய்யும்
அகநகரும் புறநகரும் மதிலும் குன்றும்
அகழிமுத லங்கங்க ளனேகமுண்டு
தகவுடனே எதிரிலிநா ராயணப்பேர்
சம்புமன்னர் அரசாட்சி சாசனங்கள்
மிகவுண்டு திருவேதி மலையின்மீது
விக்கிரம சோழனுட விஜயர்தானே,

---

## கி. பி. 1429-ல் வீரசிங்கதேவ மகாராயன் ஆளுகையில் ஏற்பட்ட தாம்பிர சாஸனம்.

+ + + திருவேங்கடமுடையான் திருவிளையாட்டுக் கிராமமான சதுர்வேதிமங்கலத்து பிரதி நாமமான கம்பங்குளத்திற் கடுத்த கிருஷ்ணவோடையிலிருக்கும் வன்னிய ராஜ கோத்திரம் மூக்கா நாயகன் குமாரன் முத்தைய நாயகன் உள்ளிட்டார் அனைவரும் எங்கள் காணியாட்சி கிராமமான கிருஷ்ணவோடை + + + என எழுதப்பெற்றுள்ளது.

இச்சாஸனத்தில், வன்னிய ராஜ கோத்திரம் மூக்கா நாயகன் குமாரன் முத்தைய நாயகன் என்று வரைந்துளது காண்க.

---

## கி. பி. 1456-ல் ராஜவல்லபன் ஆளுகையில் ஏற்பட்ட பட்டயம்.

சென்னை திருவொற்றியூருக் கடுத்த × × × சாத்தாங்காடு கிராமத்துக் குருக்கள் சங்கராச்சாரியார் உத்தரவுப்படி அவர் முன்னிலையில் வன்னிய சின்னப்பிள்ளை தந்திரியுள்ளிட்டாருக்கு எழுதிக்கொடுத்த கிரய சாஸனம் எங்கள் கிராம காட்சியான சாத்தாங்காடு × × × என்று வரையப்பட்டிருக்கிறது. வன்னிய சின்னப்பிள்ளை தந்திரி என்பவன் ஓர் சேனைத்தலைவனாகும்.

---

### அவருசி யீசான்னிய பாகத்தில் சங்கனகோளத்துக்குக் கிழக்கு சிவபூசை புஞ்சைக்காட்டில் குத்துக்கல்லிலே எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல்.

ஸ்ரீதஸ்ரீ மகா மண்டலேஸ்வரன் அரியதழ விபாடன் மூவருய கண்டன் கண்டனுடு கொண்டு கொண்டநாடு கொடாதவன் பூர்வ தக்ஷிண பச்சம உத்தர சதுசமுத்திராதிபதியான முதலாக எம்மண்டலமும் கொண்டருளிய யிராசாதி யிராசனுன ருசபரமேசுவரன் களவாகன சக்ரவர்த்தி கருளொதர ரூரியன் பதினெட்டு கோட்டத்து வன்னியர் தாண்டய துலுக்கர் தென விபாடன துலுக்கர் மோகம் தவிர்த்தான் இராய மகாராயர் கிருஷ்ணராயத் இம்முடி அச்சுததேவ மகாராயர் பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சகாசதம் ஆசாய-க்கு மேல் செல்லாநின்ற னந்தன ஹு கார்த்திகை மாசம் முதல் இராயசத்துத் தொண்ட மாதய்யன குமாரன் இம்மப்பத ஞயகருக்கு தெக்ஷிண புரமான பாலருச உடையாருக்கு செல்லாநின்ற கொங்கு மண்டலத்து ஸ்ரீமன் மகாதேவதே ஒத்தமன் அவருசி லிங்கந்திப் படிக்கு யெல்லைய தேவ மகாருசாவின் ஊழியதது பகவருயகரும் தானிக அவருசி சப்பன் உள்ளிட்டாரும் ஸ்ரீமது அனேக பிரம்மாண்டபாண்ட கெற்ப இறுபிறுதவித மதுசூதன திருக்" காதிகபற அனேக தேவதா மகுடமணிகண கிரண + + + என்பதாம்.

சுமார் 400 வருடங்களுக்குமுன் அச்சுததேவ மகாராயர் அரசியற்றிய காலத்தே இச்சாஸனம் ஏற்பட்டதாயும், அப்போது வன்னியர்கள் பல கோட்டங்களில் அரசு புரிந்திருந்ததாயும் டை சாஸனம் தெரிவிக்கிறது.

---

## தென்காசிதாலூகா அகோர சிவந்தபாதமூருடைய ஆதீனம் வன்னிய க்ஷத்ரிய வம்ச பாரம்பரை பட்டய சாஸனத்தின் நகல்.

கரபுநிலமைகரந்த தேவர்குல வங்கிஷத்தான் எதிர்த்தாரை இமையபோதில் கண்டனம் செய்ய கயிலாசபதி கருணைபெற்றோன் வீரலட்சுமி விளையாடுகின்ற புயவலிமை யுடையோன் தேவர் கொண்டாட திக்குவிசையம் செய்தோன் அரக்கர்குல காலன் பொர்ப்பூணநூலும் கண்டசரமும் வீரகண்டாமணியும் கஸ்தகடையமும் இது முதலாகிய சர்வாபரணமும் உடையோன் இராஜாக்கள் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மந்திரிகள் பிரபுக்கள் தனகர்த்தர் குந்தளக்காரர் முதலியவர்கள் இருபுறமும் நிறைந்த கொலுமுகத்தையுடையோன் வன்னிக்கொடியும் மீனக்கொடியும் புலிக்கொடியும் பஞ்சவர்ணபாவாடையும் சகல விருதுகளுடையோன் சந்திரபதி அரசுபதி வில் வன்னியகுலாதிபதி அக்கினி கோத்திரத்தான் முப்பத்திரண்டாயுத முடையோன் நவமணிமாலையுடையோன் செப்புபரியாள அக்கினி குதிரை நடாத்தி சத்துருவை செயம்பண்ணி அழியாத கீர்த்தியை யுடையோன் தேவசம்பந்த முடையோன் தேவலோகம் விட்டு பூலோகம் வந்தோன் காஞ்சீபுரம் சிலாசாதனத்துக்கு உடையவனும் சங்கிரிதி பதுமைகிரி நவகிரிக்கும் உடையோன் திக்குகள்தோறும் தேவாலயம் பிரமாலயம் நிர்மாணித்தோன் தாம்பிரநதிக்கும் வடக்கு பழய ஆழ்வார் கோவிலுக்கு ௬-காணி விரைப்பாடும் ஆழ்வார் குறிச்சியில் ஆள்வார் கோவிலும் அதற்கு பூசை முதலியவைக்கு ௪-காணி நிலமும் தர்மசாசனமாக விட்டுக்கொடுத்து பதிநெரு கோட்டைக்கு தலைவன் அவுகுதேவன் இவர்களில் முதன்மைபெற்ற அக்கினிக்கோத்திரத்தான் வன்னிய வறதுண பாண்டியன் காஞ்சீபுரம் பிரமகுல அகோரசிவந்த பாதமூருடைய தேசிகரவர்களை தெரிசனை செய்து விபூதி பிரசாதம்பெற்று வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில் யெங்கள் குலகுருவாகிய அகோர சிவந்தபாத மூரு

டையதேசிகரவர்கள் தென்காசியில் விஸ்வநாதசுவாமி சன்னதியில் சன்னதிமடத்ததிபராய் வந்திருப்பது தெரிந்துவந்து தெரிசனைசெய்து திருநீரு ஆசீர்பாதம் பெற்று தீச்சைசெய்து உபதேசம்பெற்று குருமொழிப்படியிருக்கு சாலிவாகன சகாப்தம் 1382-மேல் விஸ்வேசுரர் சன்னதியில் யெழுதிக்கொடுத்த பட்டய சாதனமாவது யெங்கள் வம்ஸத்தார் பாரம்பரை குரு சன்னிதானத்துக்கு வருஷகாணிக்கை தலைக்கட்டு 1-க்கு பணம் 2-ம் தீச்சைக்கு பணம் 10-ம் யெங்களில் வரம்பு தப்பினவர்களுக்கு வாங்கும் கடமையும் சுபமுதலாகிய காரியத்திற்க்கு பணமும் வழக்கப்படி வீதமும் கொடுத்து போதுவோ மாகவும் இதை தடை செய்தவர்கள் கோவஸ்தி சிசுவஸ்தி செய்தவர்கள் போகிற கெதியில் போவார்களாகவும் இதை விர்த்திசெய்தவர்களும் இந்தப்படி நடந்தவர்களும் அஷ்ட ஐஸ்வரியமும் சகல சம்பத்தும் பெற்று வாழ்ந்துகொண் டிருப்பார்களாகவும்.

இந்தப்படிக்கு,

வறகுணபாண்டியன்.

இப்பட்டயமானது, சாலிவாகன சகாப்தம் 1382-ல் அதாவது 462 வருஷங்களுக்குமுன் அக்கினி (அதாவது ஆங்கிரச) கோத்திரத்தாரான வன்னிய வரகுணபாண்டியன், ஆழ்வார் கோயிலுக்கு நிலங்கள் விட்டதையும், காஞ்சிபுரம் பிரமகுல அகோர சிவந்தபாதமூருடைய தேசிகரவர்களை தரிசனம்செய்து விபூதிப் பிரசாதம்பெற்று, அவருக்கு சிலகாணிக்கைகள் ஏற்படுத்தியதாயும் தெரிவிக்கிறது.

பாண்டியர்கள் வன்னிய மரபைச்சேர்ந்தவர்கள் என்பதற்கு, கடிகைமுத்துப்புலவர் "பரவுவர குணராம பாண்டிய வன்னியன் புகழைப் பரிந்துகூற" என்று பாடியிருப்பதற்கேற்ப, மேற்படி பட்டயத்திலும் வன்னிய வரகுண பாண்டியன் என்று குறிப்பிட்டிருக்கிறது. மதுரையை யாண்ட பாண்டியர்கள் பாரம்பரையில் உற்பவித்து, தற்காலம் எழாயிரம் பண்ணை அரண்மனையில் வீற்றிருக்கும் ராஜராஜ ஸ்ரீமார் அம்பை குலசேகர, சிதம்

பாதுரைப் பாண்டிய, செப்புப்பரி ஆண்டுகொண்டார் என்று பூர்வமிருந்து வழங்கிவரும் பட்டப்பெயருக்கேற்ப, மேற்படி பட்டயத்திலும் செப்புப்பரியான அக்கினிக்குதிரை நடாத்தி என்று வருவனவற்றையும் உற்றுநோக்குவோர்க்கு, பலர் பலவாறு தற்போது சந்திரவம்சமென்றும், பாண்டியரென்றும் சொல்லிக்கொள்ள ஏதுவில்லையென்றும், பூர்வீகமிருந்து வம்சவழியாகவரும் பாண்டியர்கள், சிவகிரி, ஏழாயிரம் பண்ணை அளகாபுரி முதலிய வன்னிய ஜமீன்தாரர்களே யென்றும் விளங்கும்.

---

## புதுவைமாநகருக்கடுத்த வில்லவனல்லூர் அக்கினி வம்ஸ க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலய பூர்வோத்திரம்.

சுபஸ்ரீ மஹாமண்டலத்திலே சுவர்ண அரியராய் விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், துடுக்கர் தளவிபாடன் துடுக்கர் மோகந்தவிர்த்தோன், ஒட்டியர் தளவிபாடன், ஒட்டியர் கோட்டந்தவிர்த்தோன், பின்மண்டலமுங்கொண்ட இராஜாதிராஜன், இராஜபரமேஸ்வரன், இராஜமார்த்தாண்டன் இராஜேஸ்வரன், புயங்கன், இராஜகம்பீரன், இராக்கணத்தம்பிரான், இந்திரதாரந்தரன், அஸ்வபதி, கஜபதிதுரந்தரன், அஷ்டமஹேசுர இராயன் அசுராணவிருது நரபாலன், கோதண்ட இராமன், கலியுக இராயன், கண்ணன். வாளுக்கு வீமன் தோளுக்கு அபிமன்னன், குணத்திற்குத் தருமன், அழகுக்கு அநங்கன், அமர்ந்ததற்கு அரிச்சந்திரன், ஆண்மைக்கு அனுமான், ஆக்கினைக்குச் சுக்ரீபன், குடைக்குக் கர்னன், செல்வத்திற்கு அளகேசுரன், பலத்திற்கு வாயுபகவான், உலகுக்குக் கதிரோன், உலாவும் உலகமெல்லாம் படைக்க நினைத்தருளிய வீராதிவீர வன்னியப் பிரதாபன், கிருஷ்ணதேவ மஹா இராயர், அச்சுததேவ மஹா இராயர், புஜபலதேவ மஹா இராயர், திருமலைதேவ

மஹா இராயர், நரசிங்கதேவ மஹா இராயர், இராமதேவ மஹா இராயர், பிரவிடதேவ மஹா இராயர், மல்லிகார்ச்சுன தேவ மஹா இராயர். பிரிதிவி இராச்சிய பரிபாலனம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் [illegible] இதற்குமேல் சின்ற ஆங்கிரச வருஷத்து மிதுனமாசத்து பூர்வபட்சத்து அஷ்டமியும் பூரட்டாதி நட்சத்திரமும் பெற்ற சோமவார நாள் வடகரை விருதப்பசங்கன் வளநாட்டுக்கு மேற்குநாடு இருங்கோள், பாண்டிவள நாடு தொண்டமண்டலம் சோழமண்டலம் பாண்டியமண்டலம் கொங்குமண்டலம் இந்த நாலு மண்டலத்திற்கு அழகான தொண்டவளநாட்டுக் கழகான வில்லவனல்லூர் திருக்காமேஸ்வரர் குயிலாரம்மை அவர்கள் சந்நிதியாகிய வில்லவனல்லூரிலே அந்தந்த ஊர்திக்கு மடாலயங்கள் உண்டாகின்றன. நமக்கு இவாலய பூசைமாத்திர மிருக்கின்றது. தென்தேசத்தில் நமது வம்ச * பண்ணாடர் தங்கள் பேரும் பிரதாபமும் உண்டாக வேண்டுமென்று மடங்கள் கட்டியிருக்கிறார்கள். நாம் இராயரைப்போய்க் கண்டு மடங்கட்ட உத்திரவுபெற்று வருவோமென்று திருவக்கரை வல்லவாட்டு மழவராய பண்டாரத்தார் கருத்தநாயனார் பண்டாரத்தார் சின்னகுமார நாயனார் பண்டாரத்தார் சிதம்பரம் மழவராய பண்டாரத்தார் சசி இராயர் பெரியண்ணை நாயனார் சிற்றம்பல நாயனார் தாண்டவ நாயனார் சடையப்ப நாயனார் அழகுசிங்க நாயனார் மெய்யோக நாயனார் பண்டாரத்தார் இவர்களும்

---

சிலையெழுபது விற்பிடிச் சிறப்பு 6-வது செய்யுள்.

* மிடிகாக்கப் புலவருக்கு மிகுபொருளீந் திடுவார்தம்
அடியிரக்கத் தொடுபணிவார்க் காசுதருங் கொடையாளர்
படிபுரக்க வவதரித்த பண்ணாடர் காத்தலைமலிற்
பிடியுரத்தி னாலன்றோ பெருஞால முமுறவே.

ஷை சாஸனத்தில் கூறியதற்கிணங்க, இச்செய்யுளிலும் பண்ணாடர் என்ற சொல்லுக்குரியார் வன்னியராவது காண்க.

* கண்டன்மார் தந்திரியார் படையாதியார் என்னும் பல் பட்டப்பெயர் பெற்ற சோம சூரிய அக்கினி வம்ச பண்ணுடையான உறவின் முறையார் அனைவரும் போய் இராஜ வன்னிய இராஜ ஸ்ரீ மல்லிகார்ச்சுனதேவ மஹா இராயரைக்கண்டு பேச அப்போது இராயரும் சிம்மாசனம் விட்டு இறங்கி நமது வம்சத்தாரென்று தெரிந்து தேவாலய பூஜையிருக்க மடத்துத்தருமம் நமக்கேயென்று இராயரும் கேட்க அப்போது நாயனார் பண்டாரத்தார் பாண்டிய மண்டலம் சோழமண்டலம் முதலிய மற்ற மண்டலங்களில் குரு மடங்கட்டியிருக்க தொண்டமண்டலத்திலேயும் இருக்கவேண்டுமென்றார். இராயரும் சந்தோஷித்து உங்களுக்கு இடமில்லாமற் போமோவென்று தானத்தாரையழைத்து நாயனார் பண்டாரத்தார் அவர்களுக்கு இடம்விடப் போமென்று சொல்ல அப்போது தானத்தார் மூத்த முதலியார் திருநாகத்தொண்ட முதலியார் நம்பித் திருஞானப்பண்டிதர் மற்றும் முற்றூற்றுடையார் நம்பிக்குருக்கள் வயித்தியநாத குருக்கள் கோவில் கணக்கு ஸ்ரீமக்கணக்கு மற்றுமுண்டான தானத்தார் தலத்தாருங்கூடி லெகவிசித்திலிங்க தேவர் முனைய தேவர் தம்பிரானார் திருநாமத்தில் காணியான தெற்குத் தெருவில் தேரோடும் வீதியில் தென் சரகில் பாலையர் மடத்திற்குக் கிழக்கு அம்பலத்தாடும் ஐயர் மடத்திற்கு மேற்கு சட்டையர் மடத்திற்கு வடக்கு அடிகிழக்கு மேற்கு (௭௫) தெற்கு வடக்கு

---

நந்திக்கலம்பகம் 10-வது செய்யுள்.

* கோதைசோரி சொரிகொங்கை விம்மல்விம்மு குறுமுறுவற்
சோதிவெளுக்கில் வெளுமருங்கிற் றுவளினியுந் துவள்கண்டாய்
காதுநெடுவேற் படைநந்தி கண்டன்கச்சி வளநாட்டு
மாதரிவரோ யிருக்கின்ற வாளிமற்றென் மடநெஞ்சே.

இச் சாஸனத்திற் சொல்லியிருப்பதற் கிணங்க, நந்திக் கலம்பகத்திலும் ஏனைய நூற்களிலும் கண்டனென்னும் பட்டப் பெயர் வன்னியருக்கு வழங்கப்பட்டு வருதல் காண்க.

அடி (அரு) அடி ஒன்றுக்குப் பொன் ஒன்றாக (எரு) பொன்னுக்குக் கிரயங்கொண்டு கல்லில் பேர்வெட்டி நட்டு கிணறுகட்டி மடங்கட்டி தாம்பர சாஸனமாக பட்டயமெழுதி நாலுமண்டலம் (ருக) தேசமுங் குருமூர்த்தமாய்க் கொண்டாடச்சொல்லி மஹா மட பிக்ஷை முட்டியும் திருவிளக்கும் திருநந்தவனப் பணிவிடையும் திருமாலையும் உபயமும் மகேஸ்வர பூஜையும் பண்ணி நடத்திவர சிலாநதி சக்கரவர்த்தி யோகீஸ்வர குருவை மடத்தில் வைத்து அந்தந்தச் சீர்மைப் பண்ணுடரும் நாயினார் பண்டாரத்தார் அனைவரும் வம்சதருமக் கீர்த்திக்காக மடத்திற்குக் கட்டளையிட்டது உபநய முகூர்த்தத்திற்குப் பணம் ஒன்றும் சயமசம் நாட்டி மாலைகுடு கலியாணத்திற்குப் பொன் பத்தும்-கத்தி நாட்டிக் கலியாணஞ் செய்பவருக்குப் பணம் பத்தும் மற்ற முகூர்த்தங்களுக்கெல்லாம் மாப்பிள்ளை வீட்டார் பணம் ஒன்றும், பெண் வீட்டார் பணம் ஒன்றும், பெண் ரத்த பணம் ஒன்றும் மாதாபிதா குருபாத பூஜை வரும்படிகளும் மடத்தில் சேர வேண்டியது. தண்டிகை துரைகள் பத்து பணமும் குதிரைமேற் குடைபெற்ற அஸ்வபதிகள் அஞ்சுபணமும் ஜாதியில் குற்றங்குற்றஞ்செய்பவர் அபராதபணமும் மன்னவேடு கிராமத்தார் அரிவாளுக்கு ஆறுபடி தானியமும் கனைவெட்டுக்குப் பதக்கு தானியமும் ஏருக்கு முக்குறுணி தானியமும் பேருருக்குப் பத்துபணமும் சிற்றூருக்கு அஞ்சு பணமுங் கொடுக்கவேண்டியது. ஆருபாது அற்றவர் சொத்தை மடத்தில் சேர்த்து மடத்தாரால் சுவாட்சனை பெறவேண்டியது. இவ்வரும்படிகள் மடத்திற்குச் சேருகிறபடியால் சென்னூர்த்திலர்தம் கோபி திருமணி திருநீதிட்ட பேர்களும் சந்திரசூரிய ருள்ளளவரைக்கும் நடத்தி வருவீர்களாகவும்; இந்த மடாலய தருமத்தை தவறாமல் கொடுத்தபேர்கள் மாதாப்பிதாக்களை இரட்சித்து சிவாலயம் பிர்மாலயம் பூதானம் கோதானம் கன்னிகாதானம் செய்த பலனைப் பெறுவார்கள். ஸ்ரீமது வில்லவனல்லூரிலே இருக்காமேஸ்வரர் அகிலாம்மை குமாரசாமி சந்நிதானம் விளங்குவதுபோல் விளங்குவார்கள். மடத்திற்கு அனுப்பக் கட்டளையிட்டதை

அனுப்பாவிடில் மடத்து சுவாமியாரால் அனுப்பப்பட்ட பணிவிடை சிஷியர்கள் எழுந்தருளின உடனே கூடி முன்னேபோய் காண்பித்துக்கொண்டு வந்தவர்களுக்கு விடுதிவிட்டு சாப்பாடு போஜனம் அமைத்து தருமத்திற்குண்டான வரும்படிகளைக் கொடுத்தனுப்பிவைக்க வேண்டியது. தருமபரிபாலரான சௌபாக்கிய பிரமாணிக்கரான வேள்வியிற் பிறந்தோர்களான சம்பு குலத்தவரான குமாரசாமியார் படைத்தலைவரான அசுரர்கள் மார்பரான ஆஸ்தான பந்துஜன சிந்தாமணியரான சாந்த மாரியுடைய கன்னிகையை மணஞ்செய்தவரான வாடாமாலையும் வன்னத்தடுக்கும் மாலையும் தரித்தவரான வாசமிகுந்த குவளைமாலையும் மிடக்கொடியும் முப்பத்திரண்டு விருதும் பெற்றவர்களான முன்னூல் மார்பும் புலிக்கொடியும் பெற்றவரான சையாதநாட்டுக்குச் சப்தபதிகளான சோணாடு காத்தவரான மறையோர் மகனுக்கு உயிர் கொடுத்தவரான வல்லாளனுடைய மகுடந் தரித்தவரான வாதாபியை வென்ற வன்னிய குலாதிபரான செங்கையில் வில்லும் சிலீமுகமும் எடுத்தவரான வாடி வாளும் வீரப்பரி நகுலதுஷ்ட நிர்த்தண்ட விர்ப்பன்ன உத்தண்ட கோதண்ட விக்கிரமார்த்தாண்டரான அனைவோரும் மனமொத்து இந்த காரியம் தட்டுதலைபண்ணுவதல்லவென்று மடத்து தருமம் விளங்கத்தக்கதாக பார்க்கவும் யாதொருவர் அகடவிகடம் பண்ணினால் கங்கைக்கரையில் காராம்பசுவை கொன்ற பாவத்தில் போகக்கடவர். தங்களுடைய மாதாபிதாக்களைக் கொன்ற தோஷத்திலேயும் தெய்வ பிராமணரைக் கொன்ற பாவத்திலேயும் போகக்கடவர். தருமம் விளங்கக் குலம் விளங்கும்; குலம் விளங்கப் பெருமையும் செல்வமும் பதவியும் அடைவார்கள்.

## வைத்தீஸ்வரன் கோயில் வன்னியர் மடாலய தருமசாஸனத்தின் விவரம் வருமாறு.

சுபஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பதினெட்டுக்கோட்டத்து வன்னிய ராய கண்டன் அஷ்டதிக்கு மனோகர பயங்கரன் சமரில் மார்த் தாண்டன் இராஜகெம்பீரன் நவச்சக்கரவர்த்திகளில் அசுவபதி கெஜபதி நரபதி நவகோடி நாராயணன் பூர்வ தக்ஷண பச்சிம உத்திர சப்த சமுத்திராதிபதி ஈழமும் குணயன்னமும்கொண்டு கெஜவேட்டையும் அசுவவேட்டையும் எம்மண்டலமுங்கொண்டு சமுத்துறைதகண்டருளிய இராஜாதிராஜன் ராஜகெம்பீரன் ராஜ குலத்துக்கு ராஜமணிவிளக்கு இராஜபரிகேசரி சோழசிங்க சித்தாருணன் இளமுடிகொண்டெதிர்த் தராசாருவான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டிய மோகந்தவிழான் கொங்குமண்டலம் குறும்பறுத்து அழியாவிராணமழித்த வீராடகொடி வன்னிய மிண்டன் ரணமன்னியப்பிரியன் கோஷ்டத்து வன்னியராய கோலாகலன் இளவரசமணவாளன் கண்டியபிரதாபன் கட்டாரி வல்லவன் சங்கீத சாஹித்ய வித்யாவிநோதன் ரணமுகசுத்த வீரன் நகைமுகச் சந்திரோதயன் மத்தகஜவீரன் சத்தயபரிபா லன் மகாகாளிகூளி கணங்கள் கைக்கூப்பும் மணவாளகெம்பீ ரன் எதிர்த்தோரை சினமடக்கும் வேங்கை வரிப்புலியானேறன் தேன்பாயும் வளநாடன் கொங்கர் குலாதிபன் நித்திய கல்யாண வேந்தாதிபன் பூலோகதேசாதிபதிகளில் சூரியவம்சகுலதீப காரணன் சிவசமயபரிபாலன் சிவபூசாதுரந்தர தீப காருணன் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலகரான வில்லுக்கு அருச்சுனன் வீரவாளுக்குச் சகாதேவன் மல்லுக்குப் பீமன் வல்லபற்கு நகு லன் கோபத்திற்கு காலாக்கினி குளிர்ச்சிக்குப் பூரண சந்திரன் ரூபத்திற்கு காமராஜன் கொடைக்குக்கர்ணன் ஆக்கினைக்குச் சுக்ரீபன் கேள்விக்கு முசுகுந்தன் இப்படி பூலோகதேவேந்திர னான புஜபல தேவமகாராயர் அச்சுததேவமகாராயர் கிருஷ்ண தேவமகாராயர் இவர்கள் பிரதிவி ராச்சிய பரிபாலனம் பண்ணி

யருளி நின்ற சகாப்தம் ஐநூறு இதன்மேற் செல்லாநின்ற
துர்முகிவரு தைமீ தலை செவ்வாய்க்கிழமை நாள் சங்கவிருச்சி
கமும் மேவுஞாயிற்றுப்பூர்வபட்சத்தில் ஏகாதசியும் திருவோண
நட்சத்திரமும் சேர்ந்தகார்த்திகை சோமவாரநாளில் சோழ
மண்டலத்திற்குத்தெற்குவடக்கு இராஜாதிராஜன்ராஜவளநாடு
வழுதலம்பட்டுச் சாவடி திருவாலியவதாரமான சடாயுபுரி வேத
புரி கந்தபுரி ஆதித்தபுரி ஆதியான திருப்புள்ளிருக்கும்வேளூரில்
கலியுகவந்தராய்த் தெய்வீகவயித்தியரா யெழுந்தருளிய தம்பி
ரானார் சன்னிதியில் அந்த அந்தசாதிக்குச் சிவாலயமும் மடா
லயமும் உண்டானபடியினாலே பண்ணைட்டார் தங்கள் மரபிற்
பேரும் பிரதாபமுமாகவேண்டுமென்று தொண்டமண்டலம்
சோழகனார் காலக்கத்தோழவுடையார் மழவராயநாயகர் பருஆர்
க்கச்சிராயநாயனார் இராவுத்தமிண்டநாயனார் கைத்தங்கால் வன்
னிய நாயனார் சமுஷ்டியார் பாஞ்சாலநாயனார் வாண்டையார்
கோக்குடையார் பெண்ணைக்கரை சிராயநாயனார் சென்னிராய
கவுண்டர் சீராமக்கவுண்டர் செங்கழுநீர்க்கவுண்டர் வேட்டிக்
கவுண்டர் நமனாண்டிக்கவுண்டர் நரசிம்மக்கவுண்டர் அனகராயக்
கவுண்டர் இவர்களனைவருங் கூடிச் சன்னிதியின் மேலைத்தெரு
வீதியில் தென்சாரிசில் நந்தகோபாலன் மடத்துக்கு கிழக்கு மலை
நான்மடத்துக்கு மேற்கு கிழக்குமேற்கு அடி (கூ௰ல்) தெற்கு
வடக்கு அடி (உ௨௰) ஆக அடி (௯௱௪௰) அடி ஒன்றுக்குப் பொன் ௧
ஆக (௯௱) பொன் னு (௯) பணம் ஸ்தலத்துக்கு வேல்பின்னை கையிற்
சுத்தகிரையமாய்க் கொண்டு கல்லுவெட்டி பேர்வைத்து கிணறு
கட்டிவைத்துத் தாண்டவராய பண்டாரத்துக்குத் தாம்பிரசாத
னமாகப் பட்டயம் பண்ணிக்கொடுத்து நாலுமண்டலம் தாம் ஐம்
பத்தாறு தேசத்திலும் கொண்டாடச்சொல்லி மகாமடதர்ம்ம
பிச்சைமுட்டியும் திருவிளக்கும் திருநந்தவனப் பணிவிடையும்
திருமாலை யுபயமும் மகேஸ்வரபூசையும் பண்ணிவரச் சொல்லி
நம்முடைய சந்ததியார் நாலுமண்டலம் ஐம்பத்தாறு தேசத்தி
லுள்ள உறவின்முறையா ரெல்லோருக்கும் கீர்த்தியும் பலனு
முண்டாக வேண்டுமென்று வாண்டையார், அஞ்சாதசிங்கம்,

நீலங்கராயர், குலைபடையாச்சி, காளிங்கராயர், கருப்புடையார் இவர்களனைவோரும் மற்றுமுண்டான பண்ணாட்டாரும் கட்டளை யிட்ட—தருமக் காணியாட்சி பெண்ணாடகம் சாத்துக்குடல் ஜெயங் கொண்ட சோழபுரம் சென்னியாண்டார் கோவில் குழுமுறைச் சூழ்ந்த பதினெழுபத்து பருவூரைச் சூழ்ந்த பனிரண்டுபத்து வன்னியரும் ஆத்திநாடு சேலநாடு ஓமலியூர்சீமை வஞ்சிநாடு சிமளிசீமை பூவாணிநாடு மூலக்காடுசீமை அந்தந்த சீமை பண் ணாட்டாரனைவருங்கூடி மடத்துக்கு வருஷவர்த்தனையாகக் கட்டளையிட்டது தலைக்கட்டுக்கு ஒருகலியாணத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரர் ஒருபணம் பெண்வீட்டுக்காரர் ஒருபணம் தண்டிகை துரைகள் பத்துபணம் குதிரைக்குடைபெற்ற அசுவபதிகள் ஐந்துபணம் சாதிபிழைக்குத் தீர்த்து செய்தவர் அபராதபணமும் மடத்துக்குச் சேருகிறபடியால் திருநீறு திருநாமம் இடப்பட்ட பேர்கள் சந்திராதி சூரியருள்ள நாள்வரைக்கும் நடத்தி வருவார் களாகவும் இந்த மடாலய தருமத்தை விசாரித்து பண்டார மவர்களுக்கு இருந்தநாளளவும் படிசெலவுங்கொடுத்து உபகார மாய் வருஷவர்த்தனை தங்காமற்கொடுத்த பேர்கள் மாதா பிதாக் களை இரட்சித்த சிவாலயம் பிரம்மாலயம் பூதானம் கோதானம் கன்னியாதானம் செய்தபலனைப் பெறுவார்கள். மேற்படிதையீ தலைச் செவ்வாய்க்கிழமை உதயத்துக்குத் தீராவினைதீர்த்த சுவாமியையும் தைலம்மையையும் முத்துக்குமாரசாமியையும் சேவித்த பலனைப் பெறுவார்கள். தருமவர்த்தனையைக் கொடா தவர் பாவப்பலனை பெறுவார்கள்.

இது, வன்னிமன்னர்களும், அவர்களது சந்ததியாரும் கூடி, வில்லவநல்லூர், வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய இரு பிரபல ஸ்தானங்களிலும் ஷெ தருமங்கள் நடந்துவரும்படி ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது. இச்செப்பேட்டில் கண்ட 32 விருது களின் விபரத்தை வன்னியர் புராணம் 318, 319-வது பக்கங் களில் பார்க்கவும்.

---

## காஞ்சீபுரம் அனவாத சவுந்திரியப்பட்ட முத்துகச்சேஸ்வர குருசுவாமியாரவர்கள் மடத்துச் செப்பேட்டிலுள்ள விஷயமாவது:—

கலியுகம் ௩௲ ௨௱க்குமேல் சாலிவாகன சகாப்தம் ௭௱ பிரபவாதி ௬௰க்குமேல் செல்லாநின்ற வர்த்தமான செளம்ய ௵ பங்குனி௴ ௧௰ தேதி உத்திராட்சத்திரத்தில் அநேக ராசராச தேவேந்திர அநேக வீரப்பிரதாப வரசைன்ய விருசெளந்தாரிய தைரிய காம்பீரிய வீரிய பராக்கிரமசாலியாயிருக்கிற கலிராஜேந்திர சோழன் அரசுசெய்யும் நாளில் ஸ்ரீமத் கைலாஸ துல்ய மகாஸ்தலம் காஞ்சி நகரத்திருக்கும் திருவேகம்பமுடைய நாயகனைப் பூசிக்கும் மாமூலங்காரர்களில் சிம்மாசனாதிகாரராய் திரிவர்ண குருவாயிருக்கிற அனவாத சவுந்திரியப்பட்ட முத்துகச்சேஸ்வர குருசுவாமியாரவர்கள் மடத்துக்குச் சம்பு மகாமுனி வேள்வியிற் பிறந்து ஆதிக்காரகி யாதாவி இளைதாவி இரத்தினகிரி முதலாயுள்ள அகிலசத்துரு நிவாரணம் பண்ண வீரசட்டைகட்டி அக்கினிக்கொடி புலிக்கொடி சிங்கக்கொடி அநுமக்கொடி பஞ்சவர்ண பிருதுபடைத்த மதகிரி வன்னியர் மகுடந்தரித்த வன்னியர் வீரமார்த்தாண்ட வன்னியர் வீரப்பிரதாப வன்னியர் வீரதீர வன்னியர் இந்த அரசர்கள் மேற்படி காஞ்சிபுர முதல் கிழக்கு, அங்கிச்சோட்டத்துக்கு மேற்கு, தேவப்பிரயாகைக்கு வடக்கு, இராமனுதபுரத்துக்கு தெற்கு இதற்குட்பட்ட வன்னிய அரசர்களும் மேற்படி வன்னிய அரசர்களுக்குப் படைத்துணைவர்களாகிய விராசாங்கத்துக்குரிய குடிகளும் மேற்படி யாசாரியாருக்கு கலியாண முதலான சுபகாரியங்களுக்கு கட்டணங் கொடுக்கவேண்டுமென்று அந்தச் செப்பேட்டில் எழுதியிருக்கிறது.

இச்செப்பேடானது 1154-வருடங்களுக்குமுன் ஆட்சி புரிந்த கலிராஜேந்திர சோழன் காலத்தில் எற்பட்டது. இதில் வன்னிய புராணத்திலுள்ளபடி சம்பு மகாமுனிவர் வேள்வியிற் பிறந்ததையும், வாதாவி இளதாவி என்னும் அசுரர்களை சம்மா

ரம் செய்ததையும், வன்னிய அரசர்களின் வீரதீரப் பிரபாவங்களையும், அவர்கள் ஆண்ட நாடுகளுக்கு செய்பக்தியும் காட்டப்பட்டுள்ளன. டெ. குரு சந்ததியில் வந்தவரும், எராம்பரோசவார் கோயில் குருக்களாயிருந்தவருமான சமீபத்தில் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சுப்ரமணிய குருக்களுக்கு, சுப்ரமணிய நாயகர் என்றே பெயர் வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

---

## வடாற்காடு ஜில்லா போளூர் தாலுகா படைவேட்டு ராஜ ஸ்ரீயமாகிய படைவேடு சோமநாதேஸ்வர ஆலயத்தின் கீழண்டை மதிலுள்ள சாஸனம்.

சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹா, மண்டலேஸ்வரன் அரிராய விபாடன் பாஷைக்குத்தப்புவராத கண்டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வ தட்சண பச்சிம உத்தர ஸமுத்திராதிபதி ஸ்ரீமன் ராசாதிராச ராசபரமேஸ்வர ஸ்ரீ வீரப்பிரதாப கஜவேட்டை கண்டருளிய பிரபுட இம்மடி தேவ மகாராயர் பிரதிவீ ராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ௲௩௱௭௰௧-ன் மேல் செல்லாநின்ற சக்கில வருஷம் சிம்மநாயற்று பூர்வபட்சத்து திரியோதசியும் சனிவாரமும் ஆயுஷ்மான் யோகமும் பெற்ற உத்திராடத்து நாள் தொண்டைமண்டலத்து படைவீட்டு ராஜ்ஜியம் நாட்டவர் வலங்கையும் இடங்கையும் மஹாஜனமும் ராஜகம்பீரன் மலைக்கடைந்த முருகமங்கலப்பற்று மருதாசு படைவீடு உடையார் சோமநாதேஸ்வர நயினார் கோயிலிலே நிறைவற குறைவற × × × × என உளது.

இச்சாஸனம் அழியப்பட்டு முடிவு தெரியாமலிருக்கின்றது. இது 486-வருடங்களுக்குமுன் அரசபுரிந்த பிரபுட இம்முடி தேவ மகாராயர் காலத்தில் ஏற்பட்டது. இச்சாஸனத்தில் குறிப்பிட்டபடி மருதாசு படைவீடு நாட்டவர் அக்காலத்தில் வலங்கை இடங்கை மஹா ஜனங்களுக்கும் அதிகாரிகளாகவிருந்து சோமநாதேஸ்வரருக்கு தானங்கள் செய்ததாய் தெரிகிறது. இதிற்கண்டபடி நாளதும் வன்னிய நாட்டாண்மைதாரர்களுக்கு மருதாசு படைவீடு மகா நாட்டார் என்றே பெயர் வழங்கிவருகிறது.

---

## விஷ்ணு காஞ்சீபுரம் வரதராசப் பெருமாள் கோயில் தேன் பக்கம் மலையாள நாச்சியார் சன்னிதியில் எழுதியிருக்கப்பட்ட சாஸனம்.

ஸ்ரீ ஸ்ரீ திரிபுவன சக்கிறவர்த்திகள் ஸ்ரீமஹா ராசராச தேவர்க்கு ஆண்டு ௰உ-வது மீனஞாயிற்று அமாவஸைத்து பஞ்சமியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற கேட்டைநாள் செயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து நகரம் காஞ்சீபுரத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளுக்கு மலைமண்டலத்து மலத்தூர் நாட்டு பாலையூர் கோமான் சஙசராஜனை யிறுக யிறுக மழவறயன் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்கு ஒருசெலத்தார திருக்குத்துவிளக்கு ஒரு பால்வற்கத்து பால் பசு அ-ம் பல்வற்கத்து சினைப்பசு மக-ம் வறட்டுப்பசு ௩-ம் பொலிமுறிஞகு ௩-ம் கெடாரிஞகு எ-ம் ரிஷபம் க-ம் ஆக பவ வற்கத்து உரு ௩௩-ம் விட்டுஞன் ௯-க்கு அரிமொழி நக்கை காழியாலே ஆழாக்குநெய் ஒழக்கு தயிர் மூதாஞழி திருநாளதே வைத்து சந்த்ருதித்தவரை செலுத்தத் தக்கவோமாக இசை வேலை பண்ணிக் கொடுத்தோம். அருளாளப் பெருமாள் கோயில் ஸ்தானத்தார் இப்படி கோயில் கணக்கு தெய்வாமுடையான் தேவப்பெருமாள் அருளாளப் பிரியன் எழுத்து.

கி. பி. 1014-ல் திரிபுவன சக்ரவர்த்திகளாக ஆட்சிபுரிந்த ராசராச தேவர் சிம்மாசனம் ஏறிய 12-வது ஆண்டில், சேர நாடாகிய மலைமண்டலத்து பாலையூர் கோமான் ராசராச மழவ ராயன் என்னும் சேரமன்னன், காஞ்சீபுரம் வரதராசப் பெருமாளுக்கு திருநந்தாவிளக்கு அமைத்து அதற்கு நெய்யும், சுவாமிக்கு தயிரும் கொடுக்க ஏற்பாடு செய்ததை, மேற்படி சாஸனம் தெரிவிக்கிறது. மழவராயர் என்னும் பட்டமாவது அக்கினிகுலத் தரசர்களாகிய சேர அரசர்களுக்கே உரியதாகும். அம்மரபைச் சேர்ந்த அரியலூர் ஜமீன்தாரர்களுக்கும் நாளதும் மழவராயர் பட்டமே வழங்கிவருகிறது இதற்கேற்ப விருத்தாசலம் அரியலூர் சாஸனங்களிலும்; இப்பெயர் வெளியாகியிருப்பதிலும் தெரிந்துகொள்க.

## விருத்தாசலம், விருத்தாசல யீஸ்வரர் உச்சிகால கட்டளை பெரியமடத்திலுள்ள தாம்பர சாஸனம்:

### சாசனமுடையவர் பெயர், அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராய நயினார், சாசனத்தின் பிரதி.

பிலவங்க வருஷம் மார்கழிமாச முதல் முதலான திதிவார நட்சத்திரங்களும் பெத்த சுபதினத்தில் ஸ்ரீமது விருத்தாசல யீசுவரர் சுவாமியாருக்கு சகல புண்ணியமுந் சம்பன்னரான அரசு நிலையிட்ட ரங்கப்ப மளவராய நயினார் பண்டாரத்தாரவர்கள் விருத்தாசலத்தில் யீஸ்வரசுவாமியாருக்கு நம்முடைய புண்ணியமாக அவ்வுச்சிக்கட்டளைக்கு கத்திசுவற வைத்துவா பண்டாரத்தின் பாரிசமாக தாம்பர சாசனங் கட்டளையிட்டபடி நம்முடைய அரியலூரில் குசக்தப்பேட்டையில் பலரும் பெரியகடையாரும் மத்தாரம் தான ஆதிதொறை செங்குருண்டான தொட்டிதொறையும் பெரியமுறையும் கௌத்தாருமாருடைய பட்டணத்துக்கு வருகிற பலரும் யிந்த மகமை புண்ணியத்தை வகிச்சி புத்திர பவுத்திர பாரம் பரியமாக சந்திராதித்தவரையும் பொதிக்கி மாப்பணமும் சந்தைவட்டம் கடைக்கி ஒருகாசம் அரிசி சொமைக்கி அனருங் யிந்தப்படிக்கி மகமை புண்ணியம் நடக்கவேணுமென்று தங்களுக்கு சொல்லி கட்டளையிட்ட தானத்தை யாதாமொரு வருஷிநும் வெடைபூழ சொன்ன பேர்கள் கங்கைக்கரையிலே காராம்பசுவை கொன்ன தோஷத்தில் போககடவராகவும் யிந்த புண்ணியம் நடத்தின பேர்கள் அசுவமேதயாக பலன்பெறக் கடவராகவும்.

இந்த தாம்பர சாசனம் எந்த வருஷம் விளங்கவில்லை. அரியலூரில் ஆட்சிபுரிந்த அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராய நயினார் காலத்தில், சாசனத்தில் கண்ட பெலருக்கும்படிக்கே விருத்தாசல யீஸ்வரசுவாமிக்கு கட்டளை மகமையாக ஏற்படுத்தியதை தெரிவிக்கிறது. அரியலூர் ஜமீன்தார்களுக்கு நாளது மழவராயதுரை என்ற பட்டப்பெயர் வழங்கிவருகிறது. அரியலூர், உடையார்பாளையம், பிச்சவரம் பரூர் ஜமீன்தாரர்கள் வன்னிய மரபைச்சேர்ந்த சேர, சோழ, பல்லவர்களின் சந்ததிகளாகும். இவர்களுக்குள் நாளதும் கொள்வன கொடுப்பன சம்பந்தமுண்டு. மளவராயர் என்பது மழவராயர் என்பதன் திரிபு.

## அரியலூர் கிருஷ்ணசாமி கோயில் மஹா மண்டபத்தில் வடவண்டை மதிலிலிருக்கும் சிலா சாஸனம்.

ஸ்வஸ்திவிஜயசாலிவாகனசகம் ௲௬௱௭௰௮ கலி சகம் ௪௲௮௱௫௰௭ இதின்மேல் செல்லாநின்ற தக்ஷிரும ஸம்வச்சரம் வையாசி௴ ௨௨௳ சுக்கிரவாரமும் ரோகணி நக்ஷத்திரமும் சுபயோக சுபகரணமும் கூடின சுபதினத்தில் விஜய ஒப்பிலாத மழவராயர் ஸாஸநம் பண்ணிக்கொடுத்தது × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × இதன்கீழ் பலமானிய நிலங்களைக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சாஸனமும் 198 வருடங்களுக்குமுன் அரியலூர் அரசபரம்பரையாகிய விஜய ஒப்பிலாத மழவராயர் காலத்தில் ஏற்பட்டதாய் விளங்குகிறது.

---

## உடையார் பாளையம் வரதராசப்பெருமாள் கோவில் பெருமாளய்யங்காரிடமிருக்கும் தாம்பிர சாஸனம்.

ஸ்வஸ்தி விஜயா × × சாலிவாகன சகாப்தம் ௲௬௱௭௰௮ கலி சகாப்தம் ௪௲௮௱௫௰௭ இதின்மேல் செல்லாநின்ற ஸதாரண நாமஸம்வற்சரம் தக்ஷிணாயநம் வருஷருது ஆவணி௴ ௨௨௳ கிருஷ்ணபக்ஷத்து சூரியோதய ஸ்ரீ சோமவாரமும் புஷ்ய நக்ஷத்திரமும் மஹாயோக மஹாகரணமும் கூடின புண்ணியகாலத்தில் பயறணீசுவரபுரத்துக்கு பிரதிக்ஷமான உடையார் பாளையத்தில் கீழ்த்தெருவில் எழுந்தருளியிருக்கிற அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகரான ஸ்ரீ வரதராசப்பெருமாள் சன்னிதி உச்சிகால கட்டளைக்கு வேங்கிடப்ப மழவராயர் பவுத்திர விஜய ஒப்பிலாத மழவராயர் அரசு நிலையிட்ட குமார விசய ஒப்பிலாத மழவராயர் தாம்பிர சாஸநப் பட்டயம் பண்ணிக்கொடுத்தபடி யித்தினருள் திருச்சிறுப்பள்ளி சாவடிக்கி கிழக்கு ஸ்ரீ சோழமண்டலம் கொள்ளடம் காவேரிக்கு வடக்கு நம்மூதான சித்தமை பழூர் பத்தும் விக்கிரம வளநாட்டு கட்டளைநாட்டில் சேர்ந்த பெட்டாத்தம் குடியில் வாதராசப்பெருமாள் உச்சிகால கட்டளைக்கு உம்பளக்கு கிலமானியம் × × × × × × × × × × × × × × × × × × × × × × இதன்கீழ் பல கிலக்களைக் குறித்து எழுதப்

பட்டிருக்கிறது. இச்சாஸனம் 172 வருடங்களுக்குமுன் குமார விஜய ஒப்பிலாத மழவராயர் காலத்தில் உடையார் பாளையம் ஸ்ரீ வரதராசப்பெருமாளுக்கு உச்சிகால கட்டளைக்கு பல நிலங்களை விட்டதைத் தெரிவிக்கிறது.

---

மேற்கண்ட செப்பேடு, சிலாசாஸனங்களில் காட்டப்பெற்ற மூவேந்தர்கள் மரபினர்களாகிய வன்னிய அரசர்கள் காலபேதத்தால் "குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்னும் முதியோர் வாக்கின்படி பேரரசு நீங்கி சிற்றரசர்களாகவும், ஜமீன்தாரர்களாகவும், பிரபல மிராசுதாரர்களாகவும் குறுகிவிட்டனர். பாண்டியர் மரபைச்சேர்ந்தவர்கள் நாளதும் சிவகிரி, எழாயிரம்பண்ணை, அளகாபுரி ஜமீன்தாரர்களாகவும், சேர அரசபரம்பரையார் அரியலூர் உடைத்தங்கால் முதலிய ஸ்தலங்களிலும், சோழமன்னர் கால்வழிகள் பித்தர்புரம், கல்லநாயகபுரம், கடலங்குடி முதலிய பிரதேசங்களிலும், பல்லவப் பார்த்திபர்கள் உடையார்பாளையம், முகாசாபரூர் முதலிய நகரங்களிலும், நாளதும் ஜமீன்தாரர்களாய் வாழ்ந்துவருதல் பிரத்யட்சம்.

வன்னியர் புராணம் வன்னிமன்னர் அரசாட்சிச் சருக்கத்தில், உருத்திர வன்னிய மகாராஜனது ஐந்து புதல்வர்கள், காஞ்சிபுரம், சிதம்பரம், அரியலூர், திருவானைக்கா, சிவகிரி முதலிய க்ஷேத்திரங்களில் அரசுபுரிந்தார்கள் என்பதும் இதனை வலியுறுத்தும். ஆகையால்,

"அரியலூ ராட்சிபெறு மழவர்கோவு
மணவைபுரிப் பாண்டியரு முடையார்தாமும்
பெருமைமிகு பித்தர்புரப் பிரானூர் பாரூர்
பிறங்குகச்சி ராயர்சிவ கிரிவாழ்ந்து
வீரிமரபில் வழுதிகுல வேந்தர் தாமும்
வென்றிவணங் காமுடியா ருறறங்காளித்
பரமசிச் சுரவன்னி மன்னர் முன்னோர்
பகர்மது குலவுற விற் பவித்தா ரன்றே."

[illegible] ஸர்மா அவர்கள் கூறிப்போந்தனர். ஷை மன்னர்களின் பூர்வ சரித்திரங்களையும் அவர்கள் திருவுருவப் படங்களையும் சேர்த்து வன்னிமன்னர் சரித்திரம் என எதிர்காலத்தில் வெளியிட உத்தேசித்திருக்கிறோம்; அந்நூலில் அதனை விரிவாக எழுதுவோம்.

நண்பர்களே! "எல்லாமிருக்கிறது கடையிலே இலக்கறி கடைய சட்டியில்லை" என்னும் பழமொழிக் கிணங்க, தற்காலம் பரிதாப நிலையை யடைந்திருக்கும் வன்னியர்களுக்கு அற்பிரமாணங்களும், செப்பேடு, சிலாசாஸன ஆதாரங்கள் பல விருந்தும், கல்வியில்லாக் குறையே பெருங்குறையாக விருக்கிறது. அநேக ஆதிக்கங்களைக்கொண்டு பண்டைக்காலந் தொடங்கி அரசாண்ட ராச க்ஷத்திரியர்களின் செல்வம், வேற்றரசர் படையெழுச்சியால் கொள்ளைபோய் விட்டமையால் கல்வியிழந்தனர்; கல்வியிழக்கவே பக்தி நாகரீகம் குறைந்தது; பக்தி நாகரீகம் குறையவே வறுமை மேலிட்டது; இதனால் மேற்காட்டிய பல நூற்களிலும், செப்பேடு சிலாசாஸனங்களிலும் குறித்துள்ள வன்னிகுல க்ஷத்திரியர்கள் இவர்கள்தானோ? அல்லது வேறு யாவரோ வென்று அன்னியர் நினைக்க அவ்வளவு பரிதாப நிலையையடைந்தனர். இதையெல்லாம் கவனித்தே, சென்னைமாநகரிலும் இதர ஜில்லாக்களிலும் வன்னிகுல க்ஷத்திரிய சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி, அவர்களது சீர்திருத்தத்தின் பொருட்டு பலகுலாபிமானிகள் பாடுபட்டு வருகின்றனர். சங்க நோக்கம் எங்கும் பரவி, கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை, [illegible], விவசாயம் முதலிய துறைகளில் முன்னே[illegible], குலாசாரப்படி ஒழுக்க சீலராய் வாழ்ந்து, வ[illegible] உலகமெங்கும் வன்னியர் பெருகி மங்களம் உண்டாக எல்லாம்வல்ல நம் குலதெய்வமாகிய ஸ்ரீ சொர்ணகாமாட்[illegible]யம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜயம். ஜயம். ஜயம்.

வன்னிகுலாதிக்கம் முற்றிற்று.